

11ஆவது உலகத்தமிழ் ஆசிரியர் மாநாடு - 2016

தமிழ் கற்றல், கற்பித்தல் – புதிய சிந்தனைகளும் நடைமுறைகளும்

நாள் : 10-12 ஜூன், 2016

இடம் : லீ ராயல் மெரிடியன் அரங்கம், சென்னை, தமிழ்நாடு.

Design & Printed by 9380463778

பதிவு எண் : 118/61



Thiru. V.CHANDRASEKARAN,
Founder, SVM Group of Edu. Institutions,

KNOWLEDGE LEADS TO MODESTY

विद्या ददाति विनयम्

SRI VIDYA MANDIR MATRIC HIGHER SECONDARY SCHOOL

(Recognised by Government of Tamilnadu)

Ramamoorthy Nagar, Uthangarai - 635 207. Krishnagiri Dt. Ph : 04341 - 220120

E-mail:srividyamandir@gmail.com



ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

(பெரியார் பல்கலைக்கழகத்தோடு இணைவு பெற்றது)

காட்டேரி, ஊத்தங்கரை - 636 902, கிருஷ்ணகிரி மாவட்டம்.



தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின்

உலகத்தமிழாசிரியர் மாநாடு வெற்றிபெற வாழ்த்துகிறோம்

ஸ்ரீ வித்யா மந்திர் கல்வி நிறுவனங்கள்

ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

Jegan : 8681818483


CHAIRMAN & SECRETARY

ஆசியாவின் மிகப்பெரிய மகளிர் கல்வி நிறுவனம்

விவேகானந்தா மகளிர் கல்வி நிறுவனங்கள்

திருச்செங்கோடு - 637 205. நாமக்கல் Dt. ❖ சங்ககிரி - 637 303. சேலம் Dt.
www. vivekanandha.ac.in ❖ email : vivekaadmission@gmail.com

இலவச பஸ் வசதி ❖ சிறந்த வேலைவாய்ப்பு வசதி ❖ நன்கொடை இல்லை

பல் மருத்துவம்	B.D.S, M.D.S
பார்மஸி	D.Pharm, B.Pharm, B.Pharm (Lateral Entry) Pharm.D, M.Pharm, Ph.D.
நர்சிங்	Diploma in Nursing, B.Sc. Nursing Post Basic B.Sc - Nursing, M.Sc. Nursing
சுகாதாரம் சார்ந்த அறிவியல் படிப்புகள்	B.Sc. Radiology & Imaging Technology B.Sc. Accident & Emergency Care Technology B.Sc. Cardiac Technology B.Sc. Operation Theatre & Anesthesia Technology B.Sc. Physician Assistant Diploma in Optometry Technology
பொறியியல் & மேலாண்மையியல்	B.E., B.Tech., M.E., M.Tech., Ph.D., M.B.A., M.C.A., 2620 2626 2661
கலை அறிவியல்	B.Sc., B.A., B.Com., BBA., M.A., M.Sc., M.Com., M.Phil., Ph.D.,
கல்வியியல்	B.Ed., & M.Ed.,
மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி	Girls Only 6th to 12th Std



NBA, NAAC, TCS, IBM அங்கீகாரம் மற்றும் ISO தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்.

விவேகானந்தா கல்லூரி - வெற்றி IAS கல்வி மையம்
IAS, IPS, TNPSC, IBPS (Banking Exam), Railway Exam தேர்வுக்கான சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

கேம்பஸ் இன்டர்வியூ மூலம் 1882 மாணவிகளுக்கு மேல் முன்னணி பன்னாட்டு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்

இலவச பஸ் வசதி ராசிபுரம், ஆத்தூர், நாமக்கல், முசிறி, கரூர், பரமத்திவேலூர், ஈரோடு, கொடுமுடி, திருப்பூர், கோபி, மேட்டூர், சேலம் ஆகிய மார்கங்களிலிருந்து கல்லூரிக்கு தினந்தோறும் 200 பேருந்துகள் இலவசமாக இயக்கப்படுகிறது.

விடுதி மாணவிகள் விடுமுறை காலங்களில் வீட்டிற்குச்சென்றுவர பேருந்து வசதி.

Prof. Dr. M. KARUNANITHI, B.Pharm., M.S., Ph.D., D.Litt., CHAIRMAN & SECRETARY

Phone : 94437 34670, 99655 34670, 04288-234670 (4 Lines)

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி பொறுப்பேற்று நடத்தும்,

11~வது உலகத்தமிழாசிரியர்கள் மாநாட்டுக்கு எங்களது வாழ்த்துக்கள்.....,


Figurein FITNESS
CALL FOR BEST OPENING OFFERS!
Cardio • Strength Training
Weight Loss • Lean Muscle Gaining
Aerobics • Phsio • Diet
#114(8) Ganesh Towers, Near SAP Theatre,
Asher Nagar, Avinashi Road, TIRUPUR-641 603.
93444 44644 / 95433 44644

வெற்றி

சற்குருநாதர் தவத்திரு சித்ரமுத்து அடிகளார் கிருபைக்குரிய

அருளொளி அறக்கட்டளை

உச்சிப்புளி (அநி), இராமநாதபுரம் மாவட்டம், தமிழ்நாடு - 623 534.
தொலைபேசி எண். 04567 - 324647
(Approved under 80G of the Income Tax Act 1961)


நிறுவனர். சு. ஈசுவரன்

அன்னதானம் செய்பவர்க்கு
பொன்னுலகமே பொருந்தும்
நன்மைகள் பல உண்டாகுமே – தருமதேவி
தன்னிடங் குடி இருக்குமே.


தவத்திரு சித்ரமுத்து அடிகள்


விடுதி மாணவர்கள்


அன்னதான அன்னபூரணி மண்டபம்


இலவச தையல் பயிற்சி

ஆழிசூழ் உலக மெல்லாம் அமைதிமேவ
ஆகாத பகை யொழிந்து அன்புண்டாக
ஆராத கவலை பிணி அகன்று போக
ஆக்கமொடு மக்கள் குலம் அழகாய் வாழ
ஆண்டவனை வேண்டுதல் செய்து அருளைநாடி
ஆனந்தத் தவநிலையை அணுகுவோமே!

– தவத்திரு சித்ரமுத்து அடிகள்

118/61

இந்த அறக்கட்டளை தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் இயக்கக் காவலர் தெய்வத்திரு சு.ஈசுவரன் அவர்களால் 5½ ஏக்கர் நிலத்தில் நிறுவப்பட்டு அதரவற்ற மாணவர்களது சரணாலயமாக திகழ்கிறது. தினந்தோறும் அன்னதானப் பணியுடன் பெண்கள் முன்னேற்றத்திற்காக இலவச கணினி பயிற்சி, இலவச தையல் பயிற்சி போன்ற சமுதாய பணிகளோடு ஆண்டுதோறும் 125 பெண் குழந்தைகளுக்கு தலா ரூ.1,000/– வைப்பு நிதியாக வழங்கி அதனை அவர்கள் மேல்நிலைக் கல்வி நிறைவு பெறும் போது பயன்படுத்திட வழிவகைகள் செய்யப்பட்டு வருகிறது. ஆயுள் உறுப்பினர்கள் செலுத்தியுள்ள சந்தா ரூ.5,000/– நிதியோடு, பொதுமக்களின் நன்கொடையுடன் இவ்வறக்கட்டளை செயல்படுகிறது. நன்கொடைக்கு வரிவிலக்கு உண்டு.

இவண்
ஆசிரியர் இரா.ஆறுமுகம், திருப்பூர்.
இயக்குநர், அருளொளி அறக்கட்டளை, உச்சிப்புளி, இராமநாதபுரம்.

Divine Light Foundation Trust,
Uchippuli - 623 534,
Ramanathapuram District,
TamilNadu,
India.
Phone Number: 04567-324647
Email : athmasanthinilayam@gmail.com

மாநாட்டு மலர்

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

உலகத்தமிழாசிரியர் பேரவை

இணைந்து நடத்தும்

11ஆவது உலகத்தமிழ் ஆசிரியர் மாநாடு - 2016



நாள் : 10-12 ஜூன், 2016

இடம் : லீ ராயல் மெரிடியன் அரங்கம், சென்னை, தமிழ்நாடு.

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்,
தக்கசிறு பிறைநுதலும் தரித்த நறுந் திலகமுமே.
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்;
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன் உதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்,
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!

- மனோன்மணீயம் சுந்தரனார்






மொழிச் சிறப்பு
பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்.
உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்;
வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்குங் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.
சுப்பிரமணிய பாரதியார்
(1882 - 1921)



உயிருக்கு நேர் தமிழ்

தமிழுக்கு அமுதென்று பேர்!- அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலலென்றுபேர்! - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்று பேர்!- இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருபித்த ஊர்!
தமிழுக்கு மதுவென்று பேர்!- இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச் செம் பயிருக்கு வேர்!

தமிழ் எங்கள் இளமைக்குப் பால்!- இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!
தமிழ் எங்கள் உயர்வுக்கு வாள்!- இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்!- இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்!- இன்பத்
தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ!

பாரதிதாசன்

(1891 - 1964)


வாழ்த்தும்
பாராட்டும்



மேதகு தமிழக ஆளுநர்

கே. ரோசய்யா அவர்கள்



மாண்புமிகு தமிழக முதல்வர்

ஜெ. ஜெயலலிதா அவர்கள்


AIPTF
Education International
இம்மலர் சமர்பணம்



நீதியரசர் ஆர். மகாதேவன்

உயர்நீதி மன்றம், சென்னை.

ஒப்புயர்வற்ற தமிழ்மொழியின்

மேன்மையை உலகெலாம் அறியத்தரும்

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

பணி சிறக்கவும், அவர்தம் 11வது

உலகத்தமிழ் ஆசிரியர் மாநாடு

சிறக்கவும் எனது வாழ்த்துகள்.

21/05/16

நீதியரசர் ஆர். மகாதேவன்



பா. பென்ஜமின்
பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும்
இளைஞர் நலத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

நாள் **01.06.2016**

வாழ்த்துச் செய்தி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **அம்மா** அவர்களின் பொற்கால ஆட்சியில் "தமிழ் கற்றல் கற்பித்தல் புதிய சிந்தனைகளும் நடைமுறைகளும்" என்ற கருப்பொருளை மையமாக வைத்து ஜீன் மாதம் 10,11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் 11–வது உலகத் தமிழாசிரியர் மாநாடு சென்னையில் நடைபெறவிருப்பது குறித்து பெருமகிழ்ச்சிடைகிறேன்.

தாய்மொழியான நம் தமிழ் மொழியை தம் உயிரினும் மேலாக எண்ணிச் செயல்படும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **அம்மா** அவர்கள் தமிழ் மொழியின் மீது கொண்ட அளவிலான பற்றின் காரணமாக, தமிழ்மொழி சிறப்பு பெறவும் தமிழ்ப் பேரறிஞர்களைப் பெருமைப்படுத்தி அவர்கள் வளமான வாழ்வு காணவும் எண்ணற்ற பணிகளைத் தொடர்ச்சியாக ஆற்றி வருகிறார்கள். கல்வி பாடத்திட்டத்தில் அறிவியல் தமிழை ஒரு பாடமாக்கி வளர்ந்து வரும் அறிவியல் உலகிற்கு தமிழைக் கொண்டு சென்றவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **அம்மா** அவர்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மாநாட்டில் உள்நாட்டு பேராளர்களோடு பல்வேறு வெளிநாட்டு பேராளர்களும் கலந்து கொள்வது தமிழ் மொழியின் சிறப்புக்கள் உலகளவில் பரந்து விரிந்துள்ளது என்பதைப் பறை சாற்றுவதாகத் திகழ்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு உலகத்தமிழ் ஆசிரியர் 11–வது மாநாடு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **அம்மா** அவர்களின் நல்லாசியுடன் சிறப்புடன் நடைபெற எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

1/6/2016

(பா. பென்ஜமின்)



தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

நாள் .....

01.06.2016

கே.பி. அன்பழகன்
உயர்கல்வித் துறை அமைச்சர்

வாழ்த்துச் செய்தி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் "தமிழ் கற்றல் கற்பித்தல் புதிய சிந்தனைகளும் நடைமுறைகளும்" என்ற கருப்பொருளை மையமாக வைத்து ஜீன் மாதம் 10,11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் 11–வது உலகத் தமிழாசிரியர் மாநாடு சென்னையில் நடைபெறவிருப்பது குறித்து பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தாய்மொழியான நம் தமிழ் மொழியை தம் உயிரினும் மேலாக எண்ணிச் செயல்படும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழ் மொழியின் மீது கொண்ட அளவிலான பற்றின் காரணமாக, தமிழ்மொழி சிறப்பு பெறவும் தமிழ்ப் பேரறிஞர்களைப் பெருமைப்படுத்தி அவர்கள் வளமான வாழ்வு காணவும் எண்ணற்ற பணிகளைத் தொடர்ச்சியாக ஆற்றி வருகிறார்கள். கல்வி பாடத்திட்டத்தில் அறிவியல் தமிழை ஒரு பாடமாக்கி வளர்ந்து வரும் அறிவியல் உலகிற்கு தமிழைக் கொண்டு சென்றவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மாநாட்டில் உள்நாட்டு பேராளர்களோடு பல்வேறு வெளிநாட்டு பேராளர்களும் கலந்து கொள்வது தமிழ் மொழியின் சிறப்புக்கள் உலகளவில் பரந்து விரிந்துள்ளது என்பதைப் பறை சாற்றுவதாகத் திகழ்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு உலகத்தமிழ் ஆசிரியர் 11–வது மாநாடு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் நல்லாசியுடன் சிறப்புடன் நடைபெற எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

K. P. Anbalagan 1/6/16

(கே.பி. அன்பழகன்)



தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித்துறை

நாள்: 30–5–2016

த. உதயச்சந்திரன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்

வாழ்த்துச் செய்தி

"தமிழ் கற்றல் கற்பித்தல் புதிய சிந்தனைகளும் நடைமுறைகளும்" என்பது புதிய தொழில் நுட்ப போதனைக் கருவிகளைப் பயன்படுத்தி, தமிழ் மொழியை மேலும் சிறப்புடன் கற்பிக்கும் வழிவகைகளைக் கண்டறியவும், அவைகளைப் பயன்படுத்தி தமிழ் மொழிக் கற்றல் கற்பித்தலை மேம்படுத்துவதற்கான செய்முறைப் பயிற்சி, செயல்பாடுகளைக் கண்டறியும் நோக்கத்தோடு 11ஆவது உலகத் தமிழ் ஆசிரியர் மாநாடு நடைபெறுவதை அறிந்து பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

வேகமாக மாறி வரும் தகவல் தொழில் நுட்பச் சூழலில், தமிழ் மொழி கற்றல் மற்றும் கற்பித்தல் நடைமுறைகளை நவீனமயமாக்கிடும் காலத்தின் தேவையை உணர்ந்து செயல்பட வேண்டிய தருணம் இது. கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக தன்னை தொடர்ந்து வளப்படுத்திக் கொண்டிருக்கும் தமிழ் மொழியை எதிர் வரும் தலைமுறையினருக்கும் கொண்டு சேர்க்கும் அரிய பணியை நிகழ்த்தவிருக்கும் இந்த மாநாடு வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

அன்புடன்

(த. உதயச்சந்திரன்)

தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009. மின்னஞ்சல் : tdinfosec@tn.gov.in
தொலைபேசி (அலுவலகம்) : 044–25672887, நிகரி : 044–25672021

POOJA KULKARNI, I.A.S.,
State Project Director
SARVA SHIKSHA ABHIYAN

Phone : 044 - 28278068
Fax : 044 - 28202257
E - mail : spd_ssatn@yahoo.co.in
Web : www.ssa.tn.nic.in

RIGHT TO EDUCATION
EDUCATION FOR ALL



வாழ்த்து மடல்

சென்னையில் வருகிற 2015 திசம்பர் 11 முதல் 13 ஆம் தேதி வரை தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டனியால் நடத்தப்பெறவுள்ள 11 ஆவது உலகத் தமிழ் ஆசிரியர் மாநாடு சிறந்த முறையில் நடைபெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

எத்தனை சுவைகள் என்றாலும் தேன் சுவை போல் ஒன்றில்லை அது போல மண்ணில் எத்தனை மொழிகள் பேசப்பட்டாலும், செம்மொழியான தமிழ் மொழி போல் வேறில்லை.

எந்த ஒரு மொழியையும் திறனாய்வு செய்வதற்கு அவரவர் தாய் மொழியில் தரவு பெற்று இருப்பதும், குறிப்பாக தமிழ் ஆசிரியர்களானவர்கள் புலமையோடும், மொழி பசியோடும் இருப்பது ஒட்டு மொத்த மாணவ சமூகத்திற்கும், தமிழ் மொழி வளத்திற்கும் நலன் புரிவதாக அமையும், ஆகையால் மாணவர்களுக்கு முதலில் தாய் மொழியான தமிழ் மொழியினில் ஒரு புரிதலை உருவாக்கினால் தான் ஏனைய மொழிகளை எளிதாக கற்றுக்கொள்ளவும், கற்றுக்கொடுக்கவும் இயலும். எனவே சீரிய சிந்தனையோடும், அயறாத உழைப்போடும் தமிழாசிரியர்கள் செயலாற்றி முதல் வகுப்பிலயே தமிழை உணரவும், சுவைக்கவும் கற்றுக்கொடுக்க வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொண்டு இனிதான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

(பூஜா குல்கர்னி இ.ஆ.ப)

முனைவர் ச.கண்ணப்பன்
பள்ளிக் கல்வி இயக்குநர்

கல்லூரி சாலை
சென்னை 6
நாள். 4.11.2015

வாழ்த்துச் செய்தி

தமிழக தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியானது 11வது உலகத் தமிழ் ஆசிரியர் மாநாட்டினை சென்னையில் நடத்தப்போவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். தேன் இனிமையிலும் மதுரமான தமிழ் மொழியினை மாணாக்கர்களுக்கு கற்றுக் கொடுத்து, அவர்கள் தங்கள் தாய்மொழியில் தெள்ளத் தெளிவுறக் கற்று, கற்றதை உலகலவில் தங்கள் திறமையை வெளிக் கொணர்ந்திருப்பது பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியது.

தேமதுர தமிழோசை உலகெமெங்கும் பரவ வேண்டும் என்று பாரதி அன்று கண்ட கனவு இன்று நனவாகி, உலகம் முழுவதும் தமிழ்மொழி ஒலிப்பதே தமிழுக்கு தமிழாசிரியர்கள் செய்த தொண்டாகும். மேலும் மெருகேற்றும் வகையில் தமிழ் கற்றல் கற்பித்தலில் புதிய சிந்தனைகளையும், நடைமுறைகளையும், புதிய தொழில்நுட்ப போதனைக் கருவிகளைப் பயன்படுத்தி தமிழ் மொழியை சிறப்புடன் கற்பிக்கும் வழிவகைகளைக் கண்டறிய ஒரு திறனாய்வு கூட்டமாக இந்த மாநாடு அமையவும் அதற்காக தொண்டாற்றும் தமிழாசிரியப் பெருமக்களை வாழ்த்துகிறேன்.

தமிழக தமிழாசிரியர் கழகம் நடத்தவுள்ள மாநில மாநாடு சிறக்கவும் அதனையொட்டி மலரவுள்ள விழா மலர் பல நல்ல செய்திகளுடன் மணம் வீசவும் என்மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்த்துக்களுடன்,
தங்கள் உண்மையுள்ள

பெறுநர்
ஒருங்கிணைப்பாளர் மற்றும் பொதுச் செயலாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி
சென்னை 600 005

முனைவர் ரெ. இளங்கோவன்,
தொடக்கக் கல்வி இயக்குநர்.

தொடக்கக் கல்வி இயக்ககம்,
சென்னை 600 006

வாழ்த்துச் செய்தி

சென்னையில் **11.12.2015** முதல் 13.12.2015 முடிய மூன்று நாள்கள் பதினோராவது தமிழாசிரியர் மாநாட்டினை தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி நடத்துவதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இம்மாநாட்டில் தமிழகத்திலிருந்து 400 பேராளர்களும் பல்வேறு நாடுகளிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பேராளர்களும் கட்டுரையாளர்களும் கலந்து கொள்வது பாராட்டுக்குரியது. மொழி வளர்ச்சிக்காக நடத்தப்படும் இம்மாநாடு சிறப்புற நடைபெற எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொடக்கக் கல்வி இயக்குநர்



முனைவர்.வி.சி.இராமேஸ்வரமுருகன்,
இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்
சென்னை–6.

வாழ்த்துச் செய்தி

" கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே
முன்தோன்றிய மூத்தக்குடி தமிழ்க்குடி"

என்ற வரிகளுக்கு ஏற்ப பழமையும்,

" தமிழுக்கும் அமுதென்று பேர்– அந்தத்
தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் "

என்ற வரிகளுக்கு ஏற்ப பெருமையும் கொண்ட நம் தாய்மொழியை கற்றல் கற்பித்தலில் சிறப்பாக்க இம்மாநாடு நடைபெறுவது கண்டு பெரு மகிழ்வு கொள்கிறேன். வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களுக்கு ஈடுகொடுக்கும் பொருட்டு தமிழை போதிக்க புதிய முறைகளையும், சிந்தனைகளையும் களத்தில் உலவவிடக் காரணமாக இம்மாநாடு அமையப் போகிறது. தமிழ்நாட்டில் தலைநகரமான சென்னையில் ஆசிரியர்கள், பேராளர்களுடன் அல்லாது 100–க்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பேராளர்களும் வருவது கண்டும் , தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி தொடர்ந்து சிறப்புற நடத்துவது குறித்தும் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த உலகத்தமிழ் ஆசிரியர் மாநாடு வெற்றியடைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

13/11/15

வி.சி.இராமேஸ்வரமுருகன்

தண்.வசுந்தரா தேவி, ஐ.ஏ.ஸ., எம்.எட்., எம்.பில்.,
உறுப்பினர் செயலர்,
ஆசிரியர் தேர்வு வாரியம்
மற்றும்
அரசுத் தேர்வுகள் இயக்குநர் (பொ),

கல்லூரி சாலை,
சென்னை – 600 006.

வாழ்த்துச் செய்தி

11வது தமிழ் ஆசிரியர் மாநாடு, சென்னையில் வரும் 2015 டிசம்பர் 11 – 13 தேதிகளில் நடத்துவது கண்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்திலிருந்து 400 பேராளர்களும், பல்வேறு நாடுகளிலிருந்து தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் 100 பேர் மாநாட்டுப் பேராளர்களாக மற்றும் கட்டுரையாளர்களாக மாநாட்டில் கலந்து கொள்வது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. மேலும் மொழி வளர்ச்சியில் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டு செயல்படுவது பாராட்டுக்குரியது.

மாநாட்டில் வெளியிடப்படும் மலர் சிறக்கவும், மாநாடு வெற்றியடையவும் இதய பூர்வமான நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

18/11/2015

தண். வசுந்தரா தேவி,
உறுப்பினர் செயலர்,
ஆசிரியர் தேர்வு வாரியம்
மற்றும்
அரசுத் தேர்வுகள் இயக்குநர் (பொ).

நாள் – 18.11.2015.

Education International



பெரி. இராமநாதன்
கிழக்காசிய பசுபிக் நாடுகளின் உறுப்பினர் (இஐ)

மலேசியா
26.12.2015

வாழ்த்துச்செய்தி

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி 2015 டிசம்பர் 11, 12, 13 ஆகிய நாள்களில் சென்னை லீ ராயல் மெரிடியன் அரங்கில் உலகத்தமிழாசிரியர் பேரவையுடன் இணைந்து 11வது உலகத்தமிழாசிரியர் மாநாட்டை நடத்துவது அறிந்து மகிழ்கிறேன்.

உலகளாவிய அளவில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களை ஒருங்கிணைத்து உலகத்தமிழாசிரியர் மாநாடுகளை நடத்தும் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் தொடர் பணிகளைக் கண்டு உலகை அடைகிறேன்.

தற்காலச் சூழலுக்கேற்க, 'தமிழ் கற்றல் கற்பித்தலில் புதிய சிந்தனைகளும் நடைமுறைகளும்' என்பதைக் கருப்பொருளாகக் கொண்டு ஆசிரியர்கள் ஆய்வு செய்வதன் மூலம் தமிழ் கற்பித்தலுக்கு பயன்படுத்திட வழிவகுப்பதை மனதாரப் பாராட்டி மகிழ்கிறேன்.

மாநாடு சிறக்க என் வாழ்த்துக்கள்

அன்பின் கல்
பெரி. இராமநாதன்

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி



இயக்க நிறுவனர்

மாஸ்டர் வ. இராமுண்ணி நூற்றாண்டு

1910-2010



பதிவு எண். 118/61

AIPTF

Education International

தோற்றம் : 05.05.1938
மறைவு : 20.10.2014

இயக்கக் காவலர் **சு.ஈசுவரன்** அவர்கள்

அகில இந்திய ஆசிரியர் கூட்டணி பொதுச் செயலாளர், உலக கல்வி அமைப்பு துணைத் தலைவர்
அருளொளி அறக்கட்டளை நிறுவனத் தலைவர்

**ஆகும், நடக்கும், முடியும் என நம்பிக்கை வை, முயற்சி செய், துணிந்து செல், வெற்றி கிட்டும்.
இயக்கவாதி உறங்குவதில்லை**

- சு.ஈசுவரன்

ஒருங்கிணைப்புக் குழு



ந.ரெங்கராஜன்

ஒருங்கிணைப்பாளர், பொதுச் செயலாளர்



பெரி. இராமநாதன்

மலேசியா



ச.சாமிக்கண்ணு

சிங்கப்பூர்



கோ. இராதாகிருஷ்ணன்

மலேசியா



கோ.காமராஜ்

மாநிலத் தலைவர்



அ.ஜோசப் சோவியர்

மாநிலப் பொருளாளர்



து.இளங்கோ

முன்னாள் மாநிலத் தலைவர்



இரா.சுப்பாராசு

முன்னாள் பொதுச் செயலாளர்



சு.மாரியப்பன்

முன்னாள் மாநிலத் தலைவர்



சா.அன்பழகன்
முன்னாள் பொதுச் செயலாளர்



வில்சன் பானபால்ஸ்
முன்னாள் மாநிலப் பொருளாளர்



வெ. எத்திராஜ்
முன்னாள் மாநிலப் பொருளாளர்



சொ.சகாதேவன்
முன்னாள் மாநிலத் தலைவர்



எம். மூர்த்தி
முன்னாள் மாநிலப் பொருளாளர்



செ. காளிமுத்து
மாநிலத் துணைச் செயலாளர்



நா. மதிவாணன்
மாநிலத் துணைச் செயலாளர்



சு.கதிரவன்
மாவட்டச் செயலாளர்



சி.இளவழகன்
மாநில செயற்குழு



கே.விஜயராஜ்
மாநில செயற்குழு



எஸ்.அலெக்ஸிஸ்
மாநிலப் பொதுக்குழு



வா.மு.சே. ஆண்டவர்
பேராசிரியர்



இ.கோமதிநாயகம்
பேராசிரியர்



ய. மணிகன்டன்
பேராசிரியர்



வ. ஜெயதேவன்
பேராசிரியர்



நல்லாமூர்.கோ.பெரியண்ணன்
பேராசிரியர்

வரவேற்புக்குழு



கோ.காமராஜ்
மாநிலத் தலைவர்



ந.ரெங்கராஜன்
பொதுச் செயலாளர்



அ.ஜோசப் சோவியர்
மாநிலப் பொருளாளர்



து.இளங்கோ
முன்னாள் மாநிலத் தலைவர்



இரா.சுப்பாராசு
முன்னாள் பொதுச் செயலாளர்



சு.மாரியப்பன்
முன்னாள் மாநிலத் தலைவர்



சா.அன்பழகன்
முன்னாள் பொதுச் செயலாளர்



வில்சன் பானபால்ஸ்
முன்னாள் மாநிலப் பொருளாளர்



வெ.எத்திராஜ்
முன்னாள் மாநிலப் பொருளாளர்



சொ.சகாதேவன்
முன்னாள் மாநிலத் தலைவர்



எம்.மூர்த்தி
முன்னாள் மாநிலப் பொருளாளர்



இ.வாசுதேவன்
மாநில துணைத் தலைவர்



துரைராஜ் தோமினிக் சாவியோ
மாநில துணைத் தலைவர்



பே.ராமசுப்பிரமணியன்
மாநில துணைத் தலைவர்



ஏ.அர்ச்சுணன்
மாநில துணைத் தலைவர்



சி.ஆல்பர்ட் சகாயராஜ்
மாநில துணைத் தலைவர்



எஸ்.அமலோற்பவமேரி
மாநில துணைத் தலைவர்



செ.காளிமுத்து
மாநில துணைச் செயலாளர்



வி.எஸ்.முத்துராமசாமி
மாநில துணைச் செயலாளர்



எம்.தமிழ்மணி
மாநில துணைச் செயலாளர்



செய்யது இப்ராகி மூஸா
மாநில துணைச் செயலாளர்



நா.மதிவாணன்
மாநில துணைச் செயலாளர்



பி.எஸ்.பூங்கோதை
மாநில துணைச் செயலாளர்



எஸ்.எஸ்.முருகன்
மாநில செயற்குழு



கோ.மணிவண்ணன்
மாநில செயற்குழு



எஸ்.லாசர்
மாநில செயற்குழு



செ.அருள்ராஜ்
மாநில செயற்குழு



அ.பாண்டியராஜன்
மாநில செயற்குழு



சோ.மனோகர்
மாநில செயற்குழு



எம்.முத்துப்பழனு
மாநில செயற்குழு



இ.லூர்துராஜ்
மாநில செயற்குழு



பெ.இராஜேந்திரன்
மாநில செயற்குழு



சி.இளவழகன்
மாநில செயற்குழு



ரெ.வரதராஜன்
மாநில செயற்குழு



ஜி.கே.மனோகரன்
மாநில செயற்குழு



ச.துரைப்பாண்டி
மாநில செயற்குழு



ஆர்.ஈவேரா
மாநில செயற்குழு



கோ.இராமகிருஷ்ணன்
மாநில செயற்குழு



த.அன்பரசன்
மாநில செயற்குழு



ஏ.பவுல்
மாநில செயற்குழு



கே.பி.சங்கரன்
மாநில செயற்குழு



வே.நாகராஜ்கணேஷ்குமார்
மாநில செயற்குழு



விஜயகுமார்
மாநில செயற்குழு



அ.பால்கரன்
மாநில செயற்குழு



கே.கணேசன்
மாநில செயற்குழு



ஆர்.ஆனந்தன்
மாநில செயற்குழு



தா.இம்மானுவேல்தாஸ்
மாநில செயற்குழு



கே.விஜயராஜ்
மாநில செயற்குழு



மா.பெருமாள்
மாநில செயற்குழு



பி.பி.முரளி
மாநில செயற்குழு



சி.தங்கராஜ்
மாநில செயற்குழு



செ.தங்கவேலா
மாநில செயற்குழு



எஸ்.சரஸ்வதி
மாநில செயற்குழு



எஸ்.மஞ்சுளா
மாநில செயற்குழு



சி.பிரபா
மாநில செயற்குழு



க.பாரதிகண்டோஜிராவ்
மாநில செயற்குழு



எம்.எம்.சண்முகசுந்தரி
மாநில செயற்குழு



அ.ஜெயராஜ்
மாநில செயற்குழு



எஸ்.முருகன்
மாநில செயற்குழு



கே.பெரியசாமி
மாநில செயற்குழு



ஆர்.ரமாதேவி
மாநில செயற்குழு



கோவிந்தராஜ்
மாநில செயற்குழு



சுரேஷ்குமார்
மாநில செயற்குழு



வே.இராமமூர்த்தி
மாவட்டச் செயலாளர்



சு.குணசேகரன்
மாவட்டச் செயலாளர்



இ.கருணாகரன்
மாவட்டச் செயலாளர்



மா.சிவன்
மாவட்டச் செயலாளர்



அ.ஜோசப் சோவியர்
மாவட்டச் செயலாளர்



இரா.செல்லப்பாண்டியன்
மாவட்டச் செயலாளர்



எஸ்.இராஜா
மாவட்டச் செயலாளர்



செ. காளிமுத்து
மாவட்டச் செயலாளர்



சே.நீலகண்டன்
மாவட்டச் செயலாளர்



ச.அமுதன்
மாவட்டச் செயலாளர்



ஈ.இராஜேந்திரன்
மாவட்டச் செயலாளர்



இ.எழில்
மாவட்டச் செயலாளர்



ந.ரெங்கராஜன்
மாவட்டச் செயலாளர்



சு.கணேசன்
மாவட்டச் செயலாளர்



நா.மதிவாணன்
மாவட்டச் செயலாளர்



மு.லெட்சுமிநாராயணன்
மாவட்டச் செயலாளர்



எஸ்.கோபாலகிருஷ்ணன்
மாவட்டச் செயலாளர்



பெ.தமிழ்ச்செல்வன்
மாவட்டச் செயலாளர்



ஆர்.அண்ணாதுரை
மாவட்டச் செயலாளர்



சி.அரசு
மாவட்டச் செயலாளர்



ஜே.ஜோசப்
மாவட்டச் செயலாளர்



வி.எஸ்.முத்துராமசாமி
மாவட்டச் செயலாளர்



சு.வெங்கடாசலம்
மாவட்டச் செயலாளர்



இரா.நடேசன்
மாவட்டச் செயலாளர்



கோ.காமராஜ்
மாவட்டச் செயலாளர்



செ.வெங்கடேசன்
மாவட்டச் செயலாளர்



அ.சுதாகரன்
மாவட்டச் செயலாளர்



அ.செல்வம்
மாவட்டச் செயலாளர்



ஜி.கே.முருகன்
மாவட்டச் செயலாளர்



சு.கதிரவன்
மாவட்டச் செயலாளர்



கே.சத்தியநாதன்
மாவட்டச் செயலாளர்



ஜே.கேபிரியேல் டார்வின்
மாவட்டச் செயலாளர்

மலர்க் குழு



ந.ரெங்கராஜன்
பொதுச் செயலாளர்



து.இளங்கோ
முன்னாள் மாநிலத் தலைவர்



இரா.சுப்பாராசு
முன்னாள் பொதுச் செயலாளர்



சா.அன்பழகன்
முன்னாள் பொதுச் செயலாளர்



ஈ. இராஜேந்திரன்
மாவட்டச் செயலாளர்



சே. நீலகண்டன்
மாவட்டச் செயலாளர்



கே.சத்தியநாதன்
மாவட்டச் செயலாளர்



ஜே.எஸ்.ஆர். மாளிகை



இயக்க நிறுவனர் மாஸ்டர் வா.இராமுண்ணி
இயக்கக் காவலர் சு.ஈசுவரன் மாளிகை



தோரணவாயில்

கல்வியின் நோக்கம் கல்வியைக் கற்றலிலும், இள உள்ளங்கள் தமது வாழ்நாளெல்லாம் தமக்குத் தேவையான கல்வியைத் தொடர்ந்து சுயமாகத் தாமே கற்றலிலும் திறமுடையவர்களாக ஆக்குவதாகும்.

ஆசிரியர்களான நமக்குப் பொதுவாக இரண்டு பொறுப்புகள் உள்ளன. ஒன்று குழந்தைகளுக்கு நல்லறிவு புகட்டுவது இரண்டாவது குழந்தைகளுக்கு ஒரு நல்ல முன்னுதாரணமாகத் திகழ்வது.

தமிழ் கற்றல் கற்பித்தலில் புதிய சிந்தனைகளையும், நடைமுறைகளையும் தமிழறிஞர்கள் ஆசிரியர்களுக்கு வழங்கி தமிழன்னைக்கு அவர்களது கடமையைச் செவ்வனே செய்து இம் மலர் சிறக்கச் செய்துள்ளார்கள்.

இனிமைத் தமிழ்மொழியான நமது தாய் மொழியாம் தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் மாநாட்டினை தமிழ் நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி உலகத் தமிழாசிரியர் பேரவையுடன் இணைந்து நடத்தும் 11வது மாநாடு ஆகும்.

இயக்கமே நமது உயிர் மூச்சாகக் கொண்ட இலட்சோபலட்சம் இயக்கவாதிகளை உருவாக்கியவர் இயக்க நிறுவனர் மாஸ்டர் வா இராமுண்ணி ஆவார்.

நம்மால் இயலுமா என எண்ணி இருந்த தொடக்கப்பள்ளி ஆசிரியர்களை

ஒருங்கிணைத்து நம்மால் முடியாதது யாரால் முடியும்?என்று அறை கூவல் விடுத்து தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி என்ற மாபெரும் இயக்கத்தை உருவாக்கியவர் இயக்க நிறுவனர் மாஸ்டர் வா.இராமுண்ணி.

இயக்கம் தொடங்கிய நாள் முதல் இது வரையிலும் அரசியலுக்கு அப்பாற்பட்டு, சாதி மதங்களுக்கு அப்பாற்பட்டு, இன்றைக்கு உலக அளவில் இப்பேரியக்கம் வீறு நடை போடுகின்றது என்றால் அது மாஸ்டர் அவர்களின் எண்ணங்களுக்கு நாம் கொடுக்கும் செயல் வடிவமே ஆகும். தொடர்ந்து மாஸ்டர் வழியில் இயக்கப் பணி ஆற்றுவது நமது கடமை என்பதை இங்கு உறுதி கொள்வோம்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்

திண்ணியர் ஆகப் பெறின்

என்பதற்கேற்ப இயக்கத்தை திறம்பட இயக்கிச் சென்றவர் அருமை அண்ணன் ஜே.எஸ்.ஆர் என்று அன்புடன் அழைக்கப்படும் ஜே.எஸ்.இராஜூ என்றால் அது மிகையாகாது. மாநிலத் தலைவராக அண்ணன் ஜே.எஸ்.ஆர் அவர்களின் பணியினை இங்கு பட்டியலிட்டால் அது தொடரும். எனவே நாம் ஒவ்வொருவரும் அண்ணனின் வழியில் இயக்கப் பணியினை தொடர்வோம்.

மாஸ்டர் இராமுண்ணி ஜே.எஸ்.ஆர் வழியில் பேரியக்கத்தின் உன்னதத் தலைவர் அன்பு அண்ணன், இயக்கக் காவலர் சு.ஈசுவரன் அவர்கள் ஒரு தொடக்கப்பள்ளி ஆசிரியராலும் உலக அரங்கில் பங்கு பெற முடியும் என நிரூபித்துக் காட்டியவர். ஆம்! அண்ணனின் அயராத பணி, எப்பணி இருப்பினும் இயக்கப் பணியே எனது உயிர் மூச்சு என வாழ்ந்து காட்டியவர். எனவேதான் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பொதுச் செயலாளராக இருந்து அகில இந்திய ஆசிரியர் கூட்டணியின் பொதுச் செயலாளராகவும், உலகக் கல்வி அமைப்பின் துணைத் தலைவராகவும், சார்க் நாடுகளின் ஆசிரியர் கூட்டமைப்பின் பொதுச் செயலாளராகவும் உச்சத்தை எட்ட முடிந்தது.



இயக்கப் பணி ஆசிரியர் நலன் சார்ந்தது. ஆசிரியர் நலன் மாணவர் நலன் சார்ந்தது. மாணவர் நலன் திறன் மேம்பாடு சார்ந்தது. எனவேதான் மாணவர் திறன் மேம்பாடு அடையவும், உலகளாவிய அளவில் தமிழ கற்றல் கற்பித்தலில் புதிய முறைகளை கையாளவும், 1998ல் தமிழ்களம் தொடங்கப்பட்டு அதன் வழியில் புலம் பெயர்ந்த மாணவர்கள் தமிழ் மொழியை எளிமையாகக் கற்றுக்கொள்ள வழி ஏற்படுத்தித் தந்த பெருமைக்குரியவர்.

தொடர்ந்து இயக்கத்தின் சார்பில் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை உலகத் தமிழாசிரியர் மாநாடு நடத்துவது என முடிவெடுத்து, அதன் ஒருங்கிணைப்பாளராகவும் இருந்து திறம்பட செயலாற்றிய செயல் வீரராகவும் திகழ்ந்தார். அண்ணனின் வழியில் தொடர்ந்து உலகத் தமிழாசிரியர் மாநாட்டினை இயக்கத்தின் சார்பில் நடத்தி உலகளவில் நமது பெருமையை நிலை நாட்டுவதே அண்ணனுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

“நாலடியும் ஈரடியும் போன்ற ஒழுக்க நூல்களைப் பெற்றுள்ள தமிழர்கள் தமிழ்மொழி எவ்வகையிலும் பிற மொழிகளை விடத் தாழ்ந்ததென்று எண்ணி தலை தாழ்ந்து நடக்கத் தேவையில்லை” என்ற கருத்தை மனதில் கொண்டு பெருமை மிகு இம்மொழியினை கற்கவும் கற்பிக்கவும் மாநாடு நடத்தி கருத்துகளைப் பெற வேண்டும் என எண்ணியே இயக்கம் இம் மாநாட்டினை நடத்துகிறது இம் மலரினையும் வெளியிடுகிறது.

இம் மலர் பொன்னும், பவளமும், முத்தும், மாணிக்கமும் சேர்ந்த மதிப்புமிக்க அணிகலன் போன்று விலை மதிப்பற்றது. தமிழறிஞர்களின் கருத்தோவியங்கள், தமிழ் கற்றல் கற்பித்தலில் புதிய சிந்தனைகளையும், நடைமுறைகளையும் இயன்ற வரை இம்மலரில் இடம்பெறச் செய்துள்ளோம். இம் மலர் தமிழறிஞர் பெருமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளை உள்ளடக்கிய கருத்துப்பேழை.

இடம் பெற்றுள்ள ஆய்வுக் கட்டுரைகள் எல்லாம் மாநாட்டு அமர்வுகளில் கட்டுரையாளர்களால் மாதிரிப் பாடவகுப்புகளாக நடத்தப்பட்டு படைக்கப்பட்டுள்ள பெருமைக்குரிய தனிச் சிறப்பு வாய்ந்தவை.

இம்மலரினைத் தாங்கள் படித்து தமிழ் கற்றல் கற்பித்தலை மேம்பாடு அடையச் செய்ய வேண்டும்.

“வீட்டுக்கு ஒரு நூலகம் அமையும் காலமே அறிவின் பொற்காலம்” என்பதை மனதில் கொண்டு உங்கள் வீட்டு நூலகத்தில் இம்மலரினை இடம்பெறச் செய்ய அன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி

அன்புடன்





பதிவு எண் : 118/61

(ந. ரெங்கராஜன்)

ஒருங்கிணைப்பாளர்

11வது உலகத்தமிழாசிரியர் மாநாடு

பொதுச்செயலாளர்

துணைப்பொதுச்செயலாளர் AIPTF

வாழ்க தமிழ் வளர்க தமிழர் ஒற்றுமை

தலைமையுரை



கோ. கமராஜ்,
மாநிலத் தலைவர்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்
தேமதுர தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல்வேண்டும்
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்

என்ற முரண்டாசுக் கவிஞனின் கவிதைகளை நினைவிற்கொண்டு

கனியிடை ஏறிய சுவையும் – முற்றல்
கழையிட ஏறியசாறும்
பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சுப்
பாகிடையே ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் – தென்னை
நல்கிய குளிருள நீரும்
இனியன் என் பேன் எனினும் – தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்

என்ற புரட்சிக் கவி பாவேந்தர் பாடல்களை என் நெஞ்சில் நிறுத்தி தமிழே! என் உயிரே! உனை வணங்கி என் தலைமை உரையைத் தொடங்குகிறேன்.

தமிழ் உணர்வுடன் குழுமியிருக்கும் உலகத் தமிழ் ஆசிரியர்களே! மாநாட்டுப் பேராளர்களே! தமிழறிஞர் பெருமக்களே! ஆன்றோரே! சான்றோரே! அனைவருக்கும் என் முதல். வணக்கம். தமிழ் வணக்கம்.

உலகத்தமிழ் ஆசிரிர்கள் மாநாடு உலகளாவிய தமிழ்கற்பிக்கும் ஆசிரியர்கள் நடத்தும் உலகத் தமிழ் ஆசிரியர் மாநாடு. தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, உலகத் தமிழாசிரியர் பேரவையோடு இணைந்து பொறுப்பேற்று நடத்தும் மாநாடு. பார்போற்றும் பதினோராவது மாநாடு. நான்காவது உலகத்தமிழ் ஆசிரியர் மாநாட்டையும், எட்டாவது உலகத்தமிழ் ஆசிரியர் மாநாட்டையும்நடத்திய பெருமை நமது பேரியக்கத்திற்கு உண்டு.

இயக்கம் என்பது ஆசிரியர்கள் நலன் மட்டுமே சார்ந்தது அல்லாமல் தான் சார்ந்துள்ள மொழி, கலாச்சாரம், பண்பாடு, வாழ்வியல் போன்றவைகளுக்காகவும் தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டது தான் இப்பேரியக்கம். அதன் வழியில் நடத்தப்படுவது தான் இம்மாநாடு. நான்காவது உலகத்தமிழ் ஆசிரியர் மாநாட்டை இயக்கம் பொறுப்பேற்று நடத்திய போது அருமை அண்ணன்கள் ஜே.எஸ்.ஆரும் சு.ஈசுவரனும் இருந்து நடத்தினார்கள். எட்டாவது மாநாட்டை இயக்கம் பொறுப்பேற்று நடத்திய போது அண்ணன் ஜே.எஸ்.ஆர் இல்லை. அண்ணன் சு.ஈசுவரன் அவர்கள் முன்னின்று

நடத்தினார்கள். இன்று பதினொன்றாம் மாநாடு அவர்கள் இருவரும் நம்மிடையேயில்லை. அவர்களுடைய தம்பிகள் நாம் பொறுப்பேற்றும் நடத்திக்கொண்டிருக்கிறோம். வாழையடி வாழை என்பது போல நமது முன்னோர்கள் செய்த பணியை தொடர்ந்து செய்து கொண்டு இருக்கிறோம்.

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி என்ற பேரியக்கத்தின் நிறுவனர் மாஸ்டர் நம்மிடையேயில்லை – அவர் வழித் தோன்றல்கள் ஜே.எஸ்.ஆர் இல்லை. ஏழுமாநாடுகளை நடத்தி தமிழுக்கு அணி சேர்த்த அண்ணன் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் புகழை உலகமெல்லாம் பரவச் செய்த மன்னன் சு.ஈசுவரன் நம்மிடையேயில்லை. இம்மும் மூர்த்திகள் நம்மிடையேயில்லை. ஆனால் நம் உணர்வுகளோடும் உதிரத்தோடும் கலந்து நிற்கின்றனர். அவர்கள் நம்மை வழிநடத்தியதைத்தான் மறக்கமுடியுமா ? அவர்கள் வழி நின்று இம்மாநாட்டை நடத்திக் கொண்டு இருக்கிறோம்.

தமிழ்மொழி உலகளவில் பரவியிருக்கின்ற மொழி. தமிழுக்கு என்று ஒரு நாடு இல்லையென்றாலும் இன்று தமிழன் இல்லாத நாடு இல்லை. அந்த தமிழன் மொழியால் இனத்தால் கட்டுண்டு இருக்கிறான். மொழியை வளர்ப்பதில் தாயகத்தின் தமிழனைவிட வெளி நாட்டு வாழ் தமிழனுக்கு தான் உணர்வுகள் அதிகம் என்பதை மறுப்பதற்கில்லை. தமிழ்மொழி தமிழகம் தாண்டிய பெருமொழி தமிழ் பண்பாடும் தமிழ் உணர்வுகளும் தமிழ் பெருமைகளும் எங்கு வாழ்ந்தாலும் வேரோடி விழுதுவிட்டுப் பரந்துள்ள தங்களின் பழமையான பண்பாட்டுக்கு செறிவு மிக்க மொழிக்கு உயர்ந்த இலக்கியத்திற்கு துடிப்புமிக்க உன்னத கலாச்சாரத்திற்கு சொந்தக் காரர்கள் தமிழர்கள்.

அறிவு சார்ந்த உலகில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. புதிய புதிய கண்டுபிடிப்புகள் புதிய புதிய உத்திகள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. தொன்மைமொழி, பழமைமொழி, செம்மொழி, பைந்தமிழ்மொழி, செந்தமிழ்மொழி என்று நாமும் மொழியின் பெருமைகளை சொல்லிக் கொண்டு இருந்தாலும் புதிய உத்திகள் வேண்டாவா ? அதன் மூலமே தமிழ் வாழும் நீண்டு வாழும் என்ற உணர்வோடு தான் கற்றல் கற்பித்தலில் புதிய சிந்தனைகளும் நடைமுறைகளும் என்ற கருப்பொருளை மையமாக வைத்து இம்மாநாட்டினை நடத்துகிறோம். இதன் மூலம் கற்றல் கற்பித்தலை எளிதாக்க முடியும் என்பதோடு மட்டுமல்லாமல் எதிர்கால தமிழ்ச் சமுதாயமும் பயன்பெறும்.

நாம் நடத்திய மாநாடுகளாகட்டும் உலகத்தமிழ் ஆசிரியர் பேரவைகளோடு இணைந்த மாநாடுகளாகட்டும் புதிய புதிய கருப்பொருட்களைக் கொண்டே நாம் நடத்தியிருக்கிறோம். அந்த வகையில் இந்த மாநாடு வெற்றி மாநாடாக அமையட்டும். அன்னைத்தமிழுக்கு அழகுசேர்க்கும் மாநாடாக அமையும். இக்காலக்கட்டத்தில் நம்மொழி உணர்வைப் பல்வேறு தளங்களிலும் வளர்த்தெடுக்க வேண்டிய கடமை நமக்குள்ளது. நம் தமிழ்மொழி பல்லாயிரம் ஆண்டுகள் சிறப்புடையது எண்ணிறந்த இலக்கியங்களை கொண்டது. ஆனாலும் சில நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய ஆங்கிலம் இன்று தனக்கென்று ஒரு இடத்தையும் சர்வேதேச அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. அத்தகைய இடத்தை நம் அன்னைத் தமிழும் அடைய நாம் ஒவ்வொருவரும் உழைத்திட வேண்டியது நமது கடமை.

தமிழன் என்று சொல்லடா !
தலை நிமிர்ந்து நில்லடா என்பது மறைந்து
ஆங்கிலம் என்று சொல்லடா !
அகமகிழ்ந்து செல்லடா !
என்ற நிலை தாய்த் தமிழகத்தில் வந்தது வேதனை தான் !

எங்கும் எதிலும் ஆங்கில மோகம் தொடக்கக்கல்வியிலே கூட ஆங்கில வழியை புகுத்தி அரசே வேடிக்கைப் பார்க்கிறது. காரணம் கேட்டால் மாணவர்கள் சேர்க்கை குறைவுபடுகிறது அதை ஈடுகட்டத்தான் என்கிறார்கள். எதிலும் தமிழ் என்பது போய் எதிலும் ஆங்கிலம் என்ற ஆங்கில மோகம் தலைதூக்கியது வேதனையானது. தொன்மையான இலக்கண இலக்கிய வகைகள் நிறைந்த மொழி 3000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறுடைய மொழி பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் தொடர்ந்து 3000 ஆண்டுகளாக சீரிளமைத்திறன் குன்றாத மொழி நம் மொழியேயாகும் என்று பெருமைபட்டுக் கொள்கிறோமே இன்றைய நிலை என்ன ?

பழம் பெருமை எங்கே போனது. இதையெல்லாம் தடுத்து நிறுத்திட வேண்டாமா ?

போராட்டக்களம் காணக்கூட தயாறாக உள்ளது தான் இப்பேரியக்கம்.

தமிழ்நாட்டில் உள்ள தமிழர்கள் தாங்கள் தமிழில் பேசுவதையே தாழ்வாக எண்ணக்கூடிய மனநிலை. வெளிநாடு வாழ் தமிழர்கள் 60 விழுக்காடு தமிழில் பேசுகின்றனர். 40 விழுக்காடு தான் பிற மொழிகளில் பேசுகிறார்கள். ஆனால் தாய் தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களோ 40 விழுக்காடு தான் தமிழில் பேசுகிறார்கள். 60 விழுக்காடு ஆங்கிலத்தில் பேசுகிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். தமிழனுக்கு என்று ஒரு அடையாளம் வேண்டாமா ? ஏன் தமிழனுக்கு என்று ஒரு நாடு வேண்டாமா ? நாடு வேண்டும் எனில் மொழி காக்கப்பட வேண்டும் என்பது குற்றமா ? மொழிக் கொள்கையை உருவாக்கக் கூடியவர்கள் கல்வியாளர்கள் தமிழகத்தில் கல்வியாளர்கள் பெரும்பான்மையும் ஆங்கில மோகம் கொண்ட அடிமைகளாகவே உள்ளனர். அவர்களுக்கு மேதமையை காத்துக் கொள்ளவும காட்டிக் கொள்ளவும் இந்த "வர்க்க பேதம்" உதவுவதாக நினைக்கிறார்கள். பட்டம் பதவி பரிசு பணம் பெற மட்டும் தமிழைப் பயன்படுத்திக் கொண்டு விட்டில் பூச்சிகள் போல் தகவாழ்வு நெருப்பில் வீழுந்து எரிந்து போகும் இவர்கள் தமிழ் அழிந்து வருவதைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை. தேடிச் சோறு நிதம் தின்னும் இதுகளால் தமிழ் காப்பாற்றப்பட போவதில்லை" என்ற முனைவர் தமிழண்ணல் கருத்து ஈண்டு எண்ணத்தக்கது.

அகநானூறு, புறநானூறு, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை பதிணென்கீழ்க் கணக்குகள் என்ற பழந்தமிழ் நூல்கள் மட்டும் இருந்தால் போதாது 2000 ஆண்டுகளுக்கு முன் தெய்வப் புலவர் திருவள்ளுவர் ஈன்ற திருவள்ளுவமும் தொடர்ந்து தற்கால இலக்கியவாதிகள் கவிஞர்கள் ஈன்றெடுத்த நூல்களோடு மட்டுமல்லாமல் புதியன தமிழில் வரவேண்டும். புதிய தொழில் நுட்பம் கையாளப்பட வேண்டும். அனைத்து நிலைகளிலும் தமிழே முதன்மையாகத் திகழ வேண்டும்.

ஆங்கிலம் படிப்பதால் மட்டுமே மேம்பாடு கிடைக்கும் என்ற கீழ்நிலை மாறவேண்டும்.

அனைத்து நிலைகளிலும் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும்.

நீதிமன்றங்களிலும் மன்ற மொழியாக விளங்க வேண்டும்.

எட்டு திசையும் தமிழ் முழக்கம் செய்திட வேண்டும்.

கடல்கடந்து வாழும் தமிழர்களும் மொழியால் ஒன்று பட வேண்டும்.

நம் சந்ததியர்களுக்கு சூட்டும் பெயர் தமிழாக இருக்க வேண்டும்.

அனைத்து குடும்ப சமூக நிகழ்வுகளிலும் தமிழே இடம் பெறவேண்டும்.

வழிபாடு செய்வதற்கும் ஏற்றமொழி தாய்மொழியே என்று எடுத்துரைப்போம்.

எட்டுதிசையும் செல்வோம். கலைகள் யாவும் கொண்டு வந்து இங்கு சேர்ப்போம். மொழி திரிந்துவிடாமல் பண்பாடு சிதறாமல் கற்றல் கற்பித்தலில் புதிய சிந்தனைகளை இடம் பெறச் செய்வோம்.

தமிழனுக்கு வீழ்ச்சியில்லை தமிழன் கீர்த்தி
தாழ்வல்லை தமிழ்நாடு தமிழ்மக்கள்
தமிழர்க்கு தொண்டு செய்யும் தமிழனுக்கு
தடைசெய்யும் நெடுங்குன்றம் தூளாய்ப்போகும்

என்ற பாவேந்தரின் பாடல் வரிகள் தமிழ் நெஞ்சங்களில் ஒளிரட்டும்

சாகா வரம் பெற்ற தமிழுக்கு தொண்டு செய்வோம்
தமிழனாய் வாழ்வோம்
தமிழைக் காப்போம்.

நன்றி

அன்பன்
கோ. கமராஜ்,
மாநிலத் தலைவர்

மாநாட்டு அறிக்கை



ந. ரெங்கராஜன்
பொதுச் செயலாளர்

எம்மொழிக்கும் மூத்தவளே!
எம்மொழியாய் வாய்த்தவளே!
செம்மொழியாய் மொழிகளுக்குள்
செம்மாந்து திருப்பவளே!

என் அன்னைத் தமிழே உன்னை வணங்குகிறேன்.

நிமிர்ந்த நன்டையும், நேர் கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள் கொண்ட இயக்கத்தைத் தோற்றுவித்த மாஸ்டர் இராமுண்ணி அவர்களையும், அவர் வழியில் நின்று இயக்கத்தைக் கட்டிக் காத்து தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்காக எட்டு முறை சிறை சென்ற இயக்கச் செம்மல் அண்ணன் ஜே.எஸ்.ஆர் அவர்களையும், தொடக்கப்பள்ளி ஆசிரியராலும் உலக அரங்கில் தனது கருத்துகளை வெளியிட முடியும் என நிருபித்து இயக்கமே தனது உயிர் மூச்சாகக் கொண்டு உலகக் கல்வி அமைப்பின் துணைத் தலைவராகவும், சார்க் நாடுகளின் கல்வி அமைப்பின் பொதுச் செயலாளராகவும்,அகில இந்திய ஆசிரியர் கூட்டணியின் பொதுச் செயலாளராகவும் இப்பேரியக்கத்தின் பாதுகாப்பு அரணாகவும் விளங்கிய இயக்கக் காவலர் அண்ணன் சு.ஈசுவரன் அவர்களையும் வணங்கி, தமிழறிஞர்களும், பேராளர்களும், தமிழ் ஆர்வலர்களும் நிறைந்துள்ள இம் மாநாட்டில் மாநாட்டு அறிக்கையை மகிழ்வுடன் உங்கள் முன் படைக்கிறேன்.

"கற்பனை பெருக வேண்டின்
கல்வியைப்பெருக்க வேண்டும்!
வெற்றியைப் பெருக்க வேண்டின்
மென் மேலும் முயல வேண்டும்!
புதுமையே அறிவின் ஆக்கம்
புதுமையே புகழுண்டாக்கும்!"

என்பதற்கேற்ப தமிழ் கற்றல், கற்பித்தல்–புதிய சிந்தனைகளும் நடைமுறைகளும் என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இம்மாநாடு நடைபெறுகிறது.

உலகம் அறிவியல் வளர்ச்சியில் உயர்ந்தோங்சி வியக்கத்தக்க வகையில் முன்னேற்றம் கண்டிருந்தாலும், உலகில் வாழும் மாந்தர் அவரவர் பேசும் மொழியால் மட்டுமே அடையாளம் காணக் கூடியவர்களாக இருக்கின்றனர். இயல், இசை, நாடகம் என வகுத்துரைக்கப்பட்ட முத்தமிழ் இன்று அறிவியல் தமிழாகவும், கணினி–இணைய வலைத்தள மொழியாகவும் ஆக்கம் பெற்று வருகிறது.

பல்லாயிரம் ஆண்டு வரலாற்றுப் பெருமையும் இலக்கிய, இலக்கண வளமும் உடைய தமிழ் இன்றைய கணினி யுகத்தில் உலக அளவில் மேலை நாட்டு மொழிகளுக்கு இணையாக நடைபோட, கணினித் தமிழாகவும் நன்றாக வளர்ச்சியடைய வேண்டும். தமிழ் மூலமே உலகில் எச் செயலையும் தமிழன் மேற்கொள்ளலாம் என்ற நிலை உருவாக வேண்டும்.

எனவேதான் தொடக்க நிலையில் பயிலும் மாணவர்களுக்கான கற்பித்தலில், புதிய கற்பித்தல் முறைகளை அறிமுகம் செய்து, தமிழ் மொழி கற்பதை எளிமைப்படுத்தி, மாணவர்களிடம் தமிழ் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே இம் மாநாடு நடத்தப்படுகிறது.

செழுமைமிக்க பாரம்பரியத்தின் சொந்தக்காரர்கள் நாம். மிகச் சிறந்த இலக்கியங்களைக் கொண்ட வலிமை மிக்க உயிர்த்துடிப்புள்ள ஒரு மொழியின் சொந்தக்காரர்கள் நாம்.

உயர்தனிச் செம்மொழியான தமிழ்மொழி உலகின் பல்வேறு நாடுகளில் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழங்களில் தாய்மொழியாவும், முதன் மொழியாகவும், இரண்டாம் மொழியாகவும் அந்நிய மொழியாகவும், பயிற்றுமொழியாவும் கற்கப்பட்டும், கற்பிக்கப்பட்டும், பயன்படுத்தப்பட்டும் வருகிறது.

ஒருவறுக்கு அவனுடைய தாய் மொழியின் வழியாகக் கல்வி கற்பிப்பதே மிகச் சரியான முறையாகும். தாய்மொழியை நன்கு கற்று அதில் முழுமையான தேர்ச்சி பெறுவதே குழந்தையின் முதல் ஈடுபாடாக இருக்க வேண்டும். எனவேதான், கற்றல் கற்பித்தலில் புதிய சிந்தனைகளையும், செயலாக்கத்தையும் காணல், தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திப் புதிய அணுகுமுறைகளைக் கண்டறிதல், தமிழை இராண்டாம் மொழியாக / பிறமொழி மாணவர்களுக்கான கற்பித்தல் முறைகளை அடையாளம் காணல், உலகத் தமிழாசிரியர்களிடையே தொடர்பும் ஒத்துழைப்பும் ஏற்படுத்துதல், உலகத் தமிழாசிரியர் பேரவையின் செயற்பாடுகளை விளைபயன் மிக்கதாக உருவாக்குதல் என்ற நோக்கங்களை மையப்படுத்தியும் கற்றல் கற்பித்தலுக்குத் துணைபுரியும் ஆய்வுக் கட்டுரைகளையும் இம்மாநாடு விவாதிக்க உள்ளது.

கற்பிக்கும் பணி தொடர்பான ஆய்வு, திறன் வளர்த்தல் கற்பித்தலில் உள்ள பிரச்சினைகள், சவால்கள், தீர்க்கும் முறைகள், போன்றவற்றில் தமிழறிஞர்களின் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்முதல் கட்டாயத் தேவையாகிறது. மரபுவழி சார்ந்த கட்டமைப்புக்குள் இருந்த கற்றல்–கற்பித்தல் அணுகுமுறை இன்று புதிய நடைமுறைகளைத் தேடிச் செல்கிறது. இன்றைய மாணவர்கள் கற்றலில் புதிய சிந்தனைகளை வரவேற்கின்றனர்.

அவரவர்க்குத் தேவையானவற்றைக் கற்பதே கல்வி. எனவேதான் "கற்க கசடு அற" என்றார் வள்ளுவர். தனது ஐயங்கள் நீக்குமாறு கற்க வேண்டும். அதாவது கற்க வேண்டியவற்றைக் கற்பதே கல்வி. இன்று அனைவருக்கும் தரமான கல்வி அளிக்க விரும்பும் நாம், மாணவர்க்குத் தெளிவாக எளிமையாக கற்பிப்பதே ஏற்புடைத்து. கற்பிப்பதற்கு சிறந்த முறை ஒன்றல்ல பல. மாணவரைப் பொறுத்தும் பாடத்தைப் பொறுத்தும் கற்பிக்கும் முறை மாறுபடும்.

" நமது தாய்மொழியான தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி. இது உலகில் வேறு எந்த இனத்துக்காவது, தாய்மொழியாக இருந்திருக்குமானால், உலகப் பொதுமொழியாகவே ஆகியிருக்கும்" என்று பேரறிஞர் அண்ணா போற்றி உரைத்தவாறு உலகப் பொதுமொழியாக ஆக்குவது. நம் ஒவ்வொருவரின் தலையான கடமையாகும்.

ஒரு மொழியின் வளர்ச்சி என்பது அந்த மொழியைப் பேசும் மக்களின் வளர்ச்சியைச் சார்ந்தே இருக்கும். தமிழனால் மக்கள் வளராமல் மொழிமட்டும் வளர்ந்ததாக வரலாறு இல்லை. தமிழனால் தமிழ் வளர்வதும், தமிழால் தமிழன் வளர்வதும் முடிவில்லா தொடர் ஓட்டமாகும். காலத்தால் அழியாது நிலைத்திருக்கும் நம் தமிழ் மொழியை அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்பவும் வளர்க்க வேண்டும்.

தமிழன் பெருமைகளை நாம் பேசுவதைக் காட்டிலும், பிறமொழியினர் ஆதாரத்துடன் தெரிவிக்கும்போது அதன் அருமையும், பெருமையும், நம் இளந் தலைமுறையினர் நன்கு உணர்ந்து கொள்ள வழிவகுக்கும்.

தமிழ்ப்பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும், சகோதரர்களாகவும், நண்பர்களாகவும் ஏற்றுக் கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும். எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும் அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்து வரும்.

பிறநாடுகளிலிருந்து வரும் தமிழறிஞர்கள், தமிழின் அருமை, பெருமைகளை கூறும் போது, அந்த மொழிக்குச் சொந்தக்காரர் நாம் என எண்ணும்போது அந்த மொழி மீது பற்று, பாசம் ஏற்படுவது இயற்கைதானே:

கால வளர்ச்சிக்குத் தக்கவாறு எந்த ஒரு மொழி தன்னைப் புதுமைக்குள் உட்படுத்திக் கொள்கின்றதோ அந்த மொழிக்கு அழிவு என்பது கிடையாது. அவ்வகையில் வளர்ச்சிப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் மொழியாகத் தமிழ் மொழி திகழ்கின்றது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

உலக செம்மொழிகளில் இணையத்திணை அதிகமாகப் பயன்படுத்தி, தரவுகளைப் பெற்றுவரும் முதல்மொழியாக தமிழ் திகழ்கின்றது. சுவர்களுக்குள் கட்டுப்பட்டிருந்து வகுப்பறைகளை மாற்றிய பெருமை இணையத்திற்கு உண்டு. தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி உலகத் தமிழர்களை இணைக்கும் ஒரு பாலமாகக் செயல்படுகிறது. மொழியைக் கற்றலும் கற்பித்தலும் காலங்காலமாக நடந்துவரும் செயல்கள். இதில் கற்றல் கற்பித்தல் – புதிய சிந்தனைகளும் நடைமுறைகளும் என்ற கருப்பொருள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் கற்றல் – கற்பித்தல் செயல்பாடு நன்றாக அமைவதற்கு இம்மாநாடு உறுதுணையாக அமையும் என்பதில் ஐயமில்லை. இன்றைய சூழலில் ஆசிரியர் – மாணவர் இடையே நடைபெறும் உடையாடல், சிந்தனையைத் தூண்டும் வண்ணம் அமையவேண்டுமென்பதால் புதிய கற்பித்தல் உத்திகளைக் கையாண்டு கற்றல், கற்பித்தல் செயல்பாடு சிறப்பான அமைவதற்கு ஆசிரியப் பெருமக்களுக்கு ஒது வழிகாட்டியாக இம் மாநாடு அமையும்.

தமிழனெங் கிருந்தா னேனும்
தமிழனே பிறப்பால் நெஞ்சால்
அமிழ்தெனும் மொழியின் பிள்ளை!
அவனெனும் பெருமை வாழும்!
குமிழ்நகைத் தமிழர் தங்கள்
குலஞ்செழில் படைதல் காண்பார்!
உமிழ்திரைக் கடலும் தாண்டி
ஒளிபெற வாழ்வார்! வாழ்வார்!

எனக் கூறி மாநாட்டு அறிக்கையை நிறைவு செய்கிறேன்.

அன்பன்

(ந. ரெங்கராஜன்)
பொதுச் செயலாளர்


தமிழ் வெல்க!


ஆய்வுக்கு உரிய
கட்டுரைகள்

பொருளடக்கம்

1. கதை அடிப்படையிலான பகிர்ந்து வாசித்தல் அணுகுமுறை வழித் தமிழில் வாசிப்புத் திறனை மேம்படுத்துதல் 3
2. அகன்ற படிப்பில் வாசிப்புக் கோப்பின் பங்கு 8
3. இருவழித் தொடர்பு மின்னூல் (ibook) வாசிப்பிலும் நூல் வாசிப்பிலும் மாணவர்கள் கண்ட அனுபவம் 14
4. கடைநிலை மாணவர்களிடையே "Snap,Donkey,Happy, Uno" ஆகிய அட்டை விளையாட்டுகளின் வழி இடையின உயிர் மெய்யெழுத்துகளை அறிமுகம் செய்தல் 23
5. இரண்டாவது மொழியாகத் தமிழைக் கற்றல், கற்பித்தல் 32
6. பகுதி உற்றுக்கேட்டல் வழித் தமிழ் மொழி கற்றலும் கற்பித்தலும்-மொரீசியசு 35
7. தமிழ்மொழியைக் கற்பதை ஒரு சுமையாகக் கருதி வரும் மாணவர்களுக்குப் பகுதி பயிற்றல் உற்றுக் கேட்டல் வழி முறை 37
8. தமிழ் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள் 42
9. பையப் பயிலும் மாணவர்களுக்குரிய மதிப்பீடும் வாசிப்பு மேம்பாடும் 47
10. சிங்கப்பூரில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தமிழ்க் கல்வி - தேவையும் பயன்பாடும் 51
11. ''சாக்ரடீக் கேள்வி கேட்டல் உத்திமுறை'' மூலம் வாய்மொழித் திறனை மேம்படுத்துதல் 56
12. தமிழை இரண்டாம் மொழியாகவும் பிறமொழியாகவும் பயிலும் மாணவர்களுக்குரிய புதிய கற்பித்தல் உத்திகள் 62
13. தமிழை இரண்டாம் மொழியாகவும் பிறமொழியாகவும் பயிலும் மாணவர்களுக்குரிய புதிய கற்பித்தல் உத்திகள் 66
14. கட்டுரை மற்றும் கருத்தறிதல் கற்பித்தலில் படைப்பாக்கக் காட்சிப்படுத்துதலின் பயன்பாடு 69
15. பாட ஆய்வினைப் பயன்படுத்தி `10'T சிகரம்' என்னும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் வழிக் கற்பித்த அனுபவங்கள் 74
16. தமிழ் கற்றல், கற்பித்தல் - புதிய சிந்தனைகளும் நடைமுறைகளும் 78
17. தகவல் தொழில்நுட்பத்தின் வாயிலாக மாணவர்களிடையே இருவழித் தொடர்புத் திறனை மேம்படுத்துதல் 82
18. தகவல் தொழில்நுட்பம்வழிக் கற்பிக்கப்படும் பாடங்களின் உற்றுநோக்கலும் ஆசிரியர் மேம்பாட்டில் அதன் தாக்கமும் 85
19. தமிழ்மொழி கற்க, கற்பிக்கத் தகவல் தொழில் நுட்பத்தை விளை பயன்மிக்கதாகப் யன்படுத்துதல் 89
20. ஒலி வேறுபாட்டுச் சொற்களைப் படத்தின் துணையால் அறிதல் 95
21. கருத்தறிதல் உத்திகள் தொடக்கநிலை 2 மற்றும் 3 98
22. சிங்கப்பூரில் தமிழ்மொழிக் கல்வி - புதிய பரிமாணங்களை நோக்கி... 101
23. இளம் மாணவர்களைப் பேணி வளர்ப்போம் 105
24. ஆக்ககரமான கற்றலுக்கு வித்திடும் பல்வேறு பாட வடிவங்கள் அல்லது அணுகுமுறைகள் 111
25. வாசிப்பு மின்-கோப்புத் திட்டத்தைப் பயன்படுத்தி மாணவர்களின் மொழித்திறனையும் புத்தாக்கச் சிந்தனையையும் வளர்த்தல் 119
26. தமிழ்க் கற்றல் கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பத்தை விளை பயன்மிக்கதாய்ப் பயன்படுத்துதல் 128
27. தமிழை இரண்டாம் மொழியாகவும் பிறமொழியாகவும் பயிலும் மாணவருக்குரிய புதிய கற்பித்தல் உத்திகள் 132
28. டிஜிட்டல் தகவல் பரிமாற்றுத் திறமைகள் மூலம் தமிழ்மொழி, கலாச்சாரம் கற்பிக்கும் வழிவகைகளைக் கட்டியெழுப்பல் 141
29. எழுத்தறிவிப்போம்! டிஸ்லெக்சியா என்ற இயலாமையை வேரோடு அறுப்போம் 144
30. தமிழ்மொழி கற்பித்தலில் புதிய நோக்குகளும் உத்திகளும் 147
31. பண்பாட்டுக் கூறுகள் வழித் தமிழ்மொழி கற்பித்தல் 150
32. தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் கணினியின் பயன்பாடு 153
33. பிறமொழி மாணவர்கள் தமிழை எளிமையாகக் கற்றுக் கொள்வதற்கான பயிற்று முறைகள் 156
34. இரண்டாம் மொழியாகத் தமிழைப் பயிலும் மாணாக்கருக்கு உரிய கற்பித்தல் முறைகள் 159
35. மொரீசியசில் பண்பாட்டுக் கூறுகள் வழி தமிழ்மொழி கற்பித்தல் 164
36. கற்றலுக்கான மதிப்பீடு கற்றலின் ஆணிவேர் 167
37. பண்பாட்டுக் கூறுகள் வழி தமிழ்மொழி கற்பித்தல் 170
38. பயன்மிகு கற்றலுக்கு ஒன்நோட் (One Note) என்னும் மின்னலக்க ஏடு 176





1. கதை அடிப்படையிலான பகிர்ந்து வாசித்தல் அணுகுமுறை வழித் தமிழில் வாசிப்புத் திறனை மேம்படுத்துதல்

இர. கமலதரணி

முன்னுரை

ஒரு மொழியில் நன்முறையில் பாண்டியத்துவமடைய மொழித் திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய நான்கு கூறுகளையும் கைவரப் பெற வேண்டும். கேட்பதை அடிப்படையாகக் கொண்டே குழந்தைப் பேசத் தொடங்குகிறது. பள்ளிக்கு வருவதற்கு முன்பே மாணவர்கள் கேட்கும், பேசும் ஆற்றலைப் பெற்றுவிடுகிறார்கள். ஆனால், வாசிப்புத் திறனும் எழுத்துத் திறனும் அப்படியல்ல. அவை திட்டமிட்டுக் கற்பிக்கப்பட வேண்டிய கூறுகளாகும். அதற்கு அடித்தளமாய் விளங்குவது வாசிப்புப் பழக்கமாகும். இதனை ஆரம்பத்திலேயே ஆசிரியர்கள் மாணவர்களிடையே புகுத்திட வேண்டும்.

ஆய்வின் நோக்கம்

மாணவர்களிடையே பகிர்ந்து வாசித்தல் அணுகுமுறையின் வழி வாசிப்புத் திறனை மேம்படுத்துவது கற்றல் கற்பித்தலின் பால் அவர்களது புரிதலை மென்மேலும் வலுப்படுத்தும். அவ்வகையில் கற்றல் கற்பித்தலில் மாணவர்களின் முழு ஈடுபாட்டையும் ஒற்றுமையையும் ஆசிரியர் ஒவ்வொரு பாடவேளையின் போதும் உறுதி செய்ய வேண்டும்.

பெரும்பாலான ஆசிரியர்கள் இவ்விடத்தே தங்கள் பணியினைச் செவ்வனே செய்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. ஆயினும், மாணவர்கள் தனியாள் முறைமையிலேயே வாசிப்பைக் கையாண்டு முறையாக வாசிக்க இயலாமல் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். இச்சிக்கலை எளிமையாகப் பகிர்ந்து வாசித்தல் அணுகுமுறையினூடே களைவதே இவ்வாய்வின் முதற்கண் நோக்கமாகும்.

கற்றல் கற்பித்தலில் வாசிக்கும் திறன்

வாசிப்பு எனப்படுவது ஒரு மாணவனது மனத்தை ஒருமுகப்படுத்தி, அவனது நினைவுத் திறனை அதிகரிக்கிறது. படிக்கும் மாணவர்களது கற்பனையையும் அறிவையும் புத்தகமோ அல்லது ஒரு குறிப்பிட்ட வாசிப்புப் பகுதியோ வளர்க்கிறது. காட்சி ஊடகங்களைப் போல ஒரு புத்தகத்திலோ அல்லது ஒரு வாசிப்புப் பகுதியிலோ உள்ளவை ஒரு முறையுடன் மறந்து விடுவதில்லை. அது காலங்காலமாக புதிய அர்த்தங்களை மாணவர்களுக்குத் தந்து கொண்டே இருக்கும்.

வாசிப்புத் திறன் மாணவர்கள் செய்யும் ஒவ்வொரு செயலிலும் ஆழ்ந்த கவனத்தைச் செலுத்தும் திறனை வளர்க்கும். வாசிப்பதால் கிடைக்கும் அனுபவங்களும் எண்ணங்களும் இதுவரை மாணவர்கள் அறிந்தவற்றின் எல்லைகளை விரிவாக்கி மேலும் சிந்திக்க வைக்கும். புதியதாகக் கிடைக்கப்பெறும் தகவல்களை அவர்கள் எளிதில்

கிரகிக்க முடியும். தகவல்களை வகைப்படுத்தித் தேவையானவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளத் துணைபுரியும். சுருங்கக் கூறினால், வாசிப்புத் திறன் மாணவர்களது ஏனைய திறன்களையும் ஒரு சேர வளர்க்கின்றது.

மாணவர்கள் பாடநூல்களைப் படிப்பது பெரும்பாலும் அதிக மதிப்பெண் பெறுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆனால், பொது நூல்கள் வாழ்க்கை முறை மற்றும் ஒழுக்க நெறிமுறைகள் குறித்த பல அறிஞர்களின் கருத்துகளை வழங்குகிறது. ஒருவனது வாழ்வு நல்வாழ்வாக அமைய அடித்தளம் அமைப்பது அவனது நற்குணங்களே, அந்த நற்குணங்களைத் தேடித்தருவதில் பெரும்பங்கு வகிப்பது நூல்களே.

மனிதனுக்கு மூளை இயல்பாகவே வளரும். ஆனால், அறிவு வளர வேண்டுமெனில் வாசிப்பும் அவசியம். வாசிப்பதை மாணவர்கள் சுமையாகக் கருதாமல் சுகமானதாக எண்ணித் துலங்குவதற்கு வித்திடும் வகையில் தான் இவ்வாய்வானது அமைகின்றது,. வாசிப்பதற்காகப் புத்தகத்தைத் திறப்பவன் அறிவுச் சுரங்கத்தின் வாசலைத் திறக்கிறான். புத்தகத்தின் பக்கங்கள் வெறும் காகிதங்கள் அல்ல. நாம் அறியாத உலகுக்கு நம்மை அழைத்துச் செல்லும் சிறகுகள்.

வாசிக்கும் போது மாணவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்

வாசிப்பது என்பது ஆன்மாவின் இராகம். அது அறிவிற்கும் ஆற்றலுக்கும் உள்ள ஓர் உறவுப்பாலம். அதனால் தான் வாசிக்கின்ற சமுதாயம் உலகை ஆளும் என்பார்கள். மாணவர்கள் மொழியாற்றலில் முன்னேற்றம் காண்பதற்கு முதனிலையாகவும், முதன்மை நிலையாகவும் வாசிப்பு அமைகின்றது. வாசிப்புப் பழக்கம் இளமையிலேயே அரும்பி வளர்ந்து முதிர்ச்சி பெறுதல் வேண்டும். நூல்களைப் பிழையின்றி வாசித்தல், கருத்தை விளங்கிக் கொள்ளல், விளங்கிய கருத்தை வெளிப்படுத்துதல் ஆகிய முத்திறனும் மொழித்தேர்ச்சியில் அடங்குவன.

மாணவர்கள் சிலர் பிழையற வாசிப்பர். ஆனால், கருத்தை விளங்கிக் கொள்ளமாட்டார்கள். சிலர் வாசித்து விளங்கிக் கொள்வர். ஆனால், விளங்கியதை வெளிப்படுத்தமாட்டார். வாசித்தவற்றை விளங்கிக் கொண்டு அவற்றை வெளிப்படுத்தும் ஆற்றலே மெய்யான மொழியாற்றலாகும்.

மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் குன்றி இருப்பதினால் ஆசிரியரின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் சிக்கல் ஏற்படுகிறது. மாணவர்களது வாசிப்பை ஆராய்ந்து பார்த்ததில் தனிநபர் முறையில் மாணவர்கள் வாசிக்கும் போது அவர்கள் ஆர்வமாக வாசிப்பதில்லை என்பது தெரிய வந்தது. மாணவர்கள் வாசிப்புப் பயிற்சியினை வெகுவாக மேற்கொள்ளாததும் இக்குறைகளுக்குக் காரணமாகின்றது. மாணவர்கள் தங்கள் விருப்பத்திற்கு வாசிப்பதால் மாணவர்களுக்கு அவை முழுமையான பயனைத் தரவில்லை. இது மாணவர்களின் அலட்சியப் போக்கினைக் காட்டுகின்றது.

அதோடு, ஆசிரியர்கள் பள்ளியில் முறையாக மாணாக்கர்களுக்கு வாசிப்புப் பழக்கத்தை அறிமுகப்படுத்தாமை ஒரு காரணமாக அமைகிறது. அதுமட்டுமின்றி, பெற்றோர்களும் புத்தகம் வாங்கிக் கொடுத்து வாசிப்புப் பழக்கத்தை வளர்க்காத பட்சத்தில் மாணவர்கள் இச்சிக்கலில் இருந்துவிடுபட முடியாது. இது போன்ற காரணங்களினாலே வாசிப்புப் பழக்கம் குன்றிய நிலையில் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் உள்ளனர்.

முறையான மொழியாற்றல் கைவரப்பெற்ற மாணவனின் பேச்சில் தெளிவும், கருத்தாழமும் காணப்படும். உள்ளங்கை நெல்லிக்கனி போல் எந்தக் கருத்தையும் தெளிவாகப் பிறர் விளங்கிக் கொள்ளுமாறு உரைப்பான். அவனது எழுத்து நடை எளிமையும், இனிமையும், தெளிவும், கருத்தாழமும், வழுவின்மையும் கொண்டதாக அமையும். இருப்பினும், பள்ளியில் பயிலும் பாடங்களோடு மட்டும் மாணவர்களது கல்வி முற்றுப் பெறுவதில்லை. கரையற்ற கல்விக் கடலிலுள்ள சின்னஞ்சிறு துளியே அவன் கற்கும் கல்வி. அக்கல்வியில் ஒரு மாணவனது அறிவு பெருகிவிடாது. எனவே, மாணவர்கள் பாடநூல்களைக் கற்பதோடு பிற பல நூல்களையும் வாசித்தல் வேண்டும்.

வாசிப்பில் கவனம் செலுத்தும் மாணவன் அறிவால் மட்டுமல்லாமல் உள்ளத்தாலும் உயர்ந்தவனாகின்றான். வாழ்வினையும் வாழ்வின் விழுமியங்களையும் புலப்படுத்தும் இலக்கியம், கட்டுரை, கவிதை முதலியவற்றைப் படிப்பதால் வாழ்வில் தான் கண்டறியாத புதிய கதைகளை உருவாக்குகிறான், குணாதிசயங்களை உணர்கின்றான், பல கோணங்களில் வாழ்வைக் காண்கிறான். பற்பல புதிய விடயங்களைப் பெறுகிறான். வாழ்வில் எதிர்கொள்ளும் விஷயங்களைப் பாகுபடுத்தக்கூடியவனாகின்றான். இதனால், அவன் உள்ளம் விரிவடைகின்றது. எதிர்கால வாழ்விற்குத் தம்மைத் தயார் செய்யும் உன்னத நிலை உருவாகின்றது.

அவர்கள் அறிவுச் செல்வத்தால் உள்ளத்தில் உயர்ந்து உருவாக வேண்டுமேயானால், அவர்கள் வாசிப்புத் திறனை விருத்தி செய்ய வேண்டும். வாசிப்புத் திறன் கைவரப் பெற்ற மாணவன் கல்விக் கரையைக் கடந்தவனாகின்றான். அன்றியும் முழுமையான மனித வளர்ச்சிக்குத் தன்னைத் தானே ஆயத்தமாக்கியவனாகின்றான். ஆகவே, மாணவர்களும் அவர்கள் நிகழ்கால விதைகள், எதிர்கால விருட்சங்கள்

என்பதை உணர்ந்து வாசிப்புத் திறனை வளர்த்து வாழ்க்கை எனும் நீண்ட பயணத்தைச் செவ்வனே கடக்கக் கடமைப்பட்டுள்ளனர். இதற்கு வித்திடும் வகையில் பகிர்ந்து வாசித்தல் அணுகுமுறையின் துணைகொண்டு மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்துதல் எனும் தலைப்பிலான இவ்வாய்வு வழங்கப்பட்டுள்ளது.

வாசிப்பில் சிக்கல் ஏற்படக் காரணம்

மாணவர்கள் தனிப்பட்ட முறையில் வாசிப்பை மேற்கொள்வதே இச்சிக்கலுக்கு அடித்தளமாக அமைகிறது. மேலும், தனிநபர் முறையில் அவர்கள் வாசிக்கும் போது தெரியாத சொற்களையோ எழுத்துகளையோ பிறரிடம் கேட்பதில்லை. பிழையாக ஒரு சொல்லை வாசிக்கும்போது அதனைத் திருத்துவதற்கும் யாருமில்லாத பட்சத்தில் அவர்கள் அதனையே சரியான உச்சரிப்பு என நம்பி வாசிக்கின்றனர்.

இதனால், அவர்கள் வாசிப்பில் பின்தங்கிய நிலையிலும் உள்ளனர்.இதனைக் களைவதற்கே பகிர்ந்து வாசித்தல் அணுகுமுறை அறிமுகப்படுத்தப்படுகிறது. பகிர்ந்து வாசித்தல் அணுகுமுறை மாணவர்களிடையே ஒற்றுமை உணர்வை வளர்க்கும் ஒரு கோட்பாடு. இவ்வணுகுமுறையில் தேவைப்படும் நிலைகளில் ஆசிரியர் வழிகாட்டலுடன் மாணவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டும். மற்றொருவரின் வாசிப்பும் மேம்பட ஒருவருடன் மற்றொருவர் பகிர்ந்து வாசிக்க வேண்டும்.

ஆகவே, மாணவர்களிடையே பகிர்ந்து வாசித்தல் அணுகுமுறையின் வழி வாசிப்புத் திறனை மேம்படுத்துவதால் வாசிப்புத் திறனில் அவர்களின் அடைவு நிலையை மேம்படுத்துவதோடு மட்டும் அல்லாது அவர்களின் சமூகவியல் தொடர்பையும் மேம்படுத்தும் என்பதனை நிரூபிக்க இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வு முற்றிலும் மாணவர்களிடையே பகிர்ந்து வாசித்தல் அணுகுமுறையை மேம்படுத்த முடியும் என்பதனையும் அதன் விளைவுகளையும் உணர்த்துவதற்காகவே நடத்தப்படுகிறது.

பகிர்ந்து வாசித்தல் அணுகுமுறையைக் கற்றல் கற்பித்தலில் நடைமுறைப்படுத்துதல்

பகிர்ந்து வாசித்தல் அணுகுமுறையானது மாணவர்களது வாசிக்கும் ஆற்றலை வளப்படுத்துவதோடு அவர்களது சொல்வளத்தைப் பெருக்கிக் கொள்ளவும் துணைபுரிகின்றது. அதுமட்டுமின்றி, இம்முறைமை மாணவர்களிடையே கலந்துரையாடலின் வழி மாணவர்களிடையே கருத்துப் பரிமாற்றம் ஏற்படுவதற்கான ஒரு வாய்ப்பையும் வழங்குகிறது. பகிர்ந்து வாசித்தல் அணுகுமுறையின் வடிவங்கள் முற்றிலும் மாணவர்களையே மையமாகக் கொண்டது. பகிர்ந்து வாசித்தல் அணுகுமுறையில் ஆசிரியருக்கெனவும் சில பங்குகள் உள்ளன.

பகிர்ந்து வாசித்தலில் ஆசிரியரின் பங்கு

- கற்றல் நோக்கத்தை மாணவர்களுக்குத் தெளிவாக விளங்க வைத்தல்
- மாணவர்களைக் குழு முறையில் அமர்த்துதல்
- மாணவர்கள் குறிப்பிட்ட நோக்கத்தை அடைய உதவுதல்
- மாணவர்களின் அடைவு நிலையை மதிப்பிடுதல்

பகிர்ந்து வாசித்தலின் தன்மைகள்

- நல்ல முறையில் உறவை வளர்த்தல்
- நேரடித் தொடர்பு
- தனியாள் முறையில் வரையறுக்கப்பட்ட நோக்கத்தை அடைதல்
- தனியாள் மற்றும் குழு முறை திறன்
- தனியாள் மற்றும் குழு முறை அடைவுநிலையை மதிப்பிடுதல்

பகிர்ந்து வாசித்தலின் அமைப்பு

தமிழ்மொழியில் வாசிப்பு ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. ஓர் ஆசிரியரின் வாசிப்புத் திறனை அடிப்படையாகக் கொண்ட கற்றல் கற்பித்தல் முழுமை அடைவதற்கு இத்தகைய பகிர்ந்து வாசித்தல் அணுகுமுறை கற்றல் நடவடிக்கையின் பங்கு மிகவும் அளப்பரியது. இம்முறையானது கற்றல் கற்பித்தலை இலகுவாக முன்னெடுப்பதற்கும்; அடைவின் தரத்தை உயர்த்துவதற்கும்; மொழியைப் பயன்படுத்துவதில் பிள்ளைகளின் நம்பிக்கையைக் கட்டி வளர்ப்பதற்கும் உதவுகின்றது.

பகிர்ந்து வாசித்தல் என்பது ஒரு பொருத்தமான கதையை, அல்லது பாடலை அல்லது சுவாரஸ்யமான ஒரு விசயத்தை வகுப்பொன்றுடன் அல்லது மாணவக் குழுவொன்றுடன் பல தடவைகள் அதனைப் பகிர்ந்து முன்னெடுத்தலாகும். பிள்ளைகள் இயல்பாகவே கதைகளை விரும்புகிறார்கள். கதைகளுக்கு நல்ல நல்ல துலங்கல்களைக் காட்டிப் பகிர்ந்து கொள்வதால் விரைவாகக் கற்றுக் கொள்கின்றனர்; வாசித்தல் மகிழ்ச்சி தரக்கூடியது என்பதை உணர்ந்து கொள்கின்றனர்; இதனால் வாசித்தல் என்பது ஆயுட்காலப் பழக்கமொன்றாக அவர்களிடையே அமைந்து விடுகின்றது. இதனால் வாசித்தல் மட்டுமன்றி செவிமடுத்தல், பேசுதல், எழுதுதல் என்பனவும் விருத்தியடைகின்றன.

பகிர்ந்து வாசித்தலுக்கான புத்தகங்களைத் தெரிவு செய்யும்போது, மாணவர்கள் வகுப்பறைகளில் வழமையாகப் பயன்படுத்தும் பாடநூல்களைத் தெரிவு செய்ய வேண்டியதில்லை. இச்செயற்பாட்டிற்கென நல்ல கதையம்சமுள்ள, கவர்ச்சிகரமான படங்கள் உள்ள, மாணவர்களுக்குப் பரிச்சயமான சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ள புத்தகங்களைத் தெரிவு செய்யலாம். இப்புத்தகங்கள் நகைச்சுவை, கற்பனை வளம், ஆச்சரிய உணர்வு ஆகியவற்றுடன் உணர்ச்சிகளைத் தூண்டக் கூடியனவாகவும், ஒரே அமர்வில் வாசிக்கக் கூடியனவாகவும் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

பகிர்ந்து வாசித்தலின் செயலாக்க நடவடிக்கைகள்

1.கதையில் காணப்படும் அருஞ்சொற்களை அகராதியின் துணைகொண்டு பொருளுணர்ந்து வாசிப்பர்.

2. கதையின் வரிகளை அதற்கேற்ற நிறுத்தக்குறிகளுக்கேற்ப சரியான உச்சரிப்பு, தொனி, வேகம் ஆகியவற்றுடன் வாசிப்பர்.

3. கதையை நிரல்படுத்தி நிறுத்தக்குறிகளுக்கேற்ப சரியான உச்சரிப்பு, தொனி, வேகம் ஆகியற்றுடன் வாசிப்பர்.

4. கதைத் தொடர்பான கருத்துகளைக் கலந்துரையாடுவர்

5. மதிப்பீட்டில் கொடுக்கப்படும் கதைப் பகுதியைத் தனியாளாகவும் குழு முறையிலும் வாசிப்பர்.

பகிர்ந்து வாசித்தலின் நன்மைகள்

பகிர்ந்து வாசித்தலின் வழி மாணவர்கள் அதிக நன்மைகளை அடைகின்றனர் என்றால் அது மிகையாகாது. வகுப்பறையில் மாணவர்கள் பகிர்ந்து வாசித்தல் அணுகுமுறையை மேற்கொள்வதால் அங்ஙனம் ஆசிரியர்-மாணவர், மாணவியர்-மாணவராகிய இரு தரப்பினருக்குமிடையே இருவழித் தொடர்பு வலுப்படுகின்றது. அத்தோடு, அவர்கள் குழுவாகச் சேர்ந்து இயங்குவதனால் ஒற்றுமை மேலோங்குகின்றது. கூடுதலாக, மாணவர்களிடையே பரிந்துணர்வும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை ஊடுருவ வித்திடுகின்றது. இதுவே தேசியக் கல்விக் கொள்கையில் வழங்கப்பட்டுள்ளபடி மாணவர்களது சமூகவியல் தொடர்பை மேம்படுத்த உதவுகிறது. மேலும், அவர்களின் தன்னம்பிக்கை வளர்வதற்கும் தூண்டலாக அமைகின்றது.

பகிர்ந்து வாசித்தல் அணுகுமுறையின் வரி கல்வியில் முக்கியமாக வாசிப்புத் திறனில் மாணவர்களின் அடைவு நிலையும் மேம்படுகிறது என்றால் அதில் ஐயமில்லை. மாணவர்கள் தனியாள் முறையில் வாசிப்பதைக் காட்டிலும் பகிர்ந்து வாசித்தல் அணுகுமுறையின் மூலம் வாசிப்புப் பகுதியைக் கருத்தூன்றித் துய்ப்பதனால் இங்ஙனம் அவர்களது மொழியாற்றல் வலுப்பெறுகிறது. அவர்கள் தாங்களே சுயமாக வாசித்துச் செயல்படுவதனால் கற்றல் தொகுதியை இன்னும் ஆழமாகப் புரிந்து கொள்வர்.

தொகுப்புரை

மொழி கற்றல் கற்பித்தல் திறன்களில் முக்கியத் திறனாக விளங்குவது வாசிப்புத் திறனாகும். எழுதப்படும் எழுத்துகளைக் கண்ணால் கண்டு வாயால் உச்சரித்துப் பொருளை உணர்வது வாசிப்பு எனப்படும். இப்படிப்பட்ட திறனை மேம்படுத்தும் போது ஆசிரியர்கள் பழைய அணுகுமுறையையே பயன்படுத்தாமல், மாணவர்கள் விரும்பும் வண்ணம் வாசிப்புத் திறன்களைக் கற்றுத் தரவேண்டும். தொடக்கப்பள்ளியிலேயே மாணவர்கள் வாசிக்கும் திறனைக் கைவரப் பெற்றிருக்க வேண்டும் என்பதனால், கற்றல் கற்பித்தலின் போது மாணவர்கள் அத்திறனை அடைவதில் கவனம் கொள்ள வேண்டும்.

ஒரு மொழியில் நன்முறையில் பாண்டித்துவமடைய மொழித் திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் போன்ற நான்கு கூறுகளையும் கைவரப் பெறவேண்டும். ஆகவே, கேட்பதை அடிப்படையாகக் கொண்டே குழந்தை பேசத் தொடங்குகிறது. பள்ளிக்கு வருவதற்கு முன்பே மாணவர்கள் கேட்கும், பேசும்

ஆற்றலைப் பெற்றுவிடுகிறார்கள். ஆனால், வாசிப்புத் திறனும் எழுத்துத் திறனும் அப்படியல்ல. அதைத் திட்டமிட்டுக் கற்பிக்கப்பட வேண்டிய கூறுகளாகும். அதற்கு அடித்தளமாய் விளங்குவது வாசிப்புப் பழக்கமாகும்.

பொதுவாகக் காணப்பெறும் உத்திகளையோ அல்லது அணுகுமுறைகளையோ பயன்படுத்துவதனால் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எளிதில் சலிப்புத் தட்டிவிடும். வெவ்வேறு பாணியில் நடத்தப்படும் நடவடிக்கைகளானது மாணவர்கள் ஆர்வத்தினைத் தூண்டுவது மட்டுமின்றி கற்றல் கற்பித்தலில் அவர்களது செயல்பாடுகளை மேலோங்கச் செய்யும் அதுமட்டுமின்றி, கற்றல் கற்பித்தலின் போது மாணவர்களின் நடத்தையைக் கவனமாக ஆராய்ந்த பின்னரே அவர்களுக்குத் தேவையான அல்லது சரியான முறையினைத் தேர்ந்தெடுத்து வாசிப்பினை மேம்படுத்த முடியும். இதுவே, அவர்களது மொழியாற்றலை மேம்படுத்த வெகுவாகத் துணைபுரியும்.

பரிந்துரைகள்

ஒவ்வொரு மாணவனின் முன்னேற்றத்திற்கும் அடிப்படை அமைத்து அவனை முன்னேறச் செய்வது பெற்றோர் மற்றும் ஆசிரியரின் கடமையாகும். அவ்வகையில் வீட்டில் பேசும் தாய்மொழியை அறிந்து பள்ளிக்கு வரும் மாணவனுக்கு அறிவு ஒளி ஏற்றும் பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்துள்ளது. ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பாடம் போதிக்கும் பொழுது பகிர்ந்து வாசித்தல் முறையிலான நடவடிக்கைகளைப் பல்வகைப்படுத்தி மேற்கொள்ளலாம். அவை மாணவர்களைக் கவரும் வண்ணத்தோடு மட்டும் இல்லாமல் அவர்களே சுயமாகவும் முழுமையாகவும் கற்றல் கற்பித்தலில் ஈடுபடும் வண்ணம் இருத்தலும் வேண்டும்.

அவ்வகையில், மாணவர்கள் பாடத்தினூடே கற்றுணர்ந்து வரும் கதைகள் யாவையும் ஒன்றிணைத்துப் பிரதியொன்றினை ஆக்கிக் கொள்ளலாம். இம்முயற்சியில் மாணவர் குழுவாக ஈடுபடுதல் நன்று. பின், பகிர்ந்து வாசித்தலின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக அடுத்து வரும் நாட்களில் இடம் பெறலாம்.

மேலும், படிப்படியாக மாணவரின் கற்றல் தரத்திற்கேற்ப கதைப் புத்தகங்களைத் தெரிவு செய்து அவற்றை அவ்வப்போது மாற்றிக் கொள்ளலாம். இவ்விடத்தே கதைப் புத்தகம் மாத்திரமின்றி பாடல் மற்றும் சுவாரஸ்யமான புத்தகங்களையும் கருத்தில் கொள்ளலாம். வாசிப்புப் பழக்கம் உள்ள ஒரு சமுதாயத்தினரை உருவாக்க இளம்பருவம் முதலே குழந்தைகளிடம் வாசிக்கும் பழக்கத்தை வளர்த்தல் வேண்டும்.

வாசிப்புத் திறனில் நன்மையை அனைவரும் அறிந்து செயல்பட வேண்டும். எனவே, உலகளவிலான தமிழ் சார்ந்த கல்விசார் அமைப்புகள் இந்தப் பகிர்ந்து வாசித்தல் அணுகுமுறையினைத் தமிழ்மொழி பாடத்தின் கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகளில் ஓர் அங்கமாக அமலாக்கம் செய்தால், கல்விக்குக் குறிப்பாக, மொழிக்கற்றலுக்கு அடிப்படையான வாசிப்புத் திறனை மாணவர்கள் நிறைவாக அடைவர் என்பது திண்ணம்.

மேற்பார்வை நூல்கள்

1. Applebee, A.N.(1978), The Child's concept of story. Chicago: University of Chicago Press.

2. Aram, D. (2006), Early literacy interventions: The relative roles of storybook reading, alphabetic activities, and their combination. Reading and Writing, 19,489-515.

3.Brandone, A.C., Salkind, S.J., Golinkoff, R.M.,&Hirsh-Pasek, K.(2006). Language development. In G.G. Bear & K.M. Minke (Eds.), Children's needs III: Development, Prevention, and intervention (PP.499-514). Washington, DC: National Association of School Psychologists.

4. Bus, A.,van IJzendoorn, M., & Pellegrini, A.D.(1995), Joint book reading makes for success in learning to read: A meta-analysis on intergenerational transmission of literacy. Review of Educational Research, 65,1-21.

5. Clay, M.M. (1995). Reading recovery: A guidebook for Teachers in Training. Auckland Fishers, B., & Medvic, E.F (2000). Perspectives on shared reading: Planning and practice. Portsmouth, NH: Heinemann.

6. Fountas, Irene C. and Pinnell, Gay Su. (1996). Guided Reading, Good First Teaching for All Children. Portsmouth, NH: Heinemann.

7. Mooney, M. (1990). Reading To, with, and By Children. Katonah, NY: Richard C.Owen, Publishers, Inc.

8.Weaver, C. (1994). Reading Process and Practice. Portsmouth, NH: Heinemann.

2. அகன்ற படிப்பில் வாசிப்புக் கோப்பின் பங்கு

கட்டுரையாளர்கள்: திருமதி. சுமதி சேகர், சிராங்கூன் உயர்நிலைப்பள்ளி

திருமதி. செல்வகுமாரி செல்வகணேசன், ஈசூன் டவுன் உயர்நிலைப்பள்ளி

திருமதி. ருக்மணி, பிங் யீ உயர்நிலைப்பள்ளி

முன்னுரை

ஒவ்வொரு மாணவனிடமும் அறிவுசார் சிந்தனையை உருவாக்குவதற்குப் பரந்த வாசிப்புத்திறன் மிகவும் முக்கியம். வாசிப்புத் திறன் மாணவர்களிடம் வளரும்போது அவர்கள் எதனையும் உற்றுணர்ந்து, சீர்தூக்கிப் பார்த்து, ஆராய்ந்து அறியக்கூடிய வல்லமையைப் பெறுகிறார்கள். வாசிப்புத் தொடர்பான மொழித்திறன் சார்ந்த பணிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் மாணவரின் நுண்ணாய்தல் திறன் வளர்கிறது. எனவே கற்றல் கற்பித்தலில் வாசிப்புத் திறனை வளர்ப்பது என்பது ஒவ்வொரு ஆசிரியரின் தலையாய பணியாகும். இந்தப் பணியைச் செவ்வனே செய்வதற்கும் மாணவர்களை வாழ்நாள் கற்றலுக்கு இட்டுச் செல்வதற்கும் "வாசிப்புக் கோப்பின் வழி மாணவர்களிடையே உருவாக்க முடியும் என்பதை உணர்ந்தோம். வாசிப்புச் சார்ந்த செயல்திறன்கோப்பு முறையின் அடிப்படையில் அமையும் இக்கோப்பு, மாணவர்களின் முன்னேற்றத்தை எடுத்துக்காட்டக்கூடிய கோப்பாக அமைந்தது.

மாணவர்களின் பின்னணி

சீனர், மலாய்க்காரர், இந்தியர், ஐரோப்பியர் என நான்கின மக்கள் வாழும் நாடு சிங்கப்பூர். இச்சமூகச் சூழலில் ஆங்கிலப் புழக்கத்தின் தாக்கம் அதிகம். குடும்பங்களிலும் ஆங்கிலமே ஆட்டிப் படைக்கின்றது. இங்கு மாணவர்கள் இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்கிறார்கள். இந்நிலையில் தமிழில் வாசிக்கும்போது அதிகத் தடுமாற்றமும் ஆர்வமில்லாத நிலையும் உள்ளது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. மாணவரிடமுள்ள குறைவான சொற்களஞ்சியப் பெருக்கம், தொடர்ந்து வாசிப்பின் மீது ஈடுபடமுடியாத அளவிற்குக் கடினத்தன்மை மிக்க பனுவல், மாணவரின் அனுபவத்திற்கு அப்பாற்பட்ட பாடப்பொருள் போன்ற காரணங்களாலும் வாசிப்பின் மீது வெறுப்பும் மந்தநிலையும், ஆர்வமின்மையும் ஏற்படுகின்றன.

பாடக் கலைத்திட்டம்

தமிழ்மொழிப்பாடக் கலைத்திட்டம் சிங்கப்பூர் மாணவர்களிடையே தமிழை வாழும் மொழியாக ஆக்குவதையே முதன்மை இலக்காகக் கொண்டுள்ளது. தமிழ்மொழி கற்றல் என்பது மாணவர்களுக்கு ஒரு சுகமான அனுபவமாக அமைய வேண்டும். எனவே, அவர்களுக்குத் தமிழ்மொழியின்பால் ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும் கற்பித்தல்முறை வலியுறுத்தப்படுகிறது. மாணவர்களின் தேவைகளையும் திறன்களையும் அறிந்து பல்வேறுபட்ட பயன்முனைப்பு கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் தமிழ்மொழி கற்றலில் ஆர்வமும் ஈடுபாடும் காட்டுவர். பள்ளியிலும் பள்ளி வாழ்க்கைக்கு அப்பாலும் தமிழ்மொழியின் புழக்கம் மாணவர்களிடையே நிலைத்திருக்க உதவும் வகையில், தமிழ்மொழி கற்றல் நீடித்த அனுபவமாக அமைதல் அவசியம்.

இந்நிலையில் ஆசிரியர்கள் மொழித்திறன்களில் ஒன்றான வாசிப்பில் மாணவர்களுக்கு ஆர்வத்தைத் தூண்டவும் படித்த பனுவலைப் பற்றிய மாணவரின் புரிந்துணர்வை ஆழப்படுத்தவும் மாணவரின் வாசிப்புப் பயணத்தை ஒரு பயன்முனைப்பு மிகுந்த அனுபவமாக மாற்றி அமைக்கவும் அவர்களின் படிநிலை வளர்ச்சியை ஆதாரப்பூர்வமாக ஆவணப்படுத்தவும் வாசிப்புக் கோப்பு முறையை அறிமுகப்படுத்தினர்; இதனையொட்டிக் கற்பித்தல் தொடர்பான பல அணுகுமுறைகள், உத்திகள், வகுப்பறை நடவடிக்கைகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டன.

வாசிப்புக் கோப்பு முறை வடிவமைப்பும் (Reading portfolio) பொறுப்பேற்றலும்

மாணவர்களின் செயற்பாடுகளை ஆவணப்படுத்தும் அவசியத்தை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு விளக்கிக் கூறிய பின்னர் அவர்கள் தங்களுக்கெனக் கோப்பு ஒன்றை வாங்கித் தங்களுக்குப் பிடித்தமான முறையில் அலங்கரித்தனர். கீழ்க்காணும் உள்ளடக்கத்தை வாசிப்புக் கோப்பு கொண்டிருந்தது. மாணவர்களே அவரவர்களின் வாசிப்புக் கோப்புக்குப் பொறுப்பேற்றனர்.

- என்னைப் பற்றி
- என் படைப்புகள்/கற்றல் சான்றுகள்
- எண்ணப் பிரதிபலிப்பு
- ஆசிரியர் கருத்து
- பெற்றோர் கருத்து
- கொண்டாட்டம் அங்கீகரித்தல்

என்னும் நிலைகளில் வாசிப்புக் கோப்பின் பொருளடக்கம் அமைந்தது. என்னைப்பற்றி என்ற தலைப்பில் மாணவர்கள் தங்களைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் இங்கே குறிப்பிட்டு இருந்தனர். தங்களுக்குப் பிடித்த கவிதைகள், பாடல்கள், எழுத்தாளர்கள், எனப் பலவற்றைப் பற்றி எழுதியிருந்தனர். தங்களின் புகைப்படங்களையும் இங்கே இணைத்து வைத்தனர்.

என் படைப்புகள் என்ற தலைப்பில் மாணவர்கள் தாங்கள் படித்த செய்திகள், தங்களின் படைப்புகள் (கட்டுரைகள், மின்னஞ்சல்கள், கதாபாத்திரத் திறனாய்வு, கவிதைகள், புகைப்படங்கள்) என அனைத்தையும் இங்கே பதிவு செய்தனர். எண்ணப் பிரதிபலிப்புகள் என்னும் தலைப்பில் மாணவர்கள் தங்கள் படைப்புகள் குறித்த எண்ணங்களையும், கருத்துகளையும் எழுதிக் கோப்புகளில் வைத்தனர். அதோடு மட்டுமில்லாமல் ஆசிரியர்கள், தன் சக மாணவர்கள் தங்களின் குறை நிறைகளை அறிந்து கொள்வதற்கும் தங்களை மேம்படுத்திக் கொள்வதற்கும் சிறந்த வாய்ப்பாக அமைந்தது.

கொண்டாட்டம் அங்கீகரித்தல் என்னும் தலைப்பின் கீழ் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் நிலையிலும் ஆசிரியர்கள் மாணவர்களின் கோப்புகளைப் பார்த்து ஊக்கமளித்தனர். சான்றிதழ்கள் வடிவிலும் எழுத்து வடிவிலும் ஒட்டு வில்லைகள் வடிவிலும் மாணவர்கள் ஊக்கமூட்டப்பட்டனர். அதுபோலவே வீட்டில் பெற்றோர்கள் பிள்ளைகளின் செயற்பாடுகளைக் கண்ணோட்டமிட்டு அவர்களின் முன்னேற்றத்திற்கு ஊக்கமூட்டினர். அவர்களின் வழிகாட்டுதலும் உதவியும் அதிகமிருந்தது. மாணவர்கள் அவர்களின் படைப்புகளைப் பார்த்துப் பெருமிதம் அடைந்தனர். அவர்களின் உழைப்பை அங்கீகரிக்கும் வகையிலும் ஆசிரியரால் சான்றிதழ் வழங்கப்பட்டது. (காண்க பின்னிணைப்பு 1) அதனையும் மாணவர்கள் வாசிப்புக் கோப்பில் வைத்தனர். ஆசிரியரின் அங்கீகாரத்தைப் பெறும்போதும் மாணவர்களின் ஊக்கநிலை அதிகரித்ததையும் காண முடிந்தது.

வாசிப்புக் கோப்புக்கான தகுதிநிலை விளக்கக் குறிப்பு

வாசிப்புக் கோப்பு அமைப்பு முறை, பொருளடக்கம் என்னும் இருவகை அளவுகோல்களை மையமாக வைத்து அளவிடப்படும். மாணவர்கள் பல்வேறு மூலங்களிலிருந்து எவ்வாறு தகவல்களைத் திரட்டியுள்ளனர் என்பதை அறியக் கோப்பு பயன்படுத்தப்படும். அதோடு மட்டுமல்லாமல் அவர்கள் எப்படி முறையாகப் படங்கள், விளக்கக்குறிப்புகள், படைப்புகள் போன்றவற்றை ஓர் ஒழுங்குமுறையில் தம் கோப்பில் வைத்துள்ளனர் என்பதை ஆசிரியர் கவனிப்பார்; தவணைக்கு ஒரு முறை மதிப்பீடு செய்வார். (காண்க பின்னைப்பு 2) ஆயினும், அகன்ற வாசிப்பில் வாசிப்புக் கோப்பு முறைக்கு இடமளிக்கும் போதும், மாணவர்களை அதில் ஈடுபடுத்தும்போதும் எதிர்காலத்தில் மாணவர்களிடம் வாசிப்பில் ஆர்வத்தினை ஏற்படுத்த முடியும். சிங்கப்பூர் தமிழ்மொழிப்

பாடத்திட்டம் கற்பித்தல் மறு ஆய்வுக்குழு உயர்நிலை நான்கு இறுதியில் மாணவர்களின் கற்றல் அடைவுநிலைகளைப் பரிந்துரைத்துள்ளன. அவற்றுள் சில:

• வயதிற்கேற்ற சிறுகதைகளையும் செய்தித்தாள், சஞ்சிகைகளையும் உள்ளூர்ச் செய்திகளையும் படித்தறிதல்.

• சூழலுக்கேற்ப பேச்சுத் தமிழையும், எழுத்துத் தமிழையும் பயன்படுத்துதல்

அகன்ற வாசிப்பில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் வழி மேற்கண்ட கற்றல் அடைவுகளை மாணவர்களிடம் காணமுடியும் என்பது சாத்தியமாகிறது. மேலும் 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களுள் ஒன்றான படைப்பாக்கத்திறன் புத்தாக்கத்திறன், ஆக்கபூர்வ கருத்துப் பரிமாற்றத்திறன் போன்றவை மாணவர்களிடம் வளர்க்கப்படுகின்றன.

செயலாய்வு

அகன்ற வாசிப்பில் மாணவர்கள் ஈடுபடும்போது வாசிப்புக் கோப்பின் பங்கு எத்தகைய பயன்களை மாணவர்களுக்கு அளிக்கிறது என்பதைக் கண்டறிவதற்கு நாங்கள் நான்கு பள்ளிகளிலுள்ள ஆசிரியர்கள் இணைந்து ஒரு செயலாய்வை மேற்கொண்டோம். இச்செயலாய்வில் உயர்நிலை ஒன்று மற்றும் உயர்நிலை மூன்று மாணவர்கள் உட்படுத்தப்பட்டனர்.

செயலாய்வின் வடிவமைப்பும் செயல்முறையும்

இச்செயலாய்வில் அகன்ற வாசிப்பு மூன்று நிலைகளில் பாடவேளையின் போது மேற்கொள்ளப்பட்டது. முதல் நிலையில் ஆசிரியர் உதவி இல்லாமலும், மாணவர்கள் சுயமாக அகன்ற வாசிப்பை மேற்கொண்டனர்.

முதல் கட்ட வாசிப்புப் பணி (Task 1)

முதல் கட்ட வாசிப்புப் பணியின் போது பாடநூலில் உள்ள ஒரு பாடத்தைத் தேர்ந்தெடுத்து அதன் தொடர்பாக அகன்ற வாசிப்பு நடைபெற்றது. மாணவர்கள் அதன் தொடர்பான தங்களின் புரிந்துணர்வை வெளிப்படுத்தினர். இதைத் தொடர்ந்து ஆசிரியர் தனது கருத்துக்களைத் தெரிவித்து மதிப்பீடு செய்தார்.

இரண்டாம் கட்ட வாசிப்புப் பணி (Task 2)

இரண்டாம் கட்ட நிலையில் ஆசிரியர்களின் வழிகாட்டுதல் அதிகமிருந்தது. மாணவர்கள் வாசிப்பதற்கு முன்பாகவே ஆதார நடவடிக்கைகள் (Scafolding) அமைப்பில் ஆசிரியர் முறையான மதிப்பீட்டு முறைகளையும் தகவல்களைத் தேடுவதற்கான உதவிக் குறிப்புகளையும் அளித்தார். அதோடு மாணவர்களுக்கு எப்படி மதிப்பீடு செய்வது என்பது குறித்த விளக்கக் குறிப்புகளும், பயிற்சியும் மேம்பாட்டுக்கான ஆலோசனைகளையும் ஆசிரியர் வழங்கினார். இக்கட்டப்பணியில் புளூம்ஸ் (Blooms) கோட்பாட்டின் அடிப்படையில் மாணவர்கள், நினைவு கூர்தல், புரிந்துணர்வு, பயன்படுத்துதல், பகுத்தாய்தல், மதிப்பிடுதல், உருவாக்குதல் போன்ற திறன்களை வெளிப்படுத்தக்கூடிய நிலையில் பல்வேறு படைப்புகளை வகுப்பில் படைத்தனர்.

மூன்றாம் கட்ட வாசிப்புப் பணி (Task 3)

இங்கு எந்தவிதமான ஆசிரியரின் வழிகாட்டுதலும் இல்லாமல் மாணவர்கள் சுயமாகத் தகவல்களைத் தேடவும் அவற்றைப் பகிர்ந்து கொள்ளவும் பின்னர் பிற மாணவர்களின் படைப்பை மதிப்பீடு செய்யவும் முனைந்தனர். ஆசிரியரின் வழிகாட்டுதல் ஓரளவே இருந்தது. ஆனால், மாணவர்களின் பங்கு இங்கு அதிகம்.



செயலாய்வின் முடிவுகள் -உயர்நிலை 1



	தொடர்புபடுத்துதல்	புரிந்துணர்வு	மொழித்திறன்கள்	படைப்பாற்றல்
முன்னிலை	58	59.3	61	54.6
பின்னிலை	68	68.6	72	66

உயர் நிலை 3

ஒட்டுமொத்தமாக செயலாய்வின் முடிவினைப் பார்க்கும்போது உயர்நிலை ஒன்று மற்றும் மூன்றாம் நிலை மாணவர்களின் மொழித்திறனிலும் படைப்பாற்றலிலும் முன்னேற்றத்தைக் காண முடிந்தது. இச்செயலாய்வு அவர்களுக்கு வாசிப்பில் ஏற்பட்டிருக்கும் ஆர்வத்தைத் தெளிவாகக் காட்டியது.

மாணவர்களின் படைப்புகள் அனைத்தும் வாசிப்புக் கோப்பில் ஆவணப்படுத்தி வைக்கப்பட்டன. வகுப்பறையில் மாணவர்களுக்குப் பல்வேறு வளமூட்டப்பட்ட நடவடிக்கைகளும் ஆசிரியரின் முறையான திட்டமிடப்பட்ட கற்பித்தல் நடவடிக்கைகளும் பாடப்பொருளுக்கு அப்பாலும் பல்வேறு வளங்களைத் தேட உதவின. எதிர்காலத்தில் எத்தகைய சூழலிலும் அவர்களை விருப்பத்துடன் பற்பல பனுவல்களைப் படிக்கத்தூண்டும் நிலைக்குக் கொண்டு செல்வதற்குத் துணைபுரியும் வண்ணம் மாணவர்களின் வாசிப்புக் கோப்புகள் அமைந்தன.

பரிந்துரைகள்

மாணவர்களை வாசிப்பில் ஈடுபடுத்தப் பல்வேறு தூண்டல் நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு அவர்களது தரத்திற்கு ஏற்ற அவர்களின் அனுபவத்திற்கு உட்பட்ட பனுவல்களைத் தேர்ந்தெடுத்தல் அவசியம். மாணவர்களின் முன்னேற்றத்தைக் காட்டவும் கடினமான வாசிப்புப் பனுவல்களை வாசிப்பதற்கு ஊக்குவிக்கவும் சிறப்புப் புள்ளிகள் வழங்கி அத்தகைய மாணவர்களைச் சிறப்பிக்கலாம். வழக்கமான முறையில் பனுவல் அமைவதைத் தவிர்க்க வேண்டும். அகன்ற வாசிப்பு என்பது தரவுகள் சேகரிக்க உதவும் ஊடகமாக இல்லாமல் களிப்பூட்டும் ஒன்றாக அமைவது அவசியமாகும்.

முடிவுரை

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்” என்றார் நம் மகாகவி பாரதியார். ஆம்! அவரைப்போலவே தமிழ் ஆசிரியர்கள், தமிழ்ப் பற்றாளர்கள் இருப்பதால் தான் தமிழும் வாழ்ந்து வளர்ந்து இன்று செம்மொழியாக உயர்ந்து நிற்கிறது. இவ்வுயர்வு என்றும் நிலைத்திருக்க வேண்டுமானால் மாணவர்கள் நம் தாய்மொழியின் மேல் ஆர்வம் கொள்ள வேண்டும். மொழித்திறன்களில் ஒன்றான வாசிப்பிலும் ஆர்வம் கொள்ள வேண்டும். இவ்வார்வத்தினைத் தூண்ட வாசிப்புக் கோப்புமுறையை மாணவர்கள் பயன்படுத்துதல் வேண்டும்.

சென்ற ஆண்டுச் சிங்கப்பூர் கல்வியமைச்சின் ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சியில் நாங்கள் கலந்து கொண்டு அகன்ற வாசிப்பில் வாசிப்புக் கோப்பின் பங்கு பற்றி அறிந்துகொண்டோம். பின்னர் அதனை எங்கள் மாணவர்களிடம் கொண்டு சென்று பயன் கண்டோம். இதன்வழிப் பெற்ற எங்களின் அனுபவங்களை நாங்கள் மற்ற ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொண்டோம். நாங்கள் மாணவர்களிடம் கண்ட முன்னேற்றமே இந்தக் கட்டுரையைப் பகிர்தலின் நோக்கம் என்று கூறினால் அது மிகையாகாது.

நன்றி!

பின்னிணைப்பு 1



பின்னிணைப்பு 2

வாசிப்புக் கோப்பிற்கான மதிப்பீட்டுப் படிவம்

மதிப்பீட்டு அளவை/ மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும் கூறுகள்	எதிர்பார்ப்புகளை விஞ்சியுள்ளன	எதிர்பார்ப்புகள் முழுமையாக நிறைவேறியுள்ளன	எதிர்பார்ப்புகள் ஓரளவு பூர்த்தியாகியுள்ளன
அமைப்பு முறை (10மதிப்பெண்கள்)	1. பற்பல மூலங்களிலிருந்து தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. அவை அனைத்தும் தலைப்புகளுக்கு, அவற்றுக்குச் சிறப்புச் சேர்க்கும் வகையிலும் அமைந்துள்ளன. 2. திட்டமிடலும் அவற்றைச் செயற்படுத்துவதிலும் உள்ள ஒழுங்குமுறை எதிர்பார்ப்புக்கும் அதிகமாகவே உள்ளன.	1. ஒரு சில மூலங்களிலிருந்து தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. அவற்றுள் பல தகவல்கள் தலைப்புக்குப் பொருத்தமாக உள்ளன. 2. திட்டமிடலும் அவற்றைச் செயல்படுத்துவதிலும் உள்ள ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளை எட்டியுள்ளன.	1. ஓரிரு மூலங்களிலிருந்தே தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. அவற்றிலும் ஒரு சில தகவல்களே தலைப்புக்கேற்ப பொருத்தமானவையாக உள்ளன. 2. திட்டமிடலும் அவற்றைச் செயல்படுத்துவதிலும் உள்ள ஒழுங்குமுறை ஓரளவே வெளிப்பட்டுள்ளன.
உள்ளடக்கம் (20மதிப்பெண்கள்)	கருத்துகளும் படங்களும் தலைப்பிற்கு வலுவூட்டும் வகையில் அமைந்துள்ளன.	கருத்துகளும் படங்களும் தலைப்பிற்கு ஓரளவு வலுவூட்டும் வகையில் அமைந்துள்ளன.	பெரும்பாலான கருத்துகளும் படங்களும் தலைப்பிற்குப் பொருத்தமாக அமையவில்லை.

3. இருவழித் தொடர்பு மின்னூல் (ibook) வாசிப்பிலும் நூல் வாசிப்பிலும் மாணவர்கள் கண்ட அனுபவம்

கட்டுரையாளர்கள்:

திருமதி. **பிரேமா இராமலிங்கம்,** வழிகாட்டு ஆசிரியர்;
சங்காட் சாங்கி உயர்நிலைப் பள்ளி, சிங்கப்பூர்

திரு. **சம்பந்தம் மோகன்,** மூத்த ஆசிரியர்: கிரஸண்ட் பெண்கள் பள்ளி, சிங்கப்பூர்.

செயலாய்வின் சுருக்கம்

"மனித மனம் மேற்கொள்ளும் மிகப் பெரிய சுய முயற்சியே வாசிப்பு. அது சிறு வயதிலிருந்தே மேற்கொள்ளப்பட வேண்டும்" என்று 'ஜோன் ஸ்டேயின்பெக்' (John Steinbeck, 1984) என்னும் கல்வியாளர் வாசிப்பின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். படித்தல்திறன் நம் மாணவரிடையே வளர்க்கப்பட வேண்டிய மிக முக்கியமான ஒரு மொழித்திறனாகும். அத்திறனை மாணவர்களிடம் வளர்க்கும்போது, ஆசிரியர்கள் முறையான கற்பித்தல் அணுகுமுறைகளையும் உத்திகளையும் பயன்படுத்திக் கற்பிப்பது அவசியமாகும். அப்போதுதான், மாணவர் படிக்கும்போது, பனுவலின் பொருளை நன்கு புரிந்துகொள்வதோடு பயன்பெறவும் முடியும். எனவே, படித்தலில் ஆர்வத்தையும் படித்தல் பழக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு 'மின்னூல்' துணை நிற்குமா? என்று சிந்தித்ததன் வெளிப்பாடே இச்செயலாய்வு.

இச்செயலாய்வில் உயர்தமிழ், விரைவுநிலை, வழக்கநிலை (ஏட்டுக்கல்வி) ஆகிய பிரிவுகளில் பயிலும் 38 மாணவர்கள் கலந்துகொண்டனர். அனைவருமே உயர்நிலை இரண்டாம் வகுப்பில் பயிலும் 14 வயது நிரம்பிய மாணவர்கள். இச்செயலாய்வு 10 வாரங்களுக்குத் தொடர்ச்சியாக நடைபெற்றது. முதல் வாரத்தில் வினாநிரல் வழி மாணவர்களின் வாசிப்புச் சார்ந்த பின்புலம் கண்டறியப்பட்டது. அதனைத் தொடர்ந்து இடையீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இறுதியாக, அச்சுவடிவத்திலுள்ள நூல் படிப்பதும் இருவழித் தொடர்பு மின்னூல் (Interactive Digital Book) படிப்பதும் தொடர்பான கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. அனைத்து நடவடிக்கைகளும் மாணவர்களின் சிந்தனையாற்றலைத் தூண்டிவிட்டு, அவர்களின் சொல்வளத்தைப் பெருக்கப் பெரிதும் உதவின. இந்நடவடிக்கைகள் அனைத்திலும் மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர். இருவழித் தொடர்பு மின்னூல் வாசிப்பு 88.8% மாணவர்களிடையே வாசிக்கும் ஆர்வம் கூடியிருப்பதைக் காட்டியது. இந்த ஆர்வநிலையை மாணவர்கள் எவ்வாறு அடைந்தனர் என்பதை இச்செயலாய்வு விளக்குகிறது.

அறிமுகம்

நாம் நமது எண்ணங்களைப் பேச்சு மூலமாகவும் எழுத்து மூலமாகவும் வெளியிடுவதற்குத் தாய்மொழி சிறந்த கருவியாகப் பயன்படுகின்றது என்று அறுதியிட்டுக் கூறுகின்றார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் (1957). நம்

நாட்டில் தாய்மொழி இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. ஆங்கிலம் முதல் மொழியாகக் கற்பிக்கப்படுவதாலும் தாய்மொழியைத் தவிர்த்து அனைத்துப் பாடங்களுக்கும் ஆங்கிலமே கற்றல் கற்பித்தல் மொழியாக இருப்பதாலும் மாணவர்கள் ஆங்கில மொழிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனர் எனலாம். இதனால், தமிழைத் தாய்மொழியாகக் கற்கும் மாணவர்கள், பேசும்போதும் எழுதும்போதும் ஆங்கிலமொழி வாயிலாகச் சிந்தித்துத் தமிழ் பேசுவதைக் காணமுடிகிறது. 'ஆங்கிலம் பேசும் குடும்பங்களிலிருந்து வரும் மாணவர்களில் சராசரிக்கு 45 முதல் 55 சதவீதத்தினர் தமிழ் கடினமான பாடம் என்றே கருதுகின்றனர் (தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல் முறை மறு ஆய்வுக் குழு அறிக்கை 2005, பக்கம் 29) இத்தகைய மாணவர்களிடையே தமிழ்மொழியில் படித்தல் பழக்கம் குறைந்து காணப்படுகிறது. அவர்கள் விரும்பிப் படிக்கும் வகையிலான கதை நூல்கள் அதிகம் கிடைக்காதது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். 'ஆர்வத்தைத் தூண்டக்கூடிய நூல்களும் வாசிப்பு வள ஆதாரங்களும் போதுமான அளவு இல்லாமையே மாணவர்கள் தமிழ் கற்கச் சிரமப்படுவதற்கான முக்கியமான காரணங்களில் ஒன்று' (தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல் முறை மறு ஆய்வுக்குழு அறிக்கை 2005, பக்கம் 8). நடைமுறையில் மாணவர்களிடம் தமிழில் படித்தல் பழக்கத்தை ஏற்படுத்துவது ஆசிரியர்களுக்குச் சவால்மிக்கதாக உள்ளது எனலாம். எனவே, மாணவர்களிடம் படித்தலில் ஆர்வத்தையும் வாசிப்புப் பழக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு 'இருவழித் தொடர்பு மின்னூல்' துணை நிற்குமா? எனச் சிந்தித்து அதற்கு விடை காண விளைந்ததன் வெளிப்பாடே இந்தச் செயலாய்வு.

படித்தல் என்னும் கொள்திறன் மூலம் மாணவர்களின் பொது அறிவு வளர்வதோடு பேசுதல், எழுதுதல் திறன்களும் மேம்படும். படித்தலின் முக்கிய நோக்கங்களுள் சில: **கருத்துணர்தல், இலக்கிய இன்பம் நுகர்தல், கற்பனை ஆற்றலை வளர்த்தல், மொழித்திறன் மேம்பாடு அடைதல் ஆகும்.** இவற்றை மாணவர்கள் கை வரப் பெறுவதற்கு முதலில் அவர்களிடம் படித்தலில் ஆர்வத்தையும் வாசிப்புப் பழக்கத்தையும் வளர்க்க வேண்டும்.

செயலாய்வின் நோக்கம்

மொழி கற்றலின் அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றில் கேட்டல், படித்தல் ஆகிய கொள்திறன்களும் பேசுதல், எழுதுதல் ஆகிய ஆக்கத்திறன்களும் பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத்தில் முக்கிய இடம் பெறுகின்றன. அந்த வகையில் கற்றலை மேம்படுத்தி, அதனை ஒரு சுகமான அனுபவமாக்கித் தமிழ் கற்றலைச் சுவையாக்க இன்றைய தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் உதவுகிறது. இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எதைக் கற்றுக் கொடுப்பது, எப்படிக் கற்றுக் கொடுப்பது என்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே!"

என்னும் நன்னூல் வரிகளுக்கேற்ப, மாறிவரும் இன்றைய மாணவர்களின் கற்றல் பின்புலத்திற்கேற்பப் புதிய உத்திகளைப் பயன்படுத்தி, அவர்களுக்குக் கற்பித்தல் இன்றியமையாததாகிறது. கற்பித்தலில் கணினியின் பங்களிப்பு அதிக அளவில் வளர்ச்சி கண்டுள்ளது. மாற்றங்கள் நிகழ்வது வளர்ச்சி நிலையில் சாத்தியமே என்பதை நம்மால் உணரமுடிகிறது. 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் திறன் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளது. தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதால் மாணவர்களுக்குகிடையே சுயகற்றலும் உடனிணைந்து கற்றலும் ஊக்குவிக்கப்படுகின்றன. எனவே, மாணவர்களிடம் படித்தலில் ஆர்வத்தைத் தூண்டி வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்த 'இருவழித் தொடர்பு மின்னூல்' வாசிப்பு இச்செயலாய்வில் சோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இக்கால மாணவர்களிடையே மின்னிலக்கக் கருவிகளின் பயன்பாடு அதிகரித்திருப்பது கண்கூடு. கையடக்கத் தொலைபேசி, 'ஐ பேட்', பல விதமான இருவழித் தகவல் தொடர்புத் தொழில்நுட்பக் கருவிகள் போன்றவை குறிப்பிடத்தக்கவை. இவற்றைத் தவிர, பலவிதமான இணைய இயங்குதளங்களும் இருக்கின்றன. மாணவர்கள் இவற்றை அதிகமாக ஆங்கில மொழியில்தான் பயன்படுத்துகின்றனர். ஏனெனில், அதிகமான வசதிகளும் சேவைகளும் ஆங்கிலத்தில்தான் வழங்கப்படுகின்றன; காணப்படுகின்றன. இதேபோன்று தமிழ்மொழியிலும் இருந்தால் நன்றாக இருக்கும் என்பது எங்கள் தமிழ் மாணவர்களின் எதிர்பார்ப்பாகும். மேலும், அச்சு வடிவத்தில் உள்ளவற்றைப் படித்துக் காட்சிப்படுத்தவும் கற்பனை செய்யவும் இயலாத மாணவர்களுக்கு அச்சு வடிவத்தில் இல்லாத 'மின்னூல்' புதிய கற்றல் அனுபவத்தை ஏற்படுத்தும் என்பது எங்கள் நம்பிக்கை.

மின்னூலில் ஒளிக்காட்சிகள், அசைவூட்டப்பட்ட படங்கள் (Animation), ஒலி ஒளி போன்ற பல்லூடகங்களையும் சேர்த்துக் கொள்ளத் தொழில்நுட்பம் வாய்ப்பளிக்கின்றது. இத்தொழில் நுட்ப வசதிகள் மாணவர்களை ஈர்ப்பதோடு அவர்களின் ஈடுபாட்டையும் கூட்டுகிறது. இத்தகைய பல்லூடகப் பயன்பாட்டுக் கருவியைப் பயன்படுத்திக் கற்பிக்கும் முறையால் புலன்களின் வாயிலாகக் கேட்டல், பார்த்தல், படித்தல்,

உணர்ந்துகொள்ளல் முதலிய செயற்பாடுகள் நிகழ்கின்றன. இத்தகைய ஊடகங்களின் வாயிலாகப் பெறும் தகவல்கள் மாணவர்களுக்குப் பாடத்தின் முழுமையைத் தருவதோடு கற்றலை வளப்படுத்தவும் பெரிதும் உதவுகின்றன.

மின்னூலில் இணைக்கப்படும் மொழி விளையாட்டுகள், இருவழிப் பரிமாற்றப் புதிர்கள், மொழித் தொடர்பான பிற நடவடிக்கைகள் மாணவர்களின் கற்றலுக்குத் துணைபுரிகின்றன. சிங்கப்பூர் கல்வி அமைச்சு மாணவர்களுக்குத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைக் கற்பித்தல் கருவியாகக் கொண்டு தமிழ் கற்பிக்கும் பல புத்தாக்க முறைகளைப் பரிந்துரைத்துள்ளது. 'மொழி கற்றலில் மாணவர்களின் ஆர்வத்தைத் தக்கவைக்கவும் பயன்முனைப்புமிக்க முறையில் கற்றல் கற்பித்தல் நிகழவும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட வேண்டும்' (2011 தமிழ்மொழிப் பாடத்திட்டம், உயர்நிலை: பக்கம் 31). தகவல்தொடர்புத் தொழில்நுட்பத்தைத் தமிழ்ப்பாடங்களோடு பொருத்தமாக இணைத்துக் கற்பித்தல் (ICT Pedagogy) தமிழ்மொழி கற்றலுக்கு நிரம்பப் பங்களிக்கிறது.

தகவல்தொடர்புத் தொழில்நுட்பச் சாதனங்களைப் பயன்படுத்துவதால் பள்ளிக்கு அப்பாலும் ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் கருத்துப் பரிமாற்றம் நிகழும் வாய்ப்பு அதிகமாகிறது. கலந்துரையாடல், சரியான படத்தொகுப்பைத் தேர்ந்தெடுத்து நிரப்புதல், குறுக்கெழுத்துப் போட்டிகள், புதிர்க் கேள்விகள் போன்ற நடிவடிக்கைகளை மின்னூலில் இணைத்து இருவழித் தொடர்புக்கான வசதிகளையும் வாய்ப்புகளையும் வழங்க இயலும். மாணவர்கள் மின்னூலைப் படித்து இருவழித் தொடர்பு நடவடிக்கைகளில் ஈடுபடும்போது அவர்களின் சுயகற்றல் ஊக்குவிக்கப்படுகிறது. படித்தல் பழக்கத்தை அதிகரிக்கும் பொருத்தமான இருவழித் தொடர்பு மின்னூல் நடவடிக்கைகளின் வழி மாணவர்களிடம் படித்தலில் எந்த அளவுக்கு ஆர்வத்தைத் தூண்ட முடியும் என்பதைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டு இச்செயலாய்வு அமைகிறது.

பின்னணி

"வாசிக்கும் பழக்கம் கைவரப்பெற வேண்டும் என்றால் வாசிக்க வேண்டும் என்ற சிந்தனை பிறக்க வேண்டும்' என்று அறிஞர் சர் அடம்ஸ் (Sir Adams, 1994) கூறுவதுபோல, படித்தல் என்பது இயல்பாக மாணவர்களிடையே வளர்க்கப்படவேண்டிய ஒன்றாகும். பிழையற எழுதவும், தங்களின் கருத்துகளைச் சுவைபடத் தெரிவிக்கவும், மேற்கோள்களைச் சுட்டி வருணிக்கவும், கற்பனை நயத்துடன் எழுதவும் கூடிய ஆற்றலைப் பெற மாணவர்கள் அதிகம் வாசிக்க வேண்டும். 'நூல் அளவேயாகுமாம் நுண்ணறிவு' என்பதற்கேற்ப நூல் படிப்பதன் மூலம் மாணவர்கள் மொழிவளம் பெறச் சாத்தியமுண்டு.

எங்கள் மாணவர்களில் பலர் வகுப்பறைக்கு அப்பால் பாடநூல் அல்லாத பிற நூல்களைப் படிப்பதில் விருப்பமின்றி உள்ளனர். இவ்வாறு படித்தலில் ஆர்வம் இல்லாத மாணவர்களுக்குப் படித்தலை நேசிக்கவும் படித்தல் பழக்கத்தை வழக்கமாக்கிக் கொள்ளவும் செய்வது எங்களுக்குச் சவால் மிக்க பணியாக விளங்குகிறது. மாணவர்கள் தமிழில் கதைப் புத்தகங்கள், நாளிதழ்கள், சஞ்சிகைகள் போன்றவற்றைப் படிக்கத் தவறுவதால் சொல்வளம் குறைந்து அவர்கள் பேசுதல், எழுதுதல் ஆகிய ஆக்கத்திறன்களை வெளிப்படுத்தச் சிரமப்படுகின்றனர் என்பதை நாங்கள் உணர்ந்தோம். "கருத்துணரும் திறன் கைவரப் பெற வேண்டுமானால் குழந்தைகளின் சொற்களஞ்சியம் பெருக வேண்டும். அது வாசிப்பதன் மூலமாகவே நடைபெறும்'' (சுப்புரெட்டியார், ந., 2003). பள்ளிப்பாடப் புத்தகங்களுக்கு அப்பாலும் தமிழில் படிக்கும் பழக்கத்தை மாணவர்களிடம் வளர்த்திடவும் அவர்கள் தத்தம் விருப்பத்திற்கு ஏற்றவற்றைத் தேர்ந்தெடுத்துப் படித்திடவும் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். எங்கள் தமிழ் மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்தைக் கையாளும் திறன் பெற்றவர்களாக இருப்பதால் தமிழ் கற்றலில் இருவழிக் கருத்துப் பரிமாற்றத்தை இணைத்து வழங்குதல் அவசியமாகிறது. அதன் பயனாய் உருவானதே 'இருவழித் தொடர்பு மின்னூல்' ஆகும்.

"வாசித்தல் வாய்க்குள் படித்தலாகவும், கருத்துணர்தலுக்கு முக்கியத்துவம் அளிப்பதாகவும் இருக்கும்போது, படிக்கும் பகுதியிலுள்ள பொருளைத் தேடுவதற்கான நடவடிக்கைகள் நிறைய இடம்பெறுகின்றன. இதனால், படிப்பவருக்கும் பகுதிக்கும் இடையே இருவழித் தொடர்பு ஏற்படுகிறது'' (கோவிந்தசாமி. நா., 1983 எனவே, மாணவர்கள் நடவடிக்கைகளில் ஈடுபடும்போது, அவர்களே பகுதிகளில் இடம்பெறும் கடினமான சொற்களுக்கான பொருளை ஊகித்து உணர வாய்ப்பு ஏற்படுகிறது. மேலும், 'கருத்துப்பரிமாற்றத்தைத் தகவல்தொடர்புத் தொழில்நுட்ப வசதிகளின் மூலம் மொழி, கட்புலன், செவிப்புலன், அசைவு, இடப்பரப்பு ஆகிய ஐந்து பாங்குகளின் வாயிலாகத் தனித்த நிலையிலும் ஒருங்கிணைத்துப் பன்முனைப்பங்கு நிலையிலும் வெளிப்படுத்த முடியும்' (2011 தமிழ்மொழிப் பாடத்திட்டம், உயர்நிலை: பக்கம் 102-103.

சிக்கலைக் கண்டறிந்த விதம்

எங்கள் மாணவர்கள் பாடநூல்களுக்கு அப்பால் தமிழ் நூல்களை விரும்பிப் படிப்பது குறைந்துள்ளது. அவர்கள் எழுதும் கட்டுரைகளிலும் இதர எழுத்துப் படைப்புகளிலும் பயன்படுத்திய சொற்களையே மீண்டும் மீண்டும் பயன்படுத்தி வருகிறார்கள். இதற்கான காரணங்கள் யாவை என்பதைக் கண்டறியவும் மாணவர்களிடையே படித்தல் ஆர்வம் ஏன் குறைந்திருக்கிறது, படிக்கும் பழக்கம் ஏன் சில மாணவர்களிடம் இல்லை என்பனவற்றை அறிந்து கொள்ளவும் வினாநிரல் ஒன்று தயாரிக்கப்பட்டது. இந்த வினாநிரல் செயலாய்விற்குட்பட்ட இரண்டு பள்ளிகளிலும் மேற்கொள்ளப்பட்டது. இதில் மொத்தம் 38 மாணவர்கள் கலந்துகொண்டனர். வினாநிரலின் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்கள் இச்செயலாய்வை வழிநடத்திச் செல்வதற்கு உறுதுணையாக இருந்தன. சுமார் 65.8 விழுக்காட்டு மாணவர்கள் தமிழ்நூல்களைப் படிப்பதில் ஆர்வம் உண்டு என்று குறிப்பிட்டுள்ளனர். நூலகத்திலுள்ள கதைப்புத்தகங்களில், தமிழ்க்கதை நூல்களை இரவல் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே இருக்கின்றது. சுமார் 23.7 விழுக்காட்டுத் தமிழ் மாணவர்கள் மட்டுமே தமிழக கதை நூல்களை இரவல் பெறுவது தெரிகிறது. இந்த மாணவர்களில் சுமார் 21.0 விழுக்காட்டினர் ஆசிரியர் வற்புறுத்தலுக்காகப் படிப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். 52.6 விழுக்காட்டு மாணவர்கள் ஆங்கிலக் கதைகள் படிக்கச் சுலபமாக இருக்கின்றன என்றும் 52.6 விழுக்காட்டினர் தமிழ்க் கதைகள் படிப்பதற்குச் சுவாரசியமாக இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர். இம்மாணவர்கள் ஆங்கிலத்தில் சிந்தித்துத் தமிழில் தம் படைப்புகளை எழுத முயல்கின்றனர். சுமார் 57.9 விழுக்காட்டு மாணவர்கள் அச்சு வடிவத்தில் இல்லாத தமிழ் மின்னூல்களைப் படிக்க விரும்புவதாகக் கூறியுள்ளனர். அத்துடன் 55.3 விழுக்காட்டினர் மாயாஜாலக் கதைகளைப் படிக்க விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

வினாநிரலிலிருந்து பெற்ற தரவுகளின்படி, எங்கள் மாணவர்களிடையே படிக்கும் பழக்கம் குறைந்து காணப்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதும் படித்தலில் ஆர்வத்தை ஈர்க்கும் வகையில் அவர்களுக்குப் படிக்கக் கிடைக்கும் தமிழ்க் கதைப்புத்தகங்கள் இல்லை என்பதும் தெளிவானது. அச்சு வடிவத்தில் உள்ள கதைப்புத்தகங்களைப் படித்துச் சலித்துப்போன எங்கள் மாணவர்களுக்கு ஆர்வமூட்டும் வகையில் தகவல் தொழில்நுட்பத்தின் வழிப் பல்லூடகங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்க்கதை மின்னூல் ஒன்றை உருவாக்கினோம்.

செயலாய்வு வினாக்களும் கருதுகோள்களும்

செயலாய்வு வினா

அச்சுவடிவில் உள்ள நூல்களைவிட அச்சு வடிவில் இல்லாத தமிழ் நூல்களின் (மின்னூல்கள்) அறிமுகம் மாணவர்களிடையே படிக்கும் ஆர்வத்தை எந்த அளவுக்கு மேம்படுத்தத் துணைபுரியும்?

கருதுகோள்

உயர்நிலை இரண்டு தமிழ் மாணவர்கள் அச்சு வடிவத்தில் உள்ள நூல்களைவிட அச்சு வடிவத்தில் இல்லாத (மின்னூல்கள்) தமிழ் நூல்களைப் படிப்பதில் ஆர்வம் காட்டுவர்.

செயலாய்வுமுறை

செயலாய்வுக்குட்பட்டோர்

இச்செயலாய்வில் இரு பள்ளிகளைச் சேர்ந்த உயர்நிலை இரண்டில் பயிலும் உயர்தமிழ் மாணவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். ஒரு பள்ளியில் 20 மாணவர்களும் மற்றொரு பள்ளியில் 18 மாணவர்களும் இச்செயலாய்வில் பங்கேற்றனர். உயர்நிலை இரண்டில் பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை குறைவாக இருந்ததால் செயலாய்வுக்குப் போதுமான மாணவர்கள் தேவைப்பட்டனர். அதனால், இச்செயலாய்வில் இரண்டு உயர்நிலைப்பள்ளிகளிலும் ஒரு தமிழ்மொழி நிலையத்திலும் பயிலும் மாணவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். உயர்நிலை இரண்டில் பயிலும் 18 உயர்தமிழ் மாணவர்களும், விரைவுநிலை மற்றும் வழக்கநிலையில் (ஏட்டுக்கல்வி) பயிலும் 20 மாணவர்களும் இச்செயலாய்வில் பங்கெடுத்தனர். இந்த மாணவர்களுள் 25 மாணவர்கள் ஆங்கிலம் பேசும் குடும்பப் பின்னணியிலிருந்து வருபவர்கள். இவர்கள் தமிழில் பேசுவதற்கும் தமிழ்ப்பாடம் செய்வதற்கும் சிரமப்படுபவர்கள். மற்ற 13 மாணவர்களும் சரளமாகத் தமிழில் பேசக்கூடியவர்கள். இச்செயலாய்வில் ஈடுபட்ட தமிழாசிரியர்கள் மூவரும் சராசரியாகச் சுமார் 25 ஆண்டுக்காலப் பணி அனுபவம் உடையவர்கள். இச்செயலாய்வை அந்தந்த வகுப்புத் தமிழாசிரியர்கள் தங்களது பள்ளிகளில் மேற்கொண்டனர்.

செயலாய்வின் வடிவமைப்பும் செய்முறையும்

இச்செயலாய்வின் வடிவமைப்பு, வகுப்பறையில் படித்தல் தொடர்பாகக் காணப்படும் ஒரு சிக்கலைக் கண்டறிந்து, அச்சிக்கலைக் களைவதற்குரிய சிறந்த கற்பித்தலியலைக் கையாண்டு, தரவுகளைத் திரட்டிப் பகுப்பாய்வு செய்து, செயலாய்வு வினாவுக்கு விடை காணும் வகையில் அமைந்ததாகும். இச்செயலாய்வில் உட்படுத்தப்பட்ட 38 மாணவர்களும் முதலில் அச்சு வடிவத்திலுள்ள ஐந்து கதைகளைப் படித்தனர். பிறகு அக்கதைகள் தொடர்பாகக் கருத்துக்கணிப்புச் செய்தனர். அதன்பிறகு, பரிந்துரைக்கப்பட்ட இடையீட்டு நடவடிக்கைகள், மின்னூல் தொடர்பான நடவடிக்கைகள், மற்றும் அதன் தொடர்பான கருத்துக்கணிப்பு ஆகியவற்றில் ஈடுபடுத்தப்பட்டனர். இந்தச் செயலாய்வு 10 வாரங்கள் மேற்கொள்ளப்பட்டது. தயாரிக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளும் உயர்நிலை இரண்டு உயர்தமிழ், விரைவு, வழக்கநிலை (ஏட்டுக்கல்வி) ஆகிய பிரிவுகளில் பயிலும் மாணவர்களுக்கு ஏற்புடையனவையே என்பதை இச்செயலாய்வை மேற்கொண்ட ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தல் அனுபவத்தின் அடிப்படையில் உறுதி செய்தனர். செயலாய்வுக் கருவிகள் வாயிலாகத் திரட்டப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் காணப்பட்டன. இந்தச் செயலாய்வின் செய்முறைத் திட்டம் பற்றிய விவரங்களை அட்டவணை 1-இல் காணலாம்.

செயலாய்வுக் கருவிகள்

இச்செயலாய்வில் பின்வரும் கருவிகள் பயன்படுத்தப்பட்டன:

- படித்தல் தொடர்பான வினாநிரல் (பின்னிணைப்பு 1)
- கதைகள் படித்தல் மற்றும் மின்னூல் படித்தல் தொடர்பான கருத்துக்கணிப்பு (பின்னிணைப்பு 2)
- அச்சில்லா வடிவத்தில் இருவழித் தொடர்பு மின்னூல் (பின்னிணைப்பு 3)
- மாணவர்களுடன் நேர்காணல் வினாக்கள் (பின்னிணைப்பு 4)
- அச்சு வடிவத்தில் 10 தமிழ்க்கதைகள்.

செய்முறைத்திட்டம்

அட்டவணை 1

வாரம்	நடவடிக்கைகள்	குறிப்பு
1	படித்தல் தொடர்பான வினாநிரலை நிர்வகித்தல்	வினாநிரலில் பத்துக் கேள்விகள்கொடுக்கப்பட்டன
2-4	இருவழித் தொடர்பு மின்னூல் தயாரித்தல்	முதல் வாரத்தில் நிர்வகித்த வினாநிரல் மூலம் கிடைத்த தரவுகளைக் கொண்டு மின்னூல் தயாரிக்கப்பட்டது.
5-6	முதல் இடையீட்டு நடவடிக்கை	மாணவர்கள் அச்சு வடிவத்திலுள்ள 10 தமிழ்க் கதைகளைப் படித்தனர். (மாயாஜாலக் கதைகள்). படித்தவற்றைப் பகிர்தல், மதிப்புரை எழுதுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
7	அச்சு வடிவத்திலுள்ள நூல்களைப் படித்தல் தொடர் பான கருத்துக் கணிப்பை நிர்வகித்தல்	5-6 ஆகிய வாரங்களில் படித்த கதைகள் தொடர்பான கருத்துக்கணிப்பை நிர்வகித்தல்
7-8	இரண்டாம் இடையீட்டு நடவடிக்கை	மாணவர்கள் மின்னூலைப் படித்து. (மாயாஜாலக் கதை) அதில் இடம் பெற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.
		(கலந்துரையாடல், சரியான படத்தொகுப்பைத் தேர்ந்தெடுத்து நிரப்புதல், குறுக்கெழுத்துப் போட்டிகள், புதிர்க் கேள்விகள் முதலியவை)
9	மின்னூல் தொடர்பான கருத்துக்கணிப்பை நிர்வகித்தல்	7-8 ஆகிய வாரங்களில் படித்த மின்னூல் தொடர்பான கருத்துக்கணிப்பு
10	மாணவர்களுடன் நேர்காணல்	5,6,7,8 ஆகிய வாரங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றி மாணவர்களுட நேர்காணல்

பகுப்பாய்வு

மாணவர்கள் ஈடுபட்ட முதல் இடையீட்டு நடிவடிக்கைக்குப்பின் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பின் தரவுகளும் இரண்டாம் இடையீட்டு நடவடிக்கைக்குப்பின் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பின் தரவுகளும் ஒப்பிடப்பட்டன. நேர்காணல் வழிக்கிடைக்கப்பெற்ற தகவல்கள் அகவயநிலையில் மதிப்பிடப்பட்டன.

இந்தச் செயலாய்வில் கலந்து கொண்ட 38 மாணவர்களிடம் தாங்கள் விரும்பிப் படிக்கும் தமிழ்க் கதைப் புத்தகங்கள் எப்படி இருக்கவேண்டும் என்று கேட்டபோது, அதற்கு அவர்கள் படங்கள், குறுக்கெழுத்துப் போட்டிகள், அசைவூட்டப்பட்ட படங்கள் மற்றும் ஒலி போன்ற பல்லூடகங்களும் இணைக்கப்பட்டிருந்தால் புத்தகம் படிக்கச் சுவையாயிருக்கும் என்று குறிப்பிட்டுள்ளனர். மேலும், அவர்கள் கதைகள், சித்திரக்கதைகள், நாவல்கள் ஆகியவற்றை விட மின்னூல்களை அதிகமாக விரும்புவதாகவும் கருத்துக் கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது. இவ்விவரத்தை அட்டவணை 2-இல் காணலாம்.



அட்டவணை -2: நான் இந்த வகைக் கதைகளைப் படிக்க விரும்புகிறேன்

பல்லூடகக் கூறுகள் இருவழித் தொடர்பு மின்னூலில் காணப்படுவதால் 82.8% விழுக்காட்டு மாணவர்கள் மின்னூல் படிக்க விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளனர். அச்சு வடிவத்திலுள்ள தமிழ்க் கதைப் புத்தகங்களில் இந்தக் கூறுகள் இல்லாததால் 54.3% விழுக்காட்டினர் அவற்றைப் படிப்பதில் ஆர்வமில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர். எனவே, இந்த மின்னூல் மாணவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் படங்கள், ஒளிக்காட்சிகள், அசைவூட்டப்பட்ட படங்கள், ஒளி, ஒலி போன்ற பல்லூடகங்கள் இணைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது. இந்த மின்னூல் இரண்டாவது இடையீட்டு நடவடிக்கையின் போது மாணவர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டது.



முதல் இடையீட்டு நடவடிக்கைகளின் போது நிர்வகித்த கருத்துக்கணிப்பை இரண்டாம் இடையீட்டு கருத்துக்கணிப்போடு ஒப்பிட்டபோது இரண்டாம் இடையீட்டின் போது மாணவர்களின் ஆர்வநிலை உயர்ந்திருப்பது தெரியவந்துள்ளது. இவ்விவரத்தை அட்டவணை 3-இல் காணலாம்.

அட்டவணை - 3: கதைப்புத்தகங்கள் மற்றும் மின்னூல் படித்தல்-ஆர்வநிலை

செயலாய்வின் விரும்பத்தக்க முடிவுகளுக்கு இடையீட்டுத் திட்டம் எந்த அளவுக்குக் காரணமாக அமைந்திருக்கிறது என்பதை அறியும் நோக்கத்தில் மாணவர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்ட அச்சு வடிவிலுள்ள



கதைகள், இருவழித் தொடர்பு மின்னூல் இரண்டில் எதைப் படிக்கப் பிடித்திருக்கிறது என்று நேர்காணலின்போது கேட்டபோது. செயலாய்வில் கலந்துகொண்ட அனைத்து மாணவர்களும் தங்களுக்கு மின்னூல்தான் பிடித்திருக்கிறது என்றனர். மின்னூலைப் படிக்கும்போது அதில்வரும் வர்ணனைகளை நன்றாகக் காட்சிப்படுத்த முடிகிறது. மின்னூலிலுள்ள படங்கள் கவரும் வகையில் உள்ளன. மின்னூல் வாசிப்பால் மொழித் தொடர்பாக அதிகம் கற்றுக் கொள்வதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டன. அசைவூட்டப்பட்ட படங்கள் புரிந்துணர்வை வளர்க்க உதவின என்று குறிப்பிட்டனர். இதைத்தவிர, மாணவர்கள் மின்னூல் தங்களுடைய படித்தல் ஆர்வத்தைத் தூண்டியுள்ளது என்று தெரிவித்தனர். இவ்விவரத்தை அட்டணை 4-ல் காணலாம்.

அட்டவணை - 4: கதைநூல்/மின்னூல் படிக்க விரும்புவதற்கான காரணங்கள்

நேர்காணலின் போது இடையீட்டு நடவடிக்கைகளின் போது அறிமுகம் செய்யப்பட்ட தமிழ்க் கதைகள், மின்னூல்-இவ்விரண்டில் உனக்கு எதன்வழி வாசிப்பது ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது? ஏன்? என்று செயலாய்வில் கலந்து கொண்ட உயர்தமிழ், விரைவுநிலை மற்றும் வழக்கநிலை (ஏட்டுக்கல்வி) ஆகிய பிரிவுகளில் பயிலும் 38 மாணவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு மாணவர்களுள் சராசரியாக 80% விழுக்காட்டினர், மின்னூல் படித்தல் தங்களுக்குப் படித்தலில் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது என்று கூறினர். இதிலிருந்து மாணவர்களுக்கிடையே படித்தல் ஆர்வத்தை மேம்படுத்துவதன்வழி படிக்கும் பழக்கத்தை வழக்கமாக்க முடியும் என்று உறுதிப்படுத்தலாம்.

மாணவர்கள் நேர்காணலின் போது கூறிய தகவல்களை அட்டவணை 5-இல் காணலாம்.

அட்டவணை- 5: கதைநூல்கள், மின்னூல்- படித்தல் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது ஏன்?

தமிழ்க் கதைப் புத்தகம்	இருவழித் தொடர்பு மின்னூல்
கதைப் புத்தகம் படிக்க விருப்பம் (3)	கதை படித்துப் புரிந்துகொள்ள முடிகிறது (35)
நூலகத்திற்குச் செல்ல விருப்பம் (2)	வாசிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்துகிறது (35)
கதை உண்டு; நடவடிக்கைகள் இல்லை (3)	படங்கள் கவருவனவாக உள்ளன; நடவடிக்கைகள் பிடித்திருக்கின்றன (33)
புரிந்துகொள்ள முடிகிறது (3)	கணினியில் படிக்க ஆர்வம் அதிகம் (29)
அதிகப் பணம் செலவிட வேண்டாம் (2)	சொந்தமாகப் படித்துச் செயற்படுத்த முடிகிறது (35)
நேர்காணலில் பங்கேற்ற மாணவர் எண்ணிக்கை: 38	கதை சுவாரசியமாக உள்ளது (35)

கிடைக்கப்பெற்ற தரவுகள், அச்சு வடிவிலுள்ள நூலைவிட மின்னூல் மாணவர்களிடையே படித்தல் ஆர்வத்தை ஏற்படுத்திப் படித்தல் பழக்கத்தைப் பெருக்கியுள்ளதைக் காட்டுகிறது. மேலும், இடையீட்டு நடவடிக்கைகள் மாணவர்களைப் படித்தலில் முழுமையாகவும் ஆர்வத்துடனும் ஈடுபடத் தூண்டியிருக்கின்றன என்பது பாட உற்றுநோக்கலின்போது ஆசிரியர்களால் கண்டறியப்பட்டது.

கட்டுப்படுத்திய கூறுகள்

இச்செயலாய்வு குறுகிய காலத்திற்கு மேற்கொள்ளப்பட்டதால் ஒரு மின்னூல் மட்டுமே உருவாக்க வாய்ப்பிருந்தது. இன்னும் இரண்டு மின்னூல்கள் தயாரிக்கப்பட்டு இடையீட்டு நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்டிருந்தால் செயலாய்வின் நம்பகத்தன்மை மேலும் அதிகரித்திருக்கக்கூடும். மாணவர்கள் சிலர் நடத்தப்பட்ட ஒரு சில இடையீட்டுப் பாடங்களின் போது வகுப்பிற்கு வருகை புரியாததால், அவர்களின் படித்தல்திறன் மேம்பாட்டைக் கருத்திற்கொள்ள இயலாமல் போனது. ஒருசில மாணவர்களின் பங்கேற்பு எதிர்பார்த்த அளவுக்கு இல்லாததால், அவர்களைப் படித்தலில் ஈடுபடுத்தத் தொடர்ந்து முயன்று ஊக்கத்தோடு பாடத்தை நடத்தும் சவாலை ஆசிரியர்கள் எதிர்நோக்கினர்.

பரிந்துரைகள்

படித்தலில் மாணவர்களிடம் தொடர் முன்னேற்றத்தை இன்னும் தெளிவாகக் காண இரண்டு அல்லது மூன்று இருவழித் தொடர்பு மின்னூல்கள் உருவாக்கிப் பயன்படுத்தலாம். அந்த மின்னூல்களின் கற்றல் பயன்பாட்டிலுள்ள நிறை குறைகளைக் கண்டறியலாம். இடையீட்டு நடவடிக்கைகளுக்கு முன்னிலை, பின்னிலைத் தேர்வுகள் நிகழ்த்தி மாணவர்களின் படித்தல் பழக்கத்தை இன்னும் சிறந்த முறையில் கண்டறியும் வண்ணம் கருத்துக் கணிப்பு நடத்தலாம். இக்கால மாணவர்கள் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை அதிகமாக வரவேற்பதால் மாணவர்களின் படித்தல்திறனை மேம்படுத்த வேறு பல்லூடக வளங்களை உருவாக்கலாம். இவையாவும் தமிழ் கற்றலில் மாணவர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிக்கும் எனலாம்.

முடிவுரை

“கல்வி என்பது நல்ல தரமான அதிகமான வாசிப்பைச் சார்ந்தது (ஜே.ஏ.பிரைட்; 1985) என்பதற்கு ஏற்பப் படித்தல் ஒரு முக்கியக் கொள்திறனாகும். படித்தல் கற்றலுக்கான திறவுகோல் என்பர். படித்தல் பழக்கத்தை மாணவர்களிடத்தில் ஏற்படுத்துவது தொடக்கத்தில் சற்றுச் சிரமமாக இருந்தது. ஆனால், தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் தயாரித்த இருவழித் தொடர்பு மின்னூலின் பயன்பாட்டால் படித்தல் பழக்கம் மாணவர்களிடத்தில் மேம்பட்டுள்ளது.

இன்றைய மாணவர்கள், தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதைப் பெரிதும் விரும்புகின்றனர். அவர்களின் அன்றாட வாழ்க்கையில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. ஆசிரியர்கள் மொழி கற்றலில் மாணவர்களின் ஆர்வத்தைத் தக்க வைக்கவும் பயன்முனைப்புமிக்க முறையில் கற்றல் கற்பித்தலை நிகழ்த்தத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை நம் பாடத்திட்டமும் வலியுறுத்துகிறது.

அச்சமோ தயக்கமோ இன்றித் தமிழ்மொழியைக் கற்பதற்கு மாணவர்களுக்கு உதவும் வகையில் வெவ்வேறு வகையான கற்பித்தல் முறைகளை ஆசிரியர்கள் கையாள வேண்டும். மாணவர்களுக்குத் தமிழ் கற்றல் ஒரு சுகமான அனுபவமாக அமைதல் இன்றியமையாதது. மாணவர்கள் தமிழ்மொழியை விருப்பத்துடன் கற்கவும், கற்றவற்றைச் சிறப்பாக வெளிப்படுத்தவும் கற்பிக்க வேண்டியது ஆசிரியரின் கடமையாகும்.



துணைநூற்பட்டியல்

தமிழ்

தாய்மொழிகள் மறு ஆய்வுக்குழு அறிக்கை, (2010), கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல் முறை மறு ஆய்வுக் குழு அறிக்கை, (2005), கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

தமிழ்மொழிப் பாடத்திட்டம் (உயர்நிலை), 2011), கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

திருமலை எம்.எஸ்,(1978), தமிழ் கற்பித்தல் அல்லது மொழி கற்பித்தல்,மணிவாசகர் நூலகம், சென்னை, தமிழ்நாடு.

கோவிந்தசாமி, நா, (1983). வாசிப்பு மாதிரிக் கையேடு

முத்து நெடுமாறன், (2012). கையடக்கக் கருவிகளில் தமிழ் மின்னூல், 2012 தமிழ்மொழிக் கருத்தரங்கு, பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாடுப் பிரிவு, கல்வி அமைச்சு, சிங்கப்பூர்.

இராமையா. கா. (தொகுப்பாசிரியர்) (2000), சிங்கப்பூரில் தமிழ் மொழி கற்றல் கற்பித்தல் தொடர்பான ஆய்வுகள் (தொகுதி I-IV), தேசியக் கல்விக்கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்

சுப்பு ரெட்டியார். நா. (2003). தமிழ் பயிற்றுமுறை. சிதம்பரம் மெய்யப்பன் தமிழாய்வகம், சென்னை, தமிழ்நாடு.

இளந்தமிழ் சி.ம. (2008), மலேசியத் தமிழ் வளர்ச்சிக்குத் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு

ஆங்கிலம்

Audra K Roach and Jeccica,J.Beck (2012). Before coffee, FacebookLNew Literacy Learning for 21st Century Teachers.

Bialy, E. (1978). A theoretical mode of second language learning. Language learning.

Gardner, R.C. & MacIntrye, P.D. (1993). A student's contribution to second language learning. Part III: Affective Variable. Language Teaching.

Candlin, C.H.. (1983), Developing Reading Skills, London: Oxford University Press

Spolsky. B. (1985). Formulating a theory of second language learning. Studies in Second Language Acquisition.

4. கடைநிலை மாணவர்களிடையே “Snap,Donkey,Happy, Uno” ஆகிய அட்டை விளையாட்டுகளின்வழி இடையின உயிர் மெய்யெழுத்துகளை அறிமுகம் செய்தல்

செல்வா இலெட்சுமணன், துவான்கு பைனுன் ஆசிரியர் கல்விக் கழகம் பினாங்கு, மலேசியா

1.0 முன்னுரை

வாசிப்பு ஓர் அறிவு சார்ந்த நடவடிக்கையாகும். மாணவர்கள் தங்களின் மொழியறிவையும் சிந்திக்கும் ஆற்றலையும் பெருக்கிக் கொள்ள வாசிப்புத் திறன் மிகவும் துணைபுரிகிறது.ந.சுப்பு ரெட்டியார் (2003), கையெழுத்திலும் அச்செழுத்திலும் உள்ளதைக் கண்ணால் பார்த்து வாயால் உச்சரித்துச் சொல்லிப் பொருள் உணர்வதை வாசிப்பு என்கிறார். மலேசியக் கல்வி அமைச்சின் கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவில் வரிவடிவத்தைப் பொருள் பெயர்த்துக் கருத்துணர்வது, எழுத்துகளைக் கண்ணால்கண்டு வாயால் உச்சரித்துப் பொருள் உணர்வது, அச்சில் அல்லது எழுத்தில் உள்ளவற்றைப் பொருளாக்கம் செய்வது ஆகியவைதான் வாசிப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, மாணவர்கள் தமிழ்மொழியில் சிறப்பாக வாசிக்க எழுத்து அறிமுகம் மிகவும் அவசியமான ஒன்றாகும். சரியான எழுத்து அறிமுகமின்மையால் மாணவர்களிடையே ஏற்படும் சிக்கலைக் களைய ஆசிரியர்கள் சில எளிமையான முறைகளைக் கையாளவேண்டும்.

2.0 முந்தைய கற்றல் கற்பித்தல் சிந்தனை மீட்சி

பாடவேளையில் வாசிப்பதற்குச் சிரமப்பட்ட மாணவர் சிலரைத் தனியாக அழைத்து மூன்றெழுத்து நான்கெழுத்துக் கொண்ட சொற்களைக் கொடுத்து ஆய்வாளர் வாசிக்கச் செய்தார். அம்மாணவர்களில் ஐந்து கடைநிலை மாணவர்கள் மட்டும் அச்சொற்களை வாசிக்கும் பொழுது ‘லகர, வகர’ எனும் இடையின உயிர்மெய்யெழுத்துகளை அடையாளங்காண்பதில் சிரமத்தை எதிர்நோக்கினர். எடுத்துக்காட்டாக ‘ல’ எனும் எழுத்தை ‘வ’ என்று உச்சரித்து வாசித்தனர். ‘லகர, வகர’ வரிசையிலுள்ள இடையின உயிர்மெய்யெழுத்துகளைச் சரியாக அறியாத காரணத்தினாலும் வரிவடிவத்தில் ஏற்பட்ட குழப்பத்தினாலும் அந்தக் கடைநிலை மாணவர்களின் வாசிப்பில் அதிகக் குழப்பங்கள் ஏற்படுகின்றன. ஆகவே,இரண்டாம் ஆண்டு கடைநிலை மாணவர்களின் வாசிப்பில் கண்டறியப்பட்ட இச்சிக்கலைக் களையும் நோக்கில் ஆய்வாளர் அட்டை விளையாட்டு அணுகுமுறையைப் பயன்படுத்தினார்.

2.1 கல்வியியல் சிந்தனை மீட்சி

அவ்வகையில், ஆய்வுக்குட்பட்டோருக்கிடையே 'லகர, வகர' வரிசையிலுள்ள இடையின உயிர்மெய்யெழுத்துகளை அறிமுகம் செய்வதற்கு ஆய்வாளர் அட்டை விளையாட்டு அணுகுமுறையைப் பயன்படுத்தியுள்ளார். ஆகவே, மாணவர்கள் பொழுது போக்காக விளையாடும் இந்த அட்டை விளையாட்டு அணுகுமுறை "Donkey,Snap,Happy Family, Uno" எனும் பிரசித்திப்பெற்ற சிறுவர்களின் அட்டை விளையாட்டுகளை



படம் 1.1 : பிரசித்திப்பெற்ற சிறுவர்களுக்கான அட்டை விளையாட்டுகள்



படம் 1.2 : இவ்வாய்வுக்காக உற்றிமைக்கப்பட்ட அட்டை விளையாட்டுகள்

மையமாகக் கொண்டதாகும். "Happy Family" எனும் விளையாட்டு 1851-ஆம் ஆண்டு ஜோன் ஜகியூஸ் என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு விளையாட்டாகும். அதனைத் தொடர்ந்து, மற்ற அட்டை விளையாட்டுகளான "Donkey,Snap,Uno" ஆகிய அனைத்தும் 1970 ஆம் ஆண்டு முதல் சிறுவர்கள் விளையாடிய விளையாட்டுகளாகக் கூறப்படுகின்றன.

ஆகவே, ஆய்வாளர் இந்த அட்டை விளையாட்டுகளில் சில மாற்றங்களைச் செய்து மாணவர்களிடையே 'லகர, வகர' வரிசையிலுள்ள இடையின உயிர்மெய்யெழுத்துகளை அறிமுகம் செய்ய இப்புதிய முயற்சிகளை மேற்கொண்டார்.

3.0 ஆய்வின் மீள்நோக்கு

புரோபல் (2008), விளையாட்டு முறை கற்பித்தலைத் தீவிரமாக வலியுறுத்தினார். நடப்பியல் உலகைச் சிறார் விளையாட்டுகள் வாயிலாகவே கற்றுக் கொள்ள முடியுமென்று துணிந்தார். தமது புலன்களால் அவர்கள் செயற்பாடு கொண்டு நடப்பியலை விளங்கிக் கொள்ளும் நடைமுறைக்கே இவர் "விளையாட்டு'' என்று பெயரிட்டார். காரணங்காணலைக் காட்டிலும் புலன்கள் வாயிலாகவே சிறார் அதிக அளவில் கற்றுக் கொள்கின்றனர். விளையாட்டின் வாயிலாகப் புறவுலகப் பொருள்களும் நிகழ்ச்சிகளும் சிறாரின் மனத்திலே பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றன.

சிந்தாமணி (2007), தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் புதிய உத்திகள் எனும் தனது ஆய்வில் எழுத்துகளை அறிமுகம் செய்யும் அணுகுமுறைகளைப் பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ளார். எழுத்துகளை மாணவர்களுக்கு

அறிமுகம் செய்வதில் ஆசிரியர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். எழுத்துகளை அறிமுகப்படுத்தும்போதே பிழையின்றிச் சரியாக உச்சரிக்கவும் பேசவும் பயிற்றுதல் வேண்டும்.

இரமாதேவி (2007), மேற்கொண்ட ஆய்வில் அட்டைகளைப் பல்வகைப்படுத்தி எழுத்துகளை அறிமுகம் செய்துள்ளார். 'மாறுவதைப் பார்' எனும் சுழல் அட்டை, தள்ளு கொம்பு, மாய அட்டை ஆகியவைகளைப் பயன்படுத்தி எகர, ஏகார, ஐகார, ஒகார, ஓகார, ஔகார எழுத்துகளை அறிமுகம் செய்து மாணவர்களிடையே ஏற்படும் மாற்றங்களைக் கண்காணித்துள்ளார்.

யீ செங் ஹொங் மற்றும் அமிர் ஹம்சா சராய் (2012), ஆண்டு நான்கு மாணவர்களுக்கு அறிவியல் பாடத்தில் உள்ள உணவுச் சங்கிலி எனும் தலைப்பினைப் பாகமேற்றுதல், அட்டை விளையாட்டு எனும் இரண்டு அணுகுமுறைகளைப் பயன்படுத்தி ஆய்வு நடத்தியுள்ளார். இவ்வாய்வின் முடிவில் இந்தப் பாகமேற்றுதல், அட்டை விளையாட்டு எனும் இரண்டு அணுகுமுறைகளுமே உணவுச் சங்கிலி தொடர்பான பாடத்தில் மாணவர்களின் அடைவு நிலையையும் ஆர்வத்தையும் மேம்படுத்தியுள்ளன என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

4.0 ஆய்வின் நோக்கம்

அட்டை விளையாட்டு அணுகுமுறையின் மூலம், மாணவர்களுக்கு 'லகர, வகர' வரிசையிலுள்ள இடையின உயிர்மெய்யெழுத்துகளை அறிமுகம் செய்தல்

4.1 ஆய்வு வினா

அட்டை விளையாட்டு அணுகுமுறையின்வழி, மாணவர்களுக்கு 'லகர, வகர' வரிசையிலுள்ள இடையின உயிர்மெய்யெழுத்துகளை அறிமுகம் செய்ய முடியுமா?

5.0 ஆய்வுக்கு உட்பட்டோர்

ஆய்வாளர் இவ்வாய்வில் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் ஐவரை ஆய்வுக்கு உட்படுத்தினார். குறிப்பாக



படம் 1.3 : கெம்மிஸ் மற்றும் மெக்தக்கர்ட் 1988 (KEMMIS AND MCTAGGART)

6.1 செயல்திட்ட அமலாக்கம்



நான்கு ஆண் மாணவர்களும் ஒரு பெண் மாணவரும் அடங்குவர். ஐந்து மாணவர்களும் கடைநிலை மாணவர்களாவர்.

6.0 ஆய்வு நடவடிக்கைகள்

ஓர் ஆய்வினைத் திட்டமிடுவதற்கும் அதனை வழிநடத்துவதற்கும் வழிகாட்டியாக அமைவது ஆய்வில் அமலாக்கம்தான். இவ்வாய்வின் அமலாக்கம் கெம்மிஸ் மற்றும் மெக்தக்கர்ட் (1988) செயலாய்வு மாதிரியும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

7.0 தரவுகள் பகுப்பாய்வும் விளக்கமும்

7.1 முன்னறி/பின்னறிச் சோதனை

மாணவர்கள் 'லகர, வகர' எழுத்துகளைச் சரியாக அறிந்து கொண்டதைக் கண்டறிய ஆய்வுக்கு முன்பு முன்னறிச் சோதனையும் ஆய்வுக்குப் பின்பு பின்னறிச் சோதனையும் நடத்தப்பட்டது. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஐந்து மாணவர்களும் இந்தச் சோதனைகளை மேற்கொண்டனர்.

அட்டணை 1.1: முன்னறிச் சோதனை, பின்னறிச் சோதனையின் ஒப்பீடு

எண்	மாணவர்	முன்னறிச் சோதனை புள்ளிகள்	பின்னறிச் சோதனை புள்ளிகள்	முன்னேற்றம் (%)
1.	மாணவர் 1	8/24 33% (E)	22/24 92% (A)	+59
2	மாணவர் 2	11/24 46% (E)	24/24 100% (A)	+54
3	மாணவர் 3	10/24 42% (E)	23/24 96% (A)	+54
4	மாணவர் 4	2/24 8% (F)	18/24 75% (B)	+67
5	மாணவர் 5	0/24 0% (F)	16/24 67% (c)	+67
	சராசரி	25.80	86.00	60.2

7.2 சரிபார் பட்டியல்

ஒவ்வொரு வாரமும் மாணவர்கள் அட்டை விளையாட்டினை விளையாடும் பொழுது அவர்கள் என்னென்ன எழுத்துகளைச் சரியாக அடையாளங்கண்டு கூறினார்களோ அதனை ஆய்வாளர் சரிபார் பட்டியல் மூலம் அளவிட்டார்.



குறிவரைவு 1.2 : ஒன்றாவது முதல் ஆறாம் வாரம் வரையிலான சரிபார் பட்டியலின் முடிவுகள்

7.3 உற்றுநோக்கல்

இந்த ஆய்வின் போது மாணவர்களின் எழுத்துகளை அறிந்து கொள்ளும் திறன் மேம்பாடு அடைந்துள்ளதா என்பதனை ஆய்வாளர் உற்றுநோக்கல் பாரம்வழி உற்றுநோக்கினார். ஒவ்வொரு வாரமும் நடத்தப்பட்ட நடவடிக்கையில் மாணவர்களின் அடைவுநிலையை அவர்களின் துலங்கலோடு எவ்வாறு அமைந்தது என்பதை உற்றுநோக்கலின்வழி கண்டறிய முடிந்தது.

அட்டவணை 1.2 : உற்றுநோக்கலின் முடிவுகள்

7.4 வினாநிரல்

எண்	வாரம் / கூறு	1		2		3		4		5		6	
		தட வை	(%)	தட வை	(%)	தட வை	(%)	தட வை	(%)	தட வை	(%)	தட வை	(%)
1	ஆசிரியரின் நடவடிக்கையில் மாணவர்கள் முழுமையாகக் கவனம் செலுத்தினர்.	1	20	2	40	3	60	4	80	5	100	5	100
2	மாணவர்கள் ஒன்றாகச் சேர்ந்து நடவடிக்கையை மேற்கொண்டனர்.	1	20	1	20	2	40	4	80	5	100	5	100
3	ஆசிரியர் கேட்ட கேள்விகளுக்கு மாணவர்கள் சரியாகப் பதில் கூறினர்.	0	0	2	40	2	40	3	60	3	60	4	80
4	மாணவர்கள் நடவடிக்கையின்போது மிகவும் விரைவாகச் செயல்பட்டனர்.	1	20	1	20	2	40	5	100	5	100	5	100
5	ஆசிரியர் காட்டிய லகர, வகர வரிசையிலுள்ள உயிர்மெய்யெழுத்துகளைச் சரியாக அடையாளங்கண்டு கூறினர்.	0	0	2	40	3	60	3	60	4	80	4	80

மாணவர்களின் 'லகர, வகர' எழுத்துகளைச் சரியாக அடையாளங்கண்டு கூறும் திறனை மேம்படுத்த அட்டை விளையாட்டு அணுகுமுறையின் பங்கு கருதி மேலும் துல்லியமான முடிவைப் பெற மாணவர்ளுக்கு வினாநிரல் பாரம் வழங்கப்பட்டது. ஆய்வுக்கு முன்னும், ஆய்வுக்குப் பின்னும் மாணவர்கள் இந்த அட்டை விளையாட்டு அணுகுமுறையைப் பற்றித் தங்களின் கருத்துகளை வினாநிரல் வாயிலாக வெளிப்படுத்தினர்.

7.4.1 ஆய்வுக்குப் பின்

அட்டவணை 1.3: வினாநிரல் ஆய்வுக்குப் பின்

எண்	வினா	ஒப்புதல் இல்லை தடவை (%)	குறைந்த ஒப்புதல் தடவை (%)	ஒப்புதல் தடவை (%)	மிகுந்த ஒப்புதல் தடவை (%)
1	எனக்கு விளையாட்டு அணுகுமுறையின் வழி "லகர,வகர" வரிசையிலுள்ள உயிர்மெய்யெழுத்துகளைச் சரியாக அடையாளங்கண்டு கூறுவது மிகவும் பிடிக்கும்	0 (0%)	0 (0%)	0 (0%)	5 (100%)
2	ஆசிரியர் வழங்கும் "லகர,வகர" வரிசையிலுள்ள உயிர்மெய்யெழுத்துகளை அடையாளங்கண்டு கூறுதல் தொடர்பான	0 (0%)	0 (0%)	0 (0%)	5 (100%)

3	ஆசிரியர் அட்டை விளையாட்டு அணுகுமுறையின் "லகர,வகர" வரிசையிலுள்ள உயிர்மெய்யெழுத்துகள் தொடர்பாக விளக்கங்கள் அளித்தும், என்னால் விரைவாக அவ்வெழுத்துகளை மனத்தில் பதிய வைக்க முடிகிறது	0 (0%)	0 (0%)	1 (20%)	4 (80%)
4	ஆசிரியர் அட்டை விளையாட்டு அணுகுமுறையின் வழி காண்பிக்கும் "லகர" வரிசையிலுள்ள உயிர்மெய்யெழுத்துகளை என்னால் சரியாக அறிந்து அடையாளங்கண்டு கூறமுடியும்.	0 (0%)	0 (0%)	0 (0%)	5 (100%)
5	ஆசிரியர் அட்டை விளையாட்டு அணுகு முறையின் வழி காண்பிக்கும் லகர" வரிசையிலுள்ள உயிர்மெய்யெழுத்துகளை என்னால் சரியாக அறிந்து அடையாளங்கண்டு கூறமுடியும்	0 (0%)	0 (0%)	1 (20%)	4 (80%)
6	அட்டை விளையாட்டு அணுகுமுறையினால், அன்றாடம் நான் "லகர,வகர" உயிர்மெய் எழுத்துக்களின் வேறுபாட்டினை நன்கு அறிந்து பிழையில்லாமல் வாசிக்கிறேன்	0 (0%)	0 (0%)	2 (40%)	3 (60%)

8.0 ஆய்வின் கண்டுபிடிப்புகள்

மாணவர்களிடையே 'லகர,வகர' இடையின உயிர்மெய்யெழுத்துகளை அறிமுகம் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு வெற்றி அடைந்துள்ளது என்பதைக் கிடைக்கப்பெற்றத் தரவுகளின் வாயிலாக உறுதிசெய்யப்பட்டுள்ளது. மாணவர்களிடையே 'லகர,வகர' இடையின உயிர்மெய்யெழுத்துகளை அறிமுகம் செய்வதற்கு அட்டை விளையாட்டு அணுகுமுறை பயன்படுத்தப்பட்டது. இந்த அணுகுமுறையின் வாயிலாக மாணவர்களிடையே முன்னேற்றத்தைக் காண முடிந்தது.

இதற்கு முதல் சான்றாக விளங்குவது முன்னறி மற்றும் பின்னறிச் சோதனைகளாகும். இவ்வாய்வில் முன்னறிச் சோதனையில் உட்படுத்தப்பட்ட அனைத்து மாணவர்களின் சராசரி புள்ளிகள் 25.80% ஆகும். ஆய்வுக்குப் பின் நடத்திய பின்னறிச் சோதனையில் கிடைத்தச் சராசரி புள்ளிகள் 86.00% ஆகும். இதன் மூலம், முன்னறிச் சோதனையின் சராசரிக்கும் பின்னறிச் சோதனையின் சராசரிக்கும் 60.2% அதிகமாக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த முன்னேற்றமே அம்மாணவர்களின் 'லகர,வகர' வரிசையிலுள்ள இடையின உயிர்மெய்யெழுத்துகள் நன்கு அறிமுகமாகிவிட்டன என்பதை உறுதிப்படுத்துகிறது.

மாணவர்கள் ஒவ்வொரு வாரமும் சரியாக அடையாளங்கண்டு கூறிய 'லகர,வகர' இடையின உயிர்மெய்யெழுத்துகள் சரிபார் பட்டியலின் வழி கணக்கிடப்பட்டது. ஆய்வுக்கு முன்பு கிடைத்த புள்ளிகளையும், ஆய்வுக்குப் பின்பு கிடைத்த புள்ளிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் ஆய்வின் முடிவில் 14.4 சராசரி புள்ளிகள் அதிகரிக்கப்பட்டு மாணவர்களின் அடைவுநிலை மேம்பாடு அடைந்துள்ளதை இந்தச் சரிபார் பட்டியலின் பகுப்பாய்வு காட்டுவதோடு அட்டை விளையாட்டு அணுகுமுறையின் பயன்பாடு மாணவர்களின் 'லகர,வகர' இடையின உயிர்மெய்யெழுத்துகளை நன்கு அறிந்து கொள்ளப் பெரிதும் பங்காற்றியுள்ளது என்பது உறுதியாகிறது.

உற்றுநோக்கல் பாரத்தில் இடம் பெற்ற அனைத்துக் கூற்றுகளிலும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதை அட்டவணை 1.2 இல் தெளிவாகக் காணமுடியும். அட்டை விளையாட்டு அணுகுமுறையினால் மாணவர்களிடையே ஏற்பட்ட மாற்றங்கள் யாவும் அவர்களால் இனி 'லகர,வகர' இடையின உயிர்மெய்யெழுத்துகளைச் சரியாக அடையாளங்கண்டு கூற முடியும் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது. ஆய்வின் முடிவில் மூன்று கூற்றுகளுக்கு 100% வும் இரண்டு கூற்றுகளுக்கு 80% கிடைத்துள்ளது.

இறுதியாக, அட்டவணை 1.3 வழி ஆய்வுக்குப் பின் மாணவர்களிடம் கொடுக்கப்பட்ட வினாநிரல் பாரம் மூலமாகக் கிடைத்த பகுப்பாய்வினைக் காணும்பொழுது, மாணவர்களின் 'லகர,வகர' உயிர்மெய்யெழுத்துகளைச்

சரியாக அறிந்து அதனை அடையாளங்கண்டு கூறும் திறன் மேம்பாடடைந்துள்ளது என்பது உறுதியாகியுள்ளது. அவ்வினாநிரலில் கொடுக்கப்பட்ட அனைத்துக் கூற்றுகளுக்கும் மாணவர்கள் ஒப்புதலையும் மிகுந்த ஒப்புதலையுமே தனது கருத்தாகத் தெரிவித்துள்ளனர். இதன் மூலம், அட்டை விளையாட்டு அணுகுமுறை மாணவர்களுக்கு 'லகர,வகர' இடையின உயிர்மெய்யெழுத்துகளை அறிமுகம் செய்வதில் வெற்றி கண்டுள்ளது என்பதை நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.

9.0 தொடர் ஆய்வுக்கான பரிந்துரைகள்

இந்த ஆய்வினைத் தொடர்ந்து மேற்கொள்ள விரும்புவர்களுக்கு ஆய்வாளர் மேலும் சில பரிந்துரைகளை முன்வைத்துள்ளார். எதிர்காலத்தில், இந்த ஆய்வினை மையமாகக் கொண்டு ஒன்றாம் ஆண்டு மாணவர்களுக்குச் சுலபமாக எழுத்து அறிமுகம் செய்வது தொடர்பான ஆய்வினை மேற்கொள்ளலாம். அடுத்ததாக, இந்த அட்டை விளையாட்டு அணுகுமுறையைப் பயன்படுத்தி மற்ற எழுத்துகளை அறிமுகம் செய்வதோடு அதனை மாணவர்கள் சரியாக அடையாளங்கண்டு கூறுகின்றனரா என்பதனைச் சோதிக்கலாம். அடுத்து, கால அளவினை அதிகரித்தால், ஆய்வாளரால் ஆய்வுக்குட்பட்ட மாணவர்களை நன்கு கவனித்து அவர்களின் செயல்களில் தவறுகள் ஏற்படின் திருத்த முடியும். அதோடு அவர்களுக்கிடையே ஏற்படும் கட்டொழுங்கு பிரச்சனைகளையும் களையமுடியும். இறுதியாக, இந்த அட்டை விளையாட்டு அணுகுமுறையை ஆசிரியர் மொழியணிகளைக் கற்றுக் கொடுக்க பயன்படுத்தலாம்.

10.0 முடிவுரை

முடிவாக, இந்த ஆய்வின் நோக்கத்தை அடையச் செய்வதற்கு அட்டை விளையாட்டு அணுகுமுறையானது முக்கியப் பங்காற்றியுள்ளது என்பது உண்மையான கூற்றாகும். இந்த அட்டை விளையாட்டு அணுகுமுறையானது மாணவர்களிடையே எழுத்துகளைச் சரியாக அடையாளங்கண்டு கூறும் திறனை மேம்படுத்தியுள்ளது என்பது உறுதியாகும். இந்த அணுகுமுறை தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் ஒரு புதிய சிந்தனை என்று ஆணித்தரமாகக் கூறலாம். ஆக, இந்த ஆய்வின் மூலம் கிடைத்த அறிவானது கல்வி உலகத்தில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெரிதும் பங்காற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

11.0. மேற்கோள் நூற்பட்டியல்

கணபதி, வி.(2010) நற்றமிழ் தற்பிக்கும் முறைகள். சென்னை: சாந்தா பப்ளிஷர்ஸ்

சுப்புரெட்டியார், ந. 2003). தமிழ் பயிற்றும் முறை சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்

மலேசியா, கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு (2010) வாசிப்பு. புத்ராஜெயா: கல்வி அமைச்சு

மீனா, சு & பிரேமா, டே.(2007). குழந்தை வளர்ச்சிக்கான விளையாட்டுச் செயல்பாடுகள். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

இராஜேஸ்வரி, (2006) கலைத்திட்டச் செயல்பாட்டின் கோட்பாடுகள். சென்னை: சாந்தா பப்ளிஷர்ஸ்

வைத்தியநாதன், பி.கே. (2007). கல்வி மனவியலும் குழந்தைக் கல்வியும். சென்னை: சாந்தா பப்ளிஷர்ஸ்.

Lau Ging Lim. (2012). Kesan Penggunaan Kaedah Bermain Sambil Belajar Dalam Proses Pembelajaran Sains Tahun Empat. Koleksi Artikal Penyelidikan Tindakan IPGKBL, 195-209

Lim Carol & Amir Hamzah Sharaai/ (2012). Perbandingan Kaedah Menggunakan Kade Permainan Dan Buku Besar Bagi Meningkatkan Pencapaian Murid Taun 4 Dalam Topik Penyesuaian Tumbuhan Terhadap Cuaca Lampau. Persidangan Kebangsaanpembangunan dan Pendidikan Lestari 2012, 41-54

Yee Cheng hong & Amir Hamzah Sharaai. (2012). Perbandingan Antara Kaedah Main peranan Dan Penggunaan Kad Permainan Bagi Meningkatkan Pencapaian Dan Minat Murid Tahun Empat Dalam Tajuk SiratanMakanan/ Persidangan Kebangsaan Pembangunan dan Pendidikan Lestari 2012, 66-7

NAME	: CHELVA LETCHMANAN
IDENTITY CARD NUMBER	: 921116086747
CONTACT NUMBER	: 0165196256 (+60165196256 for international call)
EMAIL ADDRESS	: chelva.iptb@gmail.com



படம் 1.7 : நான்காவது வார நடவடிக்கை



படம் 1.8 : ஐந்தாவது வார நடவடிக்கை



படம் 1.9 : ஆறாவது வார நடவடிக்கை

சான்றுகள்



படம் 1.4 : முதல் வார நடவடிக்கை



படம் 1.5 : இரண்டாவது வார நடவடிக்கை



படம் 1.6 : மூன்றாவது வார நடவடிக்கை



5. இரண்டாவது மொழியாகத் தமிழைக் கற்றல், கற்பித்தல்

– சுப்பிரமணியம் இராசரத்தினம், கனடா

அகிலத்தில் உள்ள நாடுகள் பலவற்றிலும் இன்று பல மொழி பேசும் மக்கள் குடியேறி வாழும் சூழலில், அந்த நாட்டின் மொழியை இலகுவாகவும், குறுகிய காலத்திலும் கற்பிப்பதற்கான செயல் முறைகளைக் (கற்பித்தல் முறைகளை) கற்க வருவோரின் தேவை கருதி அந்த நாடுகள் வகுத்துள்ளன.

இத்தகைய ஒரு புதிய கற்பித்தல் உத்திகள் தமிழ்மொழிக்கு இன்று முக்கிய தேவையானதொன்றாக உள்ளது. உலகெங்கும் பரவி வாழும் தமிழர்கள் தமது அடுத்த தலைமுறையினருக்குத் தமிழ்மொழியை இரண்டாவது மொழியாக் கற்பிக்க வேண்டிய சூழலே நிலவுகிறது.

இரண்டாவது மொழியாகத் தமிழ்மொழியைக் கற்பிக்க முற்படும்போது கற்பிப்போர் பின்வரும் விடயங்களில் தெளிவு பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

முதல்மொழி என்றால் என்ன? என்பது ஒன்று "முதல்மொழி என்றால் ஒருவர் பேசவும் புரிந்து கொள்ளவும் திறமை பெற்ற மொழி. அவரது முதன்மொழியாகும்.

எனவே முதன்மொழியைக் கற்க வருவோருக்கு எழுதுதல், வாசித்தல் போன்ற கற்றல் திறன்களே முன்னிலைப்படுத்தப்படுபவையாகும்.

ஆனால் பேசத் தெரியாத ஒரு மொழியை அல்லது சொற்களஞ்சியங்கள் அதிகம் தெரியாத ஒரு மொழியைக் கற்றல் இரண்டாவது மொழிகற்றல் எனப்படும்.

இங்கு "ஒலி'' வடிவம் முன்னிலைப்படுத்தப்பட்டு பேசுதல், புரிந்துகொள்ளல், எழுதுதல், வாசித்தல் போன்ற நான்கு திறன்களிலும் பயிற்சி அளிக்கப்படும்.

இரண்டாவது மொழியாகத் தமிழைக் கற்க வரும் மாணவர்களுக்கு; கற்பிக்க முற்படுவோர் "மொழியியலில்'' நன்கு புலமை பெற்றவர்களாக இருத்தல் முக்கியமானதாகின்றது.

"பண்டைய இலக்கியங்களை மட்டும் படிப்பதனால் மொழியறிவு வளர்ந்துவிடாது என்பதும், நம்நாட்டவரும், பிறநாட்டவரும் எழுதிய தமிழ் இலக்கண நூல்களைப் படிப்பதாலும் மொழியியல் வழிநின்று ஆராய்கின்றவர்களுடைய கருத்துகளைச் சிந்திப்பதாலும் மொழி வரலாற்றைக் கற்பதாலுமே, மொழிக்கல்வியைப் பெறமுடியும்' என்னும் அறிஞர் கூற்று சிந்திக்க வேண்டியதொன்றாகும்.

அத்துடன் கற்க வருவோரது முதல்மொழி, இரண்டாவதுமொழி, ஆகிய இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைத் தெரிந்திருக்க வேண்டும்.

இக்கட்டமைப்புக்களின் ஒப்பீடு மொழிகற்றலுக்கு பெரிதும் துணைசெய்யும் இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் பயிற்சிக்குரிய அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றன. தனது முதன்மொழியின் அடிப்படையில் சிந்திக்கும் ஒருவருக்கு ஒற்றுமைகளைக் கூறுவதைவிட, வேற்றுமைகளை விளக்கிச் சொல்லி அவற்றில் அதிகம் பயிற்சி தருவதுதான் இரண்டாம் மொழியாக ஒரு மொழியைக் கற்பித்தலில் வெற்றி அளிக்கும்.

அத்துடன் இரண்டாவது மொழி கற்பிக்கும்போது ஒவ்வொரு திறன்களையும் வளர்க்கத் தனித்தனியாக அதற்கான முறையில் பாடங்கள் அமைக்கப்பட வேண்டும். தொடக்க நிலையில் இவ்வாறு கற்பித்த பின்னர் இறுதி நிலையிலேயே ஒன்று சேரக் கற்பிக்க வேண்டும்.

இங்கு "மொழிகற்றல்'' முடியும் நிலையிலேயே "இலக்கியக்கற்றல்'' தொடங்குகின்றது.

ஒலிகளின் தோற்றம்

காற்றே ஒலியைப் பிறப்பிப்பது நுரையீரலில் இருந்து புறப்படும் காற்று நெஞ்சு, தொண்டை, வாய், மூக்கு ஆகிய காற்றறைகள் மூலம் வெளியேறும்.

அதேவேளையில் பல், நா, இதழ், அண்ணம், குரல்வளை (மடல்கள்) ஆகிய உறுப்புகளின் அசைவினால் ஒலிகள் பிறக்கும். இவற்றை ஒலியெழுப்பிகள் என அழைப்பர்.

ஒலியன்கள்

ஒரு மொழியில் உள்ள "ஒலியன்'' என்பது அம்மொழியின் கண் காணப்படும் சொற்களின் பொருளை வேறுபடுத்துவதற்குரிய அடிப்படையான ஒலி அலகு ஆகும்.

எனவே தமிழ்மொழியில் உள்ள ஒலியன்களை ஆராய்வதற்குத் தமிழ்மொழியில் உள்ள எழுத்துகளைப் பற்றிய முழுமையான அறிவை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

தொல்காப்பியர் கூற்றின்படி "எழுத்தென்பது 'அ' கர முதல் 'ன' கர இறுவாய் முப்பதென்ப'' தாகும். இவை உயிர் எழுத்துகள். மெய் எழுத்துகள் என இரு வகைப்படும்.

உயிர் எழுத்துகளின் தோற்றம்

நெஞ்சில் இருந்து எழும்பும் காற்று குரல்வளை மடல்களின் அதிர்வோடு காற்றறைகளில் எங்கும் தங்கு தடையின்றி வெளிவருவது ஆகும்.

மெய் ஒலிகளின் தோற்றம்

உச்சரிக்கப்படும்போது எழும் காற்று வாய்ப்பகுதியில் வரும்போது ஏதாவது ஒரு முறையில் தற்காலிகமாகத் தடைப்பட்டு பின்னர் வெளியே வரும்போது உண்டாகும் ஒலிகள் மெய் ஒலிகள் ஆகும்.

இவ்வாறு பிறக்கும் உயிர்எழுத்துகள், மெய் எழுத்துகள் ஆகிய 30 ஐயும் தொல்காப்பியம் முதல் எழுத்துகளாகக் குறிப்பிட்டபோதும் 12 உயிர்களில் 'ஐ', 'ஔ' தவிர்த்த 10 உயிர்கள் மாத்திரமே ஒலியன்களாகக் கணிக்கப்படுகின்றன. எனவே மெய் எழுத்துகள் 18ம்; உயிர் எழுத்துகள் 10ம் ஆக 28 எழுத்துகள் மாத்திரமே ஒலியன்கள் ஆகும்.

இரண்டாவது மொழியாகத் தமிழைக் கற்பிக்கும் எனது 25 வருடப் பட்டறிவில் எழுத்துச் சீர்திருத்தத்தில் 'ஐ' என்பதை 'அய்' என்றும் அதேபோன்ற 'கய்','மய்','தய்',..... வய்.... பய் என எழுதுவது மாணவர்கள் எழுத்துப்பிழை விடாமலும் இலகுவாகத் தமிழைக் கற்கவும் வழிவகுக்கும்.

என்னிடம் பல மாணவர்கள் நெடிலுக்கு 'காய்'....தாய்....வாய்....பாய் எனப் பாவிக்கும் நாம் ஏன் குறிலுக்கு மாத்திரம் வேறு வடிவத்தைக் (கை,தை) கொண்டுள்ளோம் எனக் கேட்பார்கள். அதேபோன்றே 'ஔ' என்பதையும் "அவ்' என்றும் பாவிக்கலாம்.

சொல்லமைப்பு

ஓர் ஒலியனோ (ஆ) ஒன்றுக்கு மேற்பட்ட ஒலியன்களோ சேர்ந்து 'உருபன்' (அசை) ஆகின்றன. உருபன்கள் சேர்ந்து 'சொல்' ஆகின்றது

ஆனால் எல்லா ஒலியன்களும் ஒன்றோடு ஒன்று சேர்ந்து வரா, எந்த எந்த ஒலியன்கள் எந்த எந்த ஒலியன்களைத் தொடர்ந்து வரும் என்பதைக் கற்பிக்க வேண்டிய தேவை உண்டு.

எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் `S' என்ற ஒலியனுடன் 'SB', 'SD','SJ', 'SG' என்று எந்தச் சொல்லும் சேர்ந்துவரா. அதேபோன்றே தமிழிலும் உருபனுக்கு (அசைக்கு) கட்டுப்பாடுகள் உண்டு. இவற்றைத் தெரிந்து கொண்டால் தமிழை இலகுவாகக் கற்பிக்கலாம்.

உயிர் ஒலியன்கள் எவ்வாறு மெய் ஒலியன்களுடன் இணைந்து அசைகளைப் (உருபன்) பிறப்பிக்கும் என்பதையும்; அசைகள் இணைந்து உருவாகும் சொற்களில் உயிர் எழுத்துகள் எவ்வாறு இடம் பெறும் என்பதையும், இலக்கணத்தின் அடிப்படையில் நாம் அறிந்துகொள்வது முக்கியமானது.

அத்துடன் மெய் எழுத்துகளும் தம்முடன் ஒன்றொடு ஒன்று எவ்வாறு இணைந்து கொள்கின்றன என்பதையும் நன்கு அறிந்து கொள்ளல் வேண்டும்.

இரண்டாவது மொழியாகத் தமிழைக் கற்க வருவோர் முறைப்படி ஒலியன்களையோ, எழுத்துகளையோ உச்சரிக்க முடியாதவர்களாக இருப்பார்கள். எனவே ஒவ்வொரு ஒலியன்களையும் எவ்வாறு உச்சரிப்பது என்பதனையும் ஒவ்வொரு ஒலியன்களினதும் கால அளவினையும் (மாத்திரை) முறைப்படி கற்பித்தல் முக்கியமானது.

அசைகள்

சொற்களை உச்சரிக்கும் போது அவற்றில் காணப்படும் உயிர்ஒலி கருவாக அமைய அதற்கு முன்னும் பின்னும் மெய்கள் வந்தோ வராமலோ இருக்க அசை உருவாக்கம் பெறுகிறது.

அசைகளின் அடிப்படையில் சொற்களைப் பகுத்து ஆரம்பநிலையில் கற்பித்தல் மிக முக்கியம், ஏனெனில் மாணவர்கள் முறையாகச் சொற்களை உச்சரிக்கவும், எழுத்துப்பிழையின்றி எழுதவும், அத்துடன் மாணவர்கள் பார்வையினாலேயே சொற்களைப் பகுத்தாராயும் திறனைப் பெறவும், உதவும். அதனால் அவர்களால் இலகுவாக வாசிக்க முடியும். எனவே வாசிக்க, எழுத, சொற்களைப் பகுத்து ஆராயும் திறனைப்பெற, அசைகள் எத்தனை வகைப்படும் எவ்வாறு தோற்றம் பெறுகின்றன என்பதனைப் பற்றி மாணவர்களிடம் தெளிவை உண்டாக்கல் முக்கியம்.

உயிர்மெய் எழுத்து (சார்பெழுத்து)

மெய் எழுத்தோடு உயிர் எழுத்துச் சேர்ந்து உருவாகும் உயிர்மெய் எழுத்துகளை கால அளவுடன் முறையாக உச்சரிப்பதற்கு மாணவர்களைப் பயிற்றுதல் முக்கியம். அத்துடன் உயிர்மெய் எழுத்தென்பது தமிழ்மொழிக்கே உரிய சிறப்பியல்பு உடையது என்பதை உணரவைத்தல் அதாவது இரண்டு ஒலிகளை ஒன்றாக்கி ஓர் எழுத்துப் படைக்கப் பட்டிருப்பதைப் புரிய வைத்தல் வேண்டும்.

முதல் மொழியாகத் தமிழ்மொழியை நன்கு பேசத் தெரிந்தவர்களுக்குக் கற்பித்துப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பின்வரும் வேறுபாட்டை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

முதல் மொழி	இரண்டாம் மொழி
1. வரிவடிவம் முதன்மையானது	ஒலி வடிவம் முதன்மையானது. "ஒலியன்கள்'', "அசைகள்'' அடிப்படையில் கற்பித்தல்
2. ஒரே நிலையில் எல்லா எழுத்துகளையும் அறிமுகப்படுத்தலாம்.	மிகச்சிறிய தொகை எழுத்துகளே (1-3) படிப்படியாக அறிமுகப்படுத்தப்படும்
3. கற்பிக்கும் மொழியில், ஆசிரியர் பேசுவது புரியும்	கற்பிக்கும் மொழியில் ஆசிரியர் பேசுவது முழுமையாகப் புரியாது
4.எல்லா எழுத்திலும் சொற்கள் இருக்கும் அறிமுகப்படுத்தப்படும் பொருள்கள் இருக்கும்.	கற்பித்த எழுத்துகளில் மட்டும் சொற்கள் இருக்கும்
5. கற்பிக்கும் மொழியில் சரளமாகப் பதில் தருவார்கள்	கற்கும் மொழியில் முழுமையாகப் பதில் தரமாட்டார்கள்
6. ஆரம்பநிலையில் எழுதுதல், வாசித்தல் என்பனவே கற்பிக்கப்படும் திறன்கள்	பேசுதல்,புரிந்துகொள்ளல், எழுதுதல், வாசித்தல் ஆகிய திறன்கள் கற்பிக்கப்படும்.
7. வாக்கியங்கள், இலக்கியங்கள் ஆரம்பத்தில் கற்பிக்கலாம்.	எழுத்துகள், சொற்கள், கற்ற சொற்களின் பொருள்கள் என்பவற்றில் தேர்ச்சி பெற்ற பின்பே வாக்கியங்கள் 'இலக்கியம்' கற்பித்தல் வேண்டும்.
8. தரத்தின் (Grade /ஆண்டின்) அடிப்படையில் நூல்கள் இருக்கும்	படிநிலையின் (Level) அடிப்படையில் நூல்கள் இருக்கும்
9. தமிழ்மொழியின் இலக்கண அறிவு மட்டும் இருந்தால் போதுமானது	தமிழ் மொழியின் இலக்கண மொழியியல் அறிவு வேண்டும். அத்துடன் கற்பவரின் முதல் மொழி அறிவு இருத்தல் சிறப்பு ஆகும்.

மேற்கூறப்பட்ட அடிப்படையோடு அறிமுகப்படுத்தப்பட்ட எழுத்துகளைக் கொண்டு உருவாகும் சொற்களின் பொருளை நன்கு விளங்கிக் கொள்ள, கற்பவரின் முதல் மொழியைக் கையாளுதல் இலகுவானது.

மொழி ஒரு தொடர்பு ஊடகம் என்ற வரையறை எல்லாவற்றையும் தாண்டி ஒரு இனத்துவ, கலாச்சார அடையாளமாக உலகில் வாழும் சகல இனங்களும் பார்க்கின்ற, ஏற்கின்ற, போற்றுகின்ற இன்றைய உலக ஒழுங்கில் தமிழராகிய நாமும் உலகோடு ஒத்து வாழல் வேண்டும். எனவே தமிழ்மொழியை இழந்துவிட்ட தமிழரை மீட்டெடுப்போம். மற்றையோர் இழந்துவிடாது பார்த்துக் கொள்வோம்.

"தமிழின் வாழ்வே தமிழரின் வாழ்வு''

6. பகுதி உற்றுக்கேட்டல் வழித் தமிழ் மொழி கற்றலும் கற்பித்தலும்-மொரீசியசு

Tamil Teaching and Learning through Listening Comprehenstion-Mauritius

முனைவர் சரஸ்வதி மொரீசியஸ்

"தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு
அமிழ்தே அவனுடை மொழியாகும்
அன்பே அவனுடை வழியாகும்"

நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

முன்னுரை

"கிரியோல்" என்னும் மொழி பரவலாக இருக்கும் மொரீசியசு நாட்டில் தமிழ் கற்றல் கற்பித்தல் ஒரு பெரும் சவாலாகக் கருதப்பட்டு வருகின்றது.

பன்மொழிகள் வழக்கிலுள்ள நாடு மொரீசியசு. பன்மொழிச்சூழல் கொண்ட மொரீசியசு நாட்டில் ஒவ்வொர் மொழி அடிப்படையில் தான் கல்வித் திட்டமும் அமைந்திருக்கிறது. ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு மொழிகளின் பயன்பாடு அதிகரித்துக் கொண்டு வருகின்றன. ஆங்கிலத்தையும் பிரஞ்சையும் படித்து அம்மொழியைச் சரளமாகப் பேச, எழுத ஒருவரால் முடியுமென்றால் வேலை வாய்ப்புக்கு, நாம் தகுதி பெற்றுவிட்டோம் என்ற நம்பிக்கை பலரிடையே ஏற்படுகிறது. இக்கசப்பான உண்மையை ஏற்றுக் கொண்டு பலர் தமிழ் மொழியைக் கை விட்டனர்; மற்றும் தமிழ் மொழியைக் கற்பதற்கு ஒரு பெரும் சுமையாகக் கருதி வருகின்றனர்.

இத்தகைய சூழலில், தமிழ் மாணவர்கள் ஒவ்வொருவரின் தேவையை அறிந்து கற்பித்தல் முறைகளையும் மொழி நடவடிக்கைகளையும் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆய்வின் சிறப்புக் கூறு

இவ்வாய்வுக் கட்டுரையானது உயர்நிலை மாணவர்களுக்குப் பகுதி கற்றல் கற்பித்தலில் கையாள இருக்கும் புத்தம் புதிய வழிமுறை முயற்சியேயாகும். கற்பிக்குங்கால் எளிதில் மாணாக்கர்களைச் சென்றடையும் என்பதே என் ஆய்வின் நோக்கம். மாணவர்களுக்குத் தமிழ் மொழியைக் கற்க ஆர்வத்தையும் அறிவையும் ஊட்டும் வகையில் இவ்வழிமுறை சிறப்பாகக் கருதப்படுவதை என் ஆய்வின் வழி ஆராயப்படும்.

மொரீசியசு நாட்டில் உயர்நிலையில் தமிழ்:

தொடக்கக் கல்வியில் ஆறாம் வகுப்பு முடித்த மாணவ மாணவியர் உயர்நிலைக் கல்வி பயிலுவதற்காக முதல் படிவத்தில் (form one equal to 7th standard) சேருவார்கள். பதினொன்று வயது முதல் பதினெட்டு வயது வரை உள்ள

மாணவர்கள் உயர்நிலைக்கல்வி பயிலுவார்கள். மொரீசியசு நாட்டில் ஏறக்குறைய 60 உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ்மொழியை ஒரு பாடமாக மாணவ மாணவியர் பயிலுகின்றனர். இப்பள்ளிகளில் பட்டமும், பயிற்சியும் பெற்ற தமிழ் ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். பல சூழல்களில் போட்டிப் போட்டுத் தமிழ் தன் நிலையைக் காத்து வருகிறது. அடுத்து, சில (75) மாலைப் பள்ளிகளிலும் உயர்நிலைக் கல்வி அளிக்கப்படுகிறது.

பாடத்திட்டமும் பாடங்களும்:

மொரீசியசு நாட்டில் பாடத்திட்டங்களை வகுக்க 1984 ஆண்டில் ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்தது. அக்குழுவின் பெயர் "தேசியக் கல்வி ஆராய்ச்சி மையம்" (National Centre for Curriculum Research and Development) என்பதாகும். இக்குழுவினர் திறம்படச் செயல்பட்டுப் பாடங்களைத் தேர்வு செய்தனர். மொரீசியசு நாட்டின் நிலைக்கு ஏற்பப் பாடங்களும், படங்களும் நூல்களில் இடம்பெறுமாறு இக்குழு பாடத்திட்டத்தை அமைத்தது. இப்பாடத்திட்டம். "மொரீசியசில் தமிழ் மூன்றாம் மொழியாகப் பயிற்றுவிக்கப்படுகின்ற காரணத்தினால் அந்நிலைக்கு ஏற்பவே தயார் செய்யப்பட்டது" (பொன்னுசாமி திருமலைச்செட்டி, 7.7.2001, நேர் காணல்) என்பதும் உணரத்தக்கதாகும். இப்பாடத்திட்டம் மொழித் திறன்களாகிய கேட்டல், வாசித்தல், எழுதுதல் என்பவைக்கு இடம் அளிக்கின்றன. மாணவர்கள் தேர்வில் சிறப்பாகச் செய்யவும் நல்ல மதிப்பெண்களை வாங்கவும் வாய்ப்பு அளிக்கின்றது.

வழக்கமான பகுதி பயிற்றல் - மொரீசியசு

"பகுதி என்றால் செய்தி, குறித்த புரிதல் நிலை
இப்புரிதல் நிலை, எழுதப்பட்ட சொற்களின் இடையே
உள்ள தொடர்பு மற்றும் பகுதிக்கு அப்பால்
அறிவு தூண்டுவதும் எனக் குறிப்பிடப்படும்.' கூகுள்

மொரீசியசு நாட்டில் பொதுவாக, பகுதி கற்பித்தலில் மாணவர்களிடம் ஆசிரியர் அவர்களுக்குரிய பாடநூலில் வரும் பகுதியைப் பற்றிப் பேசுவார். அவர்களிடம் அப்பாடத்தைப் பற்றிய முன் அறிவைச் சோதனை செய்வார். பின்பு வாய்மொழிப் பயிற்சிகள் நடைபெறும் கேள்விகள் பெரும்பாலும் பிரஞ்சு, கிரியோல், ஆங்கிலம் என்ற மொழிகளிலும், தமிழிலும் கேட்கப்படும்.

அடுத்து, மாணவர்கள் ஒவ்வொருவரும் பகுதியை வாசிக்கத் தொடங்குவார்கள். வாசிக்கும்போது சிலர் நன்றாக வாசிப்பார்கள். சிலர் எழுத்துகளைக் கூட்டி வாசிப்பார்கள். வேறு சிலர் எழுத்துக்களையே நன்றாக இனங்காட்ட முடியாமல் தவிக்கின்றனர். ஆசிரியர் மீண்டும் பகுதியை வாசித்து, எழுத்துகளையும் சொற்களையும் அடையாளங் காட்டிப் பொருள் உணரச் செய்வார். பெரும்பாலானவர்களுக்கு விளக்கங்களை ஆங்கிலத்திலும், கிரியோல் மொழியிலும், பிரஞ்சு மொழியிலும் புரிய வைப்பர். ஆனால், மறக்காமல் உடனுக்குடன் தமிழில் விளக்கங்களையும் சொல்வார். மாணவர்கள் அந்நேரத்தில் குறிப்பு எடுப்பார்கள். இறுதியில், வினா-விடை பயிற்சிகளும், இணைப் பொருள் சொல் பயிற்சிகளும் மற்றும் சொற்றொடர் அமைப்புப் பயிற்சிகளும் செய்வார்கள். 30% மதிப்பெண்கள் பெறக்கூடிய பயிற்சிகளாகும்.

பகுதிக்கு

"Reading comprehension is defined as the level of understanding of a text/message".பகுதி என்றால் செய்தி குறித்த புரிதல் நிலை வரையறுக்கப்படுகிறது. மேலும்,

"This understanding comes from the interaction
between the words that are written and how they
trigger knowledge outside the text/message" கூகுள்

இப்புரிதல், எழுதப்பட்ட அவ்வார்த்தைகளின் இடையே தொடர்பு இருந்து வருகிறது மற்றும் பகுதிக்கு அப்பால் எப்படி அறிவைத் தூண்டுகிறது; எனவும் படும்

பகுதி கற்பித்தலில் புரிதல் மிகவும் இன்றியமையாதது. இதுதான் இப்பயிற்சியின் முதல் படியாகும். புரிதல், மொழித் திறன்களைச் சார்ந்திருக்கும் புரிந்துணர்தல் திறனை அடிப்படையிலேயே மேம்படுத்த வேண்டும் என்ற கொள்கைக்கு இணங்க மாணவர்கள் முறையான புரிந்துணர்தல் முறையை அடைந்திருக்க வேண்டும். மாணவர்கள் புரிந்துணர்தல் திறனில் சிக்கல்கள் பலவற்றை எதிர்நோக்குகின்றனர். அவர்கள் புரிந்த கொள்ளாமல் வாசிக்கிறார்கள் மற்றும் எழுதுகிறார்கள். புரிந்து கொள்ளாமல், தமிழ் மொழியைக் கற்பிக்கும் போது மொழி மீது அக்கறைக் காட்டுவதில்லை. ஈடுபாடும் அதில் கொள்வதில்லை. மொழியைக் கற்றுக் கொள்வதை ஒரு பெருஞ்சுமையாகக் கருதி வருகின்றனர். அதில் தேவையான கவனமும் செலுத்துவதில்லை. இங்கு, மொழிப் பாடத் திட்டங்களுக்குரிய மொழித் திறன்களாகிய வாசிப்புக்கும் எழுத்துக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றன.

7. தமிழ்மொழியைக் கற்பதை ஒரு சுமையாகக் கருதி வரும் மாணவர்களுக்குப் பகுதி பயிற்றல் -உற்றுக் கேட்டல் வழி முறை

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ் செல்வத்து ளெல்லாந் தலை." என்னும் திருவள்ளுவரும்

"தமிழர்கள் தங்கள் அனுபவங்களையும் கண்டு
பிடிப்புகளையும் தமிழ் மொழியைப் பயன்படுத்திச்
சொல்லி வைத்திருப்பார்கள், அவ்வாறு சொல்லியவை
புத்தக வடிவில் இல்லாமல், செவி வழிக் கதைகளாக இருக்கலாம்'' என்றும் சான்றோர்

செவிவாயிலாகப் பெறும் கல்வியின் சிறப்பைப் பலவாகப் போற்றிக் கூறியுள்ளனர்.

புதுமை ஆர்வமும் எளிமை வேட்கையும் மாணவர்கள் விரும்புகிறார்கள். முன்பைவிட, மொரீசியசு தமிழ் மக்களுக்குத் தமிழ் மொழியைத் தொடர்ந்து கேட்கும் வாய்ப்பு மிகுதியாகி வந்தாலும் சூழ்நிலைகளில் மேலும் வளர்ச்சி அடையவில்லை. பல நிலைகளில் கேட்டல் நிகழ்வதைக் குறித்து அறிவியல் அறிஞர் ஒருவர் கேட்டல் யுகம் என்று குறிப்பிட்டாலும் மொரீசியசு நாட்டிலே மாணவர்களின் கேட்டல் நிகழ்வுகள் மிக மிகக் குறைவு.

முன் சோதனையில் வாசித்துக் கருத்துணரும் திறனும் எழுத்துத் திறனும் முதன்மையாக மதிப்பிடப்படுகின்றன. ஆனால், உற்றுக் கேட்டல் வழிமுறையில் கேட்டல் மற்றும் புரிந்துணர்தல் திறன்கள் முதன்மையாக மதிப்பிடப்படுகின்றன.

ஆசிரியர் மாணவர்களுக்கு ஏற்கனவே தெரிந்த, எளிமையான சொற்றொடர் அமைப்புகளோடு கொண்ட கதைகளையும், பகுதிகளையும் ஒரு பத்தி அளவில் வாசிப்பார். கூடுதல் சுவையுடன், முகபாவங்கள் மற்றும் வார்த்தைகளை ஒழுங்குபடுத்தித் தொடர்பு கொள்ள முயற்சி செய்கிறார். ஆசிரியர் தொடர்பு கொள்ளும் போது சரியான உச்சரிப்பு, சத்தம் குரல் ஏற்றத்தாழ்வு, அழுத்தம், வினா-விடை விளிப்பு அனைத்தும் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

மாணவர்கள் ஆசிரியர் வாசிப்பதை உற்றுக் கேட்பார்கள். கேட்ட பிறகு, பயிற்சிகளைச் செய்வார்கள். பயிற்சிகள் வாய்மொழிப் பயிற்சிகளாகவும் எழுத்துப் பயிற்சிகளாகவும் தரப்படும். தொடக்கத்தில், வினாக்களுக்கு ஒரு சொல் விடைகளைக் கேட்கப்படும். உற்சாகமும் வளர்ச்சியும் தொற்றிக் கொள்ள வினாக்களுக்கு முழு விடைகளும் கேட்கப்படும். இடை இடையே, பல புதிய சொற்களின் பொருள்களையும், வரலாற்றுச் செய்திகளும் கற்றுத் தெரிந்து கொள்வார்கள். சொற்களோடு சொற்றொடர் அமைக்கவும் பயிற்சி பெறுவார்கள்.

ஆய்வு முறைமை

இந்த ஆய்வுக்கு, உயர்நிலைப் பள்ளிகளுள் பயிலும் ஏறக்குறைய (200-300) மாணவர்கள், 30 ஆசிரியர்களும் சேர்ந்து பங்கெடுத்தனர். ஆய்விற்கான தரவுகளைத் திரட்டுவதற்கு உற்று நோக்கல், நேர்காணல், வினா நிரல், முன்னறி/பின்னறிச் சோதனை போன்றவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

படி 1: மாணவர்கள் பயிற்சிப் புத்தகம் மற்றும் எழுதுகோல் தயார் நிலையில் வைக்கிறார்கள். ஆசிரியர் சொல்லப்போவதை உற்றுக் கேட்கத் தயார் ஆகின்றனர்.

படி 2: ஆசிரியர் பகுதியை வாசிக்கத் தொடங்குகிறார். மாணவர்களின் நடவடிக்கைகளை ஆசிரியர் கண்காணிக்கிறார்.

படி 3: நடவடிக்கையின் போது, மாணவர்கள் சிலர் ஆசிரியர் வாசிப்பதை நிறுத்தி, புதிய சொற்களின் பொருளை அறிந்து கொள்கிறார்கள். வேறு சிலர் வேகமாகக் குறிப்புகள் எடுத்தனர். இன்னும் சிலர் கேட்பதை நினைவில் நிறுத்தப் போராடுகின்றனர்.

படி 4: ஆசிரியர் பயிற்சிகளை மாணவர்களுக்கு அளித்தார். பயிற்சிகள் பலகையில் எழுதப்பட்டன. உடனே மாணவர்கள் செயலில் இறங்கினர்.

படி 5: ஆசிரியர் திருத்தம் செய்தல், உடனுக்குடனே மாணவர்கள் தம் பிழைகளை அறிந்து கொள்கிறார்கள்.

உற்றுக் கேட்டல் அளவீட்டு அட்டவணை

பிரிவு 1 (வடக்கு)	பிரிவு 2 (மேற்கு)	பிரிவு 1 (தெற்கு)	பிரிவு 4 (கிழக்கு)
20 % - 40%	40 % - 60%	60 % - 80%	60 % - 100%
சிறிது அறிந்து விளங்கிக் கொள்ளல்	அண்மையில் கேட்டவற்றைக் குறைந்த அளவில் பயன்படுத்தல்	அண்மையில் கேட்டவற்றை ஓரளவு பயன்படுத்தல்	அண்மையில் கேட்ட வற்றை நன்றாகவும் சரியாக வும் பயன்படுத்தல் அண்மையில் கேட்ட வற்றைச் சரளமாகவும் சரியாகவும் பயன்படுத்தல்
சிறிது சிந்தித்து எழுதுதல்	சில விடைகள் மட்டும் சரியாக அளித்தல்	சரியான பொருத்தமுடைய சில விடைகள் அளித்தல்	சிறப்பாக விடைகள் அளித்தல் மிகவும் சிறப்பாக விடைகள் அளித்தல்
சிறிது கற்றவற்றை உபயோகித்தல்	கேட்டலுக்குத் துலங்கல் குறைவு வினா-விடை சரியாக அமையவில்லை	கேட்ட கேள்விகளுக்கான விடை சரியாகக் கூறல்	கேட்ட கேள்விகளுக்கான விடை மிகச் சரியாகக் கூறல்

ஒப்பீட்டு அளவீட்டு அட்டவணை -முன் சோதனை . Figure 1

80%-100% தரம் 1	60%- 80% தரம் 2	40%-60% தரம் 3	20%-40% தரம் 4	10%-20% தரம் 5
நல்ல விடைகள், நல்ல புரிந்துணர்தல், நல்ல சொல்வளம்	சிறிது புரிந்துணர்தல், முழுமையான கேள்விகளுக்கு முழுமையற்ற விடைகள், சிறிது சொல்வளம், எழுத்துப் பிழைகள்	இலக்கணப் பிழைகள், எழுத்துப் பிழைகள், தொடரியல் பிழைகள், வேற்றுமை பிழைகள், சிறிது சொல்வளம்	சொல்வளமின்மை, மொழி அறிவு குறைபாடு, இலக்கணப் பிழை, தொடரியல் பிழை, சில விடைகளில் முக்கியமான கூறுகள் இல்லை.	சொல்வளமின்மை, விடை அளித்தலில் கவனமின்மை, கேள்விகளுக்கு இடையே தொடர்பின்மை, பொருளைத் தெளிவாகவும், முழுமையாகவும் வெளிப்படுத்த விடைகளில் முக்கியமான கூறுகள் இல்லை, மொழி அறிவு குறைபாடு, எழுத்து மற்றும் தொடரியல் பிழை.

ஒப்பீட்டு அளவீட்டு அட்டவணை -முன் சோதனை . Figure 2

80%-100% தரம் 1	60%- 80% தரம் 2	40%-60% தரம் 3	20%-40% தரம் 4	10%-20% தரம் 5
மொழி அறிவு அதிகரித்தல், அண்மையில் கேட்டவற்றைச் சரளமாகவும் சரியாகவும் பயன்படுத்தல், மிகவும் நன்றாக விடை அளித்தல், கேட்ட கேள்விகளுக்கான விடை மிகச் சரியாகக் கூறல், அதிகக் கவனம் செலுத்தல், சிறப்பாகச் சிந்தித்தல்	புரிந்துணர்தலில் மேம்பாடு காணுதல், நல்ல விடைகளை அளித்தல், சொல்வளம் அதிகரித்தல், அண்மையில் கேட்டவற்றை ஓரளவு பயன்படுத்தல், சரியான பொருத்தம் உடைய சில விடைகளை அளித்தல், ஓரளவு சிந்தித்தல்.	எழுத்துப் பிழை குறைவு, தொடரியல் மற்றும் வேற்றுமைப் பிழை குறைவு, சொல்வளம் அதிகரித்தல், ஓரளவு சரியான விடைகளை அளித்தல்	விடை அளித்தலில் கவனம்செலுத்துதல், மொழி அறிவு வளர்ச்சி, எழுத்து மற்றும் தொடரியல் பிழை குறைவு, சொல்வளம் அதிகரித்தல், கேட்ட கேள்விகளுக்கு விடை ஓரளவு சரியாகக் கூறல்.	கேட்டலுக்குத் துலங்கல் குறைவு வினா-விடை ஓரளவு சரியாக அமைந்தது. முன்பை விட சிறிது மொழி அறிவு வளர்ச்சி, சொல்வளம் அதிகரித்தல், ஓரளவு விடை அளித்தலில் கவனம் செலுத்துதல்

கண்டுபிடிப்புகள்

1. மாணவர்கள் கற்றுக் கொண்டதை உறுதிப்படுத்துவது சரியான வழிமுறையாகத் தென்பட்டது.

2. தங்கள் கருத்துகளை அவர்களால் சுயமாக வெளிப்படுத்த முடிந்தன.

3.முன்பு கற்ற வழி மொழியோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இவ்வழிமுறையில் சிறப்பாக விடைகள் கொடுக்கப்பட்டிருந்தன.

4.முன்பு கசந்த பகுதிப் பாடம் இப்போது இனிக்கின்றது. அது மட்டுமின்றி மாணவர்களின் ஆர்வமும் தூண்டப்படுகிறது. கற்றலில் மனமகிழ்வு ஏற்படுகிறது.

5.சொல்வளமும் அதிகரித்தது கற்பனை, உற்று நோக்கல் திறன் வளர்ந்தது.

6.கற்பித்தலில் பல இடர்ப்பாடுகள் எழுந்தாலும் அவைகளை ஆசிரியர் நீக்கி மொழியைக் கற்பிக்கும்போது மாணவர்கள் தகுந்த தேர்ச்சியை அடைந்தனர்.

7. தமிழில் மாணவர்களுக்கு ஒலி ஒற்றுமையுடைய ல,ள, ழ எழுத்துகள் ன,ந,ன,ண எழுத்துகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதில் குழப்பங்கள் குறைந்தன.

8. மன உளைச்சல் இல்லாத மொழி கற்பதற்கான சூழல் உருவாகியது.

நன்மைகள்:

குறுகிய காலத்தில்மொழி அறிவைப் பெறுதல்:

வழக்கமாக, ஒரு வாரத்தில் முதல் படிவம் முதல் மூன்றாம் படிவம் வரை 105 மணித்துளிகள் உயர்நிலைப் பள்ளிகளில் அளிக்கப்படும். பெரும்பாலான மாணவர்கள் தமிழோடு கொஞ்சி விளையாடவும் தொடர்பு கொள்ளவும் அந்நேரங்களில் மட்டும். ஒரு கையளவு (10%) மாணவர்கள் மாலைப் பள்ளிகளில் அல்லது அவர்களின் இல்லங்களில் தமிழைக் கேட்கிறார்கள்.

பொதுவாக, ஒரு வாரம் ஒரு பகுதியைச் செய்து முடிக்கின்றோம். அதற்குப் பதிலாக, உற்றவழி முறையைக் கொண்டு ஒரே நாளில் அல்லது இரண்டு நாள்களில் செய்து முடிக்கலாம். நேரம் மிச்சமாவதோடு கடின

உழைப்பில்லாமல் எளிதாகச் சிக்கல் இல்லாமல் மேலும் உற்சாகத்தோடும் செயல்படும் நிலையை எய்த வாய்ப்புள்ளது. உடனுக்குடன் பிழைகளை அறிந்து கொண்டு திருத்திக் கொள்ளவும் வாய்ப்பு உண்டு.

பயில்கூறுகள், அதாவது படங்கள், நூல்கள், அட்டைகள் போன்ற துணைக் கருவிகள் இல்லாமலே மொழி கற்றல் கற்பித்தல் நடைபெறுகிறது. சிறியரின் பணிச்சுமையையும் மாணவரின் மனச் சோர்வை நீக்கி மகிழ்ச்சியையும் தேடுதலையும் ஏற்படுத்தும்.

புரிதலை மேம்படுத்துதல், கேட்டல் திறனை வளர்த்தல்

மாணவர்களின் தேவைகளை அடையாளங் காண்பது அவசியம். கற்பிப்பதன் நோக்கங்களையும் புரிந்துணர்தல் திறன்களையும் அடையாளங்கண்டு முறைப்படி செயலில் இறங்க இவ்வழிமுறை வாய்ப்பு அளிக்கின்றது. தெரிந்த செய்திகளை மாணவர்கள் தமிழில் கேட்டுக் கேட்டு தமிழ் அறிவைப் பெறுகிறார்கள். அவர்களுடைய சொல்வளமும் அதிகரிக்கின்றது. சொல்வளம் அதிகரிப்பதால் விரும்பிப் பயிற்சிகளைச் செய்கிறார்கள். புதிய சொற்களை அறிந்து கொள்கிறார்கள். அடுத்து, சொற்றொடர் அமைப்புப் பயிற்சிகளை மேம்படுத்தவும் பயிற்சி பெறுகிறார்கள்.

மொழி மீது அக்கறை உண்டாக்குதல்

இக்காலத் தமிழ் மொழி கல்வியில் பயன்படுத்தப்பட்டு வரும் செயல்முறைகளில் எளிமையும் புதுமையும் தேவை கதையைக் கேட்டும், அறிந்த செய்திகளைத் தமிழில் கேட்டும் மாணவர்கள் சலிப்படைய மாட்டார்கள். மனம் சிந்திப்பதற்கு மொழியின் உதவி தேவைப்படுகிறது. இவ்வகையில், தமிழ் மொழியை இன்ப மூட்டும் வகையில் கேட்கக் கூடிய சூழல் உருவாகி வருகிறது. மாணவர்களின் கவனமும் ஈர்க்கப்படுகிறது.

கேட்டவற்றை நினைவில் நிறுத்துதல்

"சொற்கள் உதிர்க்கப்பட்டதும் மரித்து விடுவதில்லை; அக்கணம் முதல் அவை உயிர்பெறத் தொடங்குகின்றன." எமிலி டிக்கின்சன் என்ற அறிஞர் கூற்று.

எழுத்துக்குரிய முறையான ஒலி தெரிந்தால் மாணவர்கள் வாசிக்கவும் எழுதவும் முடியும். எழுத்துக்களைப் பிழையாக உச்சரிப்பதன் வழி சொல்லின் பொருள் மாறுபடும். கெட்டுப் போகும் எனவும் மாணவர்கள் அறிந்து கொள்கிறார்கள். உச்சரிப்புக்கு முதன்மையான இடம் அளிக்கின்றது. இவ்வழிமுறை அது மட்டுமல்ல. மாணவர்கள் சிறப்பாக வாசிக்கவும் எழுதவும், கற்பதை நினைவில் நிறுத்தவும் துணை புரிகின்றது. இச்சூழலில், மாணவனின் சிந்தனை விரிவு பெற உதவுகிறது.

மாணவர்களுடைய ஈடுபாட்டை அதிகரித்தல்

கேட்டல், பேசுதல், எழுதுதல், சிந்தித்தல் போன்ற நடவடிக்கைகளில் சிரமப்படுபவர்களுக்குத் தன்னம்பிக்கையும் ஈடுபாடும் அதிகரிக்கிறது. குழப்பம் தெளிந்து, மாணவர்கள் விரும்பும் வகையில் அவர்களுக்குப் பிடித்தமான முறையில் வகுப்பறையில் தமிழ் கற்பிக்கப்பட்டதால் அவர்கள் கவரப்படுகிறார்கள். ஆசிரியரும் தம் பணியில் வெற்றி பெறுகிறார்.

சிக்கல்கள்

1. ஆசிரியர்கள் சிலர் இவ்வழிமுறையைப் பின்பற்றுவதில் பின்னடைகிறார்கள். ஏனென்றால் அதற்குத் தனியாக நேரம் ஒதுக்குவது பெரும் சவாலாக அமைகிறது.
2. மாணவர்கள் சிலர் இதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். சில சொற்களை நினைவில் கொள்ள முடியவில்லை. கேட்டுக் கேட்டுப் பழகிய பின்பு தான் பயிற்சிகளை அவர்களால் செய்ய முடிகிறது.
3. முதல் படிவம் முதல் மூன்றாம் படிவம் வரை உள்ள மாணவர்கள் அதிக அக்கறை காட்டினார்கள். நான்காம், ஐந்தாம் படிவ மாணவர்கள் வேறு சிந்தனைகளில் இருப்பதாலும், இம்முறையின் பழக்கக் குறைவினாலும் அவ்வளவு சிறப்பாகத் தேர்ச்சி பெறுவதில்லை. ஆசிரியர் ஊக்குவிப்பாலும், வலியுறுத்தலினாலும் பயிற்சிகளைச் செய்கிறார்கள்.
4. மாணவர்களின் தரத்துக்கேற்ற கதைகளோ, பகுதிகளோ மட்டுமே பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

5. சிறிது மொழிவளம் கொண்ட மாணவர்கள், மொழிவளம் சிறிதும் இல்லாத மாணவர்கள், மொழிவளம் கொண்ட மாணவர்கள் சேர்ந்து பயில்வதால் தாழ்வு மனப்பான்மை ஏற்படுகிறது.

6. மாணவர்களின் வாசிப்புப் பயிற்சி குறைபடுகிறது.

பரிந்துரைகள்

1. மாணவர்கள் பிழையாகச் சொன்னாலும் அதைக் கேட்டுப் பிழை நீக்கி, ஆசிரியர் எழுதுவதன்வழி மாணவர்கள் உடனுக்குடன் தம் பிழைகளையும் அறிந்து கொள்கின்றனர்.

2. இப்படித்தான் செய்ய வேண்டும் என்ற விதிமுறைகளைத் தற்காலிகமாக மறந்துவிட்டு வெவ்வேறு விதங்களில் சிந்தித்துச் செயல்படுவதற்கு இவ்வழிமுறை வழி காட்டுகிறது.

3. நம் மாணவர்களிடம் வாசிக்கும் பழக்கம் இல்லை. அவர்கள் வானொலியும் கேட்பதில்லை. சிலர் மட்டும் ஒலிப் பதிவு நாடாக்களைக் கேட்கிறார்கள். மிகச் சிலர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கிறார்கள். இவ்வழிமுறையினால், கேட்டல் அதிகரிக்கின்றது.

4. பயில் ஊக்கமின்மை பயில்தல் நிகழ்வதற்குத் தடையாக அமைகின்றது. வேறு மொழிகளின் தாக்கம், ஈடுபாடின்மை என்பவையும் காரணிகளாக அமைகின்றன. படிப்படியாகப் பயில்தல் நிகழவும், இவ்வழிமுறை எளிமையான முறையில் உள்ளீடு வழி வகிக்கின்றது.

5. ஆர்வத்துடன் வகுப்பைக் கவனித்து, மாணவர்களின் பொறுப்புணர்வும் அதே வேளையில் சொல்வளமும் அதிகரித்திருப்பதைக் காண முடிகிறது. மாணவர்கள் விருப்பமான நடவடிக்கைகளில் ஈடுபடும்பொழுது ஆர்வத்துடன் தமிழ் மொழியைப் படிக்கிறார்கள்.

6. "மொழி அழிந்தால், அந்த மொழிக்குரிய இனம் அழிந்துவிடும்", என்பார்கள். அதனால், இவ்வழிமுறை அடுத்து வரும் இளைய தலைமுறையினருக்கு நமது மொழியைப் பாதுகாத்து வைக்கும்.

கருத்துரை மற்றும் முடிவுரை

பல்லின மக்கள் கொண்ட மொரீசியசு நாட்டில் வேலை வாய்ப்பு மிகுந்த பிரஞ்சு மொழியையும் ஆங்கிலத்தையும் மாணவர்கள் விரும்பிப் படிக்கிறார்கள். கடினம் என்று எண்ணி தமிழ் மொழியை நினைத்தாலே பயம், ஊக்கமின்மை, அக்கறையின்மை சேர்ந்து பயிலுதல் நிகழ்வுகளைப் பாதிக்கின்றன.

இம்முறையில் கற்பித்துக் கொடுத்தபோது மாணவர்கள் நன்றாகப் புரிந்து கொண்டு கேள்விகளுக்குச் சரியான விடைகளை அளித்தனர். மாணவர்களும் சோம்பலின்றியும் சுறுசுறுப்புடனும் பாடங்களில் கவனம் செலுத்தி வந்தார்கள். குறிப்பாக எழுத்தியல், சொல்லியல் ஆகியவற்றை அடையாளங்காணவும் மிகவும் நன்முறையில் பயில்வதற்கும் இம்முறை நன்கு பயனளித்தது.

மாணவர்கள் இவ்வழிமுறையினால் எழுத்து, சிந்தனை வாய்மொழிப் பயற்சி திறன்களிலும், சொல்வளம் அதிகரித்தலிலும் மேம்பாடு அடைந்துள்ளனர். நன்முறையிலும் தெளிவாகவும் கற்பிப்பதற்காக இது ஒரு சிறந்த வழிமுறையாகும். மொழி பயிலுதல் சுமையின்றி நிகழ்ந்ததனால் எதிர்காலத்தில் மொழியும் நிலைப்பதற்கு ஒரு பெரும் வாய்ப்பளிக்கின்றது.

துணை நூல்கள்

1. பன்மொழிச் சூழலில் தமிழ், Faculty of Language and Lingusitics University of Malaya 2011

2. Dr.P.Tiroumalechetty (2014), Tamil cultural Identity in Mauritius, a Sociolinguistic perspective, Best Graphics press Mauritius.

3. 10 ஆவது உலகத் தமிழாசிரியர் மாநாடு ஆய்வடங்கல், மலேசியா, 2013

4. வசந்தம் (1989), ஏழாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுச் சிறப்பு மலர், மொரீசியசு, மகாத்மா காந்தி நிறுவன வெளியீடு.

5. உலகநாதன், தணிகை (தெ.ஆ.) 1960, நாமக்கல் கவிஞர் பாடல்கள், சென்னை, தி லிட்டில் ப்ளவர் கம்பெனி.

6. Report for teachers cambridge, 2012-13 Internation Advanced Level 9094/5 (Listening Comprehenseion French)

8. தமிழ் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள்

சி.மரிய ஆரோக்கியதாஸ், பட்டதாரி ஆசிரியர், திருக்கோவிலூர்

முன்னுரை

முற்காலத்தில் மாணவர்கள் ஆசிரியர் இல்லம் சென்று, அவர் இல்லத்திலேயே தங்கி அவர் பாடம் சொல்கிறபோது கேட்டு மொழி அறிவும் பிற பாட அறிவும் பெற்றனர். இதனை நன்னூல்

"கோடல் மரபே கூறுங்காலை

பொழுதொரு சென்று வழிபடல் முனியான்

முன்னும் பின்னும் இரவிலும் பகலிலும்

அகலானாகி அன்போடு கெழீஇக்

குணத்தோடு பழகிக் குறிப்பின் வழிநின்று''

கற்றனர் எனக்கூறுகிறது.

முற்காலத்தில் படிப்பு ஆசிரியர் மையமாக இருந்தது. சிறிது காலத்திற்குப் பின்னர்படிப்பு, பாடப்பொருள் மையமாயிற்று. ஆனால் தற்காலத்தில் கல்வி மாணவரை மையமாகக் கொண்டு நடைபெறுகிறது. எனவே, கற்றல் முறைகளிலும் மாற்றம் ஏற்பட வேண்டும்.

மொழிப்பாடம் பிற பாடங்களிளின்றும் வேறுபட்டதாகும். பிற பாடங்களில் பாடப்பொருள் முதலிடம் பெறும். ஆனால் மொழிப்பாடத்தில் மொழித்திறன் முதலிடம் பெறும். பாடப் பொருளைக் கற்பிப்பதைவிட மொழித்திறன்களைக் கற்பிப்பது சிக்கலானது. இக்கட்டுரையில் தமிழ்மொழி கற்பித்தலில் புதிய அணுகுமுறைகளைப் பற்றிக் காண்போம்.

1. விளையாட்டு முறை:

விளையாட்டில் குழந்தை முழு ஆற்றலையும் வெளிப்படுத்தும். அந்த ஆற்றலைக் கல்விக்குப் பயன்படுத்துவது சிறந்தது என்று கல்வியாளர் கால்டுவெல் குக் கூறியுள்ளார்.

"படைப்பாற்றல்களின் சிறந்த வெளிப்பாடே விளையாட்டாகும்'' என்று **நன்** என்ற கல்வி வல்லுநர் கூறியுள்ளார். விளையாட்டு முறையில் கற்பதால் படிப்பில் வெறுப்பு ஏற்படுவதில்லை என்பது மட்டுமன்று, மாணவர் படிக்கிறோம் என்று அறியாமலே கற்கின்றனர். மாணவர் விளையாட்டில் ஈடுபடும் பொழுது தாமே சில செயல்களைத் தொடங்கிச் செயல்படுவதால், தான் தொடங்காற்றால் (Inititative) வளர்கின்றது. அதன் மூலம் மாணவர் தன்னம்பிக்கை உடையவராகின்றனர்.

தமிழ் கற்பித்தலில் விளையாட்டு முறை:

தொடக்கநிலைப் பள்ளிகளுக்கு:

1. குறிப்பிட்ட எழுத்துகளை வட்டமிடல்-கரும்பலகையில் நா, பா போன்ற எழுத்துகளைத் தோட்டம், தாத்தா, நாய், நோய்,பாட்டு போனான் என்னும் சொற்களையும் எழுதி மேற்குறித்த எழுத்துகளை வட்டமிடச் சொன்னால் தோட்டம் என்னும் சொல்லில் 'தா' என்பதை வட்டமிடும். வரிவடிவம் அறிந்ததைத் தேர்ந்தறிய இவ்விளையாட்டு பயனுள்ளதாக அமையும்.
2. படங்களின் பெயர்களில் ஓர் எழுத்து விடுப்பட்டிருக்க அதனை நிரப்பச் செய்தல்,
3. படங்களையும் பெயர்களையும் பொருத்தச் செய்தல்
4 .படங்களைப் பார்த்துப் பெயர் எழுதச் செய்தல்
5. ஓர் எழுத்தோடு மற்றோர் எழுத்துச் சேர்த்துச் சொல்லச் சொல்லல்
6. சொல்லில் இடம் மாறியுள்ள எழுத்துகளை முறையாக அமைத்துச் சொல்லாகச் செய்தல் (எ-டு. ல்ப்பக-கப்பல்.)
7. தனித்தனி எழுத்துகளை அட்டைத் துண்டுகளில் வெட்டிப்போட்டு அவற்றிலிருந்து சொற்கள் உருவாக்கச் செய்தல்
8. சொற்களையும்-உரிய பொருளையும் பொருத்துதல்.

நடுநிலைப்பள்ளிகளுக்கு :

1. ஒரு சொல்லில் கொம்பு, கால் சேர்த்துப் புதுச் சொல்லாக்குதல்
2. சொற்களை இடம் மாற்றிக் கொடுத்துப் பொருள் தரும் வாக்கியமாக்குதல்.
3. எதிர்ச்சொல் கூறுக விளையாட்டு-ஒரு குழந்தை ஒரு சொல் கூற வேறு ஒரு குழந்தை எதிர்ச்சொல் கூறுதல்.
4. உயிரினம் கூறும் விளையாட்டு-தண்ணீர் என்று ஒரு குழந்தை, மீன் என மற்றொரு குழந்தை கூறுதல் நான்கு கால் விலங்கு-எனின் விலங்கு பெயர் கூறுதல்.
5. ஓர் ஒலியமைந்த சொற்கள் கூறுதல். ஒருவர் பட்டு எனக்கூற அடுத்தவர் தட்டு, எட்டு எனக்கூறுதல்.
6. தொடர்ச்சியாக ஒரே இனம் சார்ந்த சொற்களை அமைத்து இடையில் இனம் சேராத சொல்லை அமைத்தல். அன்னியனைக் கண்டுபிடி என விளையாடுதல்.
7. ஒரு குறிப்பிட்ட எழுத்தைக் கூற, அவ்வெழுத்தில் ஐந்து அல்லது பத்துச் சொற்களைக் குறிப்பிட்ட நேரத்தில் கூறச் செய்தல்.
8. அந்தாதியாகிய சொற்களைக் கூறச் செய்தல். சுரம் எனின் 'ம' வருகத்தில் தொடங்கும் சொல் கூறுதல். மதகு-அடுத்தவன் 'க' வருக்க எழுத்துகளில் அமையும் சொல் கூறுதல். மொழிக்கு முதலில் வராத எழுத்து அமையின் அச்சொல்லின் முதல் எழுத்திலேயே அடுத்த சொல் கூறுதல். மான்-எனவரின் அடுத்தவன் 'ம வருக்க எழுத்துகளில் தொடங்கும் சொல் கூறுதல்.

உயர்நிலைப்பள்ளிகளுக்கு :

1. ஒரு நிகழ்ச்சி பற்றி வாக்கியங்களை முறை மாற்றிக் கொடுத்து கருத்தொழுங்கு ஏற்படும்படி முறைப்படுத்துதல்.
2. ஒரு கதை நிகழ்ச்சிகளை ஒவ்வொரு மாணவராகத் தொடர்ந்து கூறச் செய்தல்.
3. படங்களுக்குத் தகுந்த தலைப்புத் தருதல்.
4. அரைக்கதை கூறி, முடிக்கச் செய்தல்.
5. நான்கு சொற்களைக் கூறி அச்சொற்கள் அனைத்தும் அமையும்படி நிகழ்ச்சி எழுதுதல்.

6.ஒரு நிகழ்ச்சி முழுமையும் கேட்டு இரு தொடர்களில் கூறுதல்

7. பாடல் அடி கொடுத்து அதனைத் தொடர்ந்து வேறு இரண்டு, மூன்று அடி எழுதச் செய்தல்.

8.இறுதியில் ஓர் ஒலிச் சொற்கள் அமையும் படி நான்கு தொடர்கள் எழுதுதல்

9. இருபொருள் தரும் சொற்கள் கூறச் செய்தல்.

10.சொற்கள் விடையாக வரும்படி விடுகதைகள் எழுதச் செய்தல்.

2. நடிப்பு முறை

நடிப்பு மனத்தின் ஆற்றல்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கதான கற்பனையின் விளைவு ஆகும். குழந்தைகள் சிறுவயது முதலே கற்பனை மூலம் பொருட்களைப் படைத்து விளையாடத் தொடங்குவர்.

நிகழ்ச்சிகள் குறைந்த, பேச்சு மிகுதியான கதைகளைக் கூறி அக்கதை உறுப்பினர்களாக நடிக்கச் செய்யலாம்.

நடிப்பு முறையின் மூலம் மாணவர்களின் பேசுதல் திறன் வளர்ச்சி பெறும், மனப்பாட ஆற்றல் வளரும், சொற்களஞ்சியப் பெருக்கம் ஏற்படும்.

3. செயல்திட்ட முறை :

மாணவர் கற்க வேண்டிய பாடப்பகுதிகளைத் தனித்தனியாக தொடர்பற்ற முறையில் கற்பதற்குப் பதிலாக ஒரு செயல்திட்டத்தை மையமாகக் கொண்டு பல பாடங்களையும் இணைத்துக் கற்பித்தலே செயல்திட்ட முறையாகும்.

1. செயலைத் தேர்ந்தெடுத்தல் 2. திட்டமிடுதல் 3. நிறைவேற்றுதல் 4. மதிப்பிடுதல் ஆகிய நான்கு படி நிலைகளைப் பின்பற்றி பின்வரும் தமிழ்மொழிப் பாடக்கருத்துக்கான செயல்திட்டங்களை மேற்கொள்ளலாம். இலக்கிய மன்றங்கள் நடத்துதல், பள்ளி விழாக்கள் நடத்துதல், நாடகம் நடத்துதல், பள்ளியில் மாத இதழ், ஆண்டு இதழ் தயாரித்து வெளியிடலாம். மலருக்கான கட்டுரைகளைப் பெற கடிதங்கள் எழுதும் குழு, கட்டுரைகள் தயாரிக்கும் குழு, படம் வரைதல் குழு போன்ற பல குழுக்களை அமைத்துச் செயல்படலாம்.

4. கலந்துரையாடல் முறை :-

இம்முறை ஆசிரியர் வழிகாட்டுதலுடன் நடைபெறும், மாணவர் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து உரையாடி முடிவுகளை மேற்கொள்வர். இம்முறை உயர்நிலை மற்றும் மேனிலை வகுப்புகளுக்கு மிகவும் பொருந்தும்.

கலந்துரையாடல் முறையைக் கையாளும் பொழுது தலைப்புத் தேர்ந்தெடுத்தல், குழுப்பிரித்தல், தலைவர், பதிவாளர் நியமித்தல், முடிவுகளைப் பெருங்குழுவில் எடுத்துரைத்தல், ஆசிரியர் பணி போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இம்முறையின் மூலம், வழிகாட்டல் திறன், பல கருத்துகளைத் தொகுத்தல், செயலாற்றும் முறைகளை வரையறுத்தல், பிறர் கருத்தை ஊன்றிக் கேட்டல், மாற்றுக் கருத்துகளை எதிர்கொள்ளுதல், தன்னுடைய எண்ணங்களை வெளியிடுதல் போன்ற உயர்நிலைத் திறன்கள் வளர்கின்றன.

5. வினா விடை முறை :-

ஒரு பாடப்பகுதியை (அ) செய்தியை வினாக்களைக் கேட்டு மாணவரைச் சிந்திக்கச் செய்து விடையை வரவழைத்து அவ்விடைகளைப் பொதுமைப்படுத்தி அதன்மூலம் பாடக்கருத்தை விளக்குவதே வினா விடை முறையாகும்.

1. வினாக்களைக் கேட்டல்	2. விடைகளைக் கையாளுதல்
வினாக்கள் முன்னறிவிலிருந்து தொடர்வதாக, அதாவது அறிந்ததிலிருந்து அறியாததற்குச் செல்வதாக அமைய வேண்டும். வினாக்கள் எளிமையான முறையில் அமைதல் வேண்டும்.	வினாக்கள் கேட்டு விடையளிக்கும் பொழுது நான்கு வகையான நிலைகள் ஏற்படலாம். 1. சரியான விடை வருகின்ற போது ஆசிரியர்

குறிப்பிட்ட இலக்கு நோக்கி வழிநடத்திச் செல்வதாய் அமைதல் வேண்டும். மாணவர் அமர்ந்திருக்கும் அதே வரிசையிலோ, பெயர்ப் பட்டியலில் இருக்கும் வரிசையிலோ கேட்டல் ஆகாது. அங்கொருவர் இங்கொருவராக மாணவர்களிடமும் கேட்கப்படுதல் வேண்டும். வினாவைக் கூறிய பின் அனைவரும் சிந்திக்க இடைவெளி கொடுத்து, அதன்பின் குறிப்பிட்ட மாணவனைக் கேட்க வேண்டும்.	மாணவர் கூறும் விடையினை ஏற்று, பாராட்டலாம். விடையை அனைவரும் அறிய கரும்பலகையில் எழுதலாம். 2. பாதி தவறான விடை வருகின்ற பொழுது கிளர் வினாக்கள் மூலமும், வினாக்களைத் திசைதிருப்புவதன் மூலமும், விடையைப் பெற முயல வேண்டும். தூண்டும் சொற்கள் சில சொல்லலாம். 3. முழுமையும் தவறான விடை. 4. விடையே வராத நிலை, இந்நிலைகளில், கற்பித்தல் முறையை மாற்ற வேண்டும். துணைக் கருவிகள், படங்களைக் கொண்டு விளக்கி விட்டு பின்னர் வினா - விடை முறையைத் தொடரலாம்.

வினா விடை முறையின் நிலைகள் :-

மேற்பார்வையாளர் படிப்பு முறை :-

(Supervised Study) : -

ஆசிரியரின் அரிய மேற்பார்வையின் கீழ் மாணவர்கள் படித்துப் பயன்பெறும் முறையையே மேற்பார்வைப் படிப்பு முறை என்பர் மாணக்கர்களிடம் காணப்பெறும் தனியாள் வேற்றுமைகளை அறிந்து இம்முறை வகுக்கப் பெற்றுள்ளது.

பிரவுன் வெல் (Brown Well) எனுமறிஞர் தமது நூலில் மேற்பார்வைப் படிப்பு 14 வகைப்படும் என்கிறார். பாசிங் (Bossing) எனும் முறை வல்லார் எல்லாவித மேற்பார்வைப் படிப்புகளையும் இருவகைகளில் அடக்கிவிடலாம் என்கிறார்.

முதல்வகை :-

அந்தப் பாடவேளையில் ஆசிரியர் மாணக்கர்களோடு சேர்ந்து படித்துத் தனித்தனி மாணாக்கர்கட்குத் தேவையான உதவி புரிந்தும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எப்படிப் படிப்பது என்பதைக் காட்டியும் கற்பித்தல். இதுவே பாசிங் (Bossing) மற்றும் பெரும்பான்மையோரின் கருத்துமாகும்.

இரண்டாவது வகை :-

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் படிப்பதைக் கடந்து, மாணாக்கரின் எல்லாப் படிப்பு வேலைப் பகுதிகளிலும் மேற்பார்வையில் படிப்பு முறையே மேற்கொள்ள வேண்டும். ஷ்ரெவ் (Shreve) மற்றும் கில்ஸர் (Kizler) எனுமிருவரும் இக்கருத்தை ஏற்றுக் கொள்கின்றனர்.

திறனுள்ள படிப்பின் பல வழிகளையும், படிப்பில் பிற்போக்கான மாணவர் உணர்ந்து படிக்க ஆசிரியர் துணையோடு மேற்கொள்ளும் முறையே மேற்பார்வைப் படிப்பு முறையாகும்.

7. தனிப்பயிற்சி முறை :-

வகுப்பிலுள்ள மாணாக்கர்கள் ஒவ்வொருவரும் ஒரே வேகத்தில் கல்வியினை ஆசிரியர்களிடமிருந்து பெறுகிறார்கள் என சொல்வதற்கில்லை. மாணாக்கர்களின் முன்னறிவு, மகிழ்ச்சி மனப்பான்மை, நினைவாற்றல் திறன் முதலிய பல கூறுகளைப் பொறுத்தே அவர்களின் கல்வி கற்கும் வேகம் அமைந்துள்ளது.

மாணாக்கர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக கவனித்துக் கல்வி கற்பிக்கும் முறை தனிப்பயிற்சி முறை எனப் பெயர்பெறும் இம்முறையில் பாடமோ வகுப்போ முதன்மையானதன்று தனித்தனியாக ஒவ்வொரு மாணாக்கனின் மனத்தையும் சோதித்து அவரவர் மன நிலைக்கேற்றவாறு பொருள்களைக் கற்பித்தலே முக்கியமானது.

தனிப் பயிற்சி முறை : மேற்கொள்ளும் வழிகள் :

இம்முறையினைச் செம்மையாக நடத்த ஆசிரியர்கள் அதிகமான ஒப்படைப்புகளை அளித்தல் வேண்டும். இதனால் மாணாக்கர்கள் விரும்பியவாறு விரைவாகவோ, மெதுவாகவோ கற்கும் வாய்ப்புகள் உள்ளன. ஆண்டின் பாடங்களைச் சிறு பிரிவுகளாக பகுத்து, ஒவ்வொரு சிறு பிரிவுக்கும் பல உட்பிரிவுக்கும், தனித்தனி ஒப்படைப்புத் தாள்கள் தயாரித்து, ஒவ்வொரு மாணாக்கனுக்கும் கொடுக்க வேண்டும். ஆசிரியர் கொடுத்த தேதியையும் மீளப்பெற்ற நாளையும் விளக்க அட்டையில் குறித்துக் கொள்ளுதல் வேண்டும். சிலர் விரைந்து முடிக்கக் கூடும். மற்றவருக்காகக் காத்திராமல் அடுத்தடுத்து ஒப்படைப்புகளைப் பெற்றுக் கொள்ளலாம். மாணாக்கர்களும் ஆசிரியரிடம் ஒப்படைப்புகளைப் பெற்ற தேதி, முடித்த தேதி ஆகியவற்றை ஒப்படைப்பு அட்டையில் குறிக்க வேண்டும். வகுப்பறை வேலையாகவும், வீட்டு வேலையாகவும் ஒப்படைப்பு வேலைகளைக் கொடுக்கலாம்.

8. கண்டறி முறை :-

குறைவாகச் சொல்லி நிறையக் கண்டறியத் தூண்டுவதே கண்டறி முறையாகும். மாணவரின் வயது, அறிவு, நிலை, உற்சாகம், திறன் ஆகியவற்றிற்கேற்பப் பல படிகளில் ஆயத்தம் செய்தல் வேண்டும்.

இம்முறையால் மாணவரிடம், உற்று நோக்கும் திறன், ஆய்வுப் பயிற்சி, அறிவியல் மனப்பான்மை, முடிவு காணும் திறன், உழைக்கும் திறன் ஆகிய திறன்கள் வளர்கின்றன.

9. குழுக் கற்பித்தல் முறை :-

மாணவர்களை ஒரே குழுவாக வைத்துக் கற்பிப்பது குழுக் கற்பித்தல் முறையாகும். ஆசிரியரின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு மாணவர்கள் தற்சார்பை வளர்த்துக் கொள்ள இம்முறை உதவும்.

மாணவர்களை, ஐந்திற்குக் குறையாமலும் இருபதுக்கும் மேற்படாமலும் குழுக்களாகப் பிரித்துக் கொள்ள வேண்டும்.

சொற்பொழிவு, கலந்துரையாடல், கருத்தரங்கு ஆகியவை குழுக் கற்றலுக்கு ஏற்றன.

இம்முறையினை உயர்நிலை / நடுநிலைப் பள்ளி மாணவரிடையே ஊராட்சி மன்ற நடைமுறை, சட்டமன்றம், பாராளுமன்ற நடைமுறைகளைச் செயல்படுத்தலாம்.

முடிவுரை :-

புலன்கள் வழியாகத்தான் கற்பித்தல் நிகழ வேண்டும் என்று சொன்ன ரூசோ (1712-1778), சொற்களுக்கு முன் பொருள்கள் என்னும் முறையை சொன்ன பெஸ்டலாசி (1746-1827), மனத்தைத் தயாரித்தல், எடுத்துக் கூறல், ஒப்பிடல், பொதுவிதி காணல் என்ற கற்பித்தலின் படிநிலைகளை விளக்கிய ஹெர்பார்ட் (1776-1841), பள்ளி என்பது பூங்கா, குழந்தைகள் வளரும் செடிகள், ஆசிரியர் தோட்டக்காரர் எனும் ஒப்புமை சொன்ன பிரோபெல் (1789-1852), கற்றல் செயல்முறைகள் மூலம் குழந்தைகள் பிற்கால வாழ்க்கையைக் கண்டு கொள்ள வேண்டும் என்று கூறிய ஜான் டீ யி (1869-1948), புலப்பயிற்சியும், சுதந்திரமும் மாணவர்களுக்கும், தரப்பட வேண்டும் என்று கூறிய மாண்டிசோரி (1870-1952) ஆகியோர் வலியுறுத்துவது மேற்கண்ட கற்பித்தல் முறைகளையே.

ஆயினும் ஆசிரியர், சூழ்நிலைக்கும், மாணவனுக்கும், பாடப்பொருளுக்கும் ஏற்ற முறைகளை மேற்கொள்வது மிகுந்தபயனைத்தரும்.



9. பையப் பயிலும் மாணவர்களுக்குரிய மதிப்பீடும் வாசிப்பு மேம்பாடும்

V.Ravindranath, M.A.M.Phil. B.Ed. Tamil Teacher
Spectra Secondary School Singapore

ஆய்வு முன்னுரை :

பையப் பயிலும் மாணவர்களின் கற்றல் திறன்களை மேம்படுத்த வேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டு சிங்கப்பூர் அரசாங்கம் இரண்டு தனித்துவம் வாய்ந்த சிறப்பு உயர்நிலைப் பள்ளிகளை (specializedschools) ஏற்படுத்தியுள்ளது. இங்குப் பயிலும் மாணவர்களுக்கு மற்ற உயர்நிலைப் பள்ளிகளைப் போன்ற பாடத்திட்டம் வழங்கப்படுவதோடு கூடுதலாகத் தொழிற்கல்வித் (ITE) திறன்களும் கற்பிக்கப்படுகின்றன.

மொழிப்பாடம் கற்றலில் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய நான்கு திறன்களிலும் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு, பள்ளி சார்ந்த மற்றும் பள்ளி சாரா நேரங்களிலும் மிக முக்கியமான ஒன்றாகத் திகழ்கிறது. பையப் பயிலும் மாணவர்களின் மனநிலையைக் கண்டறிந்து அவர்களைத் தகவல் தொழில்நுட்ப அணுகுமுறைகளின்வழி ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் வாசிப்பில் ஈடுபட வைப்பதையும், மதிப்பீட்டு முறையில் புத்தாக்கத்தைக் கொணர்ந்து கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட வைப்பதையும் இந்த ஆய்வு விளக்குகிறது.

செயலாய்வு நோக்கங்கள்

உயர்நிலை ஒன்று மற்றும் இரண்டாம் வகுப்பில் அடிப்படைத் தமிழ் (வழக்கநிலை தொழில் நுட்பம்) பயிலும் தமிழ் மாணவர்களுக்குத் தகவல் தொடர்புத் தொழில்நுட்ப அணுகுமுறைகளைப் பயன்படுத்தி வாசிப்புத் திறனை மேம்பட வைப்பதும் குழுநிலை சார்ந்த மதிப்பீட்டின் (TeamBasedLearning) வழி மாணவர்களின் கற்றல் திறன்களை மேம்படுத்துவதும் இந்தச் செயலாய்வின் நோக்கங்கள் ஆகும்.

ஆய்வுப் பின்னணி

ஸ்பெக்ட்ரா உயர்நிலைப் பள்ளியில் உயர்நிலை ஒன்று மற்றும் இரண்டாம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்குத் தொடக்க நிலையிலிருந்தே எழுத்துகளின் அறிமுகம் இருந்தாலும் சொற்களையும் சொற்றொடர்களையும் அடையாளம் கண்டு வாசிப்பதில் அவர்கள் சிரமத்தை எதிர்நோக்கினர். எனவே அவர்களின் வாசிப்பு மேம்பாட்டைத் தகவல் தொழில்நுட்பச் சாதனங்களாகிய செய்தி உருவாக்கி (Newsmaker), Audacity, iMTL என்னும் இருவழித் தொடர்புத்தளம் ஆகிய அணுகுமுறைகளின் வாயிலாக மேம்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் இம்மாணவர்களின் மதிப்பீட்டு முறைக்குக் குழுநிலை சார்ந்த மதிப்பீடு (TeamBasedLearning) என்ற முறையைப் பின்பற்றலாம் என முடிவெடுக்கப்பட்டது. இவற்றின் மூலம் தமிழ் கற்றல், கற்பித்தல் வழி எல்லா மாணவர்களும் வாசிப்பிலும் தேர்விலும் மேம்பாடு காணமுடியும் என்பது ஆய்வுப் பின்னணியாக அமைந்தது.

செயலாய்வுக்கு உட்பட்டோர்

இந்தச் செயலாய்வில் அடிப்படைத் தமிழ் பயிலும் (உயர்நிலைத் தொழில்நுட்பம்) ஒன்று மற்றும் இரண்டாம் வகுப்பிலிருந்து 21 மாணவர்களும் அவ்வகுப்பில் தமிழ் கற்பித்த ஓர் ஆசிரியரும் பங்கு பெற்றனர்.

மாணவர் பின்புலம்

இந்தத் தனித்துவம் வாய்ந்த பள்ளியில் பயிலும் பெரும்பாலான மாணவர்கள் அறிவுசார் திறன் குறையுடையவர்களாகவும் (Intellecltual Impairment), ஒழுங்கற்ற மிகுவேகத்தால் ஏற்படும் கவனக்குறைவு உள்ளவர்களாகவும் (Attention Deficit Hyperactivity Disorder), கேட்டலிலும் பேசுதலிலும் குறைபாடு உள்ளவர்களாகவும் (Autism) இருக்கிறார்கள். எனவே இந்த மாணவர்களுக்குப் பல்வேறு எளிய கற்றல் கற்பித்தல் உத்திமுறைகளைக் கையாள வேண்டியிருந்தது.

ஆய்வுத் திட்டம்

இந்தச் செயலாய்வு முன்னிலைத் தேர்வு, இடையீட்டுத் திட்டம், பின்னிலைத்தேர்வு போன்ற செயலாய்வு வடிவமைப்புகளில் மேற்கொள்ளப்பட்டதாகும். இந்த ஆய்வினை மேற்கொள்ளப் பத்துவார காலம் எடுத்துக் கொண்டு பள்ளி சார்ந்த மற்றும் பள்ளிக்கு அப்பாற்பட்ட பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

செய்முறை

மதிப்பீடு

மாணவர்களின் கற்றல் விளைவுகளைச் சோதிப்பதற்காகப் பல்வேறு மதிப்பீட்டு முறைகள் பின்பற்றப்படுகின்றன. அவற்றுள் முறைசாரா மதிப்பீடும் (Informal/FormativeAssessment) ஒன்று. இதனைக் கற்றலுக்கான மதிப்பீடு என்றும் கூறலாம். இரண்டாவது முறைசார்ந்த மதிப்பீடு, (Formal/Summative Assessment) இது கற்றலை மதிப்பிடுதலில் அடங்கும். இதன்வழிப் பொதுத் தேர்வு முறையில் மாணவர்களின் கற்றல் விளைவுகளைச் சோதித்தறிந்து மதிப்பெண்கள் வழங்கப்படும். பையப் பயிலும் மாணவர்களுக்கு இந்த ஆய்வில் முறைசாரா மதிப்பீட்டு (Informal/FormativeAssessment) முறையே அதிகமாகப் பின்பற்றப்பட்டது.

குழுநிலை சார்ந்த மதிப்பீடு (Immediate Feedback Assessment Technique)

குழுநிலை சார்ந்த கற்றலை (TBL) மையமாகக் கொண்ட இம்முறை முறைசாரா மதிப்பீட்டு முறையை ஒத்து அமைகிறது. இந்த முறையில் மாணவர்கள் மூவர் அல்லது நால்வர் அடங்கிய குழுவாக அமர்ந்து முதலில் தனித்தனியே தேர்வை எழுதுவார்கள். தேர்வு முடிந்தவுடன் மாணவர்கள் தங்கள் குழுநிலையிலேயே கலந்துரையாடி விடைகளைச் சரி பார்ப்பார்கள்.

வாசித்தல் திறனை மேம்படுத்துவதற்காகச் செய்தி உருவாக்கி (Newsmaker), Audacity என்னும் மென்பொருள்களும் சிங்கப்பூர் கல்வி அமைச்சால் ஏற்படுத்தப்பட்ட iMTL என்னும் இருவழித் தொடர்புத் தளம் என்னும் இணையத்தளமும் பயன்படுத்தப்பட்டன.

செய்தி உருவாக்கி (Newsmaker) என்னும் மென்பொருளின் பயன்பாடு

செய்தி உருவாக்கி என்னும் இந்த மென்பொருளைப் பயன்படுத்தி மேற்கொண்ட வாசிப்பு உத்தி முறையால் எல்லா மாணவர்களும் மிகவும் ஆர்வமாகப் பங்கெடுத்தனர். இந்த மென்பொருளைப் பயன்படுத்துவதற்குமுன்





வாசிப்புப் பகுதிபிரதி எடுத்து மாணவர்களுக்கு வழங்கப்படும். அவர்கள் அந்த வாசிப்புப் பகுதியைப் பலமுறை வாசித்துப் பழகுவர்.

வாசித்துப் பழகிய பின்னர்ச் செய்தி உருவாக்கி (Newsmaker) மென்பொருள் மூலம் வாசிப்புப் பகுதியை ஒளிப்பதிவு செய்வதற்காகக் கணினியைப் பயன்படுத்தி அதில் இருக்கும் புகைப்படக் கருவியின் மூலம் வாசிப்பைப் பதிவு செய்கின்றனர். இந்தப் பல்லூடக மென்பொருளில் இருக்கும் பல்வேறு அசைவூட்டங்களைப் (Animation) பயன்படுத்தி (கண் கண்ணாடி, சிகை அலங்காரம், மீசை, படச்சட்டம், பின்னணி போன்றவற்றால்) தங்களது தோற்றத்தை மாற்றியமைத்து மிகவும் ஆர்வமாக வாசிப்பில் ஈடுபட்டனர். வாசிப்பில் பிழைகள் ஏதேனும் ஏற்படுவதாகத் தாமே உணர்ந்தால் அவற்றைத் திருத்த முற்பட்டு மீண்டும் மீண்டும் வாசிப்பில் ஈடுபடுவர்.

இவ்வாறு செய்தபோது மாணவர்களுக்கு வாசிப்பில் ஆர்வம் மேலிட்டதை அறிய முடிந்தது. பதிவு செய்யப்பட்ட பகுதிகள் சேமிக்கப்பட்டு ஆசிரியரிடம் வழங்கப்படும். ஆசிரியரால் அவற்றிற்கு மதிப்பெண்கள் வழங்கப்படும்.

வாசிப்புப் பகுதியை ஒலிப்பதிவு செய்து மீண்டும் கேட்டல்

குறும்பனுவல்களை 'Audicity' என்னும் மென்பொருளைப் பயன்படுத்திக் கணினியில் ஒலிப்பதிவு செய்த பின்னர் அந்தப் பகுதியை மீண்டும் தாங்களே கேட்டு மகிழ்ந்து, வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது இந்த முறையின் பயன்பாடாகும். வாசிப்பைப் பதிவு செய்த பின்னர், இந்த மென்பொருளில் இருக்கும் சுருதி மாற்றுப் பகுதிக்குச் (changepitch) சென்று தாங்கள் படித்த வாசிப்புப் பகுதிகளில் பயின்று வரும் விலங்குகள், பறவைகள், ஆண்குரல், பெண்குரல், தாத்தா, பாட்டி போன்ற பாத்திரங்களின் குரல்களுக்கு ஏற்றாற்போன்று மாற்றி அமைக்கின்றனர். மாற்றி அமைத்த பகுதியை மீண்டும் கேட்கின்றனர். இவ்வாறு செய்யும்போது மாணவர்களுக்கு வாசிப்பில் ஆர்வம் மேலிடுவதோடு வாசிப்பில் ஏற்படும் சொற்பிழைகளைத் திருத்தி, உச்சரிப்பு, சரளம், குரல் ஏற்ற இறக்கம் போன்றவற்றில் மேம்பாடு காணமுடிகிறது.

வாசிப்பில் இருவழித் தொடர்புத் தளத்தின் பயன்பாடு (iMTL)

மாணவர்களுக்குக் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய திறன்களை மேம்படுத்த இருவழித் தொடர்புத் தளம் பேருதவியாக உள்ளது. இதனை மாணவர்கள் எங்கும் எப்போதும் பயன்படுத்தலாம். இந்த இணையத்தளம் பையப் பயிலும் மாணவர்களின் வாசிப்பை மேம்படுத்தப் பயன்படுத்தப்பட்டது.

ஆசிரியரால் பதிவேற்றம் செய்யப்பட்ட வாசிப்புப் பகுதிகளை மாணவர்கள் பார்த்துச் சுய முனைப்புடன் பலமுறை படித்தார்கள். அவ்வாறு செய்யும்போது வாசிப்பில் ஏற்படும் பிழைகளைத் தாங்களே கண்டறிந்தார்கள். மாணவர்கள் ஒரே பகுதியைப் பலமுறை வாசித்ததால் கருத்தறியும் திறனும் வாசிப்பும் மேம்பாடடைந்தன. மாணவர்கள் வாசித்தல் பயிற்சி மேற்கொண்ட பகுதியை ஒலிப்பதிவு செய்து அதனைப் பலமுறை கேட்டறிந்த பின்னர் ஆசிரியருக்கு அனுப்பி வைப்பர். அந்த வாசிப்புப் பகுதிகள் ஆசிரியரால் மதிப்பீடு செய்யப்பட்டு மதிப்பெண்கள் வழங்கப்படும்.

வாசிப்பில் ஏற்பட்ட கற்றல் விளைவுகள்

மொழிப்பாடம் கற்கும் ஒவ்வொரு மாணவரும் கல்வியில் விரும்பத்தக்க விளைவுகளைப் பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் கற்றல் கற்பித்தல் எதிர்பார்த்த பயனைப் பெற்றதாகக் கருதப்படுகிறது. செய்தி உருவாக்கி (Newsmaker), Audacity, iMTL ஆகிய தகவல் தொடர்பு மென்பொருள்களின் பயன்பாடு மாணவர்கள் வாய்விட்டுப் படித்தலுக்குப் பேருதவியாய் அமைந்தது. வாசிப்புப் பகுதிகளைப் பலமுறை படித்ததால் சரளமும், உச்சரிப்பும் மேம்பட்டன. சொற்களையும் சொற்றொடர்களையும் தன்னம்பிக்கையுடன் வாசிக்கக் கற்றுக் கொண்டனர். மாணவர்களே இந்த வாசிப்புப் பயிற்சியில் ஈடுபடுவதால் சுய முனைப்பான கற்றலுக்கு (Self-Directed Learning) இந்த உத்தி முறைகள் அவர்களை இட்டுச் செல்கின்றன. பிழைகளைக் கண்டறியும்போது அவற்றிலிருந்து மீளும் (Resilience) தன்மையைப் பெறுகின்றனர். இந்த முறையைப் பழக்கப்படுத்திக் கொண்டதால் மாணவர்கள் whatsApp மூலம் தங்கள் வாசிப்புப் பகுதிகளை ஒலிப்பதிவு செய்தும் ஆசிரியருக்கு அனுப்பி வைக்கின்றனர்.

வாசிப்பில் முன்னிலை, பின்னிலைத் தேர்வு முடிவுகள் - ஒப்பீட்டு வரைபடம்

பரிந்துரைகள்

இந்தச் செயலாய்வு, பயன்பாட்டுக்கு எளிதான மென்பொருள்களையும் மற்றக் கற்றல் கற்பித்தல் துணைக்கருவிகளையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. எனவே பிற ஆசிரியர்களும் இம்முறைகளைக் கையாண்டு கற்றல் கற்பித்தலை மேற்கொண்டால், பையப் பயிலும் மாணவர்களின் மொழித்திறன்களை மேம்படுத்த முடியும். மதிப்பீட்டு முறையில் புத்தாக்கத்தை ஏற்படுத்தலாம். மொழிப்பாடத்தில் ஆர்வம் குறைந்த மாணவர்களைச் சுய முனைப்பான கற்றலுக்கும் (Self-DirectedLearning) கூடிக் கற்றலுக்கும் வழி வகுக்கலாம். வாசிப்பில் எளிமையையும் இனிமையையும் புத்தாக்கத்தையும் ஏற்படுத்த முடியும்.

முடிவுரை



'பையப் பயிலும் மாணவர்களுக்குரிய மதிப்பீடும் வாசிப்பு மேம்பாடும்' என்னும் இந்தச் செயலாய்வு, மதிப்பீட்டு முறைக்குக் குழுநிலை சார்ந்த மதிப்பீடு (TBL) மாணவர்களிடையே விரும்பத்தக்க கற்றல் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. எல்லா மாணவர்களும் வாசிப்பில் ஆர்வமாகப் பங்கெடுத்ததை அறிய முடிந்தது. தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற வழி வகுத்தது. தகவல் தொழில்நுட்பத்தை வாசிப்பு மேம்பாட்டிற்குப் பயன்படுத்துவதால் மாணவர்களின் ஆர்வமும் ஈடுபாடும் பளிச்சிட்டன. குறிப்பாக அறிவுசார் திறன் குறையுடையவர்களுக்கும் (Intellectual Impairment), ஒழுங்கற்ற மிகுவேகத்தால் ஏற்படும் கவனக்குறைவு உள்ள மாணவர்களுக்கும் (AttentionDeficitHyperactivityDisorder), கேட்டலிலும் பேசுதலிலும் குறைபாடு உள்ள மாணவர்களுக்கும் (Autism), இம்முறைகள் மிகப் பயனுள்ளதாக அமைந்தன.

****

துணைநூற் பட்டியல்

1. Immediate Feedback Assessment Technique,
   Epstein Educational Enterprises, IncU.SPatentNo 6210171. (IFAT)
2. NewsMakerSoftware.
3. Audacity Software.
4. www.iMTL.sg (இருவழித்தொடர்புத் தளம்)
5. Transactional Analysis 101, J.CIntegra Consultancy Services, 2014.
6. தமிழ்மொழிப் பாடத்திட்ட வழிகாட்டி 2011 உயர்நிலை, பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, (CPDD) சிங்கப்பூர்.

10. சிங்கப்பூரில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தமிழ்க் கல்வி - தேவையும் பயன்பாடும்

து.வேணுகோபால், தலைவர், தமிழ்த்துறை-பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, கல்வி அமைச்சு

முன்னுரை

21 ஆம் நூற்றாண்டு என்பது மின்னிலக்க யுகம் என்றும் தகவல் தொழில்நுட்ப யுகம் என்றும் குறிக்கும் அளவுக்குப் பெரும் தொழில்நுட்பப் புரட்சிகளும் துரித மாற்றங்களும் நிகழ்ந்து கொண்டிருக்கும் காலமாகும். தனிமனித வாழ்வில் எல்லா நிலைகளிலும் தகவல் தொழில்நுட்பத்தின் ஆதிக்கம் எங்கும் எதிலும் பரவியுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் மட்டும் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பம் சார்ந்த கண்டுபிடிப்புகளும் மாற்றங்களும் நம்மைப் பிரமிக்கச் செய்கின்றன. எல்லாத் துறைகளிலும் ஊடுருவித் தன் ஆளுமையைச் செலுத்தி வரும் தகவல் தொழில்நுட்பம் கல்வித் துறையிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது எனில் அது மிகையாகாது. கல்விப் பணியில் உள்ளோருக்குத் தகவல் தொழில்நுட்ப அறிவு இன்றியமையாத தேவையாகவும் மாறியுள்ளது.

தகவல் தொழில்நுட்பத்தின் அவசியத்தை உணராத நாடுகளே இல்லை எனலாம். அவற்றுள் சிங்கப்பூர் தொலைநோக்குச் சிந்தனையோடு செயற்படும் முன்மாதிரி நாடாகத் திகழ்கிறது என்று துணிந்துரைக்கலாம். ஆம்! தகவல் தொழில்நுட்பத்தை எல்லாத் துறைகளிலும் விரைந்து ஊடுருவச் செய்த பெருமை அதற்குண்டு. மனித ஆற்றலால் மட்டுமே இயலக் கூடியதாக நம்பப்பட்ட நுட்பமான பல பணிகளை இன்று கருவிகளும் கணினிகளும் மிக எளிதாக ஆற்றி வருகின்றன. இல்லங்களிலும், பணியிடங்களிலும், தொழிற்சாலைகளிலும், பொதுப் போக்குவரத்திலும் என எல்லா இடங்களிலும் தொழில்நுட்பத்தின் ஆளுமை வெளிப்பட்டுள்ளது. இன்றைய சூழலில், வழிவழியாக மனிதன் செய்து வந்த வேலைகள் பலவற்றையும் கணினிகள் ஆக்கிரமித்துக் கொண்டதால், இனி வருங்காலங்களில் மனிதன் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்கு ஈடுகொடுத்துப் புதிய திறன்களைக் கற்றுக் கொள்ளுதல் இன்றியமையாத் தேவையாக உள்ளது. போட்டித்தன்மை நிறைந்த 21-ஆம் நூற்றாண்டுக்கு ஏற்புடைய வகையில் இளம் தலைமுறையினரின் அறிவையும் திறன்களையும் பெருக்கிக் கொள்ளச் சிறந்த அடித்தளத்தை அமைத்துத் தர வேண்டுவது அரசின் தலையாய கடமையாகிறது. இது பற்றிய தொலைநோக்குப் பார்வை கொண்ட சிங்கப்பூர் அரசு கடந்த இருபது ஆண்டுகளில் மற்றத் துறைகளில் விரைந்து நிகழ்ந்து வந்த தகவல் தொழில்நுட்பப் புரட்சியைக் கல்வித்துறையிலும் ஏற்புடைய வழியில் செயற்படுத்தி வெற்றி கண்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் தாய்மொழிக் கல்வியில், குறிப்பாகத், தமிழ்மொழிக் கல்வியில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த முயற்சிகள் குறித்தும் அவற்றை அமல்படுத்துகின்ற நிலையில் எதிர்ப்படும் சிரமங்கள் சவால்கள் குறித்தும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கல்வி முதன்மைத் திட்டங்கள்

கல்வி முதன்மைத் திட்டங்கள் என்னும் செயலாக்கத் திட்டத்தின் வழி, கல்வி அமைச்சு பெரும் பொருட்செலவில் கடந்த 15 ஆண்டுகளில், தகவல் தொழில்நுட்பத்தில் வலுவான அடித்தளத்தை அமைக்கும்

விதமாகப் பள்ளிகளில் தொழில்நுட்பக் கட்டமைப்பை உருவாக்கி, இணைய இணைப்புகளைப் பெறும் வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி, அவற்றை வகுப்பறையில் எத்தருணத்திலும் பயன்படும் வளமாகச் சேர்த்துள்ளது. இத்தகைய நவீன தொழில்நுட்ப வசதிகளை உருவாக்குவதோடு நின்றுவிடாமல், எல்லா ஆசிரியர்களுக்கும் தகவல் தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்கிப் பயன்மிக்க கல்வி மென்பொருள்களையும் துணைக் கருவிகளையும் கற்பித்தலுக்குப் பயன்படுத்த ஊக்கப்படுத்தி வழிகாட்டி வருகிறது. இதன்வழி, கற்றல் கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பக் கூறுகள் கொண்ட புதிய அணுகுமுறைகளை ஆசிரியர்கள் உற்சாகத்தோடு பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். இந்தப் புத்தாக்க முயற்சிகளுக்குப் பள்ளி நிர்வாகத்தின் பேராதரவும், பள்ளித் தலைவர்களின் வழிகாட்டுதலும் பெருமளவில் இருப்பதால், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் ஒருசேரத் தகவல் தொழில்நுட்பத் திறன்களில் தக்க தேர்ச்சி பெற்று வருகின்றனர்.

தமிழ்மொழியில் தகவல் தொழில்நுட்பத்தின் இன்றியமையாமை

தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பத்தின் தேவைகளும் பயன்பாடுகளும் குறித்துத் தமிழாசிரியர்களுக்குத் தெளிவான சிந்தனையும் நல்ல புரிந்துணர்வும் உண்டு என்பது மகிழ்வு தரும் செய்தியாகும். இன்றைய இளைய தலைமுறையினர் நாட்டமெல்லாம் தகவல் தொழில்நுட்பத்தைச் சார்ந்துள்ளது என்னும் உண்மையைத் தமிழாசிரியர்கள் நன்குணர்ந்துள்ளனர். தொழில்நுட்பத்தால் எளிதில் ஈர்க்கப்படும் இளையர்கள் தம்மைச் சார்ந்த ஒவ்வொரு நடவடிக்கையிலும் தொழில்நுட்பத்தின் பயன்பாடு அவசியம் நிறைந்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். இளையர்களின் நாட்டத்திற்கேற்பத் தமிழாசிரியர்கள் முடிந்தமட்டும் தங்கள் கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைக்கப் பெரிதும் முயன்று வருகின்றனர். தகவல் தொழில்நுட்பத்தைப் பொறுத்தமட்டில் ஆசிரியரைவிட மாணவர்களே அதிகத் திறம் பெற்றவர்களாக இருக்கின்றனர். இந்த யதார்த்ததின் அடிப்படையிலேயே மொழி பயிற்றலில் தகவல் தொழில்நுட்பத்தின் கூறுகள் தவறாமல் இடம் பெற்றுள்ளன. தொழில்நுட்பக் கூறுகளின் சேர்க்கை மாணவர்களைப் பெரிதும் ஈர்த்து, தமிழ்மொழி கற்றலில் மாணவர்களின் நாட்டத்தையும் ஈடுபாட்டையும் அதிகரித்துள்ளது என்பதை யாரும் மறுக்க இயலாது.

தொடக்கப் பள்ளியில் தொடங்கித் தொடக்கக் கல்லூரி வரையிலான எல்லாத் தமிழ்மொழிப் பாடத்திட்டங்களும் மாணவரை மையமாகக் கொண்டே வடிவமைக்கப்படுகின்றன. கற்றல் கற்பித்தலின் அடிப்படைக் கூறுகளான **பாடப்பொருள், பயிற்றுமுறை, மதிப்பீடு** ஆகியவற்றில் தகவல் தொழில்நுட்பக் கூறுகள் தேவைக்கேற்ப இணைத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

மொழிப் பாடத்திட்டத்தில் தகவல் தொழில்நுட்பக் கூறுகளும் மின்வளங்களும்

இன்றைய சூழலில், பாட வளங்கள் தயாரிப்பிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அச்சுவடியில் உருவாக்கப்படும் பாடநூல் தொகுப்போடு, மின்வழிப் பயிற்றுவளங்களும் கூடுதல் வளங்களாக உருவாக்கப்படுகின்றன. அன்றாடக் கற்றல் கற்பித்தலில் பாடநூல்களுடன் இந்த மின்வளங்களையும் ஆசிரியர்கள் வகுப்பறையில் பயன்படுத்த வேண்டுமென்பதே எதிர்பார்ப்பு. தொடக்கநிலையில் மொழியை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் நிலையிலேயே சிறுவர் பாடல்கள், கதைகள், மொழி விளையாட்டுகள் முதலான பல்வேறு மொழி நடவடிக்கைகளுக்கு மின்வளங்கள் பெரிதும் உறுதுணையாக அமைகின்றன. நூல்வழியே பாடல்களையும் கதைகளையும் மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள், அதன் தொடர்ச்சியாக ஒளிக்காட்சிவழி அமைந்துள்ள பாடல்களையும் கதைகளையும் மாணவர்களுக்குக் காட்டி உரையாடுகிறார்கள். கேட்ட கதையையும் பாடலையும் அசைவூட்டக் காட்சியாகக் காணும் பிள்ளைகள் உற்சாகம் அடைவதுடன் பாடலையும் கதையையும் விரைவில் நினைவுகூர்ந்து கூறும் திறன் பெற்றவர்களாகத் திகழ்கின்றனர். இந்த ஒளிக்காட்சிகளைத் திரும்பத் திரும்பப் பார்க்கும் பிள்ளைகள் மொழியாற்றலையும் சொல்வளத்தையும் பெருக்கிக் கொள்வதைக் கண்கூடாகக் காணமுடிகிறது. இவற்றோடு மொழி நடவடிக்கையின் ஒரு பகுதியாக, மின்வளமாக அமைந்துள்ள மொழி விளையாட்டுகளும் இளம் மாணவர்களை அதிகம் ஈர்க்கின்றன. இந்த வளங்கள் யாவும் அதிகம் தமிழ் பேசியறியாத பிள்ளைகளிடையே தன்னம்பிக்கையையும் மொழியார்வத்தையும் எளிதில் வளர்க்கக் கூடிய பயன்மிகு கூறுகளாக அமைகின்றன.

தமிழ் நூல் வாசிப்பை ஊக்குவிக்கும் மின்னூல்கள்

சிங்கப்பூர் முதலான பல்லினச் சமுதாயமாக விளங்கும் நாடுகளில் ஆங்கிலமே முதன்மை மொழியாகவும் பலருக்கு வீட்டுமொழியாகவும் தொடர்பு மொழியாகவும் அமைந்துவிடுகிறது. அத்தகைய சூழலில் வளரும் பிள்ளைகளுக்குத் தமிழ்மொழியில் இயல்பாகப் பேசிப் பழக வாய்ப்புகள் மிகக் குறைவு. தமிழ் வகுப்பறைகளில் தமிழ்மொழியைப் பயன்படுத்துவதால் மட்டும் மொழியார்வத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடியாது. எவ்வளவு

விரைவாக மாணவர்களுக்கு வாசிப்புத் திறனை ஊட்டி, சுயமாகத் தமிழ்க் கதைநூல்கள் வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டு சேர்ப்பதிலும் தகவல் தொழில்நுட்பம் ஆசிரியர்களுக்குப் பெருமளவில் உதவுகிறது. மேலும், காட்சி வடிவில் அமையப்பெற்ற கதைவடிவங்களும் இணையத்தில் நிரம்பக் கிடக்கின்றன. இவற்றோடு நாளிதழ், சஞ்சிகைச் செய்திகளையும் மின்வளங்களாக மாற்றிக் கற்பித்தல் வளங்களாக ஆசிரியர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

கருத்துப் பரிமாற்றத் திறன்களின் மேம்பாட்டுக்கு உதவும் தகவல் தொழில்நுட்பம்

சிங்கப்பூரில், கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ்மொழிக் கல்வியில் இரண்டு மறுஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெரிய அளவில் நடத்தப்பட்ட இந்த ஆய்வு நடவடிக்கைகள் இரண்டிலும், தகவல் தொழில்நுட்பத்தின் அவசியம் குறித்தும் பயன்கள் குறித்தும் விரிவாக விளக்கியுரைக்கப்பட்டன. மாணவர்களின் மொழித் தேவைகளை மனத்திற்கொண்டு புத்தாக்க முறையில் மொழிக் கல்வியை அணுகும் வழிமுறைகள் குறித்துப் பயன்மிக்க ஆலோசனைகள் பரிந்துரைக்கப்பட்டன. மாணவர்களிடையே மொழித்திறன்களை வளர்க்கத் தகவல் தொழில்நுட்பத்தை எவ்வாறு ஆசிரியர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது குறித்து வலியுறுத்திக் கூறப்பட்டது. அவற்றுள் முக்கியப் பரிந்துரையாக மாணவர்களிடையே கருத்துப் பரிமாற்றத் திறன்களை வளர்த்தல் வேண்டும் என்பதும் ஒன்றாகும். பேச்சுவழி, எழுத்துவழிக் கருத்துப் பரிமாற்றத்திறன்கள் பெறுவது மொழி கற்றலில் நீடித்த பலனைத் தரவல்லன என்பதைக் கல்வியாளர்கள் உறதிபடக் கூறுகின்றனர். அன்றாட வாழ்வில் இந்தக் கருத்துப் பரிமாற்றத் திறன்களின் பயன்பாடே அதிகம் என்பதை உணர்ந்து அத்திறன்களைத் தனிப்படுத்தி வளர்க்கும் முயற்சிகளில் ஆசிரியர்கள் கருத்தாகச் செயற்படுகின்றனர். இன்று தமிழ்மொழிக் கலைத்திட்டத்தில் அடிப்படை மொழித்திறன்களோடு இவற்றிற்கும் கூடுதல் வலியுறுத்தல் வழங்கப்படுகின்றன.

இணையத்தில் இயங்கும் இருவழித் தொடர்புத்தளம்

மேல் தொடக்கநிலை வகுப்புகளிலும் உயர்நிலை வகுப்புகளிலும் பிற பாடங்களின் சுமை காரணமாகத் தமிழ்மொழிப் பாடத்தில் அதிகக் கவனம் செலுத்த முடியாத சூழல் மாணவர்களுக்கு உருவாகலாம். இதைத் தவிர்க்கும் பொருட்டும், மாணவர்களுக்குத் தமிழ்மொழி மீது உள்ள ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் தக்க வைத்துக் கொள்ளவும், வகுப்பறைக்கு அப்பாற்பட்டு அவர்களுக்குக் கூடுதல் மொழி நடவடிக்கைகளும் பயிற்சிகளும் தர வேண்டுவது அவசியமாகும். குறிப்பாக, வாய்மொழித் திறன்களையும் கருத்துப் பரிமாற்றத் திறன்களையும் வளர்க்கும் பயிற்சிகள் நீடித்த மொழிப் பயன்பாட்டை மாணவர்களுக்கு உணர்த்துவதாக அமையும். இத்தகைய பயிற்சிகளுக்குத் தகவல் தொழில்நுட்பம் சிறந்த ஊடகமாகத் திகழ்வதை யாரும் மறுக்க இயலாது. இந்த உண்மையை உணர்ந்து, கல்வி அமைச்சு பெரும் பொருட்செலவில் தகவல் தொழில்நுட்பத்தில் இயங்கும் இருவழித் தொடர்புத்தளம் ஒன்றை உருவாக்கியுள்ளது. ஆசிரியர்கள் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தமிழ்மொழிப் பாடங்களை நிகழ்த்துவதற்கு இத்தளம் பேருதவியாய் அமைந்துள்ளது. ஒருங்கிணைந்த மொழி கற்றலுக்கான சூழலை வழங்குவதோடு, மாணவர்கள் தமிழ்மொழியில் பேச்சுவழி, எழுத்துவழிக் கருத்துப் பரிமாற்றத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கு உகந்த ஊடகமாக இது விளங்குகிறது. இணையத்தள வசதிகளைக் கற்றல் கற்பித்தலுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் விதமாகப் பல்வேறு ஊடகச் செயலிகளைக் கொண்டு இயங்குவதோடு அல்லாமல், ஆசிரியர்கள் உருவாக்கும் கற்பித்தல் வளங்களான மொழிப் பயிற்சிகளையும், ஒலிக்கோப்புத் தரவுகளையும், ஒளிக்காட்சி வளங்களையும் சேமித்து வைக்கும் கருவூலமாகவும் இத்தளம் விளங்குகிறது. ஆசிரியர் சொந்த முயற்சியில் தயாரிக்கும் கற்பித்தல் வளங்களை ஏற்றம் செய்யவும் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதற்கும் இத்தளத்தில் வாய்ப்புண்டு. இது ஆசிரியர்களிடையே கூட்டு முயற்சியை ஊக்குவிப்பதாகவும் பகிர்வுணர்வை வளர்ப்பதாகவும் அமைந்துள்ளது.

மொழி கற்றலில் தகவல் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதில் எதிர்ப்படும் சிரமங்கள் சவால்கள்

தமிழ்மொழியில் தகவல் தொழில்நுட்பக் கூறுகளை ஒருங்கிணைக்கும் முயற்சியில் சிங்கப்பூர்ப் பள்ளிகளும் தமிழாசிரியர்களும் பெருமளவில் ஈடுபடுவது தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் புதிய பரிமாணங்களாக அமைகின்றன. எனினும், இதைச் செயற்படுத்தும் முயற்சியில் பல சிரமங்களையும் சவால்களையும் தமிழாசிரியர்கள் எதிர்நோக்குகிறார்கள் என்பதும் உண்மையே.

தமிழில் தட்டச்சு செய்யும் பயிற்சி

இணையப் பக்கங்களில் மாணவர்கள் ஆங்கில மொழியில் கருத்துகளை உள்ளீடு செய்வதுபோல் தமிழில் செய்ய அவ்வளவு ஆர்வம் காட்டுவதில்லை. அதற்குக் காரணம் அவர்களுக்கு உரிய தட்டச்சுப் பயிற்சி வழங்கப்படாததே ஆகும். தமிழில் தட்டச்சு செய்யும் முறையை மாணவர்களுக்குக் கொண்டு சேர்க்கும் முயற்சியில் கல்வி அமைச்சும் தமிழாசிரியர்களும் கடந்த சில ஆண்டுகளாக முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றனர். அதில் ஓரளவுக்கு வெற்றியும் கண்டுள்ளனர். தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்ட தட்டச்சுப் பலகைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு உரிய தட்டச்சுப் பயிற்சியும் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றது.

தமிழில் எழுத்துப் படைப்புகளை இணையத்தின் வழியே செய்ய மாணவர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்குமுன் ஆசிரியர்கள் பல முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டியுள்ளது. இவற்றைத் திட்டமிட்டு நடத்துவதில் பலதரப்பட்ட சிரமங்களை ஆசிரியர்கள் எதிர்நோக்குகின்றனர். கணினி வசதி, தமிழ் மென்பொருள் வசதி, தட்டச்சுப் பயிற்சி எனப் பலவிதமான இடர்ப்பாடுகளைச் சமாளித்து மாணவர்களை வழிநடத்த வேண்டியுள்ளது. இம்முயற்சியில் மாணவர்கள் பெறும் பயிற்சியைப் பொறுத்தே, இணையம் சார்ந்த எழுத்துப் பயிற்சிகள், கருத்துப் பரிமாற்றப் பயிற்சிகள் ஆகியவற்றின் வெற்றி அமைந்துள்ளது. இச்சிரமங்களை எண்ணித் தகவல் தொழில்நுட்பக் கூறுகளை ஒருங்கிணைப்பதில் சிலர் தயக்கம் காட்டுவது தீர்வு காண வேண்டிய சிக்கலாகும்.

தமிழில் தட்டச்சு செய்து படைப்புகளை ஒப்படைக்கும் பணிகளில் மாணவர்களின் ஈடுபாட்டையும் கவனத்தையும் ஈர்க்க, தேர்வுக் கூறுகளிலும் தமிழ் உள்ளீட்டு முறையை ஒரு கூறாக இணைக்கப்பட்டுள்ளது. தமிழில் தட்டச்சுப் பயிற்சியை முறையாகப் பெறும் மாணவர்களே, பள்ளி வாழ்க்கைக்குப் பிறகும், தொடர்ந்து தமிழில் உள்ளீடு செய்யும் வழக்கத்தைப் பின்பற்றுவார் என்பதன் அடிப்படையில் இது பெரிதும் வலியுறுத்தப்படுகின்றது. இன்று இணையத்திலும், கைப்பேசியிலும் தமிழில் உள்ளீடு செய்யும் வசதி வாய்ப்புகள் இருந்தாலும் பலரும் அவற்றைப் பயன்படுத்துவதில்லை. பயன்பாட்டில் இல்லாத எம்மொழிக்கும் நீடித்த வாழ்வில்லை. ஆகவே, தமிழில் உள்ளீடு செய்யும் திறம் காலத்தின் தேவையாகும். அதில் எதிர்ப்படும் சிரமங்களைப் பாராது ஆசிரியர்கள் தொடர்ந்து இப்பணியில் முனைந்து ஈடுபட வேண்டுவது அவசியமாகும்.

தகவல் தொழில்நுட்பமும் மாணவருக்கு ஏற்படும் கவனச் சிதறலும்

தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கற்பித்தல் என்பது மிகவும் சவால்மிக்க செயலாகும். உரிய தயாரிப்பின்றி அம்முயற்சியில் இறங்கும்போது பல சிரமங்களை ஆசிரியர் எதிர்நோக்க வேண்டியிருக்கும். மொழிப் பாடத்தில் தகவல் தொழில்நுட்பக் கூறுகளைப் பொருத்தமாகப் பயன்படுத்துதல் என்பது ஒரு திறன். அதை ஆசிரியர்கள் முயன்று வளர்த்துக் கொள்ள வேண்டும். தொழில்நுட்பம் சார்ந்த மொழி நடவடிக்கையில் தெளிவான அணுகுமுறையும் எதிர்ப்படும் சிக்கல்களை உடனுக்குடன் சமாளிக்கும் திறனும் பாடத்தின் வெற்றிக்கு உறுதுணையாய் அமையும். ஆசிரியர் பெருமுயற்சி எடுத்துத் தயாரித்து நடத்தும் பாடத்தில் மாணவர்களின் ஈடுபாடு எதிர்பார்த்த அளவுக்கு இல்லையெனில், அதற்கான காரணத்தைக் கண்டறிந்து ஆசிரியர்கள் சரிசெய்து கொள்வது அவசியமாகும். சில வேளை, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நடத்தும் பாடம், சாதாரணப் பாடத்தைக் காட்டிலும் பல மடங்கு சுமை மிகுந்ததாக அமையலாம். ஆசிரியர்கள் சோர்வுறாமல் அம்முயற்சியில் முழுமூச்சாக ஈடுபட வேண்டும். இத்தகைய பாடங்களில் மாணவர்களின் ஈடுபாடும் கவனமும் நீண்ட நேரம் நீடித்திருக்காது. அந்தக் குறிப்பை உணர்ந்துக் கொண்டு ஆசிரியர்கள் தேவைக்கேற்பச் சில மாற்றங்கள் செய்யத் தயார் நிலையில் இருத்தல் வேண்டும்.

தகவல் தொழில்நுட்பத்தில் விரைந்து ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப ஆசிரியர்களால் ஈடுகொடுக்க முடியாதபோது அது மற்றொரு சிக்கலாக உருவெடுக்கிறது. தமிழ்மொழி கற்றலில் மாணவர்களுக்குத் தொய்வு ஏற்படாத வகையில் நவீன தகவல் தொழில்நுட்பக் கூறுகளை ஒருங்கிணைப்பது ஆசிரியர்கள் பலருக்குப் பெருஞ்சவாலாய் உள்ளது.

ஆசிரியர்கள் எதிர்நோக்கும் இந்த இடர்ப்பாடுகளை எல்லாம் சமாளிக்கக் கல்வி அமைச்சு இயன்றளவு தம் பங்கை ஆற்றி வருகிறது. ஆசிரியர்களுக்கு உரிய காலத்தில் தகுந்த பயிற்சிகளை வழங்கி வழிகாட்டுவதோடு, தரமான தகவல் தொழில்நுட்ப வளங்களைப் பெற்றுத் தருவதற்கும் உதவி வருகிறது.

முடிவுரை

தமிழ்மொழி பயிலும் ஒவ்வொரு பிள்ளையின் முழுத்திறனை வெளிக் கொணர்வதே தமிழாசிரியர்களின் முக்கியக் குறிக்கோளாகும். தமிழ்மொழிப் பாடத்திட்டமும் மாணவரை மையமாகக் கொண்டதாகவும் விழுமியங்களை வலியுறுத்துவதாகவும் அமைந்துள்ளது. இந்த இலக்குகளை அடைவதற்குத் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு உறுதுணையாக அமையுமெனில் அத்தகைய முனைப்புப் பாராட்டுக்குரியதாகும். மாறாக, மொழி கற்றலில் எதிர்மறையான விளைவுகளைத் தகவல் தொழில்நுட்பம் ஏற்படுத்துமெனில் அதன் காரணத்தை ஆராய்ந்து சரிசெய்வதும் நம் கடமையாகும். சுருங்கக் கூறின், தகவல் தொழில்நுட்பம் என்பது வெறும் கருவியே. அதனைப் பயன்மிகு வழிகளில் பயன்படுத்தி நிறைவான தமிழ்மொழி பயிற்றலை நிகழ்த்துவதே நம் இலக்காக இருத்தல் வேண்டும்.

துணைநூற்பட்டியல்

தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறு ஆய்வுக்குழு அறிக்கை 2005, கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

தாய்மொழிக் கல்வி மறு ஆய்வுக்குழு அறிக்கை 2010, கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

14-வது தமிழ் இணைய மாநாட்டு மலர் 2015, சிங்கப்பூர்

குழந்தைவேல் பன்னீர்செல்வம், சு., (2009) இணையம்வழி மொழி கற்றல் கற்பித்தல் -

புதிய அணுகுமுறைகள், தமிழ் இணைய மாநாட்டு மலர், செருமானியம்,

Carnoy, M(2002), ICT in Education, Possibilities and Challenges

11. "சாக்ரடீக் கேள்வி கேட்டல் உத்திமுறை" மூலம் வாய்மொழித் திறனை மேம்படுத்துதல்

(Socratic Questioning Technique to Enhance Oral Skills)

Mrs. Sagunthala Jegathesan திருமதி. சகுந்தலா ஜெகதீசன், M.A. Tamil Language & Literature, Lead Teacher (Tamil Language) (வழிகாட்டி ஆசிரியர்) Chong Boon Secondary School/ சொங் பூன் உயர்நிலைப் பள்ளி

Mr. Jegathesan திரு. ச.ஜெகதீசன், M.A. Tamil Language & Literature, Subject Head - Tamil and Malay Languages (பாடத்துறைத் தலைவர்-தமிழ், மலாய் மொழிகள்) Jurong Junior College/ ஜுரோங் தொடக்கக் கல்லூரி

அறிமுகம்

சிங்கப்பூர் பள்ளிகளில் பேசுதல் திறனைக் காட்டிலும், வாசிப்புத் திறனுக்கும் எழுத்துத் திறனுக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மேலும் வாய்மொழித் திறன், வாய்மொழித் தேர்வின்போதுதான் சோதிக்கப்படுகின்றது. முன்பு வாய்மொழித் தேர்வு உரக்க வாசித்தல், உரையாடல் மற்றும் பொது உரையாடல் ஆகிய கூறுகளை உள்ளடக்கியிருந்தது.

முதலில், பட உரையாடலில் சாக்ரடீக் கேள்விமுறையின் தாக்கம் எந்த அளவிற்குப் பயனுள்ளது எனக் கண்டறிய முனைந்தோம். இருப்பினும், எங்களது முன்னோட்ட ஆய்வு (Pilot Project) மாணவர்கள் பொது உரையாடலில் அதிக சிரமத்தை எதிர்நோக்குவதைப் புலப்படுத்தியது. குறிப்பாக, மாணவர்கள் தலைப்பையொட்டிச் சுயமாகப் பேசத் தயங்கினர். இதன் அடிப்படையில், சாக்ரடீக் கேள்வி கேட்டல் உத்திமுறையைப் பயன்படுத்துவதால் மாணவர்களின் வாய்மொழித் திறன் எந்த அளவிற்கு மேம்படுகிறது என்பதைக் கண்டறிவதே, எங்கள் ஆய்வின் நோக்கமாக அமைந்தது.

சாக்ரடீக் கேள்வி கேட்டல் உத்திமுறை - விளக்கம்

ஒரு பிரச்சனையையொட்டிக் கேள்வி எழுப்பியவருக்கு நேரடியாகப் பதில் தராமல் பிரச்சனையை எழுப்பியவரிடமே கேள்விகள் மேல் கேள்விகள் கேட்டு, அவரிடமிருந்தே அதற்குரிய தீர்வினைக் கண்டறியச் செய்வதன் அடிப்படையில் அமைந்ததுதான், சாக்ரடீக் கேள்வி கேட்டல் முறை. இதன் அமைப்புமுறையில் சில மாற்றங்களைச் செய்து, 'சாக்ரடீக் ஆசிரியர்-மாணவர் கருத்துப் பரிமாற்றம்', 'சாக்ரடீக் கருத்துரையாடல்', 'சாக்ரடீக் வட்டம்' என்றும் இம்முறையை அழைக்கிறார்கள்.

உலகளவில் மொழி கற்றலில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. மாணவர்களுக்கு அடிப்படை மொழித்திறன்களைக் கற்பிப்பதோடு, 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களையும் கற்பிப்பது அவசியம். சாக்ரடீக் கேள்வி

கேட்டல்முறை மாணவர்களின் சிந்தனையாற்றலையும் எதையும் துருவி ஆராயும் திறனையும் மேம்படுத்த உதவுகிறது. அது மாணவர்களிடையே எந்தவொரு புதிய கருத்தையும் சிந்தனையையும் அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் அதனைப் பகுத்தாய்ந்து, தெளிவுபெறும் திறனை வளர்க்கவும் உதவுகிறது. மேலும், இன்றைய வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்ள, இதுபோன்ற திறன் மிகவும் அவசியமாகின்றது.

இக்கேள்வி கேட்டல் முறையை மொழிப் பாடங்களில் ஒருங்கிணைக்க முடியும். வகுப்பறையில் கலந்துரையாடல்கள், கருத்தாடல்கள் முதலிய நடவடிக்கைகளில் இம்முறையைப் பயன்படுத்தலாம்.

6 வகையான சாக்ரடீக் கேள்விகள் :

- வகை 1 : தெளிவுரைக்கான கேள்விகள்

  Questions for clarification

- வகை 2 : ஊகங்களைத் துருவுவதற்கான கேள்விகள்

  Questions to probe assumptions

- வகை 3 : காரணங்களையும் ஆதாரங்களையும் துருவுவதற்கான கேள்விகள்

  Questions to probe reasons & evidence

- வகை 4 : பல்நோக்குச் சிந்தனைகளைத் துருவும் கேள்விகள்

  Questions about viewpoints&perspectives

- வகை 5 : தொடர்புகளையும் விளைவுகளையும் துருவும் கேள்விகள்

  Questions that probe implications&consequences

- வகை 6 : கேள்விகளைப் பற்றியே கேள்வி கேட்கும் கேள்விகள்

  Questions about the questions

சாக்ரடீக் கேள்வி கேட்டல் முறையின் சிறப்புகள் :

- கருத்துகளை வெறும் மேலோட்டமாகப் பார்க்காமல் இன்னும் ஆழமாகப் பார்க்கத் தூண்டும்
- குழப்ப நிலைகளில் உள்ள சிந்தனைகளைத் தெளிவுபடுத்தும்
- மாணவர்கள் தங்கள் எண்ணங்களை ஒழுங்குபடுத்தும் முறையினை அவர்களாகவே கண்டுகொள்ள வைக்கும்
- மாணவர்களின் உணர்வு, தெளிவு ஆகியவற்றை வளர்ப்பதுடன், காலத்திற்கேற்பப் பொருத்திப் பேசும் திறனையும் வளர்க்கும்
- மாணவர்களிடத்தில் காரணங்கள் வழி முடிவு காணும் திறனை மேம்படுத்தும்

ஆய்வின் எல்லை

பள்ளி	பள்ளி A	பள்ளி B	பள்ளி C	பள்ளி D
மாணவர்களின் எண்ணிக்கை	15	20	23	18
நிலை	P4, P5, P6	Sec 2,3,4	Sec 2,3,4	JC 1

இடையீட்டு நடவடிக்கைகள் :





சாக்ரடீக் கேள்விகள் வழிக் கலந்துரையாடல் - ஓர் எடுத்துக்காட்டுப் பாடப்படி நிலைகள்

(1) சாக்ரடீக் கேள்விகள் குறித்து மாணவர்கள் முந்தைய பாடங்களின் அறிந்துள்ளனர்; கேள்விகள் கேட்டும் உருவாக்கியும் பயிற்சிகள் செய்துள்ளனர். அவர்களின் முன்னறிவை மீண்டும் நினைவுகூர்தல்

(2) மாணவர் கலந்துரையாடலுக்கான அன்றைய தலைப்பை ஆசிரியர் வெண்பலகையில் எழுதுதல்

(3) மாணவர்கள் ஒவ்வொருவரும் தலைப்புத்தொட்டு ஏதேனும் 2 சாக்ரடீக் கேள்விகளை வினா அட்டைகளில் உருவாக்கிக் கொள்ளுதல்

(4) பின்னர்க் குழுநிலையில் வினா அட்டைகளின் உதவியுடன் கலந்துரையாடலைத் தொடங்குதல் (குழுவிலுள்ள ஒவ்வொரு மாணவரும் தாம் உருவாக்கிய கேள்விகளைப் பயன்படுத்திப் பேச வேண்டும். இதனைக் கலந்துரையாடலின் முக்கிய விதியாக ஆசிரியர் கூறுதல்). மாணவர்கள் கலந்துரையாடும்போது, ஆசிரியர் ஒவ்வொரு குழுவிலும் கலந்துகொள்ளுதல்

(5) குழுநிலையில் கலந்துரையாடல் முடிந்தபின், மாணவர்கள் அனைவரும் அரைவட்ட அமைப்பில் அமர்தல்

(6) பின் ஆசிரியர் ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒரு மாணவரை அழைத்துத் தலைப்பையொட்டிப் பேசச் சொல்லுதல். அவ்வாறு செய்யும்போது, மற்றக் குழுவினர் மாணவர்க்குரிய தகுதிநிலை விளக்கக் குறிப்பைப் பயன்படுத்தி, மதிப்பீடு செய்தல் (மாணவர்கள் முந்தைய பாடங்களில் குறிப்பிட்ட அளவைகளைக் கொண்ட தகுதிநிலை விளக்கக் குறிப்பினைப் பயன்படுத்தியுள்ளனர்)

(7) ஆசிரியர்க்குரிய தகுதிநிலை விளக்கக் குறிப்பினைப் பயன்படுத்தி, ஆசிரியரும் மதிப்பீடு செய்தல் (தகுதிநிலை விளக்கக் குறிப்புகள், காண்க : பின்னிணைப்பு (1&2).

(8) சகமாணவர் மதிப்பீட்டிற்குப்பின், ஆசிரியர் ஓரிரு மாணவர்களை அழைத்துத் தங்களின் மதிப்பீட்டிற்கான காரணங்களைக் கேட்டறிதல்

(9) பாட முடிவில், ஆசிரியர் தமது கருத்துகளைத் தொகுத்துக் கூறி, மேம்பாட்டுக்கான ஆலோசனைகளையும் வழங்கிப் பாடத்தை நிறைவு செய்தல்

(10) (காண்க : பின்னிணைப்பு3).

சவால்கள்

1. ஏற்ற தகுதிநிலை குறிப்புகளைத் தேர்ந்தெடுத்தல்
2. தொடக்கநிலை, உயர்நிலை மற்றும் தொடக்கக் கல்லூரி மாணவர்களுக்குப் பொதுவான தலைப்புகளைத் தேர்ந்தெடுப்பதில் இடர்ப்பாடு
3. குறிப்பிட்ட சில தலைப்புகளுக்கு, ஆறு வகையான சாக்ரடீக் கேள்விகளை உருவாக்குவதில் சிக்கல் (கடைசி இரு வகைகளுக்கு)
4. முன்னிலை மற்றும் பின்னிலைத் தேர்வுகளை நடத்த நேரமின்மை

முடிவுரை

சாக்ரடீக் கேள்வி கேட்டல் உத்திமுறை நிச்சயமாக மாணவர்களைச் சுயமாகச் சிந்திக்கத் தூண்டுகிறது. அது குறிப்பிட்ட தலைப்புகளை அலசி ஆராயவும் மாறுபட்ட கோணங்களில் சிந்திக்கவும் துணைபுரிகிறது. குறிப்பாக, இந்த ஆறு வகையான சாக்ரடீக் கேள்விகளை அடிப்படையாகக் கொண்டு, மாணவர்கள் தலைப்புகளை அணுகுவதால் தன்னம்பிக்கையுடன் தலைப்புகளை அணுக முடிகிறது எனலாம்.

மாணவர்கள், இடையீட்டு நடவடிக்கைக்கு முன் தன்னம்பிக்கையுடன் பேசத் தயங்கினர். மேலும், தமது கருத்துகளை வெளிப்படுத்தவும் தடுமாறினர். மாறாக, இடையீட்டு நடவடிக்கைகளுக்குப் பின்னர், ஓரளவிற்குத் தைரியமாகப் பேச முற்பட்டனர்; கருத்துகளை விரிவாக விளக்கினர். அவர்கள் இவ்வாறு பேசுவதற்கு ஆறு வகையான சாக்ரடீக் கேள்விகள் பெரிதும் உதவின என்று துணிந்து கூறலாம். தகுதிநிலை விளக்கக் குறிப்புகளின் பயன்பாட்டால், மாணவர்கள் தங்களது பலங்களையும் பலவீனங்களையும் அடையாளங்காண முடிந்தது. மேலும், அக்குறிப்புகளால் மாணவர்களின் தெளிவான எதிர்பார்ப்பு நிலையை நன்கு விளக்கியது. வாய்வழி மற்றும்

எழுத்துவழி ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழங்கிய கருத்துரைகள் படிப்படியான அவர்களது வளர்ச்சி நிலையை நன்கு புலப்படுத்தியது.

சாக்ரடீக் கேள்வி கேட்டல் உத்திமுறை ஆசிரியர்களின் கேள்வி கேட்கும் திறனை மேம்படுத்தியது. இந்த வகையில், இவ்வணுகுமுறை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பெரும்பயன் அளிக்கின்றது. பாடத் தயாரிப்பின்போது ஆசிரியர்களின் கேள்விகேட்கும் திறன் கூர்மைப்படுத்தப்பட்டது என்றே சொல்ல வேண்டும். இக்கற்பித்தல் அணுகுமுறை மாணவர்களின் வாய்மொழித் திறனை மேம்படுத்துவதற்கு ஒரு பயனுள்ள கற்றல் அணுகுமுறை என்றால் அது மிகையாகாது.

REFERENCES

1. Teacher Questioning Behavior and Student Learning: What Research Says to Teachers.
- Ellis, Kathleen
2. http://blogs.rockingham.k12.va.us/pike/2012/05/the-socratic-process-6-steps-of-questioning-infographic,
This entry was posted on Wednesday, May 2nd, 2012 at 7.27 am and is filed under Education.
3. questioning. Magazine article| Published in TES Newspaper on 4 July 2003
- Steven Hastings
4. http://literacyem.blogspot.sg/2012/05/oracy.html. Literacy through the eyes of a PST
5. Quality Questioning. Research - Based Practice to Engage Every Learner.
- Jackie Acree Walsh, BethDankertSattes
6. The Thinker's Guide to the Art of Socratic Questioning
- Dr.Richard Paul, Dr. Linda Elder
7. Maximizing Learning Outcomes by Socrative Questioning - Hum Chan, IwanZahar,
University Malaysia Kelantan
8. The Skillful Teacher
- Jon Saphier, Robert Gower

தகுதிநிலை விளக்கக்குறிப்புகள் (மாணவர்க்குரியது)

கலந்துரையாடல்

அளவைகள்	மிக நன்று 16 - 20	நன்று 11 - 15	சராசரி 6 - 10	முயற்சி தேவை 1 - 5
கருத்து	தலைப்பிற்கேற்ற மிகப் பொருத்தமான கருத்துக்களைத் தகுந்த எடுத்துக் காட்டுகளுடன் கூறுதல்	தலைப்பிற்கேற்ற பொருத்தமான கருத்துகளை எடுத்துக் காட்டுகளுடன் கூறுதல்	தலைப்பிற்கேற்ற ஓரளவு பொருத்தமான கருத்துகளைக் கூறுதல்	தலைப்பிற்கேற்ற ஓரளவுக்குப்பொருத்தமான கருத்துகளைக் கூற முயற்சி தேவை
புட்குறியிடுக				
தெளிவும் சரளமும்	மிகத் தெளிவாகவும் சரளமாகவும் கருத்துகளைக் கூறுதல்	தெளிவாகவும் சரளமாகவும் கருத்துகளைக் கூறுதல்	ஓரளவுக்குத் தெளிவாகவும் சரளமாகவும் கூறுதல்	ஓரளவுக்குத் தெளிவாகவும் சரளமாகவும் கூறுதல்
புட்குறியிடு				
மதிப்பெண்கள்				

தகுதிநிலை விளக்கக்குறிப்புகள் (மாணவர்க்குரியது)

கலந்துரையாடல்

அளவைகள்	சிறந்த முயற்சி	நல்ல முயற்சி	உன்னால் முடியும்	முயற்சி தேவை
கருத்து	தலைப்பிற்கேற்ற மிகப் பொருத்தமான கருத்துக்கள்	தலைப்பிற்கேற்ற பொருத்தமான கருத்துகள்	தலைப்பிற்கேற்ற ஓரளவு	தலைப்பிற்கேற்ற ஓரளவுக்குப்பொருத்தமான கருத்துகளைக் கூற முயற்சி செய்
	சரியான எடுத்துக் காட்டுகள்	பொருத்தமான எடுத்துக் காட்டுகள்	பொருத்தமான கருத்துகள்	பொருத்தமான கருத்துகளைக் கூற முயற்சி செய்
புட்குறியிடுக				
தெளிவும் சரளமும்	மிகத் தெளிவாகவும் சரளமாகவும் உள்ளது	தெளிவும் சரளமும் உள்ளது	ஓரளவுக்குத் தெளிவும் சரளமும் உள்ளது	ஓரளவுக்குத்தெளிவும் சரளமும் தேவை
புட்குறியிடுக				

எடுத்துக்காட்டு சிங்கப்பூரர்கள் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைக் கடைப்பிடிப்பதன் அவசியத்தைப் பற்றி உமது கருத்துகளைக் கூறுக.

*** தெளிவுரைக் கேள்வி**

ஆரோக்கியமான வாழ்க்கை என்றால் என்ன? அது ஏன் ஒருவருக்கு அவசியம்?

*** ஊகங்களைத் துருவுவதற்கான கேள்வி**

அதிகமான சிங்கப்பூரர்கள் வெளியில் உணவு உண்கிறார்கள் என்று நீ கருதுகிறாயா? அதிகமான சிங்கப்பூரர்கள் ஆரோக்கியமான உணவு வகைகளையே உண்கிறார்கள் என்று நீ நினைக்கிறாயா?

*** காரணங்களையும் ஆதாரங்களையும் துருவுவதற்கான கேள்விகள்**

அவர்கள் இவ்வாறு செய்கிறார்கள் என்பதை நாம் எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்? இதற்கு ஏதேனும் காரணம் உண்டா?

*** பல்நோக்குச் சிந்தனைகளைத் துருவும் கேள்விகள்**

ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மாணவர்கள், வேலை செய்யும் இளையர்கள், வீட்டில் இருக்கும் தாய்மார்கள், முதியோர் ஆகியோர் எவ்வாறு கடைப்பிடிக்கலாம்? உடற்பயிற்சி செய்தல், ஆரோக்கியமான உணவு பழக்கம் ஆகியவை மட்டும்தான் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைச் செயல்படுத்தக் கூடிய வழிமுறைகளா?

*** தொடர்புகளையும் விளைவுகளையும் துருவும் கேள்விகள்**

ஆரோக்கியமான வாழ்க்கை முறையைக் கடைப்பிடிப்பதன் மூலம் நாம் அடையும் பயன் என்ன?

ஆரோக்கியமில்லாத வாழ்க்கைமுறை எத்தகைய விளைவுகளை உண்டாக்கும்?

*** கேள்விகளைப் பற்றியே கேள்வி கேட்கும் கேள்விகள்**

ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஒருவர் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டுமா? ஏன்?

ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஒருவர் அவசியம் ஏற்பட்டால் மட்டும் கடைப்பிடித்தால் போதுமா? ஏன்?

ஆரோக்கியமான வாழ்க்கை முறை முக்கியமானது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. எனவே, இக்கேள்வியைப் பற்றி நாம் கலந்துரையாடுவது அவசியமா?

12. தமிழை இரண்டாம் மொழியாகவும் பிறமொழியாகவும் பயிலும் மாணவர்களுக்குரிய புதிய கற்பித்தல் உத்திகள்

திருவாட்டி ஹருணிஷா, தமிழ் ஆசிரியர்
குவோ சுவான் பிரஸ்பெட்டேரியன் தொடக்கப்பள்ளி

முன்னுரை

செம்மொழியாம் தமிழ்மொழி இன்று கடல்கடந்து அகிலம் எங்கும் தம் ஆதிக்கத்தைச் செலுத்தி வருகிறது. தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகவும் பிறமொழியாகவும் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையும் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. இன்று சிங்கப்பூர், மலேசியா, இலங்கை போன்ற அயல்நாடுகளில் தமிழ் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படுகின்றது. அயல்நாடுகளில் மட்டுமின்றி தமிழ்நாட்டிலும் பாலர் பள்ளி, தொடக்கநிலை, உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்ற சட்டம் 2006ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது (The New Indian Express). இது ஆரோக்கியமான விஷயம். தமிழ்மொழிக்குக் கொடுக்கப்பட்டு வரும் முக்கியத்துவத்தை எண்ணுகையில் உச்சி குளிர்கின்றது.

அதிக மாணவர்கள் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகவும் பிறமொழியாகவும் கற்கிறார்கள் என்பது மகிழ்ச்சியளித்தாலும் இரண்டாம் மொழியாகவும் பிறமொழியாகவும் ஒரு மொழி கற்பிக்கப்படும் போது ஏற்படும் சவால்களை எண்ணுகையில் சற்றுத் தயக்கம் பிறக்கவே செய்கிறது. இம்மாணவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஆங்கிலத்தையே முதல்மொழியாகக் கற்கிறார்கள். தராசின் ஒருபக்கம் ஆங்கிலமும் மறுபக்கம் தமிழ்மொழியும் வைக்கப்படுகின்றன என்று வைத்துக் கொள்வோம். தராசின் முள் ஆங்கில மொழிப்பக்கம் சாயும் நிலை இயல்பாக அங்கு ஏற்படும் வாய்ப்பு அதிகம். எப்பக்கமும் சாயாமல் நடுவில் நிற்க வேண்டுமாயின் மாணவர்களுக்குத் தமிழ்மொழியின் மீது ஆர்வத்தையும் காதலையும் தங்கள் கற்பித்தல் உத்திமுறைகள் வழி ஏற்படுத்த வேண்டிய கடமை இன்றைய ஆசிரியர்களுக்கு உண்டு. இன்றைய உலகமயமாக்கத்தால் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்கூட அதைப் பள்ளிகளில் இரண்டாம் மொழியாகப் பயிலும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆங்கிலத்திலேயே உரையாடி பழக்கப்பட்ட பிள்ளைகளுக்குத் தமிழை அறிமுகப்படுத்தும் முதல் இடமாகப் பள்ளி விளங்குகிறது. ஆங்கிலமொழியின் தாக்கத்தால் தமிழ் வலுவிழந்து போகாது. ஆங்கிலத்திற்கு நிகராகத் தமிழ்மொழியைக் கற்றுக் கொடுக்க வேண்டிய சவாலான பணியை இன்றைய ஆசிரியர்கள் எதிர்நோக்குகிறோம்.

இன்றைய மாணவர்களுக்குத் தமிழை இரண்டாம் மொழியாகவும் பிறமொழியாகவும் கற்பிக்க வேண்டுமாயின் புத்தாக்கமிக்க புதிய கற்பித்தல் உத்திமுறைகளை ஆசிரியர்கள் கையாளுதல் அவசியமாகிறது. புத்தகங்களை மட்டும் புரட்டிப் பாடம் கற்பிக்கும் முறையைத் தூர வைத்து மாணவர்களின் சிந்தையைக் கவரும் உத்திகளை ஆராய்ந்து தமிழ்மொழியை அவர்களிடத்தில் கொண்டு சேர்க்கும் கட்டாயம் இன்று நிலவுகிறது.

அஸ்திவாரம் வலுவாக இருந்தால் கட்டிடம் காலம் கடந்தும் நிற்கும் என்பார்கள். தமிழ்மொழிக்கு அஸ்திவாரத்தைப் போடும் வாய்ப்பு இவ்வாண்டு எனக்குக் கிட்டியது. இவ்வாண்டு தொடக்கநிலை ஒன்றாம் வகுப்பு மாணவர்களுக்குத் தமிழைக் கற்பிக்கும் நிலை ஏற்பட்டபோது எனக்குள் ஒரு குதூகலம் பிறந்தது. அதே வேளையில் ஒரு பதற்றமும் ஏற்பட்டது. வீட்டில் ஆங்கிலமொழியை மட்டுமே பயன்படுத்தும் குடும்பத்திலிருந்து வந்த மாணவர்கள்தான் அதிகம். தமிழ்மொழியைத் தமிழ் வகுப்பில் மட்டுமே பயன்படுத்திய மாணவர்கள் அவர்கள். அவர்களுக்குத் தமிழ்மொழி மீது காதலை ஏற்படுத்துவதும் சலிப்பை ஏற்படுத்துவதும் இனி என் கைகளில்தான் இருக்கின்றது என்று அறிந்தேன். அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருந்தால் வேலைக்கு ஆகாது என்பதை உணர்ந்து சில புதிய உத்திமுறைகளை அவர்களின் கற்றல் தேவைகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைத்து அரங்கேற்றினேன். அவற்றிலிருந்து உங்களுடன் சிலவற்றைப் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

எங்கிருந்து ஆரம்பிப்பது என்று சிந்தித்தேன். மொழி வாழ வேண்டுமாயின் அது அன்றாடம் பேசப்படவேண்டும் என்பது உண்மை. அன்றாடம் பேசப்பட வேண்டுமாயின் அம்மொழியை ஒருவர் தினமும் கேட்க வேண்டும். கேட்டல், பேசுதல் திறன்களை ஊக்குவித்துவிட்டால் மாணவர்களுக்கு வாசித்தல் எழுதுதல் திறன்களைச் சுலபமாகக் கற்பித்துவிடலாம் என்று அறிந்தேன் (Teaching the Four Skills in the Primary EFL Classroom). அதிலும் குறிப்பாகத் தொடக்கநிலை ஒன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு இத்திறன்களை அவர்கள் விரும்பும் முறையில் அறிமுகப்படுத்தி வளர்ப்பது ஆசிரியரின் தலையாய பணி என்பதையும் நன்கு உணர்ந்தேன்.

ஆக! முதலில் மாணவர்களின் கேட்டல், பேசுதல் திறன்களை மேம்படுத்த நினைத்தேன். அதற்கு நான் தேர்ந்தெடுத்த உத்திமுறை கதைகூறல் உத்திமுறை (story telling technique). பிள்ளைகளின் உலகில் நாம் நுழைய வேண்டுமாயின் கதை ஒரு சிறந்த கடவுச்சீட்டு. அதனைத் திறன்படக் கையாண்டோமெனில் மொழி மீது நீங்கா ஆர்வத்தை விதைத்திட முடியும் என்று சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள் (Story telling in Schools -Page 42)

கதை கூறல் உத்தி

மாணவர்களுக்குத் தமிழ்க் கதைகளை அறிமுகப்படுத்துவதைவிட கதைகளின் வழி தமிழ்மொழியை அறிமுகப்படுத்த வேண்டும் என்று முடிவெடுத்தேன். முதலில் மாணவர்களைக் கவரும் கதை கருக்கள் என்னென்ன என்று அறிந்தேன். அவற்றைக் கொண்டு எனது பணியைத் தொடர்ந்தேன். அடுத்து, கதைகூறலின் வழி கற்றலை எவ்வாறு இடம்பெறச் செய்வது என்று ஆராய ஆரம்பித்தேன். வகுப்பின் முன் அமர்ந்து கையையாட்டி குரலை உயர்த்திச் சொல்வதெல்லாம் கதைகூறல் என்றாகிவிடாது என்பது என் நம்பிக்கை. அப்படி நினைத்தால் கதையை ஆரம்பித்த சற்று நேரத்திற்கெல்லாம் மாணவர்களின் கவனங்கள் கதவு பக்கம் சென்றுவிடும். கதைகூறுவது நாமாக இருப்பினும் அத்தகைய அடுத்த கட்டத்துக்கு அழைத்துச் செல்வது நம் மாணவர்களாக இருத்தல் அவசியம். கதையில் இடம்பெறும் காட்சிகளை ஒலிகளாக, தொட்டு உணரும் பொருள்களாக, படங்களாக, இசையோடு மாணவர்களுக்கு அறிமுகம் செய்தல் அவசியம் (Cassandra Wye- International Storyteller). கதையில் இடம்பெறும் சொற்களை இசையோடும் அசைவுகளோடும் மாணவர்கள் மீண்டும் மீண்டும் கேட்கும் போதும் ஒப்பிக்கும்போதும் அவர்களே அறியாமல் அச்சொற்கள் அவர்களின் மனதில் ஆழக் பதிந்துவிடுகிறது. இம்முறை ஆங்கிலத்தில் Multi-sensory Storytelling என்று அறியப்படுகின்றது. இவ்வுத்தி முறையில் உளவியலாளர் Horward Gardner உருவாக்கிய பன்முக அறிவுத்தளம் (Gardner's Multiple Intelligences). இக்கதை கூறல் உத்திமுறையின் வழி மாணவர்களின் கவனம் ஒன்றிணைக்கப்படுகிறது. ஐம்புலன்களையும் பயன்படுத்தும் வகையில் இவ்வுத்திமுறை அமைவதால் தயங்கி ஒதுங்கி நிற்கும் மாணவர்கள் கூட ஏதாவது ஒரு கட்டத்தில் பங்கு பெற ஆர்வம் காட்டுவதைப் பார்க்க முடியும் (Cassandra Why - International Story Teller).

உதாரணத்திற்குப் புதிய எழுத்துகளைக் கற்றுக் கொடுக்கும் பாடத்தில் எனது எழுத்துக்களைக் காட்டில் அலையும் விலங்குகளாகச் சித்தரித்து என் கதையை உருவாக்கினேன். ஒவ்வொரு எழுத்துகளாக அறிமுகம் செய்து அவற்றை உச்சரிக்கும் முறைகளையே அவ்வெழுத்துகளின் ஓசைகளாக்கிக் கதையைக் கூறினேன். அடிக்கடி அவ்வெழுத்துகளை உச்சரித்துக் காட்டினேன். ஒரு சமயத்தில் மாணவர்களே என் உதவியின்றி எழுத்துகளை அடையாளங்கண்டு உச்சரிக்க ஆரம்பித்தார்கள். இதுதான் இவ்வுத்திமுறையின் பலம். பின்னர், அவ்வெழுத்துகள் மற்ற எழுத்துகளோடு இணைந்து சொற்களாக்குவதோடு எங்கள் கதை முடிவுற்றது. பாடத்தின் இறுதியில் மாணவர்கள் புதிய எழுத்துகளை முணுமுணுத்துக் கொண்டு சென்றதைப் பார்க்கும்போது என் அடுத்த கதை பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தேன்.

நாடக உத்தி முறை

மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டியாகிவிட்டது. அடுத்து நம் இலக்கு அவர்கள் ஆர்வத்தோடு கற்க ஆசைப்படும் தமிழ்மொழியில் கருத்துப் பரிமாற்றம் செய்யத் தூண்டுவது. அதற்கு நாடகத்தைவிட ஒரு சிறந்த உத்திமுறை கிடைக்காது. நாடக உத்திமுறை இயல்பாக மாணவர்களின் கேட்டல் திறனை மேம்படுத்த உதவும். அது மொழியார்வத்தைத் தூண்டவும் துணைபுரியும்.

நாடக உத்திமுறை, அதைக் கையாளுபவர்களின் இலக்குக்கு ஏற்றவாறு பல பரிமாணங்களை ஏற்கும். எனது இலக்கு, எனது மாணவர்கள் நாடக உத்திமுறையைப் பயன்படுத்தித் தங்களின் கூச்சத்தை அகற்றிக் கலகலப்பாக தமிழ்மொழியில் தங்கள் கருத்துக்களை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதே. மாணவர்கள் தூயத்தமிழில் பிழையின்றி தங்கள் கருத்தைத் தடையின்றிக் கூறுவது என் நோக்கம் அன்று. அதனால் ஒரு கதையைக் கொடுத்து மாணவர்களைத் தனியாகவோ குழுவாகவோ அதனை நடித்துக் காட்டுங்கள் என்று ஒருபோதும் சொன்னதில்லை. அன்றாட நிகழ்வுகளை, அவர்களுக்குப் பழக்கப்பட்ட விஷயங்களை, அவர்களின் ஆர்வத்தைத் தூண்டக் கூடிய சூழலைக் கொண்டு நாடகத்தைப் பல நேரங்களில் அரங்கேற்றியுள்ளோம்.

உதாரணத்திற்குக் 'கப்பல்' என்ற சொல்லை அறிமுகப்படுத்தும் வேளையில் தரையில் நீலத்துணியை விரித்து நான் மாலுமியாகவும் அவர்கள் பயணிகளாகவும் உலா வந்தோம். திடீரென்று மின்னல் வெளிச்சமும், இடியோசையும் திரையில் காட்சியாக வர, மாணவர்கள் தங்கள் பயத்தைத் தங்களுக்குத் தெரிந்த தமிழில் புலம்பியது புதுமையாக இருந்தது. அப்போது ஆங்காங்கே ஆங்கிலம் எட்டிப்பார்த்தாலும் அதிகமாகத் தமிழ்மொழியே ஆட்சிசெய்தது. அதனை அடுத்துத் தொடர்ந்தது இரண்டாம் பாகம். புயலில் மாட்டிக் கொண்ட ஒருவரை மட்டும் காப்பாற்ற முடியும் என்னும் சூழலை ஏற்படுத்த மாணவர்கள், மாலுமியிடம் தங்களை மட்டும் ஏன் காப்பாற்ற வேண்டும் என்று வாதிட்டதைப் பார்த்தபோது மெல்ல அவர்கள் தமிழ்மொழியில் ஆதிக்கம் செலுத்துவது மனதிருப்தியை அளித்தது. வெறும் நடிப்போடு நின்றுவிடாமல், மாணவர்கள் அன்றைய பாடத்தில் கற்றுக்கொண்ட சொற்களை மீண்டும் நினைவுகூர்ந்து அவற்றின் பொருளை, பயன்பாட்டை மீள்வலியுறுத்தல் இடம்பெறுதல் அவசியம். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் என்பது இதுதான். புதிய சொற்களைக் கட்டாயப்படுத்தித் திணிக்காமல் அவர்களே ஆர்வத்தோடு பயன்படுத்திய சொற்களைக் கொண்டு அவர்களின் மொழிவளத்தைப் பெருக்கிக் கொண்டார்கள். இது ஒரு எடுத்துக்காட்டுத்தான். இதேபோல் சில பாடங்களின்போது ஆசிரியர்கள் இயல்பாகச் சூழல்களை அமைத்துக் கொடுத்தோமாயின் மாணவர்கள் தாமாக முன்வந்து தமிழ்மொழியை ஆர்வத்துடன் கற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. பிறமொழியாகத் தமிழைக் கற்கும் மாணவர்களுக்கும் இத்தகைய நாடகச்சூழல் ஒரு தன்னம்பிக்கையை ஊட்டும். நாடகம் எம்மொழியும் அறிந்த ஒரு உத்தி. தெரிந்த ஒரு உத்தியின்வழி தெரியாத ஒரு மொழியைக் கற்பது அக்கற்றலை இலகுவாக்கும் என்பது திண்ணம்.

கதை கேட்டல், நாடகம் வழிக் கற்றல் இவற்றையெல்லாம் எந்நேரமும் செய்து கொண்டிருத்தல் ஆகுமா என்று சிலர் முணுமுணுப்பது கேட்கின்றது. முடியாதுதான்! ஆனால், நாம் தமிழை இரண்டாம் மொழியாகவும் பிறமொழியாகவும் கற்பிக்கும் போது மாணவர்களின் மனநிலையை மனத்தில் நிறுத்திதான் நமது கற்பித்தல் உத்திகளைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. அவ்வுத்திகள் மாணவர்களின் வயதுக்கு ஏற்றவாறும் அவர்களின் மனநிலைக்கு ஏற்றவாறும் அமைதல் முக்கியம். அதனால்தான் நான் விளையாட்டு முறை உத்தியை அடுத்து த்தேர்ந்தெடுத்தேன்.

விளையாட்டு வழிக் கற்றல் உத்திமுறை

விளையாட்டு வழிக் கற்றல் என்பது ஒரு சக்திவாய்ந்த கற்பித்தல் உத்திமுறை என்று உளவியலாளர் Lev Vygotsky (Child Development Media) கருதுகிறார். குழந்தை உளவியலாளரான இவர் குழந்தைகளின் வளர்ச்சிக்கு விளையாட்டு மிகச் சிறந்தமுறையில் பங்காற்றுகிறது என்று நம்புகிறார் (Child Development Media). பிள்ளைகளின் மொழி பயன்பாட்டுக்கு உறுதுணையாக இருக்கும் விளையாட்டு முறையைப் பாடத்தோடு இணைத்து விளையாட்டுவழிக் கற்றல் என்ற உத்திமுறையை இன்று ஆசிரியர்கள் பலர் பின்பற்றி வருகிறார்கள். அதற்கு நானும் விதிவிலக்கல்ல.

விளையாட்டு வழிக் கற்றல் உத்திமுறை என்பதை வடிவமைக்குமுன் நமது மாணவர்களின் வயதையும் அவர்களின் கற்றல் திறனையும் மனத்தில்கொள்ளுதல் அவசியம் என்று அறிதல் வேண்டும். அதனைவிட முக்கியம் விளையாட்டு வழிக் கற்றல் என்பது பல பரிமாணங்களில் நடைபெறலாம் என்பதை அறிதல். அமைதியாக விளையாடுதல் (புத்தகம் வாசித்தல், வண்ணம் தீட்டுதல்), ஒன்று கூடி விளையாடுதல், தனியாக விளையாடுதல், புத்தாக்க விளையாட்டு (ஓவியம், பாத்திரமேற்று நடித்தல்) ஓடுதல், ஆடுதல் போன்ற உடல் அசைவுகள் கொண்ட

விளையாட்டு என பலதரப்பட்ட விளையாட்டு முறைகள் இருக்கின்றது. இவற்றில் அன்றைய கற்றல் நோக்கத்துக்குத் தகுந்த விளையாட்டு முறைகளைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துவதில்தான் ஆசிரியர்களின் திறமையிருக்கின்றது.

சொற்களை உச்சரிக்கக் கற்றுக் கொண்ட எனது மாணவர்களுக்கு Tic Tac Toe என்னும் உலகம் அறிந்த விளையாட்டைப் பயன்படுத்தி அவர்களின் நினைவுகூரல் உத்தியை மேம்படுத்தினேன். இணையாக விளையாடப்படும் இவ்விளையாட்டில் தன் எதிர் விளையாட்டாளருக்குக் கடுமையான போட்டியைக் கொடுத்துத் தனது வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்ள மாணவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் என் பாடத்தின் முதல் வெற்றியாக அமைந்தது.

துண்டுகளாக வெட்டப்பட்ட சொற்களைப், படவில்லைகளில் தோன்றும் படங்களுக்கு ஏற்பப் பொருத்தமாக மாணவர்களை ஒட்டச் செய்துள்ளேன். புதிய (Jigsaw) உத்திமுறையைப் பயன்படுத்திச் சொற்களை அடையாளங்காண நான் நடத்திய இப்பாடம் மாணவர்களிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றது. அடுத்த பாடத்தின்போது நேரக்கட்டுப்பாட்டையும் இணைக்க மாணவர்கள் உற்சாகத்தோடு கற்றனர் இந்த விளையாட்டு வழி.

கணினியைப் பயன்படுத்தி நான் தயாரித்த சில மொழிவிளையாட்டுகளும் மாணவர்களைச் சுண்டி இழுத்தன. இன்றைய காலக்கட்டத்தில் பிரபலமாக இருக்கும் who wants to be a millionaire, Spin The Wheel போன்ற விளையாட்டுகளைத் தமிழ்மொழிப் பாடங்களுக்கு ஏற்ப வடிவமைத்தேன். அதற்கு உதவியாகப் பல இணையத் தளங்கள் இருக்கின்றன. (சில இணையத்தள முகவரிகளை பின்னிணைப்பில் காணலாம்). இவ்விளையாட்டுகளைப் பாடத்திருப்பத்தின் போது பயன்படுத்திக் கொண்டோம். இதனால் மாணவர்களின் கற்றல் திறன் மேம்பட்டதோடு, அடுத்த தமிழ்வகுப்பு எப்போது என்ற எதிர்பார்ப்பும் மாணவர்களிடத்தில் ஏற்பட்டது. இப்படி பல விளையாட்டுவழிப் கற்றல் உத்திமுறைகள் மாணவர்கள் எளிதாகவும் சுயமாகவும் தமிழ்மொழியைக் கற்கத் துணைபுரிந்தன.

ஆங்கிலத்துக்கு நிகராகத் தமிழ்மொழியைச் சுவாரசியமாகவும் உற்சாகமாகவும் மாணவர்கள் கற்க வேண்டுமாயின் மேலே குறிப்பிட்டுள்ள சில புதிய உத்திமுறைகளை அனைவரும் பயன்படுத்திப் பார்த்தல் அவசியம். இவற்றைப் புதிய உத்திமுறைகள் என்பது முறையல்ல. மாணவர்களின் தேவைகளுக்கு ஏற்ப சில மாற்றங்கள் செய்யப்பட்டு மெருகூட்டப்பட்ட பழைய உத்திமுறைகளே இவை. ''கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு'' என்பது போல இன்னும் எத்தனையோ உத்திமுறைகள் நாம் பயன்படுத்தக் காத்துக் கொண்டிருக்கின்றன. அவற்றை ஒவ்வொன்றாக ஆராய்ந்து தமிழ்மொழி கற்கும் மாணவர்களின் ஆர்வப் பசிக்குத் தீனிபோட அனைவரும் முயற்சி செய்வோமாக. மொழி என்பது மனிதனின் அடையாளமாகத் திகழ்கின்றது என்பதை நாம் அறிவோம். தாங்கள் நினைப்பதை, பார்ப்பதை, விரும்புவதை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள ஒருவருக்கு மொழி ஒரு கருவியாகப் பயன்படுகின்றது என்பதையும் நாம் இவ்வாறு தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள மாணவர்கள் தயக்கமின்றித் தமிழ்மொழியைப் பயன்படுத்த ஆசிரியர்கள் ஒரு தூண்டுகோலாக இருக்க உறுதிகொள்வோம்.

ஆதார நூல்கள் / இணையத்தளங்கள்

* http://www.newindianexpress.com/states/tamil_nadu/
* Teaching the Four Skills in the Primary EFL Classroom
* iteslj.org/Techniques/Bazo-FourSkills.htm
* Cassandra Wye_International Story teller. Using Multi-Sensory Storytelling to Empower Children. www.storiesinmotion.co.uk
* Dudding, J.B. (227) Story Telling in Schools.National Storytelling Network.
* Lane, C.The Distance Learning TEchnology Resource Guide.
* Piaget, J. (1945). Play, dreams and imitation in childhood. London:Heinemann.
* Using Drama as an Effective Method to Teach Elementary Students _ Senior Honors Theses mandie M.Moore 2004
* Using Drama Activities and Techniques to Foster Teaching English as a Foreign Language: a Theoreti cal Perspective.Dr.MuntherZyoud / Al Quds Open University
* கதை உருவாக்குதல் / விளையாட்டு இணையத்தளங்கள்
* http://www.classtools.net/
* https://www.zondle.com/
* http://www.jigsawplanet.com/
* http://www.abcya.com/story_maker.htm

13. தமிழை இரண்டாம் மொழியாகவும் பிறமொழியாகவும் பயிலும் மாணவர்களுக்குரிய புதிய கற்பித்தல் உத்திகள்

தர்ஷினி மு. குமார்

செயிண்ட் ஸ்டீபன்ஸ் பள்ளி (சிங்கப்பூர்)

முன்னுரை

சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் மாணவர்கள் தமிழை இரண்டாம் மொழியாகவோ பிறமொழியாகவோ பயின்று வருகின்றனர். இந்த நாடுகளில் ஆங்கிலமே முதல் மொழியாகக் கருதப்பட்டு அதிகப் புழக்கத்தில் உள்ளது. ஆகவே, தொடக்கநிலை மாணவர்களில் பலரும் தமிழ்ப் பின்புலம் இல்லாமல் தமிழைக் கற்க வருகின்றனர்.

பலவிதமான வாழ்க்கைச் சூழல்களிலிருந்து வரும் தமிழ் மாணவர்கள் ஆரம்பக் கட்டத்தில் தமிழ் மொழியைக் கற்றுக் கொண்டு அதனைப் பயன்படுத்துவதில் அதிகச் சிரமம் காண்கின்றனர். இவர்களுக்கு ஆரம்பக் கட்டத்திலிருந்தே தமிழ்மொழிப் புழக்கத்தை நடைமுறைப்படுத்துவது தமிழாசிரியர்களின் தலையாய பணிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

ஆகவே, ஆசிரியர்கள் ஆழமான மனோவியல் அடிப்படையில் அமைந்த கற்றல் கற்பித்தல் உத்திகளைக் கொண்டு பாடங்களை அமைப்பதோடு மாணவர்களிடையே தமிழ்மொழியின்பால் காதலையும் வளர்க்க முற்பட வேண்டும்.

குழந்தைகள் அவர்களது பிறப்பிலிருந்து ஏழாம் வயது வரை அவர்களது சுற்றுப்புறம், அவர்களைச் சுற்றியுள்ளவர்கள், அவர்களுடைய வாழ்க்கை போன்றவற்றைப் பற்றிய அபிப்பிராயத்தை அமைக்கிறார்கள்.

இந்த அபிப்பிராயம் அவர்களுடைய குணத்தில் ஆழ்ந்து பதிகிறது என்பது குழந்தை உளவியலாளர்களின் கூற்றாகும். இதே காலக் கட்டத்தில்தான் அவர்கள் அதிகமாகவும் விரைவாகவும் பாடங்களைக் கற்கின்றனர்.

இந்த வகையில், பள்ளிகளில் பயிலும் இளம் வயது மாணவர்களுக்கு இந்த நேரம் பொன்னானது. கல்வியைப் பற்றிய விருப்பு வெறுப்புகளை அவர்கள் இந்தச் சமயத்தில் தான் அமைக்கிறார்கள். ஆகவே, இந்தக் காலக் கட்டத்திலேயே மாணவர்களிடத்தில் கல்வியின் மீது விருப்பத்தை ஏற்படுத்த வேண்டியது அந்தந்த ஆசிரியரின் முக்கியக் கடமைகளில் ஒன்று.

1. தொடக்கநிலை, 2. மாணவர்களின் தேவைகள், அவர்களுடைய கற்றல் முறைகள் போன்ற அம்சங்களை அறிந்து தமிழ்ப்பாடத்தை அமைப்பது எப்படி?

(அ) இணையம் மற்றும் தகவல் சாதனங்களின் வழிக்கற்றல்

முன்னோக்கிச் செல்கின்ற நம் உலகம் கணினி மயமாகியுள்ளது. இப்பொழுது இணையத்தின் மூலம் மாணவர்கள் தாங்களாகவே பல விஷயங்களைக் கற்கின்றனர். அதோடல்லாமல், அவர்கள் தகவல் சாதனங்களையே விரும்பிப் பயன்படுத்துகின்றனர். மாணவர்கள் இணையத்தின் மீதும் கணினியின் மீதும் காட்டும் ஆர்வத்தை ஆசிரியர்கள் வகுப்புப் பாடங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தலாம்.

(ஆ) விளையாட்டு முறை / கதை சொல்லும் அணுகுமுறை

சிறுவயது மாணவர்களுக்கு செயல்வழிக் கற்றல் சிறப்பாக அமையும். அவர்கள் இந்தக் காலக்கட்டத்தில் தங்களது உடல் உறுப்புகளை முழுமையாகச் செயல்படுத்தக் கற்றுக் கொள்கிறார்கள். செயல்பாட்டை முக்கிய அம்சமாகக் கொண்டு பாடங்களை அமைப்பதால் மாணவர்களுக்குத் தங்களிடத்தில் இருக்கும் ஆற்றலை வளர்க்க வாய்ப்புகளை வழங்குகிறோம்.

(இ) உரையாடல் / பேசுதல்

ஜீன்பியோஜே(Jean Piaget) என்ற மனோவியலாளரின் அறிவாற்றல் வளர்ச்சிக் கோட்பாட்டின் (Cognitive Theory) மூலம் நாம் முக்கியமான கருத்துகளை அறியலாம். மாணவர்கள் ஏழிலிருந்து பத்துவயது வரை அதிகமாகப் பேச்சின் மூலம் பலவற்றைக் கற்கிறார்கள் என்பது இவரைப் போன்ற பல்வேறு நிபுணர்களின் கருத்தாகும். ஆதலால், ஆசிரியர்கள் மாணவர்களுடன் உடனுக்குடன் உரையாடுவது நல்லது.

பாடத்தைப் பற்றி மட்டுமல்லாமல்,

மாணவர்களின் அன்றாட வாழ்க்கையைப் பற்றியும் ஆசிரியர்கள் உரையாடலாம். இதனால், ஆசிரியரிடம் மாணவர்களைப் பற்றிய புரிந்துணர்வு வளர்கிறது. மாணவர்கள் ஆசிரியரின் மீது அதிக நம்பிக்கையும் மரியாதையும் கொண்டிருப்பார்கள். அதனால் மாணவர்கள் தமிழில் பேசத் தயங்கமாட்டார்கள்.

2. தமிழைப் பற்றி முன்னறிவு பெறாத மாணவர்களிடையே எப்படித் தமிழ் மீது ஆர்வம் கொள்ளச் செய்வது?

(அ) தமிழின் சிறப்பைப் பற்றிய விழிப்புணர்வை வளர்த்தல்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய தமிழ்மொழி தொன்மையான மொழியாகத் திகழ்கிறது. தமிழ் இலக்கண மற்றும் இலக்கிய வரலாற்றில் பலமுக்கிய, சிறப்பு வாய்ந்த அம்சங்கள் இருக்கின்றன. இந்த அம்சங்களை மாணவர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம், சுவாரசியமான தகவல் குறிப்புகளாக அமைத்து ஆசிரியர்கள் பகிர்ந்து கொள்ளலாம். மாணவர்களிடத்தில் இது தமிழ்ப்பற்றை உண்டாக்கும், வளர்க்கும். மேலும், கதை சொல்லும் அணுகுமுறையைப் பயன்படுத்தி இக்கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளும் போது தமிழ்மொழியைப் பற்றிய முன்னறிவு பெறாத மாணவர்கள் அதிக ஆர்வத்துடன் தமிழ்மொழியைக் கற்றுக் கொள்ள முன்வருவர்.

(ஆ) இருமொழிப் பயன்பாட்டின் வழிக் கற்றல் / கற்பித்தல் (Bilingual Teaching and Learning)

மாணவர்களுக்குப் புரியாத மொழியில் பாடம் கற்பிக்கும்போது அவர்களிடத்தில் அச்சமும் குழப்பமும் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். இன்றைய சூழலில் அதிகமான தமிழ் மாணவர்கள் வீட்டில் தமிழ் பேசுவதில்லை. அவர்கள் தொடக்கநிலை ஒன்றை சேரும் வரையில் தமிழ்மொழி அறியாமல் வளர்கிறார்கள்; ஆங்கில மொழியையே அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள்.

ஆகவே, அவர்களுக்கு நன்கு அறிமுகமான ஆங்கில மொழியைக் கொண்டு தமிழ்மொழியை அறிமுகப்படுத்துவது நல்லது. இதன்மூலம் மாணவர்கள் தமிழ்மீது கொண்டிருக்கும் பயம் தணிகிறது. அவர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்படலாம் - பாடத்தைச் சரிவரப் புரிந்து கற்கலாம்.

3. கல்வித்துறையில் சிறந்து விளங்கிய பெஞ்சமின் புளூம் (Benjamin Bloom) போன்ற மனோதத்துவ நிபுணர்கள் உணர்த்தும் கற்றல் கற்பித்தல் வழிமுறைகளை எவ்வாறு தமிழ் வகுப்பில் பயன்படுத்தலாம்?

தமிழ் வகுப்பறை மாணவர்களுக்குப் பயத்தை உண்டாக்கக் கூடாது. ஒரு மாணவனின் சுற்றுப்புறம் அவன் எந்த அளவுக்குப் பாடம் கற்கிறான் என்பதை நிர்ணயிக்கிறது. இதை புளூம் கோட்பாடு குறிப்பிட்டுள்ளது. ஆசிரியர்கள் தமிழ் வகுப்பறையை வண்ணமயமாகவும், மனத்துக்கு நிம்மதி அளிக்கும் வண்ணமும் அமைக்க வேண்டும்.

வகுப்பறையை நீண்டகாலமாக அதே தோற்றத்துடன் வைத்திருப்பதைத் தவிர்க்க வேண்டும். மாணவர்கள் சலிப்படையாதவாறு வகுப்பறையில் உள்ள முக்கிய அம்சங்களான அறிவிப்பு/தகவல் பலகை மற்றும் மேசைகள் இருக்கும் இடங்களையும் பாடங்களுக்கேற்ப மாற்றியமைப்பது நல்லது.

நிறைவாக

முடிவாக, ஆசிரியர்களாகிய நாம் தமிழ் மொழியைப் பள்ளியில் கற்றுத் தரப்படும் பாடங்களில் ஒன்றாக மட்டுமே கருதாமல் இருப்பது நல்லது. தமிழ்மொழியை வாழும் மொழியாகவும், தமிழர் என்பதைச் சிறப்பு வாய்ந்த ஓர் அடையாளமாகவும் ஆசிரியர்களாகிய நாம் முதலில் கருத வேண்டும். நாம் தமிழ்மீது அதிகமாகப் பற்றைக் கொண்டிருப்பதைப் பார்க்கும் நம் மாணவர்கள் தாமாகவே நம் மீதும் தமிழின் மீதும் மரியாதை கொண்டிருப்பர். தமிழ்மொழியைக் கற்றுக் கொள்ள ஆர்வம் காட்டுவர்.

மேற்கோள்

1) The utilization and integration of ICT tools in promoting English language teaching and learning

http://ijedict.dec.uwi.edu/printarticle.php?id=161&layout=html&layout=html

2) Jean Piaget: Cognitive Theory

http://www.nwling.com/~donclark/hrd/bloom.html

4) Self-efficacy: An Essential Motive to learn

http://vmarpad.shaanan.ac.il/efficacy/%D7%97%D7%95%D7%9C5D7%9C%D7%95%D7%AA%20%D7%A6%D7%9E%D7%99%D7%AA/barry%20zimmerman/zimmerman%20-%20Self-Efficacy-%20An%20Essential%20Motive%20to%20Learn.Pdf

14. கட்டுரை மற்றும் கருத்தறிதல் கற்பித்தலில் படைப்பாக்கக் காட்சிப்படுத்துதலின் பயன்பாடு

ஃபிரான்சிஸ்கா சுபாஷ் லாசர் [Francisca Subash Lazar] இளங்கலைப் பட்டம்-தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பள்ளி பணிமேம்பாட்டு அதிகாரி - School Staff Developer, இந்நோவா தொடக்கப்பள்ளி, சிங்கப்பூர்

கட்டுரைச் சுருக்கம்

கட்டுரை எழுதுவதிலும் கருத்தறிதல் வினாக்களுக்கு விடையளிப்பதிலும் படைப்பாக்கக் காட்சிப்படுத்துதலைப் (Creative Visualization) பயன்படுத்துதல் மேலைநாட்டுக் கல்வி உலகில் பிரபலமான ஒரு செயன்முறையாகும். இதன்வழி மாணவர்களின் ஈடுபாடு, ஆர்வம், மொழிபற்றிய புரிந்துணர்வு முதலியவற்றை அதிகரிக்கச் செய்யமுடியும். இவ்வணுகுமுறையில் மாணவர்கள் எப்போதும் வாசிக்கும் பனுவல்களைத் தங்கள் மனத்திரையில் காட்சிப்படுத்தும் பயிற்சியை வளர்த்துக் கொள்வார்கள். கற்றலில் முதிர்ச்சி அடைந்த மாணவர்களின் வாழ்நாள் கற்றலுக்கு இச்செயன்முறை வழிவகை செய்கிறது. இக்கட்டுரை, இவ்வணுகுமுறை பற்றிய ஆய்வாளர்களின் கருத்துகள், செய்முறைப் படிநிலைகள், சிங்கப்பூர் கல்வி அமைச்சின் இலக்கோடு இது ஒத்திசைந்திருத்தல், கற்பித்தலில் இவ்வணுகுமுறை பயன்பட்ட விவரங்கள், மாணவர்களின் தேர்ச்சிநிலை முன்னேற்றம், எதிர்கொண்ட சவால்கள், பரிந்துரைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

முன்னுரை

'தன்னிலை அறிவு (Meta-cognition) என்பது தன்னிலை சார்ந்த அறிவு, தன்னிலை அறிவுசார்ந்த அனுபவங்கள் அல்லது ஒழுங்குமுறை ஆகிய இரண்டையும் உள்ளடக்கியது' என்கிறார் ஜாக் ஃபிலாவேல். (Metacognition consists of both meta cognitive knowledge and memta cognitive experiences or regulation' - John Flavell 1979). ஒரு விஷயத்தைப் பற்றி அறிந்து விளங்கிக் கொள்கின்ற ஓர் உளச் செயன்முறை தன்னிலை அறிவு (Metacognition). இச்செயன்முறை கற்றலைச் சுய மேற்பார்வை செய்யும் படிநிலைகளை உள்ளடக்கியுள்ளது. கற்றல் நடைபெறும்போது மாணவர்கள் தாம் கற்பவற்றைச் சுயசிந்தனையுடனும் கூர்ந்த பார்வையுடனும் கவனிப்பது அவர்கள் தத்தம் கற்றலை மேம்படுத்தப் பேருதவியாக இருக்கிறது. படைப்பாக்கத்திறன், புத்தாக்கத்திறன் போன்றவை இக்காலக் கல்வியுலகில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. இச்செயற்பாடுகள் வாயிலாக மாணவர்கள் தங்கள் தன்னிலை அறிவுத் திறனை வலுப்படுத்திக் கொள்கின்றனர். தம் பட்டறிவால் எழும் எண்ணங்களைக் கொண்டு புதுமையான தொடர்புகளைக் காணுதல் ஒருவகை தன்னிலை அறிவாகும். இந்தத் தன்னிலை அறிவுப் பயிற்சியின்மூலம் என் மாணவர்கள் தங்கள் எண்ணங்களை மனத்தில் காட்சிப்படுத்திக் கட்டுரை எழுதுவதிலும் கருத்தறிதல் வினாக்களுக்கு விடையளிப்பதிலும் பயனடைந்த விதம்பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். 'பிள்ளைகளின் கற்றல் அனுபவங்கள் உண்மை நிலையில் இருப்பதுடன் மகிழ்ச்சிகரமானதொன்றாகவும் அமையப் பெற்றிருக்க வேண்டும்' என்கிறார் எல்லின் கீன் (Children's learning experiences should be authentic & enjoyable - Ellin Keenel 1997).

தன்னிலை அறிவுப் பயிற்சியைக் கொண்டு, சிந்தனைகளைக் காட்சிப்படுத்துதல் மூலம் மாணவர்கள் தங்கள் சிந்தனைகளில் கூடுதல் கவனம் செலுத்துகின்றனர். இம்முறையைப் பயன்படுத்திக் கருத்தறிதல் திறன்களை மேம்படுத்தலாம் என்பது எல்லின் கீன், சூசன் சிம்மர்மேன் (1997) போன்ற ஆய்வாளர்களின் கருத்தாகும். இதனைத் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் பயன்டுத்தி, மாணவர்களின் கட்டுரை, கருத்தறிதல் செயல்பாட்டில் ஆக்ககரமான பயன்களைக் காண முடியும். அதன்வழிக் கிடைக்கப்பெற்ற பயன்களைப் பகிர்ந்துகொள்வது கற்றல்-கற்பித்தல் செய்முறைக்குப் பயனளிக்கும் என்பது என் நம்பிக்கை.

பின்னணியும் சூழ்நிலையும்

தொடக்கப்பள்ளித் தேர்வுகளில் தமிழ்மொழிப் பாடத்தைப் பொறுத்தவரையில் மாணவர்கள் சிரமப்படும் பகுதிகளில், கருத்தறிதல் பகுதியும் ஒன்று. கருத்தறிதல் பத்தியை வாசிக்கும் போது என்ன வாசிக்கிறோம் என்பது மாணவர்களுக்குப் புலப்படாததே இதற்கு முக்கியக் காரணமாக உள்ளது. சொற்களைப் பிழையின்றி நன்றாக வாசிக்கக்கூடிய மாணவர்களிடையேயும் கருத்தை முழுவதுமாகப் புரிந்து கொள்ளமுடியாமல் போகும் நிலை உள்ளது. 'திறம்பட வாசிப்பவர்கள் எவ்வாறு தெளிவுறலை அதிகப்படுத்திப் பொருள் விளக்கம் பெறுகின்றனர் என அறிந்தால், அந்த அணுகுமுறையை மாணவர்களிடையே பயன்படுத்த அவர்களது வாசித்தல், கருத்தறித்தல் திறன்களை மேம்படுத்த முடியுமா என்பதை அறிய எல்லின் கீன், சூசன் சிம்மர்மேன், கேத்தி மில்லர் (Ellin Keene, Susan Zimmermann and Cathy P.Miller) ஆகியோர் ஆய்வுகளை மேற்கொண்டனர். இவ்வாய்வுகளிலிருந்து தொகுக்கப்பட்ட கருத்துகள் எனது இம்முயற்சிக்கு அடிப்படையாக அமைகிறது.

'வாசிக்கப்பட்ட கருத்துகள் ஆழமாகவும் நீண்டு நிலைத்திருக்கக் கூடியதாகவும் உள்ள புரிதலை உருவாக்கும் வகையில் அமைவதற்குப் பிள்ளைகள் தூண்டப்பட வேண்டும். இதுவே கருத்தறிதல் உத்திகளைக் கற்பித்தலின் நோக்கமாகும்' (The purpose of teaching comprehension strategies is to enable children to read with deeper, longer lasting understanding' - Susan Zimmerman, 1997).

மாணவர்கள் கருத்தறிதல் பகுதியைத் தாமாகவே படித்து எப்படியும் அப்பகுதியைப் புரிந்துகொள்வர் என முடிவுசெய்ய இயலாது. மாணவர்கள் கருத்தறிதல் பகுதியைப் படித்துப் புரிந்து கொள்வதில் சிரமப்படுகிறார்கள் எனக் கூறுவதைவிட அவர்கள் தாங்கள் புரிந்து கொண்டவற்றைச் சொற்கள்வழி வெளிப்படுத்தத் தடுமாறுகின்றனர் எனக் கூறுவதே பொருத்தமாகும். மாணவர்களின் வயது, விருப்பு-வெறுப்பு, ஆற்றல், தேவை முதலியனவற்றை அறிந்து, அவற்றிற்கேற்ப வகுப்பறை நடவடிக்கைகள் அமையப் பெற்றிருப்பது சிறப்பு. அவ்வகையில் என் வகுப்பு மாணவர்களின் கற்றல் தேவைகளை அறிந்து அவற்றிற்கேற்றவாறு கற்றல் நடவடிக்கைகள் உருவாக்கப்பட்டன. மாணவர்கள் கருத்தறிதல் பகுதியை எளிதில் விளங்கிக் கொள்ளும் வகையில் கற்பிப்பதற்குப் புத்தாக்கக் காட்சிப்படுத்துதல் (Creative Visualization) செயன்முறை வகுப்பறையில் பயன்படுத்தப்பட்டது.

மாணவரை மையமாகக் கொண்டு அவரது அறிவுசார் மற்றும் உளம்சார் வளர்ச்சி நிலையை மேம்படுத்தும் வகையில் பாடங்கள் தயாரிக்கப்பட்டன. கற்பவர் தாமே சிந்தித்துச் செயற்பட்டு அனுபவம் பெறும் வகையில் கற்றல் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டன. இந்த அனுபவம் மூலம் மாணவர்கள் வாசிப்புப் பகுதியிலிருந்து புதிய அர்த்தங்களைக் கட்டமைத்ததோடு, தீர்மானம் செய்தல், கருத்துக்களை ஒழுங்குபடுத்துதல், தொகுத்துக் கூறுதல் போன்ற புதிய திறன்களைப் பெற்றனர். மேலும் இதன்வழி மாணவர்கள் தன்னிலை அறிவுச் செயன்முறை, விடைகளைக் கண்டறிதல் உத்தி, பிரச்சனைக்குத் தீர்வு காணுதல் முறை போன்றவற்றோடு சிந்தனைத் திறன்களையும் வளர்த்துக் கொண்டனர்.

மாணவர்களைச் சரியான புரிதலுடன் வாசிப்பவர்களாக உருவாக்குவதே கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டுமே தவிர தேர்வுக்காகத் தயார்படுத்துவது மட்டுமன்று. மாணவர்களின் சிந்தனை ஓட்டத்தை ஆக்கப்பூர்வமாக அமைத்து அவர்கள் வழி நடத்தவேண்டும். இதனைச் செயற்படுத்த மாணவர்களின் தன்னிலை அறிவுத் திறன்களை (metacognitive skills) வளர்த்தல் அவசியமாகிறது. தன்னிலை அறிவுத் திறன்கள் குறித்த துறையில் நிபுணராக விளங்கும் ஜான் ஃபிலாவேல் (1979) என்பவர் அதைப்பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'மாணவர்கள் தம்மில் தோன்றும் அறிவுசார் நிகழ்வுகள் மற்றும் தன்னிலை அறிவுசார் நிகழ்வுகள் பற்றி முழுமையானதொரு எண்ணக் கருத்தினைக் கொண்டிருப்பதில்லை என்பதனை முன்னைய ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. அத்துடன் கருத்தறிதலைப் பற்றியும் தன்னிலை அறிவுசார் ஆர்வங்கள் பற்றியும் அவர்களுடைய நினைவில் மிகக் குறைவாகவே கவனம் செலுத்துகிறார்கள். தன்னிலை அறிவு என்பது ஒருவரிடம் அவரைப் பற்றிய அறிவாக அல்லது அவரைப் பற்றியும் பிறரைப் பற்றியும் அவர் கொண்டுள்ள நம்பிக்கைகளாக அமைகின்றன. இத்தகைய அறிவும் நம்பிக்கைகளும், வகுப்பில் நடைபெறும் பணிகள், செயல்பாடுகள், உத்திமுறைகள்

ஆகியவற்றோடும் அவை மூன்றையும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தியும் மேற்கொள்ளும் நுண்ணறிவுசார்ந்த ஊக்கமுயற்சியாக விளங்குகின்றன (John Flavell, 1979).

பரிந்துரைக்கப்படும் படிநிலைகள்

மாணவர்களை வாசித்தல் கருத்தறிதலுக்கு இட்டுச் செல்லும்போது மாணவர்களின் தன்னிலை அறிவினைத் தட்டி எழுப்புகிறோம். இதைச் சிறப்பாகச் செயல்படுத்தக் கீழ்க்காணும் படிநிலைகள் கையாளப்பட்டன.

கருத்தறிதல் பாடம்

1. முதலில் கருத்தறிதலுக்கான பகுதிகள் பத்திப் பத்தியாகப் பிரிக்கப்பட்டு ஒன்றன்பின் ஒன்றாக மாணவர்களுக்கு வழங்கப்படும். வழங்கப்படும் ஒவ்வொரு பத்தியும் அவர்கள் வாசித்த பின்பு அவர்கள் காட்சிப்படுத்தியவற்றைத் தாளில் வரைவர்.
2. தொடர்ந்து அவர்கள் காட்சிப்படுத்தியவற்றைத் தத்தம் இணையாளருடன் பகிர்ந்து கொள்வர்.
3. கருத்தறிதல் பகுதியின் எல்லா பத்திகளையும் பெற்றுக்கொண்டு அவற்றை வாசித்தபின் பகுதியின் முழுமையான பொருளை அறிந்துகொள்வர். அதன்பின், தாங்கள் ஏற்கனவே காட்சிப்படுத்திய எண்ணங்களையும் கருத்தறிதல் பகுதியின் முழுமையான கருத்துக்களையும் ஒப்பிடுவர். அதன்பிறகு, கருத்தறிதல் கேள்விகளுக்குச் சுயமாக விடையளித்த பின், குழுநிலையில் சரிபார்ப்பர்.

மேற்கண்டவாறு தொடர்ந்து பயிற்சி செய்யும்போது மாணவர்கள் கருத்தறிதல் பகுதியை எளிதில் புரிந்து கொண்டதைக் காணமுடிந்தது.

கட்டுரைப் பாடம்

1. கட்டுரைப் பாடத்தில் மாணவர்களுக்கு முதலில் சூழல் கொடுக்கப்படும்.
2. அதன் பிறகு, படத்தொடருக்கு ஏற்றவாறு, ஆசிரியர் மாணவர்களைக் கற்பனை உலகத்திற்கு இட்டுச் செல்வார்.
3. மாணவர்கள் கண்களை மூடிக்கொண்டு, ஆசிரியர் தொடுக்கும் வினாக்களுக்கு மனத்தில் காட்சிப்படுத்தி தமக்குள் விடையளித்துக் கொண்டே வருவர்.
4. எடுத்துக்காட்டாக, கட்டுரையில் ஒரு பூங்காக் காட்சி இருக்கிறது என்றால், அப்படத் தொடருக்கு ஏற்றவாறு, ஆசிரியர், 'பூங்கா பார்ப்பதற்கு எவ்வாறு இருக்கிறது? அங்கே வானிலை எப்படி இருக்கிறது? உங்களுக்கு என்ன ஓசை கேட்கிறது? அதை எப்படி வர்ணிப்பீர்கள்?' என்று பொருத்தமான கேள்விகளைக் கேட்டு மாணவர்களை வழி நடத்துவார்.
5. அதைத் தொடர்ந்து மாணவர்கள் தாங்கள் மனத்தில் காட்சிப்படுத்தியவற்றைத் தாளில் வரைந்தோ எழுதியோ பகிர்ந்துகொள்வர், பின்பு நண்பர்களுடைய புதிய கருத்துகளையும் கொண்டு, கதையோட்டத்தைத் தீர்மானம் செய்து முழுமையான கட்டுரையை எழுதுவர்.

இச்செயன்முறையின் மேற்கொண்ட படிநிலையில் எலீன் கீன், சூசன் சிம்மர்மேன் மற்றும் கேத்தி புவட் மில்லர் ஆகியோர் பரிந்துரைத்துள்ள முக்கியக் கூறுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

Monitoting for meaning	அர்த்தம் புலப்படும் தன்மையை மேற்பார்வையிடல்
Using and Creating Schema	கருத்துப்படிமங்கள் எளிய முறையில் உருவாக்குதலும் உபயோகித்தலும்
Asking questions	கேள்வி கேட்டல்
Determining importance	வாசிப்புப் பகுதியின் முக்கியத்துவத்தைத் தீர்மானித்தல்
Inferring	ஊகித்து அறிந்துகொள்ளுதல்
Using sensory and emotional images	புலனும் உணர்வும் சார்ந்த மனக்காட்சிகளை உருவாக்குதல்
Synthesizing	கருத்துகளின் இணைப்புருவாக்கம்

மேற்கண்ட படிநிலைகளைச் சிறப்பாகக் கையாண்டு மாணவர்களின் கருத்துகளைத் தெளிவாக வெளிப்படுத்த உதவுவதற்குப் புத்தாக்கக் காட்சிப்படுத்துதல் மிக முக்கியமான கருவியாக அமைகிறது. மாணவர்கள் தாங்கள் படித்த பகுதிகளை மனத்தில் காட்சிப்படுத்த நான்கு வெவ்வேறு வழிகளில் தங்கள் புரிதலை வெளிப்படுத்துவர்.

எழுத்துவழிப் பகிர்தல்	இந்தப் பயிற்சியை மேற்கொள்ள சிந்தனைக் குறிப்பேடு எழுதுதல், செய்தி வாசித்தல், வெண் வரைப்படங்கள்/கதை வரைபடங்கள் உருவாக்குதல், சுருக்கி வரைதல் ஆகியவற்றைச் செயல்படுத்துவர்
படங்கள் வழிப் பகிர்தல்	மனத்திரையில் காட்சிப்படுத்துல், உருவகப்படுத்துதல், அடையாளச் சின்னங்களைக் கொண்டு குறிப்பெடுத்தல்.
வாய்மொழி மூலம் பகிர்தல்	கூடிக்கற்றல் அணுகுமுறை மூலம் பகிர்தலும் வகுப்பில் வாசிப்புக் குழுவை உருவாக்கித் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளுதல்.
நாடகம் வழிப் பகிர்தல்	நாடக உத்திவழி கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளுதல்.

பயன்கள்

'சிங்கப்பூரில் தமிழை வாழும் மொழியாக்குவதற்குத் தமிழ் பயிலும் மாணவர்கள் ஒருவரோடு ஒருவர் தயக்கமின்றிச் சரளமாகத் தமிழில் உரையாடத் தேவையான மொழியாற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் அவர்கள் தமிழில் தயக்கமின்றிக் கருத்தைப் பரிமாறிக் கொள்ளும் திறனையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்' (தமிழ்மொழிக் கல்வியின் இலக்கு : தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2015).

அந்த இலக்கை அடைவதற்கு வகுப்பறைகளில் அதிகமான கருத்துப்பரிமாற்ற நடவடிக்கைகள் தமிழ்மொழியில் இடம்பெற வேண்டும். மாணவர்கள் தயக்கமின்றித் தங்கள் மனத்தில் எழும் கருத்துகளைத் தத்தம் நண்பர்களுடன் பரிமாறிக் கொள்ள வேண்டும். இதற்குப் புத்தாக்கக் காட்சிப்படுத்துதல் பயிற்சி பெரிதும் உதவி புரிந்தமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

காட்சிப்படுத்துதலை வழக்கமாகக் கொண்டு வாசிக்கும் மாணவர்களின் குறிப்பேடுகளில் பல படங்களும் அடையாளச் சின்னங்களும் காணப்பட்டன. அவ்வாறு குறிப்பெடுக்கும் போது புதிய தகவல்களைப் பெறும் தறுவாயில் அவற்றை மென்மேலும் மெருகூட்டிக் கொண்டே இருந்தனர். இவ்வாறு படித்ததை முழுமையாகவும் சரியாகவும் புரிந்து கொண்டோர் கருத்தறிதல் கேள்விகளுக்கு மட்டுமன்றி பகுதியையொட்டி எந்தக் கேள்வியானாலும் மிகச் சரியாகப் பதிலளிக்கக் கூடிய தன்மையைப் பெற்றுள்ளனர். இந்த நடவடிக்கையை மேற்கொள்ளும்போது நாளடைவில் படித்தவற்றை மனத்தில் காட்சிப்படுத்துதல், கேள்வி கேட்டல், உணர்வூட்டுதல், தொகுத்தல் போன்ற செயல்பாடுகள் இயல்பாக அமைந்துவிடுகின்றன. கடந்த ஓராண்டுக் காலத்திற்கு இந்த உத்திமுறைகளைப் பயன்படுத்திய பிறகு, மாணவர்களின் கருத்தறிதல் மற்றும் கட்டுரை எழுதும் திறன் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது. மேலும் மாணவர்கள் வகுப்பில் தங்கள் நண்பர்களுடன் தாம் படித்த அல்லது உருவாக்கிய கதையைப் பற்றிக் கூடுதலாக உரையாடுவதும் ஆர்வத்துடன் பாடத்தில் ஈடுபடுவதும் அதிகமாகக் காணப்படுகின்றது. அதோடு மாணவர்கள் தாமாகவே புத்தகத்தைப் படித்துத் தமக்குப் பிடித்த வகையில் புத்தக மதிப்பீடு செய்து வகுப்பில் பகிர்ந்து கொள்வதிலும் விரும்பி ஈடுபடுகின்றனர். அவர்கள் ஆர்வத்துடன் வாசித்தலில் ஈடுபடுவது அதிகரித்திருப்பது இச்செயன்முறையின் பயன்விளைவாகும்.

சவால்கள்

இதற்கு முன்பே மாணவர்கள் புத்தாக்கத் திறன் வளர்க்கும் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்ததால் மாணவர்களைச் சுலபமாக இந்நடவடிக்கையில் ஆர்வங்கொள்ளச் செய்ய முடிந்தது. இருப்பினும் எல்லா கருத்தறிதல் மற்றும் கட்டுரைப் பயிற்சிகளுக்கும் புத்தாக்கக் காட்சிப்படுத்துதல் பயிற்சியைச் செய்வது சவாலாகவே அமைந்தது. மாணவர்கள் தாங்கள் மனத்தில் காட்சிப்படுத்தியவற்றைச் சரளமாக வாய்மொழியாக வெளிப்படுத்தச் சற்று சிரமப்பட்டனர். ஆனால், காட்சிவழித் தங்கள் மனத்தில் உள்ள கருத்துகளை நன்கு வெளிப்படுத்தினர். சுயமாகப் பேசத் தயக்கம் காட்டிய மாணவர்களைக் குழு வேலையில் ஈடுபடுத்திப் பகிர்ந்து கொள்ளச் செய்தது பாடத்தின் கால அவகாசத்தை நீடித்தது. மாணவர்களின் சொல்வளப் பற்றாக்குறையே இதற்கு முக்கியக் காரணம் எனக் கருதப்படுகிறது. கட்டுரை எழுதுவதிலும் கருத்தறிதல் வினாக்களுக்குச் சிறப்பாக விடையளிப்பதற்கும்

கற்றுக் கொண்ட என் மாணவர்கள், வாழ்நாள் வாசித்தலில் ஈடுபட வேண்டும் என்பதே எனது இம்முயற்சியின் நோக்கமாகும். இவ்வணுகுமுறையைத் தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் என் முயற்சி நிறைவேறும் என்பது எனது நம்பிக்கை.

பரிந்துரைகள்

* புத்தாக்கக் காட்சிப்படுத்துதல் செயன்முறை பல்வேறு பயன்களைத் தரக்கூடிய ஒன்றாக இருப்பதால் இதனை, வாசிப்புப் பாடத்தின் முக்கியக் கூறாகக் கொள்ள வேண்டும்.

* வகுப்பில் புத்தாக்க மன்றச் செயல்பாடுகள், வாசிப்புக் குழு நடவடிக்கைகள், புத்தக மதிப்பீடு போன்றவற்றை நடத்தினால் வாசித்தலில் ஈடுபாட்டை அதிகரித்து, அதன்மூலம் வாசிப்புத் திறன் மேம்படும்.

* புத்தாக்கக் காட்சிப்படுத்துதல் செயன்முறை குறித்துத் தரவுகளைத் திரட்டிப் பகுப்பாய்வு செய்யும் வகையிலான ஆய்வுசெய்ய முயற்சி மேற்கொள்ளலாம்.

முடிவுரை

இக்கட்டுரையில் பகிர்ந்துகொள்ளப்பட்ட உத்திகள் யாவும் மேனாட்டு ஆய்வாளர்களால் உருவாக்கப்பட்டவை என்றாலும், நாம் நம் மாணவர்களின் கற்றல் பாணிக்கும் தேவைகளுக்கும் ஏற்றவாறும் சிற்சில மாற்றங்களைச் செய்து திட்டமிட்டு அமல்படுத்துவது சாலச் சிறந்ததாகும்.

கற்பித்தலின் இலக்கு, மாணவனின் அறிவைப் பெருக்குதல், அடிப்படைக் கல்வியறிவைப் புகட்டுதல், உலக அறிவைப் பெறச் செய்தல், நாட்டுக்கும் வீட்டுக்கும் பயன்தரும் வகையில் பணியில் ஈடுபடத் தயார்ப்படுத்துதல், பண்பாடும் விழுமியமும் அறிந்து செயல்படுபவராக உருவாக்குதல் முதலியனவாகும். அத்துடன் மாணவரைச் சுதந்திர சிந்தனையாளர்களாக மாற்றி, சுயமாகக் கற்றலைத் தொடர்ந்து நாடிச் சுய இலக்கோடு சிந்திக்கக் கூடிய கற்பவரை உருவாக்குவதும் ஆகும்.

பிரச்சனைகளைக் கண்டு அஞ்சி ஒதுங்காமல் சாத்தியமான மாற்று வழிகளைத் தேடுவதும், அவற்றுள் மிகவும் சிறந்த ஒன்றைத் தெரிவு செய்தும் அதை நடைமுறைப்படுத்துவதற்கு உண்மையாகப் பாடுபடுவதும், தெரிவுகளை மதிப்பீடு செய்வதும் அவசியமாகும். இவை அனைத்தையும் படிப்படியாக வளர்க்க மாணவர்களின் தன்னிலை-அறிவு வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். நம் தமிழ் மாணவர்களைச் சிறந்த சிந்தனையாளர்களாக உருவாக்கத் தமிழ்மொழிக் கல்வியாலும் பங்களிக்க முடியும் என்பது உறுதி.

மேற்கோள்கள் :

Cathy Puett Miller, Opening the Door: Teaching Students to Use Visualization to Improve Comprehen sion, www.educationworld.com.

Elling, Oliver, K. and Susan Zimmermann, (2007). Mosaic of Thought: The Power of Comprehension Strategy Instruction, (2nd Edition), Heinemann: Portsmouth, NH.

Flavell, J.H. (1979). Metacognition and cognitive monitoring: A new area of cognitive-developmental inquiry. American Psychologist, 34, 906 - 911.

Flavell, J.H. (1981). Cognitive monitoring. In W.P. Dickson (Ed.), Children's oral communication skills (pp.35 - 60). New York: Academic Press.

Flavell, J.H. (1987). Speculation about the nature and development of metacognition. In F. Weinert&R. Kluwe (Eds.), Metacognition, motivation, and understanding (pp.21 - 29). Hillsdale, NJ: Lawrence Erlbaum.

15. பாட ஆய்வினைப் பயன்படுத்தி '10'T சிகரம்' என்னும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் வழிக் கற்பித்த அனுபவங்கள்

அல்லி அழகு, கல்வித் தொழில்நுட்ப மூத்த அதிகாரி,
கல்வித் தொழில்நுட்பப் பிரிவு, கல்வி அமைச்சு
அனிசா ஜாப்பீர், தமிழாசிரியர், சி.எச்.ஐ.ஜே. தொடக்கப்பள்ளி (தோ. பாயோ)
செல்வராஜ் ராமாயி, மூத்த ஆசிரியர், சீ.ஃபா தொடக்கப்பள்ளி

பின்னணி

'10'T சிகரம்' தகவல் தொடர்புத் தொழில்நுட்ப அணுகுமுறை

'10'T சிகரம்' தகவல் தொடர்புத் தொழில்நுட்ப அணுகுமுறை தாய்மொழி கற்றல் கற்பித்தலில் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் ஏற்படுத்துவதோடு மொழித் திறன்களில் மாணவர்கள் மேம்பாடு அடையவேண்டும் என்னும் முக்கியக் குறிக்கோள்களைக் கொண்டு திகழ்கிறது. இந்த அணுகுமுறை வழி, கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களோடு இருவழிக் கருத்துப் பரிமாற்றத் திறன்களையும் மாணவர்கள் அடைவர் என்ற நம்பிக்கை கொண்டு விளங்குகிறது.

10'T சிகர அணுகுமுறை தமிழ்மொழிப் பாடத்திட்டத்தைப் பின்பற்றி நடத்தப்படுகிறது. இது உயிரோட்டமுள்ள ஓர் இணையச் சூழலில் (Interactive Environment) சுய முனைப்புடன் கற்றலையும் (Self-Directed Learning) உடனிணைந்து கற்றலையும் (Collaboration) வலியுறுத்துகிறது.

பாட ஆய்வின் வரையறை

பாட ஆய்வு ஜப்பான் தொடக்கப் பள்ளிகளில் முதன்முதலில் தொடங்கப்பட்டதாகும். கற்றல் கற்பித்தலில் முன்னேற்றம் காணுவதோடு ஆசிரியர்களின் பணி மேம்பாட்டுக்குப் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஒரு செயல்முறையாகும். ஒரே நிலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் உடனிணைந்து ஒரு பாடத்துக்கான கற்றல் நோக்கங்களையும் உத்திகளையும் கலந்து திட்டமிட்டு அப்பாடத்தை வகுப்பறையில் நடைமுறைப்படுத்துவது பாட ஆய்வாகும் (Lesson Study). திட்டமிட்ட பாடத்தை ஆய்வு ஆசிரியர் கற்பிக்கும்போது பிற ஆசிரியர்கள் அப்பாடத்தை உற்றுநோக்கல் செய்து கருத்துத் தெரிவித்துப் பயன்பெறுவதே பாட ஆய்வின் குறிக்கோளாகும். (Wikipedia, the free encyclopaedia).

'10'T சிகரத்தின் பாட ஆய்வு

10'T சிகர அணுகுமுறை தொடக்கக் காலங்களில் பள்ளிசார்ந்த செயலாய்வை மேற்கொண்டது. 2013-இல் முதன்மை ஆசிரியர் நடத்திய பாட ஆய்வுப் பட்டறையில் 10'T பள்ளிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். அன்றிலிருந்து இன்றுவரை பாடங்கள் பாட ஆய்வின்வழிக் கற்பிக்கப்பட்டு வருகின்றன. பாட ஆய்வு மாணவர்களின் கற்றலை வளப்படுத்தி மேம்படுத்துவதோடு தமிழாசிரியர்களின் பணி மேம்பாட்டுக்கும் ஊன்றுகோலாக அமைகிறது. 10'T ஆசிரியர்கள் உடனிணைந்து முறைப்படுத்தப்பட்ட நிலையில் இவ்வாய்வை மேற்கொண்டு கற்றல் நிகழ்ந்ததற்கான சான்றுகளைத் திரட்டி மாணவர்களின் கற்றல் இடைவெளிகளைக் களைந்து அவர்களது கற்றலை மேம்படுத்த முற்படுகின்றனர்.

பாட ஆய்வின் சுழற்சி

புதிய பள்ளிகளும் புதிய ஆசிரியர்களும் முதன்முதலில் இரண்டிலிருந்து மூன்று பாடம் வரை பாட



உற்றுநோக்கலில் ஈடுபட்ட பின்னரே பாட ஆய்வில் கலந்துகொள்வர். இவ்வாறு செய்வதால் மாணவர்களது கற்றல் சான்றுகளைத் திரட்டுவதற்கும் கற்றல் இடைவெளிகளைக் களைவதற்கும் 10'T ஆசிரியர்கள் தயார்நிலையில் இருப்பர் என்பது வழிநடத்தும் குழுவினரின் கருத்தாகும். இதனையே 10'T ஆசிரியர்களும் வரவேற்கின்றனர்.

ஆய்வுப் பாடங்கள்

தொடக்கநிலை ஒன்றாம் இரண்டாம் வகுப்புகளுக்குப் பேசுதல் மற்றும் படித்தல் திறன்களில் குறிப்பாகப் பேச்சுத் தமிழிலும் வாய்விட்டுப் படித்தலிலும் கவனம் செலுத்துமாறு வலியுறுத்தப்படுகின்றன. தொடக்கநிலை மூன்றாம் நான்காம் வகுப்புகள் இலக்கணம், கட்டுரை, கருத்தறிதல் போன்ற பாடங்களில் கவனம் செலுத்துவர். இருப்பினும் சில பள்ளிகளில் தொடக்கநிலை இரண்டாம் வகுப்புகளுக்குக் கருத்தறிதல், கட்டுரை போன்ற மொழித்திறன்களில் பாட ஆய்வு நடத்தி வெற்றி கண்டுள்ளனர்.

10'T சிகரப் பாட ஆய்வின் கட்டமைப்பு முறை

சிங்கப்பூர் பள்ளிகளில் தமிழாசிரியர்களின் எண்ணிக்கை குறைவு. பெரும்பாலான பள்ளிகளில் இரண்டிலிருந்து மூன்று ஆசிரியர்களே உள்ளனர். இக்காரணத்தால் 10'T பாட ஆய்வு அதன் மூலத்திலிருந்து சற்று விலகித் தழுவல் செய்யப்பட்டுள்ளது. தொடக்கத்தில் இரு வெவ்வேறு பள்ளிகளுக்கிடையே பாட ஆய்வு நடைபெற்றது. ஆனால், பல நிர்வாகக் காரணங்களால் அவை சிரமங்களை எதிர்நோக்கின. ஆதலால் பின்வரும் இரு கட்டமைப்பு முறைகளை நாங்கள் பரிந்துரைத்தோம் :

'ஓர் ஆசிரியர் ஒரு வகுப்பு' என்னும் கட்டமைப்பு முறையில் ஆய்வுப் பாட ஆசிரியர் ஒரு திறன் அடிப்படையில் இரு வெவ்வேறு பாடங்களை நடத்துவார். **'இரு ஆசிரியர்கள் இரு வகுப்புகள்'** என்னும் கட்டமைப்பு முறையில் ஒரே நிலையில் கற்பிக்கும் இரு ஆசிரியர்கள் ஒரு திறன் அடிப்படையில் ஒரே பாடத்தைக் கற்பிப்பர்.

ஆய்வுப் பாட ஆசிரியர்களின் சிந்தனை மீட்சி

பாட ஆய்வில் வெற்றி கண்ட மூன்று பள்ளிகள் தத்தம் பள்ளியின் தமிழாசிரியர்களோடு இணைந்து ஆய்வுப் பாடத்தைத் திட்டமிட்டனர். மாணவர் கற்றலுக்கும் நீடித்த முன்னேற்றத்துக்குமான குறிக்கோளை அடையாளங்கண்டு பாட ஆய்வுச் சுழற்சியில் ஈடுபட்டனர். பாட ஆய்வின் அறிவுசார் கல்வியாளர்களாகக் கல்வித் தொழில்நுட்ப அதிகாரிகள் அவர்களை வழி நடத்தினர்.

பாட ஆய்வுப் பள்ளிகளின் சிந்தனை மீட்சி

சி.எச்.ஐ. ஜே.(தோ பா யோ)

அனிசா ஜாப்பீர், வீரராஜூ தேவிகா, ரோஹிணி, அன்பழகி

மொழிக்கூறு - இறந்தகால வினைமுற்று

தொடக்கநிலை மூன்றாம் வகுப்புக்கு 10'T சிகர அணுகுமுறை வாரத்துக்கு மும்முறை நடத்தப்பட்டது. இப்பாட ஆய்வை எங்கள் பள்ளியில் நடைபெறும் பள்ளிசார்ந்த பணி மேம்மாட்டுக் கற்றல் தளத்தில் (PLC) பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு இப்பாட ஆய்வை மேற்கொண்டோம். எங்கள் தமிழ்த்துறைக்கு இது ஒரு புதிய அனுபவமாகும்.

பாட ஆய்வுக்கு நாங்கள் மொழிக்கூறுப் பாடத்தைத் தேர்ந்தெடுத்தோம். குறிப்பாக இந்தப் பாட ஆய்வில், மொழிக்கூறுப் பாடத்தில் கூடிக்கற்றல் உத்திமுறைகளை இணைப்பதன் மூலம் மாணவர்களின் ஈடுபாடு அதிகரிக்கிறதா என்று அறிவதோடு 10'T சிகரம் தகவல் தொடர்புத் தொழில்நுட்ப அணுகுமுறையின் பலனால் மாணவர்களின் சுய கற்றல் எவ்வாறு வெளிப்படுகின்றது என்று தெரிந்துகொள்ள விரும்பினோம்.

ஆய்வுப் பாட ஆசிரியர் - அனிசா ஜாப்பீர் :

பாட ஆய்வின் அனுபவம் எனக்குப் புதிது. என் துறை ஆசிரியர்களோடு இணைந்து பாடத்தை உருவாக்கும்போது அவர்களுடைய சிந்தனைகளும் ஆலோசனைகளும் எனக்குப் பேருதவியாக அமைந்தன. அது மட்டுமல்லாமல் பல அலுவல்களுக்கிடையே பாடக்குறிப்பையொட்டிக் கலந்துரையாடுவதற்கும் பயிற்று கருவிகளைத் தயாரிப்பதற்கும் நேரம் ஒரு சவாலாக அமைந்தது.

கற்பித்தல் நோக்கங்களை மனத்தில் கொண்டு நடவடிக்கைகளை உருவாக்கும்போது நேர நிர்வாகத்தையும் கவனத்தில் கொள்வது இன்றியமையாத ஒன்று என்பதை நான் உணர்ந்தேன். இந்த அணுகுமுறையில் கூடிக்கற்றல் உத்திகளை இணைத்துக் கற்பித்ததில் எனக்கு மனநிறைவாக இருந்தது. கூடிக்கற்றல் நடவடிக்கைகளுக்கான கட்டளைகளைக் கூறுவதோடு, அவற்றை மாணவர்களிடத்தில் செய்துகாட்டி விளக்குவது அவசியம் என்பதையும் நான் உணர்ந்துகொண்டேன்.

வெவ்வோறு கூடிக்கற்றல் உத்திமுறைகளைப் பயன்படுத்தித் தனி நிலை, இணை நிலை மற்றும் குழு நிலை நடவடிக்கைகளின் மூலம் பாடத்தை வழி நடத்தியது, மாணவர்களின் ஈடுபாட்டைப் பெரிதும் அதிகரித்தது. பாடத்தொடக்கம் முதல் இறுதி வரை மாணவர்களின் கவனத்தையும் ஆர்வத்தையும் தக்க வைக்க முடிந்தது. மேலும், கணினி மூலம் கற்றலை மேற்கொள்வது, மாணவர்களிடத்தில் உற்சாகத்தை அளித்தது. 10'T சிகரத்தில் தனி வேலை செய்வதை மாணவர்கள் பெரிதும் விரும்பினர். அதனால், ஒப்படைப்புகளை முழு ஈடுபாட்டுடன், சுயமாகச் செய்ய அவர்கள் முற்பட்டனர். Tamil'99 விசைப்பலகையைப் பயன்படுத்தி மாணவர்கள் எழுத்து வேலைகளைச் செய்ததைப் பார்த்தபோது பெருமையாகவும் இருந்தது. மாணவர்களின் புரிந்துணர்வைச் சோதிக்கும் வண்ணம் எவ்வாறு பயனுள்ள வழியில் 10'T சிகரத்தைப் பயன்படுத்துவது என்பதை நான் நன்கு அறிந்துகொண்டேன்.

சீஃபா தொடக்கப்பள்ளி

சுயவிடைக் கருத்தறிதல்

எங்கள் பள்ளி மாணவர்களின் தேர்வின் செயல்பாட்டை ஆராய்ந்தபோது தொடக்கநிலை நான்கிலிருந்து ஆறாம் வகுப்பு த் தமிழ் மாணவர்கள் சுயவிடைக் கருத்தறிதல் திறனில் சிரமத்தை எதிர்நோக்குகிறார்கள் என்பதைக் கண்டறிந்தோம். மாணவர்கள் கருத்தறிதல் பகுதியைப் புரிந்துகொண்டு கேட்கப்படும் கேள்விகளுக்குப் பொருத்தமாகப் பிழையறப் பதில்களை எழுதத் தடுமாறுகிறார்கள் என்பதை அறிந்து இதற்குத் தீர்வு காண முடிவு செய்தோம்.

தமிழ்மொழிப் பாடத்திட்டத்தில் (2008) கருத்தறிதல் பாடம் தொடக்கநிலை மூன்றாம் வகுப்பில்தான் முறையாகக் கற்பிக்கப்படுகிறது. அதனால், நாங்கள் கருத்தறிதல் பாடத்தை முறையாகத் தொடக்கநிலை இரண்டாம் வகுப்பிலிருந்தே கற்பிக்க வேண்டுமெனத் தீர்மானித்தோம். இவ்வாறு தொடங்குவதால்

தொடக்கநிலை மூன்றாம் வகுப்பிற்கு மாணவர்கள் செல்லும்போது அவர்கள் கருத்தறிதல் பாடத்திற்குத் தயார்நிலையில் இருப்பார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இத்தளத்திலுள்ள பொருத்தமான எளிய வாசிப்புப் பகுதிகளைக் கொண்டு தொடக்கநிலை இரண்டாம் வகுப்பு மாணவர்களுக்குக் கருத்தறிதல் பாடத்தை முதன்முதலில் ஆய்வுப்பாடமாக அறிமுகம் செய்ய விழைந்தோம். 'பிள்ளைகள் முதன்முதலில் அறிவுசார்ந்த கேள்விகள் மூலம்தான் தகவல்கள் திரட்ட வேண்டும். யார், எது, என்ன, எப்படி, எங்கே, எப்போது, ஏன் போன்ற வினாப் பெயர்களைக் கொண்டு பிள்ளைகள் சுய கற்றலில் ஈடுபடவேண்டும்' என்று கல்வியாளர் பெஞ்சமின் புளூமும் கூறியதற்கேற்ப எங்களின் ஆய்வு வினாவும் அமைந்தது.

ஆய்வுப் பாட ஆசிரியர்-ராமாயி செல்வராஜ் :

முதல் சுழற்சியில் மீத்திறன், சராசரி மாணவர்கள் அனைவரும் கேட்கப்பட்ட கேள்விகளுக்குச் சரியாகப் பதிலளித்தனர்; நடத்தப்பட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். ஆதலால், இவர்களின் ஆதிக்கம் அதிகமாக இருந்தது. இருப்பினும் ஆதார நடவடிக்கை குறைவாக இருந்ததால் மாணவர்கள் பகுதியைப் புரிந்துகொண்டு கேள்விக்கு விடையளித்தார்களா என்று எனக்குத் தெளிவாகத் தெரியவில்லை. அத்துடன் பையப்பயிலும் மாணவர்களின் பங்களிப்பு குறைவாக இருந்ததையும் உணர்ந்தேன். அதனால், இவர்களின் பங்களிப்பை உயர்த்த குழு அமைப்பு முறையில் மாற்றம் தேவைப்பட்டது. பகுதிகளைத் தேர்ந்தெடுப்பதிலும் கவனம் தேவை என்பதையும் அறிந்துகொண்டேன்.

இரண்டாவது சுழற்சியில் ஆதார நடவடிக்கையைக் கூட்டியதால் மாணவர்கள் கருத்தறிதல் பாடத்தை நன்கு புரிந்துகொண்டனர் என்று புலப்பட்டது. திறன் அடிப்படையில் குழுக்கள் அமைக்கப்பட்டன. மீத்திறன், சராசரி மாணவர்கள் சுயமாகக் குழுவேலையில் ஈடுபட்டனர். ஆசிரியர் பையப்பயிலும் மாணவர்களை வழிநடத்தினார். இதனால் பையப்பயிலும் மாணவர்களின் பங்களிப்பும் அதிகரித்தது. வேறுபடுத்தப்பட்ட உத்திகளைக் கொண்டு பாடம் நடத்தப்பட்டதால் பாட நோக்கம் நிறைவேறியது என்று மொழியலாம். பனிக்கூழ்க் குச்சிகளைக் கொண்டு மாணவர்களின் பெயர்களை அழைத்துப் பதிலளிக்க வைத்தது நல்ல உத்தியாகும். எல்லா மாணவர்களையும் பங்கெடுக்க வைக்க இது ஒரு சிறந்த முறையாகும்.

ஜெயந்தி ஏழுமலை, பார்வதி பக்கிரிசாமி :

பாட ஆய்வு ஒரு தனிப்பட்ட ஆசிரியரது தயாரிப்பு அல்ல. அது பல ஆசிரியர்களின் கூட்டு முயற்சியால் தயாரிக்கப்படும் பாடமாகும். எனவே மாணவர்களின் பலம், பலவீனம் ஆகியவற்றை அறிந்து பாடங்கள் தயாரிக்கப்பட்டன. மாணவர்கள் எதிர்நோக்கும் சிரமங்களைக் கண்டறிவதற்கும் அவற்றைக் களைவதற்கும் இவ்வகையான பாட ஆய்வு பயனளித்தது. *''சராசரி ஆசிரியர் பாடத்தை நடத்துகிறார். சிறந்த ஆசிரியர் நடைமுறை உதாரணங்களோடு கற்பிக்கிறார். உன்னதமான ஆசிரியர் உயிரோட்டத்தை ஏற்படுத்துகிறார்.''* **வில்லியம் ஆல்பர்ட்டின் அரிய கருத்து.** இதைக் கருத்தில் கொண்டு பாடத்தை உயிரோட்டமாகவும் மாணவர்களின் திறனுக்கு ஏற்றப் பொருத்தமான நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டுக் கருத்தறிதல் பாடங்கள் நடத்தப்பட்டன. இதன்வழி பையப்பயிலும் மாணவர்களாலும் பகுதியைப் புரிந்துகொண்டு கேள்விகளுக்குச் சரியான விடைகளை எழுத முடிந்தது. இந்தப் பாட ஆய்வின்வழி மாணவர்களின் கற்றல் நிலை எந்நிலையில் உள்ளது என்பதை அறிந்துகொள்ள முடிந்தது. மேலும், அதற்கு ஏற்றாற்போல் மாணவர்களின் வயதுக்கும் அனுபவத்துக்கும் ஏற்புடைய வகையில் பாடக்குறிப்பு தயாரித்துக் கற்பிக்கப்பட்டதால் அவர்களின் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் தக்க வைக்க முடிந்தது. இறுதியாக ஆசிரியர்கள் மாணவர்களைப் பற்றி நன்கு அறிந்துகொள்ளவும் ஒவ்வொரு மாணவரின் திறனறிந்து கற்பித்தலைத் திட்டமிட்டுப் பாடத்தை நடத்தவும் இம்முறை துணைபுரிகிறது என்பது நாங்கள் அறிந்துகொண்ட உண்மையாகும்.

முடிவுரை

பாட ஆய்வின்மூலம் 10'T ஆசிரியர்கள் தங்களுடைய பாடங்களின் சிறப்பையும் பலத்தையும் அறிந்ததோடு அல்லாமல் மாணவர்களிடையே கண்ணுற்ற கற்றல் இடைவெளிகளையும் அறிந்து அவற்றைக் களைய முற்பட்டனர். இந்தப் பாட ஆய்வு ஒவ்வொரு ஆசிரியரையும் சிந்தனை மீட்சியாளராக (Reflective Teacher) மாற்றியது என்று கூறினால் அது மிகையாகாது.

References

* Armstrong, A.(2011). Lesson Study puts a collaborative lens on students learning. Retrived from www.learningforward.org
* Lewis,C.C. & Hurd, J.(2011). Lesson study step by step (1st ed.). Heinemann: USA.
* Research within Reach:issue 29 mar/apr 2011. National Institute of Education. Retrieved from http://singteach.nie.edu.sg

16. தமிழ் கற்றல், கற்பித்தல் - புதிய சிந்தனைகளும் நடைமுறைகளும்

திருமதி. விஜயலட்சுமி பாலா - சிங்கப்பூர்

தாய்மொழி கற்றல் கற்பித்தல் வழி மரபுவழிப் பண்புகளையும் பண்பாட்டையும் உணர்த்துதல்

முன்னுரை

தமிழ் மாணவர்களைத் தாய்மொழியின்பால் ஈர்க்கும் வகையில் கற்றலும் கற்றல் நடவடிக்கைகளும் அமைவது இன்றியமையாதது. ஆசிரியர் பாடம் கற்பிப்பவராக மட்டும் இல்லாது பள்ளி, குடும்பம், சமூகம் ஆகியவற்றை ஒன்றிணைக்கும் பாலமாகவும் திகழ்தல் வேண்டும். இதன் வழித் தாய்மொழிக் கற்றலில் ஆசிரியரோடு பெற்றோரையும் ஈடுபடுத்திக் குடும்ப நல்லுறவை மேம்படுத்துவதுடன், மரபுவழிப் பண்புகளையும் பண்பாட்டையும் உணர்த்தி, நமது சமூகத்தின் நல்லுறவுக்கும் நாட்டு உருவாக்கத்திற்கும் பங்களிப்பதே ஒரு நல்லாசிரியரின் கடமையாகும்.

இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு பள்ளி, குடும்பம், சமூகம் ஆகியோரை உள்ளடக்கிய தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள், ஆர்வமூட்டும் நடவடிக்கைகள் வழி மாணவர்களைத் தாய்மொழியை விரும்பிக் கற்கும்படிசெய்வதோடு, குடும்ப உறுப்பினர்களையும் தாய்மொழியின்பால் ஈடுபாடு உடையவர்களாக உருவாக்க வேண்டும். தமிழ்மொழியை ஒரு வாழும், வளரும் மொழியாக்கும் கடப்பாடு ஒவ்வொரு தமிழாசிரியர்களுக்கும் உள்ளது.

சிங்கப்பூரில் தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல் :

2010-ஆம் ஆண்டில் மறு ஆய்வுக்குழுவின் பரிந்துரைக்கு ஏற்பச் சிங்கப்பூரில் தமிழ்மொழிப் பாடத்திட்டத்திலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. **'தாய்மொழிக் கல்வி ஒருவருக்கு மரபுவழிப் பண்புகளையும் பண்பாட்டு அடையாளத்தையும் விழுமியங்களையும் உணர்த்தவல்லது. மொழிப்பாடங்களில் விழுமியங்களைத் தனிப்படுத்திக் கற்பிக்காமல் பாட நடவடிக்கைகளினூடே ஒருங்கிணைத்துக் கற்பிப்பது பயனளிக்கும். மாணவர்கள் மொழியின்பால் தம் ஈடுபாட்டை வளர்த்துக் கொள்ளவும் தாம் சார்ந்துள்ள மொழியின் பண்பாட்டை வளர்த்துக் கொள்ளவும் தாம் சார்ந்துள்ள மொழியின் பண்பாட்டைப் புரிந்துகொண்டு பாராட்டவும் இவை வழிவகுக்கும்' (தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2015-தொடக்கநிலை)** என்பதற்கேற்ப, தற்போது கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றோடு பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம் மற்றும் எழுத்துவழிக் கருத்துப் பரிமாற்றம் ஆகியன அடிப்படை மொழித்திறன்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

சோதனை முயற்சி மேற்கொள்ளப்பட்டதற்கான காரணம் :

சிங்கப்பூர் ஒரு பல்லினச் சமுதாயம். இங்குச் சீனர், மலாய்க்காரர், இந்தியர் மட்டுமின்றிப் பல்வேறு இனத்தவர்களும் வாழ்கின்றனர். இங்கு ஆங்கிலம் சிங்கப்பூரில் பல்வேறு இனத்தவர்களையும் இணைக்கும் ஒரு தொடர்பு மொழியாக உள்ளது. இந்தத் தொடர்பு மொழியான ஆங்கிலமே கடந்த 25 ஆண்டுகளாகப் பெரும்பாலான தமிழ்க் குடும்பங்களில் பேசப்படும் வீட்டுமொழியாகவும் திகழ்கிறது. சிங்கப்பூரில் தற்போது தொடக்கநிலை முதலாம் வகுப்பிற்கு வரும் தமிழ் மாணவர்களில் 58% வீட்டில் ஆங்கிலம் மட்டுமே பேசும் மாணவர்கள் **(2010ஆம் ஆண்டு தாய்மொழிகள் மறு ஆய்வுக்குழு அறிக்கை).** இவர்கள் தொடக்கநிலை ஒன்றாம் வகுப்புக்கு வரும் போது தமிழில் பேச இயலாத நிலையில் உள்ளனர். அது மட்டுமின்றி இவர்கள் நமது மரபுவழிப் பண்பாடுகளையும் அறியாதவர்களாகவும் உள்ளனர். மாணவர்களைத் தமிழில் பேச வைக்க ஆசிரியர் பலவகையில் ஊக்குவித்தாலும் பெற்றோரின் ஒத்துழைப்பின்றி இவை யாவும் 'விழலுக்கு இறைத்த நீர்' ஆகின்றன. 'வீடு திருந்தினால் நாடு திருந்தும்' என்பதற்கேற்ப முதலில் பெற்றோரின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தவே இந்தச் சோதனை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதற்கு முதல் படியாக, முதலாம் இரண்டாம் வகுப்புகளுக்குக் கதை நேரம் தொடங்கப்பட்டது. இக்கதை நேரத்தில் பெற்றோர் கதை சொல்ல அழைக்கப்பட்டனர்.

கதை நேரம் தொடங்கப்பட்டதற்கான முக்கியக் காரணங்கள் :

கதை கூறுவது தொன்றுதொட்டுத் தமிழ்மொழியில் வழங்கி வரும் வழக்கமாகும். கதை கேட்பது என்பது வயது வரையறையின்றி அனைவருக்கும் பிடித்தமான ஒன்று. தாத்தா, பாட்டி, பெற்றோர் எனப் பலரும் கதை சொல்வது நமது பாரம்பரிய நிகழ்வாகும். ஆனால், இன்று அந்நிலை மாறிவிட்டது.

இதற்கு முக்கியக் காரணங்கள் ;

* தகவல் தொடர்பு சாதனங்களின் விரைவான வளர்ச்சி

* பெரும்பாலான பெற்றோர் வேலைக்குச் செல்வதால் நேரப்பற்றாக்குறை

* 90% பிள்ளைகள் தாத்தா பாட்டியுடன் சேர்ந்து வசிக்காததுஆகியவை ஆகும்.

ஆகவேதான், இப்போது கதை சொல்லும் பணியை வீட்டின் தொலைக்காட்சிப் பெட்டிகளும், கணினிகளும், ஒளிவட்டுகளும் மிகவும் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கின்றன. இதனால் ஏற்படும் இழப்பைப் பலர் உணர்வதில்லை.

கதை சொல்வது என்பது ஒரு சாதாரண நிகழ்வு அல்ல. கதை சொல்வது உறவைப் பலப்படுத்தும் ஒரு பாலம்; நம் பிள்ளைகளுக்குச் சிறந்த விழுமியங்களையும், ஒழுக்கத்தையும், மரபு வழி செய்திகளையும் மனதில் பதிய வைக்கும் கல்வெட்டுகள்; சிந்தனைத் திறனைத் தூண்டும் பன்முக ஆற்றல் பெற்றது.

சிங்கப்பூரின் பாடத்திட்டத்தில் தொடக்கநிலை ஒன்றாம் இரண்டாம் மாணவர்களுக்கு நிறைய கதைகள் இணைக்கப்பட்டுள்ளன. படத்துடன் கூடிய பெரிய கதை நூல்களும், மாணவர்களுக்கான சிறுகதை நூல்களும் உள்ளன. அத்துடன் சிறிய கதை நூல்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. இக்கதை நூல்களில் உள்ள அனைத்து கதைகளும் சிங்கப்பூர் சூழலுக்கும், இக்காலச் சூழலுக்கும் மிகவும் பொருத்தமானவை. ஆசிரியர்களும் பலவகையான உத்திகளைப் பயன்படுத்தி மிகவும் சிறப்பாக இவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

இருப்பினும், நமது பாரம்பரிய நிகழ்வான கதை சொல்லுதல் முதலில் வீட்டில் தொடங்கினால்தான் அது பயனளிக்கும் என்பதைப் பெற்றோர்களுக்கு உணர்த்தவே கதை நேரம் தொடங்க முடிவு செய்யப்பட்டது.

முதல் கட்டச் சோதனை முயற்சி

முதல் தவணையில் தொடக்கநிலை முதலாம் இரண்டாம் வகுப்புத் தமிழ் மாணவர்களின் பெற்றோர் கலந்துகொண்டு கருத்தரங்கில் இம்முயற்சி தொடங்கியது. முதலில் 3 பெற்றோர் (தாய்மார்கள்) மிகுந்த தயக்கத்துடன் கதை நேரத்தில் பங்கெடுக்க முன்வந்தனர். அப்பெற்றோர்களுக்குச் சில குறிப்புகள் மட்டுமே தெரிவிக்கப்பட்டன. அவை :

* மாணவர்களின் வயதுக்கும் அனுபவத்திற்கும் பொருத்தமான கதைகளைத் தேர்ந்தெடுத்தல் அவசியம்.

* தேர்ந்தெடுக்கும் கதைகளில் சிறந்த விழுமியங்களும் நம்முடைய பண்பாட்டுக் கூறுகளும் இடம் பெறுதல் வேண்டும்.

* நமது இந்திய விழாக்களை அல்லது கொண்டாட்டங்களை (பொங்கல், தமிழ்ப்புத்தாண்டு, தீபாவளி) ஒட்டிய கதைகள் அமைந்திருத்தல் வேண்டும் என்பவையாகும்.

மேலும் கதை சொல்ல வரும் பெற்றோருடன் சேர்ந்து திட்டமிடுதல் சில உத்திகளும் ஆலோசனைகளும் பரிந்துரைக்கப்பட்டன. அவை :

* மாணவர்களுடன் கலந்துரையாடுதல், கருத்துப் பரிமாற்றம் நடைபெறச் செய்தல்.

* மாணவர்களைப் பாத்திரம் ஏற்று நடித்துக் காட்டச் சொல்லுதல்.

* கதையை ஒட்டி மொழி விளையாட்டுகள் உருவாக்குதல்.

* கதையின் இடையிடையே நிறுத்தி அடுத்து என்ன நடந்திருக்கும் என ஊகித்தறியச் செய்தல்.

* கதையின் முடிவை ஊகித்துச் சொல்லச் செய்தல்.

பெற்றோர் கதை நேரத்தில் பலவகையான அணுகுமுறைகளைக் கையாண்டனர். அவர்களின் கதை கூறும் பாணியும் வெவ்வேறாக இருந்தன. மாணவர்களின் நிலையறிந்து நடந்து கொண்டதுடன் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் சிறு அன்பளிப்புகளை வழங்கினர். ஆனால், அன்பளிப்புகள் அனைத்து மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதிலும் அக்கறை காட்டினர். எடுத்துக்காட்டாகத் தமிழில் பேச முடியாத அல்லது பேச சிரமப்படும் மாணவர்களிடம் நீக்குப்போக்குடன் நடந்து கொண்டனர். இதனால் கதை நேரம் மாணவர்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. ஒவ்வொரு வாரமும் மாணவர்கள் கதை நேரத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். பெற்றோர்களும் மிகுந்த ஈடுபாட்டுடன் கதை நேரத்தை நடத்தினர்.

இரண்டாம் கட்டச் சோதனை முயற்சி

இரண்டாம் தவணையில் வியக்கும் வகையில் 10-க்கும் மேற்பட்ட பெற்றோர் கதை நேரத்தில் பங்கெடுக்க ஆதரவு தெரிவித்தனர். அவர்களுள் இரு தந்தைமார்கள் அடங்குவர். அவர்களின் ஈடுபாட்டிற்கு முக்கியக் காரணங்களாகக் கீழ்க்காண்பனவற்றைக் கூறினர்.

* கதை நேரத்தில் தங்கள் பிள்ளைகள் காட்டிய ஈடுபாடு

* கதை நேரத்தில் பங்கெடுத்த பெற்றோர் பற்றித் தம் பிள்ளைகள் பெருமையாகப் பேசி அவர்களின் திறமையையும் அன்பையும் வெகுவாகப் பாராட்டியது

* அவர்களைப் போல் தம்முடைய பெற்றோரும் வந்து கதை நேரத்தில் பங்கெடுக்க வேண்டும் எனத் தம் விருப்பத்தை மாணவர்கள் தம் பெற்றோரிடம் வெளிப்படுத்தியது

* மாணவர்கள் சிலர் தம் பெற்றோர் இதில் பங்கெடுக்க வேண்டும் என்பதில் மிகவும் பிடிவாதமாக இருந்தது

இதற்குப் பிறகு, கதை நேரம் பல புதிய பரிணாமங்களைப் பெற்றது. பெற்றோர் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியதோடு மாணவர்களின் பங்கேற்பையும் அதிகரித்தனர்; பல வகையான மொழி விளையாட்டுகளையும் அறிமுகப்படுத்தினர்.

மூன்றாம் கட்டச் சோதனை முயற்சி

மூன்றாம் தவணையில் கதை நேரத்தில் பெற்றோர்கள் பலர் இரு பாட்டிமார்களும் பங்கேற்க முன் வந்தனர். வேலை செய்யும் பெற்றோர் பலர் நேர விடுப்பு எடுத்துக் கொண்டு வந்து கதை நேரத்தில் பங்கெடுத்தனர்.

மேலும், பள்ளியில் ஆண்டுதோறும் நடைபெறும் தாய்மொழி இரு வார நிகழ்ச்சிகளிலும், தமிழ்மொழி முகாமிலும், பொங்கல், தீபாவளி கொண்டாட்டங்களிலும், கல்விச் சுற்றுலா பயணங்களிலும் பங்கேற்க பெற்றோர் பலர் முன்வந்தனர்.

சோதனையின் முடிவு

இச்சோதனை முயற்சி இன்றளவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இருப்பினும் இச்சோதனை முயற்சி பலவகையில் வெற்றிக் கனிகளைப் பெற்றது என்பதற்குக் கீழ்க்காணும் முடிவுகளே சான்றாகும்.

* தமிழில் பேச சிரமப்பட்ட அல்லது பேச முடியாத மாணவர்களின் பேச்சாற்றல் மட்டுமின்றி அவர்களின் கருத்துப் பரிமாற்றத் திறனும் மேம்பட்டது. தொடக்கநிலை முதலாம் வகுப்பு மாணவர்களுக்கு முதல் தவணையில் கதை நேரம் தொடங்கிய பின்னர், மாணவர்களின் பேச்சுத்திறனில் படிப்படியாக முன்னேற்றம் ஏற்பட்டது.

* மாணவர்களே தமிழில் விரும்பிப் பேசக் கற்றுக்கொண்டனர். சில சமயம் இவர்களின் சிரமத்தை உணர்ந்து சக மாணவர்களும் அவர்களுக்கு உதவி புரிந்தனர். மாணவர்களிடையே குழு உணர்வும் ஒற்றுமையும் வளர வாய்ப்பு ஏற்பட்டது.

* மாணவர்களின் சிந்தனைத் திறன் வளர்ந்ததுடன், தன்னம்பிக்கையும் பெருகியது. தன்னால் முடியும் என்பதில் உறுதியாகவும் பிடிவாதமாகவும் இருந்தனர்.

* தொடக்கநிலை முதலாம் வகுப்பில் தமிழில் பேச முடியாமல் இருந்த மாணவர்கள் தொடக்கநிலை மூன்றாம் வகுப்பில் சரளமாகத் தமிழில் பேசும் திறனைப் பெற்றனர். 100% மாணவர்கள் வாய்மொழித் தேர்வில் வெற்றி பெற்றனர்.

* பெற்றோர்களிடையே தமிழ்மொழியைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டது. கதைகளைத் தேடத் தொடங்கி, தமிழ்மொழியைப் பற்றிய பல தகவல்களை அறியும் வாய்ப்பினைப் பெற்றனர்; தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகளின் சிறப்புகளை உணர்ந்தனர். அவர்களின் பேச்சில் மட்டுமல்லாமல் அவர்களின் செயல்பாடுகளிலும் அதன் தாக்கத்தை உணர முடிந்தது. தமது பிள்ளைகளுடனும் ஆசிரியர்களுடனும் மட்டுமின்றிச் சக பெற்றோர்களிடமும் தமிழில் ஆர்வத்தோடு பேசிப்பழகினர்.

* பெற்றோர்களிடையே நல்லுறவும் புரிந்துணர்வும் ஏற்பட்டன.

* பெற்றோர்-பிள்ளைகளின் உறவும் பலம் பெற்றது. இதனால் மாணவர்களின் கற்றல் திறனும் மேம்பட்டது.

* பெற்றோர்களின் பங்களிப்புப் பள்ளி நடவடிக்கைகளுக்கு மிகவும் உறுதுணையாகத் திகழ்ந்தது.

முடிவுரை

ஒரு கை தட்டினால் ஓசை உண்டாகுமா? என்பதற்கிணங்க வீடு, பள்ளி என்னும் இரு கரங்களும் ஒன்றிணைந்தால்தான் பல சாதனைகளை நிகழ்த்த முடியும். 'வீடு சிறக்க நாடு சிறக்கும்' என்பதில் ஐயமில்லை. மாணவர்கள் தமிழில் பேச அதன் விதை முதலில் வீட்டில் விதைக்கப்பட வேண்டும். பின்னர் அது நிச்சயம் தழைத்துச் செழிப்புடன் வளரும் என்பதற்கு இந்தச் சோதனை ஒரு சான்றாகும்.

எனவே, இயக்கம் அமைத்துத் தமிழ் வளர்ப்பதை விடத்தயக்கமின்றித் தமிழ்மொழியில் ஒவ்வொருவரும் பேசினால் தமிழ்மொழி என்றென்றும் வாழும் வளரும்.

மேலும், இந்தக் கட்டுரையில் விளக்கப்பட்டுள்ள இச்சோதனையின் மூலம் தமிழ் மாணவர்கள் தங்கள் தாய்மொழியின் மரபுவழிப் பண்புகளையும் பண்பாடுகளையும் விழுமியங்களையும் அறிந்துகொண்டனர். மேலும், இச்சோதனை சமுதாயத்தின் விழிப்புணர்வுக்கும் புரிந்துணர்வுக்கும் ஒற்றுமைக்கும் மேன்மைக்கும் பெருந்துணை புரிந்துள்ளதை நன்கறியலாம்.

தமிழாசிரியர்கள் மொழியை மட்டும் கற்பிப்பவராக இல்லாமல், மாணவர்கள் தமிழ்மொழியின் சிறப்பையும் பெருமையையும் உணர்ந்து என்றென்றும் தங்கள் தாய்மொழியையும் மரபுவழிப் பண்பாட்டு விழுமியங்களையும் மதித்துப் போற்றுபவராகத் திகழ, பலமான அடித்தளத்தை உருவாக்கும் கடப்பாடும் உடையவர்கள் என்பதை உறுதியாகக் கூறலாம்.

துணை நூல் பட்டியல்

- தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2015 தொடக்கநிலை; CPDD Ministry of Education, Singapore

- 2010 தாய்மொழிகள் மறு ஆய்வுக்குழு அறிக்கை; Ministry of Education, Singapore

கட்டுரை படைப்பவர் :

திருமதி **விஜயலட்சுமி பாலா**
தமிழ்மொழி பாட ஒருங்கிணைப்பாளர்
புக்கிட் தீமா தொடக்கப் பள்ளி0
சிங்கப்பூர்.

17. தகவல் தொழில்நுட்பத்தின் வாயிலாக மாணவர்களிடையே இருவழித் தொடர்புத் திறனை மேம்படுத்துதல்

திருமதி. மும்தாஜ் பீவி, திருமதி. அருள்மதி இலெனின்,

தமிழாசிரியைகள், யூஹூவா தொடக்கப்பள்ளி, சிங்கப்பூர்

முன்னுரை

''உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே'' என்று தொடரும் பாடலடிகள் கல்வியின் முக்கியத்துவத்தினை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறியவை. வாழ்க்கையில் ஒருவர் பெறுதற்கரிய செல்வங்களுள் தலையானதாகக் கருதப்படுவது கல்வியே. அக்கல்வியை இன்றைய மாணவர்களின் ஆர்வத்திற்கேற்ப அளிப்பது ஆசிரியர்களுக்குரிய மிகப்பெரும் பணியாக இருக்கின்றது. அதிலும், இரண்டாம் மொழிச் சூழலில் தாய்மொழியைக் கற்பிப்பது தாய்மொழி ஆசிரியர்களுக்குரிய சவாலாகும். அச்சவாலைச் சமாளிப்பதற்கும் கற்றலை இனிமை நிறைந்ததாக்குவதற்கும் இணையத்தளங்கள் ஆற்றும் பங்கு அளவிடற்கரியது. அவ்விதத்தில், தமிழ்மொழியில் இருவழித் தொடர்புத் திறன்களை இணையத்தளங்களின் வழி மேம்படுத்த சில முயற்சிகளை மேற்கொண்டோம். அம்முயற்சி எங்களுக்கு அளித்த வெற்றியைப் பிற தமிழாசிரியர்களுடன் பகிர்ந்துகொள்வதே நாங்கள் கட்டுரையைப் படைப்பதன் நோக்காகும்.

அடிப்படை மொழித் திறன்கள் :

ஆங்கிலமொழி ஆதிக்கம் மிகுந்திருக்கும் இன்றைய மொழிச் சூழலில் தாய்மொழியைச் சுவைபடக் கற்பிக்கப் பல புதிய அணுகுமுறைகளைப் பற்றிய ஆய்வுகளும், பரிந்துரைகளும் நித்தமும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அவ்வகையில், சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு 2015ஆம் ஆண்டிற்கான புதிய பாடத்திட்டத்தை இவ்வாண்டு அறிமுகப்படுத்தியுள்ளது. அதில் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய நான்கு அடிப்படை மொழித்திறன்களோடு இருவழிக் கருத்துப் பரிமாற்றத் திறன்களையும் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ளது. கல்வியமைச்சு கூறியுள்ள கருத்துப் பரிமாற்ற வழிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு இணையத்தளங்களின் வாயிலாகக் கருத்துப் பரிமாற்றத் திறனை மேம்படுத்த எங்கள் மாணவர்களிடையே முயற்சி மேற்கொண்டோம்.

தட்டச்சுப் பயிற்சி :

அடிப்படைத் தமிழ்த் தட்டச்சுப் பயிற்சியினை எங்கள் மாணவர்களுக்குப் பள்ளியில் அளிக்கிறோம். மாணவர்கள் தமிழில் தட்டச்சு செய்வதற்காகத் தமிழ்த் தட்டச்சுப் பலகைகள் பள்ளியில் இருக்கின்றன. எனினும், வீட்டிலிருந்து தமிழில் தட்டச்சு செய்வதற்கு வசதியாக, http://wk.w3tamil.com/ என்ற இணையத்தளத்தினை



மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தினோம். இந்த இணையத்தளம் வீட்டிலிருந்தபடி மாணவர்கள் தங்கள் ஒப்படைப்புகளைத் தமிழில் தட்டச்சு செய்வதற்கும் அவர்களுக்குத் தேவையேற்படும்போது வகுப்பின் **கற்றல் சுவரில்** கலந்துரையாடுவதற்கும் எளிதாக இருக்கின்றது.

எழுத்துவழிக் கருத்துப் பரிமாற்றம் :

எழுத்துவழிக் கருத்துப் பரிமாற்றத் திறனை மாணவர்களிடையே மேம்படுத்தும் முயற்சிக்கு முதல்படியாக எம்.சி.ஆன்லைன் (mconline.com) என்ற இணையத்தளத்தினைத் தேர்ந்தெடுத்தோம். இதில் உள்ள சமூகக் கற்றல் சுவர் (Social Learning Wall) ஒரு முகநூல் (facebook) போன்றே செயல்படும் தன்மையுடையது. சிங்கையிலுள்ள பள்ளிகளுக்காக வடிவமைக்கப்பட்டு, கல்வி அமைச்சின் பெரும்பான்மையான பள்ளிகளில் இயங்கும் இந்த இணையத்தளம் எங்கள் மாணவர்களின் இருவழிக் கருத்துப் பரிமாற்றத்திறனை மேம்படுத்த கைகொடுத்தது. இந்த இணையத்தளத்தில் மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து செயல்பட பல்வேறு கூறுகள் இருக்கின்றன. எம்.சி.ஆன்லைன் இணையத்தளத்தின் சமூகக் கற்றல் சுவர் ஒரு சமூக வலைத்தளம் போன்று செயல்படும் தன்மையுள்ளது. இந்த இணையத்தளத்தில் எங்கள் வகுப்பிற்கான கற்றல் குழுவினை உருவாக்கினோம்.

இந்த இணையத்தளம், பாடங்களைப் பற்றி மாணவர்களிடம் பகிர்ந்து கொள்ளவும், ஒரு கருத்தைப் பற்றி வாக்கெடுப்பு நடத்தவும், நொடி வினா-விடை கேள்விகள் கேட்கவும் உதவுகிறது. குறிப்பிட்டதொரு தலைப்பினையொட்டிய கருத்துகளை மாணவர்கள் ஆர்வத்துடன் தங்கள் நண்பர்களுடன் எழுத்துவழியாகப் பகிர்ந்துகொண்டனர். மேலும், கட்டுரை பாடங்களுக்கேற்ற மனவரைபடங்களை உருவாக்கி மாணவர்களுடன் பகிர்ந்துகொள்ளவும் உதவியது.

மாணவர்களின் செயல்பாடுகள் :

இத்தளத்தில் வகுப்பு நிலையில் எழுத்துவழிக் கருத்துப் பரிமாற்றம் தொடர்ந்ததோடு, மாணவர்கள் தங்கள் வகுப்பு ஒப்படைப்பினையும் இதன்வழி சமர்ப்பித்தனர். குழுவாகவும், தனியாகவும் மாணவர்கள் சமர்ப்பித்த ஒப்படைப்புகள் மற்ற மாணவர்களும் படித்துப் பயன்பெறும் விதமாக அமைந்தன. மாணவரது கட்டுரைகளைப் பற்றிய கருத்துகளும் எழுத்துவழியாக இப்போது பரிமாறப்பட்டு வருகின்றன. மேலும், இச்சமூகக் கற்றல் சுவரில் ஏற்றம் செய்யப்படும் ஒளிக் காட்சிகளைப் பற்றிய கருத்துகளையும் மாணவர்கள் இச்சமூகக் கற்றல் சுவரில் எழுதுகின்றனர்.

இது மாணவர்களைத் துடிப்புடன் கருத்துப் பரிமாற்றத்தில் பங்கெடுக்கச் செய்தது. வகுப்பில் நடத்திய பாடத்தினைப் பற்றியும் நடைபெறப் போகும் பாடத்தினைப் பற்றியும் பற்பல கலந்துரையாடல்கள் மாணவர்களிடையே நடந்தன. வகுப்பில் புரியாதவற்றைப் பற்றி எழுத்துவழி ஆசிரியரிடம் சந்தேகம் கேட்டுத் தெளிவுபெறவும் இந்த இணையத்தளம் வழிகோலியது. பெரும்பாலும் மாணவர்கள் தமிழிலேயே தங்கள் கருத்துகளை எழுதினர். இது குறிப்பிடத்தக்கதொரு முன்னேற்றமாக அமைந்தது. கேள்விக்கேற்ற பதிலைப் பொருத்தமான வடிவத்தில் எழுத்துவழி மாணவர்கள் அளித்தனர்.

பேச்சுவழிக் கருத்துப் பரிமாற்றம் :

இரண்டாம் மொழிச் சூழலில் வாழும் எங்கள் மாணவர்கள் சரளமாகத் தமிழில் உரையாடுவதில் தயக்கம் காட்டினர். ஆதலால், கல்வி அமைச்சு உருவாக்கி அளித்துள்ள இருவழித் தொடர்புத் தளத்தின் (imtl.sg) உதவியுடன் அவர்களது பேச்சாற்றலை மேம்படுத்த முயன்றோம். பொருத்தமான சொற்களையும் வாக்கியங்களையும் பயன்படுத்தி மாணவர்கள் தெளிவாகப் பேச்சுத் தமிழில் கருத்துப் பரிமாற்றம் செய்ய கைகொடுத்தது. பொருத்தமான சொற்களையும் வாக்கியங்களையும் பயன்படுத்தி மாணவர்கள் தெளிவாகப் பேச்சுத் தமிழில் கருத்துப் பரிமாற்றம் செய்ய எம்.சி. ஆன்லைனில் இருந்த 'தமிழ்' பேச்சுவழிக் கருத்துப் பரிமாற்றம் பேருதவி புரிகிறது.

வாய்மொழி வழிகாட்டி '(Oral Buddy) என்ற கூறும் கைகொடுத்தது.

இவ்விரு இணையத்தளங்களையும் பயன்படுத்தி மாணவர்கள் எளிமையாகத் தங்கள் கருத்துகளை வீட்டில் இருந்தபடியே பேசிப் பதிவு செய்தனர். அவ்விதம், ஒரு மாணவர் பேசிய கருத்தைச் சக மாணவர்கள் கேட்டுத் தங்களுடைய கருத்துகளைப் பதிவு செய்கின்றனர். ஒவ்வொரு மாணவனின் பேச்சுத் திறனையும் ஆசிரியரும், மற்ற மாணவர்களும் மதிப்பிட்டுத் தங்கள் கருத்தினை இணையத்தில் பதிவு செய்தது மாணவர்களுக்கு ஊக்கமளித்ததோடு பேச்சுவழிக் கருத்துப் பரிமாற்றத் திறனையும் மேம்படுத்துகின்றது. மாணவர்கள் பாரம்பரிய முறையில் வகுப்பறையில் அமர்ந்து நண்பர்களுடன் கலந்துரையாடுவதைக் காட்டிலும், இணையாகவும், குழுவாகவும் இணையத்தளத்தில் பேசி மகிழ்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

நிறைவாக..

மொழித்திறன்களை மேம்படுத்துவதோடு, வாழ்க்கைக்கு அவசியமான 21ஆம் நூற்றாண்டுத் திறன்களையும் இணையத்தளங்களின் வழி மேம்படுத்த வேண்டும் என்ற எங்களது குறிக்கோள் நேரமின்மையால் அவ்வப்போது தடைப்பட்டாலும், தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பள்ளியிலுள்ள கணினி அறையில் மட்டுமே தமிழ்த் தட்டச்சு செய்து பழகிய மாணவர்கள், வீட்டிலிருந்தபடியே இணையத்தளம் ஒன்றினைப் பயன்படுத்தித் தமிழில் தட்டச்சு செய்வது அவர்களுக்குத் தன்னம்பிக்கை அளித்தது. இருவழித் தொடர்புத் திறன்களை மாணவர்களிடையே மேம்படுத்தச் செய்வதில் இணையத்தளங்கள் பேருதவி புரிந்து வருவதை எங்கள் மாணவர்களின் முன்னேற்றத்திலிருந்து கண்கூடாகக் காண்கிறோம்.

மேற்கோள் நூல் :

* தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2015, தொடக்கநிலை, கல்வி அமைச்சு, சிங்கப்பூர்.

நன்றி :

* www.mconline.com

* www.imtl.sg

* http://wk.w3tamil.com/



18. தகவல் தொழில்நுட்பம்வழிக் கற்பிக்கப்படும் பாடங்களின் உற்றுநோக்கலும் ஆசிரியர் மேம்பாட்டில் அதன் தாக்கமும்

திருமதி. சுமதி சிவாகுமார்,
கல்வித் தொழில்நுட்ப அதிகாரி, கல்வித் தொழில்நுட்பப் பிரிவு, சிங்கப்பூர்கல்வி அமைச்சு
திருவாட்டி. நித்யா கிருஷ்ணசாமி, தமிழாசிரியர், கன்கார்டு தொடக்கப்பள்ளி
திருமதி. சுபாஷினி, மூத்த ஆசிரியர், செம்பாவாங் தொடக்கப்பள்ளி
குமாரி. ஆ.புவனேஸ்வரி, தமிழாசிரியர், செம்பாவாங் தொடக்கப்பள்ளி
திருமதி.சிவகாமி ராதா, தமிழாசிரியர், யீஷூன் தொடக்கப்பள்ளி

சுருக்கம்

சிங்கப்பூர்ப் பள்ளிகளில் தகவல் தொழில்நுட்ப முதன்மைத் திட்டம் 3-இன் தாக்கத்தைக் குறிப்பாக உடனிணைந்து கற்றல் (Collaborative learning) மற்றும் சுய முனைப்புடன் கற்றல் (Self-directed Learning) ஆகியவற்றின் அடிப்படையில் நடத்தப்பட்ட தேசியக் கல்விக்கழகத்தின் மதிப்பீட்டு ஆய்வில் ஆசிரியர்களின் தொழில்நுட்பப் பயன்பாடு மாணவர்களைவிட குறைவாக உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் ஆசிரியர்களின் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டிற்கும் மாணவர்களது உடனிணைந்து மற்றும் சுய முனைப்புடன் கற்றலுக்கும் ஒரு வலுவான தொடர்பு இருப்பதாகவும் இவ்வாய்வு சுட்டியது. 10'T சிகரம் தகவல் தொடர்புத் தொழில்நுட்பக் கற்றல் கற்பித்தல் செயல்முறைத் திட்டத்தில் உள்ள ஆசிரியர்களிடமும் இதைக் கண்கூடாகக் காணமுடிந்தது.

ஆசிரியர்கள் 10'T பயிலரங்கங்களில் கலந்து கொண்டபோதும், தகவல் தொழில்நுட்பத்தை ஒன்றிணைத்து ஒரு பாடத்தை வடிவமைத்து நடத்துவதில் தன்னம்பிக்கையின்மையும் அவற்றை இணைப்பதில் இடர்ப்பாடுகளையும் சந்தித்தனர். சக ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடங்களை நேரடியாகப் பார்வையிடும்போது ஆசிரியர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகள் அதிகரிக்கின்றன என்பதை ஆய்வுகள் எடுத்துரைக்கின்றன. ஆகையால், 10'T செயல்முறைத் திட்டத்திலுள்ள ஆசிரியர்களுக்குத் திறந்த வகுப்பறைகள் (Open Classrooms) சிலவற்றை ஏற்பாடு செய்திருந்தோம். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் பாடங்கள் நடத்தப்படுகின்றன. இருப்பினும் பயிற்சிகள் பல அளிக்கப்பட்டிருந்தாலும் இத்திட்டத்தின் கீழ் தொடக்கநிலை

post 10'T சிகரம் அணுகுமுறை

conference),



(ICT Masterplan3
Collaborative learning)
Learning)

Self - directed

Tan Seng Chee, et al.)

'T

'T
'T

கற்பிக்கும் ஆசிரியர்களிடம் உடனிணைந்து கற்றல் மற்றும் சுய முனைப்புடன் கற்றல் உத்திகளை ஒன்றிணைத்து ஒரு பாடத்தை நடத்துவதில் தன்னம்பிக்கையின்மையும் அவற்றை இணைப்பதில் இடர்ப்பாடுகளையும் காண முடிந்தது. இதற்கு அடிப்படைக் காரணமாக விளங்கியவை மாணவர்களது வயதும் அறிவு முதிர்ச்சியுமாகும்.

ஆசிரியர்கள், ஏழு வயது மாணவர்களைக் கணினி வகுப்பறைகளில் ஒருநிலைப்படுத்திச் சுய முனைப்புடன் கற்றலில் ஈடுபடுத்துவதைச் சிரமமாகக் கருதினர் என்பது இவர்களுடன் நடத்தப்பட்ட உரையாடல்களின் வழித் தெளிவாகப் புலப்பட்டது. இந்த இடைவெளியைக் குறைப்பதற்கு இயல்பான வகுப்பறைச் சூழலில் நடத்தப்படும் பாடத்தை உற்றுநோக்குவது, எந்த ஓர் ஆசிரியருக்கும் தன் பணியில் தன்னை மேம்படுத்திக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்றாலும், இவ்வாசிரியர்களுக்கு இத்தகைய வாய்ப்புகள் மிகக் குறைவாக இருப்பதும் தெளிவாகிறது. ஆகையால், இச்செயல்முறைத் திட்டத்தில் இருக்கும் ஆசிரியர்களுக்குச் சக ஆசிரியர்கள் நடத்தும் பாடங்களைக் குறிப்பாகக் கீழ்த் தொடக்கநிலைப் பாடங்களை உற்றுநோக்கும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

ஆய்வு முன்னோடிகள்

இந்நாள்வரை வகுப்பறை உற்றுநோக்கல் (Classroom observation) என்பது ஒரு மதிப்பீட்டுக் கருவியாகவே பயன்பட்டு வந்துள்ளது; ஓர் ஆசிரியரின் கற்பித்தல் முறையை அளவிடும் அளவுகோலாக வகுப்பறை உற்றுநோக்கல் இதுவரை அமைந்திருந்தது. ஆனால், இப்பொழுது இவ்வரையறை மெல்லமெல்ல மாறி வருகிறது. பள்ளிகள், வகுப்பறை உற்றுநோக்கலை ஆசிரியரை மேம்படுத்தும் ஒரு பணி மேம்பாட்டு வழிமுறையாகக் கருதத் தொடங்கிவிட்டன. ஓர் ஆசிரியரின் வகுப்பறைக் கற்பித்தலைச் சக ஆசிரியர்கள் உற்றுநோக்குவதன் மூலம் உற்றுநோக்கும் ஆசிரியர்கள் மட்டுமின்றி, பாடத்தை நடத்தும் ஆசிரியர்களும் தங்களது கற்பித்தலை மேம்படுத்திக் கொள்ள முடிகிறது என்று ஆய்வுகள் சுட்டுகின்றன. இது மறைமுகமாக மாணவர்களது செயல்திறன் மேம்பாட்டிற்கு வழி வகுக்கிறது என்றும் ஆய்வாளர்கள் நம்புகின்றனர். (Education World)

ஒவ்வொரு ஆசிரியரின் கற்பித்தல் மேம்பட வேண்டும் என்றால் ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் தனிப்பட்டதாகவும் வகுப்பறை நடைமுறை சார்ந்ததாகவும் தொடர்ந்து நடைபெறக் கூடியதாகவும் அமைந்திருப்பது அவசியமாகும். மேலும், சிறந்த வகுப்பறைப் பாடங்களைப் பாட உற்றுநோக்கல் செய்வதற்கும் அதனையொட்டிய மதிப்பீட்டிற்கும் கருத்துத் தெரிவிப்பதற்கும் ஏற்பாடு செய்வது ஆசிரியர்களிடம் ஒரு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர். இதன்மூலம் ஆசிரியர்கள் பெறக்கூடிய கற்றல் திறன்களைத் தொடர்பு அறுபடாமல் தங்கள் கற்பித்தலில் சீராகப் பயன்படுத்தி வந்தார்களேயானால் மாணவர் கற்றல் மற்றும் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (Stuhlman, Hamre & Down)

பாட உற்றுநோக்கலுக்கான வகுப்புகள் தெரிவு

பாட உற்றுநோக்கலை முடிவு செய்யும்முன் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள் முதலில் கலந்து ஆலோசிக்கப்பட்டன. பெரும்பாலான ஆசிரியர்கள் கீழ்த்தொடக்கநிலை வகுப்புகளுக்கு, அதிலும் ஒன்றாம் வகுப்பு மாணவர்களுக்குக் கணினி வழிப்பாடம் கற்பிப்பதை முடிந்தவரை தவிர்க்கவே விரும்புகிறார்கள் என்பது ஏற்கனவே கலந்துரையாடலில் கண்டறியப்பட்டிருந்தது. மாணவர்களின் வயதும் அவர்களின் அறிவு முதிர்ச்சியும் இவ்வகைப் பாடங்களுக்குத் தடைக்கற்களாக அமைவதாக ஆசிரியர்கள் கருதுகிறார்கள் என்பதும் தெளிவாக விளங்கியது. ஆகையால், 10'T சிகரம் செயல்முறைத் திட்டத்திலுள்ள ஆசிரியர்களின் கீழ்த்தொடக்கநிலை மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்பத்தை இணைத்துச் சிரமமின்றி இயல்பாகப் பாடங்கள் கற்பிப்பவர்கள் சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுடன் கலந்துரையாடியபின், பாடங்கள் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டன. ஒன்றாம் வகுப்புப் பாடக்குறிப்புகள் எழுத்து அறிமுகத்தையும் பேசுதல் நடவடிக்கையையும் ஒட்டித் திட்டமிடப்பட்டன. இரண்டாம் வகுப்பு மாணவர்களது பாடக் குறிப்பு வாக்கியங்களைப் பொருளுணர்ந்து நிரல்படுத்தும் நடவடிக்கையை ஒட்டித் திட்டமிடப்பட்டது. ஒவ்வொரு பாடங்களிலும் உடனிணைந்து கற்றல் மற்றும் சுய முனைப்புடன் கற்றல் ஆகியவற்றை ஒட்டிய நடவடிக்கைகள் அமைந்திருக்குமாறு உறுதி செய்யப்பட்டன. மேலும், ஆசிரியர்கள் கணினி வகுப்பறைகளில் மாணவர்களைக் கையாளும் வழிமுறைகள் சிலவற்றை அறிந்து கொள்ளவேண்டும் என்பதால் பாடத்தைத் திட்டமிடும்போது அவையும் கருத்தில் கொள்ளப்பட்டன.

பாடங்களைத் திட்டமிட்டப்பின், பாட உற்றுநோக்கலுக்கான பதிவு இச்செயற்திட்ட ஆசிரியர்களுக்குத் திறந்துவிடப்பட்டது. ஆசிரியர்கள் தங்களின் தேவைக்கு ஏற்பப் பாட உற்றுநோக்கலுக்குப் பதிவு செய்துகொண்டனர். பாடங்கள் அனைத்தும் பள்ளி நேரத்திலேயே நடைபெற்றதால் ஆசிரியர்கள் தலைமையாசிரியர்களிடம் அனுமதி கேட்ட பின்னரே பாடங்களுக்குப் பதிவு செய்தனர். ஒன்றிற்கும் மேற்பட்ட பாட உற்றுநோக்கலுக்கு ஆசிரியர்கள் தங்களைப் பதிவு செய்துகொண்டதைக் கண்டபோது தலைமையாசிரியர்களும் இதுபோன்ற பணி மேம்பாட்டுத் திட்டங்களை ஆதரித்தனர் என்பது தெளிவாகியது.

பாட உற்றுநோக்கல்

பாட உற்றுநோக்கலில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் அனைவருக்கும் பாடங்கள் தொடங்குவதற்கு முன் அன்றைய பாடத்தையொட்டிய விவரங்கள் வழங்கப்பட்டன. பாட உற்றுநோக்கலின்போது இவ்வாசிரியர்கள் மாணவர்களின் செயற்பாடும் ஆசிரியர் ஆதார நடவடிக்கைகள் வழிப் பாடத்தைக் கற்பித்த முறையையும் கண்ணுற்றனர். அத்துடன் பாடத்தில் இணைக்கப்பட்ட உடனிணைந்து கற்றல் நடவடிக்கைகள், கணினியில் பாடங்களைச் செய்யும்போது மாணவர்கள் சுய முனைப்புடன் செயற்பட்ட விதம், தொழில்நுட்பத்தை இணைத்துக் கற்பிக்கும்போது மாணவர்களைக் கையாளும் விதம் மற்றும் வகுப்பறை விதிமுறைகள் போன்றவற்றை உற்றுநோக்குமாறு ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். பாட உற்றுநோக்கல் முடிந்தவுடன் கலந்துரையாடல் அரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாட உற்றுநோக்கலின் தாக்கம்

இப்பாட உற்றுநோக்கலுக்குப் பதிவு செய்து பங்கேற்ற ஆசிரியர்கள் மட்டுமின்றிப் பாடங்களை நடத்திய ஆசிரியர்களும் இதனால் பயன்பெற்றனர் என்பது தெளிவாக விளங்கியது. ஒவ்வொரு உற்றுநோக்கலுக்குப் பின்னும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடல்கள் ஆசிரியர்கள் அந்தந்தப் பாடங்களையொட்டித் தங்களது சிந்தனை மீட்சியை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்தன. அவர்களது சந்தேகங்களை உடனுக்குடன் பாடத்தை நடத்திய ஆசிரியர்களிடமே கேட்டுக் களைவதற்கு இந்தக் கலந்துரையாடல்கள் உதவின. அது மட்டுமின்றி, அவர்களது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவும், இதுவரை அவர்களது கற்பித்தல் அணுகுமுறையை மறுபரிசீலிக்கவும் இக்கலந்துரையாடல்கள் வாய்ப்பளித்தன என்பதே உண்மை. புதிய உத்திகளையொட்டி ஆலோசிக்கவும் இவர்களால் முடிந்தது. நடவடிக்கைகளைப் பாட நோக்கத்திற்கு ஏற்ப இணைப்பதற்கும் அவற்றை வழி நடத்திச் செல்வதற்கும் ஆசிரியர்கள் கற்றுக் கொண்டனர். இது அவர்களுக்குள் ஒரு தன்னம்பிக்கையை வளர்த்தது. வாக்கியங்களைப் பொருளுணர்ந்து நிரல்படுத்துதல் போன்ற பாடங்கள் இரண்டாம் வகுப்பு மாணவர்களுக்குப் புதியது என்றாலும் மாணவர்களால் அதைப் புரிந்துகொண்டு செய்ய முடிந்ததைப் பார்த்த ஆசிரியர்கள் ஆச்சரியப்பட்டனர். மேலும், பாட நோக்கத்துக்கு ஏற்ப ஒன்றிணைந்து கற்றல் உத்திகளை ஒன்றாம் வகுப்பு மாணவர்களுக்கும் பயன்படுத்தலாம் என்பதையும் ஆசிரியர்கள் கண்கூடாகக் கண்டனர்.

கீழ்த்தொடக்கநிலை மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்பத்தின் வழிப் பாடங்களைச் சிரமமின்றி நடத்தமுடியும் என்பதையும் ஆசிரியர்கள் உணர்ந்தனர். அது மட்டுமின்றி, இந்த மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்பத்தின் வழிப் பாடங்களைக் கற்பிப்பது அவர்களிடம் வலுவான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தித் தமிழ்ப் பாடத்தை ஈடுபாட்டுடன் கற்க அவர்களை மேலும் தூண்டுகின்றது என்பதையும் ஆசிரியர்கள் ஒருமனதாய் நம்பினர்.

ஆசிரியர்கள் உற்றுநோக்கிய இப்பாடங்களைத் தங்கள் வகுப்புகளிலும் சென்று கற்பிக்க ஆசைப்பட்டது. திறந்த வகுப்பறைகளின் வெற்றியைப் பறைசாற்றுகிறது. மேலும் 10'T சிகரம் செயற்திட்டத்தில் நேரத்தைச் சரியாக வகுத்துக் கொண்டு பாடங்களை நடத்தவது இன்றியமையாதது என்பதால் கணினி வகுப்பறைகளில் மாணவர்களை வழிநடத்தும் வழிமுறைகளையும் ஆசிரியர்கள் அறிந்துகொள்ள இப்பாட உற்றுநோக்கல் பேருதவி புரிந்தது என்றே சொல்லவேண்டும். இந்தப் பகிர்வினால், இறுதியில் பெரிதும் பயனடைந்தவர்கள் மாணவர்களே என்றால் அது மிகையாகாது.

முடிவுரை

திறந்த வகுப்பறைகளில் நடைபெறும் பாட உற்றுநோக்கல் எவ்வாறெல்லாம் பாடங்களைச் சிறப்பாக நடத்தலாம் என்பதை எடுத்துக்காட்டும் ஒரு சிறந்த கற்பித்தல் தளமாக விளங்குகின்றது என்பதில் ஐயமில்லை. ஓர் ஆசிரியர் கற்பிக்கும் முறையைப் பார்க்கும் இன்னொரு ஆசிரியர் தன்னையே அவ்வாசிரியரின் இடத்தில் வைத்துக் கற்பனை செய்துகொள்ள இப்பாட உற்றுநோக்கல் உதவுகிறது. வகுப்பறைகளில் எழக்கூடிய பிரச்சனைகள் அவற்றைக் களைவதற்கான வழிமுறைகள் ஆகியவற்றை நேரடியாகப் பார்த்துத் தெளிவு பெறமுடிகிறது. இது இவர்களின் மனதில் ஆழப் பதிந்து பின் இவர்களது பாடங்களில் பிரதிபலிக்கின்றது. இப்பாட உற்றுநோக்கல், வகுப்பறை பிரச்சனைகளைக் களைவதற்கு மட்டுமின்றி ஒரு பாடத்தைச் செம்மையாகத் திட்டமிட்டுக் கற்பிக்கவும் ஆசிரியர்களுக்குத் துணைபுரிகின்றது. ஆசிரியர்களுக்குப் போதுமான அளவு பயிற்சிகள் இருந்தாலும் கற்பித்தலுக்கான வளங்கள் இருந்தாலும் தொடர் பணி மேம்பாட்டுக்கான வாய்ப்புகள் இருந்தாலும் இவற்றை ஒன்றிணைத்துச் செயற்படுத்த இவ்வாறான பாட உற்றுநோக்கலும் அதனை ஒட்டிய கலந்துரையாடல்களும் ஒவ்வொரு ஆசிரியருக்கும் அவசியமாகும்.

Reference

Education World. (n.d.). Retrieved from

http://www.educationworld.com/a_admin/admin/admin297.shtml#sthash.up5ScmzQ.dpuf.

Stuhlman, M.W., Hamre, B.K., & Down, J.T. (n.d.). Why Should We Use classroom Observation. How class room Observations Can Support Systematic Improvement In Teacher Effectiveness. The University of Virginia Center for Advanced Study of Teaching and Learning (CASTL).

Tan Seng Chee, Chai Ching Sing, Lee Chwee Beng, Teo Kheng Guan Timothy, Chen Wenli, Joyce Koh Hwee Ling, . .Cheah Horn Mun. (n.d.). Evaluation of Implementation of the IT Masterplan 3. RESEARCH BRIEF, No. 11-001. doi:ISSN 2010-3093

19. தமிழ்மொழி கற்க, கற்பிக்கத் தகவல் தொழில் நுட்பத்தை விளை பயன்மிக்கதாகப் யன்படுத்துதல்

Mrs. Vijayalakshmi Devanathan (BA, English with Psychology),
CHIJ Our Lady Queen Peace, Senior Teacher/Tamil language

Mdm. Kalaiselvi Krishnasamy (BA, English with Psychology)
CHIJ Our Lady Queen Peace, HOD/Mother Tongue language

முன்னுரை

'வாசிக்கத் தொடங்கும் குழந்தைகள் வாய்விட்டு வாசிக்கும்போது, தாம் படிப்பனவற்றை நன்கு புரிந்துகொள்கிறார்கள். மௌன வாசிப்புப் படிப்பனவற்றை உள்வாங்கிக் கொள்ளும் திறனைத் தடைசெய்கிறது' இக்கூற்றினை ஆய்வாளர் விகாட்ஸ்கி என்பவர் தாம் நிகழ்த்திய ஆய்வின்மூலம் உண்மை என்று பறைசாற்றுகிறார். அவருடைய ஆய்வின் முக்கியக் கண்டுபிடிப்பு யாது என்றால், 'கீழ்த்தொடக்கப்பள்ளி மாணவர்கள் வாய்விட்டு வாசிக்கும்போது தாம் படித்தவற்றை நன்கு புரிந்துகொண்டனர், மற்றும் மாணவர்கள் இப்பயிற்சிக்குப்பின், மேல் தொடக்கநிலையில் மௌன வாசிப்பின்வழி கருத்தை நன்கு புரிந்துகொள்கிறார்கள். அதுமட்டுமில்லாமல், தாங்கள் வாசிப்பதைச் செவிமடுக்கும்போது அவர்களது வாசிப்புத் திறனும் மேம்படுகிறது' என்பதே ஆகும். எனவே, வாசிப்பு மேன்மையடைய முதலில் வாய்விட்டு வாசித்தல் வலியுறுத்தப்பட வேண்டும் என்கிறார் ஆய்வாளர் விகாட்ஸ்கி. இக்கூற்றின் அடிப்படையில், வாய்விட்டு வாசித்தல் வாசிப்புத் திறனை மட்டுமல்ல, கருத்துகளைப் புரிந்துகொள்ளும் திறனையும் மேம்படுத்துகிறது என்பது புலப்படுகிறது.

இந்த ஆய்வில் 'தாங்கள் வாசிப்பதைச் செவிமடுக்கும்போது அவர்களது வாசிப்புத் திறனும் மேம்படுகிறது என்னும் கூற்று எங்கள் பள்ளித் தமிழ் ஆசிரியர்களை வெகுவாகக் கவர்ந்தது. இக்கூற்றினை அடிப்படையாக வைத்து எங்கள் பள்ளி மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் முயற்சியில் நாங்கள் ஈடுபட்டோம். வாய்விட்டு வாசித்தலில் தொடக்கநிலை 2ஆம் 3ஆம் வகுப்பு (8 மற்றும் 9 வயது) மாணவர்களின் உச்சரிப்பு, குரல் ஏற்றம் இறக்கம், தெளிவு, சரளம் மற்றும் உணர்ச்சியுடன் வாசித்தல் ஆகிய திறன்களை மேம்படுத்த நாங்கள் 'Moo-O', 'மூ-ஓ' என்ற மென்பொருளைப் பயன்படுத்தினோம். சுயமுனைப்புடன் கற்றல் - SDL (Self-DirectedLearning) மற்றும் உடனிணைந்து கற்றல் - CoL என்ற இருவழித் தொடர்புத் தொழில்நுட்பத்தில் ஈடுபட்டுத் தன்முனைப்புடன் செயல்பட்டனர். 'Moo-O' என்ற மென்பொருளில் மாணவர்களின் தரத்திற்கேற்றப் பலதரப்பட்ட கதைகள் உள்ளன. வகுப்பறையில், தகவல் தொழில்நுட்பப் பாடவேளையின்போது (ICTlessons) மாணவிகள் தங்கள் தரத்திற்கேற்றப் பல கதைகளைப் படித்துத் தமக்குப் பிடித்த கதையைத் தேர்ந்தெடுத்துப் பாத்திரமேற்று வாசித்து அதனைப் பதிவு செய்து ஏற்றம் செய்தார்கள். மாணவிகள் தாம் பதிவு செய்ததைக் கேட்டுவிட்டு, பிழை இருப்பின், தமக்குத் திருப்தியும் மனநிறைவும் ஏற்படும்வரை மீண்டும் மீண்டும் பதிவு செய்தனர்.

வாய்விட்டு வாசித்தலுக்கான மதிப்பீட்டுப் பட்டியலைப் பயன்படுத்தி மாணவர்களைச் சோதனை செய்தபோது, அவர்களது வாய்விட்டு வாசிக்கும் திறனில் நல்ல முன்னேற்றம் உள்ளது என்பது காணப்பட்டது. நாளடைவில் அவர்கள் சுயமாக வாசித்துப் பதிவு செய்யும் திறனைப் பெற்றனர். அதுமட்டுமில்லாமல், பதிவு

செய்ததைக் கேட்டுத் தம்மைத் தாமே மதிப்பீடு செய்து மேலும் செம்மையாக வாய்விட்டு வாசித்துப் பதிவு செய்யவும் உந்தப்பட்டனர்.

இன்றைய சூழ்நிலை

சிங்கப்பூர் தமிழ்மொழிப் பாடத்திட்டம் தொடக்கநிலை ஒன்றுமுதல் மூன்றுவரை வாய்விட்டுப் படித்தலையே அதிகம் ஊக்குவிக்கிறது. திறம்பட வாசிக்கும் ஒரு மாணவனால் ஒரு மொழியைத் தன்னம்பிக்கையுடன் பேசவும் எழுதவும் முடியும் என்பது நன்கு அறிந்த ஒரு கூற்றாகும். அதுமட்டுமல்ல, ஒரு மாணவன் அனுபவித்துக் கற்கும் சொற்கள் ஆழமான புரிந்துணர்வையும் மேம்படுத்தும் என்பதில் ஐயமில்லை. எனினும் இன்றைய சூழ்நிலையில் மாணவர்கள், குறிப்பாகக் கீழ்த் தொடக்கநிலை மாணவர்கள் சொற்களையும் சொற்றொடர்களையும் எழுத்துகளை அடையாளங்கண்டு வாசிக்கின்றனரே தவிர, பெரும்பாலோர் அவற்றைப் பொருளுணர்ந்தோ, அனுபவித்தோ வாசிப்பதில்லை. ஆங்கிலப் புழக்கத்தின் தாக்கம், சிறு பிராயத்திலிருந்தே அந்தந்த வயதினருக்கு ஏற்ற சொற்கள் அறிமுகப்படுத்தப்படாததால் சொல்வளம் குன்றிய நிலை போன்ற காரணங்களால், தமிழ் கற்கும் மாணவர்கள் பலர் பொருள் உணராமலே வாசிக்கும் தன்மையை வளர்த்துக் கொண்டுள்ளனர் என்பதை எங்களுக்கு உணரவைத்தது. வகுப்பில் சீரான உச்சரிப்புடன் வாசிக்கும் கீழ்த் தொடக்கநிலை மாணவர்கள், குரல் ஏற்றம் இறக்கம், தெளிவு, சரளம் மற்றும் உணர்ச்சியுடன் வாசித்தல் ஆகிய திறன்களில் சிரமப்படுவது சீரான வாசிப்பிற்கு ஒரு முட்டுக் கட்டையாக விளங்கியது.

வகுப்பறைச் சூழல்

வகுப்பறையில் கீழ்த்தொடக்கநிலை மாணவர்களுக்குத் தமிழ் எழுத்துகளைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் முதலில் உச்சரிப்பில்தான் கவனம் செலுத்துகின்றனர். ஆசிரியர் வாசிக்க, அவரைப் பின்பற்றியே மாணவர்களும் வாசித்துப் பழகுகின்றனர். குரல் ஏற்ற இறக்கம், உணர்ச்சியுடன் வாசித்தல் ஆகிய திறன்களைக் கூட மாணவர்கள் ஆசிரியரைப் பின்பற்றியே வாசிக்கின்றனர் என்பது நாளடைவில் தெரியவந்தது. சுயமாக வாசிக்கும்போது மாணவர்கள் இவ்விரு திறன்களை வாசிப்பில் வெளிக்காட்டுவதற்குத் தடுமாறுகின்றனர். மாணவர்கள் கட்டுப்படுத்தப்பட்ட வகுப்பறைச் சூழலில் வாய்விட்டு வாசிக்கும்போது, உச்சரிப்பில் மட்டும்தான் அதிக நாட்டம் செலுத்தினர். இந்நிலை தொடர்ந்தால், மேல்தொடக்கநிலையில் படித்தல் திறன் பெரிதும் பாதிக்கப்படும் என்பது புலனானது மாணவர்கள் ஆசிரியர்களுக்காகவும், தேர்வு மதிப்பெண்களுக்காகவும் வாசிக்காமல், தமக்காக, பகுதிகளை அனுபவித்து ரசித்து, பொருளுணர்ந்து வாசிக்கும் சூழலை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டோம்.

இருவழித் தொடர்புத் தொழில்நுட்பம்

இது, நமது தமிழ்மொழிப் பாடக்கலைத் திட்டத்தின் கூறுகளில் ஒரு முக்கியக் கூறாக அமைகிறது. 'ஆர்வமூட்டும் கற்பித்தல் முறைகள்' மகிழ்வூட்டும் வகுப்பறைச் சூழலில் ஆர்வமூட்டும் வகையில் கற்பித்தல் நடைபெற்றால் மாணவர்களின் கற்றலும் ஈடுபாடும் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை. அதுமட்டுமல்லாது, ஆசிரியர் கற்பித்தலைத் தவிர்த்து SDL மற்றும் COL என்ற இருவழித் தொடர்புத் தொழில்நுட்பம் கற்றல் கற்பித்தலுக்கு மென்மேலும் துணைபுரியும் என்று முடிவு செய்தோம். சுய மதிப்பீடு, இணை மதிப்பீடு ஆகியவை மாணவர்கள் தங்கள் குறை நிறைகளை உடனுக்குடன் கண்டறிந்து, தங்களது குறைகளைத் திருத்திக்கொண்டு, நிறைகளை மென்மேலும் சீரடையச் செய்து வாசிப்பில் மேன்மையடைய வழிவகுத்தன. ஆசிரியர் மதிப்பீடு ஒவ்வொரு மாணவரின் தேவைகளையும் திறன்களையும் கண்டறிந்து அவர்களுடைய முன்னேற்றத்திற்கு வழிவகுக்க மிகவும் ஏதுவாக அமைந்தது.

'மூ-ஓ' (Moo-O) மென்பொருள்

கீழ்த்தொடக்கப்பள்ளி மாணவர்கள் உச்சரிப்பு, குரல் ஏற்ற இறக்கம், தெளிவு, சரளம் மற்றும் உணர்ச்சியுடன் வாசித்தல் ஆகிய திறன்களில் மேன்மையடைய வேண்டும் என்ற எங்களது இலக்கை அடைய நாங்கள் 'மூ-ஓ' என்ற மென்பொருளைப் பயன்படுத்தினோம். 'மூ-ஓ' மென்பொருள் எங்கள் பள்ளியில் ஆங்கில ஆசிரியர்களால் கீழ்த்தொடக்கநிலை மாணவர்களுக்குப் பயன்படுத்தப்படும் ஓர் வாசிப்புத் தளமாகும். ஆங்கில ஆசிரியர்கள், இத்தளம் மாணவர்களின் ஆங்கில வாசித்தலில் பெறும் முன்னேற்றத்தை ஏற்படுத்தி உள்ளது என்றும் சுயகற்பித்தலுக்கு மிக உகந்தது என்றும் பகிர்ந்துகொண்டனர். அதுமட்டுமல்லாது, இத்தளம் மாணவர்களுக்கு இனிய அனுபவமாக அமைந்ததோடு, மகிழ்வூட்டும் வகுப்பறைச் சூழலை ஏற்படுத்தி மாணவர்களின் ஆர்வத்தை முற்றிலும் வலுவடையச் செய்தது என்றும் ஆங்கில ஆசிரியர்கள் கூறினர். வகுப்பில் அன்றாடம் நடைபெறும் வாசித்தல் நடவடிக்கையை எப்படி ஆர்வமூட்டும் நடவடிக்கையாக மாற்றி மாணவர்களைப் பயனடையச்

செய்யலாம் என்ற எண்ணம் தோன்றியது. அத்துடன், தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியதால் மாணவர்களின் ஈடுபாடு பன்மடங்கு அதிகரித்தது.

மாணவர் ஈடுபாடு

மாணவர்கள் ஆங்கிலப் பாடவேளையின்போது 'மூ-ஓ' மென்பொருளைப் பயன்படுத்திய அனுபவத்தைப் பெற்றிருந்ததால் இத்தளத்தை அறிமுகப்படுத்துவதில் தமிழ் ஆசிரியர்கள் அவ்வளவு சிரமம் காணவில்லை. கதையை எப்படித் தேர்ந்தெடுப்பது, எப்படிக் கதாபாத்திரங்களைத் தீர்மானிப்பது, குழுத் தலைவரை நியமித்தல், வாசிப்பைப் பதிவு செய்தல், முழுக் கதையையும் ஏற்றம் செய்தல் ஆகியவற்றை மாணவர்களுக்கு விளக்கமாகக் கற்பித்தல் மாணவர்கள் கணினிக் கூடத்தில் அல்லது வகுப்பறையில் இத்தளத்தைப் பயன்படுத்தலாம். ஒவ்வொரு மாணவரும் ஒரு கணினியைப் பயன்படுத்துதல் அவசியம். எனினும் மாணவர்கள் இருவர் அல்லது மூவர் கொண்ட குழுக்களில் செயல்பட்டுத் தங்கள் கதையை ஏற்றம் செய்வர்.

இத்தளத்தில் மாணவர்களின் தரத்திற்கேற்பத் தமிழில் பலதரப்பட்ட கதைகள் உள்ளன. மாணவர்கள் தங்கள் குழுவினருடன் கலந்துரையாடி ஒரு கதையைத் தேர்ந்தெடுப்பர். மாணவர்கள் முதலில் படக்காட்சியையும், வாசிக்கப்படும் கதையையும் கேட்பர். அதே வேளையில் கணினித் திரையில் அவர்கள் கேட்கும் கதையின் வரிகளும் தோன்றும். பாடக்காட்சி, கதையை வாசிக்கும் கதாபாத்திரங்களின் குரல்கள் ஆகியவை, மாணவர்களுக்குக் குரல் ஏற்றம் இறக்கம், தெளிவு, சரளம் மற்றும் உணர்ச்சியுடன் வாசித்தல் ஆகிய கூறுகளின் முக்கியத்துவத்தைப் படிப்படியாக உணர்த்தியது. கதையினைக் கேட்டு முடித்த பின்னர் மாணவர்கள் மீண்டும் ஒருமுறை கதையைக் கேட்பர். இம்முறை அவர்களும் கதையை வாசிக்கும் 'குரலுடன்' சேர்ந்து வாசித்துப் பழகினர். பின்னர் தங்களுக்கு விருப்பமான கதாபாத்திரத்தைத் தேர்ந்தெடுத்து வாசித்துப் பயிற்சி செய்தனர். பிறகு, மாணவர்கள் ஒவ்வொரு பக்கமாக வாசித்துப் பதிவு செய்தனர். அடுத்த பக்கத்தை வாசித்துப் பதிவு செய்வதற்கு முன், மாணவர்கள் தாங்கள் பதிவு செய்த பக்கத்தைக் கேட்டுப் பார்ப்பார்கள் இத்தருணத்தில்தான் சுயமுனைப்புடன் கற்றல் (SDL) இடம் பெறுகிறது.

மாணவர்கள் தாங்கள் வாசித்ததைக் கேட்டபின், அது அவர்கள் ஒளிக்கருவியில் கேட்ட வாசிப்புப் போல உள்ளதா என நினைவு கூர்வர். 'மூ-ஓ' மென்பொருள். ஒரு மாணவர் மீண்டும் மீண்டும் வாசிப்பதைப் பதிவு செய்யும் வசதியைக் கொண்டுள்ளது. இதன் காரணத்தால், மாணவர்கள் தாங்கள் வாசித்தது திருப்திகரமாக அமையவில்லை எனக் கருதினால், பலமுறை பயிற்சி செய்து, அதன்பின் பதிவு செய்து, தம்மைச் செம்மைப்படுத்திக் கொள்ள வாய்ப்புள்ளது. மாணவர்கள் தாங்கள் வாசிப்பதைக் கேட்கும்போது தங்களுடைய பிழைகளைக் கண்டறியும் திறனை வளர்த்துக் கொள்கிறார்கள். அதுமட்டுமல்லாது, சீரான வாசிப்பு என்றால் என்ன என்பதைச் சில வகுப்புகளுக்குப்பின் அறிந்துகொள்ளும் பக்குவத்தையும் பெறுகின்றனர்.

தங்களது வாசிப்பில் திருப்தி அடைந்தவுடன் தங்கள் இணை அல்லது குழுவினருடன் சேர்ந்து முழுக்கதையையும் வாசித்துப் பதிவு செய்வர். இங்குக் குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்றால், மாணவர்கள் வாசித்துப் பதிவு செய்யும்போது, அவர்களுடைய முகம், கணினித் திரையில் காணப்படும் கதையில் உள்ள கதாப்பாத்திரத்தில் தோன்றும். மாணவர்கள் தங்களது குரலோடு, தங்கள் முகமும் திரையில் தோன்றித் தாம் பேசுவதைக் கண்டு பெரிதும் அகமகிழ்ந்து உற்சாகமடைந்தனர்.

வகுப்பின்முன் வந்து வாய்விட்டு வாசித்தலுக்கும், 'மூ-ஓ' மென்பொருளின்வழி வாய்விட்டு வாசித்தலுக்கும் இடையே மாபெரும் வேறுபாடுகள் தெரிந்தன. வகுப்பில் வாய்விட்டு வாசிக்கும்போது, மாணவர்கள் உச்சரிப்பில் அதிகக் கவனம் செலுத்தினர். ஆனால், 'மூ-ஓ' என்ற தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வாய்விட்டு வாசிக்கும்போது, மாணவர்களிடம் பொருளுணர்ந்து வாசிக்கும் திறன் வெளிப்பட்டது; சுய நம்பிக்கை அதிகரித்தது; பிறர் தம் வாசிப்பைப் பற்றி என்ன கூறுவார்களோ என்ற அச்சம் நீங்கியது.

தமிழ்மொழி - கற்றலுக்கான மதிப்பீடு (AFL-Assessment for Learning)

மதிப்பீடு, கல்வியின் ஒரு முக்கியமான கூறாகும். மதிப்பீட்டின் வழி சேகரிக்கப்படும் தகவல்கள் மாணவரின் கற்றலுக்கும் முன்னேற்றத்திற்கும் அடித்தளமாக அமைகின்றன. மதிப்பீடுகள் பெரும்பாலும் மேல்நிலைக்கும் வேறு கல்வி நிலையங்களுக்குச் செல்வதற்கும் வழி வகுக்கின்றன. Assessment can take any forms and are useful to external organisations such as Institutes of Higher Learning (IHLs) or employment organisations for admission exercises and employment (Stigginsï 2005) உதாரணத்திற்கு, முறைசார்ந்த தேர்வு (Summative Assessment) ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் மாணவரின் தர நிலையை நிர்ணயிக்கத் துணைபுரிகிறது. ஆனால், இது மாணவரின் படிப்படியான முன்னேற்றத்தைக் கணக்கிடும் அளவுகோலாக அமைய வாய்ப்பில்லை. மாணவரின்

படிப்படியான முன்னேற்றத்தை அளவிடும் சிறந்த கருவி - கற்றலுக்கான மதிப்பீடு (AFL - Assessment for Learning). In contrastI the practice of Assessment for Learning (AFL) may servea more developmental need for the teachers and students in teaching and learing (ARG, 1999)

கற்றலுக்கான மதிப்பீடு தினசரி கற்றலின் ஓர் அங்கமாக அமைகிறது. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும், கற்றலுக்கான மதிப்பீடு வழி திரட்டப்படும் தகவல்கள், கற்றலை மேம்படுத்தப் பெரிதும் துணை புரிகிறது.

வகுப்பில் வாய்விட்டு வாசிக்கும்போது மாணவர்கள் உச்சரிப்பில் மட்டும் கவனம் செலுத்துவது வாசிப்பின் மேம்பாட்டைத் தடை செய்கிறது என்பது அறிய வந்தது. 'மூ-ஓ' பயிற்சிகளுக்குப் பின் மாணவர்கள் உச்சரிப்பு, குரல் ஏற்ற இறக்கம், தெளிவு, சரளம் மற்றும் உணர்ச்சியுடன் வாசித்தல் ஆகிய திறன்களை உட்புகுத்தி வாசிக்கும்போது அவர்களது வாசிப்பில் மட்டுமல்ல. பொருளுணர்ந்து வாசிக்கும் தரமும் மேம்பட்டுள்ளது என்பது படிப்படியாகத் தெரிந்தது. இக்கண்டுபிடிப்புக்குப் பேராதரவாக அமைந்தது கற்றலுக்கான மதிப்பீடு.

சுயமதிப்பீடு, இணையாளர் மதிப்பீடு மற்றும் ஆசிரியர் மதிப்பீடு வெவ்வேறு கோணங்களில் இருந்து ஒரு மாணவரின் கற்றலுக்கான தகவல்களைத் திரட்ட வழிவகுத்து அம்மாணவனை அடுத்த நிலைக்கு இட்டுச் செல்ல வழி வகுக்கிறது. ஒவ்வொரு மாணவனின் தனித்துவத்தையும் தர நிலையையும் அடையாளம் காணக் கற்றலுக்கான மதிப்பீடு ஓர் அருமையான கருவியாக அமைகிறது.

மாணவர்கள் உச்சரிப்பு, குரல் ஏற்ற இறக்கம், தெளிவு, சரளம் மற்றும் உணர்ச்சியுடன் வாசித்தல் ஆகிய கூறுகளில் சுயமதிப்பீடு செய்யும் பயிற்சியை முதலில் ஆசிரியருடன் சேர்ந்து செய்தனர். மாணவர்கள் உச்சக்கட்ட மதிப்பெண்களை அடைய உந்தப்பட்டனர். 'மூ-ஓ' நடவடிக்கையின்போது, ஒவ்வொரு வாசிப்பைப் பதிவு செய்த பின்னர் மாணவர்கள் சுய மதிப்பீடு செய்தனர். எத்திறன்களில் திறம்பட செய்துள்ளனர். எத்திறன்களில் முன்னேற்றம் தேவை ஆகியவற்றுக்கான விளக்கங்களை அளிப்பர். இவ்வணுகுமுறை நாளடைவில் வாசிப்புத் திறன்களில் படிப்படியான முன்னேற்றத்தைக் காட்டியது. இணை மதிப்பீடு ஆக்ககரமான கற்றல் சூழலை உருவாக்கியது. மாணவர்கள் கண்காணிப்பு, கலந்துரையாடல், பிறரைப் பற்றுதல் ஆகியவற்றின் மூலம் மதிப்பீடு ஒருவரை எவ்வாறு மேம்படச் செய்கிறது என்பதை அனுபவப்பூர்வமாக உணர்ந்தனர். மேலும், சக மாணவர்களை மதிப்பிடும்போது தங்களது முன்னேற்றத்தை மதிப்பிடும் திறன் வலுவடைகிறது. சக மாணவர்களின் மதிப்பீடு மாணவர்களின் மேம்பாட்டிற்கு மேலும் வழிவகுத்தது. மிக முக்கியமாக, ஆசிரியரின் மதிப்பீடு மாணவர்கள் தங்கள் இலக்கை அடைய மிக அவசியமானதாக அமைந்தது. நாளடைவில் மாணவர்களிடையே 30 சதவீதம் முன்னேற்றம் காணப்பட்டது.

தகவல் தொழில்நுட்பம் - ஆர்வமூட்டும் கற்பித்தல் முறை

'மூ-ஓ' என்ற தகவல் தொழில்நுட்பம் மாணவர்களை ஓர் இன்பமான பாடவேளைக்கு இட்டுச் சென்றது. அவர்கள் ஆவலுடன் இப்பாடவேளைக்காகக் காத்திருந்தது. உற்சாகத்துடன் ஒவ்வொரு படிநிலையிலும் ஈடுபட்டது முதற்படி வெற்றி என்றே கூறவேண்டும்.

உச்சரிப்பில் மட்டும் கவனம் செலுத்தி வந்த மாணவிகள் 'மூ-ஓ' தளத்தின்வழி வாசிப்பின் மற்றக் கூறுகளின் முக்கியத்துவத்தையும் படிப்படியாக அறியத் தொடங்கினர். மாணவிகள் தாம் பதிவு செய்ததைக் கேட்டுவிட்டு, பிழை இருப்பின் சரியாக வாசிக்கும்வரை மீண்டும் மீண்டும் பதிவு செய்தனர்.

கற்றலுக்கான மதிப்பீடு மாணவர்களின் மாறுபட்ட தேவைகளைக் கண்டறிந்து, அவர்களின் தேவைக்கேற்ப வேறுபடுத்தப்பட்ட கற்பித்தலுக்கு வழிவகுத்தது. மாணவர்கள் மீண்டும் வாசித்தலைப் பதிவு செய்வதற்குமுன், முதல் வாசிப்பதற்கான சுயமதிப்பீட்டுப் பட்டியலைப் பூர்த்தி செய்து ஆசிரியருடன் கலந்துரையாடுவார்கள். மறுபதிவு செய்து மீண்டும் ஒரு மதிப்பீட்டுப் பட்டியலைப் பூர்த்தி செய்வர். இப்பட்டியல்கள் வாசிப்பில் படிப்படியாக முன்னேற்றம் ஏற்படுவதை வெளிக்காட்டியது.

சக மாணவர்களை மதிப்பிடும்போது மாணவர்களை அவர்களை மட்டுமல்ல, தங்களையும் மேம்படுத்திக் கொள்ளக் கற்றுக்கொண்டனர். மாணவர்களை, சக மாணவர்களின் கருத்து தங்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியது என்றும் திறம்பட வாசிக்க முடியும், வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டியது என்றும் பகிர்ந்துகொண்டனர்.

அடைமொழிகள், நிறுத்தற்குறிகள், உரையாடல்கள் இவை யாவும் குரல் ஏற்ற இறக்கத்துக்கும், உணர்ச்சியுடன் வாசிப்பதற்கும் மிக அவசியம் என்பதை மாணவர்கள் உணரத் தொடங்கினர். இது அவர்கள் பொருளுணர்ந்து வாசிப்பதற்குப் பெருந்துணை புரிந்தது.

நாளடைவில் வாய்விட்டு வாசித்தலுக்கான மதிப்பீட்டுப் பட்டியலைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு ஒரு பகுதியைக் கொடுத்துச் சோதனை செய்தபோது, பெரும்பாலோரின் வாய்விட்டு வாசிக்கும் திறனில் நல்ல முன்னேற்றம் உள்ளது என்பது காணப்பட்டது.

இவ்வாசிப்பு நடவடிக்கையின் மூலம், மாணவர்களின் வாசிப்புத் திறன் முன்னேற்றம் கண்டதற்கு, ஆசிரியரின் கற்பித்தல் மட்டும் காரணமல்ல என்பது தெள்ளத் தெளிவாகிறது. மூ-ஓ என்ற தகவல் தொழில்நுட்பம், மாணவர்கள் தன்முனைப்புடன் செயல்பட, சுயமாகத் தம்மை மேம்படுத்திக் கொள்ள ஓர் தளமாக அமைந்தது. கற்றலுக்கான மதிப்பீடு மேலும் மேம்பாட்டினை வலிமையுறச் செய்தது.

மொத்தத்தில் மாணவர்களை மையமாக வைத்து வழி நடத்தப்பட்ட இக்கற்பித்தல் தளம்/அணுகுமுறை (student-centric, values-driven system) படிப்படியான முன்னேற்றத்திற்குப் பாலம் அமைக்கும் என்பதை ஆணித்தரமாகக் கூற விழைகின்றோம்.

References

Ministry of Education.(2014) 2015 Syllabus Tamil Language Primary. Curriculum Planning & Development Division

Ministry of Education. (2015) Assessment Guide with Exemplars. Tamil Language (Primary). Curriculum Planning & Development Division

Assessment Reform Group. (1999). Assessment for learning : Beyond the Black Box, University of Cambridge School of Education (PDF). Retrieved 15 April 2014, from http://www.nuffieldfoundation.org/assessment-reform-group

வாய்விட்டு வாசித்தல் - ஆசிரியர் மதிப்பீட்டுப் பட்டியல்

	4	3	2	1
உச்சரிப்பு	கற்ற எழுத்துகளையும்/ சொற்களையும் மிகத் தெளிவான உச்சரிப்புடன் மிகச் சிறப்பாக வாசித்தல்	கற்ற எழுத்துகளையும்/ சொற்களையும் பெரும்பாலும் தெளிவான உச்சரிப்புடன் வாசித்தல்	கற்ற எழுத்துகளையும்/ சொற்களையும் ஓரளவு தெளிவான உச்சரிப்புடன் வாசித்தல்	கற்ற எழுத்துகளையும்/ சொற்களையும் தெளிவற்ற உச்சரிப்புடன் வாசித்தல்
குரல் ஏற்ற இறக்கம்	மிகப் பொருத்தமான குரல் ஏற்ற இறக்கம் நிறைந்த மிகச் சிறப்பான வாசிப்பு	பெரும்பாலும் பொருத்தமான குரல் ஏற்ற இறக்கம் நிறைந்த சிறப்பான வாசிப்பு	ஓரளவு பொருத்தமான குரல் ஏற்ற இறக்கம் நிறைந்த வாசிப்பு	பொருத்தமற்ற குரல் ஏற்ற இறக்கம் நிறைந்த வாசிப்பு
சரளம்	எழுத்துகளையும்/ சொற்களையும் மிகச் சரளமாக வாசித்தல்	எழுத்துகளையும்/ சொற்களையும் பெரும்பாலும் சரளமாக வாசித்தல்	எழுத்துகளையும்/ சொற்களையும் ஓரளவு சரளமாக வாசித்தல்	எழுத்துகளையும்/ சொற்களையும் சரளமின்றி வாசித்தல்
தெளிவு	மிகத் தெளிவாகக் கேட்கும் வகையில் அமைந்த மிகச் சிறப்பான வாசிப்பு	பெரும்பாலும் தெளிவாகக் கேட்கும் வகையில் அமைந்த சிறப்பான வாசிப்பு	ஓரளவு தெளிவாகக் கேட்கும் வகையில் அமைந்த வாசிப்பு	தெளிவற்ற வகையில் அமைந்த வாசிப்பு

AFL–AssessmentforLearning SDL–Self-DirectedLearning)

	☆ ☆ ☆ ☆	☆ ☆ ☆	☆ ☆	☆

CHIJ Our Lady Queen of Peace

AFL–Assessmentfor earning – Learning)

	☆ ☆ ☆ ☆	☆ ☆ ☆	☆ ☆	☆

20. ஒலி வேறுபாட்டுச் சொற்களைப் படத்தின் துணையால் அறிதல்

திருமதி. ஜெகஜோதிசிவபாதம், Bachelor of Arts (Tamil Language and Literature)
பாடத்தலைவர், தமிழ்மொழி, சூச்சின் தொடக்கப்பள்ளி

Bibliography: 1) Dr. Howard Gardner, Professor of Education Harvard University (Tornbury, 2004 McCarthy 1992; Gairns and Redman 1992

நோக்கம்

மாணவர்கள் ஒலி வேறுபாட்டுச் சொற்களின் பொருளைப் படத்தின் துணையோடு அறிந்து கொள்ளும்போது அவர்களுக்குச் சுலபமாகப் புரிகிறது என்பதே இக்கட்டுரைப் படைப்பின் நோக்கமாகும். எங்கள் பள்ளி லகர ளகர ழகரமும், றகர ரகரமும், ணகர னகரமும் கொண்ட ஒரு தொகுப்பைத் தொகுத்துள்ளது. அதன் அடிப்படையில் உருவான பாடத்தைத்தான் இப்பகிர்வின் ஓர் அங்கமாகக் கூறவிருக்கிறோம்.

முன்னுரை

இன்றைய தமிழ்மொழிக் கற்பித்தலில் ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் சவால்களைச் சந்திக்கின்றனர். எங்கள் பள்ளி மாணவர்கள் ஒலி வேறுபாட்டில் இடர்ப்பாடுகளைச் சந்தித்தினர். இப்பிரச்சனையைக் களைய பலவித உத்தி முறைகளைக் கையாண்டபோது மாணவர்களின் மனப்பாடம் செய்யும் திறனே மேலோங்கி நின்றது மாணவர்கள் புரிந்துணர்வோடு ஒலி வேறுபாட்டைக் கற்றால் காலாகாலத்துக்கும் அவர்கள் மனத்தில் நிலைத்து நிற்கும். மாணவர்கள் மதிப்பெண்ணுக்காக மனனம் செய்வதில் உடன்பாடு இல்லாததால் படமாக வரைந்து அச்சொற்களை நினைவு கொள்ளச் சொல்வோம்.

சுமை சுகமானது

ஆரம்பத்தில் படமாக வரைந்து கற்றுத் தந்ததையே நாங்கள் புத்தகமாக எங்கள் மாணவர்களின் நலன் கருதித் தொகுத்தோம். படங்களின் துணையோடு ஒலி வேறுபாட்டைச் செய்யும்போது மாணவர்களின் மனத்தில் அச்சொற்கள் நிலைத்து நிற்கின்றன. மாணவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நுண்ணறிவுகளைக் கொண்டு ஒலி வேறுபாட்டைக் கற்கும் போது சுமையாக இல்லாமல் சுகமாக இருக்கும்.

ஒரு படம் ஆயிரம் சொற்களுக்குச் சமம்

ஒரு படம் ஆயிரம் சொற்களுக்குச் சமம் என்ற சீனப் பழமொழிக்கு ஏற்ப இக்கற்றல் முறை மனனம் செய்யும் முறையைவிடப் பன்மடங்கு சிறந்தது என்று நம்புகிறோம். இந்தத் தொகுப்பை எங்களோடு சேர்ந்து நீங்களும் பயன்படுத்தினால் சிறப்பாக இருக்கும். இப்பகிர்வின் நோக்கமே மாணவர்கள் அனைவரும் பயன்பெற வேண்டும்

என்பதுதான். ஆசிரியர் சொல்ல, மாணவர்கள் கேட்டுக் கற்பது மட்டுமே கற்பித்தல் என்ற ஒரு நம்பிக்கை இருந்த காலம் இப்போது கடந்த காலமாகிவிட்டது. ஒரு நல்லாசிரியர் என்பவர் தன்னிடம் வரும் மாணவர்களின் கற்றல் திறன்களை அறிந்து அவர்களுக்கு ஏற்றவாறு தன் கற்றலை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் தற்போது இருக்கிறார்.

மாணவர்கள் மூன்று வகைக் கற்றல் அறிவைக் கொண்டுள்ளனர் எனக் கல்வி வல்லுநர்கள் வரையறுத்துள்ளனர். அவை செவிவழிக் கற்றல் (30), காட்சி வழிக் கற்றல் (65), செயல் வழிக் கற்றல் (5) என்பவை (The theory of **multiple intelligences** was developed in 1983 by Dr,Howard Gardner, Professor of Education at Harvard University.)

நாம் அனைவரும் இந்த மூன்று அறிவில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அறிவைப் பயன்படுத்தியே கற்கிறோம் என்பது உண்மை. இருப்பினும் நம்மில் அதிகமானோர் காட்சி வழி அறிவைப் பயன்படுத்தியே அதிகமாகக் கற்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் அடிப்படையில் உருவானதே இந்தச் சிறு முயற்சியாகும்.

தமிழ்மொழி கற்கும் மாணவர்களுக்கும் அதைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பெரும் சவாலாக அமைவது ஒலி வேறுபாட்டுச் சொற்கள் என்றால் மிகையாகாது. இதைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பெரும்பாலும் தங்கள் மாணவர்களுக்குச் சொற்பட்டியலைக் கொடுத்து அவற்றை மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்து மனனம் செய்யச் சொல்வதே வழக்கில் இருந்து வருகிறது. இம்முறை அனைத்து மாணவர்களுக்கும் ஏற்றதன்று. இதனால், பல மாணவர்கள் ஒலி வேறுபாட்டுச் சொற்களில் தாங்கள் செய்யும் தவறுகளை இறுதிவரை திருத்திக் கொள்ளாமலேயே தங்கள் கல்வியை முடித்துக் கொள்கிறார்கள் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும்.

ஒலி வேறுபாட்டுச் சொற்கள் என்பது இலக்கியக்கூறு அல்ல. இது சொல்வளம் என்ற பகுதியில் அடங்கும். அதனால் ஆசிரியர்கள் இதைக் கற்பிக்க சொல்வளம் கற்பிக்கும் உத்திகளைக் கையாள்வதே சாலச்சிறந்ததது. சொல்வளம் என்பது ஒருவருடைய மூளையில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள சொற்கள். அவை ஒன்றோடொன்று வடிவம், பொருள், கலாச்சாரம் போன்ற ஏதோ ஓர் அடிப்படையில் தொடர்புடையவை. (Tornbury, 2004 McCarthy 1992; Gairns and Redman 1992). ஒரு சிறந்த ஆசிரியருடைய பணி தன்னுடைய மாணவர்களின் மூளையில் கற்பிக்கப்பட வேண்டிய சொற்கள் சுலபமாகப் போய்ச் சேர வழிவகுப்பதே ஆகும்.

புதிய சொற்களைக் கற்றுக்கொள்ளும் மாணவர்கள் அச்சொற்களை வரிவடிவமாகப் பார்ப்பதைவிட மனக்காட்சிகளாகப் பார்ப்பதே சிறந்தது என வலியுறுத்தப்பட்டுள்ள போதிலும் நம்மில் பலருக்குச் சொற்களைக் காட்சிகளாக மாற்றும் திறன் சுலபமானதல்ல என்பதையும் நாம் மறுக்க முடியாத ஒன்றாகும். இந்தச் சூழ்நிலையில் படங்களைக் காட்டி மாணவர்களுக்கு ஒலி வேறுபாட்டுச் சொற்களின் பொருளை விளக்குவதுடன் அதன் பொருளை அவர்களின் நீண்ட கால அறிவில் நிலைபெறச் செய்ய உதவலாம் என்பதே இந்த ஆய்வினை மேற்கொண்டதன் அடிப்படையாகும்.

செயல்முறை

இந்த ஆய்வு சிங்கப்பூரில் மேற்கு வட்டாரத்தில் இருக்கும் ஒரு சாதாரண அரசுப் பள்ளியில் நடத்தப்பட்டது. இந்த ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்தாம் வகுப்பு மாணவர்களுடைய எண்ணிக்கை 38. இந்த வகுப்பில் உள்ள மாணவர்கள் பலதரப்பட்ட கல்வித் திறன்களைக் கொண்டவர்கள். அவர்களிடம் நாங்கள் சோதித்துப் பார்த்தபோது பின்வரும் படிநிலைகளைப் பின்பற்றினோம்.

1. சிங்கப்பூர் பாடத்திட்டத்தில் வரையறுக்கப்பட்ட ஒலி வேறுபாட்டுச் சொற்களைத் தொகுத்தல்
2. அவற்றின் பொருளை விளக்கும் வாக்கியங்களை உருவாக்குதல்
3. அந்த வாக்கியங்களைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு ஒலி வேறுபாட்டுச் சொற்களைக் கற்பித்தல்
4. மாணவர்களின் திறனைச் சோதித்தல். (முன்னோட்டத் தேர்வு)
5. அந்த வாக்கியங்களின் அடிப்படையில் காட்சிகளை ஓவியர் மூலம் தயாரித்தல்
6. காட்சிகள், வாக்கியங்கள் ஆகியவற்றின் துணையுடன் ஒலி வேறுபாட்டுச் சொற்களைக் கற்பித்தல்
7. மாணவர்களின் திறனை மீண்டும் சோதித்தல்

ஆய்வின் முடிவுகள்

முன்னோட்டத் தேர்வு முடிவுகளையும் பின்னால் கொடுக்கப்பட்ட தேர்வு முடிவுகளையும் ஒப்புநோக்கும்போது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது.

திறனாய்வு

1. மாணவர்களுக்குக் காட்சிகளுடன் சொற்களின் பொருளைக் கற்பது ஆர்வத்தைத் தூண்டக் கூடியதாக அமைந்தது.

2. மாணவர்களுக்குச் சொற்களின் பொருளைப் புரிந்து கொள்ளப் படங்கள் உதவியாக இருந்ததால் சுலபமாக இருந்தது.

3. மாணவர்களால் காட்சி வடிவில் அமைந்த சொற்களை மனப்பாடம் செய்யவும் தேவை ஏற்படும்போது நினைவுக்குக் கொண்டுவரவும் எளிமையாக இருந்தது.

4. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கு அந்தச் சொற்களின் பொருளை விளக்கும் பணி சுலபமானது.

ஆய்வின் நம்பகத்தன்மை

ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. அத்துடன் இவ்வாய்வு ஒரு பள்ளி மாணவர்களிடம் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது.

முடிவுரை

ஆய்வுக்குச் சிங்கப்பூரில் உள்ள மற்ற வட்டாரத்தில் அமைந்துள்ள பள்ளிகளிலும் மேற்கொள்ளப்பட்டால் இந்த ஆய்வின் நம்பகத்தன்மை அதிகரிக்கும். அதற்கு அடுத்த கட்டமாக இந்த ஆய்வு தமிழ்மொழியைக் கற்பிக்கும் மற்ற நாடுகளிலும் மேற்கொண்டால் தமிழ் கற்றல் கற்பித்தலில் புதிய வரவேற்கக்கூடிய மாற்றங்கள் ஏற்படும் என்று நம்பலாம்.

21. கருத்தறிதல் உத்திகள்
தொடக்கநிலை 2 மற்றும் 3

திருமதி. சுஜாதா, (Bachelor of Literature) சூச்சின் தொடக்கப்பள்ளி

செல்வி. சரண்யா அபூர்வம், Diploma in Education சூச்சின் தொடக்கப்பள்ளி

நோக்கம்

மாணவர்கள் வினாச் சொற்களைக் கொண்டு பகுதியைப் புரிந்து கொள்ளுதலும், அதன்பின் கேள்விகளுக்குப் பதில் எழுதுதலுமே ஆய்வின் முக்கிய நோக்கமாகும். நாங்கள் தொடக்கநிலை இரண்டு, மூன்று ஆகிய இரண்டு வகுப்புகளுக்குத் தேர்ந்தெடுத்த கேள்விச் சொற்கள் **எங்கே, என்ன** (பொருள், செயல்) **எப்போது, எப்படி, யார், எது** என்பவையாகும்.

முன்னுரை

சீர்மிகு செம்மொழியாய் உலகெங்கும் வாழ்ந்து வரும் தமிழ்மொழியை இன்றைய இளைய தலைமுறையினரிடம் செழித்தோங்கச் செய்வது இன்றைய கற்பித்தலில் மிகப் பெரிய சவாலாக இருக்கின்றது. எங்கள் பள்ளி மாணவர்கள் கருத்தறிதல் செய்வதில் சிக்கல்களைச் சந்தித்தனர். பனுவலின் பொருளே புரியாமல் கருத்தறிதல் கடினமாக இருப்பதாகக் கூறி வந்ததால் அவர்களின் பிரச்சனைக்குத் தீர்வு காண முயன்றோம். நாங்கள் மேல் தொடக்கநிலை மாணவர்களிடம் கண்ட இடர்ப்பாடுகளைக் கீழ்த்தொடக்கநிலை மாணவர்களிடம் ஆரம்பத்திலேயே களைய வழியைத் தேடினோம்.

கருத்தறிதல்

பாடத்திட்டத்தின் அடிப்படையில் மாணவர்களுக்கு அதிக மதிப்பெண்களைப் பெற்றுத்தரும் பகுதி கருத்தறிதல்தான். ஆரம்ப காலக்கட்டத்திலேயே கருத்தறிதலில் மிகுந்த ஈடுபாட்டைக் கொண்டுவர வேண்டும். அதற்கு முதலில் மாணவர்கள் பனுவலைப் படிக்க வேண்டும். இந்நோக்கத்தைக் கொண்டே எங்கள் ஆய்வை மேற்கொண்டோம். மாணவர்களுக்கு ஆர்வமும் அதே நேரத்தில் பனுவலின் புரிந்துணர்வையும் அளிக்கக் கூடியதாக ஆய்வு நோக்கம் அமைய பல வித உத்திமுறைகளைக் கையாண்டோம். இதற்கு, கல்வி அமைச்சின் தகவல் தொழில்நுட்பப் பிரிவான 10'T சிகரத்தின் அதிகாரிகளும் பள்ளியின் மூத்த ஆசிரியர்களும் எங்களுடன் இந்த ஆய்வில் ஈடுபட்டனர். 10'T சிகரத்தில் இடம்பெற்ற வளங்களை எங்கள் ஆய்வுக்கு உட்படுத்தினோம். எங்கள் ஆய்வு நான்கு மாதங்கள் நீடித்தது.

மூன்று சுழற்சிகள்

எங்கள் ஆய்வு மூன்று சுழற்சிகளாக இடம்பெற்றன. இச்சுழற்சியைக் கல்வி அமைச்சின் தகவல் தொழில்நுட்பப் பிரிவான 10'T சிகரத்தின் அதிகாரிகளும் பள்ளியின் மூத்த ஆசிரியர்களும் உற்று நோக்கினார்கள். தாய்மொழிக் கற்றல் என்பது மாணவர்களுக்கு இன்பம் அளிக்கக் கூடியதாக அமைய வேண்டும் என்ற எண்ணத்தில் முதல் சுழற்சியில் மாணவர்களிடம் ஏற்பட்ட இடர்ப்பாடுகளைப் பட்டியலிட்டோம். அதற்கேற்ப அடுத்த அடுத்த பாடத்திட்டத்தை வடிவமைத்தோம். மாணவர்களின் தேவைகளையும், திறன்களையும் அறிந்து கற்பித்தல் உத்திகளைக் கையாண்டோம்.

இரண்டாம் சுற்றின் முடிவில் முதல் சுற்றில் கண்ட இடர்ப்பாடுகள் களையப்பட்டன. மாணவர்கள் கற்றுக் கொண்ட வடிவங்களைக் கொண்டு கேள்விக்கேற்ற பதிலை அடையாளங்கண்டு அவர்களால் பதிலளிக்க முடிந்தது. இரண்டு சுற்றிலும் வெவ்வேறு கேள்விச் சொற்களை அறிமுகப்படுத்தினாலும் மாணவர்கள் வடிவங்களைக் கொண்டு மனத்தில் நிறுத்திக் கொண்டது ஆய்வில் கிடைத்த வெற்றி என்றே சொல்ல வேண்டும்.

வடிவங்களைத் தேர்ந்தெடுக்க காரணம்

பொதுவாக மாணவர்களுக்கு வரைவதில் ஓரளவுக்கு ஆர்வம் உண்டு. வடிவங்களை வரைந்து கேள்விச் சொற்களை உள்வாங்கும் போது மனதில் என்றென்றும் நிலைத்து நிற்கும் அந்த வடிவங்களை மாணவர்களுக்கு அன்றாடம் பயன்படுத்தும் பொருளோடு ஒப்பிட்டுச் சொல்லித் தரும்போது நினைவில் கொள்வது சுலபமாகிவிடும்.

கீழ்த்தொடக்கநிலை



எழுத்துகளை ஓரளவுக்குக் கற்றறிந்த கீழ்த்தொடக்கநிலை மாணவர்களிடம் கேள்விச் சொற்களை அறிமுகப்படுத்த முயன்றோம். அதிலும் குறிப்பாக அவர்களுக்கு நன்கு தினமும் பயன்பாட்டில் உள்ள கேள்விச் சொற்களைத் (யார், எது, எங்கே) தேர்வு செய்தோம். அச்சொற்களைக் குறியீட்டின் (யார்-இருதயம், எது-மேகம், எங்கே-முக்கோணம்) மூலம் நினைவு கொணர்ந்தோம்.

(எ.கா) ராமு

முதல் இரண்டு பாடங்களில் மாணவர்களுக்கு ஆரம்பத்தில் தடுமாற்றம் ஏற்பட்டாலும் மூன்றாவது பாடம் வெற்றியாக அமைந்தது. நாங்கள் இரண்டு பாடங்களில் ஏற்பட்ட சிறு சிறு பிரச்சனைகளைக் களைய கல்வி அமைச்சின் தகவல் தொழில்நுட்ப அதிகாரிகளோடும், பள்ளியின் மூத்த ஆசிரியர்களோடும் இணைந்து செயல்பட்டோம்.

தொடக்கநிலை மூன்று

இரண்டாம் வகுப்பு மாணவர்களிடம் கொண்ட ஆய்வின் வெற்றியைத் தொடர்ந்து தொடக்கநிலை மூன்று மாணவர்களிடமும் செயல்படுத்த ஆரம்பித்தோம். அதில் எங்கே, யார், எப்படி, எது, என்ன (என்ன-சதுரம்) (செயல், பொருள்). எப்பொழுது (எப்பொழுது-சாய்சதுரம்) கேள்விச் சொற்களை வடிவங்களோடு பயன்படுத்தினோம். தொடக்கநிலை மூன்று மாணவர்களுக்கு என்ன என்ற கேள்விச் சொல், பொருள், செயல் அடிப்படையில் பொருளறிந்து பதில் காண்பது கற்றுக் கொடுக்கப்பட்டது. மாணவர்களின் பயிற்சி வாரம் வாரம் சோதிக்கப்பட்டபோது அவர்களின் புரிந்துணர்வைக் கண்கூடாகக் காண முடிந்தது. பொருளறிந்து படித்தல் பயன்மிகுந்த கற்றலுக்கு வழிகாட்டும் என்பதுதான் எங்கள் ஆய்வின் வெற்றிக்கு வழிவகுத்தது. எங்கள் பாட ஆய்வின் வெற்றியை மாணவர்களின் அரையாண்டுத் தேர்வில் 80% 8 மாணவர்களிடம் (SA1) காண முடிந்தது.

சவால்கள்

* மாணவர்கள் ஒரு சிலர் எழுத்துகளை அடையாளப்படுத்திக் கொள்வதில் சிக்கல்களைச் சந்தித்தனர்.
* பனுவலுக்குப் பொருள் புரியாமல் திண்டாடினர்.

கற்றல் விளைவுகள்

* மாணவர்களால் கேள்விக்கேற்ற பதிலைக் கண்டறிந்து எழுத முடிந்தது.
* கருத்தறிதலில் இருந்த பயத்தைக் களைய முடிந்தது.
* மாணவர்களின் ஒவ்வொரு பயிற்சித் தாளிலும் மாணவர்களின் புரிந்துணர்வைக் காண முடிந்தது.

முடிவுரை

எங்கள் கற்பித்தலில் இருபத்தியோராம் நூற்றாண்டு திறன்களில் ஒன்றான கணினியைப் புகுத்தியதால் மாணவர்களின் ஆர்வம் ஒவ்வொரு ஆய்விலும் மேலோங்கி நின்றது. தெரிந்ததைக் கொண்டு தெரியாததைக் கற்றுக் கொடுக்கும் உத்தியைக் கையாளும் அதே நேரத்தில் விரும்பியதைக் கொண்டு விளையாட்டாகச் சொல்லிக் கொடுக்கும் உத்தியையும் கையாண்டால் இரண்டாம் மொழிச் சூழலில் தமிழை விரும்பி படிப்பார்கள் என்பது திண்ணம்.

22. சிங்கப்பூரில் தமிழ்மொழிக் கல்வி - புதிய பரிமாணங்களை நோக்கி...

திருவாட்டி சி. சுப்புலெட்சுமி, உதவி இயக்குநர்

திருமதி. தமிழ்வாணி முத்து, மூத்த பாடத்திட்ட வளமேம்பாட்டு அதிகாரி

திருவாட்டி புனிதா மணியம், மூத்த பாடத்திட்ட வரைவு அதிகாரி

தமிழ்த்துறை, பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு,
சிங்கப்பூர் கல்வி அமைச்சு

முன்னுரை

உலகம் பல புதிய பரிமாணங்களை நோக்கி விரைந்து பயணித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு ஈடுகொடுக்கும் வகையில் சிங்கப்பூர் தமிழ்மொழிக் கல்வியானது உலகளாவிய நிலையில் வீறு நடைபோட வேண்டும். சிங்கப்பூரில் தமிழ்மொழியைப் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவரும் பெருமிதத்தோடு மொழியைக் கற்க வேண்டும். இவற்றை மனத்திற்கொண்டு 2015-இல் சிங்கப்பூரில் அமலாக்கம் கண்ட பாடக் கலைத்திட்டம் தமிழைத் தாய்மொழியாகப் பயிலும் மாணவர்கள் மொழியை ஆர்வத்துடன் கற்றுத் திறம்படப் பயன்படுத்த வழிவகை செய்யும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது. 'கல்வி கற்பதும், கற்பிப்பதும் மிகவும் முக்கியம். அதே வேளையில் சிறந்த மனிதனை உருவாக்குவதாக அவை அமைய வேண்டும்,'- இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் கூற்றுக்கு ஏற்ப மாணவர்கள் நல்ல பண்பாளர்களாகத் திகழ்வதற்கு வழிகாட்டுவதையும் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகச் சிங்கப்பூர் தமிழ்மொழிப் பாடத்திட்டம் கொண்டுள்ளது. இத்துடன், 21-ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான திறன்களையும் மாணவர்களிடையே வளர்க்கும் வகையில் சிங்கப்பூர் மண்வாசனை கமழத் தேனெனத் தித்திக்கும் 'தேன்தமிழ்' பயிற்று வளங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இவை யாவும் மாணவர்கள் தமிழில் கலந்துரையாடிக் கருத்துப் பரிமாறிக் கொள்ள ஏற்றச் சூழலை உருவாக்கித் தருவதோடு அதன்வழி மாணவர்களின் தமிழார்வத்தை வளர்க்கவும் வேண்டித் தயாரிக்கப்பட்டுள்ளன.

நெகிழ்வுத் தன்மைமிக்க தமிழ்மொழிப் பாடக்கலைத் திட்டம்

சிங்கப்பூர் மாணவர்களிடையே தமிழை வாழும் மொழியாக்க வேண்டும் என்பதே சிங்கப்பூர்ப் பாடக்கலைத் திட்டங்களின் உயரிய நோக்கமாகும். தாய்மொழியைத் திறம்படப் பயன்படுத்துவோரை உருவாக்க 2010-இல் நடைபெற்ற தாய்மொழிகள் மறு ஆய்வில் மூன்று பரந்த குறிக்கோள்கள் வரையறுக்கப்பட்டன.

1. வாழ்க்கைக்கும் தொழிலுக்கும் தேவைப்படும் இன்றியமையாத திறனான கருத்துப் பரிமாற்றத் திறனில் திறம் பெறுதல்.
2. தாய்மொழியின் வாயிலாக மாணவர்கள் தங்களது பண்பாடு, பாரம்பரியம், இலக்கியம், வரலாறு ஆகியவற்றை ஆழ்ந்து அறிதல்.
3. ஆசியாவிலும் உலக நாடுகளிலும் வாழும் அதே மொழியைப் பேசுவோர் அல்லது ஒத்த கலாச்சாரத்தைக் கொண்டோரோடு தொடர்பு கொள்ள வழிவகுத்தல்.

மாணவர்களை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட 2015 பாடக்கலைத் திட்டம், வீடு, பள்ளி, சமூகம் ஆகிய மூன்றுக்குமிடையே முத்தரப்புக் கூட்டு முயற்சியையும் வலியுறுத்துகிறது.

மாணவர்களை மையமாகக் கொண்ட பாடத்திட்டம்



பாடத்திட்டத்தில் நான்கு அடிப்படை மொழித்திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றோடு பேச்சுவழிக் கருத்துப் பரிமாற்றத்திற்கும் எழுத்துவழிக் கருத்துப் பரிமாற்றத்திற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளன. கருத்துப் பரிமாற்றத் திறன்களை மாணவர்களிடையே வளர்க்க அன்றாட வாழ்க்கைச் சூழல்களில் அமைந்த நடவடிக்கைகளில் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். அவ்வாறு ஈடுபடுத்தும்போது பேச்சுத் தமிழை முன்னிறுத்தியே கற்றல் கற்பித்தல் நிகழ்கிறது. அனைத்து நிலைகளிலும் வகுப்பறைக் கற்பித்தலுக்கும் கருத்துப் பரிமாற்றத்திற்கும் தொடர்ந்து பேச்சுத் தமிழே பயன்படுத்தப்படுகிறது. பேச்சுத் தமிழைப் பயன்படுத்துவதில் மாணவர்கள் தம் ஆற்றலையும் தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ள முறையான பயிற்சிகளும் வாய்ப்புகளும் வழங்கப்படுகின்றன. இயல்பான வாழ்க்கைச் சூழல்களில் பேச்சுத் தமிழில் பேசிப் பயிற்சிபெற ஆசிரியர்கள் தொடர்ந்து மாணவர்களை வழிநடத்தி வருகிறார்கள். அதேவேளையில் தாய்மொழிக் கற்றலின்வழிப் பண்பாடு, விழுமியங்கள் ஆகியவையும் தொடர்ந்து வலியுறுத்தப்படுகின்றன.

ஆர்வமூட்டும் கற்பித்தல் முறைகளும் அர்த்தமுள்ள மதிப்பீடும்

பலதரப்பட்ட வீட்டுச் சூழல்களிலிருந்து வரும் மாணவர்களின் பல்வேறுபட்ட தொடங்குநிலைகளைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு ஏற்ற வகையில் பலதரப்பட்ட கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் சிங்கப்பூர்ப் பள்ளிகளில் பின்பற்றப்பட்டு வருகின்றன. தமிழ் வகுப்பறைகளில் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டிக் கற்றலில் நண்பர்களாகவும் திகழ்கிறார்கள்.





பயிற்று வளங்களின் தனித்தன்மை

பாடநூலில் சூழமைவு சார்ந்த படங்களின் உதவியுடன் எழுத்துகள், சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள் ஆகியவை படிப்படியாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. மாணவர்கள் சொற்களின் பொருளைப் பயன்பாட்டு நிலையில் புரிந்து கொள்ளச் சூழமைவு சார்ந்த படங்கள் பெரிதும் உதவும். எழுத்து/சொல் அறிமுகத்திற்கு உதவும் வகையிலும் உச்சரிப்பை வலியுறுத்திக் கற்பிக்கவும் எழுத்தட்டைகள், மின்னட்டைகள் முதலியவற்றுடன் பாடநூலின் ஒரு சில பக்கங்கள் மின்னிலக்கப் பக்கங்களாகவும் தயாரிக்கப்பட்டுள்ளன. இம்மின்னிலக்கப் பக்கங்களில் புகைப்படங்கள், ஒலிப்பகுதிகள், ஒளிக்காட்சிகள் எனப் பல இணைக்கப்பட்டுள்ளன. இவை அறிமுகப்படுத்தப்படும் சொற்களின் பொருளை நன்கு புரிந்துகொள்ளவும், அவற்றைச் சரியாக உச்சரித்துப் படிக்கவும், சூழலுக்குப் பொருத்தமான உரையாடலைப் பேச்சுத் தமிழில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும் மாணவர்களுக்குத் துணைபுரியும். எழுத்துகளையும் சொற்களையும் வரிவடிவம் சிதையாமல் முறையாக எழுதக் கற்றுக்கொள்ள உதவும் வகையில் கையெழுத்துப் புத்தகத்தில் பயிற்சிகளும், 'தேன்தமிழ்' இணையப் பக்கத்தில் மின்னியல் எழுத்துப் பலகையும் (Doodle board) கொடுக்கப்பட்டுள்ளன. எழுத்துகளை முறையாக எழுதிப் பழகவும் எழுத்துகளையும் அவற்றைக் கொண்டமைந்த சொற்களையும் சரியாக உச்சரித்துப் பழகவும் மின்னியல் எழுத்துப்பலகை உதவும். மேலும், எழுத்துகள் வரிவடிவிலும் ஒலிவடிவிலும் ஏற்கும் மாற்றங்களை மாணவர்கள் புரிந்துகொள்ளும்படி நன்றாக விளக்கிக் கற்பிப்பதற்கான படிநிலைகள் விளக்கமாகப் பயிற்று வளங்களில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

பாடநூலில் மரபுவழி வந்த கதைகளும் பாடல்களும் கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் இக்கதைகளையும் பாடல்களையும் காட்சிகளாகக் கண்டு மகிழ இவை அனைத்தும் அசைவுப்படக் காட்சிகளாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. கதைகளைக் கற்பிக்கும்போது மாணவர்களுக்குக் கதை உணர்த்தும் விழுமியங்களைக் கற்றுக்கொடுக்கவும் மரபுச் செய்திகளைக் கூறவும் ஆசிரியர் கையேட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், மாணவர்களுடைய வாழ்க்கைக்குத் தேவைப்படும் 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களான நுண்ணாய்வுச் சிந்தனையையும் புத்தாக்கச் சிந்தனையையும் வளர்க்க உதவும் வகையில் கதைகளின் இடையிடையே கேள்விகள் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றையொட்டிய கலந்துரையாடலில் ஈடுபடும்போது மாணவர்களை இருவழிக் கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபடுத்துவதற்கான படிநிலைகளும் ஆசிரியர் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் வெறுமனே கருத்துகளைக் கூறாது, பிறர் கூறும் கருத்துகளையொட்டிக் கேள்விகள் கேட்கவும் அவற்றுக்கு மாற்றுக் கருத்து கூறவும் அறிந்துகொள்ளும் வகையில் பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பயிற்சி நூலில் மாணவர்கள் கற்றுக் கொண்ட எழுத்துகள், சொற்கள், சொற்றொடர்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் கற்றுக் கொண்டவற்றில் எந்த அளவு தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பதைக் கண்டறிவதற்குப் பயிற்சி நூலில் இடம்பெற்றுள்ள பயிற்சிகள் துணைபுரியும். மாணவர்கள் தமிழ்மொழியின் சிறப்பைப் போற்றவும் தமிழை ரசித்துப் படிக்கவும் பல்வேறுபட்ட பயிற்சிகள் இணைக்கப்பட்டுள்ளன.

- மாணவி மஹாஸ்ரீ. செயிண்ட் அந்தோணி தொடக்கப்பள்ளி

''பாடப்புத்தகத்தில் நிறைய மரபுக்கதைகள் இருக்கின்றன. அவை நமக்கும் தெரிந்தவை என்பதால் நம் பிள்ளைகளுக்கு எளிதாகச் சொல்லிக் கொடுக்க முடிகிறது. கதைகள்மூலம் நல்ல விழுமியங்களைச் சொல்லித்தரவும் முடிகிறது.''

-பெற்றோர் திருமதி வள்ளிக்கண்ணு







முடிவுரை

'வல்லமை முழுவதும் உன் உள்ளத்தில் அடங்கியுள்ளது. எதையும் உன்னால் செய்ய முடியும்.'

- விவேகானந்தர்

'நற்பண்பு இல்லாதவனின் அறிவு ஆபத்தானது! அறிவில்லாதவனின் நற்பண்பு பயனற்றது!'

- ஜவஹர்லால் நேரு

நாட்டு மக்களே சிங்கப்பூரின் எதிர்காலம். அவர்கள் அறிவாற்றல், நற்பண்பு, தன்னம்பிக்கை, வல்லமை எனப் பல நற்பண்புகளைப் பெற்றவர்களாகத் திகழ வேண்டும். அதற்கு நல்ல கல்விமுறை அவசியமாகிறது. இதனை நிலைப்படுத்த சிங்கப்பூர் அரசு பல முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. மேலும் பல்லின மக்கள் வாழும் சிங்கப்பூரில் தாய்மொழிக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. ஒவ்வொருவரும் அவரவர் தாய்மொழியைக் கற்றுத் தங்கள் அடையாளத்தையும் மொழியின் தனித்துவத்தையும் கட்டிக் காக்க வேண்டும் எனப் பலமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றில் முக்கிய இடம் பெறுபவை தாய்மொழிப் பாடக்கலைத் திட்டமும் பயிற்று வளங்களும், மாணவர்கள் புதிய பரிமாணங்களை நோக்கிப் பயணிக்க வழிவகுக்கும் வண்ணம் பாடக்கலைத் திட்டமும் பயிற்று வளங்களும் கற்பித்தல் முறைகளும் தொடர்ந்து மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுப் புதிய பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டு அமலாக்கம் கண்டு வருகின்றன. சிங்கப்பூர் மாணவர்கள் தாய்மொழியை ஆர்வத்துடன் கற்றுத் திறம்படப் பயன்படுத்த வீடு, பள்ளி, சமூகம் ஆகியவற்றின் கூட்டுமுயற்சி புதிய பரிமாணங்களை நோக்கித் தொடரும். சுருங்கக் கூறின் நாட்டுருவாக்கத்திற்குத் தேவையான நற்குடிமக்களாக மாணவர்களைப் பண்படுத்தி உலகளாவிய நிலையில் நாட்டை வழிநடத்திச் செல்லக்கூடிய திறனாளர்களை உருவாக்கும் கருவூலங்களாகச் சிங்கப்பூர்ப் பள்ளிகள் திகழ்கின்றன.

தொடர்பு நூல்கள்

பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, கல்வி அமைச்சு. (2005) தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறு ஆய்வுக் குழு அறிக்கை

பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, கல்வி அமைச்சு. (2008) தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2008 - தொடக்கநிலை

பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, கல்வி அமைச்சு. (2010) தமிழ்மொழிகளுக்கான மறு ஆய்வுக் குழு அறிக்கை

பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, கல்வி அமைச்சு. (2015) தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2015 - தொடக்கநிலை

பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, கல்வி அமைச்சு, (2015) தேன் தமிழ் (1A, 1B) பாடநூல், பயிற்சிநூல், ஆசிரியர் கையேடு - தொடக்கப் பள்ளிகளுக்கான தமிழ்ப் பாடநூல் வரிசை

பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, கல்வி அமைச்சு (2015). தேன் தமிழ் பெற்றோர் கையேடு



23. இளம் மாணவர்களைப் பேணி வளர்ப்போம்

திருமதி. சிலம்பாயி முத்துசாமி, மூத்த பாடத்திட்டச் சிறப்பு அதிகாரி,கல்வி அமைச்சு,சிங்கப்பூர்
திருமதி. புவ்பலதா சரவணன், மூத்த பாடத்திட்ட வரைவு அதிகாரி,கல்வி அமைச்சு சிங்கப்பூர்
திருமதி. நந்தினி இளங்கோவன், பாடத்திட்ட வள மேம்பாட்டு அதிகாரி, கல்வி அமைச்சு சிங்கப்பூர்

முன்னுரை

பல்லினச் சமுதாயமாக விளங்கும் சிங்கப்பூரில் இருமொழிக் கல்விக் கொள்கை என்பது சிங்கப்பூர்க் கல்விமுறையின் முக்கியக் கூறாக விளங்குகிறது. இன்றைய உலகமயச் சூழலில் உலக நாடுகளோடு பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ள ஆங்கில மொழி நம் பிள்ளைகளுக்கு இன்றியமையாத் தேவையாக இருக்கிறது. அதே வேளையில் இளம் சிங்கப்பூரர்கள் தம் மரபையும் பண்பாட்டையும் அறிந்து கொள்ளவும் கட்டிக் காக்கவும் தாய்மொழி அறிவு அவசியமாகிறது. எனவே, பாலர் பள்ளி நிலையிலேயே பிள்ளைகள் ஆங்கிலத்தையும் தத்தம் தாய்மொழியையும் கற்றறிவது அவசியமாகிறது. இருமொழி ஆற்றலோடு மாணவர்களின் அறிவாற்றல், பண்புநலன் முதலியவற்றிலும் வலுவான அடித்தளத்தை அமைத்துத் தருவது பிள்ளைகளின் கல்விப் பயணத்தை வளப்படுத்தும்.

சிங்கப்பூரில் பாலர் பள்ளிகள்

சிங்கப்பூர்ப் பாலர் பள்ளிகள் மூன்றாண்டு கல்வியை வழங்குகின்றன. நான்கு வயது முதல் ஆறு வயது பிள்ளைகளுக்கெனப் பாலர் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. பிள்ளைகள் பிறருடன் பழகிச் சமூகப் பண்புகளை வளர்த்துக் கொள்ளவும் கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபடவும் முறையான கல்விக்குத் தயாராகவும் பாலர் பள்ளிச் சூழல் வழிவகுக்கிறது. சமூக அமைப்புகள், சமய அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் முதலியவை பாலர் பள்ளிகளை நடத்தி வருகின்றன. இவ்வமைப்புகளின் நிர்வாகத்தினர் தங்கள் மாணவர்களின் தேவைகளுக்கேற்பத் தங்கள் பாடக்கலைத் திட்டத்தை வடிவமைத்துள்ளனர். இதனைக் கருத்திற்கொண்டு 2012-ஆம் ஆண்டு முறைப்படுத்தப்பட்ட பாலர் கல்வியை உருவாக்கும் திட்டத்தில் சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு ஈடுபட்டது.

கல்வி அமைச்சின் பாலர் பள்ளிப் பாடக்கலைத் திட்டம்

இளம் பிள்ளைகளின் ஆரம்ப கால ஆண்டுகள் அவர்களின் மொழி வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க காலகட்டம் என ஆய்வு காட்டுகிறது - இளவயதில்தான் பிள்ளைகளால் வெகு சுலபமாக ஒரு மொழியைக் கற்றுக் கொள்ள முடிகிறது. எனவே, சிங்கப்பூரில் பாலர் பள்ளிக் கல்வியின் தரத்தை உயர்த்தும் தொடர் முயற்சிகளின் ஒரு பகுதியாகத் தாய்மொழிகளுக்கான இளம் மாணவர்களைப் பேணி வளர்க்கும் பணிச்சட்டத்தைக் கல்வி

அமைச்சு உருவாக்கியது. இது குறிப்பாகத் தாய்மொழி (மலாய்/சீனம்/தமிழ்) கற்றல் கற்பித்தலை மேம்படுத்த உதவியது.

இந்தப் பணிச்சட்டம் (காண்க : படம் 1) தாய்மொழி கற்றலில் இளம் மாணவர்கள் ஆர்வத்தோடு ஈடுபட்டுச் செயல்திறன்மிக்கவர்களாக விளங்குவார்கள் என்னும் நம்பிக்கையின் அடிப்படையில் இயங்குகிறது. இதைக் கருத்திற்கொண்டு பணிச்சட்டத்தின் தொலைநோக்கு, நோக்கங்கள், கற்றல் குறிக்கோள்கள் ஆகியவை வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அமையப் பெற்ற தொலைநோக்கு, தாய்மொழிக் கற்றல் கற்பித்தலின் நோக்கங்களை வடிவமைக்கவும் செயற்படுத்தவும் வழிகாட்டி உதவும். நோக்கங்களும் வழிகாட்டும் கோட்பாடுகளும் ஆசிரியர்கள் தங்களது வகுப்பறைக் கற்பித்தலைத் திட்டமிட உதவும். வழிகாட்டும் கோட்பாடுகளின் அடிப்படையில் வகுப்பறைக் கற்பித்தலை மேற்கொள்ளும்போது கற்றல் குறிக்கோள்களையும் ஆசிரியர்கள் கருத்திற்கொள்ள வேண்டும்.

இந்தப் பணிச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு கல்வி அமைச்சு பாலர் பள்ளிகளுக்கெனத் தாய்மொழிப் பாடக்கலைத் திட்டத்தை உருவாக்கி அதைக் கல்வி அமைச்சின் பாலர் பள்ளிகளில் சோதனை செய்து மேம்படுத்தியது. மேம்படுத்தப்பட்ட பாடக்கலைத் திட்டம் இரண்டு கட்டங்களாக அமலாக்கம் காண்கிறது (காண்க: அட்டவணை 1).



ஆண்டு	பாலர் பள்ளி முதலாம் ஆண்டு	பாலர் பள்ளி இரண்டாம் ஆண்டு
2014	முன்னோட்டச் சோதனை	
2015	முன்னோட்டச் சோதனை	முன்னோட்டச் சோதனை
2016	அமலாக்கம்	முன்னோட்டச் சோதனை
2017		அமலாக்கம்

அட்டவணை 1

கல்வி அமைச்சின் 'விண்மீன்கள்' பாடத்தொகுப்பு

சிங்கப்பூரில், வீட்டு மொழிச் சூழல் வெகு விரைவாக மாறி வருகிறது. பெரும்பாலான பிள்ளைகள் வீட்டில் ஆங்கிலத்திலேயே அதிகம் பேசுகிறார்கள். இவர்களின் தாய்மொழிக் கற்றலை வளமாக்கி, வாழ்நாள் முழுமையும் தாய்மொழியின்பால் ஆர்வங்கொள்ளச் செய்வதே தாய்மொழிகளுக்கான பணிச்சட்டத்தின் நோக்கமாகும். இந்தப் பணிச்சட்டத்தையொட்டித் தமிழ்மொழிக்கென்று 'விண்மீன்கள்' என்னும் பாடத்தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பில் பெரிய புத்தகங்கள், சிறுவர் கதைநூல்கள், பாடக்குறிப்புகள், வண்ணப்பட அட்டைகள், சொல்லட்டைகள், எழுத்தட்டைகள், பாடல்கள், மொழி விளையாட்டுகள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

பெரிய புத்தகங்கள், சிறுவர் கதைநூல்கள்

கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், பேச்சுவழிக் கருத்துப் பரிமாற்றம் ஆகிய மொழித்திறன்கள் பெரிய புத்தகங்கள், சிறுவர் கதைநூல்கள் ஆகியவற்றின் மூலம் வளர்க்கப்படுகின்றன. பெரிய புத்தகங்களிலும் சிறுவர் கதை நூல்களிலும் வண்ணப் படங்களும் அவற்றுக்குப் பொருத்தமான எளிய தொடர்களும் இருப்பதால் அவற்றை எடுத்துப் படிக்க வேண்டும் என்னும் ஆர்வம் மாணவர்களுக்கு இயல்பாக ஏற்படும்.

ஒவ்வொரு தவணைக்கும் 4 பெரிய புத்தகங்களும் 8 சிறுவர் கதைநூல்களும் என 12 கதைப் புத்தகங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சித்திரிக்கப்பட்ட கதைகள் சிங்கப்பூர்ச் சூழலில் மாணவர்களின் அனுபவத்திற்குட்பட்ட நிலையில் எழுதப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பெரிய புத்தகத்தையும் பயன்படுத்தி 'ஆசிரியர் துணைகொண்ட வாசிப்பு' நடத்தப்படுகிறது. 'ஆசிரியர் துணைகொண்ட வாசிப்பு' இரண்டு நிலைகளைக் கொண்டது. முதல் நிலையில், மாணவர்கள் பெரிய புத்தகத்திலுள்ள கதையைக் கேட்டுப் புரிந்துகொண்டு மகிழ்வதற்காக வாசிப்பு நிகழ்த்தப்படும். இரண்டாவது நிலையில், மாணவர்கள் முறைப்படுத்தப்பட்ட மொழி கற்பித்தலின் வழிச் சொல்வளப் பெருக்கம், பாத்திரமேற்று நடித்தல், எழுத்து அறிமுகம் முதலியவற்றில் மேம்பாடு காண, படித்தல் நிகழ்த்தப்படுகிறது.

அட்டவணை 1-இல் ஆசிரியர் துணைகொண்ட வாசிப்பின் படிநிலை விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றை மேற்கொள்வதற்கு முன்னர் ஆசிரியர் பெரிய புத்தகங்களையும் சிறுவர் கதைநூல்களையும் படித்துப் புரிந்துகொள்ள வேண்டும். அதன் பின்னரே இந்தப் படிநிலைகளைப் பின்பற்ற வேண்டும்.

அட்டவணை 1

பெரிய புத்தகத்தைக் கற்பிக்கும் முறை

	ஆசிரியர் துணைகொண்ட வாசிப்பு 1 (புரிந்துணர்வும் மகிழ்வுணர்வும்)
ஆயத்த நடவடிக்கை	கருப்பொருளுக்குத் தொடர்புடைய பாடலை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி அவர்களுடன் பாடவும் அல்லது மாணவர்கள் ஏற்கனவே படித்த பெரிய புத்தகங்களுள் அவர்களுக்குப் பிடித்த ஒன்றை மீண்டும் படிக்கவும்.
புதிய புத்தகத்தை அறிமுகம் செய்தல்	பெரிய புத்தகத்தின் முன் அட்டையைக் காண்பிக்காமல் அதிலுள்ளவற்றை மாணவர்களின் முன்னறிவுடன் தொடர்புபடுத்திக் கலந்துரையாடவும் பிறகு, பெரிய புத்தகத்தின் முன் அட்டையைக் காண்பித்துக் கதையின் தலைப்பு, எழுதியவரின் பெயர், ஓவியரின் பெயர் ஆகியவற்றைப் படிக்கவும். கதையின் தலைப்பையும் முன் அட்டையிலுள்ள படத்தையும் தொடர்புபடுத்திக் கேள்விகள் கேட்கவும் அல்லது கதையை முன்னுரைக்கச் சொல்லவும்.
முதல் வாசிப்பு	முதல் பக்கத்திலுள்ள படத்தைக் காட்டிக் கேள்விகள் கேட்டுக் கலந்துரையாடவும். பிறகு, அந்தப் பக்கத்திலுள்ள தொடர்களை உரக்கப் படிக்கவும். இவ்வாறே, ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள படத்தைக் காட்டிக் கேள்விகள் கேட்டுக் கலந்துரையாடவும். பிறகு, அந்தந்தப் பக்கத்தில் உள்ள தொடர்களை உரக்கப் படிக்கவும். வாசிக்கும்போது சுட்டியால் ஒவ்வொரு சொல்லையும் தனித்தனியாகச் சுட்டிக் காட்டாமல் சுட்டியைத் தொடர்ந்து நகர்த்திச் செல்லவும். ஒவ்வொரு பக்கத்திற்கும் செல்வதற்கு முன்னர்க் கேள்விகள் கேட்டுக் கதையின் அடுத்த நிலையை முன்னுரைக்கச் சொல்லவும்

	(தேவையேற்பட்டால் அப்பக்கங்களை வெள்ளைத்தாளால் மறைத்து வைத்துக் கொள்ளவும்).பெரிய புத்தகத்தின் கதையைக் குறுக்கீடின்றித் தொடர்ச்சியாகச் சுட்டியை நகர்த்திப் படித்து முடிக்கவும்.
இரண்டாம் வாசிப்பு	கதையைப் படிக்கும்போது குரல் ஏற்ற இறக்கத்தோடும் உயிரோட்டத்துடனும் படிக்கவும். ஆசிரியருடன் இணைந்து படிக்க மாணவர்களை ஊக்குவிக்கவும்.கதையை வாசித்து முடித்தபின் மாணவர்களைக் கதையைப் பற்றிப் பேச ஊக்குவிக்க வேண்டும் அல்லது அவர்களைப் பெரிய புத்தகத்திலுள்ள நிகழ்வுகளுடன் தங்கள் வாழ்க்கை அனுபவங்களைத் தொடர்புபடுத்திச் சொல்ல ஊக்குவிக்கவும்.

	ஆசிரியர் துணைகொண்ட வாசிப்பு 2 **(முறைப்படுத்தப்பட்ட மொழி கற்பித்தல்)**
ஆயத்த நடவடிக்கை	கருப்பொருளுக்குத் தொடர்புடைய பாடலை மாணவர்களுக்கு அறிமுகப் படுத்தி அவர்களுடன் பாடவும் அல்லது மாணவர்கள் ஏற்கனவே படித்த பெரிய புத்தகங்களுள் அவர்களுக்குப் பிடித்த ஒன்றை மீண்டும் படிக்கவும்.
அறிமுகம் செய்த	கதையை நினைவுகூர்ந்து சொல்ல மாணவர்களை ஊக்கப்படுத்தவும். பெரிய புத்தகத்தின் கதையை வாசிப்பதற்கு முன் அன்றைய வாசிப்பின் புதிய புத்தகத்தை நோக்கத்தை மாணவர்களிடம் சொல்லவும் (எ-டு: கதை வாசிக்கப்படும்போது மீண்டும் வாசித்தல் இக்கதையில் மிருகங்கள் எங்கெல்லாம் ஒளிந்து கொள்கின்றன என்பதைக் கவனமாகக் கேட்டுச் செல்லுங்கள்). கதையைக் குரலில் ஏற்ற இறக்கத்தோடு உயிரோட்டமாகப் படிக்கவும். ஆசிரியரைப் பின்தொடர்ந்து அல்லது இணைந்து படிக்குமாறு மாணவர்களிடம் சொல்லவும்.
தொடர் நடவடிக்கைகள்	சொல்வளப் பெருக்கம் பாத்திரமேற்று நடித்தல் எழுத்து அறிமுகம்

சிறுவர் கதைநூல்வழிப் பாடத்தை நடத்தும் ஆசிரியர், அக்கதையைப் பேச்சுத் தமிழில் பாவனையுடன் உயிரோட்டமாகச் சொல்வார். இதன் வாயிலாக மாணவர்களின் கவனத்தையும் கருத்தையும் கவர முடியும். மேலும், மாணவர்களுக்குக் கதைகளை ஆர்வமூட்டும் வகையில் கூறுவதன் மூலம் வாசிப்புப் பழக்கம், வாழ்க்கைக்குத் தேவையான விழுமியங்கள், பண்பாடு முதலியவற்றையும் வளர்க்க முடியும்.

பாடக்குறிப்புகள்

மாணவர்கள் அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல் திறன்களில் தகுந்த தேர்ச்சியினையும் படித்தல், எழுதுதல் திறன்களில் ஆயத்த நிலையினையும் பெறும் நோக்கில் பாடக்குறிப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், அர்த்தமுள்ள விளையாட்டுகள், கற்றல் நிலையங்கள், குடும்ப உறுப்பினருடன் சேர்ந்து செய்யும் நடவடிக்கைகள் முதலியவையும் பாடக்குறிப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளன. இவை தமிழ்மொழி கற்றலில் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டி வலுவான அடித்தளத்தை அமைத்துத் தருவதற்கென உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், பேச்சுவழிக் கருத்துப் பரிமாற்றம் நிகழும்வண்ணம் நடவடிக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திறன் மாணவர்கள் இயல்பான வாழ்க்கைச் சூழல்களில் பயன்முனைப்புமிக்க வகையில் தமிழ்மொழியைப் பயன்படுத்த உதவுகிறது.

ஒவ்வொரு பாடத்தையும் பத்து நாள்களுக்குள் நடத்தும் வகையில் பாடக்குறிப்புகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்கள், பாட நடவடிக்கைகளை முன் மாதிரியாகச் செய்து காட்டுவதன் வாயிலாகவும் மாணவர்களுடன் இணைந்து செய்வதன் வாயிலாகவும் ஒவ்வொரு பாடத்தையும் ஆக்கப்பூர்வமாகக் கற்பிக்க முடிகிறது.

கேட்டல், பேசுதல்

மாணவர்களின் கேட்டல், பேசுதல் திறன்களை வளர்ப்பதற்கு உதவும் வகையில் பாடல்களைக் கேட்டுப் பாடுதல், கதைகளைக் கேட்டுக் கலந்துரையாடுதல், படம் பார்த்துப் பேசுதல் முதலிய நடவடிக்கைகள் பாடக்குறிப்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. படத்தை அல்லது பொருளைக் காட்டிப் பேசுதல் என்னும் நடவடிக்கையும் மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் பேசுவதற்குத் துணைபுரிகிறது. இந்நடவடிக்கைகளின் வாயிலாகக் கேள்வி கேட்கவும் அதற்கேற்பப் பதிலளிக்கவும் மாணவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இவை பேச்சுவழிக் கருத்துப் பரிமாற்றத்திற்கும் வழிவகுக்கின்றன. பேசுதல், கதை சொல்லுதல் முதலான நடவடிக்கைகளைப் பேச்சுத் தமிழில் மேற்கொள்வது பிள்ளைகளுக்கு இயல்பான பேச்சுச் சூழலை உருவாக்கித் தருகிறது.

படித்தல்

பெரிய புத்தகங்கள், சிறுவர் கதை நூல்கள் ஆகியவற்றிலுள்ள கதைகளை ஆசிரியரின் துணையோடு வாய்விட்டுப் படிக்கும்போது மாணவர்கள் சொற்களைச் சரியாக ஒலிக்கக் கற்றுக் கொள்வதோடு மற்றவர்களுடன் உரையாடுவதற்கும் அவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

எழுதுதல்

மாணவர்கள் முறையாக எழுதத் தொடங்குவதற்கு முன்னர், தசைநார் இயக்கப் பயிற்சிகளில் ஈடுபடுகின்றனர். இப்பயிற்சிகள் மாணவர்களை எழுதுவதற்கு ஆயத்தப்படுத்துகின்றன. வட்டமிடுதல், புள்ளிகளை இணைத்தல், வலஞ்சுழித்தல், நேரான கோடு வரைதல் முதலான பயிற்சிகள் தமிழ் எழுத்துகளை முறையாகவும் சரியான வடிவிலும் எழுதத் துணைபுரிகின்றன.

கற்றல் நிலையங்கள்

மாணவர்கள் ஆர்வத்துடனும் சுயமுனைப்புடனும் கற்பதற்குக் கற்றல் நிலையங்கள் வழிவகுக்கின்றன. வகுப்பறையில் பொருத்தமான கற்றல் நிலையங்களை அமைப்பதன் வாயிலாக மாணவர்கள் தாங்கள் கற்றவற்றைச் செயற்படுத்திப் பார்க்க முடிகிறது. ஆசிரியர்கள் வகுப்பறையில் இரண்டு முதல் நான்கு கற்றல் நிலையங்களை அமைத்துக் கொள்ளலாம். மாணவர்கள் கற்றல் நிலைய நடவடிக்கைகளுக்கேற்பத் தனிநிலையிலோ இணைநிலையிலோ குழுவாகவோ செயற்படுவார்கள். மாணவர்களை எல்லாக் கற்றல் நிலையங்களுக்கும் சென்று அங்குள்ள நடவடிக்கைகளில் ஈடுபட ஊக்குவிக்க வேண்டும்.

குடும்ப உறுப்பினருடன் சேர்ந்து செய்யும் நடவடிக்கைகள்

மாணவர்களின் கற்றலில் குடும்பத்தினரும் பங்கெடுக்க வேண்டும் என்னும் நோக்கில் குடும்ப உறுப்பினருடன் சேர்ந்து செய்யும் நடவடிக்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் இந்த நடவடிக்கைகளில் ஈடுபடும்போது குடும்ப உறுப்பினருடன் பேச்சுத் தமிழில் உரையாடும் வாய்ப்பு அதிகரிக்கிறது; குடும்ப உறவு வலுப்படுகிறது. மாணவர்கள் பள்ளியில் என்ன கற்கிறார்கள் என்பதைக் குடும்ப உறுப்பினர்களும் அறிந்துகொள்ள முடிகிறது.

வளமூட்டும் நடவடிக்கைகள்

மாணவர்களின் கற்றலை விரிவுபடுத்தும் நோக்கத்தில் வளமூட்டும் நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் மாணவர்களின் தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்ப இந்த நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் அணுகுமுறைகள்

மாணவர்கள் ஒத்த வயதுடையவர்களாக இருப்பினும், அவர்களின் அறிவாற்றல், திறன், தயார்நிலை முதலியவற்றில் வேறுபாடுகள் இருக்கின்றன. ஆகவே, ஆசிரியர்கள் அவர்களின் தேவைக்கேற்பப் பாடப்பொருள், செயற்பாடு, வெளிப்பாடு ஆகியவற்றில் வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் அணுகுமுறையைப் பின்பற்றி வகுப்பறைக் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

மொழி விளையாட்டுகள்

பிள்ளைகளுக்கு விளையாட்டில் மிகுந்த ஆர்வம் உண்டு. தெளிவான கற்றல் குறிக்கோள்களைக் கொண்டு பிள்ளைகளுடன் இருவழிக் கருத்துப் பரிமாற்ற நடவடிக்கையில் ஈடுபடும்போது அது அர்த்தமுள்ள விளையாட்டாகிறது. விளையாட்டின் வழிக் கற்கும்போது பிள்ளைகளின் தன்னம்பிக்கையும், பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் திறனும் உருவாகும். மேலும், பிள்ளைகளின் கற்றல் மகிழ்ச்சிமிக்கதாக அமையும்.

அதிசய வாரம்

அதிசய வாரம் என்பது ஒரு தவணையில் இரண்டு வாரங்களுக்கு நடத்தப்படும் நடவடிக்கையாகும். இது பிள்ளைகள் விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் தாமே தேர்ந்தெடுத்த ஒரு தலைப்பையொட்டி ஆழமாக அறிந்துகொள்ளும் வகையில் அமையக் கூடியதாகும். பிள்ளைகள் தங்களுக்கு எழும் வினாக்களுக்கு விடை கண்டறிய அதிசய வார நடவடிக்கைகள் வாய்ப்பளிக்கின்றன. ஆராய்தல், சுயமுனைப்பு, பிரச்சனைக்குத் தீர்வு காணுதல் ஆகியவற்றின் வழி மாணவர்களின் சுய கற்றல் அனுபவங்கள் மகிழ்ச்சிமிக்கதாக அமைகின்றன. இவை மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்க உதவுகின்றன.

முடிவுரை

மாணவர்களுக்குப் போதுமான ஆதரவும் ஊக்கமும் கிடைத்தால், அவர்களால் தமிழ்மொழியைக் கற்கவும் தன்னம்பிக்கையுடன் பயன்படுத்தவும் முடியும். இதனாலேயே, சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு பாலர் பள்ளிகளுக்கென இளம் மாணவர்களைப் பேணி வளர்க்கும் பணிச்சட்டம், ஆசிரியர்க்குரிய வழிகாட்டி, பயிற்று வளங்கள் ஆகியவற்றை உருவாக்கியிருக்கிறது. பாலர் பள்ளிகளில் இரண்டு ஆண்டுகள் பயிலும் இளம் மாணவர்கள் ஈடுபாட்டுடன் கற்கும் மாணவர்களாகத் திகழ்ந்து தாய்மொழியை விருப்பத்துடன் பயன்படுத்தி, தன்னம்பிக்கையுடன் கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபட்டு நம் பல்லினப் பண்பாட்டைப் போற்றி மதிக்கும் மாணவர்களாக உருவாவார்கள் என்பதில் எந்த ஐயமுமில்லை.

மேற்கோள் சான்றாதாரங்கள்

கல்வி அமைச்சு. (2014). இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல், சிங்கப்பூர்ப் பாலர் பள்ளிகளுக்கான பாடக்கலைத் திட்டம், தாய்மொழிகளுக்கான பணிச்சட்டம், சிங்கப்பூர்.

கல்வி அமைச்சு. (2015). இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல், சிங்கப்பூர்ப் பாலர் பள்ளிகளுக்கான பாடக்கலைத் திட்டம், கல்வியாளர்க்குரிய வழிகாட்டி, சிங்கப்பூர்.

கல்வி அமைச்சு. (2015). பாலர் பள்ளிகளுக்குரிய பாடத்தொகுப்பு, சிங்கப்பூர்.

24. ஆக்ககரமான கற்றலுக்கு வித்திடும் பல்வேறு பாட வடிவங்கள் அல்லது அணுகுமுறைகள்

மன்னர் மன்னன் மருதை, மலாயாப் பல்கலைக்கழகம்

முன்னுரை

இன்றைய கல்வியுலகில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த மாற்றங்களுக்கேற்ப தமிழ்மொழி கற்றலிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டியது அவசியமாகும். மாற்றம் ஏற்பட வேண்டுமென்பதற்காக வழிவழியாகப் பயன்படுத்தப்பட்டுவரும் முறைகளை முற்றாக நிராகரித்தல் முறையாகா. அவற்றில் சிறந்த முறைகளை மெருகூட்டிப் பயன்படுத்தல் நன்மை பயக்கும். அவ்வகையில் ஆசிரியர் தான் கையாண்டு வெற்றிகண்ட பட்டறிவினைப் பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கற்றலில் பல்வேறு பாட வடிவங்களைப் பயன்படுத்துவது கற்றல் ஆக்ககரமாக நடைபெற வித்திடும். ஒரே மாதிரியான பாட வடிவத்தைப் பயன்படுத்துவது மாணவர்களுக்குக் கற்றலில் சலிப்பை ஏற்படுத்தும். முப்பதுக்கும் மேற்பட்ட பாடவடிவங்கள் உள்ளன. ஒரு சில மாதிரிப் பாட வடிவங்களுக்கான எடுத்துக்காட்டுகளையும் கற்றல் நடவடிக்கைகளையும் இக்கட்டுரை ஆராய்கின்றது. கவிதை/பாடல் வடிவத்தை எங்ஙனம் பரவலாகப் பயன்படுத்திப் பல்வேறு நடவடிக்கைகளின்வழிக் கற்றலை மகிழ்வுடனும் ஆக்ககரமாகவும் நடத்தலாம் என்பதையும் இக்கட்டுரை விவரிக்கின்றது.

கற்றல் நெறிகள்

கற்றலை மகிழ்வுடனும் ஆக்ககரமாகவும் நடத்தவேண்டும் என்பதற்காக அடிப்படைக் கற்றல் நெறிகளிலிருந்து விலகிச் செல்லலாகாது. பின்வரும் அடிப்படைக் கற்றல் நெறிகள் மாணவர்கள் கற்றலை முறையாகவும் முழுமையாகவும் மேற்கொள்ளத் துணைபுரியும் :

எளிமையிலிருந்து அருமைக்குச் செல்லுதல்

தெரிந்ததிலிருந்து தெரியாதவற்றுக்குச் செல்லுதல்

முழுமையிலிருந்து பகுதிக்குச் செல்லுதல்

காட்சி நிலையிலிருந்து கருத்து நிலைக்குச் செல்லுதல்

பொதுவிலிருந்து சிறப்பிற்குச் செல்லல்

பருமையிலிருந்து நுண்மைக்குச் செல்லல்

தொடர்ந்து சில மாதிரி பாட வடிவங்களைக் காண்போம்.

1. பொன்மொழிகள்

- ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல, விழுந்தபோதெல்லாம் எழுந்தான் என்பதுதான் பெருமை
- மணிக்கணக்கில் உபதேசம் செய்வதைவிட, ஒரு கணப்பொழுதாயினும் உதவி செய்வது மேல்.
- பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது. பணம் இல்லாவிட்டால் யாருக்கும் உன்னைத் தெரியாது.
- வாழ்க்கை ஒருமுறை, அதை மற்றவர்களுக்காகவும் வாழ்ந்து காட்டப் பழகிக் கொள்ள வேண்டும்.
- நீ எப்போது யாருமற்ற ஏழை, எளியவர்களுக்கு உதவுகிறாயோ, அப்போது ஆண்டவன் உன்னிடம் 'கடன்காரன்' ஆகிறான்.

2. துணுக்குகள்

1. கெட்டுப்போகாத உணவுப் பொருள் தேன்.
2. நத்தை தொடர்ந்து மூன்று வருடங்கள் தூங்கும்.
3. பட்டாம்பூச்சிகள் தங்கள் பாதங்களினால் சுவைக்கின்றன.
4. கிளியும் முயலும் தங்கள் பின்னால் இருப்பதைத் தலையைத் திருப்பாமல் காண முடியும்.
5. நீர் யானை மனிதனைவிட மிகப்பெரியது. ஆனால் அது மனிதனைவிட வேகமாக ஓடும்.
6. கண் இமைகளில் மனிதனுக்கு 550 முடி இருக்கின்றது.
7. வயிறு நிறைய உண்ட பிறகு, சற்றுநேரம் கேட்கும் திறன் குறையுமாம்.
8. வாத்தின் குவாக் குவாக் சத்தத்தைக் கேட்டிருக்கின்றீர்கள் அல்லவா? அதன் ஒலி மட்டும் எதிரொலிப்பதே இல்லை. இதுவரை ஏன் என்று தெரியவில்லை.
9. மாடுகளை மாடிப்படிகள் ஏற வைக்கலாம். இறங்க வைக்க முடியாது.
10. மனிதனின் மூக்கும் காதும் வளர்ந்து கொண்டே போகும், ஆனால் கண்கள் வளராது.

ஹைக்கூ கவிதைகள்

நிலாக்குழந்தை வாரி இரைத்த சோற்றின் சிதறல்களோ நட்சத்திரங்கள்.	கண்ணகி கோபத்தில் உடைத்த காற்சிலம்பின் முத்துப் பரல்களோ நட்சத்திரங்கள்.
அசோக சக்கரவர்த்தி நட்டுவைத்த மரங்கள் உதிர்த்த வண்ணப்பூக்களோ நட்சத்திரங்கள்.	மூதாதையர்களின் முடிந்து போன வாழ்க்கையின் மேல்வீட்டுத் தெரு விளக்கோ நட்சத்திரங்கள்

4. கேலிச்சித்திரம்

ஈழத்தமிழர்களுக்கு விடிவுகாலம் பிறக்குமா?

5. விடுகதைகள் என்பது வெறும் விளையாட்டல்ல... நமது சிந்தனைக்கு ஒரு பயிற்சியும் ஆகும்



ஐ.நா. அறிக்கை

1. இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல. - அதுஎன்ன?

2. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது - அது என்ன?

3. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம் - அது என்ன?

4. ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஆரவாரம் இராது - அவர்கள் யார்?

5. உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம் - நான் யார்?

விடைகள் :

1. சைக்கிள், 2. பட்டாசு, 3. தராசு, 4. எறும்புக் கூட்டம், 5. அஞ்சல் பெட்டி

6. அ.அழைப்பிதழ்

6. ஆ.அழைப்பிதழ்



7. அ.நகைச்சுவை



மனநிலை சரியில்லாத இளைஞன் ஒருவன், தெருவோரம் இருந்த பெரிய கிணற்றின் கைப்பிடிச் சுவரின் மீது உட்கார்ந்து கொண்டிருந்தான். கிணறு பாழடைந்த, ஆழமான கிணறு, உட்கார்ந்து கொண்டிருந்தவன் சும்மா இல்லாமல், ''இருபத்தெட்டு..... இருபத்தெட்டு..... இருபத்தெட்டு..... என்று கத்திக் கொண்டிருந்தான்.

இளைஞன் வாட்டசாட்டமாக இருப்பான். பார்வைக்கு பைத்தியக்காரன் போலத் தெரியமாட்டான். அந்தப் பக்கமாகச் சென்று கொண்டிருந்த வழிப்போக்கன் ஒருவன் அதைப் பார்த்தான். பரிதாபம் மேலிட, பாதையை விட்டு இறங்கி, அவனருகே வந்தவன், கண்டிப்பான குரலில் சொன்னான் :

''டேய் முதலில் கத்துவதை நிறுத்து. தொண்டை வற்றிப்போய் விடும்.... இருபத்தெட்டிற்குப் பிறகு உனக்கு என்னவென்று தெரியுமா? தெரியாதா?

சட்டென்று கைப்பிடிச்சுவரை விட்டு இறங்கிய அவன், டக்கென்று, வந்தவனைக் கெட்டியாகப் பிடித்து, தலைக்கு மேலே தூக்கி ஒரு சுற்று சுற்றி, கிணற்றுக்குள் வீசியவன், மீண்டும் கைப்பிடிச் சுவரின் மீது உட்கார்ந்து இப்படிச் சொல்ல ஆரம்பித்தான் :

''இருபத்தொன்பது..... இருபத்தொன்பது..... இருபத்தொன்பது.....'' (எண்ணிக்கையில் அவன் தெளிவாகத்தான் இருந்தான். இதுவரை அவன் உள்ளே வீசியவர்களின் எண்ணிக்கை அது!)

7. ஆ.நகைச்சுவை

ஒரு சுடுகாட்டுலே, ஒரு கல்லறைக்கு மேலே, கால்மேலே கால் போட்டுக்கிட்டு உட்கார்ந்திருந்தான் ஒருத்தன். அந்த வழிய போன ஒருத்தர் அவனைப் பார்த்தார்; கேட்டார்: ''ஏம்பா இப்படி பேய் பிசாசு நடமாடுற இந்த மயானத்துல கல்லறைக்கு மேலே உட்கார்ந்திருக்கே?''

''எவ்வளவு காலம்தான் உள்ளேயே இருக்கிறது..... ஒரே புழுக்கமாக இருந்தது..... அதுதான் காத்து வாங்கலாம்னு வெளியே வந்தேன்'' அப்படினுச்சாம் அந்த ஆசாமி!

8. சித்திரக்கதை

9. குறிவரைவு





தாமோன் தேசாவில்
பணிபுரிவோர்களின் விவரம்



* ஆசிரியர்
* காவல்துறை அதிகாரி
* மருத்துவர்
* பொறியியலாளர்
* லாரி ஓட்டுனர்
* சொந்தத் தொழில்

வட்டக் குறிவரைவு

1. அதிக மக்கள் சொந்தத் தொழில்களில் ஈடுபடுகின்றனர்.
2. ஐந்து விழுக்காடு மக்கள் மருத்துவராக பணிபுரிகின்றனர்.
3. ஆசிரியர் தொழில்களிலும் லாரி ஓட்டும் தொழில்களிலும் சமமான எண்ணிக்கையில் மக்கள் பணிபுரிகின்றனர்.
4. சொந்தத் தொழிலைக் காட்டிலும் பொறியியலாளர் தொழிலில் மக்கள் குறைவான ஆர்வத்தை காட்டுகின்றனர்.

10. பழமொழிகள் - ஊகித்துக் கூறுக



1



2



3



4



5

1. பாம்பென்றால் படையும் நடுங்கும்
2. நாற்பது வயதுக்கு மேல் நாய்க் குணம்
3. அலை எப்பொழுது ஓய்வது? தலை எப்பொழுது முழுகுவது?
4. ஐந்து பெண் இருந்தால் அரசனும் ஆண்டி
5. நகை விரும்பாத பெண்களும் இல்லை; குகை விரும்பாத இருளும் இல்லை

11. கரைவரைபடம்

மலேசிய மாநிலங்களை அறிதல்



12. கவிதை/பாடல்

இன்பத் தமிழ்	இன்பத் தமிழ்
தமிழுக்கும் அமுதென்று பேர்! - அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்! தமிழுக்கும் நிலவென்று பேர்! - இன்பத் தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!	தமிழுக்கும் _____பேர்! - அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு ____! தமிழுக்கும்_____பேர்! - இன்பத் தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு ____!
தமிழுக்கு மணமென்று பேர்! இன்பத் தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்! தமிழுக்கு மது வென்று பேர்! - இன்பத் தமிழ் எங்கள் உரிமைச் செம்பயிருக்கு வேர்!	தமிழுக்கு _____பேர்! இன்பத் தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ____! தமிழுக்கு _____பேர்! - இன்பத் தமிழ் எங்கள் உரிமைச் செம்பயிருக்கு____ !
தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! - இன்பத் தமிழ் நல்ல புகழ் மிக்க புலவர்க்கு வேல்! தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! - இன்பத் தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர் தந்த தேன்!	தமிழ் எங்கள் _____பால்! - இன்பத் தமிழ் நல்ல புகழ் மிக்க புலவர்க்கு ____! தமிழ் எங்கள் _____வான்! - இன்பத் தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர் தந்த ____!
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! - இன்பத் தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்! தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! - இன்பத் தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ!	தமிழ் எங்கள் _____தோள்! - இன்பத் தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் ____! தமிழ் எங்கள் _____தாய்! - இன்பத் தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற ____!

தொடர்ந்து மேற்கண்ட கவிதை/பாடல் வடிவத்தைக் கொண்டு மேற்கொள்ளத்தக்க சில பாட நடவடிக்கைகளைக் காண்போம்.

நடவடிக்கை 1 (பீடிகை) : ஆசிரியர் பாடலை முதன்முறை ஒலிபரப்ப மாணவர்கள் கவனமாகச் செவிமடுத்தல். இரண்டாம்முறை ஒலிபரப்பும்போது பாடலில் ''தமிழ்'' என்ற சொல் எத்தனைமுறை ஒலிக்கப் பெறுகின்றது எனக் கணக்கிடப் பணித்தல். மூன்றாம்முறை ஒலிபரப்பும்போது கணக்கிட்டதைச் சரி பார்த்தல்.

நடவடிக்கை 2 – சொல்வதெழுதல் : பாடலில் ஒவ்வொரு வரியிலும் விடுபட்டிருக்கும் சொல்லைப் பாடலைக் கேட்டுக் கொண்டே நிறைவு செய்தல்.

நடவடிக்கை 3 - கருத்துணர்ப் பயிற்சி நடவடிக்கை ஒன்றும் இரண்டும் வகுப்பு நடவடிக்கைகள் ஆகும். நடவடிக்கை மூன்று குழு நடவடிக்கையாக நடத்தப்படுதல் வேண்டும். பையப் பயிலும் மாணவர்கள், நடுத்தர மாணவர்கள், மீள்தர மாணவர்கள் என அனைத்து மாணவர்களும் பங்கு பெறும் வண்ணம் நடவடிக்கை

அமைக்கப்படுதல் வேண்டும். எடுத்துக்காட்டாகப் பத்துக் கருத்துணர் வினாக்கள் வழங்கப்பட்டிருப்பின் மூன்று வினாக்கள் பையப் பயிலும் மாணவர்கள் செய்யக் கூடியதாகவும், ஏழு வினாக்கள் நடுத்தர மாணவர்கள் செய்யக் கூடியதாகவும், பத்து வினாக்கள் மீள்தர மாணவர்கள் செய்யக் கூடியதாகவும் அமைக்கப்படுதல் வேண்டும்.

கருத்துணர் வினாக்கள் எளிமையிலிருந்து அருமை என்ற கற்றல் முறைக்கேற்ப அமைக்கப்படுதல் வேண்டும். இப்பயிற்சியினைச் செய்வதற்கு 12 முதல் 15 மணித்துளிகள் வழங்கப்படலாம். பையப் பயிலும் மாணவர்கள், நடுத்தர மாணவர்கள், மீள்தர மாணவர்கள் என அனைத்து மாணவர்களும் அவர்களுடைய திறமைக்கேற்பக் குறிப்பிட்ட நேரத்தில் பயிற்சியைச் செய்து முடித்தல் வேண்டும். தொடர்ந்து எடுத்துக்காட்டு கருத்துணர் வினாக்களைப் பார்ப்போம்.

1. இன்பம், நிலவு, மணம், புலவர், அசதி ஆகிய சொற்களுக்கு ஏற்ற பொருள்தரும் வேறு சொற்களைத் தருக.
2. தமிழ்மொழிக்கு ஒப்பாகக் கவிதையில் கூறப்படும் நான்கு பொருள்களைக் கூறுக.
3. கொடுக்கப்பட்டுள்ள பொருளின் தன்மையைக் கூறுக. நிலவு - குளிர்ச்சி; தேன் - இனிமை; மது - மயக்கம்; வான் - உயர்வு; தீ - வெப்பம். சொற்களின் தன்மையை மாற்றித் தந்துவிட்டுத் தெரிவு செய்யச் சொல்லலாம்.
4. இக்கவிதையைப் பாடிய கவிஞர் யார்?
5. புகழ்மிக்க புலவர்க்கு வேல் - விளக்குக.
6. அசதிக்குச் சுடர் தந்த தேன் - விளக்குக.
7. தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய் - விளக்குக.
8. முத்தமிழ் எனப்படுபவை யாவை?
9. இக்கவிதையில் உன்னைக் கவர்ந்த வரி யாது? ஏன்?
10. 'தமிழுக்கு அமுதென்று பேர், 'தமிழுக்கும் அமுதென்று பேர்' - என்ன வேறுபாடு?

நடவடிக்கை 4 : எழுத்துக் குவியலிலுள்ள சொற்களை அடையாளங் காண்க. இது எல்லோரும் பங்குபெறும் வகையில் அமைந்த விளையாட்டு முறையிலான வளப்படுத்தல் நடவடிக்கையாகும்.

ப்	ரி	ஆ	ள	எ	மூ	க	வி	தை	ள்
தூ	பொ	மை	அ	அ	ச	தி	த்	வ்	ம

அடையாளங்க கண்ட சொற்களைப் பட்டியலிடுக

நடவடிக்கை 5

குறிலுக்கு நெடிலும், நெடிலுக்குக் குறிலும் எழுதுக

குறில்	நெடில்	நெடில்	குறில்
மது		வேல்	
நிலம்		தேன்	
கவி		வான்	
		பால்	

ஒரே ஓசையில் முடியும் சொற்களைப் பட்டியலிடுக

பேர்				
வேல்				
வான்				

லகர - ளகர - ழகரம் ரகர - றகரம் ணகரம் - னகரச் சொற்களைப் பட்டியலிடுக

லகரம்	ளகரம்	ழகரம்	ரகரம்	றகரம்	ணகரம்	னகரம்
நிலவு	விளைவு	தமிழ்	பேர்	பிறவி	மணம்	இன்பம்

தொடர் நடவடிக்கை - தொடர் நடவடிக்கையாகப் பட்டியலிட்ட சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைக்கச் செய்யலாம். தமிழின் சிறப்பை விளக்கும் படங்களை அல்லது கவிதைகளைத் திரட்டித் திரட்டேடு செய்யலாம்.

முடிவுரை இக்கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ள 12 மாதிரிப் பாட வடிவங்களான

1. பொன்மொழிகள்	2.துணுக்குகள்	3. ஹைக்கூ கவிதை	4. கேலிச்சித்திரம்
5. விடுகதை/விடுகவி	6. அழைப்பிதழ்	7. நகைச்சுவை	8. சித்திரக்கதை
9. குறிவரைவு	10. பழமொழிகள்	11. கரைவரைபடம்	12. கவிதை/பாடல்

தவிர்த்து மேலும் கற்றலில் பயன்படுத்தக்கூடிய சில பாடவடிவங்கள்

13. கட்டுரை	14. நாடகம்	15. புதுக்கவிதை	16. நேர்காணல்
17. கதை	18. கடிதம்	19. அறிவோட்டவரை	20. புள்ளிவிவரம்
21. ராசிபலன்	22. உரையாடல்	23. மொழி விளையாட்டு	24. சொற்போர்
25. சமையல் குறிப்பு	26. வினா-விடை	27. சொற்பொழிவு/உரை	28. விதிமுறைகள்
29. அறிக்கை/அறிவிப்பு	30. விதிமுறைகள்	31. விண்ணப்பப்பாரம்	32. உரைநடை
33. குறுக்கெழுத்துப்புதிர்	34. நாட்டுப்படம்	35. வரிபடக்கருவி	36. வாழ்த்து

ஒவ்வொரு நாளும் புதுப்புது பாடவடிவங்களைப் பயன்படுத்துவது கற்றலைச் சிறக்கச் செய்யும். மாணவர்களும் ஆர்வத்தோடு பாடநடவடிக்கைகளில் ஈடுபடுவர். இதனால் கற்றல் விளை பயன்மிக்கதாக அமையும் என்பது வெள்ளிடைமலை.

25. வாசிப்பு மின்-கோப்புத் திட்டத்தைப் பயன்படுத்தி மாணவர்களின் மொழித்திறனையும் புத்தாக்கச் சிந்தனையையும் வளர்த்தல்

திருவாட்டி ரோசினா பேகம், மூத்த ஆசிரியர்,
ஈஸ்ட் வியூ உயர்நிலைப்பள்ளி

முன்னுரை

2013ஆம் ஆண்டு, சிங்கையில் உமறு புலவர் தமிழ்மொழி நிலையத்திலுள்ள தமிழாசிரியர் பணித்திறன் மேம்பாட்டகத்தில் முதன்மை ஆசிரியர்கள் வழிநடத்திய செயல்திறன் கோப்புமுறை பயிலரங்கில் நான் பங்கேற்றதன் பயனாக வளர்ச்சி நிலை வாசிப்புக் கோப்புத் திட்டம் பற்றிய சிந்தனை என் மனத்தில் துளிர்விட்டது. அப்பயிலரங்கில் பல்வேறு வாசிப்புக் கோப்பு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதில் வளர்ச்சிநிலை வாசிப்புக் கோப்புமுறை என் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தது. அக்கோப்பு முறைவழி மாணவர்களின் மொழித்திறன் வளர்ச்சியைக் கண்கூடாகக் காண முடியும் என நான் நம்பினேன். எனவே, பள்ளி நிலையில் எங்கள் மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்கு இதனைச் செயல்படுத்தத் திட்டமிட்டேன்.

திட்ட அறிமுகம்

ஒருங்கிணைக்கப்பட்ட மொழித் திறன்களை மாணவர்களிடம் வளர்ப்பதோடு புத்தாக்கச் சிந்தனையையும் வளர்க்கும் நோக்கத்தில் வளர்ச்சிநிலை வாசிப்புக் கோப்புத் திட்டத்தை என் பள்ளியில் நான் முதலில் அறிமுகம் செய்தேன். என் பள்ளித் தாய்மொழித் துறைத்தலைவர், என் சக தமிழாசிரியர், சீனம், மலாய் தாய்மொழி ஆசிரியர்கள் ஆகியோரிடம் இத்திட்டத்தைப் பற்றி நான் பகிர்ந்து கொண்டேன். இத்திட்டத்தைச் செயல்படுத்த என் பள்ளித் தாய்மொழி ஆசிரியர் நிபுணத்துவக் கற்றல் குழுவின் (Professional Learning Team) ஆதரவும் ஒத்துழைப்பும் கிட்டியது.

திட்டச் செயல்பாடு

நான் என் பள்ளியின் சீன, மலாய், தமிழ் ஆசிரியர்கள் கலந்துபேசி, இத்திட்டத்தில் உயர்நிலை ஒன்று விரைவு மாணவர்களை ஈடுபடுத்த முடிவு செய்தோம். இத்திட்டத்தின் செயலாக்கம் கடந்த ஆண்டில் பதினாறு வாரங்கள் நீடித்தது.

இத்திட்டத்தில் எட்டு பாடங்களை நடத்துவதற்கான வேலைத் திட்டத்தை (SOW) வடிவமைத்து அவற்றைச் சீன, மலாய், தாய்மொழி ஆசிரியர்களுக்காக ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கொடுத்தேன். எட்டு

பாடங்களை, இரு வாரங்களுக்கு ஒரு பாடம் எனப் பதினாறு வாரங்களுக்கு நடத்தினோம். அத்துடன், இரு வாரங்களுக்கு ஒருமுறை நாங்கள் எல்லாரும் சந்தித்து நடத்தப்பெற்ற பாடத்தைப் பற்றிக் கலந்துரையாடினோம்.

மாணவர்களின் மனப்போக்கு, பாடத்தில் அவர்கள் காட்டிய ஈடுபாடு, ஆர்வம், அவர்களது புத்தாக்கச் சிந்தனை வெளிப்பாடு, அவர்களின் படைப்பு போன்ற அம்சங்களைப் பற்றிக் கலந்துரையாடினோம். நடத்திய பாடத்திலிருந்து பெற்ற அனுபவத்தையும் கிடைத்த கருத்துகளையும் அடுத்து நடத்தவிருக்கும் பாடத்தின்போது கவனத்திற்கொண்டோம். இவ்வாறாக, எட்டு பாடங்களுக்கும் தொடர்ந்து சந்தித்துக் கலந்துரையாடிப் பாடத்தை நடத்தி வந்தோம்.

பொருத்தமான வளங்களைப் பெற்றுப் பயன்படுத்துதல்

இத்திட்டத்தில் அகன்ற வாசிப்பிற்குப் பயன்படுத்தப் பொருத்தமான, சிங்கை மண்மணம் கமழும் கதைகளைத் தேடிக் கொண்டிருந்தபோது தமிழாசிரியர் பணித்திறன் மேம்பாட்டகம் அனுப்பி வைத்த 'மாணவர் கதைக்கொத்து' தொகுப்பு 1 & 2 கிடைக்கப்பெற்றேன். அத்தொகுப்புகளில் இடம்பெற்றுள்ள கதைகள் அனைத்துமே என் மாணவர்கள் வாசிப்பதற்கு ஏற்புடையனவாக இருந்தன. அவற்றுள் பாடச் சிறப்பு நோக்கத்திற்கு உகந்த ஏழு கதைகளைத் தெரிவு செய்தேன். அக்கதைகளை என் மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் படித்ததோடு அக்கதைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளிலும் உற்சாகத்துடன் ஈடுபட்டனர்.

சிங்கை தலைமை முதன்மை ஆசிரியரிடமிருந்து அற்புத உத்தியைக் கற்றல்

வாசித்தல் என்பது வெறும் கதைகளை மட்டுமே உள்ளடக்கியது ஆகாது. கவிதை, பாடல் போன்றவற்றையும் வாசிப்புத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளலாம் என்று நான் கருதினேன். அந்த வகையில், 2014 சிங்கையில் நடைபெற்ற ஆசிரியர் கருத்தரங்கில் கவிஞர் கண்ணதாசன் பாடல்களைக் கொண்டு மாணவர்களுக்கு அறநெறிக் கருத்துகளைப் புகட்டத் தலைமை முதன்மை ஆசிரியர் திரு ஜெயராஜதாஸ் பாண்டியன் அவர்கள் பகிர்ந்துகொண்ட உத்திகள் பெரிதும் துணைபுரிந்துள்ளன. அப்பகிர்வின் பயனாக, கவிஞர் கண்ணதாசனின் பாடல் வரிகளையும் இந்த வாசிப்புத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டேன்.

மின்கோப்புத் திட்டம் அமலாக்கம்

பலதரப்பட்ட புத்தாக்க நடவடிக்கைகளில் ஈடுபட்ட மாணவர்கள் ஏதேனும் ஒரு நடவடிக்கையை ஏட்டில் பதிவு செய்து வந்தனர். உதாரணத்திற்குக் கதையில் தோன்றும் ஒரு கதாபாத்திரமேற்று இன்னொரு கதாமாந்தருக்கு ஓர் அழைப்பு மின்னஞ்சல் எழுத வேண்டும். புத்தகத்திலோ அல்லது தாளிலோ எழுதாமல் கணினியில் மின்கோப்பை உருவாக்கி அதில் பதிவு செய்ய வகை செய்தேன். கணினி யுகத்தில் வாழும் இன்றைய மாணவர்கள் கணினியில் பாடம் செய்வதை மிகவும் விரும்பினர். அவர்கள் ஈடுபட்ட நடவடிக்கைகளின் விவரங்களைப் பாடத்திட்டமாகப் பின்னிணைப்பில் இணைத்துள்ளேன்.

முடிவுரை

இத்திட்டத்தில் மாணவர்களிடம் திட்டத்திற்கு முந்தைய கருத்துக் கணிப்பு, பிந்தைய கருத்துக் கணிப்பு ஆகியவை நடத்தப்பெற்றன. கருத்துக் கணிப்பு முடிவுகள் இந்த வளர்ச்சிநிலை வாசிப்புக் கோப்புத் திட்டம் மாணவர்களின் மொழித்திறன்கள் மேம்படத் துணைபுரிந்துள்ளதைக் காட்டின. மேலும், சக ஆசிரியர்களிடம் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பும் அவர்களது சிந்தனைமீட்சியும் இத்திட்டம் நல்ல பயனளித்துள்ளதையே வெளிப்படுத்தியுள்ளன.

வாசிப்பு மின்-கோப்புத் திட்டம் 2015

கீழ் உயர்நிலைக்கான பாடத்திட்டம் (தமிழ்ப்பிரிவு)

ஈஸ்ட் வியூ உயர்நிலைப்பள்ளி

வாரம்	நோக்கங்கள்	பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்	வளங்கள்	முறைசாரா மதிப்பீடு
பருவம் 1 (வாரம் 2)	'அன்பே உன் விலை என்ன?' என்னும் கதையை மாணவர்கள் வாசித்துவிட்டுத் தன்னைப்பற்றிச் சிந்தித்தல், தன்னைப்பற்றி அறிதல் (விழிப்புணர்வு பெறுதல் - self-awareness -SEL)	1. மாணவர்களைத் தனிநிலையில் முதலில் கதையை வாசிக்கச் செய்தல் 2. மௌன வாசிப்பிற்குப் பின் மாணவர்களை இணையினராகப் பிரித்து ஒருவர் மற்றவரிடம் கதையை வாய் விட்டு வாசிக்கச் செய்தல் 3. கதையைப் பற்றி இருவரும் கலந்துரையாடுதல் 4. கதையில் வரும் பெண்ணின் நிலை பற்றிக் கலந்து பேசி அவளது பிரச்சனைக்கு அவர்கள் வேறுவிதமான தீர்வு சொல்லுதல் 5. இந்தக் கதையின் மூலம் அறிந்து கொண்ட முக்கியக் கருத்தை மாணவர்கள் பகிர்ந்து கொள்ளுதல் 6. பின்னர், மாணவர்கள் தத்தம் இணையாளர்களைப் பற்றி அறிந்து கொண்ட புதிய, சுவாரசியமான செய்திகளை வகுப்பில் மற்ற மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல், ஆசிரியர் மாணவர்களின் விரும்பத்தக்க பண்புகளையும் பலத்தையும் பாராட்டிப் பேசி அவர்களின் தன்னம்பிக்கையை வளர்த்தல் 7. மாணவர்கள் வலைப்பூவில் உள்ள தங்களின் மின் கோப்பில் தங்களைப் பற்றி பதிவு செய்தல் தங்களின் புகைப்படம், தங்களைப் பிரதிநிதிக்கும் விலங்கு, பறவை, பழம் அல்லது மலர் போன்றவற்றையும் பதிவு செய்தல், தங்கள் பலத்தைப் பற்றியும் தங்களின் பலவீனத்தை எவ்வாறு களைவது என்பது பற்றியும் ஆழமாகச் சிந்தித்துப் பதிவு செய்தல்	- மாணவர் கதைக் கொத்து-இல் இடம் பெற்றுள்ள 'அன்பே உன் விலை என்ன' என்னும் கதை - கணினிகள்	சக மாணவரின் கருத்துகளும் ஆசிரியரின் கருத்துகளும்

வாரம்	நோக்கங்கள்	பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்	வளங்கள்	முறைசாரா மதிப்பீடு
		8. மற்ற மாணவர்கள் தங்கள் வகுப்பு மாணவர்கள் பதிவு செய்திருப்பதை வாசித்துவிட்டுத் தங்களின் ஆக்ககரமான கருத்து களைப் பகிர்ந்து கொள்ளுதல் 9. ஆசிரியரும் மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வண்ணம் தம் கருத்துகளைப் பதிவுசெய்தல்		
(வாரம் 4)	'கண்ணால் காண்பது' என்னும் கதையை மாணவர் கள் படித்து கதை யின் முடிவை ஊகம் செய்ய வேண்டும்.	1. கதையின் முடிவை நீக்கி/ மறைத்துவிட்டு கதைப்பகுதியை மாணவர்களுக்குக் கொடுத்தல் 2. வாசகர் வட்டத்தில் அமர்ந்து மாணவர்கள் கதையை மௌன மாகப் படித்தல் 3. பின் ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு பத்தியையும் வாய் விட்டு வாசித்தல் 4. கதையையொட்டிய கலந்துரை யாடலில் ஆசிரியர் மாணவர்களை ஈடுபடுத்துதல் 5.மாணவர்கள் கதையின் முடிவை ஊகம் செய்யச் சொல்லுதல் 6. மாணவர்கள் தங்களின் ஊகங் களைப் பகிர்ந்து கொள்ளுதல் 7.பின்னர், ஆசிரியர் கதையின் முடிவைக் காட்டுதல் 8. மாணவர்கள் பரமபதம் என்ற விளையாட்டு வழிக் கதையை யொட்டிய புதிர் கேள்விகளுக்கு விடை அளித்தல்	மாணவர் கதைக்கொத்து-1ல் இடம் பெற்றுள்ள 'கண்ணால் காண்பது' என்னும் கதை - பாடல் வரிகளைக் கொண்ட தாள் காணொளிக் காட்சி - கணினிகள்	பரமபதம் விளையாட்டு பெற்றோர்கருத்து
(வாரம் 6)	கவிஞர் கண்ணதாசன் அவர்களை மாணவர்களுக்கு அறிமுகம் செய்தல். அவர் எழுதிய பாடலை வாசிக்க வைத்தும் கேட்க வைத்தும்	1. சில கவிஞர்களின் படங்களைக் காட்டி அவர்களின் பெயர்களைக் கேட்டறிதல். அவற்றுள் கவிஞர் கண்ணதாசன் படமும் இடம் பெறுமாறு செய்தல் 2. கவிஞர் கண்ணதாசன் 'உத்தமன்' என்னும் படத்திற்காக எழுதிய ''கேளாய் மகனே கேளொரு வார்த்தை'' என்னும்	- பாடல் வரிகளைக் கொண்ட தாள் காணொளிக் காட்சி - கணினிகள்	சக மாணவரின் கருத்துகளும் ஆசிரியரின் கருத்துகளும்

வாரம்	நோக்கங்கள்	பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்	வளங்கள்	முறைசாரா மதிப்பீடு
	மாணவர்கள் அறநெறிக் கருத்துகளையும் அவற்றைப் பின்பற்றும் வழிமுறைகளையும் அறியச் செய்தல்.கணினியில் கவிஞர் கண்ணதாசன் பற்றித் திட்ட வேலை கொடுத்தல்	பாடல் வரிகளை மாணவர்களிடம் கொடுத்து வாசிக்கச் செய்தல் 3. அப்பாடல் வரிகளிலுள்ள கடின சொற்களை அடிக்கோடிடச் செய்தல் 4. அச்சொற்களுக்குச் சூழமைவில் பொருளைக் கண்டறிய மாணவர்களுக்கு உதவுதல் 5. மாணவர்களை 2 குழுக்களாகப் பிரித்தல் முதல் குழு, பாடல் வரிகளின் முதல் பாதியிலுள்ள அறநெறிக் கருத்துகளைப் பற்றிக் கலந்துரையாடிப் பகிர்ந்து கொள்ளச் செய்தல் 6. இன்னொரு குழுவினரைப் பாடல் வரிகளின் மற்றப் பாதியிலுள்ள அறநெறிக் கருத்துகளைக் கலந்துரையாடிப் பகிர்ந்து கொள்ளச் செய்தல் 7. மாணவர்கள் கூறும் கருத்துகள் பொருத்தமற்றவையாய் இருந்தால் மட்டும் ஆசிரியர் தெளிவுபடுத்தச் சரியான விளக்கங்களைக் கூறி விளக்குதல் 8. இந்தப் பாடலை மாணவர்கள் கேட்டிருக்கிறார்களா என்பதைக் கேட்டறிதல். பின்னர், அப்பாடலைத் தாளத்தோடு பாடிக் காட்டுதல் 9. பாடலை ஒலிக்கச் செய்தல் அல்லது ஒளிக்காட்சியைக் காண்பித்தல் 10. மாணவர்களையும் குழுவாகப் பாட வைத்தல் 11. மாணவர்கள் தங்கள் வாசிப்பு கோப்பில் பாடலிலிருந்து		

வாரம்	நோக்கங்கள்	பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்	வளங்கள்	முறைசாரா மதிப்பீடு
		தாங்கள் கற்றுக் கொண்ட இரண்டு அறநெறிக் கருத்துகளைப் படங்களுடன் விளக்கிப் பதிவு செய்தல் 12. மாணவர்கள் பாடலைப் பாடி அதன் ஒலிப்பகுதியை மின்கோப்பில் பதிவேற்றம் செய்வர். 13. மாணவர்களின் வாசிப்பு மின் கோப்பில் அவர்களின் பெற்றோர் தம் கருத்துகளைப் பதிவுசெய்தல்		
(வாரம் 8)	'குட்டியும் ஜனாவும்' என்னும் கதையை மாணவர்கள் வாசிப்பர். அவர்களின் புரிந்துணர்வை வரைபடம் மூலம் விளக்குவர்.	1. வாசகர் வட்டத்தில் மாணவர்கள் அமர்ந்து 'குட்டியும் ஜனாவும்' என்னும் கதையை மௌனமாக வாசித்தல். ஒவ்வொரு மாணவரும் ஒரு பத்தியை வாய்விட்டு வாசித்தல் 2. கதையையொட்டிய சந்தேகங்களை மாணவர்கள் குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடித் தெளிவு பெறுதல் 3. 'பாசிங் பார்சல்' என்னும் விளையாட்டை மாணவர்கள் விளையாடுதல். இசையை எழுப்பித் திடீரென்று நிறுத்தி பொட்டலம் யாரிடம் உள்ளதோ அவர் படித்த கதையையொட்டி ஆசிரியர் கேட்கும் புதிய கேள்விகளுக்குப் பதில் அளித்தல் 4. மீண்டும் விளையாட்டுத் தொடரும் 5. இறுதியில் மாணவர்கள் படித்த கதை பற்றிய தங்கள் புரிந்துணர்வை வரைபடமாக உருவாக்கி அதனை மின்-கோப்பில் வரைந்து பதிவு செய்வர்	மாணவர் கதைக்கொத்து-1ல் இடம்பெற்றுள்ள 'குட்டியும் ஜனாவும்' என்னும் கதை	ஆசிரியரின் பதில் கேள்விகள்
பருவம் 2 (வாரம் 2)	-மாணவர்கள் 'ஹங்பாவ்' என்னும் கதையைப் படித்துவிட்டு அதன் முடிவை மாற்றி அமைத்து நடித்துக் காட்டுதல். - புத்தாக்கச் சிந்தனையை வளர்த்தல்	1. மாணவர்கள் வாசகர் வட்டத்தில் அமர்ந்து கதையை மௌனமாக வாசித்தல் 2. பின் ஒவ்வொருவரும் ஒரு பத்தியை வாய்விட்டு வாசித்தல் 3. ஆசிரியர் கேட்கும் கதையையொட்டிய கேள்விகளுக்கு மாணவர்கள் பதிலளித்தல் 4. ஆசிரியர் மாணவர்களை இரண்டு குழுக்களாக பிரித்தல்; குழுவினர் கலந்துரையாடி கதையின் முடிவை மாற்றுதல்; பின்னர் முடிவுக்கேற்ப வசனங்களை உருவாக்கி நடித்துக் காட்டுதல்	* மாணவர் கதைக்கொத்து-1ல் இடம் பெற்றுள்ள 'ஹங்பாவ்'என்னும் கதை * சகமாணவர் மதிப்பீடு (அளவை: கற்பனை, ஆர்வமூட்டும் முடிவு	ஆசிரியர், சக மாணவர்களின் கருத்து

வாரம்	நோக்கங்கள்	பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்	வளங்கள்	முறைசாரா மதிப்பீடு
	- பேச்சாற்றல், எழுத்தாற்றல் போன்றவற்றை மாணவர்களிடம் வளர்த்தல்	5. ஒரு குழு பேசி நடித்துக் காட்டும் போது மற்றொரு குழுவினர் சகமாணவர் களை மதிப்பீடு செய்தல், ஆசிரியரும் மதிப்பீடு செய்தல் 6. குழுவினர் மாற்றி முடிவின் சுருக்கத் தையும் பேசி நடிக்கும்போது எடுத்த புகைப்படத்தையும் மின்-கோப்பில் பதிவேற்றம் செய்தல்		
(வாரம் 4)	'விடியல்வருமா?' என்னும் கதையை மாணவர்கள் படித்துப் புரிந்துகொண்டு கதையில் வரும் பெரியவரின் இடத்திலிருந்து நாட்குறிப்பு எழுதுதல்	1. மாணவர்கள் இணை நிலையில் அமர்ந்து கதையை மௌனமாக வாசித்தல். பின்னர், இணையினருள் ஒருவர் கதையின் முற்பகுதியையும் அவரைத் தொடர்ந்து மற்றவர் கதையின் பிற்பகுதியையும் வாய்விட்டு வாசித்தல் 2. இணையினர் கதையில் வரும் பெரியவரின் மனநிலையைப் பற்றிக் கலந்துரையாடுதல் 3.மாணவர்களுள் ஒருவர் தன்னை அப்பெரியவராகவும் மற்றவர் அவரைச் சந்திக்க வந்த பெண்ணாகவும் கற்பனை செய்துகொண்டு உரையாடுதல் 4. அந்த உரையாடலை ஒலிப்பதிவு செய்து மாணவர்கள் மின்-கோப்பில் பதிவேற்றம் செய்தல் 5. மாணவர்கள் பெரியவராகத் தம்மைக் கற்பனை செய்துகொள்ள வேண்டும். அவரின் மனநிலையை விவரித்து நாட் குறிப்பு எழுதி மின்-கோப்பில் பதிவு செய்ய வேண்டும்.	மாணவர் கதைக்கொத்து-1ல் இடம்பெற்றுள்ள 'விடியல்வருமா' என்னும் கதை	இணையாளரின் கருத்து
(வாரம் 6)	பேர் சொல்லும் ஓவியம்'என்னும் கதையை மாணவர்கள் படித்துப் புரிந்து கொண்டு அக்கதையில் வரும் திருமதி மலரைத் தம் புதிய ஓவியப் பள்ளிக்குச் சிறப்பு விருந்தின ராக வருமாறு	1. மாணவர்கள் வாசகர் வட்டத்தில் அமர்ந்து கதையை மௌனமாக வாசித்தல் 2. பின் ஒவ்வொருவராக ஒரு சிறு பத்தியை வாய்விட்டு வாசித்தல் 3. கதையை மாணவர்கள் புரிந்து கொண்டார்களா என்று அறிய ஆசிரியர் சில கேள்விகளைக் கேட்டுக் கலந்துரை யாடலில் ஈடுபடுத்துதல் 4. ஆசிரியர் மாணவர்களை இணை யினராகப் பிரித்து, கதையில் வரும்	மாணவர் கதைக்கொத்து-2ல் இடம்பெற்றுள்ள 'பேர் சொல்லும் ஓவியம்' என்னும் கதை மின்னஞ்சல் எழுதும் படிவம் (Template)	இணையாளரின் கருத்து

வாரம்	நோக்கங்கள்	பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்	வளங்கள்	முறைசாரா மதிப்பீடு
	அழைத்து ஒரு மின்னஞ்சல் எழுதுதல்	ஆசிரியர் மலராகவும் மாணவர் அமீனாகவும் மாணவர்கள் பாத்திர மேற்று உரையாடுதல் 5.பின்னர், மாணவர்கள் இணையாளரு டன் கலந்துரையாடித் திருமதி. மலரைத் தம் புதிய ஓவியப் பள்ளிக்குச் சிறப்பு விருந்தினராக வருமாறு அழைத்து ஒரு மின்னஞ்சல் எழுதுதல் 6. அந்த மின்னஞ்சலை மின்-கோப்பில் பதிவேற்றம் செய்தல்		
பருவம் 3 (வாரம் 2)	'நல்ல தீர்ப்பு' என்ற கதையைப் படித்துப் புரிந்து கொண்டு படர்க்கை நிலையிலிருந்து தன்மை நிலைக்கு முழுக் கதையையும் மாற்றி எழுதுதல்	1. மாணவர்கள் குழுவினராக அமர்ந்து கதையை மௌனமாக வாசித்தல் 2. பின் குழுவினர் ஒவ்வொரு பத்தியாக வாய்விட்டு வாசித்தல் 3. கதையில் நிகழும் சம்பவங்கள் பற்றிக் கலந்துரையாடுதல் 4. மாணவர்கள் ஒவ்வொருவரும் கதையைப் படர்க்கை இடத்திலிருந்து தன்மை இடத்துக்கு மாற்றி எழுதுதல். அதாவது தானே கதையின் முக்கிய கதாபாத்திரமாக மாறி கதையை எழுதுதல். அதற்குரிய மனவரைப்படம் உருவாக்குதல் 5. அந்த மனவரைபடத்தை மின் கோப்பில் பதிவேற்றம் செய்தல்	மாணவர் கதைக்கொத்து-2ல் இடம்பெற்ள்ள 'நல்ல தீர்ப்பு' என்னும் கதையின் மனவரைபடம்	சக மாணவர் களின் கருத்து
(வாரம் 4)	'நம்பிக்கை ஒளி' என்ற கதையைப் படித்துவிட்டு அக்கதையில் வரும் சரஸ்வதி என்னும் பாத்திரமேற்றுப் பேச்சுப் போட்டிக்குத் தயார் செய்து பேசுதல்	1. வாசகர் வட்டத்தில் அமர்ந்து மாணவர் கள் கதையை மௌனமாக வாசித்தல் 2. பின் ஒவ்வொருவராக ஒரு சிறு பத்தியை வாய்விட்டு வாசித்தல் 3. கதையில் சரஸ்வதி பேச்சுப் போட்டியில் கலந்துகொண்டு பாரதிதாசனைப் பற்றிப் பேச வேண்டிய சூழலைப் பற்றி மாணவர்கள் கலந்துரையாடுதல்	மாணவர் கதைக்கொத்து-2ல் இடம்பெற்றுள்ள 'நம்பிக்கை ஒளி' என்னும் கதை கணினிகள்	ஆசிரியரின் கருத்து

வாரம்	நோக்கங்கள்	பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்	வளங்கள்	முறைசாரா மதிப்பீடு
		4. மாணவர்கள் இணையினராகப் பிரித்து, ஒருவர் ஆசிரியராகவும் மற்றவர் சரஸ்வதி யாகவும் பாத்திரமேற்றுப் போட்டிக்குத் தயார்படுத்திக் கொள்ளும் சூழலை உரையாடுதல் 5. அதன்பின், மாணவர்கள் கணினிக் கூடத்திற்குச் சென்று பாவேந்தர் பாரதிதாசனைப் பற்றிச் சுவையான தகவல்களைத் திரட்ட வேண்டும். 6. திரட்டிய தகவல்களைக் கொண்டு ஓர் சிற்றுரையை எழுத வேண்டும் 7. அச்சிற்றுரையைப் பேசி, ஒளிப்பதிவு செய்து மின்-புத்தகத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்		

துணை நூல்

சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு (2014). பயன்மிகு கற்பித்தல்: அர்த்தமிகு கற்றல் வழிகாட்டு கோப்பு. தமிழாசிரியர்களுக்கான பணித்திறன் மேம்பாட்டகம், உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்.

26. தமிழ்க் கற்றல் கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பத்தை விளைப் பயன்மிக்கதாய்ப் பயன்படுத்துதல்

மா. அர்ச்சுனன்

செயிண்ட் பேட்ரிக்ஸ் பள்ளி, சிங்கப்பூர்

முன்னுரை

வகுப்பறைச் சூழலைப் புத்துணர்ச்சியுடன் வைத்துக் கொள்வது என்பது ஒரு கலை. அதைத் திறம்படச் செய்யும்போது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கு இடையேயான உறவுநிலை சிறப்பானதாக இருக்கும். முன்பெல்லாம் மாணவர்கள் பள்ளிக்கு வரும்போது இன்று ஆசிரியர்களிடம் என்ன கற்றுக் கொள்ளப் போகிறோம் என்ற ஆர்வத்துடன் இயல்பாய் உள்ள அறிவுத்திறனுடன் வருவர். ஆனால் **இன்று அவர்கள் தாமாகக் கற்றுக் கொண்டவற்றைச் சரி பார்க்க பள்ளிக்கு வருகின்றனர்**. அதற்கேற்ற வகையில் ஆசிரியர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்வது அவசியம் என்பதை எல்லோரும் இன்று உணர்ந்துள்ளனர்.

ஏனெனில், மாணவர்கள் பரந்துபட்ட அறிவைப் பள்ளி செல்வதற்கு முன்னரே பெற்றிருக்கின்றனர். அதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் பெருகிவிட்டன. மேலும் மற்றவர்கள் துணையின்றி உலகத்தை அறிந்து கொள்வதற்கான தொழில்நுட்பம் வானளாவ வளர்ந்து இருப்பதை நாம் அறிவோம். இப்படிப்பட்ட சூழலில் இருக்கும் நாம், மாணவர்களின் அறிவுத் திறனுக்கும் செயல்திறனுக்கும் ஏற்ற வகையில் கற்பித்தலுக்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டிய முக்கிய காலக்கட்டத்தில் இருக்கிறோம். தமிழ்மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் அதற்கேற்ற திறன்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலைக்கு மாறாக நாம் செயல்படவோ அல்லது புறந்தள்ளிவிடவோ முடியாது. ஏனெனில் மாணவர்கள் மொழியாசிரியர்களைப் புறந்தள்ளிவிடுவர்.

நோக்கங்கள்

சிங்கப்பூரில் மாணவர்கள் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகப் படிக்கின்றனர். அதே சமயம் சிங்கப்பூரில் மொழியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு உயர்தமிழ், தமிழ் இலக்கியம் போன்றவற்றைக் கற்கும் வாய்ப்பையும் கல்வி அமைச்சு உருவாக்கித் தந்திருக்கிறது. மேலும் உயர்தமிழ், இலக்கியம் படிக்கும் மாணவர்களுக்குக் குறிப்பிடத்தக்க சலுகைகளையும் கல்வி அமைச்சு வழங்கி வருகிறது. சிங்கப்பூர் மாணவர்கள் மற்ற பாடங்கள் அனைத்தையும் ஆங்கில வழியாகக் கற்றுக் கொள்கின்றனர். மேலும் அனைத்துப் பாடங்களும் தகவல் தொழில்நுட்ப வளங்களைப் பயன்படுத்தியே கற்பிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மொழியாசிரியர்கள் மொழிப்பாடத்தை மட்டும் தகவல் தொழில்நுட்ப வளங்களின்றிக் கற்பிக்க முற்பட்டால் ஏமாற்றத்தை மட்டுமே எதிர்கொள்ள முடியும். மேலும் தமிழ்க் கற்றல் அங்கு முழுமையாக நடைபெறாமல் போகக்கூடும். கல்வி அமைச்சு மற்ற பாடங்களுக்கு மற்ற மொழிப்பாடங்களுக்கும் இணையாக அனைத்து வளங்களையும் வசதிகளையும் தமிழ்மொழிக்குச் செய்து கொடுத்திருக்கிறது. இதனால் தமிழ்மொழி வாழும்

மொழியாகச் சிங்கப்பூரில் தலை நிமிர்ந்து நிற்கிறது. எதிர்காலச் சமூகம் தமிழ்மொழியின் அருமை பெருமைகளை அறிந்தும் உணர்ந்தும் தொடர்ந்து செயல்பட்டுத் தமிழை வாழும்மொழியாக நிலைத்திருக்கச் செய்ய தமிழ்மக்கள் கடப்பாடு கொண்டிருக்கின்றனர். இதற்கு வலிமை சேர்க்கும் வகையில் கல்வி அமைச்சும் அரசும் பல்வேறு வாய்ப்புகளையும் வசதிகளையும் உருவாக்கித் தந்திருக்கின்றன.

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம், சிங்கப்பூரின் நான்கு திசைகளிலும் தமிழ்மொழி நிலையங்கள், பெரும்பாலான பள்ளிகளில் தமிழ்ப்பாடம் கற்கும் வசதி போன்றவற்றைச் சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு உருவாக்கித் தந்திருக்கிறது. மேலும் தாய்மொழி மேம்பாட்டிற்காக அதிகமான நிதியும் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் 'தமிழ்மொழி மாதம்' கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த விழாவில் மாணவர்களுக்கு எந்தெந்த வழிகளில் தகவல் தொழில்நுட்பம் மூலம் தமிழைக் கற்றுக் கொள்ளலாம் என்ற பயிற்சிப் பட்டறைகளும் நடத்தப்படுகின்றன. தமிழ்மொழி விழாக்கள் மூலமாக மொழியார்வத்தை வளர்க்கவும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இத்தனை வசதிகளை ஏற்படுத்தித் தந்து கொண்டிருக்கும் எங்கள் நாட்டில் தமிழ்மொழியை அடுத்த தளத்திற்குக் கொண்டுபோக வேண்டிய முக்கிய இடத்தில் இருக்கும் ஆசிரியர்கள் அதற்குரிய பங்கைச் சிறப்பாக ஆற்றி வருகின்றனர்.

அவர்களில் ஒருவனாக நான் எங்கள் பள்ளி மாணவர்களுக்குக் கல்வி அமைச்சு ஏற்படுத்தித் தந்திருக்கும் இருவழித் தொடர்புத் தளத்தைப் பேசுதல் மற்றும் வாசித்தல் திறன்களை மேம்படுத்தப் பயன்படுத்திக் கொண்டதை விளக்குவதாக இந்தக் கட்டுரை அமையும். வகுப்பறைக்கு அப்பாலும் கற்றல் நிகழ்வதற்கான வாய்ப்பை மாணவர்களுக்கு ஏற்படுத்தித் தர வேண்டும். எனவேதான் இந்த இருவழித் தொடர்புத் தளத்தைப் பயன்படுத்தி மாணவர்களிடம் கற்றலுக்கு உகந்த சூழலை ஏற்படுத்தித் தருவதே தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளோம் என்பதற்கு இந்தக் கட்டுரையே சான்றாகும்.

மாணவர்கள் நிலையும் பின்புலமும்

சிங்கப்பூரில் தமிழ் மாணவர்கள் தமிழ்மொழியைத் தவிர மற்றப் பாடங்களை ஆங்கில வழியிலேயே கற்கின்றனர். இங்குப் பொதுத் தொடர்பு மொழியாக ஆங்கிலமே இருக்கிறது. பெரும்பாலான மக்கள் தங்கள் வேலை நிமித்தமாகவும் பல இன மக்களோடு கூடி வாழ்வதாலும் ஆங்கில மொழியிலேயே கருத்துப் பரிமாற்றம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர். மேலும் தமிழர்கள் சிலர் வேற்று இனத்தவரை மணந்துகொண்டு இருப்பதாலும் வீட்டில் தமிழ் பேசுவதற்கான ஏற்ற சூழல் இருப்பதில்லை. தமிழகத்தில் ஆங்கில வழிக் கல்வியில் படித்தாலும் வீட்டில் தமிழ் பேசுகின்ற சூழல் இருக்கின்றது. இதனால் மாணவர்கள் தமிழைப் பேசுவதில் சிரமத்தை எதிர்நோக்குவதில்லை.

பிழையாகப் பேசி மற்றவர்கள் கேலிக்கு ஆளாகிவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கும் தமிழ் மாணவர்கள் தமிழைப் பேசுவதற்குத் தயக்கம் காட்டுகின்றனர். வாசிப்பு மற்றும் கேட்டல் நிகழ்வுகள் இவர்களிடம் அரிதினும் அரிதாக நிகழ்வதால் பேசுதல் மற்றும் எழுதுதலில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கற்றல் கற்பித்தலில் ஏற்பட்ட சிக்கல்கள்

'எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்

எண்ணுவம் என்பது இழுக்கு' - என்பார் வள்ளுவர்.

தமிழ் கற்பிப்பது சவால் மிக்கப் பணி என்பதை முதன்முறையாக வகுப்பறைக்குள் நுழைந்தபோது அறிந்துகொள்ள முடிந்தது. மாணவர்கள் அனைவரும் தமிழ் பேசுவதற்கும் வாசிப்பதற்கும் அறிந்து வைத்திருப்பர் என்று நம்பி வகுப்பறைக்குள் சென்ற போது ஏமாற்றமே மிஞ்சியது. நான் பணியாற்றும் பள்ளியைப் பொறுத்தவரையில் மாணவர்கள் பேசுவதற்கும் வாசிப்பதற்கும் மிகவும் சிரமப்பட்டனர். எளிமையான பல தமிழ்ச் சொற்களைக் கூட அவர்கள் அறிந்திருக்கவில்லை.

இதனால் மாணவர்கள் ஆசிரியர் கூறும் கருத்துகளைப் புரிந்துகொள்ள முடியாமல் தவித்தனர். அல்லது வகுப்பைக் கவனிப்பதைக் கூட அவர்கள் தவிர்த்தனர். மாணவர்களை உற்சாகமாக வைத்திருக்க வேண்டும் என்று பல நகைச்சுவைத் துணுக்குகளைக் கூறுவேன். மாணவர்கள் மிகவும் அமைதியாக உட்கார்ந்திருப்பர். சிரிக்க மாட்டார்கள். எனக்கு அப்போதுதான் புரிந்தது. ஒரு சில மாணவர்கள் சிரிக்கும்போது மற்ற மாணவர்கள் ஏன் சிரிக்கிறீர்கள், ஆசிரியர் என்ன கூறினார் என்று ஆங்கிலத்தில் கேட்பர். இந்த மாணவர்களும் அதை ஆங்கிலத்தில் கேட்டுச் சிரிப்பர். ஒவ்வொரு முறையும் மற்ற மாணவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளத் தயக்கமாக இருந்ததால் தமிழைக் கற்றுக்கொள்ள வேண்டும். நகைச்சுவையைக் கேட்டுப் புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினர். சில மாணவர்கள் தனியாக என்னைச் சந்தித்து தமிழைப் பேசவும் வாசிக்கவும் முழுமையாகக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டனர். அந்த நாள் நான் பெற்ற மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. பள்ளி முடிந்தவுடன் அவர்களுக்கு ஒவ்வொரு சொல்லாகப் பொருள் விளங்கும்படி சொல்லிக் கொடுக்கத் தொடங்கினேன்.

மாணவர்களுக்குத் தமிழ்மொழி மீது ஆர்வம் ஏற்பட பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றினேன். மாணவர்களில் சிலர் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்தனர். ஆனாலும் சில மாணவர்களிடம் தமிழ் கற்றுக் கொள்வதில் தயக்கம் இருக்கத்தான் செய்தது.

இருமொழித் தொடர்புத் தளத்தைத் தெரிவு செய்தது

இன்றைய மாணவர்கள் ஆசிரியரை மட்டும் நம்பி இருப்பதில்லை. தகவல் தொழில்நுட்ப வளங்களைப் பயன்படுத்திக் கொள்வதிலும் விருப்பம் கொண்டுள்ளனர். இதனால் மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்ப வளங்களைக் கொண்டு வகுப்பறைகளைத் துடிப்புள்ளதாக்க முடியும் என்ற எண்ணம் மேலோங்கியது. கற்றல் கற்பித்தலுக்கு நிறைய மென்பொருள்கள், வலைப்பூக்கள் போன்றவை இருக்கின்றன. ஆசிரியர்கள் தாங்கள் கற்றதையும் கேட்டதையும் கொண்டு புதிய புதிய உத்திமுறைகளைக் கையாண்டு பாடங்களை நடத்தி வந்தனர். இந்தச் சமயத்தில் கல்வி அமைச்சு ஆசிரியர்களுக்கென்று ஒரு இணையத் தளத்தை உருவாக்கி அதில் ஆசிரியர்களுக்கான வளங்களைப் பதிவேற்றம் செய்தது. ஆசிரியர்களும் தங்கள் வளங்களைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளவும் இந்தத் தளத்தில் (OPAL) வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் இந்தத் தளத்தின் மூலமாக மாணவர்களோடு தொடர்பு கொள்ள முடியாது என்பதால் கல்வி அமைச்சின் கல்வித் தொழில்நுட்பப் பிரிவு `10T சிகரம்' என்ற இருவழித் தொடர்புத் தளத்தையும் கல்வி அமைச்சின் பாடத்திட்ட வரைவாக்கப் பிரிவு இருவழித் தொடர்பு தளத்தையும் (iMTL) உருவாக்கியுள்ளன. இது மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து கற்றல் கற்பித்தலை மேற்கொள்ள ஏதுவாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் கற்றலுக்கான வளங்களையும் உருவாக்கி இந்தத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

ஆசிரியர்களும் தங்கள் புத்தாக்கச் சிந்தனைக்கேற்ப வளங்களைப் பதிவேற்றம் செய்து இந்த இருவழித் தொடர்புத் தளத்தைத் துடிப்புமிக்கதாக வைத்திருக்கின்றனர். இந்த இருவழித் தொடர்புத் தளத்தின் மூலம் வகுப்பறைக்கு அப்பாலும் கற்றல் கற்பித்தல் நிகழ்வதை உறுதி செய்ய முடிகிறது. இதனால் இருவழித் தொடர்புத் தளத்தைத் தெரிவு செய்து மாணவர்களுக்குத் தமிழ் கற்றலை இனிமையானதாக ஆக்க முடிகிறது. எனவே நானும் என் வகுப்பில் இந்தத் தளத்தைப் பயன்படுத்தி மாணவர்களை வெற்றிகரமாகத் தமிழ் கற்க ஊக்குவித்து வருகிறேன்.

21 ஆம் நூற்றாண்டுத் திறன்களைக் கொண்டு கற்பித்தல்

கால மாற்றத்திற்கேற்பவும் மாணவர்களின் அறிவுத் திறனுக்கும் அவர்களிடம் காணப்படும் தகவல் தொழில்நுட்ப அறிவிற்கு ஏற்பவும் 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களைக் கொண்டு கற்பித்தல் நிகழ ஏதுவாக இருவழித் தொடர்புத் தளம் விளங்குகிறது. இன்றைய மாணவர்களைத் தன்னம்பிக்கை உள்ளவர், சுயமுனைப்புடன் கற்பவர், துடிப்புடன் பங்களிப்பவர், அக்கறை கொண்ட குடிமகனாக இருப்பவர் என்று நான்கு வகையினராகப் பிரிக்கலாம். இவர்களிடம் காணப்படும் முக்கிய விழுமியங்களாவன முறையே சுய விழிப்புணர்வு, தன்னிலை ஆளுமை, சமூக விழிப்புணர்வு, உறவுநிலை ஆளுமை மற்றும் பொறுப்பான முறையில் முடிவெடுத்தல் பண்புகள் நிறைந்திருக்கும். இதனால் இவர்களுக்குக் கருத்துப் பரிமாற்றத்தில் ஆர்வம், மற்றவருடன் இணைந்து செயலாற்றுதல், தகவல் தொழில்நுட்பத் திறன் போன்றவற்றில் சிறந்து விளங்குவர். எனவே ஆசிரியர்கள் மாணவர்களுக்கு 21- ஆம் நூற்றாண்டுத் திறன்களைக் கொண்டு கற்றல் கற்பித்தல் திறன்களை மேம்படுத்துவதோடு புத்தாக்கச் சிந்தனை மிக்க மாணவர்களை உருவாக்க முடியும் என்று நம்பலாம்.

இருவழித் தொடர்புத் தளத்தைக் கொண்டு பேசுதல், வாசித்தல் திறன்களை மாணவர்களிடம் வளர்த்தலும் அவர்களின் முன்னேற்றத்தைக் காணுதலும்

கல்வி அமைச்சு இருவழித் தொடர்புத் தளத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ள அதே வேளையில் அத்தளத்தில் மாணவர்களுக்கேற்ற கற்றல் வளங்களையும் ஏற்றம் செய்திருக்கிறது. அந்த வளங்களை மாணவர்களின் தகுதிநிலை, வயது, அனுபவம் போன்றவற்றை மனதிற்கொண்டு அவர்களுக்கு அதை வழங்குகிறோம். அதற்கான வழிகாட்டுக் குறிப்புகளும் மாணவர்களுக்கு இந்த இருவழித் தொடர்புத் தளத்தின் வழியாகவே கொடுத்து விடுகிறோம். மாணவர்களுக்கு ஏற்ற வகையில் கற்றல் வளங்களை ஆசிரியர்கள் சொந்தமாகத் தயாரித்து இந்தத் தளத்தில் பதிவேற்றம் செய்யும்போது அதை மற்ற பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்கிறது. அப்படி நான் எடுத்துக் கொண்ட முயற்சியில் ஒன்று வாசித்தல், பேசுதல் திறன்களுக்கு இத்தளத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதாகும்.

மாணவர்கள் தமிழ்ப் பாடத்தைப் படிப்பதற்கு எடுத்துக் கொள்ளும் நேரம் குறைவாக இருப்பதால் அவர்கள் தங்கள் மொழித்திறனை வளர்த்துக் கொள்ள போதிய நேரம் இருப்பதில்லை. இதனால் இருவழித் தொடர்புத் தளத்தின் மூலம் மாணவர்களுக்குப் பாடங்களைப் பதிவேற்றம் செய்தால் அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் போது வகுப்புக்கு அப்பாலும் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலை உறுதி செய்ய முடியும் என்று முடிவெடுத்தேன். அப்போது நான் எந்தெந்தக் கூறுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று யோசித்த போது வாசித்தலே எனக்கு முன் வந்து நின்றது. வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும்போது பேசுதல் திறனும் எளிதாக

வளரும் என்று நம்பினேன். அதனால் வாசித்தலையும் பேசுதலையும் மாணவர்களிடம் மேம்படுத்த இருவழித் தொடர்புத் தளத்தைத் தேர்வு செய்தேன்.

மாணவர்களிடம் வாசித்தலுக்குரிய படிநிலைகளை விளக்குதல், சிறந்த வாசிப்பிற்கு வேண்டிய உச்சரிப்பு, சரளம், குரலில் ஏற்ற இறக்கம் போன்றவற்றை விளக்குவதோடு அதற்குரிய வழிகாட்டுக் குறிப்புகளை வழங்குதல் மற்றும் இவற்றை இருவழித் தொடர்புத் தளத்தில் பதிவேற்றம் செய்து பார்க்கச் செய்தல், உள்ளூர்த் தொலைக்காட்சியின் செய்தி வாசிப்புக் காணொலிகளைப் பதிவேற்றம் செய்து பார்க்கச் செய்தல் போன்றவை வகுப்பறைக்கு வெளியில் நடைபெறும் கற்றல் நடவடிக்கைகளாக அமைந்தன.

செய்தி வாசிப்புப் பகுதியைப் பார்த்த மாணவர்கள் அந்த வாசிப்பின் வேகத்தோடு ஒத்துப் போக முடியாததால் சற்றுப் புரிந்து கொள்ள சிரமப்பட்டனர். அதன்பிறகு நானே ஒரு பக்கக் கதை ஒன்றை வாசித்து உச்சரிப்பு முதலான கூறுகளைக் கண்டறிந்து கொள்வது போல ஒளிப்பதிவு செய்து இத்தளத்தில் பதிவேற்றம் செய்தேன். மாணவர்கள் அதன்பிறகு பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கும் வாசிப்புப் பகுதிகளைப் பார்த்து வாசித்தனர். இதற்குமுன் அவர்கள் வாசித்ததைவிட ஓரளவு சரியாக வாசித்து அனுப்பினர். மேலும் அவர்களிடம் வாசிப்பதில் தன்னம்பிக்கை ஏற்படத் தொடங்கியது.

அடுத்து பேசுதல் நடவடிக்கைகளை இதேமுறையில் செயல்படுத்த விரும்பி அதற்கான முயற்சிகளில் இறங்கினேன். ஒரு தலைப்பைக் கொடுத்தால் அந்தத் தலைப்பையொட்டிப் பேசுவது என்பது குறித்து மாணவர்களிடம் கலந்துரையாடினேன். அப்போது மாணவர்கள் தங்களுக்கு இருக்கும் பிரச்சனையை முன் வைத்தனர். அதாவது, எப்படித் தொடங்குவது, எங்கிருந்து தொடங்குவது, என்னவெல்லாம் பேச வேண்டும், எப்படி முடிக்க வேண்டும் என்ற அமைப்பு முறையைப் பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லை. இதனால் அவர்களால் ஒரு தலைப்பையொட்டித் தன்னம்பிக்கையுடன் பேச முடியவில்லை. தமிழ் அறிஞர்கள் பலர் பேசிய காணொலிகளைப் பதிவேற்றம் செய்து பார்க்கச் சொன்னேன். பல மாணவர்கள் அறிஞர்கள் பேசும் தமிழ் புரியவில்லை என்றும் பல சொற்களைத் தாங்கள் இதற்கு முன் கேட்டதில்லை என்றும் கூறினர்.

மாணவர்களிடம் மீண்டும் பேசுதலில் எதிர்பார்க்கும் கூறுகள், அமைப்பு முறை போன்றவற்றிற்கு ஒரு வழிகாட்டுக் குறிப்பை உருவாக்கிப் பதிவேற்றம் செய்தேன். ஒரு தலைப்பையொட்டிப் பேசுவதற்கு, முதலில் தலைப்பைப் பற்றிய விளக்கம், நன்மை தீமைகள், உனது கருத்து என்ற அடிப்படையில் பேச வேண்டும் என்று பயிற்சி தந்தேன். ஒரு தலைப்பையொட்டி நானே பேசி ஒளிப்பதிவு செய்து பதிவேற்றம் செய்தேன். அதைக் கேட்ட மாணவர்கள் வேறு ஒரு தலைப்பிற்கு எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்ற வகையில் பேசி இருவழித் தொடர்புத் தளத்தில் பதிவேற்றம் செய்திருந்தனர். அவற்றிலிருந்து நான் மாணவர்களிடம் ஏற்பட்ட தன்னம்பிக்கையையும் பேசும் முறைகளைப் பற்றி அறிந்துகொண்டதையும் உணர முடிந்தது.

மாணவர்களிடம் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்த நானும் என் பள்ளி ஆசிரியரும் மேலும் பல பயிற்சிகளைச் செய்தோம். குறும்படங்களைப் பதிவேற்றம் செய்து அதைப் பற்றிய கருத்துகளைப் பேச வைத்தோம். மாணவர்கள் தங்களாலும் தமிழைப் பிழையின்றி வாசிக்கவும் பேசவும் முடியும் என்ற நம்பிக்கை விதைகளை விதைத்தோம். மாணவர்களின் கருத்துகளைக் கேட்கும் போது இருவழித் தொடர்புத் தளத்தைப் பின்பற்றிக் கற்றுக் கொள்வது எளிமையாக இருப்பதாகக் கூறினர். மேலும் பல்வேறு காணொலிகள் மூலம் மொழித்திறனை மேம்படுத்திக் கொள்ள முடிகிறது என்று அவர்கள் தங்கள் தரப்புக் கருத்துகளைக் கூறினர்.

பரிந்துரைகள்

இன்றைய மாணவர்களுக்குத் தொழில்நுட்ப உதவியுடன் வகுப்பறையிலும் வகுப்பறைக்கு வெளியேயும் கற்றல் கற்பித்தல் நடைபெறும் போது ஆர்வத்துடன் ஈடுபடுவர் என்பதை அறிந்துகொள்ள முடிந்தது. இதுபோன்ற இருவழித் தொடர்புத் தளங்களைப் பயன்படுத்தி மாணவர்கள் வாழ்வில் மொழியை நிலைபெறச் செய்யலாம். மேலும் கல்விக்காகப் பல்வேறு வகையான இணையத் தளங்கள் இலவசமாகவே இயங்குகின்றன. அவற்றைப் பயன்படுத்தி மாணவர்களிடம் தமிழை எளிதாகக் கொண்டு சேர்க்க முடியும். தமிழை இரண்டாம் மொழியாகப் படிக்கும் மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்பக் கல்வி ஒரு வரமாகும். இன்றைய **திறன் பேசிகளிலேயே மாணவர்களைத் தொடர்பில் வைத்துக் கொள்ள பல்வேறு செயலிகள்** வந்துவிட்டன. அவற்றைப் பயன்படுத்தியும் மாணவர்களுக்குத் தமிழைக் கற்பிக்க முடியும்.

www.edmodo.com என்ற இணையத்தளத்தைப் பயன்படுத்தி மாணவர்களுக்குக் கற்பிக்க முடியும். இந்தத் தளத்தை மாணவர்கள் பயன்படுத்துவதைப் பெற்றோர்களும் கண்காணிக்க முடியும். Trialshuttle, screen cast o matic, vocarro, mind mapping, mind meister, google forms, socrative போன்ற மென்பொருள்களைப் பயன்படுத்தி வகுப்பறையில் தமிழை மாணவர்களிடம் எளிதாகக் கொண்டு சேர்க்க முடியும். இன்னும் ஏராளமான மென்பொருள்கள் இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தித் தமிழை வாழும் மொழியாக நிலைத்திருக்கச் செய்ய தமிழாசிரியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம். நன்றி.



27. தமிழை இரண்டாம் மொழியாகவும் பிறமொழியாகவும் பயிலும் மாணவருக்குரிய புதிய கற்பித்தல் உத்திகள்

பொன்னையா விவேகானந்தன், கனடா

முன்னுரை

உலகின் பல பாகங்களிலும் நிரந்தரமாகக் குடியேறிவிட்ட தமிழர் தமது தாய்மொழியான தமிழை தொடர்பாடல் மொழியாகவும் பண்பாட்டு மொழியாகவும் பேணவும் தம் நடத்தையில் வெளிப்படுத்தவும் முயன்று வருகின்றனர். வாழும் நாட்டினது சமூகச் சூழலுக்கு அமையவே தமது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டிய நிலை வாழும் நாடுகளில் காணப்படுகின்றது. இப்போக்கில் மொழி, பண்பாடு, பழக்கவழக்கங்கள் போன்றன இயல்பாகவே இழப்புக்குள்ளாகும் அபாயம் நிகழ்ந்து வருகின்றது. இந்நிலையில் திட்டமிடப்பட்ட சிறப்பான மொழிக் கல்வியே தொடரும் தலைமுறையினரின் இனஞ் சார்ந்த இருப்புக்கு தளமாகவும் பலமாகவும் அமைய வல்லதாகும். இந்நாடுகளில் மொழிக்கல்வி தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பல்வேறு செயற்பாடுகளையும் எதிர்கால நோக்கங்களையும் இக்கட்டுரை விவரிக்க முயல்கின்றது.

தாய்மொழியை இரண்டாம் நிலையில் கற்கும் சூழலின் தோற்றம்

'தாய்மொழியைப் பாரம்பரிய மொழியாக முதல் மொழிக்கு அடுத்த நிலையில் கற்றல்' என்னும் சூழலின் தோற்றம் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே அவதானத்துக்குரியதாக உருக்கொண்டதெனலாம். இக்கல்விச் சூழல் தோற்றம் கொண்டதற்கான பின்புலத்தை நாம் அறிந்திருத்தல் இக்கட்டுரையை முழுமையாக விளங்கிக் கொள்ள உதவும்.

விடுதலைக்குப் பின் பிரித்தானிய பிரஞ்சு அரசுகளோடு நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்தோரும் மேனாட்டு வாழ்வியற் பண்புகளைப் பெரிதும் விரும்பியோரும் வசதி படைத்த சிலரும் காலனித்துவ ஆட்சியாளருடன் சேர்ந்து வெளியேற விரும்பினர். இவ்வாறு வெளியேறியோர் பிரித்தானிய பிரஞ்சு ஆட்சிகள் தொடர்ந்த நாடுகளில் குடியேறி நிரந்தரமாக வாழத் தலைப்பட்டனர்.

ஐரோப்பியரது ஆட்சிக் காலத்தில் வேலை வாய்ப்புகளுக்காக அவர்களது ஆட்சிக்குட்பட்டிருந்த பிற நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டோர் இருவகையினராவர். கூலித் தொழிலாளிகளாகக் கொண்டு செல்லப்பட்டோர் ஒருவகை. கல்விப் பின்புலம் சார்ந்து தொழில் வாய்ப்புப் பெற்றுச் சென்றோர் மறுவகை. இத்தகையோரும் அந்தந்த நாடுகளில் நிரந்தரமாகத் தங்கிவிட்டனர்.

விடுதலைக்குப் பின்னரும் கல்வி, தொழில் வாய்ப்புகளுக்காக வளர்ச்சியுள்ள நாடுகளுக்குச் செல்வோரும் இருந்தனர். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உள்நாட்டு யுத்தங்கள், இயற்கைப் பேரழிவுகள் காரணமாக

அகதிகள் என்ற பகுப்பில் கணிசமானோர் ஐரோப்பிய வடஅமெரிக்க ஆஸ்திரேலிய நாடுகளில் குடியேறினர். இத்தகையோரும் குடியேறிய நாடுகளில் நிரந்தரமாகத் தம் வாழ்வை அமைத்துக் கொண்டனர்.

இவ்வாறு குடியேறியோர் தமது முதற் தலைமுறையின் போது பெரிதும் தாய்மொழியிலேயே தமது தொடர்பாடலைக் கொண்டிருந்தனர். அவரது சிந்தனா மொழியாகவும் தாய்மொழியே இருந்தது.

மொழியாலும் பண்பாட்டாலும் பழக்கவழக்கங்களாலும் முற்றிலும் மாறுபட்ட ஒரு புலத்தில் வாழத் தலைப்பட்ட ஓரினத்தினது தனித்துவ இயல்புகளில் மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

குடியேறியோரது இரண்டாம் தலைமுறையே இவ்வாறான மாற்றங்களைப் பெரிதும் பிரதிபலிப்போராக இருந்தனர். குடும்பம் என்ற சிறு வட்டத்துக்கு அப்பால் இரண்டாம் தலைமுறையினரின் சமூக மொழியாகவும் தொடர்பாடல் மொழியாகவும் அவ்வவ் நாடுகளுக்குரிய மொழியே ஆதிக்கம் சிந்தனா மொழியாகவும் அது திகழ்ந்தது. அவர்களது தாய்மொழி இரண்டாம் மொழி என்னும் நிலையை அடைந்தது.

இந்நிலையில்தான் முதல்மொழிக்கு அடுத்து, தாய்மொழியை, பாரம்பரிய மொழியாக இரண்டாம் நிலையில் கற்கும் சூழல் தோற்றம் கொண்டது.

இச்சூழல் தமிழருக்கு மட்டும் உரியதன்று; ஆசிய, ஆப்பிரிக்க தென்னமெரிக்க, கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தோருக்கும் பொருந்தும்.

தமிழ்மொழி இரண்டாம் நிலையில் கற்பிக்கப்படும் நாடுகள்

மேற்கூறப்பட்டவாறு புலம்பெயர்ந்தோரில் தமிழரும் அடங்குவர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இப்பெயர்வுகள் தொடங்கிவிட்டன. ஆங்கிலேயர் தமிழரைக் கூட்டங்கூட்டமாக லத்தீன். அமெரிக்கா, ஆப்பிரிக்கா, பிஜி தீவுகள், சிங்கப்பூர், மலேசியா, மொரீசியஸ் போன்ற நாடுகளுக்கு அழைத்துச் சென்றனர். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே கல்வி, தொழில் போன்றவற்றோடு அகதிகள் என்ற வகையிலும் ஐரோப்பா, வடஅமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் தமிழர் குடியேறினர்.

இப்போது லத்தீன் அமெரிக்க நாடுகளான கயானா, டிரினிடாட் மற்றும் பிஜி தீவுகளில் வாழ்வோர் பெரிதும் தமிழருக்கான அடையாளங்களை இழந்துவிட்டனர். தாய்மொழி எதுவெனத் தெரியாதோராகவே பலரும் வாழ்கின்றனர். அவர்களது மொழி ஆங்கிலமாகவே மாறிவிட்டது.

ஐரோப்பா, வடஅமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, மொரீசியஸ் போன்ற நாடுகளில் தாய்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் சூழல் வலுவாகத் தோற்றம் கொண்டுள்ளது.

சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் தமிழ் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்பட்டாலும் முதல்மொழி என்னும் தகுதியை அது இன்னும் இழந்துவிடவில்லை எனலாம். சமூக மொழியாகவும் தொடர் பாடல் மொழியாகவும் தமிழ் இப்போது அங்கு நிலைத்துள்ளது. இவ்விரு நாடுகளும் தாயகத்தோடு நெருக்கமான தொடர்பைக் கொண்டிருப்பதனால் இச்சூழல் மாற்றமடைய வாய்ப்பில்லை.

தமிழ்மொழி இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படும் நாடுகளான ஐரோப்பா, வடஅமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா போன்றவற்றினது கல்விச் சூழலே இக்கட்டுரைக்குத் தளமாக அமைகின்றது.

தமிழ் இரண்டாம் நிலையில் கற்பிக்கப்படும் சூழலைப் புரிந்து கொள்ளல்

1980களுக்கு முன்பே இச்சூழல் உருவாகிவிட்டது எனலாம். தொடக்கத்தில் வீடுகளில் தொடக்கத்தில் ஓரிருவராக வீடுகளில் தமிழ்ப் பெற்றோர் அல்லது தமிழ் மொழியறிவு கொண்டோரால் தமிழ் கற்பிக்கப்பட்டது. தாய்மொழிக் கல்விச் செயல்பாடுகள் 1990க்குப் பின்தான் நிறுவனமயப்படுத்தப்படடன. அதன் பின்பே இக்கல்விச் சூழல் பற்றிய விழிப்புணர்வு கல்வியாளருக்கு ஏற்பட்டது.

இக்கருத்துக்கு ஆப்பிரிக்கா விதிவிலக்காகும். ஆப்பிரிக்கத் தமிழர் 150 ஆண்டுகளுக்கு மேலாக ஆப்பிரிக்காவில் வலுவான சமூகமாக வாழ்ந்து வருகின்றனர். தாய்மொழியாக இரண்டாம் மொழியைக் கற்பிக்கும் சூழல் அங்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பாகவே உருவாகிவிட்டது. ஆப்பிரிக்காவில் குடியேறியோர் பலரும் கற்றறிந்தோர் என்பதனால் இனஞ்சார் அடையாளங்கள் பெரிதும் அங்கு பேணப்பட்டன. அதன் தொடர்ச்சியை இன்றும் அங்கு காணலாம்.

இப்புதிய கல்விச் சூழலானது. தாயக மொழி கற்பித்தல் முறைகளிலிருந்து பெரிதும் மாறுபட்டது என்பதை அடிப்படையில் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

தமிழைத் தாய்மொழியாக் கொண்ட குடும்பத்தில் பிறந்தோர் வீட்டில் பேச்சு மொழியாகத் தமிழைப் புரிந்து கொள்பவராகவும் சிலவேளை ஓரளவு அல்லது சில சொற்கள் பேசவும் தெரிந்திருப்பர். இவர்களது தொடர்பாடலும் சிந்தனையும் கல்வி மொழியும் அந்நாட்டிற்குரிய மொழி வழியாகவே நடைபெறும். இந்த மொழியே இவர்களது முதல் மொழியாகும். இந்நிலையில் தாய்மொழியான தமிழை இரண்டாம் நிலையில் கற்பர்.

இவ்வாறானோர் தமிழைக் கற்கும்போது அந்நாட்டுக்குரிய மொழியோடு ஒப்பிட்டே கற்பர். அந்நாட்டுக்குரிய கற்பித்தல் முறைகளையும் வகுப்பறைச் சூழலையும் தமிழ்மொழி கற்பித்தல் சூழலோடு ஒப்பிடுவர்.

இந்நாடுகளில் தாய்மொழி கற்றலில் அந்நாடுகளுக்குரிய கல்விச் சூழல் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இச்சூழலில் தாய்மொழி கற்பிப்போர் அந்நாட்டுக்குரிய கல்விச் சூழலைப் புரிந்து கொள்வது மிக அவசியமானது.

தொடக்ககாலக் கற்பித்தல் முறைகள்

தாய்மொழிக் கல்வி நிறுவன மயமாக்கப்படுவதற்கு முன்னரும் பின்னான தொடக்க காலத்திலும் பெரிதும் தாயகக் கற்பித்தல் முறைகளே கடைப்பிடிக்கப்பட்டன. தொடக்கத்தில் இக்கற்பித்தல் முறை பயன் தந்தது என்பதை மறுப்பதற்கில்லை. தாயகத்தில் பிறந்து இந்நாடுகளில் குடியேறியோர் கணிசமாக இருந்தமையே இதற்குக் காரணமாகும்.

ஆரம்பத்தில் தாயகத்தில் இருந்து தருவிக்கப்பட்ட பாடநூல்களும் அவற்றை அடியொற்றி இங்கு உருவாக்கப்பட்ட சில நூல்களும் பயன்படுத்தப்பட்டன. பெரிதும் ஆசிரியர் மையக் கல்வி முறையே பின்பற்றப்பட்டது. பெரும்பாலும் தமிழ் ஆசிரியர் தாம் வாழும் நாடுகளின் கற்பித்தல் சூழலை முறையாக அறியாதவராகவும் தாயகக் கற்பித்தல் முறைகளே அதிகம் அறிந்தவராகவும் இருந்தனர். இவர்களில் பலர் தாயகத்தில் தமிழ்மொழி கற்பிக்காதவராகவும் இருந்தனர்.

இக்கற்பித்தல் முறைகள் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் போன்ற மொழிப் பயன்பாடுகளையே உச்ச இலக்குகளாகக் கொண்டிருந்தன. கற்போர் தமிழில் தொடர்பாடுதலும் மொழியறிவு பெற்றிருத்தலும் தொடக்ககாலக் கல்விமுறையின் நோக்கங்களாக இருந்தன. தகவல்தொழில் நுட்பக் கருவிகளின் பயன்பாடுகள் அக்காலத்தில் பெரிதும் இல்லாதிருந்தன.

தமிழ் கற்கும் மாணவரின் தற்காலச் சமூகப் பின்னணி

தாய்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதற்கான வழி முறைகளையும் புதிய உத்திகளையும் தெரிந்து கொள்வதற்கு முன்பாகத் தற்கால மாணவ சமூகத்தைப் புரிந்து கொள்ளுதல் அவசியமாகும். நான்கு அகவை முதல் பதினெட்டு அகவை வரையானோரையே மாணவராகக் கருதி இக்கட்டுரை எழுதப்படுகின்றனது.

1980க்குப் பின் மேற்கூறிய நாடுகளில் ஏறக்குறைய பத்து இலட்சம் தமிழர் குடியேறியுள்ளனர். கடந்த பத்து ஆண்டுகளாக இந்நாடுகளில் தமிழர் குடியேறும் தொகை வீழ்ச்சியடைந்து வருகின்றது. ஆயினும் குடியேறியோரது குடும்ப வாழ்வின் வழியே பிறக்கும் குழந்தைகள் தமிழரது எண்ணிக்கை உயர வழி செய்கின்றன. இவர்களே இரண்டாம் தலைமுறையினர் எனப்படுகின்றனர். மூத்த தலைமுறையினர் ஓய்வை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் நிலையில் இரண்டாம் தலைமுறையினர் சமூகப் பொறுப்புகளைக் கையில் எடுத்து வருகின்றனர். தற்போதைய மாணவர் சமூகத்தினரில் கணிசமானோர் மூன்றாம் தலைமுறையினராவர்.

தலைமுறை இடைவெளிகள் பெரிதும் காணப்படுகின்ற இச்சமூகங்களில் தலைமுறை தோறும் தமிழ்ப் பயன்பாடு வீழ்ச்சியடைந்து செல்வதை வெளிப்படையாகவே கண்டு கொள்ளலாம். மொழி, பண்பாடு வாழ்வியல் நடைமுறைகள் சார்ந்து, வாழும் நாட்டினது இயல்புகளைப் பெரிதும் உள்வாங்கியோராகவே மூன்றாம் தலைமுறையினர் திகழ்கின்றனர்.

குறிப்பாக ஆங்கிலத்தை முதல் மொழியாகக் கொண்ட நாடுகளில் வாழும் இரண்டாம் தலைமுறையினரது குடும்பப் பேச்சு மொழியில் தமிழின் பங்களிப்பு குறைவாகவே இருக்கின்றது. மூன்றாம் தலைமுறையினரின் மொழி இழப்புக்கு இது குறிப்பிடத்தக்க காரணமாகும்.

தாய்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்றலும் கற்பித்தலும்

இத்தலைப்பே இக்கட்டுரையின் முக்கியப் பகுதியாகும். ஏறக்குறைய ஐம்பதினாயிரம் மாணவர் மேற்கூறிய நாடுகளில் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்று வருகின்றனர். நாட்டுக்கு நாடு கற்பித்தல்

இலக்குகளிலும் உத்திகளிலும் வேறுபாடுகள் உள்ளன. எனினும் நாடுகள் தோறும் கற்பித்தலில் காணப்படும் பொதுப் பண்புகளையே இக்கட்டுரை எடுத்து வர முயல்கின்றது.

இந்நாடுகளில் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறையில் இருந்து வருகின்ற கற்பித்தல் முறைகளைச் சில துணைத் தலைப்புகளின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

இலக்குகளை நிர்ணயித்தல்

மொழி கற்பித்தலுக்கான இலக்குகளை இருவகையாகத் திட்டமிடலாம்.

- பாடநூலுக்கான இலக்குகளைத் திட்டமிடுதல்
- வகுப்பறைக் கற்பித்தலுக்கான இலக்குகளைத் திட்டமிடுதல்

மொழிக்கல்வியைப் பொறுத்தவரை பாடநூல்கள் வகுப்பறைக் கற்றல் செயல்பாடுகளுக்கு உதவும் துணை வளங்களே தவிர அவையே மாணவருக்கான இலக்குகளைக் கொண்டவையாகக் கருத முடியாது. இக்கட்டுரை வகுப்பறைக் கற்பித்தலுக்கான இலக்குகளைத் திட்டமிடுதல் பற்றியே பெரிதும் பேசுகின்றது.

கற்பித்தலைத் தொடங்கும் முன் மொழிக் கல்வியின் வழியே மாணவர் அடைய வேண்டிய இலக்குகளை நிர்ணயித்தல் வேண்டும். குறிப்பிட்ட வகுப்புக்கென்றோ அல்லது குறிப்பிட்ட அகவைக்கென்றோ இலக்குகளைத் திட்டமிடுதல் மொழிக் கல்விக்குப் பொருத்தமாகாது. ஒத்த வகுப்பு அல்லது ஒத்த அகவையினராக இருந்த போதும் மாணவரிடையே காணப்படும் மொழியறிவுத் தளம் கணிசமான வேறுபாடுகளைக் கொண்டுள்ளது. ஒத்த மொழியறிவு கொண்ட மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கென இலக்குகள் திட்டமிடப்பட வேண்டும்.

இலக்குகளை நிர்ணயிக்க மாணவரைக் கீழ்வரும் நிலைகளின் ஊடாகப் புரிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

மாணவரது அகவை, அகவைக்குரிய உள வளர்ச்சி. மொழியைக் கற்பிக்கும் முன் மாணவர் கொண்டிருக்கும் தாய்மொழி அறிவு

மாணவரது குடும்பச் சூழல், சமூகப் பின்னணி எதிர்காலத்தில் மாணவர் தாய்மொழியை எந்த அளவுக்குப் பயன்படுத்துவர்?

என்பன பற்றிய தெளிவான புரிதல் ஆசிரியருக்கு இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு மாணவரும் மேற்காணும் நிலைகளில் வேறுபாடுகளைக் கொண்டிருப்பர். இதைத் தெரிந்து கொள்ளுதல் இலக்குகளைத் திட்டமிடவும் மாணவரை முறையாக அணுகவும் உதவும். அவ்வப்போது கல்வி குறித்துப் பெற்றோருடன் கலந்து பேச வேண்டும் என இந்நாட்டுக் கல்வியாளர் கருதுகின்றனர்.

மொழிக்கல்விக்கான இலக்குகளைத் திட்டமிடுவோர் பெரிதும் கற்போரது தொடர்பாடலுக்கான மொழிப் பயன்பாடுகளையே பெரிதும் முன்னிறுத்துகின்றனர்.

தற்போதைய கல்விச் சூழலில் மொழி கற்பித்தலுக்குரிய இலக்குகள் பற்றிய விடயங்களே மேலே கூறப்பட்டுள்ளன. மாற்றமடைந்துவரும் இக்கற்றல் சூழலுக்குரிய எதிர்கால இலக்குகள் மேலும் விரிவடைய வேண்டியனவாகும். இது பற்றி மற்றொரு பகுதியில் கூறப்பட்டுள்ளது.

வகுப்பறைச் செயற்பாடுகள்

இலக்குகளை வகுத்துக் கொண்டபின் ஆசிரியர் வகுப்பறைச் செயற்பாடுகளைத் திட்டமிட்டுத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ளுதல் முதன்மையான பணியாகும்.

- இலக்குகளுக்கு ஏற்ப நாளாந்தப் பாடத்திட்டத்தைத் தயாரித்துக் கொள்ளுதல்
- இதமான வகுப்பறைச் சூழலை உருவாக்குதல்
- மாணவரை ஈர்த்தல்
- நாளாந்தப் பாடத்திட்டத்துக்கு அமைய, செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்
- மாணவரை மதிப்பீடு செய்தல்
- மதிப்பீட்டை அடுத்த வகுப்புக்கான பாடத் திட்டத்துக்காகப் பயன்படுத்துதல்
- போன்றன ஆசிரியரது வகுப்பறைச் செயற்பாடுகளில் முக்கியமானவையாகும்.

பாடத்திட்டத்தைத் தயாரித்தல்

இந்நாடுகளில் பாடத்திட்டத்தை ஐவகையாகப் பிரிப்பர்.

- ஓராண்டுக்குரிய பாடத்திட்டம்
- பருவத்துக்குரிய பாடத்திட்டம்
- மாதாந்தப் பாடத்திட்டம்
- வாராந்தப் பாடத்திட்டம்
- நாளாந்தப் பாடத்திட்டம்

ஓராண்டுக்கென வகுக்கப்பட்ட இலக்குகளை மையப்படுத்தியே ஏனைய பாடத்திட்டங்கள் வகுக்கப்படும். இவற்றுள் பிரதானமானது நாளாந்தப் பாடத்திட்டமாகும். திட்டமிடப்பட்ட இலக்குகளின் அடிப்படையில் மாணவரின் திறன்களுக்கு ஏற்ப, அன்றைய நாளின் இலக்கை முடிவு செய்தல் வேண்டும். மாணவர் அவ்விலக்கை எட்டுவதற்கான செயற்பாடுகளை மாணவர் முழுமையாகப் பங்குபெறும் வகையில் உருவாக்க வேண்டும். மாணவரது விருப்போடும் ஒத்துழைப்போடும் செயற்பாடுகளைத் திட்டமிட்டவாறு நிறைவு செய்தபின் மாணவர் அன்றைய நாளுக்குரிய இலக்கினை எட்டியுள்ளனரா என மதிப்பீடு செய்தல் வேண்டும். இந்த மதிப்பீட்டின் அடிப்படையிலேயே மறு வகுப்புக்குரிய பாடத்திட்டம் உருவாக்கப்படல் வேண்டும்.

இந்நாடுகளில் மொழி வகுப்புகளுக்குரிய பாடத்திட்டத்தை உருவாக்குதல் எளிதன்று, ஒரே வகுப்பில் மொழியறிவில் பலதரப்பட்ட தரங்களைக் கொண்டோர் இருப்பர். ஒரே தரத்தைக் கொண்டோர் தனிக் குழுக்காளக்கப்படுவர். அவர்களுக்கான இலக்குகளும் வேறுவேறாகவே இருக்கும். இவ்விலக்குகளுக்கு ஏற்ப, ஒவ்வொரு குழுக்களுக்குமான வகுப்பறைச் செயற்பாடுகளும் வேறுபட்டே காணப்படும். குறித்த மணி நேரத்துக்குள் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுதல் சவால்கள் நிறைந்த ஒன்றே. எனினும் மொழி ஆசிரியரைப் பொறுத்தவரையில் இவை தவிர்க்க முடியாத பணிகளாகவே உள்ளன.

திட்டமிடப்பட்ட இலக்குகளை நோக்கிச் செல்வதற்கு வகுப்பறைச் செயற்பாடுகளே பெரிதும் உதவுகின்றன. வகுப்பறைச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்பாக வகுப்பறைச் சூழல் மாணவரை ஈர்ப்பதாக அமைதல் வேண்டும்.

வகுப்பறைச் சூழல்

மாணவர் நாளாந்தப் பாடசாலை வகுப்பறைகளில் பெறுகின்ற அனுபவத்தையே இவ்வகுப்பறைச் சூழலிலும் எதிர்பார்ப்பர். வளர்ச்சியடைந்த நாடுகளில் நாளாந்தப் பாடசாலை வகுப்பறைகள் பெருமளவில் நவீனமயப்படுத்தப்பட்டு வருகின்றன. கற்றலுக்கு உகந்த வண்ணப் படங்களும் மாணவரைக் கவரும் காட்சிகளும் கற்றலுக்கான கருவிகளும் வகுப்பறையை அழகுபடுத்துபவனவாக எங்கும் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும். குழுநிலைச் செயற்பாட்டுக்கும் மாணவர் மையக் கல்வி முறைக்கும் ஏற்ப மாணவர் இருக்கைகள் அமைக்கப்பட்டிருக்கும். கணினித்திரை போன்ற மின்திரைகளே எழுதுபலகைகளாக வகுப்பறைகளில் உருப்பெற்றுள்ளன. இவ்வாறான கற்றல் சூழலுடன் தமிழ் வகுப்புகளை மாணவர் ஒப்பிடுதல் தவிர்க்க முடியாததாகும். இவ்வகுப்பறைச் சூழலிலேயே அரச கல்விச் சபைகளின் வகுப்புகள் நடைபெறுகின்றன. சமூக தனியார் நிறுவனங்களும் இவை போன்ற வகுப்பறைச் சூழலை அமைத்து வருகின்றன.

ஆசிரியர் மீதான ஈர்ப்பு

கற்றலுக்கு முன்பாகக் கற்பிக்கும் ஆசிரியர் மீதான ஈர்ப்பு கற்றலின் போது பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது. அன்பும் கனிவும் பரிவான நெருக்கமும் ஆசிரியரின் உயர்ந்த பண்புகளாக எங்கும் போற்றப்படுகின்றன. ஆசிரியர் வகுப்பறையில் சினம் கொள்வதோ, கடுஞ் சொற்கள் பயன்படுத்துவதோ இந்நாடுகளில் குற்றமாகும். கனிவான நடத்தையும் இனிமையான சொற்களும் கொண்டு ஆசிரியர் வகுப்பைத் தொடங்குவாராயின் அவ்வாசிரியர் மாணவரது விருப்பத்துக்குரியவராவர். இதற்கான பயிற்சிகள் பயிலரங்குகள் மூலம் ஆசிரியருக்கு வழங்கப்படுகின்றன.

செயற்பாடுகள்

கற்றலுக்குரிய இதமான சூழ்நிலையை வகுப்பறையில் ஏற்படுத்திய பின் கற்றலை நோக்கி மாணவரை ஒருமுகப்படுத்துவதும் பிரதானமானது. எல்லோருக்கும் பிடித்தமான ஒரு பாடலோ அல்லது கதையோ அல்லது பிற உத்திகளைப் பயன்படுத்தியோ மாணவரை, கற்றல் மனநிலைக்கு முழுமையாக அழைத்துவர வேண்டும்.

தொடர்ந்து திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை மாணவரோடு நெருக்கமாக இணைந்து முன்னெடுக்க வேண்டும். மாணவருள் மொழியறிவு சார்ந்து பலதரப்பட்டோர் இருப்பர். அத்தகையோரை முறையாக இனங்கண்டு தனிக்குழுக்களாக்கி அவர்களுக்குரிய செயற்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும்.

கற்றலின் போது மாணவர் விருப்போடும் ஆர்வத்தோடும் மொழியைக் கற்பதற்கான உத்திகளைப் பெரிதும் பயன்படுத்தும் களம் இதுவாகும். மொழித் திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் போன்றவற்றில் மாணவர் தேர்ச்சி பெறும் வகையில் அவர்கள் இயல்பறிந்து உரிய உத்திகள் பயன்படுத்தப்பட வேண்டும். கற்றல் தொடர்பாக மாணவரது பலத்தையும் பலவீனத்தையும் நன்கு அறிந்திருந்தால் மட்டுமே கற்பித்தல் உத்திகள் நிறைவான வெற்றியைத் தரும்.

வகுப்பறையில் அனைத்து மாணவருக்கும் சமனான முறையில் கல்வி கற்பித்தல் ஆசிரியரின் கடமையாகும். எவரையும் சிறிதளவும் புறக்கணித்துவிட முடியாது. மாணவரில் எவரும் மூடர் இல்லை. கற்றலில் பின் தங்கியிருக்கும் மாணவரிடம் கற்றலைக் கொண்டு போவதற்கான ஒரு வழி நிச்சயம் இருக்கும். அதைக் கண்டறிந்து அதன் வழியே கற்பிப்பதுதான் ஆசிரியரது கடமை. சிறந்தவொரு ஆசிரியர் எந்தவொரு மாணவரையும் மூடர் என்று சொல்லார்.

கல்வித்துறை ஆய்வாளர் Howard Gardenar என்பார் ஆய்வுகளின் வழியே கண்டறிந்த Differentiating Instruction என்னும் 'பன்முக நுண்ணறிவுக் கோட்பாட்டு வழிக் கற்பித்தல் முறை' மாணவரது கற்றல் வழி இயல்புகளை வெகு நுட்பமாக வகைப்படுத்தியுள்ளது.

மதிப்பீடு

வகுப்பறைச் செயற்பாடுகளின் நிறைவில் மேற்கொள்ளப்படும் மதிப்பீடே அன்றைய வகுப்பின் உன்னத நிலையாகும். இதுவே அடுத்த நிலைக்கு மாணவரை நகர்த்துவதற்கான திட்டமிடலுக்குரிய சரியான தகவல்களைத் தருவதாகும்.

அந்நாளுக்குரிய செயற்பாடுகளின் வழியே இலக்குகளை அடைந்தோரையும் அடையாதோரையும் இனங்கண்டு அவர்களுக்கான அடுத்த படிநிலையைத் தயாரிக்க இந்த மதிப்பீடுகளைப் பயன்படுத்த வேண்டும்.

மேற்குலக நாடுகளில் மாணவரது கல்வி மதிப்பீடு தனித்துறையாக வளர்ந்து வருகின்றது.

இதுவரை கூறப்பட்டவை இந்நாடுகளில் மொழிக்கல்வி கற்பிக்கப்படும் பொதுமுறை சார்ந்ததாகும். கனடா, நார்வே போன்ற நாடுகளில் அரசு, மொழிக்கல்வி வகுப்புகளை மேற்கூறப்பட்ட முறைகளுக்கமையவே நடத்துகின்றன.

கற்பித்தல் உத்திகள் - தேவையும் தேடலும்

மொழிக்கல்வி தொடர்பான உத்திகள் கடந்தகால அனுபவங்களில் இருந்தும் கற்கும் மாணவரின் சூழலை நன்கு புரிந்து கொள்வதிலிருந்தும் தோன்றுகின்றன. மொழிக் கல்விக்கான உத்திகள் பெரிதும் ஏனைய பாடங்களைக் கற்பிக்கும் முறைகளில் இருந்து வேறுபடுகின்றன.

தமிழே மூல மொழியாக இருக்கும் சூழலில் அதனையே முதல் மொழியாகவும் கற்கும் முறை. (எ-டு தாயகத் தமிழ்க்கல்வி)

தமிழ்மொழி வீட்டு மொழியாகவும் தொடர்பாடல் மொழியாகவும் பேணப்பட்டு வரும் சூழலில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் முறை. எ-டு (சிங்கப்பூர் மலேசியா தமிழ்க்கல்வி)

இயற்கை, பண்பாட்டுத் தளங்களில் பெரிதும் மாறுபட்ட நாட்டில் பிறிதொரு மொழியின் பேராதிக்கம் மிக்க சூழலில் தமிழ்த் தலைமுறையினர் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் முறை. (எ-டு வட அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள்)

தமிழர் அல்லாத பிறவினத்தோர் விருப்ப மொழியாகத் தமிழைக் கற்கும் முறை.

உலகெங்கும் தமிழ் கற்பிக்கப்படும் முறைகளை மேற்குறிப்பிட்ட நான்கு பகுப்புகளுக்குள் அடக்கி விடலாம்.

இவற்றுள் சவால்களும் இடர்களும் மிக்கது வட அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ்த் தலைமுறையினருக்குத் தமிழ் பயிற்றுவிக்கப்படும் முறைகளே ஆகும். ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக இந்த நாடுகளின் கற்பித்தல் முறைகளும் சிங்கப்பூர் மலேசிய கற்பித்தல் முறைகளும் பெரிதும் ஒத்திருந்தன. அக்காலப் பகுதிகளில் புலம்பெயர்ந்தோர் வீடுகளிலும் தொடர்பாடலிலும் தமிழே பெரிதும் ஒலித்தது.

இந்நாடுகளுக்குரிய மொழியையே முதல்மொழியாகக் கொண்ட மூன்றாம் தலைமுறையினர் மாணவ சமூகமாகத் தலையெடுத்துக் கொண்டிருக்கும் இந்தக் காலக்கட்டத்தில் தமிழ்மொழி கற்பித்தல் முறைகள் மாற்றத்துக்குள்ளாக வேண்டிய வலுக்கட்டாய நிலை தோன்றியுள்ளது.

வட அமெரிக்க, ஐரோப்பிய, ஆஸ்திரேலிய நாடுகளில், அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுவான சிறப்பான மொழி கற்பித்தல் உத்திகள் பின்பற்றப்படுவதாகக் கூற முடியாது. இந்நாடுகளில் கல்வி நிறுவனங்கள் ஒவ்வொன்றும் தமக்கென உருவாக்கிக் கொண்ட கற்பித்தல் முறைகளையே பின்பற்றி வருகின்றன. கற்பிக்கும் ஆசிரியர் சிலர் தத்தமது ஆற்றலுக்கேற்ப, கற்பித்தல் உத்திகளை அறிந்தும் உருவாக்கியும் கற்பித்து வருகின்றனர். இக்கற்பித்தலில் பெரிதும் தாயகச் சாயல்களையும் சிங்கப்பூர் மலேசிய கற்பித்தல் முறைகளையுமே அவதானிக்கலாம்.

மேற்கூறப்பட்ட கற்பித்தல் சூழலுக்கான நிறைவான உத்திகள் இச்சமூகத்தாரிடையே இல்லை என்பதை ஏற்றுக் கொண்டு நிறைவானதும் பொதுமையானதுமான கற்பித்தல் உத்திகள் கண்டறியப்பட வேண்டும்.

இக்கல்விச் சூழலோடு நீண்ட காலமாக இணைந்திருந்து பெற்ற அனுபவத்தையும் மொழி, மொழியியல் அறிவும் உலகளாவிய மொழிக்கல்வி கோட்பாடுகள் பற்றிய தெளிவையும் வாழும் நாட்டினது கல்விக் கொள்கை பற்றிய புரிதலையும் கொண்டோரே புதிய கற்பித்தல் உத்திகளைக் கண்டறியவும் வகுக்கவும் வல்லோர் ஆவர்.

பிறமொழியாகத் தமிழைக் கற்றல்

வட அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் இத்துறை குறிப்பிடத்தக்க அளவில் உருவாகவில்லை என்பதே உண்மை. அமெரிக்கப் பல்கலைக் கழகமொன்றில் தமிழ்த்துறை ஒன்றை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கனடாவில் ரோரான்ரோ பல்கலைக்கழகம், யோர்க் பல்கலைக்கழகம் போன்றவற்றில் தொடங்கப்பட்ட தமிழ்க்கல்வி மாணவர் இன்மையால் இடைநிறுத்தப்பட்டுள்ளது. யோர்க் பல்கலைக்கழகத்தோடு இணைந்து செயற்படும் செனகா கல்லூரி தற்போது தமிழ்மொழியை ஒரு பாடமாக அறிவித்துள்ளது. இக்கற்கை நெறிகள் யாவும் பலவினத்தோரும் இணைந்து கற்கும் வகையிலேயே உருவாக்கப்பட்டிருந்தன. இக்கற்கை நெறிகள் மாணவரை ஈர்க்காமைக்குக் காரணம் தமிழ்மொழி பற்றிய வலுவான அறிமுகமும் கவர்ச்சியான பாடத்திட்டமும் இன்மையே எனக் கூறப்படுகின்றது. எனினும் ஆங்காங்கே பிறவினத்தோர் சிலர் தமிழைக் கற்று வருகின்றனர். இக்கற்கை முறையும் பெரிதும் மரபு சார்ந்தே நடைபெறுகின்றது. அண்மையில் கனடாவில் 'கனடா தமிழ்ச் சங்கம்' என்னும் அமைப்பு வெளியிட்டிருக்கும் பாடநூல்கள் மொழியியல், இலக்கண அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ் அறியாதோர் எளிதில் தமிழைக் கற்றுக் கொள்ள இந்நூற்கள் பெருந்துணை புரிய வல்லன.

எனினும் இத்துறை சார்ந்து புதிய கற்பித்தல் உத்திகள் கண்டறியப்படல் வேண்டும்.

புதிய கற்பித்தல் உத்திகளைக் கண்டறிவதற்கான அடிப்படைகள்

கல்விச் சூழலையும் மாணவரையும் நன்கு புரிந்து கொண்டபின், அப்புரிதலின் அடிப்படையில் புதிய உத்திகளுக்கான தேவையை முழுமையாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

மொழிக்கல்வியில் மாணவரைப் புரிந்து கொள்ளுதல் அடிப்படையானது என்பதை மேலே குறிப்பிட்டிருந்தோம். இப்புரிதலின் அடிப்படையில் மாணவர் சமூகத்தை இருவகையான வகுக்கலாம்.

* ஆரம்பநிலை முதல் தமிழைக் கற்று வருவோர்.

* இடைநிலைகளில் இணைந்து தமிழைத் தொடக்கத்தில் இருந்து கற்க முனைவோர்.

இந்த இரு பகுப்பினருக்குமான கற்றல் இலக்குகளும் கற்பித்தல் உத்திகளும் வெவ்வேறானவை என்பதை உத்திகளை வகுப்போரும் கற்பிப்போரும் தெளிவாகத் தெரிந்திருத்தல் வேண்டும்.

தமிழ்மொழியைக் கற்கும் மாணவர் 'மொழியின் தேவை' மிகத் தேவையாக உணரப்பட வேண்டும். தமிழ்மொழியைக் கற்கும் மாணவரது முதன்மை இலக்கு தமிழ் மொழியில் அவர்கள் தொடர்பாடலை மேற்கொள்ளும் வல்லமை பெற வேண்டும் என்பதாகவே பெரிதும் அமைகின்றது. தமது வாழ்வில் பெரும்பாலான தருணங்களில் அல்லது எல்லாத் தருணங்களிலும் நிறைவாகவும் எளிதாகவும் தொடர்பாடலை மேற்கொள்ளவல்லதாக அந்தந்த நாட்டுக்குரிய மொழியே திகழ்கின்றது. தமிழில் தொடர்பாடலை மேற்கொள்ள வேண்டிய வாய்ப்புகளை மிகக் குறைவாகக் கொண்டோராகவே இளைய தலைமுறையினர் காணப்படுகின்றனர். ஆங்கில மொழிச் சூழல் கொண்ட நாடுகளில் கடந்தகாலத் தமிழ் கற்பித்தலில் இவ்விலக்கைத் தொட்டோரது விழுக்காடு மிகக் குறைவே. பொருத்தமற்ற கற்பித்தல் உத்திகளும் இக்குறைவுக்குக் காரணம் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மாணவர் தமிழ்மொழியை ஓரளவேனும் விளங்கிக் கொள்வும் பேசவும் வாசிக்கவும் எழுதவும் தெரிந்திருத்தல் இக்கற்பித்தலின் ஓர் இலக்காக இருக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடம் இல்லை. அதே வேளை பிற இலக்குகள் சிலவற்றையும் நாம் மொழி கற்பித்தலில் இணைத்துக் கொண்டாக வேண்டும்.

மொழிக் கல்வியில் மாணவருக்கு ஈர்ப்பு ஏற்பட வேண்டுமாயின் நாம் தொன்மையும் சிறப்பும் மிக்க தமிழ் இனத்தைச் சார்ந்தோர் என்ற பெருமையுணர்வு மாணவருக்கு ஏற்பட வேண்டும். ஏதோவொரு அந்நிய மொழியைப் படிப்பது போன்ற உணர்வு தமிழ் கற்கும் மாணவருக்கு இருத்தலாகாது. இவ்வுணர்வை ஊட்டுதல் இக்கற்பித்தலில் ஓர் இலக்காக அமைதல் வேண்டும்.

பண்பாட்டிலும் தனித்துவ அடையாளங்களிலும் பெரும் வேறுபாடுகளைக் கொண்ட பல்லினத்தோர் இணைந்து வாழ்கின்ற சமூகச் சூழலில் ஒவ்வோர் இனமும் தம் தனித்துவ அடையாளங்களைப் பேணியும் வெளிப்படுத்தியும் வாழ வேண்டியது அவசியமாகும். முதலாம் இரண்டாம் தலைமுறையினர் தம் வாழ்வோடு இணைந்திருக்கின்ற பண்பாட்டு விழுமியங்களை இயல்பாகவே வெளிப்படுத்தியிருப்பர். இவர்களுக்குப் பின் தொடரும் தலைமுறையினரது வாழ்வில் இனஞ்சார்ந்த தனித்துவ அடையாளப் பேணல்கள் இயல்பாக இணைந்திருக்கும் வாய்ப்புக் குறைவடைந்து செல்லும். எனவே மொழிக்கல்வியில் தமிழர் பண்பாடு, தனித்துவ அடையாளங்களைத் தெரிந்து கொள்ளுதல் மற்றொரு இலக்காகக் கொள்ளப்பட வேண்டும்.

தமிழர் தமிழகம் தமிழீழம் என்ற தேசங்களைப் பூர்வீக தாயகங்களாகக் கொண்டிருந்த போதிலும் உலகின் எல்லாப் பாகங்களிலும் நிரந்தரமாகக் குடியேறியுள்ளனர். தமிழர் எங்கு வாழினும் அவர்களுக்கிடையேயான தொடர்பும் உறவும் பேணப்பட வேண்டும். இல்லையாயின் காலவோட்டத்தில் ஒவ்வொரு நாட்டில் வாழ்வோரும் தனித்தனித் தீவுகளாகப் பிரிந்து விடுவர். உலகளாவிய தமிழர் தொடர்பாடும்படியான இணைப்புகள் மொழிக்கல்வியில் இடம்பெற வேண்டும்.

மாணவர் மையக் கல்வி, நுண்ணறிவுக் கோட்பாட்டுக் கற்பித்தல் போன்ற புதிய கற்பித்தல் முறைகளும் கணினி வழி சார்ந்த தகவல் தொழில்நுட்பங்களும் மொழி கற்பித்தலில் நிறைவான அளவு பயன்படுத்தப்பட வேண்டும்.

இந்த அடிப்படைகளை நன்கு உணர்ந்த பின்னரே கற்பித்தலுக்குரிய இலக்குகளை வகுத்து உத்திகளைக் கண்டறிதல் வேண்டும்.

பண்பாட்டு மொழி

புலம்பெயர்ந்தோரது மொழிக்கல்வி பெரும்பாலும் தொடர்பாடல் பயன்பாட்டை மையப்படுத்தியே கற்பிக்கப்படுகின்றது என்பதை முன்னர்க் குறிப்பிட்டிருந்தோம். தொடர்பாடலுக்கான தமிழ்மொழியின் தேவை குறைந்து செல்லும்போது இக்கற்றல் மீதான ஈர்ப்பும் குறைவடைந்து செல்லும். அதற்காகவே மேற்குறிப்பிட்ட இலக்குகள் இணைக்கப்பட வேண்டும் என இக்கட்டுரை கூறுகின்றது.

இந்நாடுகளில் எதிர்காலத்தில் தோன்றவிருக்கும் தலைமுறையினர் தொடர்பாடல் என்னும் நிலையில் தமிழைப் பயன்படுத்த முடியாதிருப்பினும் தமிழருக்கான பண்பாட்டு விழுமியங்களை இழக்காதவராகவும் இன அடையாளங்களைச் சுமந்து செல்பவராகவும் தாம் தமிழர் என்னும் பெருமை மிக்கோராகவும் இருக்க வேண்டும். இவ்வாறான தமிழரை உருவாக்க மிக நேர்த்தியாகத் திட்டமிட்ட மொழிக் கல்வியாலேயே முடியும். இவ்வாறான மொழிக்கல்வியைப் 'பண்பாட்டு மொழிக்கல்வி' (Cultural Language education) என்பர். புலம்பெயர்ந்து வாழும் யூத மக்களும் சீக்கிய மக்களும் இவ்வாறே தம் இன அடையாளங்களைத் தொடர்கின்றனர். அவர்களது மொழி மதத்தோடு இரண்டற இணைந்திருப்பது அவர்களது பெரும் பலமாகும்.

இந்நாடுகளில் வாழும் தமிழரிடையே மொழிக்கல்வி பண்பாட்டு மொழி என்னும் வடிவத்தை இன்னும் பெறவில்லை. விரைவில் இந்நாடுகளில் மொழிக்கல்வி, பண்பாட்டு மொழி வடிவம் பெற வேண்டும். இந்நாடுகளில் வாழும் மொழிக் கல்வியாளரும் ஏனைய தமிழ்ச் சான்றோரும் இப்பணியை விரைந்து முன்னெடுக்க வேண்டும்.

நிறைவுரை

மேற்குறிப்பிட்ட, 'இயற்கை, பண்பாட்டுத் தளங்களில் பெரிதும் மாறுபட்ட நாட்டில் பிறிதொரு மொழியின் பேராதிக்கம் மிக்க சூழலில் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாப் பயிற்றுவிக்கும் முறை'யைக் கொண்டிருக்கும் நாடுகளான வட அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா போன்றவற்றின் கல்விச் சூழலின் பின்னணியும் இயல்புகளும் மேலே கூறுப்பட்டுள்ளன. இக்கட்டுரைத் தலைப்பு இந்நாடுகளில் கையாளப்படும் கற்பித்தல் உத்திகளையே அவாவியிருந்த போது தற்போதைய கற்பித்தல் முறைகளையும் புதிய உத்திகளுக்கான தேவையையும் தேடலின் அடிப்படைகளையுமே இக்கட்டுரை பெரிதும் வெளிப்படுத்தியுள்ளது.

Howard Gardenar என்பார் கண்டறிந்த Differentiation Instruction என்னும் பன்முக நுண்ணறிவுக் கோட்பாட்டு வழிக் கற்பித்தல் முறை, மாணவர் மையக் கல்வி, தகவல் தொழில்நுட்பக் கருவிகளின் பயன்பாடு போன்றவையே ஓரளவு பயன்படுத்தப்பட்டு வருகின்ற உத்திகள் எனலாம். கற்பித்தல் செயற்பாடுகளுடன் இணைந்த வேறு பலவான கற்பித்தல் உத்திகள் பெரிதும் சிங்கப்பூர் மலேசியா போன்ற நாடுகளைச் சார்ந்தவையே.

இந்நாடுகளில் மொழி கற்கும் இளையோரை மனதிற்கொண்டு, மாறிவருகின்ற புதிய மொழி கற்பித்தல் முறைகளுக்கான தேவைகளும் புதிய உத்திகள் பற்றிய தேடலுமே இப்போதைய அவசியங்களாக உள்ளன. இவை தொடர்பாக மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு வளங்களும் துறை சார்ந்தோரது அறிவுரைகளும் அவசியமானவை. இவற்றை வழங்க வல்லோர் உலகெங்கும் தமிழ் கற்பிக்கும் ஆசிரியரே.

அத்தகையோருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் பங்களிப்புகளைப் பெற்றுக் கொள்ளவும் பதினோராவது உலகத் தமிழ் ஆசிரியர் மாநாடு பெரிதும் உதவியுள்ளது.

இத்தகைய ஒரு வாய்ப்பினை வழங்கிய மாநாட்டு அமைப்பாளர்களுக்கும் உலகத் தமிழ் ஆசிரியர்களுக்கும் எமது நன்றி.

28. டிஜிட்டல் தகவல் பரிமாற்றுத் திறமைகள் மூலம் தமிழ்மொழி, கலாச்சாரம் கற்பிக்கும் வழிவகைகளைக் கட்டியெழுப்பல்

Siva Pillai, Educational Studies,
Goldsmiths College, University of London (VL),
Director Tamil Academy of Language & Arts
Principal Examiner for Edexcel Tamil Language - UK

முன்னுரை

குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்கும் ஒரு புதிய வளத்தை லண்டன் கோல்ட்ஸ்மித் சர்வகலா சாலையில் உருவாக்கப்பட்டுப் பிரிட்டன் தேசிய மொழிகள் முலோபாயத்தின் ஒரு பகுதியாக அறிமுகப்படுத்தப்பட்டு இது நடைமுறையில் உள்ளது.



பிரித்தானியாவில் ஏனைய ஐரோப்பிய மொழி கற்பிக்கும் வழி முறைகளுக்கு ஏற்ப தமிழ்மொழிக்கு என ஒரு பாடத்திட்டக் கையேடு உள்ளது. இக்கையேடு இங்கிலாந்து முழுவதும் உள்ள தமிழ் சமூகப் பள்ளிகளில் பணிபுரியும் தமிழ் ஆசிரியர்களுக்கு உதவுவதற்காக மற்றும் மொழியில் குழந்தைகள் சாதனை அங்கீகாரம் ஆதரவு பெறுவதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது தகவல் (தொடர்பாடல்) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மகிழ்ச்சியாகக் கற்பதற்குப் பல வளங்களைப் பயன்படுத்தி உள்ளது. இதில் மொழி கற்பித்தல் ஒரு வகைத் தொடர்பு அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டது. பலரும் தற்போது பயன்படுத்தும் பவர்பாயிண்ட் கோப்புகளை மற்றும் வெண்பலகைகளை (electronic white board - IWB - Interactive White Board) பயன்படுத்திக் கற்பிப்பதற்கான வளங்களைக் கையேடு உள்ளடக்கியதாக உள்ளது.



IWB - Interactive White Board
மின்வெண்பலகை



சுயமாகக் கற்றல்

இவ்வகையானவற்றைச் செயல்படுத்தும் நடவடிக்கைகளை, வழங்குவதற்கான ஆசிரியர்கள் கோல்ட்ஸ்மித் சர்வகலா சாலையில் உள்ளனர். மேலும் University of London, Goldsmiths `community-gold', என்ற இணையதளத்தில் வளங்களை இலவசமாக அணுக வசதி வழங்கப்படுகின்றன. வளங்கள், வழிகாட்டி தொடர்பான, விவரங்களும் அது உள்ளடக்கி உள்ளது. ஏனைய படைப்பாளிகளின் படைப்புகளை இந்த இணைய வலைத்தளத்தில் பார்க்க முடியும்.

படங்கள், அனிமேஷன், ஒலி, வீடியோ கிளிப்புகள் பயன்படுத்தி, வகுப்பறையில் வீட்டில் பயன்படுத்தும் நோக்கத்தோடு, கையேடு உருவாக்குதில். மேலும் வேகமாகத் தகவல் தொடர்புகள் மற்றும் இணையத்தின் மீது ஆவணங்களை எளிதாகப் பரிமாற்றம் செய்து பிரான்ஸ், ஜெர்மனி, சுவிச்சர்லாந்து, நார்வே போன்ற நாடுகளில் உள்ள தமிழ்ப்பாட சாலைகளில் இருந்தும் மதிப்புமிக்க ஒத்துழைப்பு இருக்கின்றது.

எதிர்காலத்தில் இது வேறு இடங்களையும் இணைத்துச் சர்வதேச இணைக்கும் திட்டங்கள் மூலம், இலங்கை, இந்தியா பள்ளிகள் உடன் இணைய அடிப்படையிலான கூட்டு உருவாக்க முடியும் என நம்பிக்கை இருக்கிறது.

இந்த அடிப்படையில் டிஜிட்டல் கதைகளை உருவாக்கிக் கற்றல் கற்பித்தலை ஊக்குவிக்கும் திட்டங்கள் தற்போது நடைமுறையில் உள்ளன. தற்போதைய மாணவர்களிடம் டிஜிட்டல் காமிரா உண்டு. அதை வேறு யார் உதவியும் இன்றி உபயோகிக்கும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு என்பதும் பலரும் அறிந்ததே.

இங்கிலாந்தில் நடந்து வரும் வார இறுதித் தமிழ்ப் பள்ளியில் தமிழ் மொழியை எவ்வாறு மாணவர்களிடம் ஆர்வத்தை உண்டு பண்ணும் வகையில் கற்கச் செய்ய முடியும் எனச் சந்தித்தபோது அவ்வகுப்பில் இங்கிலாந்தில் பிறந்து வளர்ந்த மாணவர்கள் பலர் இருந்தனர். அவர்கள் கூட கலந்து உரையாடியபோது கேக் செய்வது ஒரு முக்கியமானது என அறிந்தோம். இதை ஒரு வீடியோ காட்சி மூலம் ஏனையோருக்குத் தமிழில் செயல்முறையில் செய்து காண்பிக்க வேண்டும். அதை மாணவர்கள் தாமே திட்டம் இட்டு செயல்படுத்த முன்வந்தனர். இது எவ்வாறு அவர்களது தமிழ்மொழி வளத்தை ஏற்படுத்தும் என்பதே இதன் கருப்பொருள் ஆகும்.

திட்டம் இடுதல்

இவர்களுக்குத் தமிழ்மொழி வளம் குறைவாக இருந்ததால் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிப்பின் அதைத் தமிழ் ஆக்கம் செய்தார்கள். இதற்குத் தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர் துணையாக இருந்தார். முதலில் படிப்படியான செயல்பாடுகளை வரிசைப்படுத்தி எழுதினார்கள். இதை ஆங்கிலத்தில் ''Story boarding'' எனக் குறிப்பிடுவார்கள். அடுத்து பங்கு பெறும் ஒவ்வொருவருக்கும் அவரவர் பாகம் கொடுக்கப்படும். அடுத்து அதை எவ்வாறு தமிழில் கூறவேண்டும் என்பதை ஆசிரியரின் உதவியுடன் ஒவ்வொருவருக்கும் தெரிவிக்கப்படும். செயல்முறையை வீடியோ காமிரா மூலம் ஒருவரின் வீட்டில் வைத்துப் பதிவு செய்யப்படும். அதைத் தொகுத்தமைக்கும் செயல்பாடுகளை மாணவர்கள் கலந்து ஆலோசித்து மாற்றங்கள் தேவை எனில் மாற்றங்கள் செய்து இறுதியான செய்முறை வீடியோவைத் தயார் செய்வார்கள்.

படத் தயாரிப்பில் அவர்கள் தமிழில் பேசுகிறார்கள். இதன் மூலம் அவர்களுக்குக் கேக் செய்ய வேண்டியதற்குத் தேவையான பொருள்களின் பெயர்கள், உபகரணங்களின் பெயர்கள் ஆகியனவற்றை அவர்கள் சிரமம் இன்றித் தமிழில் அறிந்து கொள்கிறார்கள். இதில் அவர்கள் சொல்வளம் அதிகமாகிறது. இதை அவர்கள் ஆர்வத்துடன் செய்வதால் அவர்களை அறியாமலேயே அவர்கள் சொல்வளம் அதிகரிக்கிறது. இதில் கவனிக்க வேண்டியது என்னவெனில் ஆசிரியரின் தலையீடு இல்லாமலே அவர்கள் **தங்கள் சொல்வளத்தை விருத்தியாக்கிக் கொள்கிறார்கள். அத்தோடு பாவனையில் உள்ள பொருள்களின் பெயரைத் தெளிவாக உச்சரிக்கவும் பழகிக் கொள்கிறார்கள். ஒருமை, பன்மை இலக்கணத்தையும் தம்மை அறியாமலே இவர்கள் கற்றுக் கொள்கிறார்கள்.** இதை அவர்கள் ஏனையோருக்கு ஒரு செயல்முறைப் பாடமாகப் படமாக்கிச் செய்வதால் அவர்களிடம் ஆக்கத்திறன் உருவாகிறது. இச்செயல் முறை அவர்களுக்கு ஒரு ஊக்கத்தையும், மகிழ்ச்சியையும் கொடுக்கிறது. அத்தோடு ஆங்கிலம் தமிழ் அகராதி பாவிக்கும் ஊக்கத்தையும் இது பற்றி இணையத்தில் ஆய்வு செய்யும் ஆற்றலையும் இச்செயல்முறைக் கற்றல் கற்பித்தலில் உண்டாக்குகிறது.

இதில் சிந்திக்கும் ஆற்றல் எவ்வாறு உருவாகிறது என்பதைப் பார்க்கும் போது பலதரப்பட்ட சிந்தனைச் செயல்களைக் காணக் கூடியதாக உள்ளது. பலதரப்பட்ட உருவாக்கச் சிந்தனைகள், திட்டம் இடுதல், ஆய்வு செய்தல் கண்டறிந்ததை நடைமுறைப்படுத்துதல், செயல்பாடுகளை வரிசைப்படுத்தல், இதைப் படப்பிடிப்பாக்கும் போது இது செயல்முறை வீடியோ ஆக வரப்போகிறதே என்ற சிந்தனை. இதில் தப்பு ஏதும் இல்லாதிருக்கச் செயல்படும் என்ற கவனம் உண்டாகிறது. பார்வையாளர்கள் எவ்வாறு இதைப் பார்ப்பார்கள் என்ற சிந்தனை மனதில் அவர்களுக்கு ஓடிக் கொண்டிருக்கும், சக மாணவர்களுடன் கலந்தாலோசித்து வழிமுறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்த நேரிடும். இதில் அவர்களது விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, பிரச்சனைகளைத் தீர்ப்பதில் கூட்டு முயற்சி ஆகியன விரிவடைய இச்செயல்முறை வழி வகுக்கும். ஒலி, ஒளி அமைப்பு அதில் அவர்கள் சிந்தனையை இவ்வழி முறை விரிவடைய வழி வகுக்கும். பரீட்ஷார்த்த செயல்முறையைப் பார்த்தது. அதில் மாற்றங்கள் ஏற்படுத்த ஏனையோர் கருத்துகளைக் கவனத்தில் கொண்டு செயல்படுத்தலில் அவர்களுக்கு ஒரு தனி சுதந்திரத்தை உண்டாக்குகிறது. தாம் இதைத் தலைமைப் பொறுப்பு எடுத்துச் செய்வதால் அதில் மனப்பூர்வமான ஈடுபாட்டை உருவாக்க இச்செயல்பாடுகள் வழி வகுக்கின்றன.

ஊடகத் திறனை விரிவாக்கிப் படத்தயாரிப்பில் ஆர்வம் உண்டாக்குவதற்கு இச்செயல் முறை



மாணவர்களுக்கு உபயோகமாக உள்ளது. வீடியோ காட்சிகளைத் திருத்தி அமைத்தல் (எடிட்டிங்) ஆகிய ஆற்றல்களை ஊக்கங்களுக்கு இச்செயல்பாடுகள் விருத்தி அடையச் செய்கிறது. மாணவர்களை இதில் அதிக நேரம் ஈடுபடுவதற்கு இவ்வாறான திட்டம் பெரிதும் உபயோகமாக உள்ளது. மாணவர்களுக்கு இது ஒரு சவால் திட்டமாக இருந்தது. இத்திட்டத்திற்கு மாணவர்கள் நிறைய நேரம் ஒதுக்கினார்கள். மாணவர்களின் வீட்டிலேயே இப்படம் எடுக்கும் திட்டம் நடைபெறுவதால் பெற்றோர்கள் ஈடுபாடு இத்திட்டத்தில் உள்ளது. இறுதிக் காட்சியில் பெற்றோர்களும் பங்கெடுக்கின்றனர்.

இக்கண்ணோட்டத்தில் பார்க்கையில் **டிஜிட்டல் தொழில்நுட்பம் வழியாக மொழி கற்றுக் கொடுத்தல்** மாணவர்களுக்குச் சுயசிந்தனை, சுயஆற்றல், சுயமதிப்பீடு ஆகிய ஆற்றல்களை வளர்க்க இச்செயல்பாடு உதவுகிறது.

Siva Pillai, Educational Studies,
Goldsmiths College, University of London (VL),
Director Tamil Academy of Language & Arts
Principal Examiner for Edexcel Tamil Language - UK
email: pillaisiva@gmail.com
"Be a vegetarian
Spread Vegetarianism"
Tel: +44 (0) 20 88519096, MOB: 07951476706

29. எழுத்தறிவிப்போம்! டிஸ்லெக்சியா என்ற இயலாமையை வேரோடு அறுப்போம்!

முல்லை. இராமையா

முன்னுரை

அனைவரும் ஒரே தேர்வை எழுதி வென்று காட்ட வேண்டும் என்ற நம்முடைய கல்விமுறை எவ்வளவு நியாயமற்றது என்று உணர்த்த ஆல்பெர்ட் அயன் ஸ்ட்டின், ''அனைவரும் அறிவாளிகளே! ஆனால் நீங்கள் மீனுக்கு மரம் ஏறத் தெரிந்திருக்க வேண்டும் என்றால் அது தன்னுடைய வாழ்நாள் முழுமையும் தான் ஒரு முட்டாள் என்று நினைத்து வாழும்!'' என்று கூறினார்.

1896-இல், ஒரு பதினாலு வயசுச் சிறுவனைப் பற்றி பிரிட்டிஷ் மருத்துவ ஏட்டில் இவ்வாறு கூறப்பட்டிருந்தது; இவன் எப்போதுமே சூட்டிகையாக, புத்திசாலித்தனமாகச் சுறுசுறுப்பாக இருக்கிறான். விளையாட்டில் மிக வேகம். ஆனால் ஏழு வருடங்கள் கடுமையான கற்பித்தலுக்குப் பின்னும், அவனால் வாசிக்க மட்டும் முடியவில்லை. ஓர் அசைகொண்ட சொற்களை மட்டுமே உச்சரிக்கின்றான். பார்வையும் கேட்கும் திறனும் சரியாகவே உள்ளன. கற்றலும் கற்பித்தலும் வாய்வழி மட்டுமே இருந்தால் இவன் பள்ளியின் முதல் மாணவனாக வரக் கூடியவன்!

இன்று தரம்பிரிக்கப்படாத ஒவ்வொரு வகுப்பறையிலும் வாசிக்க எழுத இயலாத பிள்ளைகள் உலகம் முழுதும் இருக்கின்றார்கள். ஐந்தில் ஒரு அமெரிக்கப் பிள்ளைக்கு வாசிக்க, எழுத இயலாத நிலைமை உள்ளது என்று யேல் பல்கலைக்கழகத்தின் (Yale University) மருத்துவப் பள்ளியைச் சேர்ந்த குழந்தை மருத்துவப் பேராசிரியர் Sally Shaywitz கூறுகிறார். (இந்த இயலாமை அல்லது பாதிப்பு, மிக அழுத்தமான நிலையிலிருந்து, கொஞ்சம் கைகொடுத்தால் தூக்கிவிடக் கூடிய நிலைவரை (continuum), எந்த அளவில் வேண்டுமானாலும் இருக்கலாம்.) இருப்பினும், வளர்ந்து வரும் நாடுகளில் இதை ஒரு பொருட்டாகவே பள்ளிக் கூடங்கள் எடுத்துக் கொள்ளவில்லை என்பது பெரும்சோகம்! டிஸ்லெக்சியா (Dyslexia) என்று அழைக்கப்படும். இந்த இயலாமை ஒரு நரம்பியல் பிரச்சனை என்றும் மரபுவழி வரக்கூடியது என்றும் அறியப்படுகிறது. சிரமமான பிரசவத்தில் குழந்தைக்கு மூளையில் ஏற்படும் அழுத்தத்தினாலும் இந்தப் பிரச்சனை ஏற்படக்கூடும் என்று சொல்லப்படுகிறது.

அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் டிஸ்லெக்சியாவை நிவர்த்தி செய்வதற்கான கற்பித்தல் முறை 80 ஆண்டுகளுக்கு மேலாகப் பயன்பாட்டில் இருந்து வருகிறது. Functional MRI இன்று, மூலம் கற்பித்தலுக்கு முன் இருந்த அசாதாரணமான மூளை அமைப்பையும் கற்பித்தலுக்குப்பின் உள்ள சராசரி மூளை அமைப்பையும் கருவிகளால் காட்ட முடிகிறது.

பிள்ளைகளால் எழுத்து வடிவத்தையும் ஒலியையும் சேர்த்துப் பார்க்க முடியாததே குறைபாடு. இதை நிவர்த்தி செய்ய சில அடிப்படையான கோட்பாடுகள்:

* எழுத்தையும் ஒலியையும் ஒரு படத்துடன் இணைத்துச் சொல்லிக் கொடுக்க வேண்டும். இந்த இணைப்பு அல்லது association தான் மூளையில் பதிவாகும்; தெரிந்ததிலிருந்து தெரியாததைக் கற்றுக் கொடுப்பதுதான் இதன் அடிப்படை;

* இந்தப் பயிற்சி வரையறுக்கப்பட்டு, தொடர்ச்சியாக, எளிதிலிருந்து சிரமம் வரை வரிசைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்;

* கற்பிக்கப்படும் அனைத்து ஒலிகளையும் பிள்ளைகள் கேட்டு, அதன் எழுத்தைப் பார்த்து, தொட்டு, மெய்யுரு (kinesthetic) பயிற்சிகள் செய்து (பல்புலன் அணுகுமுறை) மனதில் நிறுத்த வேண்டும்;

பயிற்சி தீர்க்கமாக இருக்குமாயின் நாளடைவில் பிள்ளைகள் மொழிக்குள் உள்ள அமைப்புகளை (patterns) உணர ஆரம்பித்துவிடுவார்கள். இதனால் மொழியின் விதிகளும் பிடிபட்டு வளர்வார்கள்.

இந்தப் பயிற்றுவிப்பில் மிக முக்கியமானது ஒவ்வொரு குழந்தையினுடைய அடைவு நிலைக்கு ஏற்ப மட்டுமே அடுத்தக்கட்ட கற்பித்தல் நடைபெற வேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும் தனிப்பட்ட கவனிப்பு அவசியமாகிறது.

இந்தக் குழந்தைகளுக்கென்று பிரத்தியேக உபகரணப் பொருள்கள் உள்ளன. அவற்றில் சில: ஒலிமின் அட்டைகள், அசை மின்னட்டைகள், எழுதிப் பழகுவதற்கு உப்புத்தாள், பஞ்சுத்துணி, விளையாட்டுகள், பயிற்சி புத்தகம், அசைப்பாடல்கள், கதைகள். டிஸ்லெக்சியா உடைய பிள்ளைகளின் மூளையில் ஒரு ஒழுங்கின்மை இருப்பதால் கற்பிப்பவர்கள் மிக ஒழுங்கான, திட்டமிட்ட உபகரணப் பொருள்களை உபயோகப்படுத்தி ஒவ்வொரு அடியாகக் கற்பிக்க வேண்டும்.

டிஸ்லெக்சியா பெரும்பாலும் தனித்து வருவதில்லை. அது கவனக்குறைவு, ADD (Attention Deficit Disorder) அல்லது ADHD (Attention Deficit Hyperactive Disorder) என்ற கவனக்குறைவோடு கூடிய இருப்புக் கொள்ளாத் தன்மையை கூடவே கூட்டிக் கொண்டு வருகிறது. நம் பிள்ளைகள் எதிலும் கருத்து செலுத்தாமல், ஆர்வம் காட்டாமல் எழுதப்படிக்க தெரியாதபோது அவர்களை மந்தமான, அறிவு குறைந்த, மக்குபிள்ளைகள் என்று பெற்றோர், சுற்றத்தார், ஆசிரியர்கள் என்று எல்லோருமே நம்ப ஆரம்பித்துவிடுகின்றனர். அதே வேளையில், நிலை கொள்ளாமல் சுற்றும் எழுதப் படிக்கத் தெரியாத பிள்ளைகளைக் கோமாளி, வானரம், பிரச்சனைக்குரியவன் என்றெல்லாம் பள்ளி பட்டம் கட்டி விடுகிறது. மொத்தத்தில் இவர்களை ''இயலாதவர்கள்'', ''மெதுபயிலாளர்கள்'', ''கடைநிலை மாணவர்கள்'' என்று ஓரம் கட்டி உட்கார்த்தி விடுகிறது பள்ளி. மெதுபயிலாளர்களுக்கும் டிஸ்லெக்சியா மாணவர்களுக்கும் அதிக வேறுபாடு உள்ளது. மெதுபயிலாளர்களுக்கு (slow learner) அறிவுத்திறன் (IQ) குறைவாக இருக்கும். இதனால் அவர்களுக்கு அறிவுத் திறனைஊட்டும், ஊக்குவிக்கும் பயிற்சிகள் தரப்பட வேண்டும். இந்தப் பின்னணியில் அவர்கள் எழுதப்படிக்க ஆரம்பித்தால் அவர்களால் அதை மெல்ல மெல்ல செய்ய முடியும்.

எழுத்தோடு கூடிய ஒலியில் அவர்களுக்குப் பிரச்சனை இருக்காது. டிஸ்லெக்சியா உடைய மாணவர்களுக்கோ சராசரி அல்லது அதிக அறிவுத்திறன், பகுத்தறியும் திறன் இருக்கும். ஆனால் எழுத்தைப் பார்த்து ஸ்தம்பித்து நிற்பார்கள். டிலெக்சியா களையக் கூடிய ஒருகுறை. என்னுடைய மலேசிய அனுபவத்தில், தங்களுடைய பிள்ளைகளை, மனநல மருத்துவர் சோதித்து டிஸ்லெக்சியா இருக்கின்றது என்ற உறுதி செய்தும், தக்க கற்பித்தல் முறைக்கு அனுப்புங்கள் என்றும் கூறியும் பெற்றோர்கள் அதை ஏற்றுக் கொள்ளமல் போவது கணிசமான அளவு நடக்கின்றது.

வாசிப்பது இயல்பாக வரக்கூடிய ஒன்று என்று அவர்கள் நம்புவதோடு, இந்தக் குறைபாட்டை ஏற்றுக் கொள்வதை ஓர் அவமானமாகக் கருதுகின்றனர். பிள்ளைக்கு வயதாக ஆக இந்தக் குறைபாடு அழுத்தம்பெறும். எவ்வளவு விரைவாகச் சிறுவயதில் (6-8) இடையீடு செய்கின்றோமோ அவ்வளவுக்குப் பிள்ளைகள் மேன்மை அடைவர். தரம் பிரிக்கப்படாத அத்தனை பள்ளிகளிலும் டிஸ்லெக்சியா மாணவர்கள் கணிசமான அளவு இருப்பர். இந்தப் பள்ளிகளின் தேவைக்கேற்ப பிரத்தியேக ஆசிரியர், ஒருவரோ அல்லது கூடவோ நியமிக்கப்படலாம். இதுபோன்ற பிள்ளைகள் முற்றிலும் ஒதுக்கப்படாமல் பொது வகுப்பறையில் (main stream) இருந்துகொண்டு ஒவ்வொரு நாளும் ஒரு மணிநேரம் பிரத்தியேக வகுப்பறைக்கு அனுப்பப்பட்டால் நிச்சயமாக முன்னேற்றம் இருக்கும் தாழ்வு மனப்பான்மை இல்லாமலும் இக்குழந்தைகள் வளர்வார்கள். இதையே நாம் உள்ளடங்கலான கல்விமுறை (inclusive education) என்கிறோம்.

கல்வி அமைச்சுகள் அக்கறை கொள்ளாத பட்சத்தில் பள்ளிக்கூடங்கள் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களைக் கொண்டு ஆசிரியர்களைப் பிரத்தியேகப் பயிற்சிக்கு அனுப்பி அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இது

எதுவுமே சாத்தியப்படாதபோது, கற்ற பெற்றோராயின், Orton Gillingham என்ற உலகப்புகழ் கற்பித்தல் முறையை, கணினியைக் கொண்டு கற்று, குழந்தைகளுக்குக் கற்பிக்கலாம். அசாத்திய பொறுமை இருந்தால்!

அமெரிக்கா மற்றும் சுவீடனில், சிறைச்சாலைகளில் எடுத்த ஆய்வுகள் 70% கடும் குற்றவாளிகள் டிஸ்லெக்சியா உடையவர்கள் என்று கூறுகின்றன. இவர்களே சிந்திக்காது, எடுத்தமாத்திரத்தில் சட்டென (impulsive) வன்முறையில் இறங்குபவர்களாக உள்ளனர் என்கின்றனர்.

மலேசிய அனுபவத்தில், அதிக அளவில் இந்திய பிள்ளைகள் பள்ளிக் காலத்திலேயே பள்ளியிலிருந்து விடுபடுவதற்கும், மிக அதிக அளவில் வன்முறையில் இறங்குவதற்கும் எழுத படிக்க முடியாமை முதன்மைக் காரணமாக இருக்குமோ என்று ஐயுற வைக்கின்றது. பள்ளிக் கூடங்களில் ஓரங்கட்டப்பட்டு, முற்றிலும் தன்னம்பிக்கை இழந்த இவர்களை, உடைந்த குடும்பங்களும் வறுமையும் உந்த இவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் கரங்கள் வன்முறையாளர்களுடையது ஆகிறது.

மறுபக்கம் பார்ப்போமானால், ஆல்பெர்ட் ஐன்ஸ்டீன், தோமஸ் எடிசன், அலெக்சாண்டர்கிரகம்பெல், ஜார்ஜ்புஷ், வின்ஸ்டன்சர்ச்சில் மற்றும் உலகப்புகழ் ஓவியர்கள், எழுத்தாளர்கள், இசைகலைஞர்கள், சட்டமேதைகள், நமக்குப் பக்கத்தில், சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீகுவான்யு போன்ற அரசியல்வாதிகள் என்று பல துறைகளிலும் உள்ள சிலர் டிஸ்லெக்சியாவினால் பாதிக்கப்பட்டவர்களே!

இவர்களிடமெல்லாம் ஒளிந்திருந்த வேறொரு அபரிமிதமான ஆற்றலும், உந்துதலுமே இவர்கள் உலகை வசப்படுத்தியதற்கான காரணங்கள். (டிஸ்லெக்சியா குழந்தைகளிடம் வேறொரு கருதத்தக்க ஆற்றல் இருக்கும் என்று ஆய்வுகள் கூறுகின்றன). எந்தத் தருணத்தில் இவர்கள் வாசிக்க, எழுதக் கற்றார்கள், எப்போது இடையீடு (intervention) நடந்தது என்பதை நாம் அறியோம். அல்லது, அவர்கள் துறைக்கு அவை தேவையில்லாமல் போனதோ என்று தெரியாது. அதற்காகத் தன் குஞ்சுதானாக வளரட்டும் என்று இந்தப் போட்டிமிக்க காலத்தில் விட்டுவிட முடியுமா?

இடையீடு இல்லாமல் வளர்ந்தவர்கள் வாழ்நாள் முழுமையும் அவ்வாறு இருந்துவிடக்கூடிய சாத்தியம் நிறையவே உள்ளது.

மீன் குஞ்சுக்கு மரம் ஏறக் கற்றுக் கொடுக்க முடியாதுதான்! ஆனால், அது இயல்பாக நீந்த முடியாதபோது அதைக் கற்றுக் கொடுக்க வேண்டியது நம் கடமை அல்லவா!

தொடர்புக்கு : mullairamaiah10@hotmail.com (this email address can be published)

முல்லை இராமையா, மொழி, மொழியியல் துறையில், வாசிப்பை அடிப்படையாகக் கொண்ட ஆய்வில் Ph.D பட்டம் பெற்றவர். 25 ஆண்டுகள் மலாயாப் பல்கலைக்கழகத்தில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றியவர். பணி ஓய்வுக்குப்பின், டிஸ்லெக்சியா சம்பந்தப்பட்ட துறையில் சில பட்டயங்களோடு அக்குறையுடைய பிள்ளைகளுக்கு ஆங்கிலத்தில் பயிற்றுவிப்பதோடு, தமிழில் வாசிக்க எழுத இயலாத பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பயிற்சியையும், உபகரணப் பொருட்களையும் உருவாக்கியுள்ளார். மலேசிய தமிழ்ப் பள்ளியில் தமிழ் கற்பிப்பதோடு தமிழ் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கிறார்.

அண்மையில் மெட்ரா டிஸ்லெக்சியா அமைப்பால் பிரத்யேகமாக அழைக்கப்பட்டு அங்கு ஆசிரியர்களுக்கு ஒரு வாரம் பயிற்சி அளித்தார். அவருடைய உபகரணப் பொருள்களையே அவ்வமைப்பு பயன்படுத்துகிறது. தமிழ்நாட்டின் மற்றப் பகுதிகளுக்கும் ஆசிரியர் பயிற்சி அளிப்பதற்காக அழைக்கப்பட்டிருக்கிறார். அவருடைய உபகரணப் பொருள்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

30. தமிழ்மொழி கற்பித்தலில் புதிய நோக்குகளும் உத்திகளும்

முனைவர் கடவூர் மணிமாறன், மேனாள் முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம், மாயனூர்

முன்னுரை

''ஆய்ந்த ஒண்தீந்தமிழ்'' என்றும் ''என்றுமுளதென்றமிழ்'' என்றும் சிறப்பிக்கப்பெறும் தமிழ்மொழி இனிமையான மொழி; தொன்மையான மொழி; சொல்வளமும், பொருள் வளமும் நிறைந்த மொழி; எண்ணற்ற இலக்கியம், இலக்கணம், காப்பியங்களைக் கொண்ட மொழி; வளர்ந்து வரும் காலச் சூழலுக்கேற்ப மொழியின் அடித்தளம் தகர்ந்துவிடாமல் புதிய நோக்குகளையும் உத்திகளையும் மேற்கொண்டு நுண்மாண் நுழைபுலத்துடன் மொழிப்பாடத்தைக் கற்பிக்கும் திறனும் மொழி ஆளுமைத் தேர்ச்சியும் உடையவராய் மொழிப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் திகழ்ந்திடல் வேண்டும் என்பதை ஆய்ந்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஒருவனின் நடத்தையில் மாற்றத்தை உண்டாக்குவதும் சிந்தனைத் திறனை வளப்படுத்துவதும் கல்வியே ஆகும். வாழ்வியல் சூழலில் இருந்து திரட்டிய அறிவைத் தேக்கிவைத்துத் தேவையான நேரத்தில் மீள நினைந்து தாம் எதிர்கொள்ளும் சிக்கல்களில் இருந்து விடுபடவும் தம்மைப் பாதுகாக்கவும் பயன்படுவது சிந்தனை எனலாம். அச்சீரிய சிந்தனை வளத்தை மொழிப்பாடத்தின் வழியே தூண்டித் துலங்கச் செய்வது மொழிப்பாடம் கற்பிக்கும் ஆசிரியரின் கடமையும் பொறுப்புமாகும். தமிழைக் கற்கும் ஆசிரியர் நன்னூல், தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களிலும் திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்றவற்றிலும் தேர்ந்த புலமை நலமும் அறிவு வளமும் ஆர்வமும் ஈடுபாடும் மிக்கவராகத் தம்மைத் தகவமைத்துக் கொள்ளல் வேண்டும்.

தாய்மொழி என்பது ஒருவரின் உயிர்மூச்சு; ஆன்மாவின் குருதி என்கிறார் ஒரு மேனாட்டு அறிஞர். மேலை நாட்டினரால் போற்றப்படும் கிரேக்கம், இலத்தீன், மொழிகளை விடத் தமிழ்மொழி உயர்வானது என்கிறார் டாக்டர் வின்சுலோ. பிறமொழிக் கலப்பின்றியும் துணையின்றியும் தனித்தியங்கவல்லது தமிழ். எல்லாச் சொற்களுக்கும் வேர்ச்சொற்களைக் கொண்டிருப்பதோடு முறையான இலக்கணக் கட்டுக்கோப்பும் இலக்கியச் செழிப்பும் கொண்டதும் தமிழே.

புதிய நோக்குகள்

தாய்மொழியைத் திருத்தமாகப் பேசவும், தெளிவாகப் படிக்கவும், அழகாகப் பிழையின்றி எழுதவும் பயிற்சியளித்தலே தாய்மொழி கற்பித்தலின் முதன்மை நோக்கமாகும். அந்த நோக்கத்தை ஆசிரியர் முழுமையாக உணர்ந்து கொண்டால் தான் அந்தந்த வகுப்புக்காகத் தமிழ்ப்பாடச் செய்திகளையும் முறைகளையும் திட்டமிட்டுச் செயலாற்றிச் சிறப்பெய்த முடியும். ஒருபொருள் பற்றி எளிய முறையில் தெளிவாகப் பேசவும், பேசுவதைக் கேட்கவும், கேட்டுப் பொருள் உணரவும் தெளிவான முறையில் படிக்கவும், படித்துப் பொருள் அறியவும் தெளிவாகவும் எளிய முறையிலும் எழுதவும் ஆற்றலைப் பெற வேண்டும் என்கிறார் அறிஞர் ஜார்ஜ் சாம்சன்.

இலக்கியம், இசை, மருத்துவம், சட்டம், தொழில்நுட்பம் விளம்பரம், அரசியல், ஒளிபரப்பு, செய்தித் தொடர்பு, வணிகம், கணினித்துறை ஆகிய அனைத்திலும் தாய்மொழியே முதன்மையான இடத்தை வகிக்கிறது. சிந்தனையை

வளர்த்தல், சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல், படைப்பாற்றலை வளர்த்தல், கருத்துப் பரிமாற்ற ஆற்றல் போன்றவை முழுமையாக மொழி ஆளுமைக்குப் பெரும் பங்காற்றுகின்றன.

மொழிப்பாட ஆசிரியரின் பண்புகள்

மொழிப்பற்று, இலக்கிய, இலக்கணப் புலமை, எடுத்தியம்பும் ஆற்றல், குரலில் ஏற்ற, இறக்கத்துடன் அமைத்துப் பேசும் திறன், திறமையாக எழுதும் திறன், உள்ளங்களை ஒன்றாக்கி இணைத்தல், உளவியல் அறிவு, சுவையார்வம், பருவமறிந்து பயிற்றும் பண்பு, பயிற்றலின் அடிப்படை விதிகளை அறிதல், பாடப் பொருள்களை அணியப்படுத்துதல், தற்பெருமையும் சினமும் இல்லாதிருத்தல், தவறுகளைத் திருத்திடும் பண்பு, நகைச்சுவை நாட்டம், நல்லொழுக்கம், பெருந்தன்மை, நடுநிலைமை நோக்கு, மொழியாக்கத் திறன், நூல்கள் இயற்றல், உடலோம்பலில் ஆர்வம், உலகியல் அறிவு, உலகத்தோடு ஒட்ட ஒழுகல் போன்ற அரும்பெரும் பண்புகளை மொழிப்பாட ஆசிரியர் பெற்றிருக்க வேண்டியது இன்றியமையாதது.

கடமையுணர்வு, நாட்டுணர்வு, பொதுப் பண்பாட்டு உணர்வு, நிகரமை மக்களாட்சி, சமயச் சார்பின்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, குமுகத்தடைகளை அகற்றல், சிறு குடும்பநெறி, அறிவியல் சிந்தனைப் போக்கு முதலிய கற்றல்விழுமியங்களை மாணாக்கர் உள்வாங்கிக் கொண்டு பொறுப்புணர்வுடனும், கடமையுணர்வுடனும், விழிப்புணர்வுடனும் நடந்துகொள்ளும் வண்ணம் கற்பித்தல் பணியை மொழிப்பாட ஆசிரியர்கள் தொடர்ந்திடல் வேண்டும்.

புதிய உத்திகள்

மொழிப்பயன்பாட்டில் மொழி வெளிப்பாடும், கருத்துப் பரிமாற்ற ஆற்றலும் பெரும்பங்கு வகிக்கின்றன. இதன் வாயிலாகத் தெளிவான சிந்தனை, கேள்வி கேட்கும் திறன், கலந்துரையாடல் திறன், பட்டியலிடும் திறன், ஒப்பீடு செய்யும் திறன், வகைப்படுத்தும் திறன், சிந்தனை மீட்சித் திறன் போன்ற திறன்கள் பலவற்றைச் செழுமைப்படுத்திட வேண்டும்.

''மனத்தை ஒருங்கிணைத்தல், எடுத்துக்கூறல், ஒப்பிடல், பொதுவிதி காணல், விதியைச் செயற்படுத்தல் ஆகியன கற்பித்தலில் அமைய வேண்டிய படிநிலைகள்'' என்று அறிஞர் ஹெர்பார்ட் எடுத்துரைக்கின்றார். தாயின் கருவறையில் ஒருவன் உயிர்பெறுகிறான். ஆசிரியரின் வகுப்பறையில் அவன் அறிவைப் பெறுகிறான் என்பதை நினைவில் கொண்டு கற்பித்தல் செயற்பாடுகளை வகுத்தும் பகுத்தும் இன்னபிற உத்திகளைக் கையாண்டும் முனைப்பான கற்பித்தலை முன்னெடுக்க வேண்டும். ''நுதலிப்புகுதல் ஓத்துமுறை வைப்பே'' எனத் தொடங்கும் நன்னூல் நூற்பா உத்திகளைப் பட்டியல் இடுகின்றது. பெரும்பாலும் அவற்றை மொழிப்பாட ஆசிரியர் மொழிப்பாடம் கற்பித்தலில் நடைமுறைப்படுத்திட வேண்டும்.

மொழிப்பாடம் கற்பிக்கும் நிலையில் செய்யுள் கற்பித்தல், உரைநடை கற்பித்தல், இலக்கணம் கற்பித்தல், துணைப்பாடம் கற்பித்தல், கட்டுரை கற்பித்தல் என்னும் ஐந்து இன்றியமையாக் கூறுகள் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டும். அப்போது தான் மொழிப்பாடம் கற்பித்தல் முழுமை எய்தும்.

இலக்கணம் கற்பித்தல்

தாய்மொழியில் பெறும் பயிற்சியும் திறனுமே ஒருவனின் பிறமொழிப் பயிற்சிக்கும் புலமைக்கும் வித்தாகின்றன. தாய்மொழி அறிவு என்பது சிறப்பான இலக்கண அறிவையே குறிக்கும். செய்யுளைப் பிரித்துப் பொருள்காணவும் உவமை, உருவகம், உள்ளுறை, இறைச்சி, சிலேடை முதலான அணிநயங்களை அறிந்து இலக்கிய இன்பம் துய்க்கவும், இலக்கிய அறிவு பெரிதும் வேண்டப்பெறுகிறது. மொழிப்பாட ஆசிரியர் குறிப்பாக இலக்கணப் புலமை பெற்றிருந்தால் தான் மாணாக்கரைக் கற்றலில் மேம்பாடு அடையச் செய்ய இயலும். இலக்கணத்தை வேப்பங்காயாக எண்ணும் மனப்போக்கு இந்நாளில் மாணவர்களிடம் வளர்ந்துவிட்டது. இதனை மாற்றிச் சுவையாக இலக்கணத்தைக் கற்பிக்க வேண்டும்.

மொழியைப் பிழையின்றிப் பேசவும், எழுதவும் துணை புரிவதே இலக்கணமாகும். குறிப்பாக மொழியைப் பிழையின்றிப் பேசுதல், மொழியைப் பிழையின்றி எழுதுதல், மொழியின்மரபை அறிதல், ஐந்திலக்கணத்தின் அடிப்படை அறிவைப் பெறுதல், நடைமுறை இலக்கண அறிவைப் பெறுதல், கவிதை மொழியைக் கற்றுணர்தல், சொற்றொடர், சொல்லாட்சி வழக்கியல்புகளை அறிதல் ஆகிய எழுவகைத் திறன்களை மாணாக்கர் அடையுமாறு செய்வதே இலக்கியம் கற்பித்தலின் இன்றியமையா நோக்கமாகும்.

செய்யுள் கற்பித்தல்

தமிழ்மொழி பாடம் கற்பித்தலில் முதன்மையானது செய்யுள் பாடம் கற்பித்தல் ஆகும். பொருளுணர் திறன் பெறுதல், இலக்கியத்தில் பற்றுக் கொளல், இலக்கியச் சுவையுணர்ந்து இன்புறல், கற்பனையாற்றலை வளர்த்தல், இலக்கியப் படைப்பாற்றலை வளர்த்தல், மக்கட்பண்பை வளர்த்தல், முருகியலை உணர்தல், நாட்டுப்பற்றையும்,

மொழிப்பற்றையும் நினைவாற்றலையும் வளர்த்தல், பொதுமை நோக்கை வளர்த்தல், படைப்பாளனின் படைப்புணர்வை எய்தல் ஆகிய பண்புகளைத் துலக்கமுறச் செய்தல் ஆகியன செய்யுட்பாடம் கற்பித்தலால் உண்டாகும் நன்மைகள் எனலாம்.

கவிதை, தனிமாந்தனின் காதல், வீரம், ஏக்கம், தவிப்பு, பெருமிதம், சினம் ஆகிய உணர்வலைகளைத் தட்டியெழுப்ப வல்லது. கவிஞன் தன் பட்டறிவைப் பயன்படுத்திப் பாடல் புனைகிறான். கற்பனை வளம், உவமை நயம், சொல்வளம், பொருள்வளம், உள்ளிட்ட கலை அழகுகளால் மிளிரும் கவிதை இன்பத்தை அல்லது செய்யுளின் பெருமையைப் பாராட்ட மொழியாசிரியருக்குக் கவிதை மனம் வேண்டும். கற்பனை எல்லை கைவர வேண்டும். எண்ணற்ற அணிகலன்கள் பின்னிப் பிணைந்து கிடக்கும் செய்யுளைச் சுவையுடனும் நயமுடனும் பயிற்றுவிப்பது மொழிப்பாட ஆசிரியரின் முதன்மையான கடமையாகும்.

மொழிப்பாடத்தின் வாயிலாக வாழ்க்கையை நடத்தத் தேவையான திறனைப் பெறும் வாய்ப்பு அமைகின்றது. மேலும் நமது பண்பாட்டு விழுமியங்களை அறிந்து கொள்ளவும், சமூகக் கடமைகளை மேற்கொள்ளவும் மொழிப்பாடம் தூண்டுகிறது. தீண்டாமை ஒழிப்பு, கூட்டுறவு மனப்பான்மை, மக்கள் தொகைக் கட்டுப்பாடு, அனைவரும் சமம், போன்றவற்றை உணர்ந்து கொள்வதற்கு மொழிப்பாடம் பெருமளவில் உறுதுணை புரிகின்றது.

குடியாட்சி, சமயச் சார்பின்மை, அறிவியல் மனப்பான்மை, சமத்துவம், சமூக வளர்ச்சியினைத் தடை செய்பவற்றை நீக்குதல், சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல், நம் தாய்நாட்டின் விடுதலைப் போராட்ட வரலாற்றினை அறிந்திருத்தல், சிறு குடும்ப நெறியை மனமுவந்து ஏற்றல் போன்றவை 1986-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட புதிய தேசியக் கல்விக் கொள்கையின்படி அடிப்படை மதிப்புகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. இதனை நன்குணர்ந்து மொழிப்பாட ஆசிரியர் பாடங்களை ஆர்வத்துடனும் பொறுப்புடனும் பயிற்றுவித்தல் வேண்டும்.

சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல், சொல்லாட்சித் திறனை வளர்த்தல், கருத்துணரச் செய்தல், மொழியறிவு, பொது அறிவு, மொழிக் கட்டமைப்பு அறியச் செய்தல் போன்ற நோக்குகளுடன் புதிய உத்திகளை மேற்கொண்டு மொழிப்பாடத்தைக் கற்பித்திட வேண்டும். வகுப்பறைகளில் தகவல் தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்திக் கற்பித்தலுக்குப் பொலிவையும் வலிவையும் சேர்க்க வேண்டும். சொல்வதை எழுதுதல், வாசித்தல், பயிற்சிக்கு முதன்மை இடம் தந்தால் மாணாக்கர்களின் பிழைகளை உடனுக்குடன் களைந்திட ஏதுவாகும்.

மொழிப்பாட ஆசிரியர்களின் முனைப்பான பங்களிப்பைக் கவனப்படுத்துவதும் முன்னெடுப்பதும் கட்டாயத் தேவையாகும். தொன்மையும் இளமையும் இலக்கிய இலக்கண வளமும் பண்பாட்டு, நாகரிகச் சிறப்புகளும் கொண்டிலங்கும் மொழி தமிழ் மொழி. அம்மொழி வளர்ச்சியில், பயிற்றுவித்தலில் கடந்த காலப் படிப்பினைகள், நிகழ்காலச் செயல்நெறிகள் ஆகியனவற்றில் எதிர்காலப் போக்குகளைத் திட்டமிடுபவர்களாகவும், முடிவு செய்பவர்களாகவும் விளங்குபவர்கள் மொழிப்பாட ஆசிரியர்களே ஆவார். அயற்சொற் கலப்பும் அயல் எழுத்துக் கலப்பும் இன்றித் தனித்தியங்கவல்ல தமிழுக்கு ஆக்கம் சேர்க்கும் வகையில் தமிழ்மொழிக்குச் சிறு களங்கமும் நேரா வண்ணம் வகுப்பறைகளில் மொழிப்பாடம் பயிற்றுவித்தல் வேண்டும்.

''எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்'', என்னும் தொடருக்கேற்ப ஆசிரியர்கள் மிக உயரிய இடத்தில் வைக்கத் தக்கவர்களாக, மதிக்கப்படுபவர்கள். எனவே ஒழுக்கமுடையவராகவும், நற்பண்புகளின் நாயகராகவும், வளரும் தலைமுறையினருக்கு முன்மாதிரியாகவும் ஆசிரியர்கள் திகழ்ந்திடல் வேண்டும். மாணவர்கள் நாட்டைப் புதுக்கவும், செதுக்கவும் வல்ல சிற்பிகள், அவர்களுக்கு அவ்வப்போது தேவையான பயிற்சிகள் வழங்காவிடில் அவர்களின் செயற்பாடுகள் நாட்டுக்குத் தலை குனிவை உண்டாக்கி விடும். மூளைத் திறனைவிட உணர்ச்சிக்கு முதன்மையிடம் அளிக்க வேண்டுமென்பது டாக்டர்.இராதாகிருட்டிணன் அவர்களின் கருத்தியலாகும்.

முடிவுரை

தமிழ்மொழியைப் பாடமொழியாகவும் ஆட்சி மொழியாகவும் அறமன்ற மொழியாகவும், ஊடக மொழியாகவும் நடைமுறைப்படுத்திட வேண்டும். இவற்றைக் கருத்திலும் கவனத்திலும் கொண்டு மாணாக்கர்களின் சிந்தனைகளைத் தூண்டவும் ஆற்றலை வளர்க்கவும், கற்பித்தல் பணி மேம்படவும் ஒல்லும் வகையான மொழிப்பாட ஆசிரியர் உறுதுணை புரிவது காலத்தின் தேவையும் ஞாலத்தின் எதிர்பார்ப்பும் ஆகும் என்பதை மறுப்பதற்கில்லை.

இல்ல முகவரி

முனைவர் கடவூர் மணிமாறன், எம்.ஏ., பி.ஓ.எல், எம்.எட்., பி.எச்.டி

1/53, பெரியார் நகர்,
குளித்தலை - 639104, கரூர் மாவட்டம்,
அலைப்பேசி : 94431 44372
மின்னஞ்சல் : drkadavurmanimaran@gmail.com

31. பண்பாட்டுக் கூறுகள் வழித் தமிழ்மொழி கற்பித்தல்

முனைவர் மலையமான், புலவர், பி.லிட்., எம்.ஏ., பி.லிப்.எஸ்., டிப்ஃபிரெஞ்சு, பி.எச்.டி.

முன்னுரை

''பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்'' என்றார் புலவர் நல்லந்துவனார் (கலித்தொகை 13) பண்பு என்பது உலகநிலையை அறிந்து நடத்தல் என்பது இதன்பொருள். அன்புடைமையும் உயர்வும் பொருந்திய குடியில் பிறத்தலும் பண்புடைமை என்றார் என்றும் நிலைத்த பெரும்புகழ் கொண்ட திருவள்ளுவர் (குறள் - 992). பண்பு, பண்புடைமை என்ற சொல்லாட்சி தமிழகத்தில் 2000 ஆண்டுகளுக்கு முன்பே இருந்தது என்பது தெளிவாகத் தெரிகிறது.

பண்பாடு (CULTURE) என்பதன் விளக்கம். எட்வர்டு பி.டைலர் (EDWARD B.TAYLOR) என்ற ஆங்கிலேயரால் 1871 ஆம் ஆண்டில்தான் தரப்பட்டது. சமுதாயத்தின் உறுப்பினரான தனிமனிதனால் கற்றுக் கொள்ளப்பட்ட நன்னடத்தையே பண்பாடு என்றார் அவர். அறிவு, நம்பிக்கை, பழக்கவழக்கம் முதலியவை பண்பாட்டில் அடங்கியிருக்கும். பண்பாட்டின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் மொழி பேருதவி புரிந்தது. பண்பாடு, நாடுகள்தோறும் வேறுபாடு கொண்டிருந்தது. காலம்தோறும் மாறுதலையும் பெற்று வந்தது. கல்வித் துறையிலும் பண்பாடு பங்கு கொண்டிருந்தது.

கல்வி, கேடு இல்லாத விழுமிய செல்வம் என்றார் நாடு போற்றும் நல்லாசான் திருவள்ளுவர் (குறள் 400) ''கல்வி அழகே அழகு'' என்று சமணச் சான்றோர் சொன்னார்கள் (நாலடி 131) மறுமைக்கு அணிகலம் கல்வி என்று நல்லாதனார் கூறினார் (திரிகடுகம் 52) ஆசாரம் என்பது கல்வி என்று உரைத்தார் விளம்பிநாகனார் (நான்மணி 95).

சங்க காலத்தில், கல்வி கற்பித்த ஆசிரியர்கள் இருந்தார்கள். அவர்கள் கணக்காயர் என்று சொல்லப்பட்டார்கள். (எ.டு) கணக்காயர் தத்தனார். இவர்கள் புலவர்களாகவும் இருந்தார்கள் (கணக்கு என்றால் நூல் என்ற பொருள் முன்பு இருந்தது). பாலாசிரியர் என்ற பெயரிலும் ஆசிரியர்கள் அன்று விளங்கினார்கள். (எ.டு) மதுரை பாலாசிரியர் நப்பாலனார், இளம் பாலாசிரியர் என்ற பெயராலும் சிலர் அழைக்கப்பட்டார்கள். (எ.டு) மதுரை இளம்பாலாசிரியர் சேந்தன் கூத்தனார். தொடக்கநிலை ஆசிரியர் இளம்பாலாசிரியர் என்று சொல்லப்பட்டிருக்கலாம்.

ஆசிரியரிடம் படித்த மாணவர்களை மூன்று பிரிவினராகப் பவணந்தி முனிவர் காட்டினார். தலை மாணாக்கர், இடை மாணாக்கர், கடை மாணாக்கர் என்று அவர்கள் சொல்லப்பட்டனர். தலை மாணாக்கர், அன்னப்பறவை, பசு ஆகியவற்றைப் போன்றவர். கடை மாணாக்கர் ஓட்டைக்குடம், ஆடு, எருமை, பன்னாடை ஆகியவற்றைப் போன்றவர். இன்றும் இத்தகைய மாணவர்கள் உள்ளனர். இவர்களின் தரம் அறிந்து அவர்களுக்கு ஆசிரியர் கல்வி கற்பிக்க வேண்டும் (தேவைப்பட்டால் கடை மாணாக்கர்களுக்குச் சிறப்பு வகுப்பு நடத்தலாம்) (நன்னூல் 38)

கற்பிக்கப்படும் மாணவனின் செயல்முறை உத்திகளையும் நன்னூல் கூறுகிறது. ஆசிரியர் கூறும் பாடத்தை அமைதியாகக் கேட்டல், பாடத்தைத் தனக்குள் நினைவு கூர்தல், தன்னுடன் படிக்கும் மற்ற மாணவருடன் பாடம்

தொடர்பாகப் பேசிப் பழகுதல், மாணவர்கள் தங்களுக்குள் கேள்வி கேட்டல், பதில் கூறுதல் என்பவையே அந்த உத்திகளாகும் (நன்னூல் 41).

ஆசிரியர் கூறுவதைக் கவனமாகக் கேட்டாலும் அவற்றில் கால் பங்கே மாணவனின் மனத்தில் தங்கும். அந்தப் பாடம் பற்றி மற்ற மாணவருடன் கலந்துரையாடும் போது இன்னொரு கால்பங்கு அவன் மனத்தில் நினைவுக்கு வரும். அவன் மேலும் முயன்று, அந்தப் பாடத்தைப் படித்து உணர்ந்து பிறருக்குச் சொல்லும்போது, மிஞ்சியுள்ள அரைப்பகுதி அவன் மனத்தில் நிறையும் என்றும் நன்னூல் கூறும்.

இளமையிலேயே ஒருவன் படிக்க வேண்டும். ''இளமையில் கல்வி, சிலையில் எழுத்து'' என்றார் ஔவையார். ''இளமைப் பருவத்தில் கல்லாமை குற்றம்'' என்றார் விளம்பிநாகனார் (நான்மணி 20). பொருளாதாரச் சீர்கேடு காரணமாகப் பல சிறுவர்கள் கல்வியை இழக்கிறார்கள். இது மாற்றப்பட வேண்டும். எல்லாச் சிறுவர், சிறுமிகளும் கல்வி பெறவேண்டும்.

நிலத்தில் பயிர் செய்வதற்கு முன்பு, அப்பரப்பு பண்படுத்தப்பட வேண்டும். அதுபோல், தமிழ் கற்கும் மாணவனின் மனத்தைப் பக்குவப்படுத்த வேண்டும். தமிழின் சிறப்புகளை அவனுக்கு உணர்த்த வேண்டும். தமிழ், மிகவும் தொன்மையான மொழி. அது உலகில் முதல் செவ்வியல் மொழி (அதாவது செம்மொழி). வடமொழியின் அமைப்புக்கு உதவி செய்த மொழி. ஒரு காலத்தில் இந்தியா முழுதும் பரவி இருந்தமொழி. கிரேக்கம், இலத்தீன், ஜப்பானிய மொழி, கொரிய மொழி முதலிய பல மொழிகளில் தமிழ்ச் சொற்கள் உள்ளன என்பன போன்ற உண்மைகளை மாணவன் மனத்தில் பதியும்படி எடுத்துரைக்க வேண்டும். ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்ற பாரதியாரின் பெருமிதச் சொற்களையும்,

''தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்''

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் முழக்கத்தையும், மாணவர் மனத்தில் ஊன்ற வேண்டும். இது நிகழ்ந்தால் மாணவன் தாய்மொழியின் தனிப்பெரும் சிறப்புகளை அறிவான் அவனுடைய மனத்தில் ஆர்வம் பிறக்கும். தமிழ்ப்பற்று தோன்றும். அவன் ஊன்றிப் படிப்பான். உயர்வு பெறுவான்.

முந்தைய தமிழ் மண்ணில் தமிழ் கற்பித்தலில் வழிவந்த செயல்முறை ஒன்று இருந்தது. மாணவர்கள் ஆசிரியருடன் எப்போதும் இருந்தார்கள். அவருடன் உண்டு, உறங்கித் தமிழ் படித்தார்கள். பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, புகழ்பெற்ற ஆசிரியர். இவரிடம் தியாகராச செட்டியார், உ.வே.சாமிநாதையர் முதலிய மாணவர்கள் உடன் இருந்து தமிழ் படித்தார்கள். இது குருகுலக் கல்வி முறையாகும். இராமானுசர் கவிராயர் என்ற ஆசிரியரிடம் இதே முறைப்படி பல மாணவர்கள் படித்தார்கள். (இவரிடம் ஜி.யு.போப், வின்ஸ்லோ, ரேனியஸ்ட்ரு முதலிய அயல்நாட்டவர்களும் தமிழ் கற்றார்கள்) அண்மைக் காலத்தில் சென்னையில் வடிவேல் செட்டியார் என்ற ஆசிரியரிடம் இதே முறையில் சிலர் தமிழ் படித்தார்கள். இந்த நடைமுறை இன்று இல்லை. ஆனாலும், பள்ளிநேரத்திற்குப் பிறகும், மாணவருடன் ஆசிரியர் பழகும் நிலை இருப்பது நலம் தரும். வகுப்பறைக்கு வெளியிலும் அவனுடைய ஐயங்களுக்கு விடை சொல்லலாம். அவனுக்கு ஊக்கம் ஊட்டலாம்.

கிரேக்க மொழியின் முதல் எழுத்து ஆல்ஃபா. ஆனால், சொல்லில் இது அமையும்போது அது அ, எ, என்று ஒலிப்பைப் பெறும். ஆனால் தமிழில் எழுத்தின் உச்சரிப்பு எந்த நிலையிலும் மாறாது. இது தமிழின் சிறப்புகளில் ஒன்று. வகுப்பில் மாணவனை உரத்த குரலில் படிக்கும்படி செய்ய வேண்டும். அப்படிக் குரலெடுத்துப் படிக்கும்போது நன்மைகள் விளையும். சொற்களின் திருத்தமான வடிவத்தை மாணவன் அறிந்து கொள்வான். ''கல்விக்கு அழகு கசடற மொழிதல்'' என்றார் அதிவீரராம பாண்டியர். (நறுந்தொகை). மேலும், ல, ள, ழ முதலிய எழுத்துகளின் சரியான உச்சரிப்பைத் தெரிந்து கொள்வான். எனவே பிழை இல்லாமலும் அவன் எழுதுவான், பேசுவான்.

தமிழில் இரண்டு சொற்கள் இணைவது புணர்ச்சி எனப்படும். இந்தப் புணர்ச்சி விதிமுறைகளும் அருந்தமிழின் பெருஞ்சிறப்புகளில் ஒன்று. புணர்ச்சியில், தோன்றல், திரிதல், கெடுதல் முதலிய மாற்றங்கள் ஏற்படும். தமிழ் + தென்றல் = தமிழ்த்தென்றல். இங்கு, 'த்' என்ற எழுத்து தோன்றியது. பல் + பொடி = பற்பொடி. இங்கு, 'ல்' என்பது 'ற்' என்று திரிந்தது. மரம் + வேர் = மரவேர். இங்கு 'ம்' என்ற எழுத்து கெட்டது. அதாவது மறைந்தது. இந்த வேறுபாடுகளை உரத்த குரலில் படிக்கும் மாணவனுக்கு உணர்த்த வேண்டும். இவற்றை

அறிந்துகொள்ளும் மாணவன் தமிழைப் பிழைஇல்லாமல் எழுதுவான். ''சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்'' என்ற பாடல் அடி இங்கு நினைக்கத்தக்கது.

மொழிப் பயிற்சிக்கு மரபுவழி வந்த தொடர்கள் முன்பு பயன்படுத்தப்பட்டன. சான்றுக்கு இரண்டு சொல்லலாம்.

''ஓடும் நரியிலே ஒரு நரி கிழ நரி

கிழ நரி முதுகிலே ஒரு பிடி நரை மயிர்''.

''கடலில் ஓர் உரல் உருளுது புரளுது

தத்தளிக்குது தாளம் போடுது'' என்பவை.

தமிழ்ப்பாடல்களை மாணவன் இசையோடு பாடும்முறை வரவேண்டும். தமிழின் இனிமையை இது உணர்த்தும். இதற்கு ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்.

மனப்பாடம் செய்யும் பழக்கம் தற்போது மங்கி வருகிறது. கூட்டல், பெருக்கல் வாய்பாடு இன்றைய மாணவர்களுக்குத் தெரியாது. இது தவறான கல்விமுறை. தமிழ்ப்பாடப் புத்தகத்திலுள்ள பாடல்களை மாணவர் மனப்பாடம் செய்வது கட்டாயமாக்கப்பட வேண்டும். இது அவனுக்குச் சொல்வளம் சேர்க்கும். பிற்காலத்தில் அவன் படைப்பிலக்கியம் உருவாக்கும் நிலை பெறும்போது இப்பழக்கம் பெரிதும் உதவும். முன்பு வெண்பாவை இரண்டு முறை கேட்டவுடன் அதை ஒப்பிக்கும் நினைவாற்றல் மாணவனுக்கு இருந்தது. அந்தத் திறமை இல்லாதவனை ஔவையார் சாடினார். ''வெண்பாவை இருகாலில் கல்லானை'' என அவர் இழிவாகச் சொன்னார்.

தமிழ், இலக்கியச் சொல்வளம் மிக்க மொழி. யானையைக் குறிப்பதற்கு மட்டும் ஏறக்குறைய 40 சொற்கள் தமிழில் உள்ளன. தொடக்க நிலையில், மாணவருக்குத் தெரிந்த சொற்களையே அறிமுகம் செய்வது நல்லது. பிறகு படிப்படியாக மற்ற சொற்களை அறிமுகப்படுத்துவது பொருத்தமாகும்.

தமிழ் இலக்கணப் பாடம் நடத்தும் போதும் இம்முறை ஏற்றதாக இருக்கும். வினைத்தொகைக்கு எடுத்துக்காட்டு தரும்போது, தொடுகழல் என்பதைவிட, ஊறுகாய் என்ற தொடர் மாணவனுக்கு எளிதாகப் புரியும்.

தமிழில், ல, ள, ழ ங, ன, ண ர, ற என்ற எழுத்துகள் உள்ளன. இப்படிப்பட்ட எழுத்துகள் வேறுமொழிகளில் இல்லை. இதுவும் தமிழின் சிறப்புகளில் ஒன்று. இந்த நுண்ணிய ஒலி வேறுபாடு கொண்ட சொற்களை மாணவன் அறிந்து கொள்வதற்கும், அவன் அறிந்த சொற்களையே எடுத்துரைக்க வேண்டும். (எ.டு) வால் - வாள் - வாழ். தகராறு என்ற சொல்லை எழுதும் போது எந்த 'ர' எழுத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று ஒருவன் கேட்டானாம். சின்ன தகராறாக இருந்தால் சின்ன 'ர' போடு. பெரிய தகராறாக இருந்தால் பெரிய 'ற' போடு என்று மற்றொருவன் பதில் சொன்னானாம். அப்படி இல்லாமல் இடையின 'ர' கரம், வல்லின 'றகரம்' என்று இலக்கணத்தையும் கற்பிக்க வேண்டும்.

தாய்மொழியில் பிறமொழிக் கலப்பு கூடாது. இந்த நடைமுறையில் ஃபிரெஞ்சு மொழியினர் முனைப்பாக உள்ளனர். சங்க இலக்கியங்களில் பிறமொழிச் சொற்களின் கலப்பு இல்லை எனலாம். தாய்மொழியில் பிறமொழிச் சொல் கலப்பது பாலில் நஞ்சு கலப்பதைப் போன்றது. மறைமலைஅடிகள் தேவநேயப் பாவாணர் முதலியோர் வழிகாட்டிகளாக விளங்கினார்கள். இவர்களின் வழி பின்பற்றப்பட வேண்டும். மாணவன் தூய தமிழே பேசுமாறு கற்பிக்கப்பட வேண்டும். நல்ல தமிழே எழுதுமாறு அறிவுறுத்தப்பட வேண்டும். ஆசிரியர் இதற்கும் வழிகாட்ட வேண்டும்....

''தமிழயரத் தாழ்ந்தான் தமிழன்அவனே

தமிழுயரத் தான்உயர்வான் தான்''

என்ற பாவாணரின் கருத்தை என்றும் மனத்தில் நிறுத்த வேண்டும்.

ஆய்வு முடிவுகள்

1) சங்க காலத்திலேயே தொடக்க நிலை ஆசிரியர்கள் இருந்தனர்.

2) பவணந்தி முனிவர் உரைத்த மாணவர் வகைப்பாடு இன்றும் உள்ளன.

3) உரக்கப் படித்தலும் மனப்பாடம் செய்தலும் இன்றைய மாணவனுக்கு உரியவை.

4) மொழிக் கலப்பு, தாய்மொழியை அழிக்கும்.

32. தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் கணினியின் பயன்பாடு

அ.செந்தில்குமார், M.A., D.T.Ed., ஆசிரியர்
இராமநாதபுரம் - 623503, sktmtea@gmail.com

முன்னுரை

ஒரு சமூகத்தின் பொருளாதார அடித்தளமே அச்சமூகத்தின் கல்வி ஆகும். அக்கல்விதான் மனிதனின் வாழ்வியல் கூறுகளை நிர்ணயிக்கிறது.

"எல்லார்க்கும் கல்வி கொடு
எல்லாக் கல்வியும் தமிழில் கொடு"

என்ற தமிழ் வழிக் கல்வி இயக்க முழக்கம் முழங்கிவரும் இன்றைய சூழலில் தகவல் தொடர்புச் சாதனங்கள் பரந்த உலகைச் சுருங்கச் செய்துவிட்டன. பள்ளி, கல்லூரி வகுப்பறை அனுபவமின்றி, எழுது பொருள்கள் துணையின்றிக் கணினி வழியாக இணையத் தளத்தின் மூலம் ஒரு மாணாக்கன் தான் விரும்பும் கல்வியைப் பெற முடியும் என்ற அளவிற்குத் தற்கால கல்வி முறை மாறியுள்ளது. அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் அச்சுத் தொழில்நுட்பம் தோன்றிய போது அதற்கு ஈடுகொடுத்து தமிழ் செயல்படத் தொடங்கியது. அதன் பயனாக இன்றைய கணினித் தமிழ் மிக வேகமாக உலகெங்கும் தமிழ்மொழியின் கருத்துகளைக் கொண்டு சென்று கற்றல், கற்பித்தலில் எவ்வாறு துணைபுரிகிறது என்பதைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கணினியின் மகத்துவம்

கணினியைப் பயன்படுத்துவோர் உலகெங்கும் இருந்து பல்வேறுபட்ட அறிவுகளை, தகவல்களைப் பெற முடிகிறது. தங்களது அறிவை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள முடிகிறது. இன்றைய உலகம் கணினி உலகமாகத் திகழ்கிறது. கல்விக் கூடங்கள் யாவும் கணினியைப் பயன்படுத்த துவங்கிவிட்டனர். கணினி வழிக் கல்வி முறையில் செயற்கைக் கோள், கணினி குறுவட்டு, இணையம், மின் அஞ்சல், மின் நூலகம், மின் நூல்கள், மின் கல்வி எனப் பல சிறப்பிடம் பெறுகின்ற 2004ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20ம் நாள் ஸ்ரீஹரி கோட்டாவிலிருந்து ஏவப்பட்ட கல்விச் செயற்கைக் கோள் இதனை மெய்ப்பித்து வருகிறது. EDUSAT என்னும் இச்செயற்கைக்கோள் மூலம் செந்தமிழ் கற்பித்தல் எங்கிருந்தும் கேட்டு, கற்று மகிழும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

மொழிப்பாடம் கற்பித்தலில் கணினியின் பங்கு

மொழிப்பாடம் ஒரு திறன் பாடம், பிற பாடங்கள் அறிவை மட்டும் வளர்ப்பன. ஆனால் மொழிப் பாடம் அறிவோடு கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் முதலான திறன்களையும் வளர்ப்பன. இத்தகு திறன்களை

வளர்க்கும் முறையில் கற்பிக்கும் செய்யுள் - உரைநடை - இலக்கணம்- துணைப்பாடம் கட்டுரை ஆகிய ஐவகைப் பாடங்களைக் கற்பிப்பதற்கு கருவியாக விளங்கும் கணினி பெரிதும் இன்றைய தேவையான ஒன்றாக மாற்றம் பெற்றுள்ளது.

கற்பதை ஊக்குவிக்கவும், கற்றலை எளிமைப்படுத்தவும், கற்பிக்கும் வேகத்தை அதிகப்படுத்தவும், கற்பித்தலைச் செம்மையாகப் புரிந்து கொள்ளவும், துல்லியமாக அறியச் செய்யவும், மறதியைக் குறைத்து நினைவாற்றலை மிகுதிப்படுத்திக் கொள்ளவும், கற்பித்தலில் கவர்ச்சியை ஏற்படுத்தவும், கற்றலில் ஏற்படும் இறுக்கம் அகலவும், சிந்தனையைச் செழுமையுறச் செய்யவும், இணையத் தளத்தில் பாடங்கள் வருவதால் கட்புல, செவிப்புல கவனமுறை வளர்கிறது. பாடங்களை எளிதில் புரிநது கொள்ள மாணாக்கர்களுக்கு முடிகிறது. மாணாக்கர்களே இணைய தளத்தை இயக்கிப் பாடங்களைப் பார்ப்பதன் மூலம் அறிவுத் தேடல் இயல்பாக வளர்கிறது. பள்ளியில் கண்டிப்பு, தேர்வு அச்சம் நீங்கி இனிமையுடன் கற்கும் வாய்ப்பு கணினியின் வாயிலாக மொழிப்பாடம் கற்க உதவியாக உள்ளது.

கணினி விளையாட்டில் நினைவாற்றலை வளர்த்தல்

கணினி விளையாட்டுகள் தற்போது மாணவர்களிடையே பெரும் செல்வாக்கினைப் பெற்று வருகின்றன. அவற்றுள் சில நினைவாற்றலை வளர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. காட்சிகளைக் கணினித் திரையில் காட்டி அதிலுள்ள விவரங்கள் பற்றி வினவுதல், காட்சியோடு வாய்மொழி விளக்கத்தை இணைத்துப் பின்னர் அவ்விளக்கம் தொடர்பாக வினாக்களைக் கேட்டல் முதலியனவற்றை உள்ளடக்கிய விளையாட்டுகள் நினைவாற்றலை வளர்ப்பனவாகும். இவ்விளையாட்டுகளில் கற்றலில் பின் தங்கிய மாணவர்கள் முன்னேற்றம் காணவும் துணைபுரிகிறது.

செயற்கைக்கோள் வழியாக மொழிப்பாடம் கற்பித்தல்

தமிழகத்தில் ஆசிரியர்களுக்கான பயிற்சியைச் செயற்கைக்கோள் வழியாக அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் (சர்வசிக்ஷா அபியான்) கீழ் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒன்றாம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கான பல்வேறு வகுப்புகளைக் கணினி மூலம் எப்படிக் கற்றுத் தருவது என்பதற்காக இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்காக வட்டாரவள மையங்களில் செயற்கைக்கோள் கலந்தாய்வு மையங்கள் (Interactive Terminals) அமைக்கப்படுகின்றன. இவ்வாறு உலகம் எங்கும் தகவல் தொழில் நுட்பத்தின் காரணமாக வியக்கத்தகு மாற்றங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

மொழித்திறன் வளர்ச்சிக்குக் கணினி

நூலை நாம் படிப்பதுபோல கணினியின் நினைவை நெகிழி, குறுந்தட்டு போன்றவற்றில் பதியப்பட்ட தகவல்களைக் கணினித் திரைக்குக் கொண்டுவந்து படிக்கலாம். நூலின் பக்கங்களைப் புரட்டுகிறோம், படிக்கின்றோம். இவ்வாறே கணினியில் தகவல்களை மேன்மேலும் படிக்கலாம். கணினித் திரையில் தகவல்கள் மேன்மேலும் காட்சிதர கணினிக் குமிழ்ப் பலகையில் உள்ள அம்புக்குமிழை அழுத்தினால் போதுமானது.

தற்காலக் கணினிகளில் ஒளிமட்டுமில்லாது ஒலியும் இணைக்கப்பட்டிருப்பதால் ஒலி, ஒளி ஆகிய இரு ஊடகங்கள் வழியாகக் கணினியின் துணை கொண்டு மொழியைக் கற்கலாம், கற்பிக்கலாம். இதற்குக் கணினியை இயக்கும் திறன் ஓர் அடிப்படைத் தேவையாகிறது.

தேக்கநிலை நீக்கக் கணினி

கற்பித்தல் அணுகுமுறையில் பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட ஒருமுறை சிறந்தது எனக்கூற இயலாது. மாணவர்களுடைய முன்னறிவு கொள்திறன் படிப்புச்சூழல் முதலியனவற்றைச் சார்ந்து கற்பித்தல் முறைகளும் அமைய வேண்டும். ஒரு ஆசிரியரோ ஒரு குழுவினரோ அனைத்து முறைகளையும் மேற்கொள்ள இயலாது. எனவே பல்வேறு உத்திகளைக் கணினி வழியாகவே பின்பற்ற இயலும். தகவல் தொழில்நுட்பக் கருத்துக்களைப் பல்வேறு ஈர்ப்புடைய நிலையில் வெளிப்படுத்தத் தகவல் தொடர்பு உத்திகள் பயன்பட்டு வருகின்றன. அவற்றைக் கணினிச் சார்பாக்கிக் கற்பித்தலுக்குப் பயன்படுத்தும்போது மாணவர்கள் எளிமையாகப் புரிந்து கொண்டு கற்க முடியும்.

தமிழ் இணையக் கல்விக் கழகம்

உலகம் முழுவதும் வாழும் தமிழ் மக்களும் தமிழ் ஈடுபாடு கொண்டுள்ள மற்ற மொழியினரும் தமிழைக் கற்கவும், தமிழ் வரலாறு, இலக்கியம், கலை, பண்பாடு, ஆகியவை பற்றி அறிந்து கொள்ளவும் வாய்ப்புக்களை இணையவழி அளிப்பதே தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் நோக்கமாகும். இப்பல்கலைக்கழகம் தமிழ்க் கல்வியை அரிச்சுவடி முதல் ஆராய்ச்சி வரை வழங்கத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகின்றது. எந்த வயதினராயினும், இணைந்து கற்கலாம் தேர்வெழுதிச் சான்றிதழும் பட்டமும், பட்டயமும் பெறலாம். ஆரம்பக் காலங்களில் பாடங்கள் குறுந்தகடுகள் (C.D) முலம் கொடுக்கப்பட்டன. இதுவும் ஒரு புத்தகத்தைப் போன்றுதான். ஆனால் குறுந்தகடும் கணினியும் இருந்தால்தான் பயன்படுத்தமுடியும். ஆனால் தற்போது பாடங்கள் இணையதளங்கள் மூலமாகவே கிடைக்கின்றன. இணையதள வசதி இருந்தால் எங்கிருந்தும் தமிழைக் கற்கலாம். பல நேரங்களில் ஆசிரியருடன் தொடர்பு கொண்டு ஐயங்களைக் கேட்டறியலாம்.

மின்கற்றல் நன்மைகள்

வழக்கமான புத்தகக் கல்வியில் இல்லாத பல நன்மைகள் இதில் இருக்கின்றன. அத்துடன் இப்போது உள்ள தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மின் கற்றல் மூலம் விரைவாகப் புரிந்து கொள்ளத்தக்க வசதிகளைக் கொண்டுள்ளது. வகுப்பில் ஆசிரியர் நடத்திய பாடத்தில் தவறிய மாணவர்கள் திரும்பக் கேட்கத் தயக்கம் வந்து அவர்களைத் தடுத்துவிடும். அதனால் அந்தப் பாடத்தையே இழந்து விடுவர். இந்தக் குறைபாடு மின்கற்றல் மூலம் நீக்கப்படுகிறது. எத்தனை முறைவேண்டுமானாலும் திரும்பத் திரும்பக் கற்கும் வாய்ப்புடன் மின்கற்றல் பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் மாணவரின் திறனுக்கேற்ப இங்கே கற்றுக்கொள்ள முடிகிறது. எனவே இது கல்வியின் அடுத்த பரிணாமம் என்று கல்வித் தொழில்நுட்ப அறிஞர்கள் கூறுகின்றனர்.

முடிவுரை

ஒரு மொழியின் வளர்ச்சி என்பது அந்த மொழியைப் பேசும் மக்களின் வளர்ச்சியைச் சேர்ந்தே இருக்கும். இன்றைய இணையத் தமிழின் வளர்ச்சிக்கும் தமிழர் சிலரின் பங்களிப்பே வேர்க்காரணமாக அமைந்திருக்கிறது. தமிழனால் தமிழ் வளர்வதும், தமிழால் தமிழன் வளர்வதும் முடிவில்லாத் தொடர் ஓட்டமாகும். இன்று கணினித் திரைகளில் தமிழ்மொழி பல புதுமைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழித் துறை மற்றும் மொழியியல் ஆய்வுப் பிரிவில் இதற்கான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கணினி மொழியியல் மற்றும் மொழித் தொழில்நுட்பத்தில் மனித வளத்தை உருவாக்கும் நோக்கத்தில் பல கணினித் தமிழ் ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் சிற்றூரில் இருந்தும் கூட தமிழ்வழியாகக் கல்விகற்கும் மாணவனுக்கும் கணினித் தமிழ் இன்று பயன்பட்டு வருகிறது. எனவே நம் கணினித் தமிழ் மொழியைக் கால ஓட்டத்திற்கேற்ப முன் எடுத்துச் செல்வது தமிழர்களாகிய நம் அனைவரின் கடமையாகும்.

33. பிறமொழி மாணவர்கள் தமிழை எளிமையாகக் கற்றுக் கொள்வதற்கான பயிற்று முறைகள்

இரா.மணவழகன், உதவி ஆசிரியர்,
ஊ.ஒ.தொ. பள்ளி, துவரங்குறிச்சி மேற்கு, பட்டுக்கோட்டை,
தஞ்சாவூர் மாவட்டம் - 614613

அறிமுகம்

அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழி செம்மொழி எனப் போற்றப்படுகின்றது. வீறு நடை செம்மொழி தமிழ் மொழி உலகம் வேரூன்றிய நாள் முதல் உயிர்மொழி எனத் தமிழின் பெருமையைப் பறைசாற்றுகிறார் பெருஞ்சித்திரனார். தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்பது பாரதியின் கனவு. எனவே நம் தமிழ் மொழியைப் பிற மொழி மாணவர்களும் எளிமையாகக் கற்றுக்கொள்வதற்கான பயிற்று முறைகளை ஆராய்ந்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

தாய்மொழிக் கல்வி

தாய்மொழிக் கல்வி என்பது குழந்தைக்கு இயற்கையாகவே கிடைக்கின்ற செல்வம் தாயும் தந்தையும் சுற்றமும் பள்ளியும் சமுதாயமும் தமிழ் எனும் செல்வத்தை ஊன்றி வளர்க்கின்றார்கள். எனவே தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவன் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ளுதல் எளிதாக நிகழ்கிறது. அது மட்டுமல்லாமல் அவன் தாய் மொழி மூலமே காணுகிறான். தாய்மொழி மூலமே கேட்கிறான். அதனால் கற்றல் எளிதாகிறது. ஆனால் இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்போருக்கு கற்றல் எளிமையாக அமைவதில்லை எனவே அதற்குரிய வழி வகைகளைக் கண்டறிந்து அவர்கள் எளிமையாகத் தமிழைக் கற்றுக்கொள்ள வகை செய்திடல் வேண்டும்.

மொழிக்கல்வி

தமிழில் ஒலி வடிவமும், வரி வடிவமும், ஒன்றேயாகும். ஒவ்வொரு எழுத்திற்கும் தனித்தனியான ஒலி வடிவங்கள் உள்ளன. கேட்டல் திறனில் செவியும் பேசுதல் திறனில் வாயும் எழுதுதல் திறனில் கண், கையும், படித்தல் திறனில் கண்,வாய், மூளை ஆகிய உறுப்புகள் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன.

கேட்டல் திறன்

மாணவர்களுக்கு ஒலியறிதல் விளையாட்டின் மூலம் எழுத்துக்களின் ஒலியினைக் கற்பிக்கலாம். பறவைகளின் பெயர்கள், விலங்குகளின் பெயர்களைக் கூறி மாணவர்களிடம் திரும்பக் கூறச் செய்யலாம். கதையைக் கூறி, பின் அதற்கேற்ற தலைப்பினைக் கூறச் செய்யலாம் பாடல்கள் ஒலிக்கச் செய்து கேட்கச் சொல்லுதல்.

பேசுதல் திறன்

பேசுதல் திறன் வளர்க்க எழுத்துகளின் ஒலிப்பு வேறுபாட்டை அறிந்து உச்சரிக்கச் செய்தல், குறில் நெடில் எழுத்துகளின் வேறுபாட்டை உணர்ந்து உச்சரிக்க பயிற்சியளித்தல் மயங்கொலி எழுத்துகளான ல,ள,ழ,ண,ன,ந,ற,ர ஆகியவற்றை அடையாளம் கண்டு, அவற்றை உச்சரிக்கும் போது நாக்கு, பல், உதடு, அன்னம் ஆகியவற்றின் செயல்பாட்டினை உணரச் செய்தல். நாநெகிழ், நாபிறழ் பயிற்சியளித்தல்.

படித்தல்

எழுத்துக்களை அறிமுகம் செய்தல், தமிழில் ஒலி வடிவமும், வரி வடிவமும் ஒன்றேயாகும். ஒவ்வொரு எழுத்திற்கும் தனித்தனியான ஒலி வடிவங்கள் உள்ளன. படித்தல் திறன் முழுமையான மொழி அறிவை வளர்த்துக் கொள்ள உறுதுணை புரிகின்றது. படித்தலுக்கு முதலில் எழுத்துகளின் வடிவம்,சொற்களின் செம்மையான உச்சரிப்பு ஆகியவற்றில் பயிற்சி அளித்திடல் வேண்டும். பின் எழுத்துகளை இணைத்துப் படிக்க பயிற்சி அளித்தல், பின்னர் சொற்களையும் தொடர்களையும் படிக்க பயிற்சியளித்திடல் வேண்டும். படித்தல் திறன் வளர்த்திட மின் அட்டைகள், தொடர் அட்டைகள் சொற்புத்தகம், சுழலட்டை போன்றவைகளைப் பயன்படுத்தலாம்.

எழுதுதல்

எழுதக் கற்றுக்கொள்ளுதல், படிக்கக் கற்றுக் கொள்வதை விட கடினமானது தமிழ் எழுத்துகளைக் குறியீடுகள் வழி எளிமையாக எழுதக் கற்பிக்கலாம்.

ட வகை	குறியீடு அகராதி						
	ட	ட	ட	ட	ட	ட	ட
ட	ட	டி	டீ	டு	டூ	ட்	டா
ட	ப	பி	பீ	பு	பூ	ப்	பா
ட	ம	மி	மீ	மு	மூ	ம்	மா
ட	ழ	ழி	ழீ	ழு	ழூ	ழ்	ழா
ட	ய	யி	யீ	யு	யூ	ய்	யா

ா துணைக்கால்வகை							
ா	ா	ா	ா	ா	ா	ா	ா
ா	ர	ரி	ரீ	ரு	ரூ	ர்	ரா
ா	ந	நி	நீ	நு	நூ	ந்	நா
ா	ங	ஙி	ஙீ	ங	ங	ங்	ஙா
ா	ச	சி	சீ	சு	சூ	ச்	சா
ா	க	கி	கீ	கு	கூ	க்	கா
ா	த	தி	தீ	து	தூ	த்	தா
ா	ற	றி	றீ	று	றூ	ற்	றா

ன-வகை

ன	னி	னீ	னு	னூ	ன்	ண	ணி	ணு	ணூ	ண்

னை-வகை

(எ.கா)	கை	பை	தை

இரட்டைக் கொம்பு

ஒ	ஓ	ஔ	ஒ	ஓ

(எ.கா)	கே	கோ

ஒற்றைக்கொம்பு - வகை

ஞ	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞ்
ள	ளி	ளீ	ளு	ளூ	ள்
ல	லி	லீ	லு	லூ	ல்
வ	வி	வீ	வு	வூ	வ்

(எ.கா)	கெ	கொ	கௌ

(வழி)	அ	ஆ	இ	உ	எ	ஏ	ஐ

முடிவுரை

பிறமொழி மாணவர்களுக்கு அவர்களின் வயதிற்கும், கற்கும் திறனுக்கும் ஏற்ப, படித்தல், எழுதுதல் ஆகியவற்றில் உரிய பயிற்சிகளை அளித்தால் தமிழ் மொழியை எளிமையாகக் கற்றுக்கொள்வர்.

34. இரண்டாம் மொழியாகத் தமிழைப் பயிலும் மாணாக்கருக்கு உரிய கற்பித்தல் முறைகள்

முனைவர் இ. கோமதிநாயகம், சென்னை

"தமிழே!ஆதித்தாயே வாழ்க!
தமிழர்க்கெல்லாம் உயிரே வாழ்க!
தமிழ்நாட்டுக்கும் பிறநாட்டுக்கும்
அமிழ்தாய் அமைந்த அம்மா வாழ்க!"

– பாவேந்தர் பாரதிதாசனார்.

என்று முள தென் தமிழ், உலகு அவாவும் மொழியாக வலம் வந்து கொண்டிருக்கிறது. ஆம், தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் மட்டுமே, பேச்சுமொழியாகவும் சூழல் மொழியாகவும் இருந்துவரும் தமிழ்மொழி, இக்காலத்தில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, மோரீசுத்தீவு மற்றும் அரேபிய, நாடுகளில் கற்கவும் கற்பிக்கவும் படுகிறது, அந்நாடுகளில் பெரும்பாலும், தமிழ் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படுகிறது. தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியும் உலகத் தமிழாசிரியர் பேரவையும் இணைந்து நிகழ்த்தும், 11 ஆவது உலகத்தமிழாசிரியர் மாநாட்டில், தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதற்கான வழிமுறைகள் சிலவற்றை மொழியியலாளர்கள் மற்றும் இத்துறையில், செயலாற்றிவரும் சான்றோர் வழிநின்று காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பன்னாட்டோர் ஆர்வம்

"வீறுடை செம்மொழி தமிழ்மொழி;உலகம்
வேரூன்றிய நாள் முதல் உயிர் மொழி"

என்ற, பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் வாய்மொழிக்கேற்ப, நம் உயிர்மொழியாகவும் உலகம் போற்றும் உயர்மொழியாகவும் விளங்குவது நம் தமிழ்மொழி, மேலும், தொன்மை, முன்மை, நுண்மை, திண்மை, எண்மை, ஒண்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, மும்மை, செம்மை, இயன்மை, வியன்மை ஆகிய பதினாறு செவ்வியல்களைக் கொண்ட செம்மொழி நம்மொழி என்பார் பாவாணர். இத்தகைய மொழியின், இலக்கிய வளம், இலக்கண அரண், சொல்வளம், பொருள்வளம், காலத்திற்கேற்ற புதுக்கோலம் புனைந்துள்ளமை முதலானவற்றைக் கொண்டு விளங்கும் தமிழ்-மொழியைக் கற்றுப் பயன் நுகரப் பன்னாட்டுள்ளோரும் ஆர்வங்கொண்டுள்ளனர்.

பவனிவரும் பல்லக்குகள்:

உலகத்தமிழ் ஆர்வலர்களுக்கும், தமிழ் கற்கவிழைவோருக்கும் தமிழைத் தமிழ் வழியாகவும் பிறமொழி வாயிலாகவும் கொண்டு செல்ல, வழிமுறைகள் பல பின்பற்றப்படுகின்றன. இணையம், வலைத்தளம், வலைப்பூ, கூகுள் போன்ற தொழில்-நுட்பங்களின் வழி, தமிழன்னை உலகெங்கும் பவனி வந்து கொண்டிருக்கிறாள்.

ஏன்? எப்படி:

பல்வேறு வாழ்வியல் சூழல்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற அயலகத் தமிழர்கள், வாரத்தில் ஒருநாள் அல்லது இரண்டுநாள் தமிழ்மொழியைக் கற்கவும் கற்பிக்கவும் நேரம் ஒதுக்கிறார்கள். சில நாடுகளில் சற்றுக் கூடுதலாகவும் ஒதுக்குகிறார்கள். அவர்கள் இரண்டாம் மொழியாகத் தான் தமிழைக் கற்க வேண்டிய கட்டாயத்திலும் உள்ளார்கள்.

இரண்டாம் மொழியாகத் தமிழ் கற்பிக்கத் தொடங்குகின்ற ஆசிரியர்களுக்கு (அன்னார், மருத்துவராக பொறியாளர்களாக, மகளிர் சிலர், இல்லத்தரசியாகவும் உள்ளனர்) ஏற்ற பாடத்திட்டமும், கற்பித்தல் அணுகுமுறையும் அவர்தம் சூழலுக்கு ஏற்றவாறு இருந்தால் தான், எண்ணிய எண்ணியாங்கு எய்திட இயலும்.

கற்பிக்கும் கருவிகள், கற்பித்தலுக்கான வழிமுறைகள் மாணாக்கருக்கு ஏற்ற செய்முறைப் பயிற்சிகள் முதலானவை பற்றிச் செம்மையாகத் திட்டமிட, நல்ல வழிகாட்டுதல்கள் அமையவேண்டும்.

வழிகாட்டும் வளங்கள்:

வழிகாட்டுதல் கீழ்வருமாறு அமையலாம். தமிழ் மொழியிலுள்ள வரிவடிவங்கள் அனைத்தும் முதலில், ஒலிவடிவத்தில் (எளிய இனிய இசைப்பாடல்கள் வாயிலாக) மாணாக்கர் உள்ளத்தில் நன்கு பதியவைக்கப்படுதல் வேண்டும்.

''எளிமையிலிருந்து அருமைநோக்கி'' என்ற கற்பித்தல் உத்தியின் அடிப்படையில், தமிழ் வரிவடிவங்களை எளிய முறையில் வரிசைப்படுத்தி அவற்றை அறிமுகம் செய்தல் வேண்டும். (தமிழ்நாடு தமிழ் இணையக் கல்விக்கழகம் வடிவமைத்துள்ளது) அதே முறையில் பயிற்சிகள் மேற்கொள்ள ஊக்குவிக்கவேண்டும். வரிவடிவங்களை உணர்த்திய பிறகு, சொற்களை அறிமுகம் செய்யவேண்டும்.

அச்சொற்கள், ஈரெழுத்து, மூவெழுத்துச் சொற்களாகவும் இருப்பதோடு அவற்றை விளக்கும் படங்களையும் காட்டிப் பொருள் உணர்வோடு கற்போர் உள்ளத்தில் அச்சொற்களைப் பதியச் செய்தல் வேண்டும்.

அடுத்து இருசொல் தொடர்கள், முச்சொல் தொடர்களை உருவாக்கிப் படிக்கச் செய்யலாம், (உரிய கட்டளைகள், சூழ்நிலையிலுள்ள மொழிகளால் வழங்கப்படுதல் சிறப்பு)

தொடர்ந்து சிறுநிகழ்வுகள், சிறுகதைகள் மற்றும் எளிய பாடல்களைப் படிக்கச் செய்யலாம்.

பின்னர். கற்போர் தாமே, ஒருபொருளைப்பற்றி, ஐந்து தொடர்கள் எழுதுதல், சிறுபத்திகள் எழுதுதல் (பறவைகள், விலங்குகள், இயற்கைப் பொருள்கள், பற்றியனவாகப் பாடப்பொருள் அமையலாம் ஆகியவற்றிற்குப் பயிற்சிகள் வழங்கலாம்.

மாணாக்கரின் கொள்திறனுக்கு ஏற்ப, இச்செயல்பாடுகளைப் படிப்படியாக உயர்த்திக் கொள்ளுதல் நலம்.

இலக்குநோக்கிய இலக்கு:

கற்பிக்கும் உத்திமுறைகள் வேறுபட்டிருந்தாலும் இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்பிக்கும் இலக்கு நோக்கு ஒரே தன்மையானதாக இருத்தல் வேண்டும்

அந்நோக்கு:

எளிய தமிழ்ப்பாடல்களை/கதைகளைக் கேட்டுப் பொருள் புரிந்து கொள்ளுதல்;தமிழ் வரிவடிவங்களை அடையாளம் காணுதல், வரிவடிவங்களுக்குரிய ஒலிப்புடன் படித்தல்;தமிழ்ச் சொற்களைப் படித்தல், எளிய கட்டளைச் சொற்களைக் கேட்டுச் செயல்படுதல், சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக் கொள்ளுதல்;தமிழ் இலக்கிய, இலக்கணம் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ள முயலுதல்;வாழும் சூழலுக்கு ஏற்றவாறு தமிழ்மொழியைப் பேசுதல்;தம் எண்ணத்தைக் கதை, கட்டுரை கவிதை வாயிலாக வெளிப்படுத்த முயலுதல்;அவ்வப்பகுதிகளில் நிகழும். தமிழ்நிகழ்ச்சிகளில் வரவேற்புரை நன்றியுரை கூறுதல்;யாதேனும் ஒருபொருள் பற்றிச் சிறு சொற்பொழிவாற்றுதல்;என்பனவாக அமையலாம்.

பிறமொழி உதவி:

பிறமொழி வாயிலாகத் தமிழைக் கற்பிக்கும்பொழுது, கற்பிக்கப் பயன்படும் மொழி, கற்போருக்குப் பழகிய மொழியாக, சூழல்மொழியாக இருத்தல் வேண்டும். அமெரிக்கா, தென்னாப்பிரிக்கா முதலான நாடுகளில், ''ஆங்கிலம்'' வழியாகவும் மொரீசுத் தீவில் பிரெஞ்சு மொழி வாயிலாகவும், சுவிட்சர்லாந்து நாட்டில் டச்சு மொழி வாயிலாகவும் தமிழைக் கற்பிக்க விரும்புவதாக அறிய முடிகின்றது. அந்நாடுகளில், தமிழ் கற்பிப்போர், தமிழ்

ஒலிப்புகளில் கருத்தூன்ற வேண்டும். மரபு இலக்கணங்களுக்கு முன்பாக, நடைமுறை இலக்கணங்களைக் கற்பிக்க வேண்டும், தமிழ்மொழியோடு அவர்கள் நாட்டு மொழிகளின் ஒத்த கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குதல் நலம் பயப்பதாக அமையும்.

மொழியியலார் கூற்று

மேலும், இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்றுக் கொடுப்பதற்கு, மொழியியல் அறிஞர்கள் பரிந்துரைக்கும் கீழ்க்காணும் வழிமுறைகளையும் கருத்தில் கொள்ளலாம். அவையாவன. இலக்கணமொழிபெயர்ப்பு முறை, நேர்முக முறை, கேட்டுப்பேசுதல் முறை, விதிசார் முறை, தகவல் பரிமாற்றமுறை, பன்முக முறை, இடுபணிமுறை, இணையம் வழிக்கற்பித்தல் முறை ஆகியவையாகும்.

இம்முறைகளில், வன்மை, மென்மைகள் உளவதாயினும், இவற்றுள் பல நடைமுறையில் உள்ளன. இவற்றுள், இணையம் வழிக்கற்பித்தல் சிறப்பிடம் பெறுகின்றது.

இணையிலா இணையம்

இணையம் வழிக்கற்பித்தலில், உரை வடிவில், ஒலி வடிவில், காணொளிவடிவில், வரைபடம் வடிவில் படிமம், உருவம் வடிவில் தமிழ் கற்பிக்கப்படுகின்றது.

மேலும் பாட அறிமுகம், பாடப்பயிற்சிகள் செயல்பாடு, பொருளுணர்தல், ஒப்படைப்புகளுக்குத் தீர்வு காணல், ஆசிரியருடன் இணைந்து சரிபார்த்தல், பிழை திருத்தல் ஆகிய ஆறுபடி நிலைகள் கற்பிப்பதற்கான படி நிலைகளாக அமைந்துள்ளன.

தமிழ்நாட்டின், தமிழ் இணையக் கல்விக்கழகம் இணையம் வழித் தமிழ் கற்பித்தலில் வெற்றி நடை போட்டு வருகிறது.

உயர் தனிச் செம்மொழியாக உயர்ந்து ஒளிர்கின்ற, தமிழ் மொழியை மென்மேலும் உலக அரங்கில் முன்னெடுத்துச் செல்ல, ஒல்லும் வகையான உழைக்க வேண்டிய கடப்பாடு ஒவ்வொருவருக்கும் உள்ளது என்பதை இம்மாநாடு பறைசாற்றுகிறது, அறை கூவுகிறது!என்று கூறி நிறைவு செய்கிறேன் நன்றி!

35. மொரீசியசில் பண்பாட்டுக் கூறுகள் வழி தமிழ்மொழி கற்பித்தல்

திருவாட்டி உமாதேவி நாயுடு அழகிரி
தமிழ் விரிவுரையாளர் மகாத்மா காந்தி நிறுவனம், மொரீசியசு
கைபேசி எண்:00 230 57876593,
மின்னஞ்சல்: u.allaghery@gmail.com

இந்தியப் பெருங்கடலில் எரிமலையால் உருவாக்கப்பட்ட துவுகளுள் மொரீசியசு ஒன்றாகும், இது தமிழர் புலம்பெயர்ந்த சிறு நாடாகவும் வேறு பல்லின மக்கள் வாழும் நாடாகவும் விளங்குகிற, கிரியோல் என்ற வட்டார மொழி மொரீசியர்களுடைய தாய்மொழியாகும், தமிழர்களுக்குத் தமிழ்மொழி மூதாதையர் மொழியாகத் திகழ்கிறது.

மொழியும் பண்பாடும் இணைபிரியாதது என்பதை அனைவரும் அறிவர். ஆனால் மொரீசியசு தமிழர்களுக்கிடையில் தமிழ்மொழியை விட தமிழ்ப் பண்பாடே அதிகமாக நிலவியிருக்கிறது, மொருசியசில் தமிழ்மொழி இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது, அதனால் பண்பாட்டுக் கூறுகள் பாடநூல்களில் இணைப்பது இன்றியமையாததாகிறது, பண்பாட்டுக் கூறுகள் வாயிலாகப் பண்பாடு மட்டுமல்லாமல் மொழிக் கூறுகளும் கற்பிக்கப்படுகின்றன. மாணவர்களுடைய வயதுக்கேற்ப பண்பாடு தொடர்பான செய்திகள் பாடநூல்களில் சேர்க்கப்படுகின்றன.

இக்கட்டுரையில் தொடக்கநிலைப் பள்ளிப்பாடநூல்களில் இடம் பெறும் சில பண்பாட்டுக் கூறுகள் எவ்வகையில் கற்பிக்கப்படுகின்றன என்னும் செய்திகள் எடுத்துரைக்கப்படுகின்றன.

மொரீசியசில் தமிழ்க் கல்வி

திண்ணையில் தொடங்கிய தமிழ்க் கல்வி தற்போது அரசு தொடக்க நிலைப் பள்ளி, தனியார் தொடக்க நிலைப்பள்ளி, அரசுஉயர்நிலைப் பள்ளி, சில தனியார் உயர்நிலைப் பள்ளி, மாலைப் பள்ளி என வளர்ந்து பல்கலைக்கழகம் முதலிய உயர்கல்வி நிறுவனங்களில் அரசு ஆதரவினால் தொடர்ந்து நடைபெற்று வருவது போன்றுதற்குரியது. தொடக்க நிலைக்கான பாடநூல்களும் உயர்நிலைக்கான பாடநூல்களும் மொரீசியசு கல்வித் திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன, தொடக்க நிலைத் தமிழ் ஆசிரியர்களுக்கு இரண்டு ஆண்டுகள் பயிற்சி கொடுக்கப்படுகிறது. இப்பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு அந்த ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் தமிழ்மொழியைக் கற்பித்து வருகிறார்கள். தொடக்க நிலைப் பள்ளிகளில் தமிழ் மாணவர்கள் மட்டுமல்லாமல் வேறு இன மாணவர்களும் தமிழ்மொழியைப் பயில்கிறார்கள்.

தற்காலத்தில் தொடக்க நிலைப் பள்ளிகளில் இருநூற்றுப் பதினைந்து (215) தமிழ் ஆசிரியர்கள் பணியாற்றி வருகிறார்கள், அவர்களைக் கண்காணிப்பதற்கு முந்து (5) மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள், தொடக்க நிலைப்பள்ளிகளில் மாணவர்கள் முதல் வகுப்பு தொடங்கி ஆறாம் வகுப்பு வரை படித்து வருகிறார்கள், அவ்வகுப்புகளில் வளர்நிலை மதிப்பீடும் முழுநிலை மதிப்பீடும் மேற்கொள்ளப்படுகின்றன, ஆறாம் வகுப்பில் இறுதிதேர்வு தேசிய அளவில் நடத்தப்படும் பொதுத் தேர்வில் பங்கேற்றித், தேறி வருபவர்கள் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்வது மொரீசியசின் கல்வித் திட்ட முறையாகும்.

பாடநூல்களில் பண்பாட்டுக் கூறுகள்

முதல் வகுப்பு முதல் ஆறாம் வகுப்பு வரையான மாணவர்களுக்குத் தயாரிக்கப்படுகின்ற பாடநூல்களில் தமிழ் உணவு, தமிழ்ச்சடங்கு, தமிழ் ஆடை, தமிழ்த் திருவிழாக்கள், தமிழ்முறைப் பெயர்கள் முதலிய கூறுகள் இணைக்கப்படுகின்றன. முதல் வகுப்புத் தமிழ்ப் பாடநூலில் பண்பாட்டுக்குரிய சொற்களான வணக்கம், அம்மா, அப்பா, பூ முதலியவை சேர்க்கப்பட்டுள்ளன. இரண்டாம் வகுப்பு தமிழ்ப்பாடநூலில் உள்ள பண்பாட்டுக்குரிய சொற்களாவன கொலுசு, புடவை, கோவில், வணங்கு, காவடி, வேல் முதலியவை சேர்க்கப்பட்டுள்ளன. மூன்றாம் வகுப்புத் தமிழ்ப் பாடநூலில் இலக்கியச் சான்றோரான ஔவையார் பற்றிய செய்தி இணைக்கப்பட்டுள்ளது.

நான்காம் வகுப்புத் தமிழ்ப் பாடநூலில் 'விரத நாள்', 'நலமுடன் வாழ்வோம்', 'ஔவையாரும் சிறுவனும்' ஆகிய பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஐந்தாம் வகுப்புப் பாடநூலில் 'சிவராத்திரி' என்ற திருவிழா, முக்கனிகளுள் ஒன்று வாழைப்பழம் என்பதால் 'வாழை மரம்' ஆகிய இரண்டு பகுதிகள் கொடுக்கப்பட்டுள்ளன, ஆறாம் வகுப்புத் தமிழ்ப் பாடநூலில் 'காவடித் திருவிழா' மற்றும் 'திருவள்ளுவர்' ஆகிய பகுதிகள் உட்பட 'தூய்மை' என்ற நல்லொழுக்கமும் 'விலங்குகளுக்கு அன்பு' என்ற மனிதாபிமானத் தன்மையும் இடம் பெறுவதைக் காணலாம்.

பாடநூல்களில் பொதுச் செய்தி, இலக்கியச் செய்தி, அறக்கருத்து, பண்பாட்டுக் கூறு, நாட்டுச் செய்தி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பாடங்கள் மற்றும் பகுதிகள் கொடுக்கப்படுகின்றன. மூன்றாம் வகுப்புத் தொடங்கி ஆறாம் வகுப்பு வரையிலான பாடல்களில் ஆண்டின் தவணைகளைக் கணக்கிட்டுப் பத்துப் பன்னிரண்டு பகுதிகள் வழங்கப்படுகின்றன. கீழ்க்காணும் அட்டவணையில் மொரீசியசு தொடக்கநிலைத் தமிழ்ப் பாடநூல்களில் காணப்படும் பண்பாட்டுக் கூறு விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

முதல் வகுப்பு	இரண்டாம் வகுப்பு	மூன்றாம் வகுப்பு	நான்காம் வகுப்பு	ஐந்தாம் வகுப்பு	ஆறாம் வகுப்பு
பாடத்தின் எண்ணிக்கை	பாடத்தின் எண்ணிக்கை	பகுதியின் எண்ணிக்கை	பகுதியின் எண்ணிக்கை	பகுதியின் எண்ணிக்கை	பகுதியின் எண்ணிக்கை
115	108	1	3	3	4
6%	6%	10%	20%	25%	33%

பண்பாட்டுக் கூறுகள் அமைந்துள்ள பகுதிகளின் வாயிலாகச் சொற்களஞ்சியம், இலக்கணக்கூறுகள், தொடர் அமைப்பு முதலியவை மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. மாணவர்கள் வகுப்புக்கு வெளியே தமிழ்மொழியைக் கேட்பதற்கு அதிக வாய்ப்பு இல்லை. அதனால் இப்பகுதிகளின் வாயிலாக மாணவர்களுடைய சொற்களஞ்சியம் பெருகிறது, ஆறாம் வகுப்பை முடித்த ஒரு மாணவன் கிட்டத்தட்ட ஆயிரம் தமிழ்சொற்களஞ்சியம் அறிந்தவனாக இருக்க வேண்டும் என்று குறிக்கோளோடு பாடநூல்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது, அடுத்த பக்கத்திலுள்ள கட்டத்தில் நான்காம், ஐந்தாம் மற்றும் ஆறாம் பாடநூல்களில் சமயம் தொடர்பான பகுதிகளின் மூலமாக மாணவர்கள் கற்கும் சொற்களும் தொடர்களும் தரப்பட்டுள்ளன.

நான்காம் வகுப்பு	ஐந்தாம் வகுப்பு	ஆறாம் வகுப்பு
பகுதி: விரதநாள்	பகுதி:மகாசிவராத்தி	பகுதி:தைப்பூசக் காவடி
பூசைப் பொருள்கள்	பக்தர்கள்	முருகக்கடவுள்
வாழை இலை	சிவபெருமானை வழிபடு	கொடிமரம்
பூசை அறை	விரதம் இரு	கொடி ஏற்று
ஊர்க்கோவில்	அபிஷேகப் பொருள்கள்	சைவ உணவு
பூஜையில் கலந்துகொள்	அர்ச்சனைப் பொருள்கள்	காவடிகளைக் கட்டு
பக்திப் பாடலைப் பாடு	சிவலிங்கம்	காவி நிற ஆடை
கடவுளை வணங்கு	மந்திரங்கள்	அலகுகளைக் குத்து
அர்ச்சகர்	மலர் வழிபாடு	அவிநாசிப் பதிகம்

திருநீறு	வில்வ இலை	கதிர்காம மாலை
நெற்றியில் பூசு	தேவாரம்	வேல்பாட்டு
சாம்பார்	திருவாசகம்	அரோகரா
ரசம்	திருமந்திரம்	வேல்வேல்
அப்பளம்	திருவிழா	செம்பு
பாயசம்	வேளைகளில்	ஊர்வலம்
வடை	தயில்	பால்குடம்
தட்டு	தேன்	முருகன் சிலை
கழுவு	சிறப்பான	கோலாட்டம்
பரிமாறு	பஞ்சாமிர்தம்	மஞ்சள்நீர்
பூசிக்கொள்	ஓதுவார்	பால் அபிஷேகம்
விரதம்	இசைக் குழுவினர்கள்	மகாதீபாராதனை (பேரொளி வழிபாடு)
கலந்து சாப்பிடு	நடனம்	அன்னதானம்
விரதநாள்	அருள்	இடும்பன் பூசை
சுத்தம் செய்	இடையிடையே	கொடி இறக்கம்

கிரியோல் தாய்மொழி ஆதலால், தமிழ்ப் பண்பாட்டுக்குரிய சொற்களும் முன் வகுப்புகளில் கற்றுள்ள சொற்களும் பெயர்க்கேற்ற வினையும் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டும். வீட்டில் நடத்தப்படும் சில சடங்குகளையும் பழக்க வழக்கங்களையும், மொரீசியசு நாட்டு அளவில் கொண்டாடப்படும் திருவிழாக்களையும் மாணவர்கள் தமிழ்மொழியில் கற்றறிவது அவசியம். அப்போது தான் அப்பண்பாட்டைக் கடைப்பிடித்து வருவது ஒரு பொருள் இருக்கும். மேலும் தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ்மொழியையும் காக்க அதுவே வழி வகுக்கும்.

தொடக்கநிலை வகுப்புக்கான ஒவ்வொரு பாடநூலிலும் 'கடவுள் வாழ்த்து' சேர்க்கப்பட்டுள்ளது. வகுப்பைத் தொடங்கும் முன் ஆசிரியர் மாணவர்களுக்கு அக்கடவுள் வாழ்த்தைப் பாட வைக்கிறார், மாணவர்கள் வீட்டிலும் கோவிலிலும் அப்பாடல்களைப் பாடலாம்; மற்றவர்களோடு சேர்ந்து பாடலாம், மொரீசியசு சூழலுடககு இணங்க இவ்வகை வாய்ப்பினைத் தருவது கட்டாயம் ஆகிறது.

கற்பிக்கும் முறைகள்

தொடக்க நிலைப் பள்ளிகளில் போதிய வசதி இல்லாவிட்டாலும் தமிழ் ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் தமிழ் மொழி சொல்லிக் கொடுக்க முயற்சி செய்கிறார்கள். ஆசிரியருக்கு வழிகாட்டியாக இருப்பவை. தமிழ் ஆசிரியர் கையேடு, நாட்குறிப்பு, துணைக் கருவிகள், பாடல்கள், கதைகள் முதலியன ஆகம். ஆசிரியர் ஒவ் வொரு வகுப்புக்கும் நாட்குறிப்பைத் தயாரிக்க வேண்டும் இதில் பாடத்தின் தலைப்பு, பாடத்தின் நோக்கம், கற்பித்தல் நோக்கம், துணைக் கருவிகள், முன்னறிவைச் சோதித்தல், பாட வளர்ச்சி, மதிப்பீடு, தன் மதிப்பீடு முதலிய கூறுகள் அடங்கும். ஆசிரியர் இவற்றைக் கொண்டு வகுப்பை நடத்துகிறார்.

கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய திறன்கள் மாணவர்களிடம் வளர்த்துக் கொள்வதற்குப் பாடங்களும் பகுதிகளும் உறுதுணையாக இருக்கின்றன. ஒரு புதிய சொல்லை அறிமுகம் செய்ய, ஆசிரியர் துணைக் கருவிகளையோ உண்மையான பொருள்களையோ கொண்டு வாய் மொழிப் பயிற்சிகள் தருகிறா. ஆசிரியர் கையேட்டில் அச்சொல்லைக் கற்பிப்பதன் நோக்கமும் வாய்மொழிப் பயிற்சி செய்யும் முறையும் அச்சொல்லோடு தொடர்பான பாடல்களும் இடம் பெறுகின்றன. அவை ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக அமைகின்றன

இலக்கணக் கூறுகளான பெயர்ச்சொல், வினைச்சொல், வேற்றுமை உருபுகள், முற்றுவினை, எதிர்மறை வினை, குறிப்பு வினை, இடம், பால், திணை, எண் முதலியவை பகுதிகளில் காணும் சொற்களில்

இணைக்கப்படுகின்றன. ஆசிரியர் இவ்வகைச் சொற்களைப் பிரித்து இலக்கணத்தை விளக்குகிறார். பொதுவாக ஆசிரியர் விதி வரும் முறையை விட விதியை விளக்கும் முறையை அதிகமாகப் பயன்படுத்தி மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறார். இவற்றை விளக்கிய பிறகு இவற்றை ஒட்டிப் பயிற்சி அளிக்கிறார். மாணவர்களுக்குப் புரியாவிட்டால் திரும்பவும் கற்பிக்கிறார். தமிழ் இலக்கத்தை ஒட்டிப் பாடநூலில் அளிக்கப்பட்டுள்ள பயிற்சிகளும் ஆசிரியர் தனிப்பட்ட முறையில் தயாரிக்கப் பயிற்சிகளும் வழங்குவத உண்டு. மொழி வளம் பெறுவதற்கு ஆசிரியர் மாணவர்களுக்குச் செயல்முறைப் பயிற்சி வழங்குவத நலம் தருவதாகும்.

தெரிந்ததிலிருந்து தெரியாதவற்றிற்குச் செல்லுதல், முழுமையிலிருந்து பகுதிக்குச் செல்லுதல், எளிமையிலிருந்து சிக்கலுக்குச் செல்லுதல் முதலிய அணுகுமுறைகளைக் கொண்டு ஆசிரியர் மாணவர்களுக்குக் கற்பிக்கிறார். முதல் மற்றும் இரண்டாம் வகுப்புகளில் ஆசிரியரின் பல நடவடிக்கைகளின் அடிப்படையில் மாணவர்கள் அவற்றில் பங்குகொண்டு தமிழ்மொழியைக் கற்கிறார்கள். விளையாட்டுமுறை, நடிப்பு முறை, விளக்கக் காட்சி, 'சங்கொரே' முதலியவற்றால் கற்றல் கற்பித்தல் நிகழ்கிறது. மற்ற வகுப்புகளில் இலக்கண மற்றும் மொழிபெயர்ப்பு முறையும் ஆசிரியர் சில வேளை பயன்படுத்திக் கொள்கிறார்.

'விரதநாள்' என்ற பகுதியை விளக்கிய பிறகு ஆசிரியர்கள் ஒரு சிலர் ரசம், சாம்பார், உருளைக்கிழங்கு, வாழைக்காய்ப் பொடிமாசு முதலிய கறி வகைகளைத் தயார் செய்து வந்து மாணவர்களுக்கு விருந்து அளிப்பார்கள். இவ்வகையில் மாணவர்களுக்கு ஒற்றுமைத் தன்மை காட்டப்படுகிறது. மேலும் பகுதியில் உள்ளவற்றைச் 'செய்து கற்றல்' என்ற முறையைக் கையாண்டு கற்பிக்கப்படுவதைக் காணலாம். பாடநூல்களில் சேர்க்கப்பட்டுள்ள சமயம் தொடர்பான பகுதிகள் மாணவர்களுடைய அனுபவத்திற்கேற்ப அமைந்துள்ளது. வகுப்பில் மாணவர் கற்பதைத் தம் வாழ்க்கைக்குப் பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இவ்வாறு செய்யப்படுகிறது.

தைப்பூசக் காவடித் திருவிழா மொரீசியசு நாட்டளவில் மிகச் சிறப்பாகக் கொண்டாப்படுகிறது. அதனால் தான் 'காவடித் திருவிழா' என்ற பகுதியை விளக்குவதற்கு ஆசிரியர் காவடியைக் கட்டும் ஒரு சில பொருள்களை வகுப்புக்குக் கொண்டு வந்து காட்டுகிறார். மாணவர்கள் ஒன்றுகூடி காவடியைக் கட்டும் பணியில் ஈடுபடுவதற்கு வழிகாட்டியாக இருக்கிறார். இவ்வாறு தென்னங்குருத்து, மரு, மயில் தோகை முதலிய தமிழ்ச் சொற்களை மாணவர்கள் கற்றுக் கொள்கிறார்கள். இத்திருவிழாவின்போது கோவிலில் என்ன நடைபெறுகிறது என்பதை மாணவர்கள் ஓரளவு புரிந்து கொள்கிறார்கள்; அதில் பங்குகொள்ளவும் ஆர்வம் காட்டுகிறார்கள்.

இது நவீன உலகம் என்பதால் மாணவர்கள் நவீனக் கருவிகளான கைபேசி, கணினி, மடிக்கணினி ஆகியவற்றைப் பயன்படுத்துகிறார்கள். ஆசிரியர்கள் விளக்கக்காட்சிப் படத்தின் வாயிலாகச் சில கற்பித்தலுக்கான சொற்களையும் இலக்கணக் கூறுகளையும் விளக்கிக் காட்டுகிறார்கள். இவையெல்லாம் மாணவர்களுக்குக் கவர்ச்சியாக இருக்கின்றன. இம்முறை மாணவர்கள் கவனத்துடன் கற்றுக் கொள்ள வாய்ப்பாகவும் இருக்கிறது.

'சங்கொரே' என்பது தற்காலத்தில் மொரீசியசில் பயன்படுத்தப்படுகின்ற ஒரு சாதனம் ஆகும். தனிப்பட்ட வெண்பலகையில் கணினியின் துணை கொண்டு மாணவர் பயிற்சி செய்யலாம்; வரையலாம். மாணவர்கள் இதோடு ஊடாடித் தாமாகவே பயிற்சி செய்து கற்றுக் கொள்ளலாம். இது மாணவரை மையமாக வைத்து அமைந்துள்ள ஒரு சிறந்த சாதனமாகும். இது குறிப்பாக நான்காம், ஐந்தாம் மற்றும் ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு உகந்தது. ஆசிரியர் விளக்கக் காட்சிப்படத்தில் பயிற்சிகளைத் தயாரித்துச் 'சங்கொரே' வாயிலாக ஒவ்வொரு மாணவனும் பயிலலாம். மேலும் மற்ற மாணவர் தம் நண்பன் செய்ததைப் பார்த்துத் தாமும் கற்றுக் கொள்ளவும் இது வாய்ப்பை ஏற்படுத்துகிறது. இவ்வகையில் செய்லபடுத்தல் கற்பித்து மாணவர் மனதில் விரைவாகப் பதியும் என்றும், மாணவரிடம் ஒரு தன்னம்பிக்கை உருவாகும் என்றும், அச்சமும் கூச்சமும் நீங்கும் என்றும், கற்றலில் மாணவருக்கு அக்கறை கூடும் என்றும் அறியப்படுகிறது.

சிக்கல்கள்

கற்றல் கற்பித்தலின் போது பல்வேறான சிக்கல்கள் தோன்றுவது இயல்புதான். இங்குள்ள அரசாங்கம் அச்சிக்கல்களைத் தீர்க்க முயற்சி எடுக்கிறது. ஓரிரு சிக்கல்களாவன:

போதிய நேரமின்மை	பெற்றோரது அக்கறையின்மை	போதிய வசதியின்மை
கல்வியின் அமைப்பு முறை	போதிய மேற்பார்வையின்மை	

பரிந்துரைகள்

கல்வி அமைப்பில் உள்ள சிக்கல்களைத் தீர்க்கப் பல வழிமுறைகள் உள்ளன. ஆனால் அவற்றைச் செயல்படுத்த, பல ஆண்டுகள் ஆகின்றன. சில பரிந்துரைகள் கீழ்வருமாறு:

குறுந்தகடு தயாரித்தல்

ஆசிரியருக்கு அவ்வப்போது பயிற்சி அளித்தல்

ஆசிரியருக்குக் கருத்தரங்குகளை நடத்துதல்

பாடநூலில் பொருத்தமான மற்றும் எளிமையான பகுதிகள் அளித்தல்

பாடநூலில் பல்வகைத் தரமுள்ள பயிற்சிகள் வழங்குதல்

நிறைய வாய்மொழிப் பயிற்சி செய்தல்

முடிவுரை

இக்கட்டுரையில் மொரீசியசில் தமிழ்க் கல்வி, பாடநூல்களில் பண்பாட்டுக் கூறுகள், கற்பிக்கும் முறைகள், கற்றல் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்கள், பரிந்துரைகள் ஆகியவை எடுத்துரைக்கப்படுகின்றன. தற்போது இருக்கின்ற வசதிகளைக் கொண்டு தமிழ்மொழி பகற்றல் கற்பித்தல் நிகழ்கின்றன. தொடக்கநிலைப்படிப்பு முடித்து உயர்நிலை மற்றும் பல்கலைக்கழக நிலை வரை தமிழ்மொழியைத் தொடர்ந்து கற்பதற்கு வாய்ப்பு உண்டு. ஒரு மொழி பேசுதற்குரியதாகவும் எழுதுதற்குரியதாகவும் விளங்குகிறது. மொரீசியசில் தமிழ்மொழியில் எழுதுவதில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. எழுதுதலைப் போலவே பேசுவதிலும் அக்கறையும் முதன்மையும் காட்டினால் தமிழ்மொழி மேன்மேலும் வளரும் என்பது திண்ணம்.

36. கற்றலுக்கான மதிப்பீடு கற்றலின் ஆணிவேர்

முனைவர் விஜயராணி மூர்த்தி, சிங்கப்பூர்

முன்னுரை

மதிப்பீடு என்பது மாணவர்கள் பள்ளிகளிலும் பள்ளிக்கு அப்பாலும் கற்றவற்றை அளந்து அறிவதற்குப் பயன்படும் ஓர் அளவுகோல் என்பார் ந.சுப்புரெட்டியர். ஆயினும் இன்று மதிப்பீடு என்பது மாணவர்களின் அடைவுநிலையை மட்டுமே அளந்தறிவதற்குப் பயன்படும் அளவுகோலாக மட்டுமல்லாமல் அவர்களின் கற்றலை மேம்படுத்த ஆசிரியர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து செயல்படுவதற்கு உதவும் ஒரு கருவியாகவும் கருதப்படுகிறது.

மதிப்பீடு இருவகைப்படும் மாணவர்கள் குறிப்பிட்ட காலக்கட்டத்தில் எவ்வளவு கற்றுக் கொண்டுள்ளர் என்பதைக் கண்டறிவதை முறைசார்ந்த மதிப்பீடு (Summative Assessment) என்கிறோம். இது கற்றலின் மதிப்பீடாக அமைகிறது.(Assessment Learning) அமைகிறது. மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதற்கு வழிகாட்டியாக அமைவது முறைசாரா மதிப்பீடு (Formantive Assessment). இதுவே கற்றலுக்கான மதிப்பீடாகும் (Assessment Learning) இருவகை மதிப்பீடும் அவசியமே என்றாலும் ஆசிரியர்கள் அதிகம் நாட்டம் செலுத்த வேண்டியது கற்றலுக்குத் துணைபுரியும் முறைசாரா மதிப்பீட்டில்தான் என்பது கல்வியாளர்களின் கருத்தாகும். இருவகை மதிப்பீடு கற்றலை வளப்படுத்துவதோடு கற்பித்தலையும் சிறப்புறச் செய்கிறது. இதனால் கற்றல் இனிய அனுபவமாகிறது.

கற்பித்தலோடு பின்னப்பட்ட மதிப்பீடு முறை

கற்பித்தல் முடிந்த பின்னரே மதிப்பீடு நடைபெறுவருவது வழக்கமான செயலாகக் கருதப்பட்டது, இன்று இந்நிலை மாற்றியுள்ளது. கற்பித்தலோடு மதிப்பீட்டைப் பின்னிப்பினைத்துக் கொண்டு செல்லும்போதுதான் கற்றல்கற்பித்தலில் மாணவர்கள் மட்டுமல்லாது ஆசிரியரும் நிறைவு காணமுடிகிறது என்பதை பஷ் மற்றும் பிளாக் வில்லியம் (1998) 2 போன்றோர் மேற்கொண்ட ஆய்வுகள் நிரூபித்துள்ளன. இவ்வகையிலான முறைசாரா மதிப்பீடு கற்பித்தலுக்கு பெருந்துணை புரிகிறது.

கற்றலுக்கான மதிப்பீடு தொடர்பான ஏழு உத்திகள்

கற்றலுக்கான மதிப்பீட்டில் கவனம் செலுத்திச் செயல்படும்போது கற்றலின் மதிப்பீடான முறைசார்ந்த மதிப்பீடுகளில் மாணவரின் தேர்ச்சி நிலை மேம்படுவது உறுதி என்பது கல்வியாளர்களின் கருத்தாகும்.

ஜே.சப்புயி (jan chappuis, 2016 2 கற்றலுக்கான மதிப்பீடு தொடர்பாக ஏழு உத்திகளை முன் வைத்துள்ளார்.

1. கற்றல் நோக்கங்களை எளிமைப்படுத்தி மாணவர்களுக்குப் புரியும் வண்ணம் வழங்குதல் (Provide a clear and understandable vision of the learning target)

2. தரமான பலவீனமான மாணவர் படைப்புகள் சிலவற்றை வழங்குதல் (Use examples and models of strong and weak work)

3. கற்றலின் போது இடைவிடாது ஆக்கப்பூர்வமான பின்னூட்டங்களை வழங்கி வருதல் (Offer regular desciptive Feedback during the learning)

4. சுய மதிப்பீடு செய்து கொள்ளவும் அடுத்த நிலையான இலக்குகளை அமைத்துக் கொள்ள மாணவர்களுக்குக் கற்பித்தல் (Teach evidence of student learning needs of determine next step is learning)

5. மாணவருடைய கற்றல் தேவைகளை ஆதாரமாகக் கொண்டு ஆசிரியர் அடுத்த கற்றல் நடவடிக்கைகளுக்குத் திட்டமிடுதல் (Use evidence of student learning needs to deternine next step in learning)

6. மாணவரின் கற்றல் தேவைகளைக் கருத்தில் கொண்டு குவிநோக்குப் பாடங்களை உருவாக்குதலும் தொடர்ந்து பயிற்சிகளும் கருத்துகளும் வழங்குதலும் (Design focussed instruction, followed by Practive and feedback

7. மாணவர்கள் தத்தம் தேர்ச்சி நிலையைத் தாமே கண்காணிக்கவும் அதுபற்றிச் சிந்திக்கவும் திட்டமிடவும் பகிர்ந்துகொள்ளவும் வாய்ப்பு வழங்குதல். (Practive opportunities for students to track, reflect on and share their learning progress)

ஒரு மாணவரின் கற்றல் அனுபவங்களை மேம்படுத்தவும் விரும்பத்தக்க விளைவுகள் அமையவும் உதவும் இந்த ஏழு உத்திகளையும் வரிசைப்படி பின்பற்ற வேண்டும் என்ற கட்டாயமில்லை.

கற்றலுக்கான மதிப்பீடு

சுய மதிப்பீடு, இணையாளர் மதிப்பீடு, குழு மதிப்பீடு, ஆசிரியர் மதிப்பீடு என கற்றலுக்கான மதிப்பீட்டில் பற்பல உள்ளன என்ற போதும் இக்கட்டுரையில் சுய மதிப்பீடு பற்றியும் அதற்குப் பெருந்துணைபுரியும் ஆசிரியரின் ஆக்கப்பூர்வமான பின்னூட்டங்கள் பற்றியுமே பேசப்படும்.

சுய மதிப்பீடு

சுய மதிப்பீடு என்பது மாணவர்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு கற்றலுக்கான மதிப்பீட்டு முறையாகும். இம்மதிப்பீட்டு முறையின் பலனை முழுமையாக அடைய வேண்டுமாயின் ஆசிரியர் மாணவர் ஆகிய இரு தரப்பினருக்கும் முழுமையான ஈடுபாடும் புரிந்துணர்வும் இன்றியமையாததாகும். கற்றலுக்கான மதிப்பீட்டின் வெற்றியை நிர்ணயிக்கும் முக்கிய கூறுகளுள் தலையாயது இந்தச் சுய மதிப்பீடாகும். மாணவர்கள் தாம் விடை அளித்துள்ள தெரிவுவிடைப்பகுதிகளைத் தாமே திருத்தி மதிப்பிடுவது போன்ற நடவடிக்கைகளோடு சுய மதிப்பீடு நின்றுவிடுவதில்லை. அது பல செயல்முறைகளை உள்ளடக்கிய ஒன்றாகும். அவற்றுள் ஒன்று ஒவ்வொரு மாணவரும் கற்பித்தலின் போது தமது சுய சிந்தனையையும் நடவடிக்கைகளையும் தாமே கண்காணித்து அவற்றை மதிப்பீடு செய்து கொள்வதாகும்.

கற்றல் கற்பித்தலின் போது, ''நாம் ஏன் இதைச் செய்கிறோம்?'' என்பதை ஆசிரியர் அடிக்கடி மாணவர்களுக்குத் தெளிவுபடுத்திக் கற்றல் நடவடிக்கைகளில் மாணவர்களின் ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்கிறார். இதனால், மாணவர்கள் தாம் ஈடுபாடும் நடவடிக்கைகளில் அதிக நாட்டமும் ஈடுபாடும் கொள்கிறார்கள். ஈடுபாடுமிக்க மாணவர்கள் கல்வி என்பது மதிப்பெண்களைப் பெறுவது மட்டுமல்ல என்பதை நன்கு உணர்கிறார்கள். கற்றல் நடவடிக்கைகளின் போது தம்முடைய செயல்களைத் தாமே அடிக்கடி மதிப்பீடு செய்து கொள்கிற இம்மாணவர்களுக்கு ஆசிரியரும் துணைபுரிகிறார். இவ்வாறு சுய மதிப்பீடு செய்து கொள்ளும் மாணவர்கள் செயலூக்கம் நிறைந்த மாணவர்களாக உருவாகிறார்கள். அவர்கள் தமக்குப் புரியாதவற்றைப் பற்றி ஆசிரியரிடம் கேட்டுத் தெளிவுபெறுதல். ஆசிரியரின் எதிர்பார்ப்பு என்ன? அவர் எதிர்பார்க்கும் தரமான படைப்பு எப்படி இருக்க வேண்டும்? அடிப்படையில் என்னென்ன இடம்பெற்றிருக்க வேண்டும் என்பதை அறிந்துகொண்டு அதனை நோக்கிச் செயல்படுதல் போன்ற திறன்களைப் பெற்று இலங்குவார்கள். செயலூக்கம் மிகுந்த மாற்று வழிகளில் தமது ஆற்றலை வெளிப்படுத்தக் கூடியவராகவும் இருப்பார்கள் மேலும் அவர்கள் தம் புரிந்துணர்வையும் நுண்திறன்களையும் வளர்க்கவல்ல உத்திகளை அடையாளம் காணக்கூடிய திறன்களையும் வளர்த்துக் கொள்வார்கள். இதுவே வாழ்க்கைத் திறன்களை வளர்த்தல் இதுவே கல்வியின் அடிப்படை நோக்கம்.

ஒரு பாடத்தை வடிவமைக்கும் நல்லாசிரியர் அப்பாடத்தைக் கற்பித்த பின்னர் மாணவர்களின் அடைவுநிலையைச் சோதித்து அறிந்துகொள்வதோடு அவரது பணி நிறைவு பெற்றுவிட்டதாக எண்ணுவதில்லை. கற்பித்தலும் சோதித்தலும் நடந்து முடிந்த பின்னரே உண்மையான கற்றல் கற்பித்தல் தொடங்குகிறது. மதிப்பீட்டிற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் நடிவடிக்கைகளே மாணவர்களின் நிலை அறிந்து தேவை அறிந்து அவர்களை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்லும் என்றும் அவ்வாறு இட்டுச் செல்ல ஆசிரியர் மேற்கொள்ளும் குவிநோக்கு நடவடிக்கைகளும் அவர் இடைவிடாது வழங்கி வரக்கூடிய ஆக்கப்பூர்வமான பின்னூட்டங்களும் (கருத்துத் தெரிவிப்பு Qualitative and constructive feedback)

பின்னூட்டச் சுழற்சி (Feedback loop)

ஓர் ஆசிரியர் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையின் தொடக்கத்திலேயே மாணவர்களிடம்தாம் எதிர்பார்ப்பது என்ன என்பதைத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும். தேவை ஏற்படின் கற்றல் நோக்கங்களை மாணவர்களுக்குப் புரியும் வண்ணம் எளிமைப்படுத்தி அவற்றை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். (Provide a clear and understandanle vision of he learning target) அப்போதுதான் மாணவர்கள் பாடத்தின் சிறப்பு நோக்கங்களைப் புரிந்து கொண்டு செயலாற்றுவார்கள். ஓர் ஆசிரியர் எப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டாலும் அங்கு மாணவர்களின் ஈடுபாடு இல்லையெனில் அவரால் மனநிறைவு அளிக்கவல்ல கற்றல் நோக்கங்களையும் கற்பித்தல் நடைபெற்றதை உணர இயலாது. எனவே மாணவர் கற்றல் நோக்கங்களையும் எதிர்பார்க்கப்படும் அடைவுநிலைகளையும் அவற்றை அடைவதற்கான வழிகளையும் நன்கு புரிந்து கொண்டு செயல்பட ஆசிரியர் கற்றல் நோக்கங்களை மாணவர்களுக்குத் தெளிவாகப் புரியவைக்க வேண்டும் என்பது முதன்மையான உத்தியாகும்.

அடுத்து ஒரு மாணவர் எந்த நிலையில் இருக்கிறார் என்பதையும் அவர் எந்த நிலையை அடைய வேண்டும் என்பதையும் ஆசிரியர் மட்டும் புரிந்து வைத்திருந்தால் போதாது. அதை மாணவருக்கும் உணர்த்த வேண்டும் என்பது நிபந்தனையாகும். ஓர் எடுத்துக் காட்டுக்குக் குறிப்பிட்ட ஒரு நிலையில் படிக்கும் மாணவர் எழுதக்கூடிய கட்டுரை எப்போது தரமான படைப்பு என்று கருதப்படும் என்பதை விளக்குவதற்கு ஓரிரு சிறந்த கட்டுரைகளை ஆசிரியர் மாதிரிகளாகக் காட்டலாம். Use examples and models of strong and weak work) அவ்வாறு காட்டப்படும் கட்டுரைகள் சிறந்தவையாகக் கருதப்படுவதற்கான காரணங்களை படைப்புகளுடன் சுயமாக ஒப்பிட்டுப் பார்த்து உணர்வதற்கான மாணவர் தாம் எந்த நிலையில்நிற்கிறோம் என்பதை அறிந்துகொள்ளவும் அடுத்து தாம் மேற்கொள்ள வேண்டிய முயற்சிகளைப் பற்றிச் சிந்திக்கவும் செயல்படவும் உதவும் இதுபோன்ற நடவடிக்கைகள் சுய கற்றலுக்கு வழிவகுக்கும். மாணவர்கள் ஈடுபடும் கற்றல் நடவடிக்கைகள் தொடர்பாக ஆசிரியர் வழங்கும் பின்னூட்டங்கள் அவர்களின் கற்றல் அடைவுநிலையை மேம்படுத்தும் வல்லமை வாய்ந்தவை. மாணவர்களின் செயல்பாடுகளைத் தொடர்ச்சியாகக் கண்காணித்துவரும் ஆசிரியர் ஆக்கப்பூர்வமான பின்னூட்டங்களை வழங்கிவரும்போது அவை மாணவர்களுககு உற்சாகத்தையும் நம்பிக்கையும் ஊட்டத் தவறமாட்டா. Offer regular descripitive feedback during the learning)

கற்றலுக்கான மதிப்பீட்டில் மாணவர்கள் தாம் கற்றலைப் பற்றிச் சுயமாகச் சிந்திக்கத் தூண்டப்படுகின்றனர். அவ்வாறு சிந்திக்கும்போது அவர்கள் எவற்றைப் புரிந்துகொண்டனர். மேலும் எவற்றைப் புரிந்து கொள்ளவேண்டும்.

அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கை, என்ன என்பனவற்றைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டப்படுகின்றன (teach student to self-assess and set goals for next step) இது சுயகற்றலுக்கு வழிகோலுவதோடு வெற்றியை நிர்ணயிக்கும் கூறுகளை ஆராய்ந்து உணரவும் தூண்டுகிறது.

ஒரு மாணவருக்கு ஆசிரியர் வழங்கிய ஆக்கப்பூர்வமான பின்னூட்டங்கள் மாணவரின் கற்றல் அடைவுநிலையை உணர்த்தவல்லவை. எனவே அத்தகு கருத்துகள் மாணவர்களின் ஆசிரியர்களை சிந்தித்துச் செயலபடத் தூண்டுவதால் (Use evidence of student learning needs to determine next step in learning)அவை ஆசிரியருடைய அடுத்த கட்ட பாடத்தயாரிப்புக்குப் பேருதவியாக அமைகின்றன. அதே வேளையில் ஆசிரியருடைய கற்பித்தல் நடவடிக்கைகள் மாணவரின் கற்றல் தேவைகளைக் கருத்தில் கொண்டு குவிநோக்குப் பாடங்களாக அமைக்கப்படுவதை உறுதி செய்து கொள்ளவும் அவை உதவுகின்றன. (Design focussed instruction followed by Practice and feedback) மாணவர்கள் தத்தம் தேர்ச்சி நிலையைத் தாமே கண்காணிக்கவும் அதுபற்றிச் சிந்திக்கவும் திட்டமிடவும் பகிர்ந்துகொள்ளவும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் வாய்ப்பு வழங்குதல் மிகவும் முக்கியமாகும் (Provide opportunities for students to track. reflect of and share their learning progress)

மாணவரின் சுயமதிப்பீடும் ஆசிரியரின் ஆக்கப்பூர்வமான பின்னூட்டங்களும் ஒவ்வொரு மாணவரையும் தம் நிலை பற்றிச் சிந்திக்கவும் அவரிடமுள்ள நிறைகுறைகளையும் பலம் பலவீனங்களையும் அவர் அடுத்து எடுக்க வேண்டிய முயற்சிகளையும் அவருக்கும் ஆசிரியருக்கும் உணர்த்த உதவுகின்றன. இதனால் மாணவருடைய தன்னார்வமும் புதியனவற்றையும் அறிந்துகொள்வதற்கான விருப்பமும் ஈடுபாடும் புதிய கோணங்களில் சிந்திக்கும் ஆற்றலும் சுய மதிப்பீட்டுத் திறனும் மேம்பட வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

எனவே, மாணவர்களின் கற்றல்பயணத்திலும் ஆசிரியரின் கற்றல் கற்பித்தல் பயணத்திலும் கற்றலுக்கான மதிப்பீடும் அது சார்ந்த அணுகுமுறைகளும் இன்றியமையாத கூறுகள் என்பதால்அவற்றை முறையே கையாண்டு கற்றலையும் கற்பித்தலையும் அனைவருக்கும் இனிய அனுபவமாக்குவோம்; ஆக்கிக் கொள்வோம்.

37.பண்பாட்டுக் கூறுகள் வழி தமிழ்மொழி கற்பித்தல்

கமலாதேவி மோகன்ராம்

சாந்தி முருகவேல்

முன்னுரை

சிங்கப்பூர் ஒரு குடியரசு நாடு. சீனம், மலாய், தமிழ், ஆங்கிலம் ஆகிய நான்கும் சிங்கப்பூரின் தேசிய அதிகாரத்துவ மொழிகளாகும். இருப்பினும், ஆங்கிலமே அலுவலக மொழியாகவும், கல்வி நிலையங்களில் பயிற்றுமொழியாகவும், பல்வேறு இனத்தவரின் தொடர்பு மொழியாகவும் பயன்படுத்தப்படுகிறது.

தென்கிழக்காசிய நாடுகளில் சிங்கப்பூரில் தான் தமிழ் ஓர் அதிகாரத்துவ மொழியாக அமைந்துள்ளது. இது அரசியல் அமைப்புச் சட்டத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். அரசாங்க அலுவலகங்களில் பெயர்கள், அறிவிப்புகள், விளம்பரங்கள் தமிழ் உட்பட நான்கு மொழிகளிலும் இடம்பெற்றுள்ளன.

சிங்கப்பூரில் தமிழ்மொழியைத் தாய்மொழியென இரண்டாம் மொழியாக இன்று மாணவர்கள் கல்வி நிலையங்களில் பயில்கிறார்கள். கலப்புத் திருமணங்கள் சிங்கப்பூரில் அதிகரித்து வருவதால், பல மாணவர்களுக்குத் தமிழில் பேச சிரமம் ஏற்பட்டுள்ளது. பலர் ஆங்கிலம் கலந்த தமிழ், தமிழ் கலந்த ஆங்கிலம், இலக்கணம் மற்றும் வாக்கிய அமைப்புப் பிழையோடு பேசுவது போன்ற பிரச்சனைகளுக்கு ஆளாகின்றனர். இருப்பினும், பள்ளிகளில் ஆசிரியர்கள் தங்களால் முயன்ற அளவில் எளிய முறையில் எழுத்து மற்றும் பயன்பாட்டுத் தமிழைக் கற்றுக் கொடுக்கிறார்கள்.

இன்றைய தமிழாசிரியர்களுக்கு இந்தப் பிரச்சனைகள் சவாலாக வளர்ந்து வருகின்றன. இருப்பினும், தமிழாசிரியர்கள் பல உத்திகளைக் கையாண்டு மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்களைச் சிறந்த முறையில் கற்பிக்கிறார்கள்.

''பண்பாடு என்றால், ஓர் இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள், இலட்சியங்கள், வாழ்க்கை முறைகள், பழக்கவழக்கங்கள் சமூகச் சட்டங்கள், சமயங்கள், வழிபாட்டு முறைகள், களவொழுக்கம், கற்பொழுக்கம், அகத்திணை, புறத்திணை மரபுகள், இலக்கிய மரபுகள், அரசியலமைப்புகள், ஆடை அணிகலன்கள், திருவிழாக்கள், உணவு, பொழுதுபோக்கு விளையாட்டுக்கள் இவற்றையெல்லாம் குறிக்கும்,'' என்று தனி நாயகம் அடிகளார் பண்பாடு என்பதற்கான விளக்கத்தைத் தருகின்றார், இது அனைத்து இனங்களுக்கும் உரிய பொதுப் பண்பாட்டு நெறியாகும்.

திருவள்ளுவர்,

'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவன்றேல்

மண்புக்கு மாய்வது மண்',

என்றார் அதாவது பண்புடையவர் உள்ளதால் தான் இவ்வுலகம் உள்ளது. இல்லை என்றால் மண்ணுக்குள் மறைந்து அழிவது உறுதி என்கிறார்.

மக்களின் வாழ்வியல் நெறிக்கு அடிப்படையாக விளங்குவது பண்பாடு. மக்கள் வாழ்க்கை நெறி, நாட்டிற்கு நாடு சூழலுக்கேற்ப மாறுபடுவதால், பண்பாடும் அதற்கேற்ப அமையும். இவ்வாறு உலகம் செம்மையாக இயங்குவதற்கு பண்பாடுதான் அவசியம்.

உலக மனப்பான்மை, கண்ணோட்டம், பக்தி, ஒழுக்கம், மக்கள் நலக் கொள்கை, பிறர் அன்பு, இயற்கை, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, அரசியலாட்சி, கவின்கலைகள் ஆகியவை தமிழர்களின் தனித்த பண்பாடுகளாகக் கருதப்படுகின்றன.

கல் தோன்றா மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி என்பது வழக்கு. அவ்வாறு தோன்றிய தமிழ்க்குடிக்கு மொழி எந்த வகையில் பழமையானதோ அதே வகையில் பண்பாடும் பழமையானதாகும். இத்தகைய பண்பாடு ஒரு மனித சமுதாயத்தின் அடிப்படையானதாக அமைந்துள்ளது, இது, இலக்கியத்தின் வழி உணர்த்தப்பட்டது. பண்பாட்டின் வழி கற்பிக்கும் புதிய முறை இன்று பெருகி வருகிறது

1.2) ஆய்வின் தலைப்பு

பண்பாட்டுக் கூறுகள் வழி தமிழ்மொழி கற்பித்தல்

1.3) ஆய்வின் நோக்கம்

இப்பாட ஆய்வு இரண்டு நோக்கங்களை மனத்திற்கொண்டு நடத்தப்பட்டது, முதலாவதாக, இப்பாடத்திற்கு ஒரு பாடக் கட்டமைப்பை உருவாக்கி அதனை அடிப்படையாகக் கொண்டு பாடங்களும் பயிற்று வளங்களும் தயாரிக்கப்பட்டது. அடுத்து, மாணவர்-ஆசிரியர் மற்றும் சக மாணவர் என முத்தரப்பினரும் இணைந்தே இப்பாடம் அமைக்கப்பெற்றது.

1.4) ஆய்வின் எல்லை

மொழிப்பாடமே பண்பாட்டுக்கூறுகளைக் கற்பிக்க மிகப் பொருத்தமானதாகும். மொழிப்பாடத்தில் பாடப்பொருள், மொழித்திறன், ஒருங்கிணைப்பு ஆகியவற்றோடு பண்பாட்டுக்கூறுகளையும் இணைத்துக் கற்பிக்கும்போது மொழித்திறன் மற்றும் பண்பாடு அறியும் வாய்ப்பு உண்டாகிறது.

சிங்கப்பூரைப் பொருத்தவரையில் கலாச்சாரங்களில் பன்னாட்டுக் கலப்பு இயல்பாகவே கலந்துள்ளதால், இதன் தாக்கம் மொழியிலும், உணவு வகையிலும் இரண்டறக் கலந்துள்ளதை நாம் உணர வேண்டும்.

பண்பாடு வழி செய்திகளைக் கற்பிக்கலாம். பெயர் வகைகள் கற்பிக்கும்பொழுது காலப்பெயர், சமய விழாக்கள், தமிழ்ப் பண்டிகைகள், திருவிழாக்கள் போன்றவற்றையும் கற்பிக்கலாம். இவற்றைத் தமிழ் மற்றும் ஆங்கில மாதங்களைக் கற்பிக்கும்போது கற்பிக்கலாம். மேலும், மேற்காண்பவை கொண்டாடப்படும் இடங்களை, இடப்பெயராகவும் கற்பிக்கலாம்.

இலக்கணப்பாடத்தை வெறும் இலக்கணப்பாடமாகக் கற்பிக்காமல் அதை மாணவர்களுடைய வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்த சமயச்செய்திகளையும், சமூகச் செய்திகளையும் கற்பிக்கும்போது அவை அவர்கள் சமூகம் சார்ந்த மனிதர்களாக வாழ வழி ஏற்படுத்தும். குடியியலிலும் அறநெறி கல்வி, தாய்மொழிகளுக்கான இருவார நிகழ்ச்சி, மொழி முகாம், மொழி நடவடிக்கை, விழாக்கால நிகழ்ச்சிகள், வெளிநாட்டுக் கல்விச் சுற்றுலா போன்ற நிகழ்ச்சிகளின் வழி பண்பாட்டுக் கூறுகளைக் கற்றுக் கொடுக்கலாம்.

உணவு வகைகள் பெரும்பாலும் மருத்துவ குணமுடையதாகத் தயாரிக்கப்பட்டவையாகும், 'உணவே மருந்து; மருந்தே உணவு' என்னும் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதாகும். உணவுக் கலாச்சாரம் உடலையும் மனத்தையும் காக்க உதவுகிறது.

1.5) ஆய்வின் கருதுகோள்

ஆய்வின் முதல் கட்டமாக எந்தவொரு பண்பாட்டினை அறிமுகப்படுத்தலாம் என யோசித்தோம் அதனை மாணவர்களுக்கு ஏன்? மற்றும் எவ்வாறு? கற்பிக்கலாம் என்று திட்டமிட்டோம். நாங்கள் தொடக்கநிலை ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு உணவு வகைகளில் வாழையிலையை எவ்வாறு நம் வாழ்க்கையில் முக்கியமாகப் பயன்படுகிறது என்பதை விளக்கினோம்.

மாணவர்களின் முன்னறிவை அறிய ஓர் எளியதோர் முன்னோட்டத் தேர்வை நடத்தினோம் மாணவர்களுக்கு எந்தவொரு விளக்கமும் அளிக்கப்படவில்லை. இந்த முன்னோட்டத் தேர்வுத் தாளின் மூலம் மாணவர்களின் புரிந்துணர்வை அறிந்து கொண்டோம்.



குறிப்பு: முன்னோட்டத் தேர்வில் கேட்கப்பட்ட கேள்விகள்

1. இந்த மரத்தைப் பார்த்து இருக்கிறாயா? (ஆம்/இல்லை)
2. இந்த மரத்தின் பெயர் என்ன?
3. இந்த மரத்தின் பயன்கள் யாவை? (பட்டியலிடுக)
4. இந்த மரத்தைப் பற்றி உனக்குத் தெரிந்ததைப் பட்டியலிடுக.

இந்தப் புள்ளி விவரங்களைக் கொண்டு பாடமும் அதற்கான பயிற்றுவளங்களும் தயாரிக்கப்பட்டன. மாணவர்கள் வாழைமரத்தைப் பார்த்திருக்கிறார்கள் என்பது சிறப்புக்குரிய விஷயமாகும்.

மூன்றாவது கட்டமாகப்பாடக் கட்டமைப்பை உருவாக்கும் பணியில் ஈடுபட்டோம். இப்பாடக் கட்டமைப்பில் மாணவர்கள் வாழைமரத்தைப் பற்றிப் பண்பாட்டு ரீதியாக அறியக்கூடிய விஷயங்களையும் அதனையொட்டி நாங்கள் கற்பிக்க விளைந்த சொற்களையும் கண்டறிந்தோம். இப்பாடத்தில் கற்றலுக்குத் தேவையான கேட்டல், பார்த்தல், எழுதுதல், வாசித்தல் ஆகிய உத்திகளைப் புகுத்திக் கற்பிப்பது எங்களது அணுகுமுறையாக அமைந்தது.

	பணி	நோக்கம்
1	கேட்டல்	ஆசிரியர் கற்பிக்கும் குறிப்புகளையும் அறிமுகப்படுத்தும் சொற்களையும் கேட்டு நினைவிற்கொள்ளுதல்
2.	பார்த்தல்	வாழைமரத்தை நேரில் பார்த்து, தொடுவுணர்ச்சி வழி அதன் பாகங்களை அறிதல்
3.	எழுதுதல்	முன்னோட்டம் மற்றும் பாடமுடிவில் அறிந்த விஷயங்களைக் கண்டறிய தேர்வுகள், நடத்தப்படுதல்
4.	வாசித்தல்	வாழைமரத்தின் மருத்துவம் மற்றும் பயன்கள் பற்றி வாசித்தல்

கற்றல் குறிக்கோள்கள் மற்றும் பாடத்திட்டங்கள்

கற்றல் குறிக்கோள்கள் திட்டமிடப்பட்ட பிறகு பாடத் திட்டங்கள் இவ்வாய்வின் நோக்கத்தோடு தயாரிக்கப்பட்டன.

கட்டமைப்பு

	சூழ்நிலை	பாடங்கள்	நோக்கம்
1.	பள்ளித்தோட்டம்	வாழைமரத்தை நேரில் பார்த்து தொடுஉணர்ச்சி வழி அதன் பாகங்களை அறிந்து கொள்ளுதல்	பண்பாட்டின் வழி சொல் வளத்தை அறிமுகப்படுத்துதல்
2.	வகுப்பறையில் கற்றல் கற்பித்தல்	1.பார்த்ததை நினைவு கூர்தல் 2. படவில்லைகள்- மரத்தின், பாகங்கள் மற்றும் அவற்றின் பயன்கள் கற்பிக்கப்படுதல் 3.மருத்துவப் பயன்களை அறிதல் 4. பண்பாட்டு ரீதியாகப் பின் பற்றப்பட்டுவரும் பழக்க வழக்கங்கள் சமயம், விருந்தோம்பல் மற்றும் உணவு தயாரிப்பில் பயன் படுதலை அறிதல் 5. தலை வாழையிலை அல்லது இலையில் உணவு பரிமாறப் படவேண்டிய முறை மற்றும் இலையை மூடும் முறைகளை யும் விளக்குதல் 6. தமிழர் வாழ்த்து	1.சொற்பட்டியல்-சொல் அட்டை உருவாக்குதல் அறிமுகச் சொற்கள்: வாழை இலை, வாழைத்தண்டு வாழைப் பூ, வாழைக்காய், வாழைப்பழம் 2.சிறுசிறு தகவல்கள் வழி சொல்வளம் அதிகரித்தல் 3.மாணவர்களின் வயதுக்கு உட்பட்ட பயன்களை அறிதல் 4.பண்பாட்டின் வழி உபயோகப் படுதல் மற்றும் சொல்வளம் அறிதல் 5.இடது புறத்தில் உப்பிலிருந்து தொடங்கி வலதுபுறத்தில் காய்கறிகளோடு முடித்தல் 6. பண்பாட்டின் வழி வாழ்த்துதல்

சூழ்நிலை 2

வகுப்பறையில் கற்றல் கற்பித்தல்

பயிற்றுவளங்கள்-படவில்லைகள், தோட்டம், சொல் அட்டைகள், பயிற்சித் தாள்கள், பகடைக்காய் (தாளில் உருவாக்கப்பட்ட நாழிகை வடிவக்காய்), ஒட்டுத்தாள் (Post/itPads)

இப்பாடம் பள்ளியில் தமிழ்மொழிகளுக்கான இருவார நிகழ்ச்சியின்போது ஓர் அங்கமாக இரண்டு நாட்களுக்கு நடத்தப்பட்டது.

மாணவர்கள் தோட்டத்தில் கண்டு உணர்ந்ததை வகுப்பில் மீண்டும் வலியுறுத்த வாழையிலை, வாழைத்தண்டு மற்றும் வாழைப்பூ காட்டப்பட்டது. அவற்றின் பெயர்களைக் கூறினர். கூறப்பட்ட சொற்களின் சொல் அட்டைகள் வெண்பலகையில் ஒட்டப்பட்டன. மற்றச் சொற்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. அவை சொல் அட்டைகளாகவும் வெண்பலகையில் ஒட்டப்பட்டன. பாடத்தின் இடையிடையே, ஆசிரியர் மாணவர்களின் புரிந்துணர்வை அறிய கேள்வி பதில் அரங்கத்தை நடத்தினார்.

கேட்டல்-ஆசிரியர் ஒவ்வொரு பாகங்களின் பயன்களையும் படவில்லைகளைக்கொண்டு சுருக்கமாக விளக்கினார்

பேசுதல்-இணைவேலை=(Think-Pair Share -MTV Routine) மாணவர்கள் யோசி-இணை-பகிர் என்ற எம்டிவி நடைமுறை உத்தியைப் பயன்படுத்தி ஓர் எளிய பயிற்சித்தாளிலிருந்து ஆசிரியர் நடத்திய பாடத்தை நினைவுகூர்ந்து எழுதினர்.

வாசித்தல்-வாழைமரத்தின் மருத்துவ குணங்களைப் படவில்லைகள் வழி வாசித்து அறிந்து கொண்டனர். ஆசிரியரும் விளக்கமளித்தார். வாழையிலையை எப்படி ஒருவர் முன் கிடத்தி வைப்பது உணவை எப்படிப் பரிமாற வேண்டும். எந்த உணவு வகையை முதலில் உண்ண வேண்டும். உணவு சாப்பிட்ட பிறகு இலையை எப்படி மடிக்க வேண்டும். வாழைமரத்தின் பயன்கள், அவற்றுக்கான காரணங்களும் சிறப்புகளும் என்னென்ன போன்ற செய்திகளைப் பள்ளியில் நடந்த தாய்மொழிகளுக்கான இருவார நிகழ்ச்சியின் போது ஓர் அங்கமாக நடத்தி கலந்துரையாடினோம்.

பேசுதல்-இதோடு சேர்ந்து, எங்கள் நடவடிக்கைகளான ஒலி, ஒளி காட்சிகள், நடிப்பு, கலந்துரையாடல், இணையத்தில் செய்திகளைத் தேடுதல், வாசிப்பு, கேள்விகளுக்கு விடையளித்தல், சொல்வளத்தைப் பெருக்கிக் கொள்ளுதல், சரியான உச்சரிப்பு போன்றவற்றில் மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.

கேட்டல்- ஆசிரியர் தமிழர் பண்பாட்டில் புதிய தம்பதியினரை வாழ்த்தும் முறையைப் பற்றி அறிமுகப்படுத்தினார். இவ்வாறு வாழ்த்துவதற்கான காரணத்தையும் விளக்கினர். குறிப்பாக, வாழையடி வாழையாக வாழ வாழ்த்துகிறேன்.

எழுதுதல்- பயிற்சித் தாளை மேற்கொண்டனர் மாணவர்கள் வகுப்பில் கற்ற சொற்களை உள்ளடக்கும் வகையில் ஓர் எளிய பயிற்சியை முடித்தனர் இப்பயிற்சியின் விடைகளை ஆசிரியர் ஒளியூடுருவிக் கருவி வழி



படத்தின் பெயர்களை எழுது – 17

காட்டினார். மாணவர்கள் தம் பதில்களைச் சரிபார்த்தனர்.

மாணவர்கள் தங்களது பிழைகளைக் கண்டறிந்து திருத்திக் கொண்டனர்.

வாழைமரத்தினுடைய பாகங்களின் பெயர்களை எழுதினார்கள். புள்ளி விவரங்களின் வழி இப்பாடம் வெற்றியளித்தது என்று உறுதியாகக் கூறலாம்.

பாட முடிவாக மாணவர்கள் 3-2-1 (3-2-1 Exit pass) வெளியேறுவதற்கான இசைவுச்சீட்டைப் பயன்படுத்தினார்கள். கற்றுக்கொண்ட 3 விஷயங்கள் சுவாரஸ்யமான 2 விஷயங்கள் தெரியாத 1 விஷயம்

இவற்றின் பதில்களை ஒட்டுனித் தாள்களில் (ஞடிளவ-வை ஞயனள) எழுதி வெண்பலகையில் ஒட்டினார்கள். அடுத்த நாள் பாடத்தில், ஆசிரியர் மாணவர்களின் கருத்துகளையும் கேள்விகளையும் ஒட்டிப் பேசினார்.

மேலும் , அடுத்த நாள் மாணவர்களுக்கு வாழையிலையில் உணவு பரிமாறப்பட்டது. (புகைப்படங்கள்)

தமிழ்மொழியின் வழி பண்பாட்டுக் கூறுகளில் கவனம் செலுத்த வேண்டிய அடிப்படைக் காரணம்

ஆரம்பத்தில், மாணவர்களுக்குப் பண்பாட்டுக் கூறுகளைப் புரிந்து கொள்ள கஷ்டமாக இருந்தது. நடவடிக்கைகளின் மூலம் அவர்கள் பல விஷயங்களைச் சுலபமாகப் புரிந்து கொண்டார்கள்.

தமிழ்மொழி ஈராயிரம் ஆண்டிற்கு முற்பட்ட மொழி என்பதால், அதில் பல அம்சங்களான பண்பாட்டு நெறிகளும் பழக்க வழக்கங்களும் மரபுத் தொடர்களும், இணைமொழிகளும், பழமொழித் தொடர்களும் நிரம்பிக் கிடக்கின்றன. அவற்றைப் புதுச் சிந்தனையுடன் இன்றைய மாணவர்களின் உள்ளம் ஏற்கத்தக்க வகையில் சூழல்களை ஏற்படுத்திப் பழமையின் சிறப்பும் புதிய வரவுகளின் பயன்பாட்டையும் தமிழாசிரியர்கள் நன்குணர வேண்டும். இதன் மூலம் மாணவர் சமூகம் பயன் பெறத்தக்க வகையில் அவற்றைப் பயிற்றுவித்தால், பண்பாட்டின் அடித்தளத்தில் எழுப்பப்பட்ட மொழிக்கல்வி தழைத்துப் பயன்தரும். எளிமையிலிருந்து கடினம் (நுயளல வடி னகைகளுரடவ) என்ற முறைப்படி ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்பித்தால், மாணவர்களுக்குப் பாடங்கள் சுமையாக இல்லாமல் சுவையாக அமையும். இனிய எளிய வழியில் தமிழைக் கற்பிப்போம்; எளிதில் அதனை மாணவர்கள் மனதில் பதியச் செய்வோம்.

1.6 ஆய்வு அணுகுமுறை

பாடத்தயாரிப்பு மேற்கண்ட பாடப்பகுதிக்கு நடத்தப்பட்ட முன்னோட்டத் தேர்வின் வழி

ஒரு பாடமும் ஒரு விருந்தோம்பலும் நடத்தப்பட்டது. இதன் வழி அவர்கள் முன்னறிவை அறிந்து, கீழ்க்காணும் அணுகுமுறைகளை மேற்கொண்டோம்.

1.பாடத்திற்கு ஏற்ற சொற்பட்டியலைத் தயாரித்து அறிமுகப்படுத்துவதாகும்
2.மாணவர்களின் பொது அறிவுக்கு உட்பட்ட எளிய வாக்கிய அமைப்புகளைப் பயன்படுத்துவதாகும்
3.கற்றலுக்கு ஊக்கம் வழங்குவதாகும் (மாணவர்களுக்கு ஏற்ற கற்றல் உத்திகளைப் பயன்படுத்துதல்)
4.வகுப்பறைக்கு அப்பால் கற்ற பண்பாட்டுக் கூறுகளின் வழியுள்ள சொற்களைப் பயன்படுத்தும் வாய்ப்புகளை வழங்குதல் (விருந்தோம்பல்)

கற்றலைச் செயல்முறைப்படுத்துதல்

நாங்கள் நடத்திய பாடங்களையும் பாட குறிப்புகளையும் காட்டும் கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்முறைகள் நடத்தி அவற்றைக் குறிப்பெடுத்தோம். பண்பாட்டு வழி கற்பிக்கப்படும் சொற்களைப் பயன்படுத்துவதற்கான சூழ்நிலைகளுக்கான உத்திமுறைகள் பாடக் கட்டமைப்புக்கு முக்கிய அஸ்திவாரமாகும். இங்கே நடைமுறைக்கு ஏற்ற சொல்வளம் மற்றும் பயிற்சி கொடுக்கப்பட்டன. இந்தக் கட்டமைப்பைக் கொண்டே பாடத் திட்டங்களும் பயிற்றுவளங்களும் உருவாக்கப்பட்டன. பயிற்றுவளங்களில் சொல் அட்டை, பகடைக்காய், நடிப்பு, இணையத்தளத் தேடல், விருந்தோம்பல், பாடல் தயாரித்தல் போன்ற கற்றல் நடவடிக்கைகள் வழங்கப்பட்டன.

வெற்றிக்கான காரணங்கள்

பாட அறிமுகம் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டக்கூடியதாக அமைந்தது. கற்றதை அனுபவிக்கும் வகையில், வாழையிலையில் உணவு பரிமாறிய அம்சம் மாணவர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. இப்பாட ஆய்வின் மூலம், நாங்கள் பண்பாட்டுக் கூறுகள் வழி தமிழைக் கற்பித்தலுக்கு ஏற்ற ஆக்கப்பூர்வமான அமைப்பை உருவாக்கினோம். தயாரிக்கப்பட்ட முன்னோட்டத் தேர்வும் பாட முடிவின் தேர்வும் பயனுள்ளதாக அமைந்தன.

சவால்கள்

ஒவ்வொரு பாகங்களின் விளக்கங்களைச் சலிப்புத் தட்டாத வகையில்மாணவர்களுக்கு விளக்குவது சற்றுச் சவால் மிக்கதாக அமைந்தது. இரண்டே பாடத்தில்பெரிய அளவு முன்னேற்றங்களை நாங்கள் காணவில்லை. இன்னும் கால அவகாசம் தேவைப்பட்டது. நிறைய தகவல்களும் அவற்றுக்கான சொற்களும் மாணவர்களிடத்தில் திணிக்கப்பட்டிருந்ததை உணர்ந்தோம். தோட்டத்தை அடைந்தபோது, வாழைமரத்தில் பூ, காய் மற்றும் பழம் இல்லை.

பரிந்துரைகள்

இப்பாடத்தில் வாழைமரத்தின் இரண்டு பாகங்களை மட்டும் விளக்கிவிட்டு, அடுத்த பாடத்தில் மற்றவற்றை விளக்கியிருக்கலாம், இப்பாடத்தை ஆண்டுதோறும் தொடக்கநிலை ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு நடத்தவேண்டும், இதன் தொடர்பாக, உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் உள்ள மூலிகைத் தோட்டத்திற்குக் கற்றல் பயணம் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன்வழி, கற்றல் சுமை குறைவதோடு, இது பள்ளியின் ஒரு கற்றல் தொகுப்பாகவும் உருவாகலாம்.



38. பயன்மிகு கற்றலுக்கு ஒன்நோட் (One Note) என்னும் மின்னலக்க ஏடு

திரு. எம்.ஞானசேகரன், மூத்த ஆசிரியர், உட்லண்ட்ஸ் உயர்நிலைப்பள்ளி, சிங்கப்பூர்

முனைவர் பொன் சசிகுமார், தேசியக்கல்விக்கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்

இன்றைய சூழலில் வகுப்பறைகளையும் மாணவர்களின் நிலையையும் பத்தாண்டுகளுக்கு முன் உள்ள நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் எத்தனை எத்தனை மாற்றங்கள்! மனிதனின் பணித்திறன் முறைகளை மட்டும் தகவல் தொழில்நுட்பம் மாற்றவில்லை. வகுப்பறைகள், வகுப்பறைச் சூழல், மாணவர்களின் நிலை, கற்றல் கற்பித்தல் வளங்கள் முதலிய அனைத்தையும் முழுவதுமாக மாற்றங்களுக்கு உட்படுத்திவிட்டது.

இக்காலத்தில் கற்றல் கற்பித்தல் என்பது வகுப்பறையோடு நின்றுவிடுவதில்லை, தகவல் தொழில்நுட்பம் கற்றல் கற்பித்தலில் காலம், இடம் ஆகிய வரையறைகளைத் தகர்த்துவிட்டது. மாணவர்களிடத்தில் சுயமுனைப்போடு சுயமாகக் கற்கும் ஆற்றலை வளர்க்க வேண்டும், பாட அறிவு, மொழித்திறன்கள் இவற்றோடு 21ஆம் நூற்றாண்டுத் திறன்களும் அவசியமாகும்.

இன்று எல்லா மாணவர்களும் ஒரே தரத்தில் ஒரே நிலையில் இருப்பதில்லை. அவர்களின் கற்கும் ஆற்றலும் பாடப்பொருள் அறிவும் வேறுபடுகின்றன. ஆசிரியர்கள் இவற்றையெல்லாம் உணர்ந்து தங்கள் மாணவர்களின் திறனறிந்து பாடப்பொருளைத் தேர்ந்தெடுப்பதும் கற்பித்தல் முறைகளை மாணவர்களின் நிலைக்கேற்ப அமைத்துக் கொள்வதும் அவசியமாகிறது. கொள்வோன் கொள்வகை அறிந்து அவனுளம்கொளக் கொடுக்க வேண்டும் என்று கூறுகிறார் பவணந்தி முனிவர்.

இத்தகு நிலையில் தாய்மொழிக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கை என்பது இதிலிருந்து ஒதுங்கிவிட முடியாது. மாணவர்களின் ஆர்வம், ஈடுபாடு இவற்றைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதற்கு உதவும் வகையில் இன்றைய சந்தையில் எத்தனையோ மென்பொருள்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்றுதான் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் தயாரிப்புகளுள் ஒன்றான ஒன்நோட் (OneNote) என்பதாகும். இம்மென்பொருள் கூட்டங்களில் குறிப்பெடுத்தல், அலுவலக நிர்வாகப் பணிகள் போன்ற பல பயன்களையும் நோக்கங்களையும் கொண்டிருந்தாலும் கற்றல் கற்பித்தலுக்கும் மிகவும் உறுதுணையாக உள்ளது என்பதே உண்மையாகும். இதன் மூலம் ஆசிரியர்கள் பாடங்களை மின்னேடுகளாக உருவாக்கிக் கொடுக்கமுடியும். பாடங்களை மற்ற ஆசிரியர்களோடு பகிர்ந்துகொள்ள முடியும். மற்ற ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் நிலைக்கேற்ப, சிறுசிறு மாற்றங்களையும் செய்து கொள்ள முடியும்.

இம்மென்பொருளின் வழிப் பாடப்பொருள், பாடப்பொருளை நன்றாக விளங்கிக்கொள்வதற்கேற்ற ஒலி, ஒளிக்காட்சிகள் ஆகியவற்றை இணைக்க முடியும். ஆசிரியர்கள் கூறும் விளக்கங்களையோ படக்காட்சிகளையோ சேர்க்க முடியும். இவற்றோடு இணையப்பக்கத்தில் உள்ள ஒரு விளக்கம் மிகவும் பொருத்தமாக உள்ளது என்று நினைத்தால் அதனை இணைப்பாகக் கொடுக்கலாம் அல்லது ஒரு சிறு பகுதி மட்டும் போதும் என்றால் கணினித் திரையினையே நகலாக எடுத்தும் இணைக்க முடியும். இவற்றோடு கையாலேயே எழுதும் விளக்கங்களையும் சேர்க்கலாம். இப்படி எத்தனையோ வசதிகளும் வாய்ப்புகளும் உள்ள இம் மென்பொருளின் வழி ஒரு பாடத்தினை



மின்னலக்க ஏடாகத் தயாரித்து அதனை மாணவர்களோடும் மற்ற ஆசிரியர்களோடும் பகிர்ந்துகொள்ளும் முறைகளை விளக்குவதே இக்கட்டுரை. இனி, இம்மென்பொருள் குறித்த தகவல்களையும் பயன்பாட்டையும் காண்போம்.

இன்று இந்த மென்பொருளைக் கணினிகளில் மட்டுமின்றி திறன்பேசிகளிலும் தரவிறக்கம் செய்து நாம் தயாரித்த பாடப்பொருளைக் காண்பதற்கு பயன்படுத்துவதற்கும் முடியும். அதாவது, Window Phone, Mac, iPad, iPhone, Android ஆகிய தொழில்நுட்பச் சாதனங்களின் வழியாகவும் இந்தச் சேவையைப் பயன்படுத்திப் பயன்பெறலாம். OneNote -இல் பெறக்கூடிய சில சிறப்பு வசதிகளை இப்போது காணலாம்.

தொலைபேசி எண்கள், மின்னஞ்சல் முகவரி, இணைய முகவரி, பள்ளிப் பாடங்கள் பற்றிய குறிப்புகள், பொருள்களின் விலைக் குறிப்புகள் போன்றவற்றை ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்துக் கொள்வது போன்ற இம்மென்பொருளை வகுப்பறையிலும் கற்றல் கற்பித்தலுக்குப் பயன்படுத்தலாம். மேற்கண்ட படத்தில் காண்பதுபோன்று அறிஞர்கள் என்ற ஒரு தலைப்பில் பல அறிஞர்களையும் ஒரே கோப்பில் அதிலும் பல உட்பிரிவுகளோடு மாணவர்கள் எளிதில் கற்றுக்கொள்ளும் வண்ணம் பல்வேறு வளங்களையும் தொகுத்துக் கொடுத்துச் சுயமாகக் கற்றுக் கொள்வதற்கு வழிவகை செய்யலாம்.

இம்மென்பொருளில் ஒலிப்பகுதி மற்றும் ஒளிக்காட்சிவழிக் கருத்துகளைப் பதிவு செய்யும் வசதியும் உள்ளது. பதிவு செய்யும் கருவிகளின் (microPhone and webcam) துணையுடன் கருத்துகளைப் பதிவு செய்யலாம்.

நம்மில் பலர் ஒவ்வொரு தினத்திற்கும் நாம் திட்டமிடும் செயல்களைக் குறிப்புப் புத்தகத்தில் (Planner) குறித்துக் கொள்வது போன்று பல பிரிவுகளை (Tabs) வகுத்துக் கொண்டு ஒவ்வொரு பிரிவுக்கும் உரிய தலைப்பு, தேதியைத் தட்டச்சுச் செய்து முறையாகச் செய்திகளைத் தொகுக்கலாம். மேலும் இம்மென்பொருளில் `Tag' என்று அழைக்கப்படும் ஒட்டுக் குறிப்பு வசதியும் உள்ளது. தேவையான செய்திகளுக்கு ஒட்டுக் குறிப்பு இடுவதன் வழி அவற்றின் முக்கியத்துவத்தைக் கண்டறிந்து நினைவில் வைத்துக் கொள்ள முடிகிறது. நம் தேவைக்கு ஏற்றவாறு ஒட்டுக் குறிப்புகளை உருவாக்குவதற்கும் வசதி உள்ளது. பக்கங்கள் / பிரிவுகள் வாரியாகவும் ஒட்டுக் குறிப்புகளைத் தேடும் வசதி இதில் இடம்பெற்றுள்ளது.

இம்மென்பொருளில் பல்வேறு கோப்பு வடிவங்களை இணைக்கும் வசதிகளும் உள்ளன. ஆவணங்கள் (documents), காணொளிகள் (Videos), பட வில்லைகள் (Presentations), PDF கோப்புகள், புகைப்படத் தொகுப்பு என்று பலவகையான கோப்புகளைப் பல்வேறு வடிவங்களில் இணைக்கும் வசதி இருப்பதால் அனைத்தையும் ஒரே குடையின் கீழ் ஒரே இடத்தில் இருந்து பெற்றுக் கொள்ள முடிவதால் இதனை ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்லலாம்.

நிறைவு செய்ய வேண்டிய பணிகளையோ, காரியங்களையோ பட்டியலாகத் (To-Do Checklist) தயாரித்து நிறை செய்தவற்றைப் புட்குறி இடும் வசதியும் இதில் உள்ளது. வேலைகளைத் திட்டமிட்டப்படிச் செயல்படுத்துவதற்கு இந்த வசதி உதவியாக இருக்கும்.



மைக்ரோசாப்ட் வேர்டு (Word),பவர்பாயிண்டு (Power point) போன்ற மென்பொருள்களிலுள்ள இணைப்பு (Hyperlink) வசதி OneNote-இலும் இடம் பெற்றுள்ளது. நமக்குத் தேவையான இணையதளங்களின் முகவரிகளை இணைப்பதோடு பொருத்தமான இணைப்புகளையும் இதில் உருவாக்கலாம்; பயன்படுத்தலாம்.

கணினிகளில் மட்டுமல்லாது திறன் பேசிகளிலும் இணையத்திலும் இயங்கக்கூடிய சிறப்பும் கொண்டது இம்மென்பொருள். இம்மென்பொருள் இல்லாத கருவிகளில் நாம் இம் மென்பொருளைத் தரவிறக்கம் செய்ய வேண்டும் என்பது அவசியமில்லை. http://www.onenote.com_____என்ற இணையப் பக்கத்தின் வழி நாம் எளிதாகக்

குறிப்புகளை OneNote-இல் பதிவு செய்து பார்வை இட முடியும். நமது திறன் பேசியிலும் இலவசமாக இச் செயலியைத் தரவிறக்கம் செய்து பயன்படுத்தலாம். OneDrive - இன் வழி OneNote குறிப்பேடுகளைச் சேமித்து மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம்.

மாணவர்கள் ஆக்கபூர்வமான மொழி நடவடிக்கைகளில் ஈடுபட்டு மொழியைத் திறம்படக் கற்கவும் சுயமுனைப்புடனும் உடனிணைத்தும் செயல்பட்டு மொழியை ஆர்வத்துடன் கற்பதற்கும் இம்மென்பொருள் பேருதவியாக உள்ளது. இம்மென்பொருளின் வழி இதில் உள்ள வசதிகளைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு ஒரு முழுமையான பாடத் தொகுப்பை (Lession package) வழங்குவதோடு மற்ற ஆசிரியர்களோடும் பகிர்ந்து கொள்வதற்கு இது உதவியாக உள்ளது. பல ஆசிரியர்கள் இணைந்து திட்டமிட்டுச் செயல்பட்டால் பல பாடவளங்களை உருவாக்கிப் பகிர்ந்துகொள்ளலாம். மாணவர்களுக்கும் கற்றல் சுமையாக இல்லாமல் சுகமாக இருக்கும். கற்றல் நடவடிக்கைகளை OneNote-இல் உருவாக்குவதற்கு முன் நன்கு திட்டமிட்டுக் கருப்பொருள், துணைக் கருப்பொருள், மாணவர்களிடையே வளர்க்க விரும்பும் மொழித் திறன்கள், பாட நோக்கங்கள் போன்ற சில அடிப்படைக் கூறுகளை முதலில் முடிவு செய்துகொண்டால் எளிமையாகப் பாட வளங்களைத் தயாரித்துவிடலாம். எடுத்துக் காட்டுக்குக் கீழே உள்ள ஒரு மாதியைக் காண்க.



தமிழறிஞர்கள் பலரையும் பற்றியும் அறிந்துகொள்ளும் வகையில் நாம் ஒரு புத்தகத்தை அல்லது பாடத்தை உருவாக்கலாம். அதில் ஒலி, ஒளி அனைத்தையும் சேர்க்கமுடியும். இணையப்பக்கத்திலுள்ள வளங்களையும் மேலும் கூடுதல் வாசிப்புக்காகவும் தகவலுக்காகவும் அல்லது மாணவர்கள் திட்டப்பணியை உருவாக்கும் வகையிலும் பல பக்கங்களில் உள்ள தகவல்களையும் அப்பக்கங்களுக்கான இணைப்புகளுடன் ஒரே இடத்தில் கொடுக்க முடியும். வாசிக்க இயலாத மாணவர்களுக்கு நாம் வாசித்துப் பதிவு செய்வது மிகவும் பேருதவியாக இருக்கும். மாணவர்கள் படித்து முடித்தவுடன் அவர்கள் எந்த அளவுக்குப் பாடப் பொருளைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள கூகுள் படிவத்தில் வினாக்களைத் தயாரித்து இப்பக்கத்தில் அதற்கான இணைப்பினைக் கொடுக்கலாம்.

21-ஆம் நூற்றாண்டுத் திறன்களில் ஒன்றான சுயமான கற்றலுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் பொருத்தமான இணையப்பக்கங்களையும் ஆவணங்களையும் இம்மென்பொருளிலுள்ள இணைப்புக் Hyperlink கொடுக்கும் வசதியின் வழி மாணவர்களுக்கு வழங்க முடிகிறது. கூடுதல் தகவல்களுக்குக் கோப்புகளை இணைக்கும் வசதியைப் (File attachment) பயன்படுத்தி ஆவணங்களை இணைக்கலாம். மேல்நிலை மாணவர்களுக்கும் சிறு அளவிலான ஒப்படைப்புகளைச் செய்வதற்கும் இம்மென்பொருள் இன்னும் சிறப்பாகவும் உறுதுணையாகவும் உள்ளது என்றால் அது மிகையில்லை.



மேலே உள்ள படத்தில் உள்ளது போன்று இலக்கியங்கள், இலக்கணங்கள், சுற்றுலாத் தலங்கள், உலக அதிசயங்கள் என பல்வேறு கருப்பொருள்களின் அடிப்படையில் பல்வேறு தலைப்புகளையும் உள்ளடக்கிய தகவல் களஞ்சியத்தினை உருவாக்கி மாணவர்களுக்கு அளிக்கும்பொழுது அது, மாணவர்களின் திறன்களையும் மொழியாற்றலையும் வளர்க்க ஏதுவாக இருக்கும். மாணவர்களுக்கான வளங்கள் இல்லை என்ற குறையும் நீங்கும். ஆசிரியர்களே இவற்றைத் தயாரிப்பதன் மூலம் அதில் பயன்படுத்தும் மொழியின் நிலையை அவர்களுடைய மாணவர்களின் நிலைக்கும் மொழித்திறனுக்கும் ஏற்ற வகையில் அமைத்துக் கொள்ள முடியும்.

நம் தாய்மொழியாம் தமிழ்மொழி வாழும் மொழியாகத் திகழ மாணவர்கள் மொழியைத் திறம்படப் பயன்படுத்த வேண்டும். இது மாணவர்கள் தமிழ் மொழியை ஆர்வத்துடன் கற்றாலொழிய சாத்தியமில்லை. அவர்கள் ஆர்வத்துடன் பயன்படுத்த வேண்டுமெனில் அது அவர்ளுக்கு ஏற்றதாக அவர்களின் நிலைக்கு உட்பட்டதாக இருத்தல் அவசியாகும். அவ்வகையில் இதுவும் ஒரு முயற்சியாக, ஒரு படிக்கல்லாக அமையும் என்பது திண்ணம்.

முற்றும்



தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி
உலகத்தமிழாசிரியர் பேரவை இணைந்து நடத்தும்

11ஆவது உலகத்தமிழாசிரியர் மாநாடு

நாள் : 10-12 ஜூன், 2016 இடம் : ஸ்ரீராயல் மெரிடியன் அரங்கம், சென்னை, தமிழ்நாடு.

பதிவு எண் : 118/61



தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி
உலகத்தமிழாசிரியர் பேரவை இணைந்து நடத்தும்

11ஆவது உலகத்தமிழாசிரியர் மாநாடு

நாள் : 10-12 ஜூன், 2016 இடம் : லீ ராயல் மெரிடியன் அரங்கம், சென்னை, தமிழ்நாடு.





தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி
உலகத்தமிழாசிரியர் பேரவை இணைந்து நடத்தும்

11ஆவது உலகத்தமிழாசிரியர் மாநாடு

நாள் : 10-12 ஜூன், 2016 இடம் : லீ ராயல் மெரிடியன் அரங்கம், சென்னை, தமிழ்நாடு.





தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி
உலகத்தமிழாசிரியர் பேரவை இணைந்து நடத்தும்

11ஆவது உலகத்தமிழாசிரியர் மாநாடு

நாள் : 10-12 ஜூன், 2016 இடம் : லீ ராயல் மெரிடியன் அரங்கம், சென்னை, தமிழ்நாடு.





தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி
உலகத்தமிழாசிரியர் பேரவை இணைந்து நடத்தும்

11ஆவது உலகத்தமிழாசிரியர் மாநாடு

நாள் : 10-12 ஜூன், 2016 இடம் : லீ ராயல் மெரிடியன் அரங்கம், சென்னை, தமிழ்நாடு.



கூட்டுறவே நாட்டுயர்வு

11வது உலகத் தமிழ் ஆசிரியர் மாநாடு - 2016

சிறக்க வாழ்த்துக்கள்!



ஆ.தவமணி
தலைவர்

M.M.293 குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் மற்றும் உதவி பெறும் பள்ளி ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன நாணய சங்கம், (இ) கீரனூர், புதுக்கோட்டை மாவட்டம்.



ப.கவிதா
து.தலைவர்

நிர்வாகக்குழு உறுப்பினர்கள்



தோ.தயவு



க.வனிதா



அ.வெள்ளையம்மாள்



ஆ.ஜோசப்



சா.சோபியாமேரி



சி.இருளப்பபிள்ளை



ச.சுப்பிரமணியன்



செ.பிரேமா



அ.தேவசகாயம்

11வது உலகத் தமிழ் ஆசிரியர் மாநாடு - 2016

சிறக்க வாழ்த்துக்கள்!



PA 80, மணமேல்குடி ஒன்றிய ஆசிரியர்கள்
மற்றும் பணியாளர்கள் கூட்டுறவு
சிக்கன நாணய கடன் சங்கம்

கா.ஜெய்சங்கர்- தலைவர், **சி.விஸ்வநாதன்**- து.தலைவர்

இயக்குநர்கள் : **சூ.துரைராஜ், க.அய்யனார், இரா.இராமநாதன், ச.உமா, ஆர்.நாகம்மாள்**

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

11வது உலகத் தமிழ் ஆசிரியர் மாநாடு - 2016

சிறக்க வாழ்த்துக்கள்!

Y.P.672 விராலிமலை ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன நாணய சங்கம் லிட்., விராலிமலை, புதுக்கோட்டை மாவட்டம்.



ச. இளையராஜா M.A.,B.Ed.,MPhil
தலைவர்



ந. சிவக்குமார் M.A.,B.Ed.,
துணைத் தலைவர்



ஆ. வின்சென்ட் ஆரோக்கியசாமி M.A.,B.Ed.,
இயக்குநர்



ச. அமலராணி M.A.,B.Ed.,
இயக்குநர்



ஜா.பிரேமா M.A.,B.Ed.,
இயக்குநர்



சி. முத்தமிழ்செல்வன் B.Lit., B.Ed.,
இயக்குநர்,



ரா. எத்திராஜ்
இயக்குநர்

மற்றும்
தமிழ்நாடு
தொடக்கப்பள்ளி
ஆசிரியர் கூட்டணி
விராலிமலை
வட்டாரக் கிளை

11- வது உலகத்தமிழ் ஆசிரியர் மாநாடு

வெற்றிப்பெற வாழ்த்தும்.

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

அரியலூர் மாவட்டம் & வட்டாரம் (கிளை)



இ.எழில்
மாவட்ட செயலாளர்

சு.பாலசுப்ரமணியன்
மாவட்ட தலைவர்

பா.மார்ட்டின் ஆரோக்கியராஜ்
மாவட்ட பொருளாளர்

செ.ரவிச்சந்திரன்
துணைத்தலைவர்

க.திருமுருகன்
துணைத்தலைவர்

வே.அமுதா
துணைத்தலைவர்

சு.அய்யாகண்ணு
துணைச்செயலாளர்

இரா.வேல்முருகன்
துணைச்செயலாளர்

க.சிவபாக்கியம்
துணைச்செயலாளர்

செ.கருப்பையன்
அகில இந்திய பொதுக்குழு உறுப்பினர்

ரெ.வரதராஜன்
மாநில செயற்குழு உறுப்பினர்

இரா.அருமைக்கண்ணு
மாநில பொதுக்குழு உறுப்பினர்

அரியலூர் வட்டாரம்

சே.சீனிவாசன்
தலைவர்

ஆ.சண்முகம்
செயலாளர்

செ.அருள்ஜோதி
பொருளாளர்

திருமானூர் வட்டாரம்

இரா.சச்சிதானந்தம்
தலைவர்

ஜோ.கிரிம்சன்
செயலாளர்

ஆ.பாஸ்கரன்
பொருளாளர்

ஆண்டிமடம் வட்டாரம்



ரெ.வரதராஜன்
தலைவர்

இரா.வேல்மணி
செயலாளர்

செ.ஜான்சன்
பொருளாளர்

ஜெயங்கொண்டம் வட்டாரம்

கலியமூர்த்தி
தலைவர்

இரா.பாண்டியன்
செயலாளர்

அ.பாபியன் செபஸ்டியன்
பொருளாளர்

செந்துறை வட்டாரம்

ப.கொளஞ்சிநாதன்
தலைவர்

சா.இராஜமாணிக்கம்
செயலாளர்

இரா.ராஜ்மோகன்
பொருளாளர்

தா.பழூர் வட்டாரம்

இரா.இராஜசேகரன்
தலைவர்

பெ.தர்மலிங்கம்
செயலாளர்

பா.பால்ராஜ்
பொருளாளர்







11-வது உலகத்தமிழ் ஆசிரியர் மாநாடு

வெற்றிப்பெரு வாழ்த்துகிறோம்

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திருவண்ணாமலை மாவட்டம்

மாவட்டத் தலைவர்	மாவட்டச் செயலாளர்	மாவட்டப் பொருளாளர்	மாநில செயற்குழு
பொன்.இரவி	அ.செல்வம்	இரா.அசோகன்	ம.தமிழ்மணி, கா.விஜயராஜ்

மாவட்டத் து. தலைவர்	மாவட்டத் து. செயலாளர்கள்	மாநில பொதுக் குழு	மாவட்ட மகளிர் செயற்குழு
பி.சிவாஜிகணேசன் பொன்.பாலாஜி எம்.மகாலட்சுமி	ஏ.இராமகிருஷ்ணன் மா.ரெகுபதி சு.எழிலரசி	எஸ்.சேகர், ஏ.செந்தில்ராஜா ஏ.அருளரசு, ஆர். இந்திராணி, என்.தாமரைச் செல்வி	ஜி.மாலதி வி.உமாமகேஸ்வரி, கே.அவ்வையார் ஜி.செல்வி எஸ்.கவிதா

வட்டார பொறுப்பாளர்கள்

திருவண்ணாமலை	:	ஏ.கண்ணன், எஸ்.செல்வகுமரன், எஸ்.செல்வகுமார் சார்லஸ்
திருவண்ணாமலை (ந)	:	S.T பிரேம்குமார், ஏ.அருள்தாஸ், எஸ்.ஜெ.கிருபாகரன்
தண்டராம்பட்டு	:	ஏ.அந்தோணி பி. மாணிக்கம் கே. செந்தில்வாசன்
கீழ்பென்னா	:	பா.வேலு எஸ்.சுகுமார் ஆர்.தமிழ்செல்வன்
துரிஞ்சாபுரம்	:	ஆர்.தேவன்பு, ஆர்.காசிராசன், எஸ்.திருநாவுக்கரசு
சலசை	:	ஜி.மாலதி, பி.சாமிநாதன், என்.விருதுகவி
பெரண	:	என்.சிவானந்தன், ஆர்.சுப்பு, பி.குருசாமி
போளூர்	:	கே.மாயாண்டி, எம்.குமார்வேல், ஜி.கோபிநாத்
ஆரணி	:	என்.சித்ரா, ஆர்.புவனேஷ்வரி ஆர்.எழுமலை
சேத்பட்	:	ஜி.பழனி, ஆர்.பரசுராமன், பி.சங்கர்
வெம்பாக்கம்	:	என்.மணிவண்ணன், ஜி.ஜெகனாதன், கே.சீனிவாசன்
அனக்காவூர்	:	பி.சங்கரன், B.குணசீலன், A.C.சுந்தரதாஸ்
தென்னன்	:	T.V. கண்ணபிரான், எஸ்.பிச்சாண்டி, வி. மாதவன்
செய்யார்	:	எம்.பரசுராமன், எம்.விஜயகுமார். கே.துரைக்கண்ணன்.

பதிவு எண்: 118/61

11–வது உலகத்தமிழ் ஆசிரியர் மாநாடு

வெற்றிப்பெற வாழ்த்துகிறோம்



தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

காஞ்சிபுரம் மாவட்ட கிளை

மாவட்டத் தலைவர்	மாவட்டச் செயலாளர்	மாவட்டப் பொருளாளர்	மாநில செயற்கு உறுப்பினர்
இரா.பார்த்தீபன்	கோ.கா.முருகன்	மா.ஜோசப்	மா.பெருமாள்

மாநில பொதுக் குழு உறுப்பினர்கள்	மாவட்டத் து. தலைவர்	மாவட்டத் து. செயலாளர்கள்
எ.கருணாநிதி, ஜெ.குமார்	சோ.இரவிக்குமார்	தி.திருமலைவாசன்
எம்.சரஸ்வதி	ஜி.குருசாமி	என்.பிரவீன்குமார்
கே.ஹரி	ஜி.விஜயலட்சுமி	கே.ஜெயந்திபாய்

வட்டார பொறுப்பாளர்கள்

ஊர்	தலைவர்	செயலாளர்	பொருளாளர்
சிட்லபாக்கம்	கே.இந்திராகாந்தி	கோ.கா.முருகன்	C.செபாஸ்டியான்
திருக்கழுக்குன்றம்	செ.ஜெயா	இரா.பார்த்தீபன்	கு.தணிகாசலம்
திருப்போரூர்	ஜி.குருசாமி	மா.ஜோசப்	எஸ்.ஸ்டான்லிபிரேம்குமார்
அச்சிறுப்பாக்கம்	கி.நாராயணன்	சு.மோகன்	பெ.கி.ஜெயசங்கர்
காட்டாங்குளத்தூர்	D.ஜான்சிராணி	C.சண்முகம்	P.தாமஸ்
சித்தாமூர்	P.கோபு	கலைக்கோவன்	ஆர்.முருகதாஸ்
இலத்தூர்	E.சுந்தர்ராஜன்	எஸ்.கார்த்திகேயன்	ஆர்.இராஜா
காஞ்சிபுரம்	T.தணிகையரசு	எஸ்.பாலமுருகன்	என்.ராஜன்
உத்திரமேரூர்	அ.ஆறுமுகம்	வ.தணிகைவேல்	இரா.ஏழுமலை
வாலாஜாபாத்	கே.சங்கரி	எஸ்.இரமேஷ்	எஸ்.தங்கமணி
திருப்பெரும்புதூர்	இரா.முருகன்	கே.சாலமன்	ஆ.பெலிக்ஸ்
மதுராந்தகம்	மு.சங்கர்	அ.அகஸ்தின்	இரா.மோகன்.

11-வது உலகத்தமிழாசிரியர் மாநாடு

சிறக்க வாழ்த்துகிறோம்

கற்க! கசடறு!! கற்பவை!!!

அபிராமி டுட்டோரியல் & டியூசன் சென்டர்

திருச்செந்தூர்

VIII S. S. L.C, HSC, உறுதியான வெற்றி கடந்த 23 வருடங்களாக கல்வியில் இடைநின்றோர், தவறியோர் வாழ்வில் ஒளியேற்றம் திருச்செந்தூர் அபிராமி டுட்டோரியல் & டியூசன் சென்டர்.



வாழ்த்துக்களுடன்

J.மைக்கின் சுதாகர், M.Com.,

முதல்வர்

அபிராமி டுட்டோரியல் & டியூசன் சென்டர்

திருச்செந்தூர்

செல்: 954353770. 9715319511



11–வது உலகத்தமிழாசிரியர் மாநாடு

சிறக்க வாழ்த்துகிறோம்

Q 1185. இராமநாதபுரம் மாவட்ட கல்விப்பணியாளர்கள் -ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன நாணயச் சங்கம்

தலைவர்

N.ஆறுமுக வேல்,

து.தலைவர்

கே. பெரியசாமி,

இயக்குனர்கள் :

ந. இசக்கி, கி. இராஜேஸ்வரி, இரா. செல்வராணி, இரா.செல்வி

ஆர். வெங்கட்ராமன், செ.அப்பாதுரை, நா.கந்தசாயி

11-வது உலகத்தமிழாசிரியர் மாநாடு சிறக்க வாழ்த்துகிறோம்

ZA 56 கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கம் லிட் கொராடாச்சேரி, திருவாரூர் மாவட்டம்

வாழ்த்தி மகிழும்

சா. அறிவழகன்
கூட்டுறவு ச. தலைவர்

சு.மாதவன்
கூட்டுறவு ச.செயலாளர்

ஜெ.ஜெயந்தி
கூட்டுறவு ச. து.தலைவர்

கூட்டுறவு சங்க இயக்குனர்கள்

என்.எஸ்.சுகந்தி
வை.ஜெய்சங்கர்
ப.விஜயா
ஜெ.நக்கீரன்
த.அகஸ்டின்
வை.மலர்விழி
செ.சேவியர்
பா.மாலதி
கி.யசோதா

ஆர்.ஈவேரா
வட்டாரச் செயலாளர்

காசி.வீரசேகரன்
மு.மாநில செயற்குழு

எம்.பரமேஸ்வரி
நற்பணி தலைவர்

கு.சந்திரமோகன்
நற்பணி செயலாளர்

11-வது உலகத்தமிழாசிரியர் மாநாடு சிறக்க வாழ்த்துகிறோம்

ZC 25 ஊராட்சி ஒன்றிய ஆசிரியர் மற்றும் பணியாளர் கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கம் முத்துப்பேட்டை -614 704, திருவாரூர் மாவட்டம்

தலைவர்
திரு.**இரா.ஆறுமுகம்** M.A., D.T.Ed.,
தலைமையாசிரியர்

துணைத்தலைவர்
திருமதி.**ப.சசிகலா,** M.A.,B.Lit.,
இடைநிலை ஆசிரியர்

செயலர் (பொறுப்பு)
திருமதி. **சு.புஷ்பவள்ளி,** D.co-op.,

நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

திரு.**மா.முருகேசன்,** B.Sc., B.Ed.,
பட்டதாரி ஆசிரியர்

திரு.**சோ.வீரபாண்டியன்,** M.A., B.Sc.,B.Ed.,
பட்டதாரி ஆசிரியர்

திருமதி.**ச.சசிகலாராணி,** M.Sc., B.Ed.,
பட்டதாரி ஆசிரியர்

திரு.**ஜெ.கருனானந்தம்,** B.lit., B.Ed.,
தலைமையாசிரியர்

திரு.**மு.கோவிந்தசாமி,** M.A., B.Sc., B.Ed.,
தலைமையாசிரியர்

திரு.**க.கருணாநிதி,** M.A., B.Ed.,
தலைமையாசிரியர்

திருமதி. **கோ.அமிர்தம்,** M.A., B.Ed.,
இடைநிலை ஆசிரியர்

திரு.**ஜெ.சிங்காரவடிவேலு,** M.A., B.Ed.,
இடைநிலை ஆசிரியர்







11-வது உலகத்தமிழாசிரியர் மாநாடு

சிறக்க வாழ்த்துகிறோம்

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

சேலம் மாவட்டம் (கிளை)

பி.பெஞ்சமின் ராஜ்
மாவட்டத் தலைவர்

சு.வெங்கடாசலம்
மாவட்டச் செயலாளர்

ப.தமிழரசன்
மாவட்டப் பொருளாளர்

அ.அர்ச்சுனன்
மாநிலத் துணைத் தலைவர்

அ.பாஸ்கரன்
மாநிலச் செயற்குழு உறுப்பினர்

எம்.பரமேஸ்வரி
நற்பணி தலைவர்

கு.சந்திரமோகன்
நற்பணி செயலாளர்

11-வது உலகத்தமிழ் ஆசிரியர் மாநாடு மலர் சிறப்புற வாழ்த்துக்களுடன்.....







தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

தருமபுரி வட்டாரக்கிளை

தருமபுரி மாவட்டம்

வெ. பழனிசாமி
தலைவர்

கோ. காமராஜ்
செயலாளர்

எல்.சீனிவாசன்
பொருளாளர்

D.B. 112 தருமபுரி ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் தருமபுரி

ப. கனகராஜ்
தலைவர்

சா. ஏகாம்பரம்
துணைத்தலைவர்

பி.கலைராணி
இயக்குநர்

ஆர்.ராமசந்திரன்
இயக்குநர்

கே.ரகுநாத்
இயக்குநர்

11-வது உலகத்தமிழாசிரியர் மாநாடு சிறக்க வாழ்த்துகிறோம்

WITH BEST COMPLIMENTS OF

HAVUKAL

Havukal Tea & Produce Co. Pvt. Ltd.

Kotagiri -643 217
The Nilgiris
Phone: 04266-271256,271356
Fax: 04266 272156
E mail: info@havukaltea.com
ISO 9001: 2008, ISO 22000: 2005
&
Rainforest Alliance certified
Manufacturers of
BEST HIGH GROWN NILGIRI TEAS

11-வது உலகத்தமிழாசிரியர் மாநாடு




வெற்றி பெற மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

தூத்துக்குடி மாவட்டக்கிளை



தரணியெங்கும் தமிழ், தமிழகம், தமிழக ஆசிரியர்களின் புகழ் பரணிபாடும் உலகத் தமிழாசிரியர் மாநாடு சிறக்க வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!!



பே.இராமசுப்பிரமணியன்
மாநிலத் துணைத்தலைவர்
தெற்குமண்டலம்



செ.அருள்ராஜ்
மாநிலச்செயற்குழு உறுப்பினர்
தூத்துக்குடி மாவட்டம்



பொ.ஜீவா
மாவட்டத் தலைவர்
தூத்துக்குடி மாவட்டம்



மா.சிவன்
மாவட்டச் செயலாளர்
தூத்துக்குடி மாவட்டம்



ஜே.சாந்தகுருஸ்
மாவட்டப் பொருளாளர்
தூத்துக்குடி மாவட்டம்

11-வது உலகத்தமிழாசிரியர் மாநாடு

சிறக்க வாழ்த்துகிறோம்

SHIVANI
GROUP OF INSTITUTIONS
Sowing Seeds of Knowledge

TUV NORD
TUV India Private Ltd.
ISO 9001

SHIVANI ENGINEERING COLLEGE

(Approved by AICTE, New Delhi and
Affiliated to Anna University, Chennai)
An ISO 9001: 2008 Certified Institution

Trichy-Dindigul NH Road, Poolangulathupatti,
Tiruchirappalli 620 009
Ph: 0431 - 2914306, 2914307, Cell: 97509 65201
E-mail:sec@shivani.ac.in Web:www.shivani.ac.in

S.B.G
COLLEGE OF EDUCATION

S.B.G கல்வியியல் கல்லூரி

நங்கவரம் ரோடு, பெருகமணி, திருச்சி - 639 115.
போன் : 0431-2614536, செல் : 94433 03771

5-ஆம் ஆண்டு
பட்டமளிப்பு விழா



நாள் : 8.08.2015, சனிக்கிழமை நேரம் : மாலை 4.00 மணி
இடம் : கல்லூரி கலையரங்கம்

11-வது உலகத்தமிழாசிரியர் மாநாடு

சிறக்க வாழ்த்துகின்றோம்

RA 349 திருச்சுழி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி
அரசு ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கனநாணயச் சங்கம்

தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

ம.ரெட்டியபட்டி 626118
அருப்புக்கோட்டை தாலுகா
விருதுநகர் மாவட்டம்







11-வது உலகத்தமிழாசிரியர் மாநாடு

வெற்றி பெற மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

திண்டுக்கள் மாவட்டம்

சி.துரைராஜ்
மாவட்டத்தலைவர்

செ.காளிமுத்து
மாவட்டச்செயலாளர்

ம.ஆர்பர்ட் டென்னிஸ்
மாவட்டப்பொருளாளர்

மற்றும் மாவட்ட வட்டார, நகரக்கிளைப் பொறுப்பாளர்கள், அனைத்து மாவட்ட உறுப்பினர்கள்







11-வது உலகத் தமிழாசிரியர் மாநாடு
சிறக்க வாழ்த்துகிறோம்



க.அருள் MA.,B.Ed.,
மாவட்டத் தலைவர்



க.கணேசன் MA.,B.Ed.,
மாவட்டச் செயலாளர்



ந.நாகராஜன் B.Sc.,M.Ed.,
மாவட்டப்பொருளாளர்

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி
தஞ்சாவூர் மாவட்டம்

வாழ்க தமிழ்!

வளர்க தமிழ்!







11– வது உலகத்தமிழ் ஆசிரியர் மாநாடு

வெற்றிப்பெற வாழ்த்தும்

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

பெரம்பலூர் மாவட்டம் & வட்டாரம் (கிளை)

து. சந்திரசேகரன்
மாவட்டத் தலைவர்

இ. இராஜேந்திரன்
மாவட்டச்செயலாளர்

செ. புகழேந்தி
மாவட்டப்பொருளாளர்

இரா. அண்ணாவு
துணைத்தலைவர்

இரா. செல்வக்குமார்
துணைத்தலைவர்

த. கலைச்செல்வி
துணைத்தலைவர்

கு. இரவிச்சந்திரன்
துணைச்செயலாளர்

ஆ. சுப்ரமணியன்
துணைச்செயலாளர்

பெ. தங்கத்தாய்
துணைச்செயலாளர்

சி. இளவழகன்
மாநிலச்செயற்குழு

பெரம்பலூர் வட்டாரம்

கி. பெருமாள்
தலைவர்

து. சந்திரசேகரன்
செயலாளர்

பெ.க. இரமேஷ்
பொருளாளர்

பெரம்பலூர் – தனியார் கிளை

ஜெ.ரோவர்
தலைவர்

பெ. செல்வம்
செயலாளர்

செ. புஷ்பாமேரி
பொருளாளர்

வேப்பந்தட்டை வட்டாரம்

பி. ஜோசப்
தலைவர்

செ. புகழேந்தி
செயலாளர்

சீ. கருணைவேந்தன்
பொருளாளர்

ஆலத்தூர் – வட்டாரம்

அ. பாலசந்திரன்
தலைவர்

அ. திருநாவுக்கரசு
செயலாளர்

ஜெ. துரைராஜ்
பொருளாளர்

வேப்பூர் – வட்டாரம்

க. முருகன்
தலைவர்

ந. மணிவண்ணன்
செயலாளர்

ச. நெப்போலியன்
பொருளாளர்

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

ஈரோடு மாவட்டம் (கிளை)

2016 ஜூன் 10,11,12 ல் நடைபெறும்
11 வது உலகத் தமிழாசிரியர் மாநாடு
வெற்றி பெற வாழ்த்துக்கள்

அ. மதியழகன்
மாவட்டத் தலைவர்

வி.எஸ்.முத்துராமசாமி
மாவட்டச் செயலாளர் &
மாநில துணைச் செயலாளர்

ஆர். தங்கராஜ்
மாவட்டப் பொருளாளர்

எஸ். விஜயகுமார்
ரா. புகழேந்தி
என். கதிர்வேல்

ப.ஜான்ஷா
எஸ். உமாபதி
ர.தண்டபாணி

செ. ரமேஷ்குமார்
என்.பி. சிவகாமி
K.S. சுரேஷ்குமார்

இ. அமலநாத்
க.கு. மலையப்பசாமி
R. மாதேஷா
சு.வெள்ளியங்கிரி

10.06.2016, 11.06.2016 & 12.06.2016
உலகத் தமிழாசிரியர்கள் மாநாடு
சென்னை.



சங்கத் தமிழின் பெருமை ...
வங்கக்கடல் தாண்ட ...
எங்கள் தமிழின் அருமை..
உலகில் மணம் கமழ...
கன்னித்தமிழ் உலகில் களங்கான ....

இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை...
உலகத்தமிழாசிரியர்கள் மாநாடுகள் நடத்தும் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பணி தொடர...
மாநாடு சிறக்க... வாழ்த்துகிறோம்.

இப்படிக்கு,
திரு சி.ஆனந்தவேலு தலைவர்
திரு சு.அன்பரசு துணைத் தலைவர்

... இயக்குநர்கள்...

திரு கே.வி.அல்லிமுத்து,
திரு ப.முருகன்,
திரு கா.பெரியசாமி,
திருமதி சி.வெண்ணிலா,
திருமதி சு.ம.பழனியம்மாள்
திரு சி.தனசேகரன்,
திரு இரா.சின்னசாமி,
திருமதி இரா.பாலாமணி,
திருமதி ப.இலட்சுமி,

எ.டி.127, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்க / நடுநிலைப்பள்ளி ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கம் (வரை)
நல்லம்பள்ளி-636807, தருமபுரி மாவட்டம்.
போன் : 04342-244122











11-வது உலகத்தமிழாசிரியர் மாநாடு
வெற்றி பெற மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

மா. சிவலிங்கம்	பெ. தமிழ்செல்வன்	இரா. குமார்
மாவட்டத் தலைவர்	மாவட்டச் செயலாளர்	மாவட்டப் பொருளாளர்

மற்றும் மாவட்ட வட்டார, நகரக்கிளைப் பொறுப்பாளர்கள்,
அனைத்து மாவட்ட உறுப்பினர்கள்.

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

விழுப்புரம் மாவட்டம்











11-வது உலகத்தமிழாசிரியர் மாநாடு
வெற்றி பெற மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

கு.ரகோத்தமன்	அ.சுதாகரன்	பா.வெங்கோபன்
மாவட்டத்தலைவர்	மாவட்டச்செயலாளர்	மாவட்டப்பொருளாளர்

மற்றும் மாவட்ட வட்டார, நகரக்கிளைப் பொறுப்பாளர்கள், அனைத்து மாவட்ட உறுப்பினர்கள்

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

வேலூர் மாவட்டம்





11-வது உலகத்தமிழாசிரியர் மாநாடு

வெற்றி பெற மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

நாகப்பட்டினம் மாவட்டம்



118/61

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி நடத்தும்

11 வது உலகத்தமிழ் ஆசிரியர் மாநாடு சிறக்க மனதார வாழ்த்துகிறோம்...

Q 360 தேவகோட்டை நகராட்சி அலுவலர்கள் & தேவகோட்டை,
கண்ணங்குடி ஒன்றிய அனைத்து தொடக்க, நடு, உயர், மேல்நிலைப் பள்ளிகளின் ஆசிரியர்கள்,
பணியாளர்கள், கூட்டுறவு சிக்கன நாணயச் சங்கம் லிட்



ஆ.இராமராஜ் M.A., B.Ed.,
தலைவர் (Q 360 கூட்டுறவு சங்கம்)
செயலாளர், லயன்ஸ் கிளப், தேவகோட்டை
பொருளாளர், சிவகங்கை மாவட்டம்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

பா.மகாலிங்கம் B.Com., DCM.,
செயலாளர், (Q 360 கூட்டுறவு சங்கம்)

தி.வேலுச்சாமி துணைத்தலைவர்



நிர்வாக இயக்குநர்கள்

இரா.செல்வக்குமார் | மு.சுரேஷ்குமார் | அ.வணக்கம் M.A., B.Ed., | அ.விமலா M.A., B.Ed.,
லெ.ந.ராமகிருஷ்ணன் | ப.சண்முகவேல் | வை.அன்புக்கனி M.Sc., B.Ed., | மீ.இராணி M.A., B.Ed.,

உயர்ந்த தரம், குறைந்த விலையில் ஷாஜி, மக்கள் மனம் மகிழ ...

தேவகோட்டை நகரில் சிறந்த நிறுவனம்

மாஸ் புரவிஷன்

மளிகை, அரிசி, ஆயில், ஃபேன்சி, கவரிங், ஸ்டேசனரி, பரிசுப் பொருட்கள்
வெளிநாட்டுப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், செல்ஃபோன் கவர்
இவை அனைத்தும் ஒரே இடத்தில் கிடைக்கும்.

தியாகிகள் பூங்கா அருகில், தேவகோட்டை.
(குறிப்பு: எங்களிடம் இலவச டோர் டெலிவரி வசதி உண்டு).

Ph : 04561 - 273235, 273335, 273535



உ

சிருகை

பா.முத்தையா (எ) மலையாளம்

செட்டிநாட்டு சமையற்கலைஞர்

புளியால் அஞ்சல், சிவகங்கை மாவட்டம்.

அலைபேசி : 97519 75745



அனைத்துவித சுப வைபவங்களுக்கு மட்டும்
சுவையான சைவ, அசைவ செட்டிநாட்டு சமையல்
சிறந்த முறையில் செய்து தரப்படும்.

With Best Compliments From

வாழ்க வளமுடன்

நம்பிக்கை! நாணயம்!! கைராசி!!!

GOLD COIN

ORID & MOONG

BEST DHAL

100 Kg Cross



தயாரிப்பாளர் :

A. யாகப்ப உடையார் & சன்ஸ்

அந்தோனியார் பால் மில்
49சி, படேல் நகர், ஆலங்குடி,
புதுக்கோட்டை மாவட்டம், தமிழ்நாடு - 622 301.

Mill : 04322-251 670
Res : 04322-253 380
Cell : 94432-07945
94438 63437

11-வது உலகத்தமிழ் ஆசிரியர் மாநாடு

சிறப்புற வாழ்த்துகிறோம்



ஏ.ஆர்.சில்க்ஸ் பட்டு ஜவுளி ஷோரூம்

தொண்டி மெயின் ரோடு

காளையார் கோவில்

உரிமை:

அண்ணாத்துரை & பிரதர்ஸ்

செல்: 98424 01717

ஏ.ஆர்.ஏஜென்ஸிஸ்

TV. பர்னிச்சர் ஷோரூம்

தொண்டி மெயின் ரோடு

காளையார் கோவில்





செல் : 98654 01003 / 98654 01006



ஏ.ஆர். Direct அக்வா மினரல் வாட்டர்

காரைக்குடி மெயின் ரோடு

காணக்கண்மாய்

செல் : 98654 01034 / 85085 02424

வாழ்க தமிழ்!

வளர்க தமிழ்!



பதிவு எண் : 118/61







11-வது உலகத்தமிழாசிரியர் மாநாடு வாழ்த்துகிறோம்

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

உலகத்தமிழாசிரியர் பேரவை இணைந்து நடத்தும்

11- வது உலகத்தமிழாசிரியர் மாநாடு

சிறப்புற்று வெற்றிபெற வாழ்த்துகிறோம்

வாழ்த்துக்கள்



சா. ஜெபமணி
மாவட்டத்தலைவர்



இ. கருணாகரன்
மாவட்டச்செயலாளர்



ஞா.ஸ்டீபன்சேவியர் ஞான்
மாவட்டப் பொருளாளர்



சா. செய்யது இப்ராஹிம் மூஸா
மாநில துணைச் செயலாளர்



எஸ்.லாசர்
மாநில செயற்குழு உறுப்பினர்

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திருநெல்வேலி மாவட்டம்

மற்றும் மாவட்ட வட்டார, நகரக்கிளைப் பொறுப்பாளர்கள்,
அனைத்து மாவட்ட உறுப்பினர்கள்

பதிவு எண் : 118/61









11-வது உலகத்தமிழாசிரியர் மாநாடு

வெற்றி பெற மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

திருவள்ளூர் மாவட்டம் (கிளை)

எம்.ஜயப்பன்
மாவட்டத் தலைவர்

சு.கதிரவன்
மாவட்டச் செயலாளர்

க.உதயகுமார்
மாவட்டப் பொருளாளர்

இ.வாசுதேவன்
மாநில துணை தலைவர்

ப்பி.பி.முரளி
மாநிலச் செயற்குழு

பி.எஸ்.பூங்கோதை
மாநில துணை செயலாளர்

மாவட்டத் துணைத் தலைவர்கள்:

என்.எம்.கோவலன்

ஆர்.இராமச்சந்திரன்

எஸ்.பவானி

மாவட்டத் துணைச் செயலாளர்கள்

கே.சேகர்

பி.எஸ்.பூங்கோதை

மற்றும்
மாவட்ட வட்டார, நகரக்கிளைப் பொறுப்பாளர்கள்,
அனைத்து மாவட்ட உறுப்பினர்கள்.





பதிவு எண் : 118/61

11-வது உலகத்தமிழாசிரியர் மாநாடு

வெற்றி பெற மனம் நிறைந்த வாழ்த்துக்கள்



மதுரை மாவட்டம்

இராசா. முத்துக்குமரன்
மாவட்டத்தலைவர்

இரா. செல்லப்பாண்டியன்
மாவட்டச்செயலாளர்

மு. தென்னவன்
மாவட்டப்பொருளாளர்

சொ. சகாதேவன்
முன்னாள் மாநிலத் தலைவர்

சோ. மனோகர்
மாநிலச்செயற்குழு

ரெ. சண்முக சுந்தரி
மாநிலச்செயற்குழு

மற்றும் மாவட்ட வட்டார, நகரக்கிளைப் பொறுப்பாளர்கள், அனைத்து மாவட்ட உறுப்பினர்கள்.






பதிவு எண் : 118/61

11-வது உலகத்தமிழாசிரியர் மாநாடு வாழ்த்துகிறோம்

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி
உலகத்தமிழாசிரியர் பேரவை இணைந்து நடத்தும்

11- வது உலகத்தமிழாசிரியர் மாநாடு

சிறப்புற்று வெற்றிபெற வாழ்த்துகிறோம்
வாழ்த்துக்கள்



கி. திலகராஜ்
மாவட்டத்தலைவர்



சு. குணசேகரன்
மாவட்டச்செயலாளர்



சு. குமார்
மாவட்டப் பொருளாளர்

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி விருதுநகர் மாவட்டம் (கிளை)

மற்றும் மாவட்ட வட்டார, நகரக்கிளைப் பொறுப்பாளர்கள்,
மாவட்ட அனைத்து உறுப்பினர்கள்

"The Lord was with him, and that which he did, the Lord made it to prosper" - Gen 39:23

JEM DESIGN & PRINTS

#1/69, 1st Floor, P.H. Road, Nerkundrum, Chennai - 600 107.

- Notices
- Posters
- Banners
- Envelopes
- Brochures
- Pamphlets
- Catalogues
- Wedding Cards
- Labels & Stickers



Multi Colour Visiting Cards

Rs. 299/- 500 Nos



Multi Colour Letter Heads Rs. 1000 nos 1999/-



2000 nos A5 Multi Colour Notices & Pamphlets 1900/-

All Types of IDENTITY CARDS Available



- SCHOOL'S ID
- CORPORATE ID
- COMPANY ID
- EVENT ID

ALL TYPES OF DESIGNING & PRINTING

9025984595 jemprints@gmail.com

9841052408 www.jemdesignsandprints.com

ALL INDIA TOUR PACKAGE AVAILABLE

SATHIYAM TRAVELS

CARS VANS MINI BUSES BUSES

- Air Ticketing
- Educational Tour Packages
- All India Tour Packages
- Daily Tirupathi Trips

K. Sathiya

283, N.S.K Nagar

Arumbakkam, Chennai - 600106.

7358486007, 7358769677

sathiyamtravels2015@gmail.com





AIPTF

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி நடத்தும்

11 ஆவது உலகத் தமிழ் ஆசிரியர் மாநாடு

சிறப்புற வாழ்த்துகிறோம்

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி
கோவை மாவட்டம் (கிளை)

திரு. பா.சௌந்தரராஜன்	திரு. சி.அரசு	திரு. எஸ்.ஜே.பி. மாணிக்கராஜ்
மாவட்டத் தலைவர்	மாவட்டச் செயலாளர்	மாவட்டப் பொருளாளர்

திரு. சி. தங்கராஜ் மாநிலச் செயற்குழு உறுப்பினர்

திரு. எஸ்.மதியழகன் மாநிலப் பொதுக்குழு உறுப்பினர்

திரு. பி. சங்கரலிங்கம் மாநிலப் பொதுக்குழு உறுப்பினர்

திருமதி. S. நாகலட்சுமி மாநிலப் பொதுக்குழு உறுப்பினர்(ம)

திரு. என்.விநாயகன் மாவட்டத் துணைத் தலைவர்

திரு. பா.செல்வன் மாவட்டத் துணைத் தலைவர்

திருமதி. சி.சாந்தாள் மாவட்டத் துணைத் தலைவர் (ம)

திரு. எம்.பாலகிருஷ்ணன் மாவட்டத் துணைச் செயலாளர்

திரு. பி.ஆபிரகாம் மேஷாக் மாவட்டத் துணைச் செயலாளர்

திருமதி. எம்.சசிகலா மாவட்டத் துணைச் செயலாளர் (ம)

வட்டாரம்	தலைவர்	செயலாளர்	பொருளாளர்
பெரியநாயக்கன்பாளையம்	திரு. அர.சாமிநாதன்	திரு. ப. உத்தமன்	திரு. எஸ்.மதியழகன்
பேரூர்	திருமதி. எம்.சசிகலா	திரு. K. செந்தில்குமார்	திரு. N. நாகராஜ்
சர்க்கார்சாமக்குளம்	திரு. பா.தாமஸ் குரூஸ்	திரு. A.J. செல்வக்குமார்	திருமதி ஆ.உமாமகேஸ்வரி
தொண்டாமுத்தூர்	திருமதி பி. இலட்சுமி	திரு. பி. சங்கரலிங்கம்	திரு. நா. ரமேஷ்
வால்பாறை	திரு.வே.இராஜபாண்டியன்	திரு. பா.செல்வன்	திரு. பி.இளங்கோ
காரமடை	திரு. கு.இரவிச்சந்திரன்	திரு. அ.மோகனசுந்தரம்	திரு. வி.எஸ்.லக்ஷ்மா
சூலூர்	திரு. எஸ். பாபு சங்கர்	திரு. P. நித்தியானந்தன்	திரு. J. தங்கராஜ்
பொள்ளாச்சி தெற்கு	திரு. D. தேவராஜ்	திரு. K. செழியன்	திரு. K. ரத்தினமூர்த்தி
பொள்ளாச்சி நகரம்	திருமதி. என்.மகேஸ்வரி	திருமதி. க.ரேணுகாதேவி	திரு. ரா.கோபிநாத்
சுல்தான் பேட்டை	திரு. எம்.பாலகிருஷ்ணன்	திரு. ப.ரவி	திரு. ஆர்.ஆறுமுகம்
கிணத்துக்கடவு	திரு.க.அந்தோனி சகாயராஜ்	திரு.A.ஜெயச்சந்திரன்	திரு.M.நாகராஜ்
கோவை மாநகரம் அமைப்புக் கிளை - திரு. எபினேசர் (அமைப்பாளர்)			
அன்னூர் அமைப்புக் கிளை - திரு. O.S. பாலகிருஷ்ணன் (அமைப்பாளர்)			
ஆனைமலை அமைப்புக் கிளை - திரு. T. வீரவேல் (எ) பாபு (அமைப்பாளர்)			

வெற்றி



ஆழிசூழ் உலக மெல்லாம் அமைதிமேவ
ஆகாத பகையொழிந்து அன்புண்டாக
ஆராத கவலை பிணி அகன்று போக
ஆக்கமொடு மக்கள் குலம் அழகாய் வாழ
ஆண்டவளை வேண்டுதல் செய்து அருளைநாடி
ஆனந்தத் தவநிலையை அணுகுவோமே !

நன்றி



தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் இரு கண்கள் ஆசிரியர்களும், மாணவர்களும் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அனைவருக்கும் தரமான இலவசக் கல்வி என்பதே இப்பேரியத்தின் கொள்கையாகும்.

" கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஔவை மொழி "தமிழ் வழிக் கல்வி இல்லாத பள்ளி எங்கும் இல்லை" என்ற நிலை உருவாவதற்கு இப்பேரியக்கம் தொடர்ந்து பாடுபடும். தாய் மொழி கற்றலில் ஆர்வமும் அடிப்படைத் திறன்களை பயன்படுத்தும் திறமையும் கொண்ட மாணவர்களை உருவாக்கிட தமிழ் மொழி கற்றல்–கற்பித்தல் புதிய அணுகு முறைகளும் சிந்தனைகளும் என்ற தலைப்பில் இம் மாநாட்டை உலகத் தமிழ் ஆசிரியர் பேரவையுடன் இணைந்து இயக்கம் நடத்தியுள்ளது.

10வது உலகத் தமிழாசிரியர் மாநாடு 2013 இல் மலேசியாவில் நடந்தபொழுது 11வது உலகத் தமிழாசிரியர் மாநாடு இந்தியத்திரு நாட்டிலுள்ள தமிழ் நாட்டில் நடத்துவது என முடிவுச்செய்யப் பட்டதை ஏற்று இம் மாநாட்டை சிறப்பாக நடத்தி முடித்துள்ளோம்.



எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற எண்ணத்தை விதைக்க வேண்டும். இம் மாநாடு தமிழ் கற்பித்தலில் புதிய உத்திகளைக் கையாண்டு மாணவர்களிடையே தமிழை நன்றாகப் படிக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும் என்பது உறுதி.

இந்நிலையில் இங்கு தமிழ்க்களத்தின் பணிகளைப் பாராட்ட வேண்டியது எனது கடமை. தமிழ்களத்தை உருவாக்கி நம்மிடையே அதனை வளர்க்கும் பணியை விட்டுச் சென்ற அண்ணன் சு. ஈசுவரன் அவர்களைப் பாசத்தோடு நினைவு கூறக் கட்மைப்பட்டுள்ளேன். தமிழ்க்களம் தொடர்பான பணிகளைச் சிறப்பாக செய்து வரும் கோமதி நாயகம் அவர்களுக்கு இப்பேரியத்திம் சார்பில் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

மாநாட்டு மலரை தங்களது அராய்ச்சி கட்டுரைகளில் சிறப்பித்திட்ட அறிஞர் பெருமக்கள் கவிதைகளை வடிவமைத்த மலரை வண்ணமாலையான தயாரித்த ஸ்ரீ முருகன் பிரிண்டர் அச்சக உரிமையாளர் குமரேசன், மலர் வெளியிட உதவிய மலர்க்குழுவினர், இடைவிடாத நிகழ்ச்சிகளோடு 11வது உலகத்தமிழாசிரியர் மாநாட்டினை நடத்திட உதவிய ஒருங்கிணைப்புக்குழுவினர், திட்டமிட்டு உதவிய வரவேற்புக்குழுவினர். மாநில, மாவட்ட, வட்டாரப் பொறுப்பாளர்கள், மாநா;டி;ல பங்கேற்ற பேராளர்கள் மற்றும் இயக்கச் செம்மல்கள் அத்துணைபேருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி !

அன்புடன்

(ந.ரெங்கராஜன்)

ஒருங்ணைப்பாளர்
11வது உலகத்தமிழாசிரியர் மாநாடு
பொதுச்செயலாளர்
துணைப் பொதுச்செயலாளர் AIPTF

பதிவு எண் : 118/61

11-வது உலகத்தமிழ் ஆசிரியர் மாநாடு மலர்

சிறப்புற நல்வாழ்த்துக்களுடன்.....





தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

பென்னாகரம் வட்டாரக்கிளை

தருமபுரி மாவட்டம் 636 810

ப.குமரவேல்	மா.பழனி	சி.தங்கராஜ்
தலைவர்	செயலாளர்	பொருளாளர்



11-வது உலகத்தமிழ் ஆசிரியர் மாநாடு மலர்

சிறப்புற நல்வாழ்த்துக்களுடன்.....

கே.கே.257 பென்னாகரம் ஊராட்சி ஒன்றிய பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் சிக்கன மற்றும் கடன் சங்கம்

பென்னாக்ரம் ஒன்றியம் - தருமபுரி மாவட்டம்

போன்-04342-255057

கே.இ.ரங்கநாதன் M.A.,B.Ed.,	எஸ்.செல்வராஜ் M.A.,B.Ed.,
தலைவர்	துணைத் தலைவர்

since : 1994

MOUNT ELECTRONICS®

An ISO : 9001 - 2000 Certified Firm

21 St Anniversary

Exclusive OEM Car Audio Authorised Service Centre

Toll Free No : 1800-425-0609

Ford · VW · SKODA AUTO · NISSAN · HONDA · TOYOTA · SUZUKI · Chevrolet · Tata

Visteon · Panasonic ideas for life · SONY Xplod · Pioneer · ALPINE · BLAUPUNKT · JVC The Perfect Experience · clarion · MapmyIndia · CASKA Car Multimedia & NAVI system

Old No 30, New No 63, Big Street, Triplicane, Chennai 600 005.
Phone : 044 28410965/ 044 28410966/ Fax : 044 28550609
E.mail : service@mount.co.in URL : www.mount.co..in

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி பொறுப்பேற்று நடத்தும்,

11-வது உலகத்தமிழாசிரியர்கள் மாநாட்டுக்கு எங்களது வாழ்த்துக்கள்.....,

Shakthi, Invati, Siddhi.

BHARATHI VIDHYAA KENDHRA



A 2015 pathbreaking
Educational Experience

Launching 2015

EXTENDED HUB OF

BHARATHI KIDS KSHETHRALAYA



Velayuthampalayam, Vanjipalayam to Avinashi Main Road
Avinashi Taluk, Tirupur. Tel : 87540 91999,
0421-2208573, 2239299 web : www.bharathischools.org

Just feel Furniture@ www.royalwoods.in.



ROYAL WOODS™

HOUSE OF QUALITY FURNITURES

98431 24067 Ph : 0421 454 2345

#147, College Road, Near Ayyapan Temple, TIRUPUR-2.

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி பொறுப்பேற்று நடத்தும்,

11-வது உலகத்தமிழாசிரியர்கள் மாநாட்டுக்கு எங்களது வாழ்த்துக்கள்.....,



தியாகி குமரனால்

சிறப்புப்பெற்ற எங்கள் திருப்பூருக்கு, மேலும் பெருமை சேர்த்த எங்கள் பள்ளி மாணவி

செல்வி J. பவித்ரா மாநில அளவில் +2வில் 2014-15 கல்வி ஆண்டில் முதலிடம் பெற்றமைக்காக

மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி. J. ஜெயலலிதா அவர்கள்

பரிசு வழங்கி பாராட்டுகிறார்.

அருகில் எங்கள் பள்ளியின் தாளாளர் ஆண்டவர் A. ராமசாமி அவர்கள்.

விகாஸ் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
கூலிபாளையம் 4 ரோடு, திருப்பூர்-641 666.
கைபேசி - 94425 06449, 94425 03449.

வித்யாசாகர் இண்டர்நேஷனல் பள்ளி (CBSC),
கூலிபாளையம் 4 ரோடு, திருப்பூர்-641 666.
கைபேசி - 94425 17663 & 0421-2374050.